The Crossway Ministries

அநுதினமும் சிலுவையைச் சுமப்போம்

லூக்கா 9:23

அன்றாட மன்னா

Evangelist

Rev. Paul Balabaskaran

2023 © The Crossway Ministries. All rights reserved.

என்னுரை

இரட்சிப்புக்குக் கிறிஸ்துவின் சிலுவை என்ற கோட்பாட்டில் நிறைவுபெற்ற நான், பரிசுத்தத்திற்கும் கிறிஸ்துவின் சிலுவை என்ற கோட்பாட்டை (**கொலோ**. 2:6-7) அறியாத கிறிஸ்தவனாக வாழ்ந்து, மாம்சத்தின் கிரியைகளினால் (**கலா**. 5:19-21; **மாற்**. 7:20-23) ஆக்கிரமிக்கப்பட்டு, தீட்டுப்பட்டுச் செய்வது என்ன என்று அறியாமல் (**ரோம**. 7:15-18) திகைத்துத் திண்டாடும்பொழுது **ரோமர்** 7:24லினால், சுயநினைவுக்குக் கொண்டுவரப்பட்டேன்; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்மீது கிருபையாகவும், இரக்கமாகவுமிருந்து, பவுல் அப்போஸ்தலருக்குக் கொடுத்த வெளிப்பாட்டை (**கலா**. 1:11-12) அடியேனுக்கும் வெளிச்சமூட்டி, அதனைப் பார்த்து, அறிந்து, புரிந்துகொள்ள உதவினார்; கடல்போன்ற அந்த ஞானத்தை யாரால் அறியமுடியும்? கிறிஸ்துவின் சிலுவையின் செய்தியை இன்றும் அறிந்தவண்ணமாயிருக்கிறேன். அறிந்த வெளிச்சத்தைப் புஸ்தகங்களாக எழுதிப் பிரசுரித்துக்கொண்டிருக்கும்பொழுது, "**அநுதினமும் சிலுவையைச் சுமப்போம்**" என்ற இந்தப் புஸ்தகத்தை எழுத என் ஆவியில் ஏவப்பட்டேன்; **லூக்கா** 9:23ஐ ஒவ்வொரு கிறிஸ்தவனும் தவிர்க்கமுடியாமல் பின்பற்றவேண்டியவனாக இருக்கிறான்; பின்பற்ற அவன் மறுப்பானாயின் அவன் கிறிஸ்துவின் சீஷனாக இருக்கமாட்டான் என்று **லூக்கா** 14:27ல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க, **லூக்கா** 9:23ஐ ஒருவன் பின்பற்றுவதற்கு அவன் ஒவ்வொரு நாளும் சிலுவையின் செய்தியை அறிந்து, அறிந்தவைகளைத் தியானித்து, அதனை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டியவனாக இருக்கிறான்; இதனிமித்தமே கனமுள்ள அன்றாட அப்பத்தைத் தேடி எடுத்து, அதில் பொதிந்திருக்கும் சிலுவையின் செய்தியையும், அதன் தாற்பரியத்தையும் மிகவும் சுருக்கமாக வாசகர் புரிந்து

கொள்வதற்கேதுவாகப் பகுத்துப் பிரித்து எழுதியிருக்கிறேன். இந்தச் செய்தி ஆறுதலையும், இளைப்பாறுதலையும், உற்சாகத்தையும், உத்வேகத்தையும் தாராளமாகக் கொடுத்து, பரிசுத்த ஆவியானவரின் அசைவாட்டத்தையும், செயற்பாட்டையும் உறுதிப்படுத்தவேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனையாகும். கிறிஸ்தவர்கள் நாளாந்த வாழ்க்கையில் பலப்பட்டு, அந்தப் பாவத்துக்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்வார்களாக.

கிறிஸ்து இயேசுவின் திருப்பணியில்
சகோதரன் பவுல் பாலபாஸ்கரன்

சிலுவையின் செய்தியைப் பிரகடனப்படுத்தும் இன்னும் அநேக புஸ்தகங்களையும் செய்திகளையும் தயார்செய்துள்ளோம். மேலதிக விபரங்களுக்கு (001) 647 - 465 - 1224 தொலைபேசிமூலம் எங்களுடன் தொடர்புகொள்ளலாம்.

- **“ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?”**
- **“பாவசுபாவம்”**
- **“ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை”**
- **“நிர்ப்பந்தமான மனுஷன்”**
- **“ஆவிக்குரிய வேசித்தனம்”**
- **“ஆவிக்குரிய பிரமாணம்”**
- **“பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்”**
- **“பரிசுத்த ஆவியின் சக்திவாய்ந்த இயக்க விதிகள்”**

ஜனவரி

1

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1).

"ஆதியில்"

நம்முடைய ஆரம்பம் மனுஷ வீழ்ச்சியின் நிமித்தம் பரிதாப கரமாயிருக்கிறது (**எபேசி.** 2:2-3); நம்முடைய முடிவோ "**அக்கிர மங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்**" (**எபேசி.** 2:5) என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கடந்த காலம் எப்படியிருந்தாலென்ன, இரட்சிக்கப்பட்ட நமக்குத் தேவன் ஒரு புதுவாழ்வை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார். இரட்சிக் கப்படாதவர்களையும் அவர் இரக்கத்துடன் நோக்குகிறார்; அவர் கள் செவிகொடுப்பார்களாயின், அவர்களுக்கும் தேவன் புதிய ஒரு வாழ்க்கையை வைத்தேயிருக்கிறார். வருட ஆரம்பத்தில் கோடிக்கணக்கான மனுஷர்கள் புதிய தீர்மானங்களை எடுத்துத் தம்முடைய வாழ்க்கையை வளம்படுத்த நினைப்பதுண்டு; அதில் தவறொன்றுமில்லை; ஆனால், தான் எடுத்த தீர்மானத்தைத் தன் சுயபலத்தினால் நிறைவேற்ற முடியாமற்போனதை அவர்கள் உணர்ந்தும், மறுபடியும் அந்த நடவடிக்கையை அல்லது வேறு ஒன்றை அடுத்த வருஷமும் தொடருவதை நாம் வழமையாகக் காண்கிறோம். இப்படியிருக்க, போனவருஷம் எடுத்த தீர்மானத் தைத் தான் நிறைவேற்ற முடியாமற்போனது ஏன் என்பதனை

அந்த மனுஷர்கள் தீவிரமாகச் சிந்திப்பதில்லை; இதுவே வஞ்சக ஆவியின் வலைப்பின்னலாகும்; இதற்குள் அகப்பட்டோர் கோடிக் கணக்கானோர்.

இப்படியிருக்க, சத்தியபரனாகிய இயேசுகிறிஸ்துவை ஒருவன் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்று, தன்னை அவரிடம் அர்ப் பணிப்பானாயின், அவனுக்குப் புதுவாழ்வு, புதிய ஆரம்பம் நிச்சய மாக உண்டு; இது விசுவாசிக்கும், அவிசுவாசிக்கும் பொருந்தும். இயேசுகிறிஸ்துவே நம்முடைய சகல தேவைகளுக்கும் ஆதார மாக இருக்கிறார்; ஆனால், அந்தத் தேவைகளைக் கிறிஸ்வின் சிலுவை மூலமாகவே பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தேவ னுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது; இதனிமித்தமே பரிசுத்த ஆவி யானவர் பவுல் அப்போஸ்தலர்மூலம் **"இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றை யும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்"** எனக் **Iகொரிந்தியர்** 2:2ல் கூறியிருக்கிறார்.

இன்னொரு முறையாகப் பார்த்தால், நாம் இயேசுகிறிஸ்து வையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவா சித்து, அந்த விசுவாசத்தில் நங்கூரமிடவேண்டியதே தேவனு டைய எதிர்பார்ப்பாயிருக்கிறது; மிகவும் இலகுவான அந்த எதிர் பார்ப்பை நாம் நிறைவேற்றுவோமாகில் நிச்சயமாக நமக்கும் புதுவாழ்வு உண்டு. ".....**ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோ யின, எல்லாம் புதிதாயின"** (II**கொரி.** 5:17).

ஜனவரி

2

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதி. 1:2).

"தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடினார்"

ஆழத்தின் மேலிருந்த இருள் தேவ ஆவியினால் அப்புறப் படுத்தப்பட்டது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடும் பொழுதே அது சாத்தியமானது. பரிசுத்த ஆவியின் பிரசன்ன மும், அசைவாட்டமும் ஜீவன் உண்டாவதற்குப் பிரதான அடை யாளமாயிருக்கிறது.

அவிசுவாசிகளின் இருதயத்தில் இருள் வியாபித்திருக்கிறது; துரதிஷ்டவசமாக, அநேகமான விசுவாசிகளின் இருதயத்திலும் இருள் ஆக்கிரமித்திருக்கிறது. அவிசுவாசிகள், ஒளியாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாததன் நிமித்தம் அவர்கள் இருளடைந்துபோயிருக்கிறார்கள்; விசுவாசிகள், தேவனுடைய வழிநடத்துதலைப் பின்பற்றாததன் நிமித்தமும், பொய்யான உப தேசங்களுக்குப் பலியாகப்போனதன் நிமித்தமும், ஜெயங் கொண்ட வாழ்க்கைக்குத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியை அறியாததன் நிமித்தமும் அல்லது அவிசுவாசத்தின் நிமித்தம் அதனை ஏற்றுக்கொள்ளாததனாலும், அவர்களையும் இருள் ஆக்கிரமித்திருக்கிறது; மனுஷ கற்பனைகளாலும், மனுஷ பாரம்

பரியங்களினாலும், மனுஷ பிரமாணங்களினாலும், மனோதத்து வத்தினாலும், மற்றும் மனுஷனுடைய இருதயத்தில் கர்ப்பந்தரிக் கும் பல்வேறு சிந்தனைகளினாலும், இருதயத்தில் வியாபித்தி ருக்கும் இருளை அகற்றமுடியாது; ஆனால், நிச்சயமாக இருளை அகற்றமுடியும்!

நாம் அறிந்திருக்கவேண்டிய உண்மை என்னவென்றால், மனி தனுடைய இருதயத்தை ஆக்கிரமித்திருக்கும் இருள் அவனில் குற்ற உணர்வையும், ஆக்கினைத்தீர்ப்பையும் ஏற்படுத்துகிறது. ஆதியில் ஆழத்தின்மேலிருந்த இருளை அகற்றுவதற்குத் தேவன் என்ன வழியைப் பாவித்தாரோ, அதே வழியின் மூலமே மனி தனிலுள்ள இருளையும் அகற்றுகிறார். தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடினபொழுது தேவன் வெளிச்சம் உண் டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. அந்த வெளிச் சம் கிறிஸ்துவில் வாசஞ்செய்கிறது "....**நான் உலகத்திற்கு ஒளி யாயிருக்கிறேன்**...." (**யோவா. 8:12**) எனக் கிறிஸ்து கூறியிருக் கிறார்.

குழப்பத்திலுள்ள விசுவாசி தன்னுடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் முற்றுமுழுவதுமாக வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பானாகில், பரிசுத்த ஆவியானவர் அவனில் வல்ல மையாகச் செயற்பட்டு, அவனில் அசைவாடுவார்; அப்பொழுது இருளுக்குப் பதிலாக வெளிச்சம் அவனுடைய இருதயத்தை ஆக்கிரமிக்கும். ஆதியில் ஆழத்திலிருந்த இருள் எப்படி விலகி யதோ அதேமாதிரி இருதயத்தை ஆக்கிரமித்திருக்கும் இருளும் விலகும்; பரிசுத்த ஆவியானவரே இதனை நிறைவேற்றுகிறார்; அதற்கு நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவை யில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கவேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பாகும் (**ரோம. 8:2**).

ஆதியில் தேவன் கொடுத்த ஒழுங்குமுறை நம்முடைய இரு தயத்தில் உறுதியாக நாட்டப்படவேண்டும். அதெப்படியென்றால்,

மீட்கப்படாத மனுஷனின் இருதயம் இருளினால் மூடப்பட்டிருக் கிறது; மீட்கப்படாத இருளடைந்த இருதயத்தின்மேல் பரிசுத்த ஆவியானவர் அசைவாடுகிறார். தேவன் வெளிச்சம் உண்டாவ தாக என்றார்; இருதயம் மீட்பைப் பெற்றது; தேவன் நியமித்த இந்த முறையில் ஒரு மாற்றமும் இல்லை (**எபி.** 13:8).

ஜனவரி

3

***தே**வனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார் (ஆதி. 2:9).*

"ஜீவவிருட்சம்"

"**தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும்**" என்ற சொற்றொடரிலிருந்து அறியக்கூடியது என்னவெனில், அந்த ஜீவவிருட்சத்தில் ஒரு கனி உண்டு என்பது தெளிவாகிறது; **ஆதியாகமம்** 3:22 இதனை நிரூபிக்கிறது.

வேத அறிஞர்கள் ஜீவவிருட்சத்தில் மனுஷனுடைய சக்தியைப் புதுப்பிக்கிற ஒரு வல்லமை உண்டு என்று நம்புகிறார்கள். பூமியிலுள்ள தூளிலிருந்து மனுஷன் உருவாக்கப்பட்டபடியினால், மனுஷனுடைய சரீரத்திற்கு இயற்கையாகவே மரிக்கக்கூடிய சுபாவம் இருந்தும், ஜீவவிருட்சம் கொடுக்கும் வல்லமையினால் தொடர்ச்சியாக சரீரம் உபயோகிக்கப்பட்டாலும், அது சதாகாலமும் வாழமுடியும் என எதிர்பார்க்கப்பட்டது; இப்பொழுது கிறிஸ்துவே நமக்கு ஜீவவிருட்சமும் (**வெளி.** 2:7, 22:2), ஜீவ அப்பமுமாயிருக்கிறார் (**யோவா.** 6:48, 51). ஜீவ விருட்சம் கொண்டுவருகிற கனி எப்படியானது என்று நமக்குச் சொல்லப்படவில்லை; சிலர் அப்பிள் பழமாயிருக்கலாம் என்றும், அந்தக்

கனிக்குத் தெய்வீக குணாதிசயங்கள் உண்டு என்றும் ஊகிக்கின் றனர்; **"காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம்** (அப்பிள் மரம்) **எப்படியிருக்கிறதோ..."** எனச் சொல்லப்பட்டிருக்கும் சாலொ மோனின் உன்னதப்பாட்டிலிருந்து (**உன்ன.** 2:3) இந்த ஊகம் உண்டானது. மனுஷனுடைய சரீரம் பூமியின் தூளினால் உரு வாக்கப்பட்டாலும் ஜீவவிருட்சத்தின் குணாதிசயத்தினால் அது எப்பொழுதும் ஜீவிக்கும் என்று பொருள்படுகிறது; தேவனுடைய ஆரம்பத்திட்டத்தில் மரணம் சம்பவிக்கும் என்று இருக்க வில்லை; மரணம் அந்தப் பாவத்தினாலேயே வந்தது (**ரோம.** 5:12, 6:23).

இயற்கையான சரீரத்தையுடைய மனுஷன் புதிய எருசலே மில் (**வெளி.** 21:2) ஜீவவிருட்சத்தின் சிறப்பினால் எக்காலமும் ஜீவிக்கிறான் என்பது தெளிவாகிறது. ஆயினும், அந்த ஜீவ விருட்சம் மாதந்தோறும் கனியைக் கொடுக்கிறது (**வெளி.** 22:2) என்றும் அறியக்கூடியதாயிருக்கிறது. மகிமையான சரீரத்தை உடையவர்களைப்பற்றி இங்கு சொல்லப்படவில்லை; அவர் களுக்கு அத்தகைய ஆகாரம் தேவையில்லை; அவர்கள் நித்திய ஜீவனை முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபற்றுவதன்மூலம் பெற்றுக்கொள்ளுவதனால் (**வெளி.** 20:6) ஜீவவிருட்சம் அவர்களுக் குத் தேவையில்லை.

ஜனவரி

4

***ஆ**னாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத் தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதி. 2:17).*

"ஆவிக்குரிய மரணம்"

ஆதியாகமம் 2:17 ஆவிக்குரிய மரணத்தைப் பிரகடனப்படுத்து கிறது. ஆவிக்குரிய மரணம் என்பது தேவனைவிட்டுப் பிரிந்தி ருப்பதாகும்; அதெப்படியெனில், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தவுடன் அந்தக் கணமே **ஆதியா கமம்** 2:17ல் சொல்லப்பட்டபடி ஆதாமும் ஏவாளும் ஆவியில் மரித்து, தேவனைவிட்டுப் பிரிந்தார்கள். ஆவிக்குரிய மரணம் பின்பு சரீரமரணத்தை ஏற்படுத்தியது; சரீரமரணம் ஏற்படமுன்பு இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஒருவன் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் நித்திய மரணத்தைத் தழுவி, தவிர்க்கமுடியாமல் இரண்டாம் மரணத்தைச் சந்தித்து, அக்கினிக் கடலுக்குள் சதாகாலமும் தள்ளப்படவேண்டியது தேவனால் நிய மிக்கப்பட்டிருக்கிறது (**வெளி.** 20:14).

ஆதாம் பிரமிக்கத்தக்க கெட்டித்தனத்தை உடையவனாயிருந் தான் (**ஆதி.** 2:19); முந்தின ஆதாமுக்குப் பின்பு பிந்தின ஆதா மைத்தவிர, எந்த மனுஷனும் முந்தின ஆதாமைப்போல் கெட் டித்தனமுள்ளவனாக இருக்கவில்லை. மனுஷகுல வீழ்ச்சியின்

நிமித்தம் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது; ஆயினும், ஆதாமுக்கு **"சாகவே சாவாய்"** என்ற சொற்றொடரின் பொருள் விளங்கியிருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, சதாகாலமும் பிழைத்திருப்பதற்கே அவன் உருவாக்கப்பட்டான். தற்பொழுது நாம் அனுபவிக்கிற அந்த ஆவிக்குரிய மரணம் ஆதாமினுடைய சிந்தனையில் இருக்க வில்லை.

ஆனாலும், இந்த மரணத்தின் தாற்பரியத்தைத் தேவனாகிய கர்த்தர் திரும்பத் திரும்ப ஆதாமுக்கு உபதேசித்திருப்பார் என்ப தனை நான் திடமாக நம்புகிறேன். தன்னுடைய வார்த்தையின் முக்கியத்துவத்தைக் கர்த்தர் நிச்சயமாகச் சொல்லியிருப்பார்; ஆனால், அதுபற்றி வெளிப்படையாக வேதத்தில் சொல்லப்பட வில்லை. சிருஷ்டியை இவ்வளவு நுணுக்கமாகப் படைத்த தேவன் இதனையும் நுணுக்கமாக ஆதாமுக்குத் தெளிவுபடுத்தி யிருப்பார் என்றே நான் நம்புகிறேன். வேதாகமத்தில் எல்லா விபரமும் சொல்லப்படவில்லை என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்; **யோவான்** 21:25ல் **"இயேசு செய்த வேறு அநேக காரி யங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணு கிறேன்"** என்று சொல்லியிருக்கிறதைப் பார்த்தால், தேவனாகிய கர்த்தர் நிச்சயமாக **"சாகவே சாவாய்"** என்பதன் பொருளை ஆதாமுக்கு விபரமாகச் சொல்லியிருப்பார் என்பதனில் சந்தேக மில்லை; ஆயினும் ஆதாம், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப் படிய விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. இன்றும் கோடிக் கணக்கானோர் ஆதாமின் வழியைப் பின்பற்றிப் **(யோபு** 31:33 **ஓசி.** 6:7) பாதாளத்தைத் தம்முடைய இருப்பிடமாகத் தெரிந்துகொள் கிறார்கள்.

ஜனவரி

5

***அ**ப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப் பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார் (ஆதி. 3:9).*

"நீ எங்கே இருக்கிறாய்"

ஏதேன் தோட்டத்தில் கர்த்தருக்கெதிராகப் பாவஞ்செய்து வீழ்ந்துபோன மனுஷனை நோக்கி முதல்முறையாகக் கர்த்தர் என்ன சொன்னார் என்பதனை நீங்கள் அறிவீர்களா? நானும் நீங்களும், பாவத்தின் நிமித்தம் விழுந்து, தேவனோடிருந்த அன்புப் பிணைப்பை இழந்து, நித்தியத்திற்கும் பிரிந்து, அநியாயத்தின் நிமித்தம் வீழ்ந்துபோன எனக்கும் உங்களுக்கும் கர்த்தர் என்ன சொல்லுகிறார்?

தற்பொழுது விழுந்துபோன சிருஷ்டியின்மேலும், தேவனு டைய மிக உயர்ந்த சிருஷ்டியின்மேலும் அவருக்குப் பகைமை யும் கோபமும் இல்லை; வீழ்ந்துபோன ஆதாமை நோக்கி அவ ருடைய முதலாவது கேள்வி என்னவென்றால், **"நீ எங்கே இருக்கிறாய்"**; அப்படியே இன்றும் நம்மை நோக்கி அதே கேள் வியைக் கேட்கிறார்; அந்தப் பாவம் தேவனுக்கு முன்பாக நிற்ப தற்கு உன்னைப் பிரித்து வைத்திருக்கிறதோ? ஜீவன் உனக்கு மரணமாயிற்றோ? உன் சிருஷ்டிகராகிய பரமபிதா உன்னை இன்று தேடுகிறார். கீழே வீழ்ந்து கிடக்கும் உன்னை அடிப்பதற் கல்ல, நீ தவறினாலும், உன்னை அறியவிரும்புகிறார். உன்னு டைய பாவவாழ்க்கையை அவர் உதாசீனஞ்செய்யவில்லை; அதற்குப் பதிலாக உன்மீது அன்பாயிருக்கிறார்.

நம்முடைய பாவத்துக்காக அவர் சிலுவையில் மரித்தார்; அவரோ ஒரு பாவமும் செய்யவில்லை. தேவனுடைய அன்பைப்போல ஒரு அன்பும் இல்லை; **"நீ எங்கே இருக்கிறாய்"** என்ற கேள்விக்கு நாம் எல்லோரும் பதில் சொல்லியேயாக வேண்டும். நம்பிக்கை இழந்த பாவிகளே! இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உங்களை விடுதலைசெய்யும்; நம்மில் மோசமானவர்களையும் அவர் இரட்சித்தார்; நிர்ப்பந்தமான மனுஷனாகிய என்னையும் இரட்சித்தார்; இப்பொழுது எல்லோரையும் நோக்கி: **வெளி. 22:17ல் "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"** என அழைப்பு விடுகிறார். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டால் இயேசுவை இரட்சகராகவும், இந்த அழைபை நிராகரித்தால், அவரை வெள்ளைச் சிங்காசனத்தில் நியாயாதிபதியாகவும் (**வெளி. 20:11-12**), உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனும் சந்தித்தேயாகவேண்டும்.

ஜனவரி

6

***உ**னக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதி. 3:15).*

"அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"

இந்த வேதவாக்கியத்தைச் சற்று விபரமாகப் பரிசீலனை செய்யும்பொழுது, மனுஷவீழ்ச்சியின் பின்பு சிலுவை நிழலாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதனை அறியக்கூடியதாயிருக் கிறது. வெற்றி **"ஸ்திரீயின் வித்து"** மூலமாகவே வருகிறது என்பதனைக் கர்த்தர் அறிவித்திருக்கிறார். எதிரிடையாக அர்த் தம் கொடுக்கக்கூடிய முறையில் பார்த்தால், ஸ்திரீக்கு வித்து இல்லை என்பது வெளிப்படையான உண்மையாயிருக்கிறது; ஆனாலும், விதிவிலக்காகக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு வரே அந்த ஒரே வித்தாக இருக்கிறார் என்பதனை நாம் அறிந் திருக்கவேண்டும்.

சாத்தானுடைய தலையைக் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து நசுக்குவார் என்பதனையும், அங்கு சாத்தான் முற்று முழுவதுமாகச் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டான் (**கொலோ.** 2:15) என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும். **"நீ அவர்**

குதிங்காலை நசுக்குவாய்" என்பதன் பொருள், கிறிஸ்து சிலுவையில் அடைந்த வேதனை, அவமானம், வெட்கம் என்பவற்றைப் பிரகடனப்படுத்துகிறது (**எபி.** 12:2). இதனை எப்படி அவர் நிறைவேற்றினார் என்பது நடந்துமுடிந்த உண்மைச் சம்பவத்தின் மூலம் நிரூபணமாயிருக்கிறது; ஆனால், கர்த்தராகிய ஆண்டவர் அந்த நேரத்தில் இந்த வார்த்தையைச் சாத்தானுக்கே கூறியிருந்தார். ஸ்திரீயின் மூலமாகவே மீட்பர் உலகத்தில் பிரவேசிப்பார் என்ற அர்த்தத்தைச் (**ஆதி.** 3:15) சாத்தான் சரியான முறையில் விளங்கியிருந்தான் என்பது அவன் அதற்குப் பின்பு எடுத்த நடவடிக்கைகள்மூலம் அறியக்கூடியதாயிருக்கிறது (**ஆதி.** 6:2).

மீட்பு எப்படி நிறைவேற்றப்படும் என்ற விபரம் எதுவும் அவனுக்குக் கொடுக்கப்படவில்லை; ஆயினும், தேவன் தன்னுடைய வாக்குத்தத்தைத் தொடர்ந்து பராமரித்தார்; இதனை எவன் விசுவாசிக்கிறானோ, அவன் எப்படிப்பட்ட மனுஷனாயிருந்தாலென்ன, எதனைச் செய்தாலென்ன, சாத்தானுக்குக் கர்த்தர் சொன்னது ஒரு நிறைவேற்றப்பட்ட உண்மையாயிருக்கிறது. சாத்தானுடைய தலை சிலுவையில் நசுக்கப்பட்டது என்பதனையும் (**கொலோ.** 2:15), அதனை நிறைவேற்றுவதற்குப் பாரிய விலை செலுத்தப்பட்டது என்பதனையும் முதற்கண் நாம் அறிந்திருக்க வேண்டும்.

இப்படியிருக்க, இங்கு வலியுறுத்தப்பட்டிருக்கும் உண்மை என்னவென்றால், இவை யாவும் எனக்கும் வாசகருக்கும் மற்றும் முழுமனுஷகுலத்திற்குமாகவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். சிலுவையினால் கொடுக்கப்பட்ட இந்த ஆசீர்வாதம் விசுவாசத்தின் மூலமாகவே நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது; அதெப்படியென்றால், இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி, வேறொன்றிற்கும் திசைதிருப்பாத படிக்கு, அந்த விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும்

(**யோவா. 15:4-6**) என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது; இதுவே சகல ஆசீர்வாதத்திற்கும் இரகசியமாயிருக்கிறது (**எபேசி. 2:13-18**).

சர்ப்பத்தைத் தன் கருவியாக உபயோகித்த சாத்தானோடு கர்த்தர் இப்பொழுது பேசுகிறார். **உனக்கும்** (சாத்தானுக்கும்) **ஸ்திரீக்கும் இடையில் பகை உண்டாக்குவேன்** எனக் கூறியிருப்பதன் மூலம் அவர் அறிவித்தது என்னவென்றால், மனுஷகுலத்தை நீ ஒரு ஸ்திரீயின் மூலம் வீழ்த்தினாய், ஆனால், ஒரு ஸ்திரீயைப் பாவித்து, அவள் மூலம் மீட்பரை இந்த உலகத்திற்கு அனுப்புவேன்; அவர் மனுஷகுலத்தை இரட்சிப்பார் (**மத். 1:21, 23**) என்று வலியுறுத்தப்பட்டது. அவளுடைய வித்துக்கும் உன்னுடைய வித்துக்குமிடையில் பகை இருக்கும்; அவளுடைய வித்து என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், உன்னுடைய வித்து என்பது சாத்தானைப் பின்பற்றுபவர்களையும் பிரதிபலிக்கிறது.

ஜனவரி

7

***தே**வனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனை விக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் (ஆதி. 3:21).*

"தோல் உடைகள்"

ஆதாமையும் ஏவாளையும் சுற்றிக்கட்டியிருந்த ஒளி, வீழ்ச்சி சம்பவித்தவுடனேயே அவர்களைவிட்டு விலகியது; இப்பொழுது அவர்கள் நிர்வாணிகளானதன் நிமித்தம் அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தயாராயிருக்கிறார்கள் என்பதே இதன் ஆவிக்குரிய பொருளாகும்; இதனிமித்தம் **"..... அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்" (ஆதி. 3:7)** என அறியக்கூடியதாயிருக்கிறது.

வேதனைக்குரிய சம்பவம் என்னவென்றால், அந்த நாள் தொடக்கம் மனுஷன் தன்னுடைய ஆவிக்குரிய நிர்வாணத்தை மூடுவதற்கு அத்தியிலையினால் அரைக்கச்சைகளை உண்டாக்கிய வண்ணமாயிருக்கிறான். அத்தியிலையினால் உண்டாக்கிய அரைக்கச்சைகளை உற்றுநோக்கிய கர்த்தர், பல்வேறுவிதமாகக் கேள்விகளை அவர்களிடம் கேட்டு, அவர்களைச் சுயவுணர்வுக்குக் கொண்டுவந்தபின், தேவனாகிய கர்த்தர் **".....தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" (ஆதி. 3:21)** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதனைச் செய்வதற்குக் கர்த்தராகிய ஆண்டவர் ஒன்றிற்கு மேற்பட்ட மிருகங்களைக் கொன்று, அவைகளின் இரத்தத்தைச் சிந்தவேண்டியிருந்தது. அதன்பின் அந்த மிருகங்களின் தோல்கள் உரிக்கப்பட்டு, அந்தத் தோல்களினால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் போர்வை (Covering) உடுத்துவிக்கப்பட்டது. மரித்த மிருகமோ அல்லது மிருகங்களோ கிறிஸ்துவின் அடையாளமாக இருக்கிறது. மனுஷனுடைய அந்தப் பாவத்திலிருந்து விடுதலையைப் பெறுவதற்கு யார் தன்னுடைய ஜீவனைக் கொடுப்பான்?

மனுஷன் இத்தருணத்தில் அறியவேண்டிய ஒரு உண்மை இருக்கவே இருக்கிறது; அதென்னவென்றால், தன்னுடைய பாவங்களை மூடுவதற்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைத்தவிர வேறெதனையும் உபயோகிக்க முயற்சித்தால், தேவனால் அந்த **"வேறெதனையும்"** என்பது அத்தியிலையாகக் கருதப்பட்டு, உடனடியாகவே அவையாவும் நிராகரிக்கப்படுகிறது (**ஆதி.** 4:5). சகல பாவங்களையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தமே சுத்திகரிக்கிறது (**1யோவா.** 1:7); இதன்மூலம் தேவனுடைய நீதி சாத்தியமாகி, அது ஒரு போர்வையாகக் கருதப்படுகிறது. இவை யாவும் சிலுவையின் மூலமாகவே சாத்தியமானது என்பதனை நாம் புரிந்திருக்கவேண்டும்.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டாக்கி உடுத்துவித்ததன்மூலம், அவர்கள் உடுத்தியிருந்த அத்தியிலை பாவத்தை மூடுவதற்குப் போதுமானதல்ல என்பது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. வீழ்ச்சிக்குப் பின்பு, "..... **இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை"** (**எபி.** 9:22) என்பது ஆதாமுக்கு அறிவிக்கப்பட்டது மட்டுமல்ல, தேவன் அத்தியிலைக்குப் பதிலாகப் பலியையே ஏற்றுக்கொள்ளுவார் என்பதும் அறிவிக்கப்பட்டது. மோசேயின் பலியிடும் முறைக்கு இது அஸ்திபாரமாயிருந்தது; மோசேயின் நியாயப்பிரமாணம் தற்காலிகமாகக் கிறிஸ்துவையும், அவர் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கப் போவதையும் பிரதிபலித்தது.

ஜனவரி

8

காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது (ஆதி. 4:5).

"காயீனின் முகநாடி வேறுபட்டது"

காயீனுக்கும், ஆபேலுக்கும் இடையில் ஒரு வித்தியாசமும் இல்லை; ஆனால், அவர்கள் சகோதரர்களாக இருந்தும், அவர்கள் கொடுத்த பலியில் நித்திய வித்தியாசம் இருந்தது. அவர்கள் இருவரும் அழுகிப்போன மரத்திலிருந்து (ஆதாமிலிருந்து) தோன்றின களங்கப்பட்ட இரு கிளைகளாகும்; இருவரும் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே பிறந்தனர்; இருவரும் குற்றவாளிகள்; இருவரும் பாவிகள்; ஒழுக்கரீதியில் இருவருக்குமிடையில் ஒரு வித்தியாசமும் இல்லை. இருவரும் பரலோகத்தின் நீதிமன்றத்தினால் மரணதண்டனை வழங்கப்பட்டவர்கள். தேவன் இருவருக்கும் தன்னை அணுகும் முறையைத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்; அந்த முறை **அந்த விசுவாசமே**. அந்த விசுவாசம் கேட்கிறதனாலேயே வரும்; அதுவும் தேவனுடைய வசனத்தைக் கேட்பதனாலேயே வரும் (**ரோம. 10:17**); அதனை ஆபேல் ஏற்றுக்கொண்டான் (**எபி. 11:4**), காயீனோ நிராகரித்தான்.

ஆபேலின் பலிபீடம் மனந்திரும்புதலையும், விலையேறப்பெற்ற ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தையும், குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டியையும், விசுவாசத்தையும், தாழ்மையையும் பிரதி

பலித்தது; அந்த ஆட்டுக்குட்டியானவரே (இயேசுகிறிஸ்து) ஸ்திரீயின் வித்தாகும் (**ஆதி.** 3:15); ஆனால், காயீனின் பலிபீடமோ தற்பெருமையையும், அவிசுவாசத்தையும், சுயநீதியையும், அகங்காரத்தையும் பிரதிபலித்தது. ஆபேலின் பலிபீடம் தேவனுடைய பார்வைக்கு அழகாயிருக்கிறது; ஆனால், மனுஷனுடைய பார்வைக்கு அது அருவருப்பாயிருக்கிறது. காயீனின் பலிபீடம் தேவனுடைய பார்வைக்கோ அருவருப்பானது; ஆனால், மனுஷனுடைய பார்வைக்கு அழகாயிருக்கிறது.

இன்றும் இதேமாதிரியான பலிபீடங்கள் உண்டு; கிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய பாவநிவிர்த்தியைப்பற்றியும் (சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை) உபதேசிக்கிற சபைகளைச்சுற்றி வெகுசிலரே கூடுகிறார்கள்; வேறொரு சுவிசேஷத்தைப் போதிக்கிற (வேதவசனத்தைப் புரட்டுகிற) சபைகளைச் சுற்றி ஆயிரக்கணக்கில் ஜனங்கள் கூடுகிறார்கள். ஆபேலினால் பலியாகக் கொடுக்கப்பட்ட, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைத் தேவன் ஏற்றுக்கொண்டார்; ஆனால், காயீன் கொடுத்த நிலத்தின் கனிகளைத் தேவன் நிராகரித்தார். காணிக்கை (பலி) ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதனைக் கொடுத்தவனும் ஏற்றுக்கொள்ளப்படுகிறான்.

தேவன் ஒருபொழுதும் பாவியைப் பார்ப்பதில்லை; அவனைப் பார்க்கவேண்டியதில்லை; அவன் எப்படிப்பட்டவன் என்று தேவன் முன்கூட்டியே அறிந்திருக்கிறார்; அவனைப் பார்ப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை; ஆனபடியால் காணிக்கையையே (பலியையே) அவர் பார்க்கிறார். அவர் பார்க்கும் ஒரே பலி கிறிஸ்துவின் பலியே; வேறு எந்தப் பலியும் உடனடியாகவே நிராகரிக்கப்படுகிறது.

இப்படியிருக்க, தேவனிடத்தில் சேரும் ஒரேவழி இயேசுகிறிஸ்துவேயாகும் (**யோவா.** 14:6); சிலுவையினூடாகவே இயேசுகிறிஸ்துவைச் சேரமுடியும் (**லூக்.** 9:23); சிலுவைக்குச் செல்லும் ஒரே வழி தன்னைத்தான் நிராகரிப்பதே (**லூக்.** 9:23); தன்னைத்

தான் நிராகரிப்பதற்கு கிறிஸ்துவின் சிலுவையை இடைவிடாமல் விசுவாசிக்கவேண்டும்; இதனிமித்தமே பவுல் அப்போஸ்தலர் **"இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள் அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்"** (**1கொரி. 2:2**); எனவும், **"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் ....."** (**1கொரி. 1:23**); எனவும் கூறியிருந்தார்; அதுவே தேவனுக்கு சுகந்த வாசனையாயிருக்கிறது (**பிலி. 4:18**); வேறெதுவும் தேவனுடைய மூக்குக்குத் துர்நாற்றமாயிருக்கிறது.

ஜனவரி

9

***இ**ப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலை கிறவனாயிருப்பாய் என்றார் (ஆதி. 4:11-12).*

"நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்"

காயீன் சிலுவையை நிராகரித்துத் தன் சகோதரனைக் கொலைசெய்து, அதன் நிமித்தம் தேவனால் சபிக்கப்பட்டான். மனுஷகுலத்திற்கெதிராகத் தேவனால் இடப்பட்ட முதலாவது சாபம் இதுவாகும். ஆபேலுடைய இரத்தம் முதல்முறையாகப் பூமியில் ஊற்றப்பட்டது; அன்று முதல் இன்றுவரை அப்பாவி களின் இரத்தத்தினால் பூமி ஊறிப்போகிறது. காயீன் மனுஷர் கள் வசிக்கும் இடத்தைக் களங்கப்படுத்தினான்; ஆனபடியினால் இப்பொழுது மனுஷர்கள் பூமியில் பயிரிடும்பொழுது பூமி சத்துரு வாக மாறி, தன் பலனைக் கொடுப்பதற்கு மறுக்கிறது.

காயீனைப்போல நடப்பவர்கள், காயீனுடைய தண்டனையைப் பெற்றுக்கொள்வார்கள். அநேகமான கிறிஸ்தவர்கள், அவிசுவாசி களைப் பார்த்து, அவர்கள் **"ஐசுவரியவான்களாக இருக்கிறார் களே", "உலகப் பொருட்களினால் நிறைந்திருக்கிறார்களே"** என்று ஏங்குகிறார்கள்; அப்படித்தான் ஆசாப்பும் நினைத்தான்.

தேவனோ தன்னுடைய சிந்தனை என்ன என்பதனை **சங்கீதம்** 73ம் அதிகாரத்தில் அவனுக்குத் தெரிவித்திருக்கிறார். காயீனைப் பின்பற்றுபவர்களில் அவர்களின் பாவத்தின் குற்ற உணர்வு உயிரோடு அவர்களைத் தின்கிறது; இதுபற்றி வேதாகமம் **ஏசாயா** 48:22ல் **"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

காயீனைப் பின்பற்றுகிறவன் எவனோ அவன் சூடுண்ட மனச்சாட்சியினால் **"நீ நிலையற்றவன்"** என்று வாதிக்கப்படுவான். யூதர்கள் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தைச் சிந்தினபடியினால், இதே சாபம் பிற்காலத்தில் அவர்கள் மேல் விழுந்தது; இதனிமித்தம் யூதர்கள் இன்றும், பூமியில் நிலையற்று அலைகிறவர்களாயிருக்கிறார்கள்.

ஜனவரி

10

***அ**ப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான் (ஆதி. 8:20).*

"நோவாவின் பலிபீடம்"

நோவா பலிபீடத்தைக்கட்டித் தேவனைத் தொழுதுகொண் டான்; பலிபீடம் இரட்சிப்பின் கருவியாக இருக்கிறது. பவுல் அப் போஸ்தலருக்குச் சிலுவை கருவிபோல, ஒவ்வொரு விசுவா சிக்கும் சிலுவை இரட்சிப்பின் கருவியாக இருக்கிறது. பவுல் அப்போஸ்தலர் சிலுவையை விசுவாசிக்கவில்லை; ஆனால், அநேகமான ஜனங்கள் சிலுவையை விசுவாசிக்கிறார்கள். பவுல் அப்போஸ்தலரோ சிலுவையில் மரித்தவரை விசுவாசித்தார். நோவாவினால் கட்டப்பட்ட பலிபீடமும், அதில் கொடுக்கப்பட்ட பலியும், வீழ்ந்துபோன ஆதாமின் வம்சத்தை மீட்டுக்கொள்வ தற்குக் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றப்போகிறதைச் சுட்டிக் காட்டும் அடையாளங்களாயிருந்தன.

கர்த்தருடைய கட்டளைப்படி நோவா பலிபீடத்தில் பலியைக் கொடுத்தான். வேதவாக்கியத்தின்படி **"கர்த்தர் அதனைச் சுகந்த வாசனையாக முகர்ந்தார்"** என்று சொல்லப்படுகிறது. உயிரற்ற ஒரு மிருகம் அக்கினியினால் எரிக்கப்பட்டு முறுகிய நிலையில்

இருக்கும்பொழுது அதிலிருந்து எழும்பும் புகை எப்படித் தேவனுடைய மூக்குக்கு சுகந்தவாசனையாக இருக்கமுடியும் என்று பொதுவாக அவிசுவாசிகள் மட்டுமல்ல, விசுவாசிகளும்கூடக் கேள்வி கேட்பதுண்டு; ஆனால், அந்த சுகந்தவாசனை எதனைப் பிரதிபலிக்கிறது என்பதனை நாம் அறிந்தால், அதன் தாற்பரியத்தைப் புரிந்துகொள்வது இலகுவாயிருக்கும்; அவிசுவாசிகளுக்கு அதன் தாற்பரியம் பைத்தியமாகத் தெரிவதுண்டு (**iகொரி.** 2:14); ஆனால், இரட்சிக்கப்பட்ட நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (**iகொரி.** 1:18). ஆம், அந்த சுகந்தவாசனை வரப்போகிற மீட்பரையும், அவர் சிலுவையில் நிறைவேற்றப்போவதையும் பிரதிபலித்தது. அவர் தன்னைப் பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்துத் தன் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, வீழ்ந்துபோன மனுஷகுலத்தை மீட்டுக்கொள்வார் என்பது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குத் தீர்க்கதரிசனமாயிருந்தது; ஆனால், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய நமக்கோ அது வரலாறாக இருக்கிறது.

ஆனபடியினால், ஒவ்வொரு விசுவாசியும் அறியவேண்டியது என்னவென்றால், நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும்பொழுதே, அது தேவனுடைய மூக்குக்கு சுகந்தவாசனையாக இருக்கும். அப்படியாயின், நம்முடைய விசுவாசம் வேறெதனிலும் நிலைத்திருக்கும்பொழுது அது தேவனுக்கு அருவருப்பான துர்நாற்றமாயிருக்கும் என்பதனை நிச்சயமாக அறிந்துகொள்ளுவோமாக. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவில் (**iகொரி.** 2:2) நங்கூரமிடப்படாத எந்த விசுவாசமும் தேவனால் புறக்கணிக்கப்படுகிறது; அப்படியானால், சகல பொய்யான உபதேசங்களையும், நியாயப்பிரமாணங்களையும், மனுஷ கற்பனைகளையும், மாயமான தந்திரங்களையும், சுயத்தை வலுவூட்டுகிற மனோதத்துவ சாஸ்திரங்களையும், லௌகிக ஞானத்தையும் புறக்கணிக்கவேண்டும் (**மத்.** 7:15) என்பது தெளிவாகிறது.

இப்படியிருக்க, ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய போதகர் பிரசங்கிப்பது என்ன என்பதனை நுணுக்கமாகப் பரிசீலனை செய்யவேண்டியவனாக இருக்கிறான்; அதுமட்டுமல்ல, தான் தொலைக்காட்சியில் பார்க்கும் பிரசங்கம் என்ன என்பதனையும் அவன் பரிசீலனை செய்யவேண்டும். போதகர் கிறிஸ்துவின் சிலுவையைப் பிரசங்கிக்காவிட்டால், அங்கு சுகந்தவாசனை இல்லை; அருவருப்பான துர்நாற்றமே உண்டு என்பதனை நாம் அறிந்து, உணர்ந்து கொள்ளவேண்டும். அந்த அருவருப்பான துர் நாற்றத்தினால் ஆத்துமாவை இழந்தோர் அநேகர் (**மத்.** 7:13); ஆகையால், நாம் எச்சரிக்கையாக இருப்போமாக!

ஜனவரி

11

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என் றார் (ஆதி. 12:3).

"ஆசீர்வாதமும் சாபமும்"

தேவன் ஆபிரகாமுக்கும், அவனுடைய மனைவியாகிய சாரா ளுக்கும் தன்னுடைய மனிதகுல மீட்பின் திட்டத்தைக் கொடுத் தார்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமுக்குள் ஆசீர் வதிக்கப்படும் என்பதே அந்தத் திட்டமாகும். அதெப்படியெனில், ஆபிரகாமும், சாராளும் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, இந்த உலகத்திற்குக் கொண்டுவருவார்களென்றும், அந்தப் பிள்ளையின் வம்சத்தினூடாக இறுதியில் உலக இரட்சகரும், மேசியாவுமாகிய கிறிஸ்து வருவார் என்பதுமே அந்தத் திட்டமாகும்; அதேநேரம் சாத்தானும் ஒரு திட்டத்தை உருவாக்கியிருந்தான். தேவனு டைய திட்டத்தைச் செயலிழக்கப்பண்ணுவதே சாத்தானுடைய திட்டமாயிருந்தது (**ஆதி.** 6:1-4).

ஆபிரகாமின் மாம்ச பெலவீனத்தின்மூலம் அதனை நடை முறைப்படுத்தச் சாத்தான் திட்டம் தீட்டியிருந்தாலும், தேவன் தலையிட்டதினால் சாத்தானின் திட்டம் நிலைகுலைந்துபோனது (**ஆதி.** 12:10-20); அதேநேரம் ஆபிரகாமும் ஒரு திட்டத்தை

உடையவனாயிருந்தான்; தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை, தேவனுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன் தன்னுடைய மனைவி யாகிய சாராளின் திட்டத்திற்கு இணைந்து (ஆகாரை மனைவி யாக ஏற்று), தன்னுடைய மாம்ச பலத்தினால், அதனை நிறை வேற்ற முயற்சிசெய்து, மாம்சத்தினால் வஞ்சிக்கப்பட்டான் (**ஆதி.** 16:1-2; **ரோம.** 8:6-8).

"உனக்குள்" என்பது இஸ்ரவேலைக் குறிப்பிடுகிறது; இஸ்ர வேலியர்கள் ஆபிரகாமின் இடையிலிருந்தும், சாராளின் கர்ப்பத் திலிருந்தும் தோன்றினார்கள். இவர்கள் மூலமாக சர்வ உலகத் திற்கும் வேதவசனத்தைக் கொடுப்பதே தேவனுடைய திட்ட மாகும்; எல்லாவற்றிற்கும் மேலாக மேசியாவாகிய கிறிஸ்துவை உலகத்திற்கு இவர்கள் மூலமாகக் கொண்டுவருவதே தேவனு டைய முக்கியமான திட்டமாகும். எந்த மனுஷன் ஆபிரகாமு டைய (தேவனுடைய) ஆசீர்வாதத்தைப் பெறவிரும்புகிறானோ, அவன் கிறிஸ்து மூலமாகவே அதனைப் பெற்றுக்கொள்ளமுடி யும். அந்த ஆசீர்வாதம் பலர் உபதேசிப்பதுபோல ஆடுமல்ல, மாடுமல்ல, பொன்னுமல்ல, வெள்ளியுமல்ல; **மனுஷன் விசுவா சத்தினால் நீதிமானாக்கப்படுகிறான்** (**ஆதி.** 15:6) என்பதே அந்த ஆசீர்வாதமாகும்.

ஜனவரி

12

கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான் (ஆதி. 12:4).

"சரணடைவு"

கர்த்தர் ஆபிரகாமுக்கு **ஆதியாகமம்** 12:4ல் சொன்னபடி அவன் புறப்பட்டுப்போனான். இது அவனுடைய முதலாவது சரணடை வாகும். மொத்தமாக, **ஏழு சரணடைவு** அவனுடைய ஆவிக் குரிய வாழ்க்கையில் நடந்தேறியது. **முதலாவதாக**: ஆபிரகாம் தான் பிறந்த மண்ணை விட்டுக்கொடுத்து சரணடைந்தான் (**ஆதி.** 12:4). **இரண்டாவதாக**: தன் குடும்பத்தை விட்டுப்பிரிந்து சரண டைந்தான் (**ஆதி.** 12:4). **மூன்றாவதாக**: யோர்தானுக்கு அருகான சமபூமி எல்லாவற்றையும் லோத்துவுக்கு விட்டுக்கொடுத்து சரணடைந்தான் (**ஆதி.** 13:9-12). **நான்காவதாக**: சோதோமின் ஐசுவரியம் எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து சரணடைந்தான் (**ஆதி.** 14:21-23). **ஐந்தாவதாக**: சுயத்தை ஒப்புக்கொடுத்து சரண டைந்தான் (**ஆதி.** 17:1). **ஆறாவதாக**: இஸ்மவேலையும் ஆகா ரையும் தன்னைவிட்டு விலக்கி சரணடைந்தான் (**ஆதி.** 21:10;14). **ஏழாவதாக**: ஈசாக்கைப் பலியாகக் கொடுத்து சரணடைந்தான் (**ஆதி.** 22:9-10).

இந்த ஒவ்வொரு வல்லமையான சரணடைவின் பிரதிபல னாக ஆவிக்குரிய ஐசுவரியம் ஆபிரகாமைப் பின்தொடர்ந்தது. "....**விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ, அவர்களே ஆபிரகா மின் பிள்ளைகளென்று அறிவீர்களாக**" (**கலா**. 3:7). ஆபிரகாம் வேதவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, சகல சரணடைவுகளையும் மேற்கொண்டதுபோலப் அவனுடைய பிள்ளைகளும் அவனைப் பின்தொடரவேண்டாமோ?

ஜனவரி

13

கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (ஆதி. 12:7).

"ஆபிரகாம் எதற்காகப் போகிற இடமெல்லாம் பலிபீடத்தைக் கட்டினான்?"

பொதுவாக ஆபிரகாமை **"பலிபீடத்தைக் கட்டுகிறவன்"** எனச் சொல்வதுண்டு. அவன் எதற்காகப் போகிற இடமெல்லாம் பலி பீடத்தைக் கட்டினான் என்ற கேள்வி பொதுவாகக் கிறிஸ்தவர் கள் மத்தியில் பேசப்படுகிறது; இதுபற்றிய தெளிவான விளக்கம் நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கு உதவியாயிருக் கும் என்பது என்னுடைய கணிப்பாகும். ஆபிரகாமுக்குத் தேவன் தரிசனமானபொழுது, அவர் சொன்னதை அவன் கேட்டு, அதற்கு இணங்கி மனந்திரும்பினான். தேவன், பாவியான மனுஷனும், பரிசுத்தவானும் தன்னைச் சந்திக்கும் முறைபற்றித் தெளிவு படுத்தியிருந்தார். அதெப்படியெனில், அவன் சுத்தமான மிருகம் ஒன்றைப் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்; அந்த மிருகம் தன் னுடைய இரத்தத்தைச் சிந்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப் பட்டது; இவை யாவும் வரப்போகிற கிறிஸ்துவை அடையாள மாகப் பிரதிபலிக்கிறது; இந்த விதமாகவே தேவன் எந்த மனுஷ னோடும் பேசுவார். சிலுவையின் ஊடாகவே மனுஷனோடு

ஐக்கியத்தை ஏற்படுத்துகிறார்; வேறெந்த வழியினாலுமல்ல. இந்த ஒரு காரணத்திற்காகவே ஆபிரகாம் போகிற இடமெல்லாம் பலிபீடத்தைக் கட்டினான்; வேறெந்த வழியினாலும் மனுஷ னோடு தேவன் பேசுவதில்லை.

இன்றும், இதே நிபந்தனை எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது. மனுஷன் தேவனிடத்திற்கு சிலுவை மூலமாகவே வரமுடியும்; இதனையே பவுல் அப்போஸ்தலர் **"இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மா னித்திருந்தேன்"** (**1கொரி. 2:2**) எனச் சொல்லியிருந்தார்; ஆனபடி யால் கிறிஸ்தவ சபைகள் கிறிஸ்துவின் சிலுவையைப் பிரசங் கிக்காமல், வேறெதனைப் பிரசங்கித்தாலும், தேவன் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார். அப்படியான சபைகளில் பிரசன்னமாயி ருப்பவர்கள் தேவனுக்காகப் பிரசன்னமாயிருக்கவில்லை; அவர் கள் தமக்காகப் பிரசன்னமாயிருக்கிறார்கள்; இதன் முடிவு நிர்ப் பந்தமான மனுஷனாக அவர்கள் விடப்படுவார்கள் (**ரோம. 7:24**). ஆனபடியால், **"பலிபீடத்தைக் கட்டுகிற"** சபைகளை நாடுவோ மாக; அதெப்படியெனில், கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் பிரசங்கிக்கிற சபைகளே தேவனுக்கேற்ற சபைகளாகும்; அந்தப் பிரசங்கத்தின்மூலம்தான் ஜீவனையும், ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ள முடியும் (**1கொரி. 1:17-18, 21, 23, 2:2**).

ஜனவரி

14

பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான் (ஆதி. 12:8).

"பெத்தேல்"

பெத்தேல் என்பது தேவனுடைய வீடாகும்; ஆயீ என்பது குப்பைமேடாகும். பலிபீடம் கிறிஸ்துவின் சிலுவையைப் பிரதி பலிக்கிறபடியினால், பலிபீடம் ஒன்றே குப்பை மேட்டைவிட்டு நம்மை அப்புறப்படுத்தும். கிறிஸ்துவின் சிலுவையை ஒரு விசுவாசி சரியான முறையில் அறியாவிட்டால், அவனால் தேவனுடைய வீட்டுக்கும், குப்பைமேட்டுக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுகொள்ளமுடியாது.

நம் மத்தியில் தற்பொழுது பொய்யான உபதேசங்களைத் தாராளமாகக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு முக்கிய காரணம் இதுவேயாகும். பலவருட காலமாகக் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய உபதேசம் கிறிஸ்தவ சபைகளில் சிறிது சிறிதாக விலக்கப்பட்டுத் தற்பொழுது அது பூர்த்தியடைந்திருப்பதனால், கிறிஸ்தவ சபைகள் திசைமாறிய பறவைகளாக செயற்படுகின்றன. சிலுவையில் அஸ்திபாரமிடப்படாத சகல

உபதேசங்களும் சீர்கேடும், கிழவிகள் பேச்சுமாயிருக்கிறதுமட்டு மல்ல, கட்டுக்கதைகளுமாயிருக்கிறபடியினால், அவற்றை விட்டு நாம் விலகவேண்டும் (**1தீமோ.** 4:7) எனப் பரிசுத்த ஆவியானவர் வலியுறுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் சிலுவையை அறியா விட்டால், ஒரு விசுவாசி பொய்யான உபதேசங்களை நிதானித்து அறியமுடியாமல் இருக்கிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன் சீஷர்களை நோக்கி **நீங்கள் பரிசேயரையும், ஏரோதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்** எனச் சொன்னார் (**மாற்.** 8:15). பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, **பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்** (**1தீமோ.** 4:1) என எச்சரித்திருக்கிறார்.

சாத்தான் குப்பைமேட்டை அலங்கரித்து முற்றுமுழுவதும் வித்தியாசமானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் பிரகடனப்படுத்துவான்; அவைகள் குப்பைமேடாக இருந்தும், பார்வைக்குத் தேவனுடைய வீடுபோலத்தோன்றும். கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய பூரண அறிவு இல்லாவிட்டால், விசுவாசி தவிர்க்க முடியாமல் குப்பைமேட்டை நோக்கியே செல்லுவான். இப்படியிருக்க, இங்கு கூடாரமும், பலிபீடமும் விசுவாசியாகிய ஆபிரகாமின் குணாதிசயங்களாயிருக்கின்றன. ஆபிரகாம் தேவனைத் தொழுதுகொள்வதற்கு ஆதாரமாகப் பலிபீடத்தையும், இந்தப் பூவுலகத்தில் தான் பரதேசியாயிருக்கிறேன் என்பதற்கு ஆதாரமாகக் கூடாரத்தையும் தெரிவுசெய்தான்; அப்படியே இந்த உலகத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாமும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நம்முடைய விசுவாசத்தை நங்கூரமிட்டு, அந்த விசுவாசத்தைப் பலப்படுத்துவோமாக.

ஜனவரி

15

இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார் (ஆதி. 15:1).

"நான் உனக்குக் கேடகமும், மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்"

கர்த்தர் ஆபிராமுக்கு நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் எனக் கூறியிருந்தார். நான் நோய்வாய்ப்பட்டு செய்வதென்னதென்று அறியாமல் வேதனை யடைந்துகொண்டிருந்த காலத்தில், இந்த வாக்குத்தத்தத்தை ஆண்டவர் எனக்கும் தந்தார். அவர் முதலாவதாகப் **பயப் படாதே** என்று ஆபிரகாமுக்குக் கூறினார். தேவனுடைய வாக் குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குமுன் தன்னைப் பகைஞர்கள் கொன்றுபோடுவார்களோ என்று ஆபிரகாம் பயந்தான். முழு மனிதகுலமும் அந்தப் பாவத்திலிருந்து (பாவசுபாவத்திலிருந்து) விடுதலைபெறத் தேவனே மனுஷனாக இந்தப் பூவுலகத்திற்கு ஆபிரகாமூடாக வருவார் என்பதும், பூமியிலுள்ள வம்சங்க ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (**ஆதி.** 12:3) என்பதுமே அந்த வாக்குத்தத்தமாகும். தேவன் ஆபிரகாமுக்கு நீ ஐசுவரி யத்தையும் பொருட்செல்வங்களையும் மறந்து எனக்கு அருகில்

இருப்பதைத் தெரிந்துகொள்; அதிகமாக அந்த வாக்குத்தத்தத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்காமல், வாக்குத்தத்தத்தைத் தந்த வர் அதைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதைத் தெளிவாக உணர்ந்து, அவரை விசுவாசிக்கவேண்டுமென்று ஆலோசனை கூறினார்.

நாம் ஐசுவரியத்தையும், பொருட்செல்வங்களையும் மற்றும் நமக்குத் தேவையான எதனையும், தேவனிடத்திலிருந்து பெற வேண்டுமானால் **"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவை களெல்லாம்** (ஐசுவரியமும் பொருட்செல்வங்களும்) **உங்களுக் குக்கூடக் கொடுக்கப்படும்" (மத். 6:33)** என்றே வேதவாக்கியம் உறுதிப்படுத்துகிறது; ஆனால் அநேகமான கிறிஸ்தவர்கள் தேவ னிடத்திலிருந்து ஏதாவது நன்மைகளைப் பெறலாம் என்ற நோக் கத்துடனேயே கிறிஸ்துவை நாடுகிறார்கள் (I**கொரி. 15:19**). அவர் களுடைய மாம்ச இச்சைகள் நிறைவேற்றப்படவில்லையானால் அவர்கள் விசனப்படுகிறார்கள்.

தேவனை அறியவேண்டும்; அவருக்குக் கிட்ட நாம் அணுக வேண்டுமென அநேகமான கிறிஸ்தவர்கள் சிந்திப்பதில்லை. அதற்குப் பதிலாகப் பேராசை பிடித்துத் திரவியசம்பன்னர்களா யிருக்க விரும்புகிறார்கள். அவர்களுடைய மாம்ச இச்சைகளுக் கேற்ற மாதிரி உபதேசஞ்செய்யும் போதகர்களை நாடி சத்தி யத்தைவிட்டு விலகிப்போகிறார்கள் (I**தீமோ. 4:3-4**); ஆனால், கர்த்தரோ ஆபிரகாமுக்கு நான் உனக்குக் கிடைத்த மகா பெரிய வெகுமானமாயிருக்கிறேன் (Reward) எனக் கூறுகிறார். இது பற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"தேவன் நம்முடைய பட்சத்திலி ருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம. 8:31)** எனக் கூறியிருப்பதிலிருந்து வெகுமானத்தின் முக்கியத்துவத்தை அறியக்கூடியதாயிருக்கிறது.

ஆபிரகாம், நம்மைப்போன்று **"கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்....." (ஆதி. 15:2)** என்றான்; கர்த்தர்

"நான் உனக்கு இயேசுவைத் தருகிறேன் என்றார்". அதை அவன் விசுவாசித்தான்; தேவன் அதை அவனுக்கு நீதியாக எண்ணினார் (**ஆதி.** 15:6). இரண்டாவதாகக் கர்த்தர் இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார்; அதற்கு அவன் **நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதனால் அறிவேன்?"** என்றான் (**ஆதி.** 15:8); அதற்கு அவர் நான் உன்னோடு உடன்படிக்கை செய்வேன் என்றார்; அந்த உடன்படிக்கையே நித்திய உடன்படிக்கையாகும் (**எபி.** 13:20). ஆபிரகாம் அதனை விசுவாசித்தான் என்பதனை **யோவான்** 8:56 தெளிவாக நிரூபிக்கிறது. இதுவே கிறிஸ்தவத்தின் இருதயம்; இதனையே ஆபிரகாம் விசுவாசித்தான் (**ஆதி.** 15:6).

ஜனவரி

16

பின்பு எகிப்து தேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் கண்டு, ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்..... (ஆதி. 21:9-11).

"அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்"

ஈசாக்கு ஆவியினால் உருவாக்கப்பட்டான்; இஸ்மவேலோ மாம்சத்தினால் உருவாக்கப்பட்டான். மாம்சத்தினுடைய அவலட்சணமான கொடூரமான வெளிப்பாடு, ஆவியைக் கண்டவுடன் ஆரம்பமாகும். இஸ்மவேல் எப்படிப்பட்டவன் என்பது ஈசாக்கு வரும்வரையும் வெளிப்படவில்லை. உண்மையில் இஸ்மவேல் ஈசாக்கைக் கொல்ல முயற்சித்தான் என நாம் காண்கிறோம் (**கலா.** 4:29); அவ்வாறே, நாம் இரட்சிக்கப்படும்வரையும் மாம்சத்தினுடைய துஷ்டத்தனத்தை அறியமுடியாமலிருக்கிறது; அதெப்படியென்றால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு விசுவாசத்தின்மூலம் நாம் சரீரரீதியாக இணைந்து, அவரை நம்முடைய சொந்த இரட்சகராக இருதயத்தில் ஏற்றுக்கொண்டவுடன், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் வாசஞ்செய்கிறார் (**Iகொரி.** 3:16). அக்கணமே மாம்சத்தின் அதிருப்தியையும், ஆவிக்கெதிரான அதனுடைய செயற்பாட்டையும் நாம் உணரமுடியும். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் இஸ்மவேல் நம்முடைய

பழைய சுபாவத்தையும் (இரட்சிக்கப்பட முன்பு), ஈசாக்கு நம் முடைய புதிய சுபாவத்தையும் (இரட்சிக்கப்பட்ட பின்பு) பிரதி பலிக்கின்றனர்; ஆகார் பழைய ஏற்பாட்டையும், சாராள் புதிய ஏற் பாட்டையும் பிரதிபலிக்கின்றனர்; பழைய ஏற்பாடு கிரியைகளும், அடிமைத்தனங்களும் நிறைந்தது.

சாராள் தன் மகனாகிய ஈசாக்கோடு மாம்சத்துக்குரியவனாகிய இஸ்மவேல் ஒன்றாக இணைந்து வாழமுடியாது என்பதனை உணர்ந்து, இஸ்மவேலையும் ஆகாரையும் அப்புறப்படுத்துமாறு ஆபிரகாமைக் கேட்டுக்கொண்டாள். தேவனும் அதை அனுமதித் தார் (**ஆதி.** 21:12); ஏனெனில், ஈசாக்கும், இஸ்மவேலும் ஒரு பொழுதும் ஒன்றாயிருக்கமுடியாது; இருக்க முயற்சிசெய்தால், இஸ்மவேல் தவறாமல் ஈசாக்கைக் கொலைசெய்வான். இஸ்ம வேலை சொல்லிப் பேசித் திருத்தலாமெனப் பலர் ஆலோசனை கூறுவார்கள்; அது ஒருபொழுதும் சாத்தியப்படாது; ஏனெனில், ஆவியும், மாம்சமும் ஒன்றாக இணையமுடியாது (**கலா.** 5:17). அநேகமான கிறிஸ்தவர்களின் அழிவுக்கு இதுவே பிரதான கார ணமாயிருக்கிறது

இப்படியிருக்க, இரட்சிக்கப்பட்டவுடன் மாம்சத்தின் கொலை முயற்சியை நாம் இலகுவாக அறியலாம். எப்படியாகுதல் நம்மி லிருந்து ஆவியை அப்புறப்படுத்துவதற்கு மாம்சம் முயற்சி செய் யும்; நிச்சயமாக ஏதாவதொன்றை வெளியேற்றியேயாகவேண் டும். புதியசுபாவம் பழையசுபாவத்தை அப்புறப்படுத்துமாறு விசு வாசியைக் கேட்டுக்கொள்ளும்; ஆனால், மாம்சமோ ஆவியை அப்புறப்படுத்துமாறு விசுவாசியை வலியுறுத்தும்; ஒருபொழுதும் அந்தப் பாவத்தின் நிமித்தம் களங்கப்பட்ட பழைய சுபாவத்தைத் திருத்தமுடியாது. சூழ்நிலைகளும், மனுஷகற்பனைகளும், பாரம் பரியங்களும், மனோதத்துவ மனோவசிய ஆலோசனைகளும் ஒருபொழுதும் பழையசுபாவத்தைத் திருத்தமுடியாது (**யாக்.** 3:15); ஆனாலும், பழையசுபாவத்தை அப்புறப்படுத்தியேயாகவேண்டும்; இல்லையேல் புதியசுபாவத்தையும், அதனுடைய மகத்துவமான

செயற்பாடுகளையும் இழக்கவேண்டிவரும்; ஆகையால், சாராள் இஸ்மவேலையும் ஆகாரையும் புறம்பே தள்ளுமாறு ஆபிரகாமை வேண்டிக்கொண்டாள் (**கலா.** 4:30). அவளுடைய வேண்டுதல் ஆபிரகாமுக்குத் துக்கமாயிருந்தாலும், தேவனின் ஆலோசனையின்படி (**ஆதி.** 21:12) அவன் ஆகாரையும் இஸ்மவேலையும் வெளியே அனுப்பிவிட்டான். அது ஆபிரகாமுக்குத் துக்கமாயிருந்ததற்குக் காரணம் அது அவனுடைய மாம்சத்தினாலும், அவனுடைய சுயத்தினாலும் ஏற்படுத்தப்பட்ட கனியாகும்.

அவ்வாறே, விசுவாசிகளாகிய நாமும், இரட்சிக்கப்பட்டவுடன் ஆவிக்குச் செவிகொடுப்பதா அல்லது மாம்சத்தின் கூக்குரலுக்குச் செவிகொடுப்பதா என்ற தெரிவைத் தவிர்க்கமுடியாமல் மேற்கொண்டேயாகவேண்டும். அந்தத் தெரிவை எடுக்கும்பொழுது ஆபிரகாம் துக்கமடைந்ததுபோல, அநேகமான கிறிஸ்தவர்கள் துக்கமடைந்து, மாம்சத்துக்குச் செவிகொடுத்து, சீரழிந்த கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆயினும், ஒருவன் ஆவிக்கு செவிகொடுத்து, மாம்சத்தை அப்புறப்படுத்தப் பிரியமாயிருப்பினும், அவன் தன் சொந்த பலத்தினால் அதனைச் செய்ய முடியாது; பரிசுத்த ஆவியானவரே அதனைச் செய்யவேண்டும். அதனைச் செய்வதற்கு அவன் **"கிறிஸ்துவுக்குள்"** இருக்கவேண்டுமென்பதே பரிசுத்த ஆவியானவருடைய பிரமாணமாயிருக்கிறது (**ரோம.** 8:2). ஒருவன் கிறிஸ்துவையும், அவர் அவனுக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதையும் முற்றுமுழுவதுமாக விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பின் அவன் "**கிறிஸ்துவுக்குள்**" இருக்கிறபடியினால்; பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக அவனில் செயற்பட்டு, மாம்சத்தின் சகல இச்சைகளையும் அப்புறப்படுத்துவார் (**கலா.** 5:24).

ஜனவரி

17

***அ**தற்குக் கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார் (ஆதி. 25:23).*

"மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்"

தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும், சாத்தானுக்கும் வீழ்ந்து போன மனுஷகுலத்தை மீட்டுக்கொள்வதற்குத் தன் திட்டம் என்ன என்பதனை **ஆதியாகமம்** 3:15ல் **"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"** என வெளிப்படையாக அறிவித்தார். அந்நாள் தொடக்கம் ஸ்திரீயின் வித்து வெளிப்படக்கூடிய சகல பாதைகளையும் சாத்தான் அடைத்தான். முதலாவதாக, தன் ஊழியக்காரராகிய தேவகுமாரர்களை (தேவனிடத்திலிருந்து பிரிந்து, சாத்தானுக்கு ஊழியக்காரராயிருக்கும் வீழ்ந்துபோன தேவதூதர்களை) பூமியிலுள்ள மனுஷகுமாரத்திகளோடு கூடும்படிசெய்து ஸ்திரீகளைக் கெடுத்தான் (**ஆதி.** 6:4-5).

இதோ, இருபது வருஷகாலமாக ஈசாக்கு வரமுடியாதபடி ஸ்திரீயின் வித்து வருவதைத் தடைசெய்தான் (**ஆதி.** 25:21). ஏமோரின் குமாரனாகிய சீகேம் என்பவனைச் சாத்தான் பயன்

படுத்தி, லேயாள் யாக்கோபுவுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாளை சீகேம்மூலம் தீட்டுப்படுத்தினான் (**ஆதி.** 34:1-2). இப்படி யாக ஸ்திரீயின் வித்தாகிய **இயேசு** என்னும் பரிசுத்த வித்து வருவதற்குப் பல்வேறுவிதமாகச் சாத்தான் தடைகளை ஏற்ப டுத்தியிருந்தான்; ஆயினும், தேவன் சாத்தானுடைய வஞ்சகத் தைச் செல்லாக்காசாக்கி ரெபெக்காளின் இயற்கையான மலட்டுத் தன்மையை தமது கிருபையின்மூலம் செயலற்றுப்போகப்பண்ணி னார்; ரெபெக்காள் கர்ப்பவதியானாள்.

தேவன் கர்ப்பவதியான ரெபெக்காளில் உருவான இரட்டைக் குழந்தைகள்மூலம் மனுஷகுலத்தின் அவலத்தைத் துல்லியமாக வெளிப்படுத்தியிருந்தார் (**ஆதி.** 25:23). மனுஷனுடைய அவலத் திற்குக் காரணம் அந்தப் பாவமே; குழந்தைகள் கர்ப்பத்திலேயே ஒன்றோடொன்று மோதினது; கர்ப்பத்திலேயே ஒன்று தேவனை விசுவாசித்தது மற்றது தேவனை விசுவாசிக்க மறுத்தது; கர்ப் பத்திலேயே பாவசுபாவமும், தெய்வீகசுபாவமும் வெளிப்படுத் தப்பட்டது. கர்ப்பத்தில் ஏற்பட்ட மோதலால் தான் மரித்துப் போவேனோ என்று ரெபெக்காள் பயந்து **"இப்படியானால் எனக்கு எப்படியோ"** என்று தேவனிடம் விண்ணப்பித்தாள்; அவள் குழம்பிப்போயிருந்தாள்.

ரெபெக்காள் குழந்தை வேண்டும் என்று தேவனிடத்தில் விண் ணப்பித்தபோது, தேவன் அவளுக்குக் குழந்தையைத் கொடுத்தார்; ஆனால், அவளுடைய கர்ப்பத்தில் நடக்கும் யுத்தம் அவளுக்குத் தாங்கமுடியாத வேதனையைக் கொடுத்தது; இந்த இக்கட்டான நிலைமை ஏன் தனக்கு ஏற்பட்டது என்று தேவனிடம் வேண்டி னாள். கர்த்தராகிய ஆண்டவர் அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கையில் **இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டா யிருக்கிறது. இரண்டுவிதமான ஜனங்கள் உன் வயிற்றி லிருந்து பிரியும்; அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத் தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள்; மூத்தவன் இளைய வனைச் சேவிப்பான்** என்றார்; அதெப்படியெனில், அந்த இரண்டு

ஜாதிகளில் ஒன்று, ஏசாமூலம் ஏதோமியர் என்றும் மற்றது யாக்கோபு மூலம் இஸ்ரவேலியர் என்றும் உருவானது. யாக்கோபுவுக்கும், ஏசாவுக்கும் பிறந்தநாள் தொடக்கம் பொதுவானதென ஒன்றும் இல்லாதிருந்தது (**ஆதி.** 25:27-34). ஒருவனை ஒருவன் வெறுத்தான்; இருவருக்குமிடையில் பகை இருந்தது (**ஆதி.** 27:41); இருவரும் பிரிந்தனர்; யாக்கோபு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான்; ஆனால், ஏசாவோ தேவனால் சபிக்கப்பட்டான் (**ஒப.** 1-12).

மூத்தவனாகிய ஏசா இளையவனாகிய யாக்கோபைச் சேவிப்பான் எனத் தேவன் கூறியிருந்தார்; இது பிரதிபலிக்கும் பொருள் என்னவெனில், மூத்தவன் நம்மோடு பிறந்த பாவசுபாவமாகும்; இந்தச் சுபாவம் ஆதாமிலிருந்து முழுமனுஷகுலத்திற்குள் தொற்றுநோயாகப் பிறப்பின்மூலம் பரவியது; இந்தப் பாவத்திலிருந்து நாம் விடுதலையடைவதே இரட்சிப்பு எனப்படும். விசுவாசியான எந்த மனுஷனிலும் இரட்சிக்கப்பட்டவுடனேயே இளையவனான தெய்வீகசுபாவம் (திவ்விய சுபாவம்) தேவனால் இருதயத்தில் நாட்டப்படுகிறது (**IIபேது.** 1:4); நாட்டப்பட்டவுடனேயே மூத்தவனான பாவசுபாவம் செயலிழக்கப்பட, இளையவனான தெய்வீகசுபாவம் வல்லமையாகச் செயற்படுகிறது; இதனையே தேவன் **"மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்"** என்றார். விசுவாசி, விசுவாசத்தில் பலவீனப்பட்டு அல்லது வேறொன்றிற்குத் திசைதிருப்பப்பட்டால், மூத்தவனான பாவசுபாவம் உயிர்பெற்றெழுந்து, இளையவனான தெய்வீகசுபாவத்தை அப்புறப்படுத்த முயற்சிசெய்யும் (**கலா.** 5:17); ஆயினும், விசுவாசி **"கிறிஸ்துவுக்குள்"** நிலைத்திருப்பானாயின் (**Iகொரி.** 2:2), மூத்தவனான பாவசுபாவம் செயலற்று இளையவனான தெய்வீகசுபாவத்தைச் சேவிக்கும்; நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருந்தால் பாவம் நம்மை மேற்கொள்ளமாட்டாது (**ரோம.** 6:14).

ஜனவரி

18

ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான் (ஆதி. 27:1).

"கிறிஸ்தவர்கள் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கிறார்கள்"

ஏசா சேஷ்ட புத்திரபாகத்தை நிந்தித்தான்; சேஷ்ட புத்திர பாகம் இல்லாமல் ஆசீர்வாதத்தைப் பெறலாம் என ஏசா நினைத் தான்; ஆயினும் தனக்கு ஆசீர்வாதம் வேண்டுமென அவன் விரும்பினான். அப்படியே தற்பொழுது அநேகமான கிறிஸ்த வர்கள் விரும்புகிறார்கள். நிபந்தனை இல்லாமல் தமக்கு ஆசீர் வாதம் வேண்டும் என்கிறார்கள்; **வேதாகமத்தில் தேவனுடைய சகல வாக்குத்தத்தங்களும் நிபந்தனையுடனேயே கொடுக்கப் பட்டுள்ளன;** தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றினால்த் தான் ஆசீர்வாதங்களைப் பெறமுடியும்; அவைகளை நம்மால் நிறைவேற்றமுடியாது (**யோவா.** 7:19); ஆனால், இயேசுகிறிஸ்து நம் சார்பில் நிறைவேற்றியதை விசுவாசிப்பதன் மூலம், நாம் சகலத்தையும் நிறைவேற்றியவர்களாகவே தேவன் பார்க்கிறார்; இதன்மூலமே நாம் சகலத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். ஏசா போன்றே, தற்போதைய கிறிஸ்தவர்கள் ஆசீர்வாதத்தை மட்டுமே விரும்புகிறார்கள்; ஆனால், வெகு சில கிறிஸ்தவர்களே

சேஷ்ட புத்திரபாகத்தை விரும்புகிறார்கள்; சேஷ்ட புத்திர பாகத்தை விரும்புகிறவர்களோடு உலகத்தினுடைய பகை, துன்பம், வெறுப்பு ஆகியனவும் உடன்செல்கிறது. நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நமக்காக நிறைவேற்றியதையும் விசுவாசிக்கும் பொழுது சகல ஆசீர்வாதங்களும் நம்முடையதாகிறது (**மத்.** 6:33).

ஜனவரி

19

***அ**ங்கே அவன் ஒரு சொப்பனம் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறு கிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள் (ஆதி. 28:12).*

"ஏணி"

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பொதுஜன ஊழி யத்தை ஆரம்பித்தபோது இந்த ஏணியைப்பற்றிக் கூறியிருந்தார். அவர் நாத்தான்வேலை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய் யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (**யோவா.** 1:51). அந்த ஏணி தேவதூதர்களுக்குமட்டும் திறந்திருந் ததேதவிர வேறொருவருக்கும் அல்ல; அதெப்படியென்றால், பயங்கரமான இந்தப் பாவத்தின் கடன்கள் மனுஷன்மேல் சுமத் தப்பட்டு இருப்பதனால் பரலோகம் எல்லா மனுஷர்களுக்கும் மூடப்பட்டிருந்தது; பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும்கூட மூடப்பட்டிருந்தது. சிலுவைக்கு முன்பு மரித்த விசுவாசிகள் பரலோகத்திற்குச் செல்லாமல் பரதீசுக்கே சென்றார்கள்; பரதீசில் அவர்கள் சாத்தானின் சிறைக்கைதிகளாக இருந்தார்கள் (**எபேசி.** 4:8); பரதீசில் அவர்களுக்குத் தேவனால் ஆறுதல் அளிக்கப் பட்டது; ஆயினும் பரதீசும் எரிநரகமும் ஒரு பிளவினால்

மட்டுமே பிரிக்கப்பட்டிருந்தது (**லூக்.** 16:19-31). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் இரத்தஞ் சிந்தி மரித்தவுடன், நம் முடைய பாவத்தின் கடன்கள் சதாகாலத்திற்குமாகச் செலுத்தப் பட்டது; இப்பொழுது அந்த ஏணி தேவதூதர்களுக்குமட்டுமல்ல, விசுவாசிகளுக்கும் திறக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

சிலுவை நிஜமானவுடன் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களில் இறங்கி, சாத்தானுடைய கைதிகளாயிருந்த சகல சிறைப்பட்ட பரிசுத்தவான்களையும் சிறையாக்கித் தன்னோடுகூட மகிமையான பரலோகத்திற்குக் கொண்டுசென்றார்; இதுபற்றி **எபேசியர்** 4:8-10ல் "**ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக் கிறார். ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமி யின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிற தல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவரு மாயிருக்கிறார்**" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு விசுவாசி மரித்தால், உடனடியாகவே நம்முடைய ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவிடம் பரலோகத்திற்கு செல்கிறான் (**பிலி.** 1:23; **IIகொரி.** 5:8); இவை யாவும் கிறிஸ்து சிலுவையில் நிறை வேற்றியதன் நிமித்தமே சாத்தியமானது.

ஜனவரி

20

***நா**ன் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனைபண்ணிக்கொண்டான் (ஆதி. 28:22).*

"எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்"

பணப் பரிமாற்றமற்ற, ஜெபஆலயங்களற்ற, போதகர்களற்ற, கிறிஸ்தவம் என்ற ஒரு மார்க்கமே இல்லாத, ஆலயம்போன்று எதுவுமற்ற அந்தக் காலத்தில், யாக்கோபு தசமபாகத்தை எப்படி? யாருக்குச் செலுத்தினான்? என்ற கேள்விகளை ஒவ்வொரு விசுவாசியும் கேட்கவேண்டியவனாக இருக்கிறான். யாக்கோபு தேவனுக்குத் தசமபாகத்தைச் செலுத்தினான்; அந்தத் தசமபாகம் தனக்குக் கிடைத்த ஆட்டுமந்தையிலும், மாட்டுமந்தையிலுமிருந்து பத்தில் ஒன்றை எடுத்து, அதனைக் கர்த்தருக்குப் பலியாகச் செலுத்தினான் என்பது புலனாகிறது. அப்படியாயின் யாக்கோபு வேறொருவரும் கொடுக்காதளவு பலியைக் கர்த்தருக்குச் செலுத்தினான் என்பது தெளிவாகிறது.

நாம் கர்த்தருக்குக் கொடுக்கும் தசமபாகத்தைச் சபைக்குக் கொடுக்கிறோம்; அப்படியானால், சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை (**1கொரி.** 1:23, 2:2) பிரசங்கிக்கிற சபைக்கே தசமபாகத்தைக் கொடுக்கவேண்டும் என்பது யாக்கோபு தசமபாகம் செலுத்தின முறையோடு ஒத்ததாயிருக்கிறது; இந்த

முறையை விசுவாசி பின்பற்றாவிட்டால், அவன் தசமபாகம் செலுத்தவில்லை என்றே கருதப்படும் (**மல்கி.** 3:8-9); உன்னத மான தேவனுடைய ஆசாரியனான, சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தனக்குக் கிடைத்த எல்லா வற்றிலேயும் தசமபாகம் கொடுத்தான் என்று முதல்முறையாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (**ஆதி.** 14:18-20). மெல்கிசே தேக்கு நம்முடைய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவின் மாதிரியாக இருந்தான். இயேசுகிறிஸ்து சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, பிரதான ஆசாரியான மெல்கிசேதேக் காக மாறினார்; ஆகவே இரண்டு சந்தர்ப்பத்திலும், தசமபாகம் செலுத்துவது, கிறிஸ்துவின் பலியைப்பற்றியே சொல்லுகிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

ஜனவரி

21

***அ**ப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப் பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடு மாடு களையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து: ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான் (ஆதி. 32:7-8).*

"யாக்கோபின் திட்டம்"

மேற்கூறிய வேதவாக்கியங்களின்படி யாக்கோபு ஏசாவினிடத் திலிருந்து தப்புவதற்குப் பாரிய திட்டத்தைத் தயார்பண்ணினான் (**ஆதி.** 32:6-8). தான் தயார்பண்ணின திட்டத்தைத் தேவன் ஏற்று, அதற்கு விரைந்து பதில் அளிக்குமாறு யாக்கோபு தேவனிடத் தில் விண்ணப்பம்பண்ணினான் (**ஆதி.** 32:9-12). திட்டமிடுதலும், அந்தத் திட்டத்திற்கு ஜெபம்பண்ணுதலும் ஒன்றுக்கொன்று விரோதமானது; அநேகர் விண்ணப்பம்பண்ணி தேவனுடைய பதிலுக்குக் காத்திருப்பதில்லை. ஒன்றில் தேவனிடம் விண்ணப் பம்பண்ணுவதற்கு முன்னமே தம்முடைய திட்டத்தை நடை முறைப்படுத்துவார்கள் அல்லது தேவனிடத்திலிருந்து பதில் வரு வதற்கு முன்னமே தமது மனதில் தாம் ஏற்படுத்திய திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிடுவார்கள்; இதனால் அவர்களு டைய எதிர்பார்ப்பு நிறைவேறுவதில்லை.

நாம் திட்டமிடுவோமாயின் நம்முடைய திட்டத்திலேயே முற்றுமுழுவதுமாக சாய்ந்திருப்போம். நாம் திட்டமிடுவதற்குப்

பதிலாகத் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுவோமாகில் தேவனிடத்திலேயே சாய்ந்திருப்போம்; ஆகையால், திட்டமிடுவதும், ஜெபம்பண்ணுவதும் ஒருபொழுதும் ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகாது; அது ஒன்றை ஒன்று நிராகரிக்கிறது. நம்முடைய கண்கள் நம்முடைய நிர்வாகத்தில் முற்றுமுழுவதுமாகத் தரித்திருக்கும்போது, தேவன் நமக்காகச் செயற்படுவதைக் காணமுடியாது; அப்படியிருக்கையில் நம்முடைய ஜெபம் ஒரு மூட நம்பிக்கையேதவிர அது ஆவியின் முன்னெடுப்பல்ல; விசுவாச வாழ்க்கை நாம் மேற்கொண்ட திட்டத்தைத் தேவனை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துவதல்ல; அதற்குப் பதிலாக சகலத்தையும் நமக்காகச் செய்யுமாறு தேவனை வேண்டிக்கொள்வதாகும்.

உண்மையான விசுவாசம் எப்பொழுதும் தன்னுடைய இயலாமையைத் தேவனுக்கு வெளிப்படுத்தும். தேவன் யார் என்பதனை அறிந்து, அவரிடத்தில் நாம் ஒன்றைப் பெறுவதற்கு முன்பு நம்முடைய இயலாமையை வெளிப்படுத்தவேண்டும். யாக்கோபு தேவனை நோக்கி: **".....நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" (ஆதி.** 32:26) என்றான். தேவன் அவனை ஆசீர்வதிப்பதற்கு முன்பு அவன் தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்துகிறானோ என்பதனை அறிவதற்காக **"அவர் உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான்" (ஆதி.** 32:27). அதெப்படியெனில், யாக்கோபு தன் பேர் பிரதிபலிப்பதுபோன்றே தான் ஒரு ஏமாற்றுக்காரன்; ஒரு மோசக்காரன் என்பதனை ஒத்துக்கொண்டு, அதிலிருந்து தன்னால் விடுபட முடியாமலிருக்கும் தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்தினான்; ஆனால், யாக்கோபு, தேவனுடைய நாமம் என்ன என்று அவரை வினாவினான்; அதற்கு அவர் நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவன் வேண்டிக்கொண்டபடி அவனை ஆசீர்வதித்தார் (**ஆதி.** 32:29); அவர் தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினார் (**ஆதி.** 32:30).

தேவன் தன்னை வெளிப்படுத்துவதற்கு முன்பு நம்முடைய மாம்சத்தின் சகல முயற்சிகளையும் செயலிழக்கப்பண்ணுவார்; அதற்குப் பின்பே ஒருவன் அவரை அறியமுடியும். யாக்கோபின் தொடைச்சந்து நரம்பைத் தொட்டு, அவனுடைய மாம்சத்தை செயலிழக்கப்பண்ணினார்; அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான் (**ஆதி.** 32:31). ஆம், அவன் நொண்டி நொண்டி நடந்தாலும், இப்பொழுது அவனுக்குச் சூரி யன் உதயமாயிற்று. இதுவே தேவனுடைய வழி; அந்த விசு வாசத்தில் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதன்மூலமே அது சாத் தியமாகும்; வேறெந்த வழியும் தேவனுடைய வழியல்ல.

ஜனவரி

22

***அ**ப்பொழுது யாக்கோபு தன்னோடே அவர் பேசின ஸ்தலத்திலே ஒரு கற்றூணை நிறுத்தி, அதின்மேல் பானபலியை ஊற்றி, எண்ணெயையும் வார்த்தான். தேவன் தன்னோடே பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்கோபு பெத்தேல் என்று பேரிட்டான் (ஆதி. 35:14-15).*

"பானபலி"

பானபலியைப்பற்றி **ஆதியாகமம்** 35:14ல் முதல்முறையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முப்பது வருடங்களுக்கு முன்பு இதே இடத்தில் யாக்கோபு தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதன்மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்துக்குப் **பெத்தேல்** என்று பெயரிட்டான்; அதற்கு முன்பு அந்த ஊருக்கு **லூஸ்** என்னும் பேர் இருந்தது (**ஆதி.** 28:19). பெத்தேல் என்பதன் பொருள் **"தேவனுடைய வீடாகும்"**; லூஸ் என்பது **"பிரிந்திருத்தல்"** எனப்படும்.

விசுவாசி உலகத்தைவிட்டுப் பிரிந்திருப்பின், அவன் தேவனுடைய வாசஸ்தலமாக மாற்றப்படுவான் என்பதனையே **லூஸ், பெத்தேல்** என்ற பதங்கள் உறுதிப்படுத்துகிறது. முன்பு அவன் கல்லின்மேல் எண்ணையை ஊற்றினான்; ஆனால், இப் பொழுதோ இஸ்ரவேல் ஒரு கற்றூணை நிறுத்தி, அதன்மேல் பானபலியை ஊற்றி எண்ணெயையும் வார்த்தான் (**ஆதி.** 35:14) எனக் காண்கிறோம். கற்றூண் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது (**1கொரி.** 10:4).

கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவார் என்பதனை எண்ணெய் பிரதிபலிக்கிறது. முன்பு கல்லின்மேல் எண்ணெயை ஊற்றும்போது யாக்கோபுவுக்குத் தேவபயமிருந்தது (**ஆதி.** 28:17); இப்பொழுதோ எண்ணெயோடு சேர்த்துப் பான பலியை ஊற்றுவதனால் அவனுக்குத் தேவபயத்தோடுகூட சந்தோஷமும் ஆட்கொண்டிருந்தது என்பதனைப் பானபலி பிரதிபலிக்கிறது (**ஆதி.** 35:9-13). அப்படியாயின் தேவபயம் இருப்பின் தேவனுடைய சந்தோஷம் மனுஷனை ஆட்கொள்ளும் என்பது புலனாகிறது. தேவன் அவனுக்குத் தரிசனமாகி, தான் ஆபிரகாம் ஈசாக்கோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, உன் வித்துக்கு (சந்ததிக்கு) இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் எனக் கூறியிருந்தார். அந்த வித்தே ஸ்திரீயின் வித்தாகும் (**ஆதி.** 3:15); கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே இந்த வித்தாகும் (**கலா.** 3:16).

ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் தான் செய்த ஒப்பந்தத்தைத் தேவன் யாக்கோபோடும் (தரிசனத்தில்) செய்ததன் நிமித்தம் யாக்கோபு மிகுந்த சந்தோஷம் அடைந்து, ஸ்திரீயின் வித்தை நினைத்து, அதனைப் பிரதிபலிக்கும் கற்றூணை நிறுத்தி, ஸ்திரீயின் வித்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டிருப்பார் என்பதனைப் பிரதிபலிக்கும் எண்ணெயை கல்லின்மேல் ஊற்றினான்; அந்த ஸ்திரீயின் வித்து மனுஷனாக வரப்போகிறதன் நிமித்தம், அவருடைய இயலாமையைப் பிரதிபலிப்பதற்காகத் தான் நிறுத்திய கற்றூணின்மேல் பானபலியையும் வார்த்தான். தேவன் மனுஷனாக வந்ததன் நிமித்தம் அவருடைய வல்லமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது; அதனையே இங்கு இயலாமையெனக் குறிப்பிடப்படுகிறது. இங்கு சொல்லப்பட்ட பான பலி திராட்சரசத்தையே குறிப்பிடுகிறது; இந்தத் திராட்சரசத்தை வையின் (Wine) என்றும் சொல்லப்படுகிறது; வையின் எனப்படும் போது புதிதான திராட்சரசத்தையும், புளித்த திராட்சரசத்தையும் குறிப்பிடுகிறது. இங்கு வையின் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதனால், நிச்சயமாகப் புதிதான திராட்சரசமே பாவிக்கப்பட்டது

என்பது தெளிவாகிறது; ஏனெனில் புளிப்பு பாவிக்கப்பட்டால், கிறிஸ்து பாவமுள்ளவரெனக் கணிக்கப்படும்; ஆனால், அவர் நம்மைப்போல பாவசுபாவத்தோடு பிறக்கவுமில்லை, பாவஞ் செய்யவுமில்லை; இந்தத் திராட்சரசம் கிறிஸ்துவின் பரிபூரணத் தைப் பிரதிபலிக்கிறது.

பானபலி சந்தோஷத்தையும், இயலாமையையும் பிரதிபலிக் கிறது. இரட்சகருடைய இயலாமையைப் பானபலி பிரதிபலிக் கும் அதேநேரம் விசுவாசியின் இயலாமையையும் பானபலி பிரதிபலிக்கிறது. இரட்சகராகிய தேவன் மனுஷனாக இப்பூவுல கத்திற்கு வந்ததன் நிமித்தம் அவருடைய மகா வல்லமை மட்டுப்படுத்தப்பட்டதைப் பானபலி பிரதிபலிக்கிறது; ஆனாலும், அவர் மகா பெரிய காரியங்களைப் பரிசுத்த ஆவியின் வல்லமை யினால் செய்தார் என்பதனை வேதாகமம் வலியுறுத்துகிறது (**லூக்.** 4:18-19). பானபலியை ஊற்றும் விசுவாசி தானும் உதவி யற்றவனாகவும், தன்னுடைய பலத்தினால் எதனையும் செய்ய முடியாது என்பதனையும் தேவனுக்கு முன்பாக வெளிப்படுத்து கிறான் (**லூக்.** 9:23); அப்படியாயின் யாக்கோபு கற்றாணின்மேல் பானபலியை ஊற்றும்பொழுது கர்த்தாவே என் பலத்தினால் எதனையும் செய்யமுடியாமல் இருக்கிறேன்; என் பலத்தில் நான் நம்பிக்கையற்று இருக்கிறேன்; எனக்குள் வாசமாயிருக்கும் அந்தப் பாவம், இந்த இக்கட்டான நிலைமைக்குள் என்னைத் தள்ளியிருக்கிறது என்பதனை நான் மனதார உணர்ந்து மனந் திரும்பியுள்ளேன்; ஆகையால், எனக்கு உம்முடைய கிருபையும் ஞானமும் வல்லமையும் பலமும் வழிநடத்தலும் மிகவும் அவசி யமாகத் தேவையாயிருக்கிறது எனத் தேவனுக்குத் தன்னை வெளிப்படுத்தினான் (**லூக்.** 9:23).

ஜனவரி

23

***அ**ப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன் (யாத். 3:7).*

"கிறிஸ்தவர்களின் வனாந்தர வாழ்க்கை"

கிறிஸ்தவர்கள் ஒன்றில் எகிப்தில் (வனாந்தர வாழ்க்கை) அல்லது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியில் (ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை) வாழ்கிறார்கள். எகிப்து உலகத்திற்கு அடையாளமாக இருக்கிறது (**யோவா.** 2:15); அது தேவனுக்கு விரோதமாயிருக்கிறது (**யாக்.** 4:4). இஸ்ரவேலியர்கள் எகிப்தில் இருந்தபொழுது விக்கிரகங்களைச் சேவித்தார்கள்; எகிப்தியர்களுக்கு அடிமைகளாயிருந்தார்கள்; ஆளோட்டிகளினால் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்; ஆளோட்டிகள் அசுத்த ஆவிகளைப் பிரதிபலித்தார்கள்; அவர்கள் இஸ்ரவேலியர்களைத் திருடி, கொன்று, அழித்தார்கள் (**யோவா.** 10:10); அப்படியே மீட்கப்படாதவர்களையும் பாவசுபாவம் என்ற அசுத்த ஆவி தனக்கு அடிமையாக்கி, துன்புறுத்துகிறது. வனாந்தரத்தின்முடிவில் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியிருக்கிறது; இங்கு கிறிஸ்துவினால் பரிபூரண வாழ்க்கை கொடுக்கப்படுகிறது (**யோவா.** 10:10); இதன் பொருள் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு, ஜெயங்கொண்ட

கிறிஸ்தவ வாழ்க்கையை அனுபவிப்பதாகும். விசுவாசியின் வாழ்க்கையில் ஆவிக்குரிய கனி (**கலா.** 5:22-23), விருத்திசெய்யப் படுகிறது; இதனைப் பூரணமாக அனுபவிப்பதற்கு விசுவாசி அநு தினமும் **லூக்கா** 9:23ஐக் கடைப்பிடிக்கவேண்டும். எகிப்துக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்கும் மத்தியில் வனாந்தரம் இருப்பதனால், வனாந்தரம் ஒரு தற்காலிக ஏற்பாடாகும். இஸ்ர வேலியர்களின் கலகத்தினாலும், அவிசுவாசத்தினாலும் 40 வரு ஷம் வனாந்தரத்தில் செலவழிக்கவேண்டியதாயிற்று; இதனி மித்தம் அவர்கள் ஒரு சந்ததியையே இழந்தார்கள் (**எண்.** 14:28-33). துரதிஷ்டவசமாக இதுவே அநேகமான கிறிஸ்தவர்களின் பரிதாபகரமான நிலைமையுமாகும். இவர்கள் இரட்சிக்கப்பட்டு, உலகத்தைவிட்டு விலகியும், இன்னும் வாக்குத்தத்தம்பண்ணப் பட்ட பூமியைச் சென்றடையவில்லை. தேவன் இவர்களை மாம் சத்துக்குரியவர்கள் என்று அழைக்கிறார் (**1கொரி.** 3:1-4; **ரோம.** 7:14); இவர்கள் வெதுவெதுப்பானவர்களாகவும் (**வெளி.** 3:16); சார மற்றவர்களாகவும் இருக்கிறார்கள் (**லூக்.** 14:34-35).

வனாந்தரத்தில் விசுவாசி தங்கியிருந்தால், அதன் பிரதிபலன் என்னவாயிருக்கும் என்பதனைச் சற்று விபரமாகப் பார்ப்போம். **முதலாவதாக**: வனாந்தரத்தில் தங்குகிற காலம் பாழாக்கப்பட்டு, ஆத்துமாவுக்கு இளைப்பு ஏற்படுகிறது; **இரண்டாவதாக**: வனாந் தர வாழ்க்கை தொடர்ந்தால், ஆவிக்குரிய மரணம் ஏற்படுகிறது (**ரோம.** 8:6); **மூன்றாவதாக**: தேவனுக்கு அது பிரியமில்லை (**ரோம.** 8:6); **நான்காவதாக**: நீண்டகாலத்திற்கு வனாந்தரத்தில் தங்கினால், உலகத்திடம் திரும்பிப்போவது சாத்தியப்படலாம் (**யாத்.** 16:3, 17:3; **எண்.** 11:5, 14:1-4); **ஐந்தாவதாக**: நீடியகாலம் வனாந்தரத்தில் தங்கியிருந்தால், சத்தியம் நிராகரிக்கப்பட்டு, இரு தயம் கடினப்பட்டு, பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கவேண்டி வரும் (**மத்.** 13:14-15); **ஆறாவதாக**: நீண்ட காலத்திற்கு வனாந் தரத்தில் தங்கினால், விட்டுக்கொடுப்பைக் கடைப்பிடிக்கவேண்டி வரும்; **ஏழாவதாக**: வனாந்தரத்தில் ஆவிக்குரிய போஜனமும்,

தண்ணீரும் குறைவு ஏற்பட்டு, பலவீனப்பட்டு, இறுதியில் சாக வேண்டிவரும்; **எட்டாவதாக**: தங்கள் வழிகளிலெல்லாம் நிலை யற்றவர்களாக இருப்பார்கள் (**யாக்.** 1:8); **ஒன்பதாவதாக**: அவர் கள் பாவஞ்செய்வார்கள் (**ரோம.** 14:23).

இப்படியிருக்க, கிறிஸ்தவர்கள் தாம் வனாந்தரத்தில் இருக்கி றார்கள் என்பதனை எப்படி அறிந்துகொள்ளமுடியும்? **முதலா வதாக**: அவர்கள் ஆவிக்குரிய கனியற்று இருப்பார்கள் (**கலா.** 5:22-23); **இரண்டாவதாக**: அவர்களில் மாம்சத்தின் கிரியைகள் வெளிப்படும் (**கலா.** 5:19-21); **மூன்றாவதாக**: ஆவிக்கேற்றபடி நட வாமல் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவார்கள் (**கலா.** 5:16); **நான்காவதாக**: தேவனுக்குரியவைகளில் பசியும் தாகமும் இல்லாமல், வேறொன்றினால் திருப்தியடைய முயற்சிப்பார்கள் (**மத்.** 5:6); **ஐந்தாவதாக**: தேவனுடைய ராஜ்யத்திற்கும் அவரு டைய நீதிக்கும் முதலிடம் கொடுக்காமல், பதவிக்கும், பொரு ளுக்கும், புகழுக்கும், சந்தோஷத்திற்கும், முதலிடம் கொடுப்பார் கள் (**மத்.** 6:33); **ஆறாவதாக**: பொதுநலத்தைத் தவிர்த்து சுய நலத்தில் கவனஞ்செலுத்துவார்கள் (**பிலி.** 2:4); **ஏழாவதாக**: கொடுப்பதைவிடப் பெறுவதையே கூடுதலாக விரும்புவார்கள் (**அப்.** 20:35); **எட்டாவதாக**: மதநடவடிக்கைகளில் (கிரியைகளில்) கூடுதலாக ஈடுபட்டுப் பாரஞ்சுமப்பார்கள்; (**மத்.** 11:28); **கடைசி யாக**: பாவத்தைத் தொடர்ச்சியாகச் செய்து, அதற்கு மன்னிப்புக் கேட்காதிருப்பார்கள் (**1யோவா.** 1:9); இவர்களுக்கு விடுதலை யில்லை (**யோவா.** 8:32). ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க் கையை அனுபவிப்பதற்கு, நாம் ஏதாவது செய்யவேண்டிய அவ சியமில்லை (**யோவா.** 6:28-29), விசுவாசி சத்தியத்தை அறிந்து (**யோவா.** 8:32), **லூக்கா** 9:23ஐக் கெட்டியாகக் கடைப்பிடிக்க வேண்டியதே அவசியமானது.

ஜனவரி

24

அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் இறங்கினேன் (யாத். 3:8).

"விடுதலைசெய்யத் தேவன் இறங்கினார்"

பாவியாக இப்பூவுலகத்தில் பிறந்து, அந்தப் பாவத்தின் கொடூரப்பிடியில் சிக்கித்தவிக்கும் மனிதன், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் அவன் அந்தப் பாவத்திலிருந்து விடுதலைபெறுவதுமட்டுமல்ல, உலகத்திலிருந்தும் விடுதலை பெறுகிறான்; **"எகிப்தியரின் கைக்கு"** என்பது உலகத்தைப் பிரதிபலிக்கிறது. பாவத்திலிருந்து மனிதன் விடுதலைபெறுவது அவனுடைய முதலாவதுபடி; அடுத்தபடியாகத் தேவன் இரட்சிக்கப்பட்ட நம்மைப் பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்திற்குக் கொண்டுவருவார்; ஆனால், இஸ்ரவேலிய புத்திரர்களுக்குத் தேவன் கொடுத்த தேசத்தில் கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் வாசஞ்செய்கிறார்கள். ஆபிரகாம் காலத்திலும் இந்த ஜனங்கள் இருந்தார்கள்; இன்றும் இஸ்ரவேலைச் சுற்றியும், இஸ்ரவேலுக்குள்ளும், இஸ்ரவேலின் நடுவிலும் இந்த ஜாதிகள் இருக்கிறார்கள். விசுவாசிகளைவிட்டு, இந்த ஜாதிகள் அகற்றப்படா

விட்டால், தேவன் கொடுத்த தேசத்தில் தேவனுடைய ஜனங்கள் மீண்டும் கூக்குரலிடவேண்டியது தவிர்க்கமுடியாமற்போய்விடும்.

அப்படியே, இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நம்மில் **பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்** போன்ற மாம்சத்தின் கிரியைகள் வாசமாயிருக்கின்றன. உலகத்திலிருந்து விடுதலையான பின்பு மாம்சத்தின் அட்டகாசம், தேவன் தந்த பாலும் தேனும் ஓடுகிற பரலோகத்திற்கு நம்மைப் போகவிடாமல் தடைசெய்கிறது. மாம்சத்தின் கிரியைகள் சாத்தானுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஆயுதங்களாயிருக்கிறது; மாம்சத்தின் கிரியைகள் விசுவாசியிலிருந்து அகற்றப்படாவிட்டால், தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசி பெறமுடியாமற்போய்விடும்.

இப்படியிருக்க, இஸ்ரவேலிய புத்திரர்கள் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தின் பலனை அனுபவிக்கமுடியாமல் இருப்பது போல, நாமும் இரட்சிக்கப்பட்ட பின்பும் இரட்சிப்பின் பரிபூரணத்தை அடைய முடியாமற்போகலாம்; அப்படியாயின், கானான் தேசத்தில் வாசமாயிருக்கிற புறஜாதிகள் அகற்றப்படவேண்டியது தவிர்க்கமுடியாமலிருப்பதுபோல, நம்மிலிருக்கிற மாம்சத்தின் கிரியைகளும் நம்மைவிட்டு அகற்றப்படவேண்டும். இங்கு நாம் அறியவேண்டிய மிகமுக்கியமான விஷயம் என்னவெனில், இஸ்ரவேலியருக்கு விடுதலைகொடுக்க வந்த தேவன் அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினார்; முழுப்பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டார்; ஆகையால், இஸ்ரவேலியர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப்பெற்று, அதை அனுபவிப்பதற்குத் தேவன் ஏற்படுத்திய வழியைப் பின்பற்றுவதொன்றே அவர்களுக்கிருக்கும் ஒரே தெரிவு; வேறெந்தத் தெரிவும் அவர்களுக்கு

இல்லை; அவர்கள் வேறு தெரிவை நாடுவார்களாயின் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அனுபவிக்கமாட்டார்கள்.

அப்படியே, இரட்சிக்கப்பட்ட நாமும் தேவன் ஏற்படுத்திய வழியைக் கைக்கொள்ளாவிட்டால், எதிர்ப்புச் சக்திகளான மாம்சம், உலகம், பிசாசு ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறமுடியாது. இஸ்ரவேலியர்களை எகிப்தியர்கள் ஒடுக்கி, அவர்களைப் பாலும் தேனும் ஓடும் தேசத்திற்குப் போகவிடாமல் தடைசெய்த பொழுது, வேதனையடைந்த இஸ்ரவேலியர்கள் தேவனை நோக்கிக் கூக்குரலிட்டனர்; இதுபற்றித் தேவன் **யாத்திராகமம்** 3:9ல் கூறியிருந்தார்.

அப்படியே மாம்சம் உலகம் பிசாசின் ஒடுக்குதல்கள் கூக்குரல்களாகத் தேவசந்நிதிக்கு வந்து எட்டுகிறது; சாத்தானின் கொடுமைப்படுத்துதல் தொடர்ந்தவண்ணமே இருக்கிறது; இந்தக் கொடுமையிலிருந்து விடுதலைகொடுக்கத் தேவனுடைய வல்லமையினால்மட்டுமே சாத்தியமாகும். மனுஷ முயற்சிகளும் மனுஷ ஞானங்களும் எவ்விதத்திலும் இந்தக் கொடுமையிலிருந்து விடுதலை கொடுக்கமுடியாது; அதற்குப் பதிலாக நிலைமை மோசமடைந்து, கூக்குரல் உச்சக்கட்டத்தை அடையும்; உலகம் ஒரு பொழுதும் உலகத்தை விடுதலையாக்கமுடியாது; தேவனுடைய வழியைக் கண்டறிந்து, அதை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பதொன்றே கிறிஸ்தவர்களுக்கும், உலகத்திற்கும் இருக்கும் ஒரே தெரிவாகும் (**யோவா. 8:32, 15:4-11**).

ஜனவரி

25

***வ**ழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார். அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள். பின்பு அவர் அவனை விட்டு விலகினார் அப்பொழுது அவள்: விருத்தசேதனத்தினிமித்தம் நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள் (யாத். 4:24-26).*

"இரத்தசம்பந்தமான புருஷன்"

தேவன் மகா நீதிபரர் என்பது **யாத்திராகமம்** 4:24-26ன் மூலம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தேவனுக்கெதிரான கிளர்ச்சி எந்த இடத்திலிருந்து கிளம்பினாலும், அது தப்பாமல் அவருடைய நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டேயாகவேண்டும்; அது அவருடைய இயற்கையான இயல்பு. பார்வோனை நியாயந்தீர்க்கமுன் தேவன் மோசேயை நியாயந்தீர்ப்பாரென்பதனை மோசே எதிர் பார்க்கவில்லை. தேவன் பட்சபாதமற்றவர் என்ற உண்மையை மோசே இந்தச் சம்பவத்தின்மூலம் தேவனிடத்தில் அறிந்து கொண்டான். கீழ்ப்படியாமை தேவனுக்கெதிரான கிளர்ச்சி; அது எந்த உருவத்திலிருந்தாலும் நியாயத்தீர்ப்புக்குத் தப்பமுடியாது; அது பார்வோனில் இருந்தாலென்ன மோசேயில் இருந்தாலென்ன

அது தேவனுக்கெதிரான பகையாகும்; பாவம் உடனடியாகத் தேவ னுடைய சந்நிதியில் நியாயந்தீர்க்கப்படும்.

மோசே தன் மனைவியாகிய சிப்போராளினிமித்தம் தன் மகன் எலியாசருக்கு நியாயப்பிரமாணத்தின்படி விருத்தசேதனம் செய்யவில்லை; சிப்போராளுக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் இரத்தத்தில் நம்பிக்கையில்லை. விருத்தசேதனம் செய் யும்போது சொட்டும் இரத்தம், இயேசுகிறிஸ்து தன்னைப் பலி யாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்து, தன் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, மனுஷகுலத்தின் பாவத்திலிருந்து விடுதலைகொடுக்கும் மாதிரியைப் பிரதிபலிக்கிறது என்பதனை அவள் ஏற்றுக்கொள்ள வில்லை. மோசே எவ்வாறான வாழ்க்கையை வனாந்தரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான் என்பது இங்கு வெளிப்படுத்தப்படு கிறது. அவன் தன் மனைவிக்காகத் தேவனுடைய நியாயப்பிர மாணத்தை அசட்டைபண்ணினதுமட்டுமல்ல, தன் குமாரனுக்குப் பொருத்தமான நேரத்தில் விருத்தசேதனமும் செய்யவில்லை. ஆதாம்போன்று தன் மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தப் பாவத்தைச் செய்தான். அவன் வீட்டில் யேகோவாவை விசுவாசிக்கும் அதேநேரம், அவள் விக்கிரகாராதனை செய்திருப் பாள்; அவனுடைய விட்டுக்கொடுப்பினிமித்தம் ஒருவேளை நாள டைவில் அவன் பெலவீனம் அடைந்திருக்கலாம்; விட்டுக் கொடுப்பு சாத்தானுடைய பலமான ஆயுதம் என்பதனை அநேக மான கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கிறார்கள்.

விசுவாச வாழ்க்கையில் விட்டுக்கொடுப்பு நாளாந்த சம்பவ மாக மோசேக்கு ஏற்பட்டிருக்கலாம். அநேகமான கிறிஸ்தவர் கள் இவ்வாறான சூழ்நிலைகளினால் தவிக்கிறார்கள் என்பதனை மறுப்பதற்கில்லை. மோசேயின் தனிப்பட்ட வாழ்க்கையின் விப ரங்களை வேதாகமத்தில் வெளிப்படுத்துவது பரிசுத்த ஆவியான வருக்கு அவசியமாகத் தெரியவில்லை; ஆகவே நாம் ஊகிக்க முடியுமேதவிர உறுதியாகக் கூறமுடியாது; நீதிபரராகிய கர்த்தர் அவனைக் கொல்லப்பார்த்தார் என வேதாகமம் கூறுகிறது.

மோசேயின் வற்புறுத்தலின் நிமித்தம் அவனுடைய மனைவி கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித் தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள்; அதெப்படி யெனில், அவள் மோசேயை நோக்கி: உம்முடைய மதம் இரத்த மதம் என்றாள்; ஆமென், அப்படியே! மோசேயினுடைய கீழ்ப் படிவு அவனுக்கும், அவனுடைய குமாரனுக்கும் ஜீவனைக் கொடுத்தது; விருத்தசேதன அடையாளம் என்பதன் பொருள், விசுவாசி உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று ஒதுக் கப்படுவதைக் குறிப்பிடுகிறது.

புதிய உடன்படிக்கையின்படி ஒரு விசுவாசி கிறிஸ்துவோடு இணைந்து அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டு மரித்து (**கலா.** 2:20), அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு, அவரில் உயிர்த்தெழுந்திருக்கிறபடியினால் (**ரோம.** 6:3-5), அவனுடைய பாவசுபாவம் விருத்தசேதனம் செய்யப்பட்டு, செயலிழக்கப்படு கிறது (**கொலோ.** 2:11); இது ஆவிக்குரிய விருத்தசேதனம் எனப் படும்; அதெப்படியெனில், கிறிஸ்து மரிக்கும்பொழுது விசுவாசத் தின்மூலம் விசுவாசியும் கிறிஸ்துவில் பழைய சுபாவத்திற்கு மரித்துப்போனான்; ஆகவே பழையசுபாவம் (பாவசுபாவம்) இங்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. பாவச்செயல்களுக்குக் காரண மாயிருந்த பாவசுபாவம் விசுவாசத்தின்மூலம் விருத்தசேதனம் செய்யப்பட்டிருக்கிறபடியினால், ஒரு விசுவாசி பாவத்திற்கு இனி அடிமையாயிருக்கவேண்டியதில்லை. முன்பு தன் சரீரத்தை அநீதிக்கு ஒப்புக்கொடுத்தவன் பாவசுபாவம் விருத்தசேதனம் செய்யப்பட்டபடியினால், இப்பொழுது நீதிக்கு ஒப்புக்கொடுக்க முடியும் (**ரோம.** 6:13); விசுவாசத்தின்மூலம் கிருபைக்குக் கீழ்ப் படிந்திருக்கிறபடியால், பாவம் அவனை மேற்கொள்ளமாட்டாது (**ரோம.** 6:14); அல்லேலூயா, தேவனுக்கு ஸ்தோத்திரம்!

ஜனவரி

26

***நீ**ங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கட வர்கள் (யாத். 12:3).*

"பாவநிவிர்த்தி"

ஆட்டுக்குட்டியும் அது சம்பந்தப்பட்ட யாவும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பாவநிவிர்த்தியை அடை யாளமாகக் காண்பிக்கிறபடியினால், பொருத்தமான வேதவாக்கி யத்தை (**யாத்.** 12:5-11) அதன் முக்கியத்துவத்துக்கேற்ப எடுத்து அதனைப் பகுத்துப் பந்தி பந்தியாக விமர்சிப்பது எனக்குப் பொருத்தமாகக் காண்கிறது.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் (**யாத்.** 12:5): இயேசு கிறிஸ்து குற்றமில்லாத மாசற்றவராயிருந்தார் (**ஐபேது.** 1:19);

ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும் (**யாத்.** 12:5): இயேசுகிறிஸ்து பிந்தின ஆதாமும், இரண்டாம் மனுஷ னுமாக இருந்தார் (**ஐகொரி.** 15: 45, 47); தன் பாலிய வயதில் தன் ஜீவனைக் கொடுத்தார்; முதுமையில் அல்ல.

அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத் திருந்து (**யாத்.** 12:6): மீண்டும் மீண்டும் பரிசோதனை செய்து "**பழுதற்றதாக**" இருக்கவேண்டுமென்பதை உறுதிப்படுத்தவேண் டும். 33½ வருஷகாலமாக ஒருபொழுதும் கிறிஸ்துவில் பாவம்

காணப்படவில்லை. சாத்தானுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை (**யோவா. 14:30**) என அவர் கூறியிருந்தார்; அதுமட்டுமல்ல, என் னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக்கூடும்? (**யோவா. 8:46**) எனத் துணிவாக அவர் ஒருவரே கேட்கமுடியும்.

இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங் காலத்தில் அதை அடித்து (**யாத். 12:6**): இயேசு அந்திப்பலி கொடுக்கும் நேரத்தில் (சாயங்காலம் 3 மணி) மரித்தார்; ஆம், அந்த நேரத்திலேயே அவர் மரித்தார் (**மத். 27:46**);

அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலை யின் மேற்சட்டத்திலும் தெளித்து, (**யாத். 12:7**): ஆட்டுக்குட்டி யின் இரத்தம் தெளிக்கப்பட்டதுபோலக் கிறிஸ்து தன் உயிராகிய இரத்தத்தை சிலுவையின்மேல் தெளித்தார். ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டில் பூசப்பட்டதுபோல, நாமும் நம்முடைய இருத யத்தில் விசுவாசத்தின்மூலம் பூசவேண்டும் (**எபேசி. அதி:2**).

அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு (**யாத். 12:8**): இதன் ஆவிக்குரிய பொருள், தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பிரதி பலிக்கிறது. அவர் நம்முடைய பாவத்தைச் சுமந்ததன் நிமித் தம் நியாயத்தீர்ப்பு அவருக்கு ஏற்பட்டது; அதன் பிரதிபலன் மர ணமே, நமக்காகவே நியாயத்தீர்ப்பைப்பெற்று, மரணத்தைச் சிலுவையில் நிறைவேற்றினார்.

அதன் மாம்சத்தைப் புசிக்கக்கடவர்கள்; அதிலே ஒன்றை யும் மீதியாக வைக்காமல், (**யாத். 12:6-10**): ஒருவன் கிறிஸ்து வின் எல்லாவற்றிலும் பங்குபற்றக்கடவன்; அதெப்படியெனில், அவரையும், அவர் சிலுவையில் செய்துமுடித்த எல்லாவற்றை யும் விசுவாசிக்கக்கடவன்.

புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள் (**யாத். 12:8**): இது கிறிஸ்துவின் பரிபூரணத்தைக் குறிப்பிடுகிறது; அவரிடம் கேடானது (புளிப்பு)

எதுவும் இல்லை. அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில் லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார் (**எபி.** 7:26). கசப்பான கீரை, இஸ்ரவேலியர்கள் எகிப்தில் அனுபவித்த அடி மைத்தனத்தைக் பிரதிபலிக்கிறது; நாமும் உலகத்திற்கு அடிமை களாயிருந்தோமே.

<u>பச்சையாகவும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல</u> (**யாத்.** 12:9): கிறிஸ்துவை மட்டும் ஏற்றுக்கொண்டு, அவர் சிலு வையில் செய்ததை நிராகரிப்பதைப் பிரதிபலிக்கிறது; அநேகர் அதனைச் செய்கிறார்கள்.

<u>அதைப் புசிக்கவேண்டிய விதமாவது</u> (**யாத்.** 12:11): இஸ்ர வேலியர்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுபோல, பாவிகளா யிருந்த நாமும் அவரை ஏற்றுக்கொண்டவுடன் உலகத்தையும் அதனுடைய ஒழுங்குமுறையையும் நம்மைவிட்டு அகற்றி, அதனைச் சதாகாலமும் விட்டு, புறப்படத் தயாராயிருக்கவேண் டும் (இவை யாவும், உயிர்த்தெழுதலின்போது சொற்ப நேரத்துக் குள் சபை பூமியை விட்டுப் போவதற்குத் தயாராயிருக்கவேண் டும் என்பதனைப் பிரதிபலிக்கிறது).

ஜனவரி

27

***அ**திலே ஒன்றையும் விடியற்காலம்மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக (யாத். 12:10).*

"கிறிஸ்துவைப்பற்றிய சகலதும் ஏற்றுக்கொள்ளவேண்டும்"

யாத்திராகமம் 12:10ல் சொல்லப்பட்டிருப்பவைகளைப்பற்றிச் சற்று விபரமாகப் பரிசீலனை செய்வது பொருத்தமானதே. ஆட்டுக்குட்டியின் சகலத்தையும் புசிக்கவேண்டும்; சுட்டெரிக்கப் படவேண்டும் என்பதுபற்றி இங்கு சொல்லப்பட்டிருப்பது என்ன?

கிறிஸ்து சகலத்தையும் நமக்காக ஒப்புக்கொடுப்பார்; நாம் நம் முடைய எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஒருவன் கிறிஸ்துவின் சகலத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால், கிறிஸ்துவினுடைய எதனையும் நாம் பெற்றுக்கொள்ளமுடியாது.

கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துவின் ஐசுவரியம் வேண்டும், ஆனால் கிறிஸ்துவின் சிலுவையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இன்னும் ஏராளமான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பில் பிரியமாயிருக்கிறார்கள்; ஆனால், பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறுவதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை.

இயேசுகிறிஸ்துவை முற்றுமுழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென வேதவார்த்தை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்து கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும் (**Iகொரி. 2:2**) என் பது கட்டளையாக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவை வெறுமனே, போதகர் இயேசுவாகவும், அற்புத இயேசுவாகவும், உதாரண இயேசுவாகவும், குழந்தை இயேசுவாகவும், குணமாக்கும் இயேசுவாகவும் ஏற்றுக்கொண்டு, சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை (**Iகொரி. 1:23**) ஒருவன் நிராகரிப்பானாகில் ஒரு பிரயோஜனமும் அவனுக்கு இல்லை (**கலா. 5:2**). சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை முற்றுமுழுவதுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் (**யோவா. 1:1, 14, 29**); இல்லையேல் அவன் வேறொரு இயேசு வைச் சேவிக்கிறான் (**IIகொரி. 11:4**).

ஜனவரி

28

***நீ**ங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்க ளுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும் (யாத். 12:13).*

"இரத்தமே அடையாளம்"

நான் அந்த இரத்தத்தை காணும்போது உங்களைக் கடந்து போவேன் என்பது மிகமுக்கியத்துவம் வாய்ந்த சொற்களாக அமைந்திருக்கிறது. உங்களுடைய சபையைக் கண்டல்ல, சபை யினுடைய கட்டிடத்தைக் கண்டல்ல, நம்முடைய கிரியை களைக் கண்டல்ல, நாம் சார்ந்திருக்கும் மார்க்கத்தைக் கண் டல்ல, நம்முடைய போதகரைக் கண்டல்ல, வேறெதுவாயிருந்தா லென்ன, அந்த இரத்தத்தைக் காணும்போதே நான் உங்களை விட்டுக் கடந்துபோவேன் எனத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

வீடு அழகாயிருக்கவேண்டியது முக்கியமல்ல, விலைமதிப் புள்ளதாக இருக்கவேண்டியது முக்கியமல்ல, அலங்காரமாயி ருக்கவேண்டியது முக்கியமல்ல அல்லது அது மோசமான அமைப்புள்ள வீடாயிருக்கின்றதோ என்பது முக்கியமல்ல, இவை எதுவும் தராதரமாகக் கணிக்கப்படமாட்டாது; வீட்டு வாசலில் இரத்தம் பூசப்பட்டிருக்கவேண்டியதே நிபந்தனையாயிருக்கிறது, அதனையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். வீட்டு வாசலில் இரத்தம்

பூசப்பட்டிருந்தால், அந்த வீட்டிலுள்ளவனுடைய விசுவாசம் பஸ் காவில் இருக்கிறது என்பது நிரூபணமாகிறது.

ஒரு மனிதனுடைய **"யோக்கியத்தை"** இங்கு தகுதியாக எடுக்கவில்லை; ஏனெனில், தேவனுடைய பார்வையில் மனுஷ னிடம் அவர் எதிர்பாக்கும் தகுதி எதுவுமில்லை; மனுஷனுடைய **"நல்லது"** எதுவும் கவனத்திற்கு எடுபடவில்லை; ஏனெனில், தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே என ஆண்டவரே கூறியிருக்கிறார் (**மத்.** 19:17). தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவது அவருடைய குமாரனுடைய இயேசுகிறிஸ்து வின் இரத்தமே. அது அவர் கல்வாரி சிலுவையில் நம் சார்பில் நிறைவேற்றிய யாவையும் பிரதிபலிக்கிறது. அந்த இரத்தமே நம்முடைய இருதயத்தில் பூசப்படவேண்டும்; அதுவும் விசுவா சத்தின்மூலமே பூசப்படவேண்டும் (**ரோம.** 5:1; **எபேசி.** 2:8-9).

இதன் பொருள் விசுவாசிக்கிற பாவியும் விசுவாசிக்கிற கிறிஸ்தவனும் தம்முடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவி லும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் உறுதிப்படுத்தி யிருக்கவேண்டும் (**ரோம.** 6:1-14). கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதி லும் நம்பிக்கை வைத்திருக்கிறோமெனப் பறைசாற்றிக்கொண்டு நம்முடைய நம்பிக்கைக்கு ஆதரவாக ஒரு குறிக்கப்பட்ட சபை யையும், ஒரு மார்க்கத்தையும், ஒரு உபதேசத்தையும், நற்கிரி யைகளையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதோடு இணைப் போமானால், அவருடைய மீட்பின் திட்டத்தை நாம் நிராகரிக் கிறோம்; இதனிமித்தமே பவுல் அப்போஸ்தலர் **"இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மா னித்திருந்தேன்"** (**1கொரி.** 2:2) எனக் கூறியிருக்கிறார்; இதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கேதுவாக **"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்** ....." (**1கொரி.** 2:2) எனக் கூறியிருக்கிறார்.

அந்த ஒரே ஒரு அடையாளத்திற்கே பார்வோன் பணிந்தான்; மற்ற ஒன்பது அடையாளங்களுக்கோ, அற்புதங்களுக்கோ அவைகள் தேவனுடையதாயிருந்தும் பார்வோன் அடிபணியவில்லை. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் ஒன்றுக்கே அவன் அடிபணிந்து, பொன்னோடும் வெள்ளியோடும் தேவனுடைய ஜனங்களைப் போகவிட்டான். அந்த இரத்தம் ஒன்றின் நிமித்தமே தேவனுடைய வல்லமை வெளிப்பட்டு, எகிப்து தேசம் முழுக்க மிருகங்களின் தலையீற்றையும், முதற்பேறானோர் எல்லாரையும் பட்சித்துப்போட்டது; பார்வோன் அடிபணிவதற்கு இந்த அடையாளம் ஒன்றே வழிவகுத்தது.

அப்படியே நம்முடைய சகல பாவமும் அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தின்மூலம் நிவிர்த்திசெய்யப்பட்டது; அதனை விசுவாசிப்பவன் இரட்சிப்பைப் பெறுகிறான். பாவத்தினிமித்தம், சட்டபூர்வமான உரிமையைப் பெற்று, மனுஷனைச் சிறைப்படுத்திய சாத்தான், பாவநிவிர்த்தியின்மூலம் தன் சட்டபூர்வமான உரிமையை இழந்தான்; ஆனபடியினால், இதனை விசுவாசிக்கிற பாவியையோ அல்லது கிறிஸ்தவனையோ போகவிடுவதைத் தவிர சாத்தானுக்கு வேறுவழியில்லை; அன்றும் அப்படியே, இன்றும் அப்படியே! (**பிரச. 1:9**).

ஜனவரி

29

புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கட வீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக் கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுப்புண்டுபோவான் (யாத். 12:15).

"கர்த்தர் பாவத்தில் அல்ல, பாவத்திலிருந்தே இரட்சிக்கிறார்"

மாம்சத்தின் கிரியைகளைப்பற்றிய பட்டியலைத் தயாரிக்கும் பொழுது பவுல் அப்போஸ்தலர் **யாத்திராகமம்** 12:15ல் சொல்லப் பட்டதையே **கலாத்தியர்** 5:19-21ல் "**.....இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழு தும் உங்களுக்குச் சொல்லுகிறேன்**" என எச்சரித்திருக்கிறார்.

கர்த்தர் பாவத்தில் அல்ல, பாவத்திலிருந்தே நம்மை இரட்சிக் கிறார். கிறிஸ்து சிலுவையில் கொடுத்த விலையைக் கவனத் திற்கு எடுத்தபின்பும், எந்த வடிவத்திலும், பாவத்தைத் தொடர்ந்து ஆதிக்கம் செய்ய அனுமதிப்பது வேதவார்த்தையைப் புரட்டும் செயலாகும். பாவத்தின் ஆதிக்கம் இருதயத்தைக் கடினப்படுத்து கிறது (**எபி.** 3:13); அத்தகைய முயற்சி எந்தக் காலத்திலும்

அவிசுவாசத்திலேயே முடியும்; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **எபிரெயர்** 6:4-6லும், 10:26-29லும் எச்சரித்திருக்கிறார்.

பாவம் எவ்வளவு மோசமாயிருந்தாலும், விசுவாசியைக் கர்த்தராகிய ஆண்டவர் தூக்கி எறியப்போவதில்லை; ஆயினும், விசுவாசி நிச்சயமாக விசுவாசத்தை நிறுத்தி, அவிசுவாசியாக மாறினால், தன்னுடைய இரட்சிப்பை இழந்துபோகக்கூடிய சாத்தியக்கூறு நிச்சயமாக உண்டு.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கும், அவரைச் சேவிப்பதற்கும் தேவையான திறவுகோல் விசுவாசமேயாகும்; விசுவாசத்தை இழந்துபோனால் ஆத்துமாவையும் இழந்துபோக நேரிடும். உண்மையில் பாவத்தின் ஆதிக்கம் நிச்சயமாக அவிசுவாசத்தைக் கொண்டுவரும்; நம்மைப் பாவம் மேற்கொள்ள அனுமதித்தால், அவிசுவாசம் தலைதூக்கும். விசுவாசி அப்படியிருக்கவேண்டியதில்லை; நாம் கிறிஸ்துவை, ஒருமித்த நோக்காகவும் (**யோவா.** 14:6), அவர் சிலுவையில் நிறைவேற்றியதை விசுவாசத்தின் குறிக்கோளாகவும் வைத்திருக்கும்பொழுது (**லூக்.** 9:23), கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் ஈட்டியவெற்றி நம்முடையதாகிறது (**கொலோ.** 2:14-15).

ஜனவரி

30

இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப் பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள் (யாத். 12:27).

"இஸ்ரவேலியர்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள்"

பஸ்காவாகிய ஆட்டுக்குட்டியைப்பற்றியும், இஸ்ரவேலியர்கள் எப்படி விடுதலை செய்யப்படுவார்கள் என்பதனைப்பற்றிய அறிவுறுத்தலையும் கேட்டவுடன் இஸ்ரவேலிய ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள். அப்படியே கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய சம்பவத்தை எடுத்துக்கூறும்பொழுது அதனைக் கேட்பவர்களின் உணர்வு எடுத்துக்கூறுபவனிலும் இருக்க வேண்டும். எல்லாவிதமான வெளிப்படைக் காரணங்களுக்காகவும் அது பழமையாகக்கூடாது; அது எந்தக் காலமும் தொழுகையைத் தூண்டவேண்டும்.

தற்போதைய சபைகளின் மிகமுக்கியமான பிரச்னை என்னவென்றால், சிலுவையல்லாத வேறொன்றின் அடிப்படையிலேயே தொழுகை ஏறெடுக்கப்படுகிறது; அதனைத் தேவன் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்; அத்தகைய தொழுகையை

ஏறெடுப்பவன் கொல்லப்படுவான்; அபியூவுக்கும் நாதாபுக்கும் அப்படி ஏற்பட்டதே (**லேவி.** 10:1-2). வாசகர் சற்றுக் கவனமாக நான் சொல்லப்போவதைக் கவனிக்கவும்.

நாம் எவ்வளவாகத் துள்ளி, பாய்ந்து, ஓடி அல்லது எந்தவித மான செய்கைமுறைகளையும் பின்பற்றி, அதனைத் தொழுகை என முத்திரை குத்தினாலும், அவைகள் கிறிஸ்துவின் சிலுவை யின் அடிப்படையில் ஏறெடுக்கப்படாவிட்டால், (**யாத்.** 12:27ல் பிர கடனப்படுத்தப்பட்டதுபோல இல்லாவிட்டால்), கர்த்தர் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

துரதிஷ்டவசமாக தற்போதைய சபைகளால் ஏறெடுக்கப்படும் தொழுகைகள், தேவனால் ஏற்றுக்கொள்ளமுடியாதவைகளாக இருக்கிறது; ஏனென்றால், கிறிஸ்துவின் சிலுவையின் அடிப் படையில் அவைகள் ஸ்தாபிக்கப்படவில்லை. தொழுகை சிலு வையின் அடிப்படை விதிகளினால் ஸ்தாபிக்கப்படவில்லை என் பதன் பொருள் என்ன? நம்முடைய விசுவாசத்தின் ஒருமித்த நோக்கு இயேசுகிறிஸ்துவிலும், விசுவாசத்தின் குறிக்கோள் சிலு வையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவிலும் நங்கூரமிடப்பட் டிருக்கவில்லை. அப்படியாயின், கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற் றுக்கொள்ளும் யாவும், பிரத்தியேகமாகக் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றப்பட்டதன்மூலமேதவிர வேறெந்த வழியினாலும் அல்ல என்பதனை நாம் உறுதியாக விளங்கிக்கொள்ளவேண்டும். இவ்விதமாக விளங்கிக்கொள்ளும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மில் வல்லமையாகச் செயற்படுவார்; அப்படி விசுவாசிப் பதையே தேவன் ஏற்றுக்கொள்ளுவார்; அப்பொழுது நம்முடைய தொழுகையையும் அவர் ஏற்றுக்கொள்ளுவார் (**ரோம.** 8:1-2).

ஜனவரி

31

இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான் அப்பொழுது . ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்ட படியே செய்தார்கள் (யாத். 12:27-28).

"கர்த்தருடைய பஸ்கா"

வெளிப்படையாக இந்த வேதவாக்கியத்தில் **"இது கர்த்தரு டைய பஸ்கா"** என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதன் பொருள், இரட்சிப்பைப்பற்றிய சகலதும் கர்த்தருடையதேயன்றி வேறொரு வருடையதும் அல்ல.

இரத்தம் கதவின் நிலையில் பூசப்பட்டபொழுது இஸ்ரவேலிய புத்திரர்களுக்கு இரட்சிப்புக் கிடைத்தது; எகிப்தியர்களுக்கோ அது அழிவாக முடிந்தது; இதே நிலைமை இன்றும் தொடர்கிறது.

ஒருவன் கிறிஸ்துவின் சிலுவையை ஏற்றுக்கொள்ளும் பொழுது இரட்சிப்பும், அதனை நிராகரிக்கும்பொழுது ஆக்கினைத் தீர்ப்பும் சம்பவிக்கிறது.

ஒருவன் கிறிஸ்துவின் சிலுவையை (சத்தியத்தை) நிராகரிப் பானானால், அவன் தேவகோபத்தைச் சம்பாதிக்கவேண்டிவரும்;

தெளிவான புத்தியுள்ள எந்த மனுஷனும் அதனைச் செய்ய மாட்டான்.

அவர் மனுஷகுலத்தின் பிரதிநிதியாக வந்ததன் நிமித்தம், தன்னுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிலேயே தேவன் தன்னுடைய கோபத்தை ஊற்றியிருக்கிறார்; ஆயினும், மனுஷன் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தால், தேவ கோபத்தை அவன் சம்பாதிக்கவேவேண்டும்; ஏனென்றால், **ரோமர் 1:18**ல் **"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது"** என்று பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் வலியுறுத்தியிருக்கிறார்.

பெப்ரவரி

1

***அ**ப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள் (யாத். 15:24).*

"முறுமுறுப்பு"

மூன்று நாட்களுக்கு முன்பு இஸ்ரவேலிய புத்திரர்கள் சிவந்த சமுத்திரத்தின் கரைப்பகுதிகளில் பெரும் சந்தோஷத்தினால் பூரிப்படைந்து, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள் **(யாத். 15:1-21)**. இப்பொழுது 72 மணித்தியாலம் கழித்து, அவர்கள் மோசேக்கெதிராக முறுமுறுக்கிறார்கள். முறுமுறுப்பு பெரும் இக்கட்டுக்குள் அவர்களை இழுத்துச்செல்லப்போகிறது. முறுமுறுப்பதும், முறையிடுவதும் அவிசுவாசத்தினால் ஏற்படுகிறது; அதனைக் கண்டு பிடிப்பது இலகுவான விஷயமல்ல.

ஆம், இஸ்ரவேலிய புத்திரர்களுக்கு விசுவாசம் இருந்தது; ஆனால், விசுவாசத்தின் குறிக்கோள் மீட்பரிலும், பலியிலும் இல்லாமல் (அந்த நேரம்), தவறான விசுவாசத்தின் குறிக்கோளில் விசுவாசம் நங்கூரமிடப்பட்டிருந்தது; இதனிமித்தமே, நம்முடைய ஆண்டவர் பேதுருவை நோக்கி: **".....அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்" (மத். 14:31)** எனக் கூறியிருந்தார். இஸ்ரவேலிய புத்திரர்களின் விசுவாசம் மோசேயில் இருந்தது; எல்லாம் நன்றாகப் போகும்பொழுது மோசே அவர்களின் கதாநாயகன்; ஒரு சிறிய துன்பம் ஏற்படும்பொழுது, மோசே, தலைகீழாகப் புரட்டிப் போடப்படுகிறான். அவர்களுடைய விசுவாசம் கிறிஸ்துவின்

சிலுவையில் இருக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு, கற் பித்ததை நாம் காணக்கூடியதாயிருக்கிறது; அப்படியில்லாவிட் டால், பிரச்னைகள் வேகமாகப் பெருகும். தேவனுக்கு ஏற்ற மாதிரி வாழ்ந்து, கர்த்தருடைய சந்தோஷத்தை உடையவர்களாய், கிறிஸ்துவினால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிபூரண வாழ்க் கையை (**யோவா. 10:10**) வாழ்ந்து, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை அடைவதற்கு அவரால் நியமிக்கப்பட்ட ஒரே ஒரு வழியினாலேயே அது சாத்தியப்படும்.

அந்த வழி என்னவென்றால், விசுவாசிகளாகிய நமக்குக் கிடைக்கும் சகலதும் பூரணமாகவும், மொத்தமாகவும் கிறிஸ்து வின் சிலுவை மூலமாகவே கிடைக்கிறது என்பதனை நாம் அறிந்துகொள்ளவேண்டும்; இதனிமித்தம், விசுவாசி தன்னுடைய விசுவாசத்தை அந்தப் பலியின்மேல் நங்கூரமிட்டிருக்கவேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக அந்த விசுவா சியில் செயற்படுவார். பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக் கிறபடியினால், அவரால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை; அப் பொழுது விசுவாசிக்கு வெற்றி உத்தரவாதம் செய்யப்படுகிறது (**ரோம. 6:3-14, 8:1-2, 11; I கொரி. 1:23, 2:2; கொலோ. 2:10-15**); அப்படி இல்லாவிட்டால், விசுவாசி தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாதது (**ரோம. 7:15, 18, 24**).

பெப்ரவரி

2

***நீ** உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையான வைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார் (யாத். 15:26).*

"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்முடைய நோய்களைக் குணமாக்குவதாயின் அவருடைய சகல நியமங்களையும் கைக் கொள்ளவேண்டுமெனச் சில நிபந்தனைகளைத் தந்திருக்கிறார்; சிலவற்றையல்ல, சகலத்தையும் நிறைவேற்றவேண்டும் (**யாக்.** 2:10-11). இஸ்ரவேலியருக்குமட்டுமல்ல, கிறிஸ்தவர்களாகிய நமக்கும் சேர்த்தே இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால், வெளிப்படையான உண்மை என்னவெனில், கிறிஸ்து ஒருவரைத் தவிர (**மத்.** 5:17-18; **யோவா.** 8:46, **யோவா.** 14:30) மனுஷகுலத்தில் பிறந்த ஒருவனுமே இதனைச் செய்யவில்லை, ஒருவனும் செய்யவும் முடியாது (**யோவா.** 7:19). தேவனுடைய பார்வையில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்னமே அந்தப் பாவத்தினால் சுடப்பட்டு

இருக்கிறோம் (**எபேசி.** 2:1-3). சிலுவையின் நன்மையைப் பெறுவ தாயின் தேவனுடைய கட்டளைகளைச் செய்திருக்கவேண்டும்; அதனை அவர் நமக்காக மாற்றப்போவதில்லை. அப்படியாயின் நம்முடைய நிலைமை என்ன என்பதே நமக்கு முன்பாயிருக்கும் கேள்வியாகும்.

ஆம், நாம் அறியவேண்டிய ஆனால், நமக்கு மறைவாயிருக் கிற அந்தப் பெரிய உண்மை என்னவெனில், நம்முடைய இரட் சிப்பு, பரிசுத்தம், விடுதலை, பாவமற்ற கிறிஸ்தவ வாழ்க்கை நம்முடைய பரிபூரணத்தில் தங்கியிருக்கவில்லை என்பதனை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். இவையொன் றும் நம்மில் இல்லையாயின் அவைகள் எங்கேயுண்டு என்பது நியாயமான கேள்வியே; அவை யாவும் கிறிஸ்துவிலேயே இருக் கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சகல கட்டளை களையும், நியமங்களையும், எல்லா நேரத்திலும், எல்லா விதத்தி லும் செய்துமுடித்தார்; அவர் நம்முடைய பிரதிநிதியாகவே (**1கொரி.** 15:45-50) செயற்பட்டார்; ஆகையால், அவரிலுள்ள நம்மு டைய விசுவாசம், அவர் பெற்ற சகல வெற்றிகளையும் நமக்குக் கொடுக்கிறது; ஆகவே, இயேசுகிறிஸ்து சகல கட்டளைகளையும் நியமங்களையும் பரிபூணமாக நம் சார்பில் செய்துமுடித்தார் என்று நான் முற்றுமுழுவதுமாக விசுவாசிக்கிறேன் என நாம் தேவனுக்குப் பிரகடனப்படுத்தி, அவர் நமக்காக பெற்ற வெற்றி கள் எல்லாவற்றையும் நம்முடையதாக்கிக் கொள்ளமுடியும்.

இங்குதான் நாம் பாரிய தவறு செய்கிறோம்; அதென்னவெ னில், தேவன் நமக்கு வெற்றியைக் கொடுக்கிறாரென நினைக் கிறோம்; ஆம், அவர் பெற்ற வெற்றியை நாம் பெறுவதாயி ருந்தாலும், உண்மையில் நமக்கல்ல கிறிஸ்துவுக்கே வெற்றி கொடுக்கப்படுகிறது. தேவன் கிறிஸ்துவையே ஆசீர்வதிக்கிறார்; அவரிலுள்ள விசுவாசமே அந்த ஆசீர்வாதத்தை நமக்குத் தரு கிறது; நமது வெற்றி முழுவதும் கிறிஸ்துவிலேயே இருக்கிறது; இதுவே இரட்சிப்பின் ஒரே நோக்கம்; சகலதும் இயேசு

கிறிஸ்துவிலேயேயன்றி வேறொன்றிலும் அல்ல; இதனையே பவுல் அப்போஸ்தலர் **கொலோசெயர்** 2:10ல் தெளிவாகக் கூறி யிருக்கிறார்; மேலும் நம்முடைய ஆண்டவர் **"நான் எகிப்தி யருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"** (**யாத்.** 15:26) எனக் கூறியிருப்பதிலிருந்து அவரே எல்லாவற்றிற்கும் பொறுப்பாயிருக்கிறார் என்பது தெளிவாகிறது. மனுஷனுடைய பாவத்தின் நிமித்தம் அநேக வியாதிகள் வெளிப்படுகிறது; இது ஏதேன் தோட்டத்தில் ஆரம்பமானது; இதனை அவரே கட்டளை யாக ஏற்படுத்தினார் (**ஆதி.** 2:17; **ரோம.** 6:23). அவரே வியாதியை அனுமதிக்கிறார்; அவரே வியாதியைக் குணமாக்குகிறார்; சாத்தா னல்ல, சாத்தான் அவருடைய கட்டளைகளையே நிறைவேற்று கிறான் (**யோபு அதி:** 1, 2) என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்.

என்னுடைய சொந்த நம்பிக்கை என்னவெனில், அநேகமான கிறிஸ்தவர்கள் பற்பல வியாதிகளை அனுபவிக்கிறதற்கும், அரை வயதிலே மரணத்தைத் தழுவிக்கொள்வதற்கும் முக்கியகாரணம் **"...கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியா மல்...."** (**Iகொரி.** 11:29) கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பற்றுவதனாலேயேயாகும் (**Iகொரி.** 11:29-30). கர்த்தருடைய சரீ ரம் இன்னதென்று நிதானித்து கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபற்றுபவன் ஆக்கினைத்தீர்ப்பைத் தவிர்க்கிறான் (**Iகொரி.** 11:31); கிறிஸ்துவைத் தேவனுக்கேற்ற முறையில் விசுவாசிப்ப தனால், அவர் பெற்ற வெற்றியில் அவன் பங்குபற்றுகிறான். அவன் சகல கட்டளைகளையும், நியமங்களையும் செய்துமுடித்த வனாகவே தேவனால் கருதப்பட்டு, கிறிஸ்துவின் வெற்றி அவ னுக்குக் கொடுக்கப்படுவதனால், அவன் வியாதிகளிலிருந்து குண மாக்கப்படுகிறான் (**Iபேது.** 2:24).

பெப்ரவரி

3

***இ**ஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டி ருக்கிறேன்; நீ அவர்களோடே பேசி, நீங்கள் சாயங் காலத்தில் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திர்ப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார் (யாத். 16:12).*

"இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்"

கர்த்தராகிய ஆண்டவர் இஸ்ரவேலை நோக்கி: அவர்களு டைய முறுமுறுப்புக்களைத் தான் கேட்டிருக்கிறேன் எனத் தெளி வாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். எகிப்தின் அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை பெற்றவுடன் இஸ்ரவேலினால் செய்யப்பட்ட முதலாவது பாவம் இதுவாகும்; இது நமக்கு ஒரு படிப்பினை யாயிருக்கவேண்டும். அநேகமான கிறிஸ்தவர்கள் இந்தப் பாவத் தினால் சூழப்பட்டிருக்கிறார்கள். எந்தவிதமான முறுமுறுத்த லும், அது முறையிடுதலாயிருந்தாலென்ன, குறைகண்டுபிடித்த லாயிருந்தாலென்ன அத்தகைய செயற்பாட்டின்மூலம் தேவனுக் கெதிராகவே நாம் முறையிடுகிறோம் என்பதனைச் சந்தேகத் திற்கு இடமில்லாமல் அறிந்திருப்போமாக. உண்மையில், நாம் அவருக்குச் சொல்லுவது என்னவென்றால், அவர் செய்வதைவிட நாம் திறமையாகச் செய்யமுடியும் என்கிறோம். இது முற்று

முழுவதும் நம்முடைய ஆவிக்குரிய அறியாமையைப் பிரகடனப் படுத்துகிறதுமட்டுமல்லாமல், அவர் நமக்குச் செய்த அற்புதமான செய்கைகளுக்கு நன்றியற்றவர்களாக இருக்கிறோம் என்பதனை யும் படம்பிடித்துக்காட்டுகிறது; அவர் நம் சார்பில் பாரிய வெற்றி யைச் சிலுவையில் நிறைவேற்றியிருக்கிறாரே. அபூர்வமாக, பிசாசின் பிள்ளைகள் பிசாசுக்கெதிராக முறையிடுவதில்லை; அப்படி முறையிடுவதாயிருந்தால், தாம் பிசாசுக்கு அதிகமாய் சேவிக்கமுடியாமல் இருக்கிறதே என்று தான் சொல்லுகிறார்கள்; தாம் சொல்வதை அவர்கள் விளங்கினார்களோ இல்லையோ அப்படித்தான் சொல்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவ னுக்கெதிராக முறையிடுவதற்கு முந்திக்கொள்கிறோம் என்ப தனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கிறார்கள்.

ஆயினும், முறுமுறுப்பைக் கிருபை தன்னுடைய அதிகாரத் திற்குட்படுத்தி, இஸ்ரவேலிய புத்திரர்களுக்குக் கற்பனைக்கு அப் பாற்பட்ட அற்புதங்களைப் பரிசாகக் கொடுத்தது; மேகம் அவர் களைத் தொடர்ந்தது; பகலிலே மன்னாவையும் இரவில் காடை களையும் கொடுத்தார்; நமக்கும் நாளாந்தம் செய்யவில்லையா? (**ரோம.** 5:20); ஆகிலும், கிருபை எவ்வளவாகப் பெருகினாலும், முறுமுறுப்புத் தொடர்ந்தால், இஸ்ரவேலியர்களுக்குச் செய்தது போல, கர்த்தர் தன்னுடைய கரத்தை இறுதியில் நிறுத்தி, சிட் சையை அனுப்புவார். இஸ்ரவேலின் அவிசுவாசத்தின் பிரதிபல னாக மூத்த சந்ததியினர் யாவருக்கும் வாக்குத்தத்தம்பண்ணப் பட்ட தேசம் மறுக்கப்பட்டு, வனாந்தரத்திலே மாண்டனர்; இவை யாவும் முறுமுறுப்பினால் ஆரம்பமானது என்பது கிறிஸ்தவர் களாகிய நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக் கிறது (**Iகொரி.** 10:11); எத்தனை கிறிஸ்தவர்களுக்குப் பரலோகம் மறுக்கப்படுகிறது (**மத்.** 7:23; **லூக்.** 13:27-28)?

பெப்ரவரி

4

***இ**ஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம் (யாத். 16:15).*

"கர்த்தர் கொடுத்த அப்பம்"

மன்னா வானத்திலிருந்து இறங்கி வந்த **அப்பத்தைப்** பிரதி பலிக்கிறது; அந்த அப்பம் **இயேசுகிறிஸ்துவாகும்** (**யோவா.** 6:33-35); அதனை ஒருவன் புசித்தால் அவனுக்கு நித்தியஜீவன் உண்டு (**யோவா.** 6:51, 53) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலியர்களுடைய பசியும் (**மத்.** 5:6) அவர்களுடைய கீழ்ப்படிவும் சோதிக்கப்பட்டது. எகிப்தில் அடிமைகளுடைய போஜனத்தை அவர்கள் புசித்தார்கள்; வனாந்தரத்தில் தேவதூதர்களுடைய போஜனத்தைப் புசித்தார்கள். இயற்கையான மனுஷனுக்குப் பரலோகத்திலிருந்து வரும் விஷயங்களில் அக்கறையில்லை என்பதனைச் சோதனை உடனடியாகவே வெளிப்படுத்துகிறது; ஏனெனில், அவர்கள் மன்னாவை "....**இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்**" (**எண்.** 21:5).

ஆனால் மன்னா விலைமதிக்க முடியாதது; ஏனெனில் அது நிலத்தோடு தொடர்பு ஏற்படுத்தவில்லை, மனுஷனுடைய அசுத்தத்தோடு தொடர்பு ஏற்படுத்தவில்லை; பனியின்மேல் விழுந்தது. அதனைப் புதிது புதிதாக சூரியன் உதிக்க முன்னமே ஒவ்வொரு

நாளும் பகலில் எடுத்துக்கொள்ளவேண்டும். நேற்றைய மன்னா இன்றைக்குப் போதாது; இன்றைய மன்னா நாளைக்குப் போதாது (**எண். அதி**:9); ஆகையால், கிறிஸ்தவன் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவைப் புசிக்கவேண்டும் (**லூக்.** 9:23). அவர் தன்னை வேதவாக்கியத்தின்மூலம் வெளிப்படுத்துகிறார் (**யோவா.** 5:39; **லூக்.** 24:27); ஏனெனில், தேவனும் வார்த்தையும் ஒன்றே (**யோவா.** 1:1); அந்த வார்த்தையே மாம்சமானது (**யோவா.** 1:14); அந்த மாம்சமே தன்னைப் பலியாகக் கொடுத்தது (**யோவா.** 1:29). வார்த்தையே அப்பம், அந்த அப்பம் இயேசுகிறிஸ்துவும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதுமேயாகும்; இதனிமித்தமே, பவுல் அப்போஸ்தலர் "**நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்**...." (**1கொரி.** 1:23) எனக் கூறியிருந்தார்.

இஸ்ரவேல் வனாந்தரத்தில் இருந்தபொழுது அதற்கு ஒரு தெளிவான ஆவிக்குரிய உண்மை வெளிப்படுத்தப்பட்டது. **எகிப்து அவர்களுக்குப் பின்னாக இருந்தது; கானான் அவர்களுக்கு முன்பாக இருந்தது; வனாந்தரம் அவர்களைச் சுற்றியிருந்தது; மன்னா அவர்களுக்கு மேலிருந்தது**. அவர்கள் பரலோகத்திலிருந்து (உயர்விலிருந்து) பிறந்தவர்கள்; அவர்கள் பரலோகத்திற்கு உரியவர்கள்; அவர்கள் பரலோகத்தின் அப்பத்தைப் புசித்தார்கள்.

அவர்கள் பின்னோக்கி எகிப்தைப் பார்க்கும்பொழுது, முணுமுணுத்தார்கள்; வனாந்தரத்தில் முன்னோக்கிப் பார்க்கும்பொழுது, தேவனுடைய மகிமையைக் கண்டார்கள்.

இயேசுவே ஜீவ அப்பம்; அவர் ஒருவரே அந்த ஜீவ அப்பம்; அவரைச் சிலுவையின்மூலமே (விசுவாசத்தின்மூலமே) பெறமுடியும்; கிறிஸ்துவே ஆதாரம், சிலுவையே வழி (**கொலோ.** 1:13-14).

பெப்ரவரி

5

***இ**ஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள்; அது கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருந்தது, அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது (யாத். 16:31).*

"மன்னா"

மன்னா கொத்துமல்லி அளவாகவும், வெண்மை நிறமாகவும் இருந்தது; அது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மாதிரியையும், அவருடைய மாசற்ற தூய்மையைப்பற்றியும் பிரகடனப்படுத்தியது. அவரில் அந்தக் குணாதிசயம் இருந்தது மட்டுமல்ல, அவருடைய நாளாந்த நடையிலும் அது வெளிப் படுத்தப்பட்டது. அவர் பாவம் அறியாதவராக இருந்தார் (**IIகொரி.** 5:21). அவர் பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களில் உயர்ந்தவருமாக இருக்கிறார் (**எபி.** 7:26). **Iபேதுரு** 1:19ல் அவர் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக இருந்தார் என்று சொல்லப்பட்டி ருக்கிறது. முந்தின சொற்றொடர் அவரில் வெளிப்புற அசுத்தம் இல்லை என்பதனைக் குறிப்பிடுகிற அதேநேரம் அவரைப்பற்றிய பிந்தின சொற்றொடர் அவரில் உள்ளார்ந்த குறைபாடும் இல்லை என்பதனைப் புலப்படுத்துகிறது. வானத்தில் இருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம் இந்தக் குணாதிசயங்களை உடையதாயிருந் தது; அந்த ஜீவ அப்பம் இயேசுவேயாகும்.

ஆனால், மன்னா தேவதூதர்களுடைய அப்பம் (**சங்.** 78:25) என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வனாந்தரத்திற்கும், குளறுபடியான ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் அது போதுமாயிருந்தது. தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்கிற தேசத்தினுடைய தானியம் (**யோசு.** 5:11-12) ஆவிக்குரிய வெற்றியைப் பெறுவதற்கு அவசியமாகிறது; சகலதும் வேதவார்த்தையின் படியே அமையவேண்டும்.

பெப்ரவரி

6

***அ**ங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன் மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண் ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் முன்பாகச் செய்தான் (யாத். 17:6).*

"கன்மலையை அடி"

கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தில் ஒருவன் நிலைத்திருக் கும்பொழுதே ஒரு விசுவாசியில் பரிசுத்த ஆவியானவர் செயற் படுகிறார். அவர் சட்டபூர்வமாகச் செயற்படுவதற்கு நம்முடைய **ஒருமித்த நோக்கு**: கிறிஸ்துவிலும்; நம்முடைய **விசுவாசத்தின் குறிக்கோள்**: அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் இருக் கும்பொழுதே சாத்தியமாகிறது என்ற பாரிய உண்மை இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. இஸ்ரவேலியர்கள் மாராவிலே வந்த போது (**யாத்.** 15:22-25) கர்த்தர் சுட்டிக்காட்டின மரத்தின் தாற்பரி யம் அவ்வளவாக அவர்களுக்குள் கிரியை செய்யாததனிமித்தமே மறுபடியும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமற்போனது; ஆம், பரி சுத்த ஆவியானவர் அவர்களில் செயற்படவில்லை. மாராவிலே வந்தபோது சுட்டிக்காட்டப்பட்ட மரத்தின் முக்கியத்துவம் இப் பொழுது நடைமுறையில் காண்பிக்கப்படுகிறது.

இஸ்ரவேலியர்களில் அன்பாயிருந்த கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்குக் கொண்டுசென்றதும், அங்கு தண்ணீரும் போஜனமும் அவர்களுக்குக் கொடுத்ததும் ஏன் எனப் பலர்

அங்கலாய்ப்பதுண்டு; ஆம், வனாந்தரத்தில்த்தான் அவர்களுடைய அவிசுவாசத்தையும் அவர்களுடைய கேடான இருதயத்தையும் (**மாற்.** 7:20-23; **எரேமி.** 17:9) அவர்களுக்கு உணர்த்தமுடியும். வனாந்தரத்தில்த்தான் தேவன் ஒருபொழுதும் தவறாத தன்னுடைய உண்மையான இருதயத்தை அவர்களுக்கு வெளிப்படுத்த முடியும்; கர்த்தரே எல்லாம் என்பதும் கர்த்தருக்குள்ளேயே சகல பரிபூரணமும் தங்கியிருக்கிறது என்ற உண்மையும் (**கொலோ.** 2:9-10) வெளிப்படுத்தப்படுகிறது.

அதெப்படியெனில், கன்மலையை அடிக்கும்பொழுது புறப்பட்ட தண்ணீர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு ஏறிப் பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியை அனுப்பினதைப் பிரதிபலித்தது (**யோவா.** 16:7; **அப்.** 2:1-4). கிறிஸ்துவின் பலியின் நிமித்தமே பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது (**1கொரி.** 10:4). கன்மலையை அடித்த அதே கோல் (**யாத்.** 17:5) எகிப்தியரை அடித்து அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு வழங்கியது. கன்மலை கிறிஸ்துவின் மாதிரியைப் பிரதிபலிக்கிறது. தேவனே கிறிஸ்துவை அடித்தார் என்பதனை **ஏசாயா** 53:4 உறுதிப்படுத்துகிறது; அது சிலுவையில் நடந்தேறியது; அதனை எவன் விசுவாசிக்கிறானோ அவனுக்கு நித்தியஜீவன் உண்டு (**யோவா.** 3:16) என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இதனை இஸ்ரவேலியர்களுக்கு "**.....நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்**" (**யோவா.** 6:53) எனக் கூறியிருந்தார்.

கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தம்மூலமே (**1பேது.** 1:18-19), சகல பாவத்தின் கடன்களும் சதாகாலத்திற்கும் (கடந்தகால, நிகழ்கால, வருங்கால) செலுத்தப்பட்டு, அதனை விசுவாசிக்கும் ஒவ்வொருவனுக்கும் நித்தியஜீவன் கொடுக்கப்பட்டது; பரிசுத்த

ஆவியும் (ஜீவத்தண்ணீர்) புதிய பரிணாமத்தில் கொடுக்கப்பட்டது; கன்மலையை அடித்தவுடன் ஆறுபோலத் தண்ணீர் வந்தது (**யாத்.** 17:6; **சங்.** 105:41); அதேபோல, கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள (பரிசுத்த ஆவி) நதிகள் ஓடும் (**யோவா.** 7:38); அவன் ஒருபொழுதும் **வேறொன்றிற்கும்** தாகமடையமாட்டான் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (**யோவா.** 4:14).

பெப்ரவரி

7

***அ**மலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேல ரோடே யுத்தம்பண்ணினார்கள் (யாத். 17:8).*

"ரெவிதீம்"

யாத்திராகமம் 17:6இற்கும் 17:8இற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு விசுவாசி (**அப்.** 2:4) இலகுவாக அறிந்துகொள்ளமுடியும். ஆவியினால் நிரப்பப்பட்ட அந்த விசுவாசி தனக்குள்ளிருந்து ஏதோ ஒரு சக்தி தன்னில் புதிதாகப் பெலன் செய்வதையும் தனக்குள் ஆவிக் குரிய யுத்தம் நடைபெறுவதையும் உணர்ந்துகொள்ளமுடியும்; அநேகமான விசுவாசிகள் இதனை உணர்ந்துகொள்வதில்லை. இந்த யுத்தம் மகா பயங்கரமான யுத்தம் என்பதனையும், இதன் பிரதிபலனாக ஆவி அல்லது மாம்சம், ஏதாவது ஒன்று முடி வில் விசுவாசியைவிட்டு விலகும் அல்லது அவைகள் அவனை அரசாளும் (**கலா.** 5:17) என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

பரிசுத்த ஆவியின் சொற்படி நடவுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் (**கலா.** 5:16) என்பதே பவுல் அப்போஸ்தலரின் ஆலோசனையாகும். தேவன் இந்த யுத்தம் மகா பயங்கரமானது என்பதனை ரெபேக்காளுக்கு அறிவித்தார் (**ஆதி.** 25:22:23). இதுவே மாம்சத்துக்கும் ஆவிக்கும் எதிரான யுத்தம்; இந்த யுத்தம் இறுதிவரை நடக்கும் என்பதனை மாதிரி யாக **யாத்திராகமம்** 17:16ல் **".....தலைமுறை தலைமுறை தோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும்"**

எனக் கூறப்பட்டிருக்கிறது; இந்த யுத்தத்தை அறியாத எவனும் இலகுவாக மாம்சத்தினால் அரசாளப்படுகிறான்.

இப்படியிருக்க, கன்மலை அடிக்கப்பட்டு அதனூடாக ஜீவத் தண்ணீர் நாலாபக்கமும் ஊற்றப்படுவது, பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, அதற்கு அடையாளமாக அந்நிய பாஷையில் பேசுவதைப் பிரதிபலிக்கிறது; இது ஏற்பட்டவுடன் உடனடியாகவே பெரும் யுத்தம் ஏற்படுகிறது. இதனையே மாம் சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாக வும் ஒன்றை ஒன்று இச்சிக்கிறது எனச் சொல்லப்பட்டிருக்கிறது (**கலா.** 5:17); இதுவே ஆவிக்குரிய யுத்தமாகும். **"அமலேக்கியர் வந்து இஸ்ரவேலரோடே யுத்தம் செய்தனர்"** என்பதனை இது பிரதிபலிக்கிறது.

அமலேக்கியர் ஏசாவினுடைய சந்ததியாயிருக்கிறபடியினால் (**ஆதி.** 36:12), அவர்கள் மாம்சத்தைப் பிரதிபலிக்கின்றனர்; அவர் கள் விசுவாசியின் மாம்சசுபாவத்தைப் பிரதிபலிக்கின்றனர். தேவனுக்கென்று வாழ்வதற்கு ஏசாவுக்குப் பிரியமில்லை; அவன் உலக ஆவியினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தான். விசுவாசியில் செயற்படுகிற மாம்சத்தை அமலேக்கியர் பிரதிபலிக்கின்றனர்; இது முடிவில்லாத யுத்தம். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாத விசுவாசியைச் சாத்தான் அவ்வளவாக எதிர்ப்பதில்லை; நிரப்பப் பட்டவுடன் விசுவாசி தனக்குப் பெரும் இடையூறாக இருக்கப் போவதனால் உடனடியாகவே யுத்தத்தை **மாம்சத்தினூடாக** ஆரம்பிக்கிறான்.

இவ்வளவு காலமும் இஸ்ரவேலியருக்காகக் கர்த்தர் யுத்தம் செய்தார் (**யாத்.** 14:13-14); அவர்களுக்கு அவருடைய கட்டளை **"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார், நீங்கள் சும்மா யிருப்பீர்கள்"** என்பதேயாகும். ஜீவத்தண்ணீர் கிடைத்தவுடன் கட்டளை **"நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, அமலேக் கோடு யுத்தம்பண்ணு"** (**யாத்.** 17:9) என்பதேயாகும். நியாயப் படுத்துதலுக்கும், பரிசுத்தத்துக்குமிடையில் பாரிய வித்தியாசம்

உண்டு என்பதனை இது பிரதிபலிக்கிறது. நியாயப்படுத்தும் பொழுது கிறிஸ்து நமக்காக யுத்தஞ்செய்வார்; பரிசுத்தப்படுத்தும் பொழுது பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாக நம்மிலிருந்து நாம் யுத்தஞ்செய்வதற்கு உதவிசெய்வார். ஒரு விசுவாசியில் புதியசுபாவம் வந்தவுடன் பழைய சுபாவம் யுத்தத்தை ஆரம்பிக் கிறது.

அமலேக்கியர் பழைய மாம்சசுபாவத்தைப் பிரதிபலிக்கின் றனர்; அவன் ஏசாவின் பேரன். ஏசா முன்பும் பின்பும் யாக்கோ பைப் கொல்லப்பார்த்தானே! அவன் ஒரு கோப்பை கூழுக்காகத் தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை உதறித்தள்ளினானே! மாம் சம் ஆவிக்கு விரோதமானது (**ரோம.** 8:7-8); இதனிமித்தம், ஆவி மாம்சத்துக்கெதிராக எந்தக் காலமும் யுத்தம்பண்ணு என்பதே தேவகட்டளையாகும். மாம்சத்தினால் மாம்சத்துக்கு எதிராக யுத்தஞ்செய்யமுடியாது; அத்தகைய முயற்சியில் அதிகமான கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு, இறுதியில் முற்றுமுழுவதும் அவர் களை மாம்சம் ஆக்கிரமிக்கிறது. மாம்சத்தை (அமலேக்கை) விசுவாசி தோற்கடிப்பதற்குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழி யென்னவெனில், அவன் தன்னுடைய விசுவாசத்தை எக்கால மும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவில் நிலை நிறுத்துவதன்மூலமே சாத்தியமாகும் என்பதனை அடிக்கப்பட்ட கன்மலை பிரதிபலிக்கிறது. கன்மலை இயேசுகிறிஸ்துவைப் (**Iகொரி.** 10:4); பிரதிபலிக்கிறது; வேறெந்த வழியினாலும் மாம் சத்தை வெற்றிகொள்ளமுடியாது (**கலா.** 2:21; 5:24).

பெப்ரவரி

8

***அ**ப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அம லேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலை யுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித் துக்கொண்டு நிற்பேன் என்றான் (யாத். 17:9).*

"அமலேக்கோடு யுத்தம்"

மறுபிறப்புப்பெற்றவுடன் தெய்வீகசுபாவம் விசுவாசியில் நாட் டப்படுகிறது (I**பேது.** 1:4); இந்தப் புதிய சுபாவம் பரிசுத்த ஆவியி னால் ஏற்படுத்தப்படுகிறது; இதற்கு முக்கியமான காரணம் அவ ருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது (I**யோவா.** 3:9). புதிய சுபாவம் ஸ்தாபிக்கப்படும்பொழுது, பழைய பாவசுபாவம் விசுவாசியில் தொடர்ந்து இருக்கிறது; அதனுடைய குணாதிசயங் களில் ஒருவித மாற்றமுமில்லை. அவன் மரிக்கும்வரையும் அல்லது கிறிஸ்து அவனை இழுத்துக்கொள்ளும்வரையும் அது அவனில் தங்கியிருக்கிறது. வேதவாக்கியத்தில் "**அழிவுள்ளதா கிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவா மையையும் தரித்துக்கொள்ளும்பொழுது**....." (I**கொரி.** 15:54) என இதனைப்பற்றி நமக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஆனால், ஒரு விசுவாசியில் அந்தப் பாவத்தின் வல்லமை முறிக்கப்பட்டு, குற்றவுணர்வு அகற்றப்பட்டிருக்கிறது (**ரோம.** 6:6-7); ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் பாவசுபாவம், தெய்வீக

சுபாவம் என இரு சுபாவங்களிருக்கிறது; அவை ஒன்றுக்கொன்று விரோதமானது; தெய்வீகசுபாவம் உணர்வுள்ளது; பாவசுபாவம் உணர்வற்றது. ஒன்று மாம்சத்தினால் பிறந்தது மற்றது தேவனால் பிறந்தது; இரண்டிற்கும் இடையில் பொதுவானது ஒன்றுமில்லை; உண்மையில் ஒன்றை ஒன்று தீவிரமாக எதிர்க்கிறது (**கலா.** 5:17). பாவசுபாவம் இருந்தாலும், அது அவனை அரசாளாதபடி செயலற்ற நிலைமையில் இருக்கவேண்டியதே தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியாகும் (**ரோம.** 6:11-14).

தேவன் **"அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும்"** (**யாத்.** 17:16) என்று கூறியிருக்கிறாரேதவிர அமலேக்கியரை முற்றுமுழுவதுமாக அழிக்கவில்லை. அமலேக்கியர் தேசத்திலிருக்கவேண்டும்; ஆனால், தேசத்தை ஆளமுடியாது. அப்படியே, பாவசுபாவம் நம்மில் வாசமாயிருக்கிறது; ஆனால், அது நம்மை ஆளுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இதனிமித்தமே, ரோமர் ஆறாம் அதிகாரத்தில் இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக"** (**ரோம.** 6:12) எனக் கூறியிருக்கிறார்.

அநேகமான கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டவுடன் பாவசுபாவம் அறவே அகற்றப்பட்டதென உறுதியாக நம்புகிறார்கள். அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் எதற்காக **ரோமர்** 6:12ஐ கட்டளையிட்டிருக்கிறார் என்பதற்கு அவர்களிடத்தில் பதில் இல்லை. அப்போஸ்தலர் யோவானும் நம்மிடத்தில் அந்தப் பாவம் இல்லை என்றால், அந்தப் பாவத்தைப்பற்றிய சத்தியம் நமக்குள் இராது எனக் கூறியிருக்கிறார் (**1யோவா.** 1:8).

அமலேக்கு மாம்சத்தைப் பிரதிபலிக்கிறான்; உண்மை என்னவெனில், பாவசுபாவம் அவிசுவாசியை அரசாளுகிறது; ஆனால்,

அது விசுவாசியில் வாசமாயிருந்தும், இயங்காமல் இருக்கவேண்டியதே தேவனுடைய எதிர்பார்ப்பாகும்.

பாவசுபாவம் இயங்காமலிருப்பதற்குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழியைப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 6:3-5ல் வெளிப்படுத்தியிருக்கிறார்; அதெப்படியெனில், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் விசுவாசி இணைந்து, அவரோடுகூட மரணத்துக்குள் இணைந்து, அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு, அவரோடுகூட உயிர்த்தெழுந்து அவரில் பிழைத்திருப்பதுமட்டுமல்ல, புதிதான ஜீவனுள்ளவனாக நடந்துகொள்ளும்படிக்குத் தொடர்ச்சியாக விசுவாசிக்கவேண்டியதே வெற்றிக்குக் காரணமாயிருக்கிறது (**ரோம.** 6:14). கிறிஸ்துவின் சிலுவையே விசுவாசியின் அஸ்திபாரமாகும்; நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும்பொழுதே பாவசுபாவம் இயங்காமலிருக்கும்; அதுவே விசுவாசத்தின் நல்ல போராட்டமாகும் (**1தீமோ.** 6:12; **2தீமோ.** 4:7).

பெப்ரவரி

9

***நீ** அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிற வர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத். 20:5).*

"குடும்ப சாபம்"

குடும்ப சாபம் **"என்னைப் பகைக்கிறவர்களுக்கே"** (**யாத்.** 20:5) எனத் தேவன் வலியுறுத்தியிருக்கிறார். அதேநேரம் **"என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற வர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிற வராயிருக்கிறேன்"** (**யாத்.** 20:6) எனக் கூறியிருப்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். கிறிஸ்தவர்களில் குடும்ப சாபம் உண்டு என்று அநேகமான போதகர்கள் கிறிஸ்தவர்கள் மேல் கைகளை வைத்து, பிசாசு கலைப்பதில் ஈடுபட்டிருப்பதைப் பல கிறிஸ்தவ சபைகளில் கண்டிருக்கிறேன். **எசேக்கியேல்** 18:4ல் **"....பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்"** என்று சொல்லப் பட்டிருக்கிறது; அப்படியிருக்க, அதெப்படி கிறிஸ்தவர்களில் குடும்பசாபத்தைப் போதகர்கள் திணிக்கிறார்கள் என்பது ஆச்சரிய மாயிருக்கிறது; அதுமட்டுமல்ல, **எசேக்கியேல்** 18:20ல் **".....குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை;**

நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" எனத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே கிறிஸ்தவர்களிடம் குடும்பசாபம் உண்டு என்பது வேதத்திற்கு ஒவ்வாத ஒரு உபதேசம் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். இதுபற்றி **IIகொரிந்தியர்** 5:17ல் **"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது; ஆம், அசுத்த ஆவிகளின் கொடுமைப்படுத்துதல்கள் கிறிஸ்தவர்களுக்கு உண்டேதவிர, அசுத்த ஆவிகள் கிறிஸ்தவனைத் தம்முடைய உரிமையாக்கமுடியாது. பரிசுத்த ஆவியும் அசுத்த ஆவியும் ஒன்றாக இருக்கமுடியாது; இதனைத் திருப்பித் திருப்பிக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லுவது அவசியமாயிருக்கிறது (**பிலி.** 3:1). இதுவே அன்பின் செய்தி; **".... நாம் கேட்டவைகளைவிட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்"** (**எபி.** 2:1). **"நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்"** (**எபி.** 3:14); நாம் பங்குள்ளவர்களாயிருந்து, பலனில் முந்திப் பங்கடையவேண்டும் (**IIதீமோ.** 2:6) என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது.

பெப்ரவரி

10

உன் நிலத்தில் முதல் விளைச்சல்களில் முதற் கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக் குக் கொண்டு வருவாயாக; வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம் (யாத். 23:19).

"வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்"

இதே மாதிரியான வேதவாக்கியங்கள், மூன்று முறை வேதத் தில் கொடுக்கப்பட்டிருக்கிறது (**யாத்.** 23:19, 34:26; **உபா.** 14:21). இதற்குத் தடை விதிக்கப்பட்ட காரணம் என்னவென்றால், ஆட்டுக்குட்டி கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது (**யோவா.** 1:29). அவர் தேவகுமாரனாக இந்தப் பூவுலகத்திற்கு மனுஷனாக இறங்கி வந்து, தன்னைப் பலியாக, கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்து, தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி, நம்முடைய பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பார் என்பது உலகத்தோற்றத் திற்கு முன்னமே தீர்மானிக்கப்பட்டது (**Iபேது.** 1:18-20).

கிறிஸ்து கர்ப்பத்தில் மரிக்கவில்லை; அவர் குழந்தையாக மரிக்கவில்லை; இதுபற்றி கிறிஸ்து சிறுகுழந்தையாக இருக்கும் பொழுது சாத்தான் அவரைக் கொலை செய்வதற்குக் கடுமையாக முயற்சிசெய்தும் அது பலனளிக்கவில்லை என **மத்தேயு** 2:16ல **"அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட் டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி,**

தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின் படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான்" என்று கூறப்பட்டிருக்கிறது; அவர் 33½ வய திலேயே மரித்தார்; ஆகையால்த்தான், **வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்** எனத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

பெப்ரவரி

11

பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேக தைலத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவன் மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவனுடைய குமாரர்மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள்மேலும் தெளிப்பாயாக (யாத். 29:21).

"பரிசுத்தப்படுதல்"

ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை **"கிறிஸ்துவுக்குள்"** இருப்பதனாலேயே என்பதனை மேற்கூறிய வேதவாக்கியம் வலியுறுத்துகிறது. இங்கு இரத்தத்தையும் அபிஷேகதைலத்தையும் ஒன்றாகக் கலந்து, ஆரோன்மேலும் அவனுடைய குமாரர்மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள்மேலும் தெளிக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் எப்படிச் செயற்படுகிறார் என்பதனை இது தெளிவுபடுத்துகிறது. பரிசுத்த ஆவியானவருடைய சகல செயற்பாடுகளும் கிறிஸ்துவினுடைய பலியின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றது; அந்தப் பலி இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தைப் பிரதிபலிக்கிறது; இதனிமித்தமே, பவுல் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின்

பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படி யெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிர மாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம் முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (**ரோம.** 8:2-3).

மேற்கூறிய வேதவாக்கியம் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்துக்காக மரித்தார் என்பதனையும், மாம்சத்திலே அந்தப் பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்பதனையும் பிர கடனப்படுத்துகிறது. இது ஒரு சட்டபூர்வமான வேலையானபடி யால் (**உபா.** 21:22-23), இந்த அடிப்படையிலேயே பரிசுத்த ஆவி யானவர் செயற்படுகிறார்; இதனிமித்தமே **"கிறிஸ்து இயேசுவி னாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்"** எனக் கூறப்பட் டிருக்கிறது.

பவுல் அப்போஸ்தலர் **கிறிஸ்து இயேசுவுக்குள்**; **கிறிஸ்து இயேசுவில்**; **கிறிஸ்து இயேசுவினாலே** எனக் கூறும் சொற் பதங்கள் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதைப்பற்றியே குறிப்பிடுகிறது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய எல்லையின் அடிப்படையிலேயே செயற்படு கிறார் (**ரோம.** 8:2; **யோவா.** 16:14); இந்த நிபந்தனையைவிட்டு அவர் விலகுவதில்லை. இதனைவிட்டு விலகும் எந்தச் செய் கையும், அது எவ்வளவு ஆவிக்குரிய கனம் நிறைந்திருந்தாலும், அது ஆவிக்குரிய வேசித்தனமாகவே கணிக்கப்படும் (**ரோம.** 7:1-4). நம்முடைய இருதயத்தில் ஏற்படும் நன்மையான எந்த ஆவிக்குரிய மாற்றமும் பரிசுத்த ஆவியினாலேயே நடைபெறு கிறது (**கலா.** 5:22-23; **IIகொரி.** 3:18). நம்முடைய மாம்சத்தினால் அல்லது சுயத்தினால் அதனைச் செய்யமுயற்சித்தால், அதற்குப் பரிசுத்த ஆவியானவர் உதவப்போவதில்லை.

நாம் அறிந்திருக்கவேண்டிய பாரிய ஆவிக்குரிய உண்மை யென்னவெனில், தேவனிடத்திலிருந்து கிடைக்கும் சகலதும்

கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது என்பதனையும், சிலுவையே நம்முடைய விசுவாசத்தின் குறிக் கோளாக இருக்கவேண்டும் என்பதனையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதனைத் தொடர்ச்சியாக நாம் விசுவாசிக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்மில் வல்லமையாகச் செயற் படுவார் என்பதனையும், அவர் தேவனாக இருப்பதனால் அவ ரால் முடியாதது எதுவுமில்லை என்பதனையும் விசுவாசித்து, அதனை அநுதினமும் நடைமுறைப்படுத்துவோமாக (**லூக்.** 9:23; **ரோம.** 6:3-5). இதுவே ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கைக் குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறையாகும்.

பெப்ரவரி

12

***நீ** இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின் படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன். எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற ஒவ்வொருவனும் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின் படி அரைச்சேக்கல் கொடுக்கவேண்டும்; ஒரு சேக்கலுக்கு இருபது கேரா; கர்த்தருக்குச் செலுத்தப்படுவது அரைச்சேக்கல் (யாத். 30:12-13).*

"வாதை உண்டாகாதபடிக்கு"

இஸ்ரவேலியர்கள் எண்ணப்படும்போது 20 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் தலா அரைச்சேக்கல் கொடுக்கவேண்டுமென நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இதனை ஒருவழியில் பார்த்தால் குடிசனமதிப்பு என்றும், அவர்கள் அரைச்சேக்கலை வரியாகக் கட்டவேண்டுமென்றும் நியாயப்பிரமாணம் கட்டளையிட்டிருக்கிறது; சேக்கல் வெள்ளியினால் செய்யப்பட்டது. பழைய ஏற்பாட்டில் வெள்ளி மீட்பின் அடையாளமாகவும், மாதிரியாகவும் கருதப்பட்டது. ஒவ்வொருவரும் அரைச்சேக்கல் வரி கட்டவேண்டும் என்பது ஏழைகளாக இருந்தா

லென்ன, பணக்காரராயிருந்தாலென்ன மீட்பு எல்லாருக்கும் ஒரே மாதிரியே என்ற உண்மை வலியுறுத்தப்படுகிறது. விலை கொடுத்தே நாம் மீட்கப்பட்டோம்; அந்த விலை இயேசுகிறிஸ்து வின் இரத்தமே (**Iகொரி. 6:20**); இதனையே **Iபேதுரு 1:18-20**ல் பேதுரு கூறியிருக்கிறார்.

இதனிமித்தமே, தாவீதின்மேல் தேவன் கோபங்கொண்டார். அதெப்படியெனில், தாவீது ஜனங்களை எண்ணும்போது, நியாயப் பிரமாணத்தின்படி சொல்லப்பட்ட வரியை ஜனங்களிடம் பெற்றுக் கொள்ளவில்லை; அதை அவன் புறக்கணித்தான். அதன்மூலம் ஜனங்களின் மீட்பு இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமே என்ற உண்மை தாவீதினால் புறக்கணிக்கப்பட்டது. இஸ்ரவேலின் அஸ்திபாரமே இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என் பது தாவீதுக்கு மறைக்கப்பட்டது. இந்தப் பாவத்தின் நிமித்தம் இஸ்ரவேலில் 70,000 பேர் மரித்துப்போனார்கள் (**IIசாமு. 24:15**);

தாவீது இந்தப் பாவத்தை நிவிர்த்தி செய்வதற்கேதுவாகக் காத் தீர்க்கதரிசி தாவீதிடம் வந்து அவனை நோக்கி: **".....நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும் என்றான்"** (**IIசாமு. 24:18**). சேக்கலின் முக்கியத்துவம் தாவீதுக்குக் காத் தீர்க்கதரிசியினால் உணர்த்தப்பட்டது. காத்தினுடைய வார்த்தையின்படியே தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாய்ச் செய்தான். அர்வனாவிடம் தாவீது சென்று: **".....வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்படக் கர்த் தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ளவந்தேன் என்றான்"** (**IIசாமு. 24:21**).

ஆனால் அர்வனாவோ தாவீதுக்குத் தகனபலிக்கு மாடுகளை யும், களத்தையும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளையும் மாடுகளின் நுகத்தடிகளையும் இலவசமாகக் கொடுக்க முன் வந்தான்; ஆனால் தாவீதோ ".... **அப்படியல்ல, நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி களைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்**

கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான் (II**சாமு.** 24:24). ஆம், நாம் ஒரு விலைகொடுத்து வாங்கப்பட்டோம் (I**கொரி.** 6:20); அந்த விலை இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமே; அது புறக்கணிக்கப்பட்டால் இரட்சிப்பு கேள்விக்குறியாகிறது (**எபி.** 9:22).

பெப்ரவரி

13

***நீ** இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரி சுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக் கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும். ஆகை யால், ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக; அது உங்களுக் குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கு கிறவன் கொலையுண்கக்கடவன்; அதிலே வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் (யாத். 31: 13-14).*

"பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான்"

ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக என்பது தேவ கட்டளை; அந்தக் கட்டளைமூலம் தேவன் தன்னுடைய இளைப்பாறுதலில் பங்கு பற்றுங்கள் என இஸ்ரவேலியர்களை அழைக்கிறார். இயேசு கிறிஸ்துவே தேவனுடைய இளைப்பாறுதலாகும் (**எபி. அதி:4;**). ஒருவன் ஓய்வுநாளைக் கனம்பண்ணுகிறானோ அல்லது அவ மதிக்கிறானோ என்பதே இங்கு சோதனையாயிருக்கிறது. அந்தச் சோதனைமூலம் ஒன்றில் அவன் கிறிஸ்துவைக் கனம்பண்ணு கிறான் அல்லது அவமதிக்கிறான். அவமதிப்பவனுக்குத் தேவனு டைய தண்டனை அவன் கொலையுண்ணக்கடவன் என்பதே; ஓய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவனுக்குப் பழைய

ஏற்பாட்டில் மரணதண்டனை கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் அப்படியில்லையே என்று சிலர் தம்முடைய நியாயமான சந்தேகத்தை எழுப்புகின்றனர். ஆம், புதிய ஏற்பாட்டிலும் ஓய்வு நாளைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவன் ஆவிக்குரிய மரணத்தைப் பெறுகிறான்.

ஓய்வுநாளை நாம் புதிய ஏற்பாட்டில் அனுசரிப்பதில்லையே எனப் பலர் வியாகுலப்படுகின்றனர்; ஆம், அதனை விசுவாசிகளாகிய நாம் பழைய ஏற்பாட்டுக்காரர் அனுசரிப்பதைப்போல அனுசரிக்காமல் **"கிறிஸ்துவுக்குள்"** இருப்பதன்மூலம் (**லூக்.** 9:23; **ரோம.** 6:3-5) அனுசரிக்கிறோம். **"கிறிஸ்துவுக்குள்"** இல்லாமல் பழைய ஏற்பாட்டின்படி ஓய்வுநாளை அனுசரித்தால் ஆவிக்குரிய மரணம் ஏற்படும். கிறிஸ்து நியாயப்பிரமாணங்கள் யாவற்றையும் நமக்காகச் செய்துமுடித்திருக்கிறார்; அதுமட்டுமல்ல, நியாயப்பிரமாணத்தை நாம் செய்யாததன் நிமித்தம் நமக்கு ஏற்பட்ட பாவத்தின் தண்டனையை அவர் சிலுவையில் பெற்று, அந்தத் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் விடுதலை தந்திருக்கிறார். அவரை விசுவாசித்து அவருக்குள் இருப்பதன்மூலம் ஓய்வு நாளை நாம் அநுதினமும் அனுசரிக்கிறோம். கிறிஸ்துவே இளைப்பாறுதல் என்பதனையும் அவருக்குள் இருப்பவன் அந்த இளைப்பாறுதலை அனுபவிக்கமுடியும் என்பதனையும் **மத்தேயு** 11:28-30 வலியுறுத்துகிறது.

இப்படியிருக்க, இன்றும் அநேகமான கிறிஸ்தவ சபைகளில் சனிக்கிழமை ஓய்வுநாளாக இஸ்ரவேலியர்கள்போன்று அனுசரிக்கப்படுகின்றது. இவர்கள் இந்தத் துணிகரமான செய்கையின் மூலம் கிறிஸ்து நமக்காக நியாயப்பிரமாணங்களை ஒரு எழுத்தாகிலும் தவறாமல் நிறைவேற்றியதை நிராகரித்து, தாமும் ஓய்வுநாளை அனுசரிப்பதன்மூலம் நியாயப்பிரமாணத்தை மறுபடியும் செய்வதனால் கிருபையிலிருந்து வீழ்ந்துபோனார்கள் (**கலா.** 5:4); நியாயப்பிரமாணத்தினால் ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது **கலாத்தியர்** 3:11ல் வெளியரங்கமா

யிருக்கிறது; அதுமட்டுமல்ல, நியாயப்பிரமாணத்தின் கிரியைக் காரராகிய யாவரும் சாபத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள் (**கலா.** 3:10). ஓய்வு நாளை அனுசரிப்பவர்கள் சற்றுப் பொறுமையாகத் தாம்செய்யும் கேட்டினை உணர்ந்து மனந்திரும்புவார்களாக. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தின்மூலம் இருப்பதனால் இளைப் பாறுதலுக்குள் பிரவேசிக்க நமக்குக் கிறிஸ்து சகலத்தையும் செய்துமுடித்திருக்க, நாம் இஸ்ரவேலியர்களோடு கூட்டுச்சேர்ந்து மேசியாவை நிராகரிப்பது நியாயமானதோ என்பதனை ஒரு விசுவாசி தீர்மானிப்பானாக.

மன்னாவோடு, ஓய்வுநாள் (**யாத். அதி**:16), நியாயப்பிரமாணம் (**யாத். அதி**:20), வாசஸ்தலம் ஆகியவை ஏதோ ஒருவகையில் சம்பந்தப்பட்டிருக்கிறது. வாசஸ்தலத்தைக் கட்டும்போதுள்ள வைராக்கியம், நியாயப்பிரமாணத்தை அனுசரிக்கும்போதுள்ள உற்சாகம், மன்னாவை சேர்க்கும்போதுள்ள சக்தி, எதுவும் ஓய்வு நாளைத் தடைசெய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை; கிறிஸ்து வந்தபோது இந்த இளைப்பாறுதலின் அடையாளமாகிய ஓய்வு நாளைமட்டுமல்ல, முழு நியாயப்பிரமாணத்தையும் நிறைவேற்றி னார். விசுவாசத்தின்மூலம் கிறிஸ்துவுக்குள் இருப்பதனால், ஓய்வுநாள் அநுதினமும் விசுவாசிகளால் அனுசரிக்கப்படுகிறது; அதற்கென ஒரு நாள் தேவையில்லை. யூதேயாவினரால் உந்தப்பட்ட கலாத்தியர்கள் தம்முடைய விசுவாசத்தை விருத்த சேதனம், ஓய்வுநாள் முதலியவற்றுக்குத் திசைதிருப்பியதனால் விரக்தியடைந்த பவுல் அப்போஸ்தலர் இதுபற்றிக் **கலாத்தியர்** 3:10-11ல் கூறியிருக்கிறார். சாத்தான் இவ்விதமாக நியாயப்பிர மாணத்தைச் செய்யுமாறு காலாதிகாலமாகக் கிறிஸ்தவர்களை வற்புறுத்துகிறான்; இதனால் விசுவாசத்தை இழந்து நரகத்திற்குள் தள்ளப்பட்டோர் (**மத்.** 7:23; **லூக்.** 13:27-28) ஏராளம்!!

பெப்ரவரி

14

மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள் (யாத். 32:1).

"தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்"

மோசே மலை உச்சியில் பரலோகத்திலிருக்கிற விஷயங்களில் ஆர்வமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் மலையின் அடிவாரத்தில் ஆரோனும் இஸ்ரவேலியரும் சாத்தானுடைய காலடியில் பொன்கன்றுக்குட்டியை உருவாக்கி (**யாத்.** 32:2-4), அதனைச் சுற்றிப் பாட்டும் ஆட்டமுமாய் ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும், உட்கார்ந்து விளையாட எழுந்தார்கள் (**யாத்.** 32:6) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; இந்த இரு செயல்களும் சாத்தானுக்குப் பிரியமானது.

காவற்படையின் முன்னணியில் பொன்கன்றுக்குட்டியை எகிப்தியர்கள் கொண்டுசெல்வது அவர்களுடைய வழக்கம்; எகிப்தைப்போன்றே உலகத்தின் மதங்களும் அதன் கலாச்சாரங்களும், ஒன்றில் கிறிஸ்து இல்லையேல் கன்றுக்குட்டி என்பதனைப் பிரகடனப்படுத்துகிறது; அந்தக் கன்றுக்குட்டிக்குப் பலியிடுவது

அவர்களுடைய வழமை; அதனைச் சுற்றி அதனைக் கௌரவிப்ப தற்காகக் காமவெறியை (**கலா.** 5:19-21) வெளிப்படுத்தும் நடனங் களை எகிப்தியர்கள் செய்வதுண்டு. அது ஆச்சரியப்படுவதற் கில்லை, ஆனால் அதனைத் தேவனுடைய ஜனங்கள் செய்வது வேதனைக்குரியதல்லவா? கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் இருக்கவேண்டிய விசுவாசம் (**Iகொரி.** 2:2; **லூக்.** 9:23) திசைதிருப்பப்படுமாயின் அதன் முடிவு விக்கிரகாரா தனையும், அதன் பிரதிபலன் மாம்ச இச்சைகளும், மாம்சத்தின் கிரியைகளுமேயாகும். தேவனுடைய ஆசீர்வாதங்களை, கன்றுக் குட்டியை உருவாக்குவதற்குப் பாவிக்கலாம் இல்லையேல் வாச ஸ்தலத்தைக் கட்டுவதற்குப் பாவிக்கலாம்; அது மனுஷனுடைய தெரிவேயன்றித் தேவனுடைய தெரிவல்ல; அவர் ஆலோசனைக் கர்த்தரே.

மனுஷருடைய இருதயம் மகா கேடுள்ளது (**எரேமி.** 17:9); இஸ்ரவேலியர்கள் கற்பனைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைக் கண்டும், ஒரு சொற்பகால இடைவெளிக்குள் இப்படி நடக்க முடியுமா எனப் பலர் இன்றும் அங்கலாய்க்கின்றனர்; ஆம், தேவனுடைய ஜனங்களே இப்படிச் செய்தார்கள்; இந்த அனுப வத்தைக் கிறிஸ்தவர்களாகிய நாமும் செய்யக்கூடிய சாத்தி யக்கூறு நிச்சயமாகவே உண்டு (**Iகொரி.** 10:1-11); இந்த நிலை மையைக் கிறிஸ்தவர்கள் அறியாவிட்டால், அவர்களில் ஏசாயா வின் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது (**மத்.** 13:14-16). இஸ்ரவேலியர்கள் ஆரோனோடு சேர்ந்து, தாம் காணக்கூடிய ஒரு தெய்வத்தை உண்டுபண்ணினார்கள்; எகிப்தியரின் அடிமைத் தனத்தின் ஆக்கிரமிப்பு அவர்களை ஆட்கொண்டிருந்திருந்தது; அப்படியே இன்றும் பார்க்கக்கூடிய தெய்வங்களைக் கத்தோ லிக்கம் உருவாக்கவில்லையோ? அப்படியே தேவனுடைய ஜனங் களும் மத ஆசாரியனாகிய ஆரோனின் தலைமையில் மதக் கிரியைகளில் ஈடுபட்டிருந்தனர்.

சாத்தானுடைய ஆழங்களில் ஒன்று அவரைப் பார்க்கக்கூடிய உருவமாகமாற்றுவதே; இதனிமித்தமே, தேவன் நியாயப்பிரமாணத்தின் முதலாவதும், இரண்டாவதும் கட்டளையாக (**யாத்.** 20:2-6) காணக்கூடிய தெய்வங்களை உருவாக்குவதற்குத் தடைவிதித்தார். ஆரோனின் நடவடிக்கைகள் யாவும் சாத்தானுடைய நடவடிக்கைகளே. அவன் கன்றுக்குட்டிக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, **"நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை"** எனக் கூறினான். சகலதும் தேவனுடைய ஜனங்களின் ஆராதனைக்குரிய பெயர்கள்; ஆனால், அவைகள் பிரதிபலிப்பது முற்றிலும் வித்தியாசமே. அதேமாதிரி இன்றும் வேறொரு சுவிசேஷம், வேறொரு இயேசு, வேறொரு ஆவி, வேறொரு சிலுவை (II**கொரி.** 11:4) என்பன யாவும் சர்வசாதாரணமாகக் கொள்ளைநோய்போலப் பரவியிருக்கவில்லையா?

சாத்தான், ஆரோனைப்போன்ற போதகர்களைத் தெரிவுசெய்து, கிறிஸ்துவை விக்கிரகமாக இணைத்து எல்லா மதத்தினுடைய நன்மையான பகுதிகளையும் அடையாளங்கண்டு, ஆராதனை நடத்தும்பொழுது அது இயற்கையான இருதயமுள்ளவனுக்குக் கவர்ச்சிகரமாயிருக்கிறது. சகலதும் மதத்தின் போர்வையினால் மூடி ஆரோன்மூலம் நடந்தேறுகிறது. மதம் போதைமருந்து போலத் தென்படவில்லையா? மதத்தைச்சுற்றிப் பலர், அது காயீனின் பலிபீடம். ஆபேலின் பலிபீடத்தைச் சுற்றி சிலர், அது மோசேயும் அவனோடு இருந்தவர்களும்; ஆண்டவர் ஆதாமுக்கு **ஆதியாகமம்** 2:17ஹக் கட்டளையாகக் கொடுத்திருந்தார். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி, ஒரே மரத்திலிருந்து ஒரே கனியில் உருவாகிறது; நன்மை என நினைத்துச் செய்யத் தொடங்கியவுடன் அது தீமையில் கொண்டுபோய் விடுகிறது; நன்மையான பகுதியினால் ஆதாம் ஏவாள் அழிந்தனர் (**ஆதி.** 3:1-7); அதனால் மனுஷகுலம் அழிந்தது; இன்று அவிசுவாசிகள்மட்டுமல்ல, விசுவாசிகளும் நன்மையான பகுதியினால் அழிகின்றனர்.

பெப்ரவரி

15

மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள் *(யாத். 32:6).*

"ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்"

"விளையாட எழுந்தார்கள்" என்ற சொற்றொடரைப் பரிசுத்த ஆவியானவர் இந்த மகா பரிசுத்தமான வேதவாக்கியத்திற்குள் இடம்பெற அனுமதித்திருப்பதுபற்றிச் சில கிறிஸ்தவர்கள் தப்பாக வியாக்கியானஞ் செய்யக்கூடிய சாத்தியக்கூறு உண்டு. தேவன் எதனையும் காரணமில்லாமல் செய்வதில்லை என்பதனையும், அவர் செய்வது எல்லாம் முற்றிலும் சரியே என்ற சிந்தனை நமக்குள் இருந்தால், வீணான சிந்தனைகளுக்கு நாம் செல்லவேண்டியதில்லை. அவர் பரிபூரணமானவர், நாமோ பரிபூரணமற்றவர்கள்; பரிபூரணம் ஒருபொழுதும் தவறு விடுவதில்லை.

இப்படியிருக்க, **"விளையாட எழுந்தார்கள்"** என்பது இழிவான காமத்தையும், சிறுமைத்தனத்தையும் பிரதிபலிக்கிறது. காயீன் பொருத்தமான பலிபீடத்தைப் பெற்றிருந்தான்; ஆனால், அதனில் தவறான பலியைக் கொடுத்தான் (**ஆதி. அதி:4**). இஸ்ரவேல் தவறான பலிபீடத்தில் பொருத்தமான பலியைக் கொடுத்தது. கர்த்தர் இரண்டையும் நிராகரித்தார்; ஏனென்றால், இரண்டும்

மனுஷனால் திட்டமிடப்பட்டு, உருவாக்கப்பட்டது. பரிசுத்த ஆவி யானவரின் இருதயத்தில் கர்ப்பந்தரிக்காத எந்தத் திட்டமும் நிரா கரிக்கப்படும். அத்தகைய திட்டம் மனுஷனுடைய இருதயத் தில் தோன்றி, அது நிறைவேற்றப்பட்டால், அதற்குத் தண்டனை உண்டு.

இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 1:24ல் **"இதினி மித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத் தார்"** எனக் கூறியிருப்பதைப் பரிசீலனை செய்யும்பொழுது, அது எவ்வளவாய் **யாத்திராகமம்** 32:6 உடன் ஒத்திருக்கிறது என்பத னையும், எவ்வளவாய் **I கொரிந்தியர்** 11:4 உடன் ஒத்திருக்கிறது என்பதனையும் புரிந்துகொள்ளமுடியும்.

ரோமர் 1:24ல் கூறப்பட்ட தண்டனையிலிருந்து கிறிஸ்தவர்கள் தப்பவேண்டும் என்பதற்காகவே **யாத்திராகமம்** 32:6ல் **"விளை யாட்டு"** என்ற சொற்பதம் உட்புகுத்தப்பட்டிருக்கிறது; ஆனபடி யினால், ஒரு கிறிஸ்தவன் பொருத்தமான பலிபீடத்தைத் தெரிவு செய்து, அதனில் பொருத்தமான பலியை சமர்ப்பிப்பானாக. **சிலுவையே** பொருத்தமான பலிபீடமும், **இயேசுகிறிஸ்துவே** பொருத்தமான பலியுமாகும். சுருக்கமாகச் **சிலுவையில் அறை யப்பட்ட இயேசுகிறிஸ்துவே** பொருத்தமான பலிபீடமும் பொருத்தமான பலியுமாகும் (**I கொரி.** 2:2). மீட்பரும் பலியுமே தேவையானது; வேறெதுவும் **"விளையாட்டில்"** போய்முடியும்; மனந்திரும்பாவிட்டால், முடிவு எரிநரகமே.

பெப்ரவரி

16

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூ வும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக் கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக் கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார் கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியி லிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள் (லேவி. 10:1-2).

"அந்நிய அக்கினி"

நாதாபும் அபியூவும் ஆரோனின் புத்திரர்கள்; இருவரும் இஸ்ர வேலின் தேவனை நேரடியாகத் தரிசித்தவர்கள் (**யாத்.** 24:9-10). இருவரிலும் ஒரு வித்தியாசமும் இல்லை; ஆனால் இருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பெற்று மாண்டுபோனார்கள். இதற்குரிய காரணத்தை ஆராய்ந்து பார்க்கையில், அவர்களின் செய்கையின்மூலம், கல்வாரி சிலுவையை அவர்கள் உதாசீனஞ் செய்தார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

தேவனுடைய கட்டளைப்படி வெண்கலப் பலிபீடத்திலிருந்து அக்கினியைக் கொண்டுவந்து, வாசஸ்தலத்திலுள்ள பொன் தூப பீடத்தில் போடவேண்டும்; இது கல்வாரியைப் பிரதிபலிக்கிறது. தூபவர்க்கத்தைப் பொன் தூபபீடத்திலுள்ள அக்கினியின்மேல் போடும்பொழுது, அதன் புகை, வாசஸ்தலத்தையும் மகா பரிசுத்த

ஸ்தலத்தையும் மூடும்; அது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தவான்களுக்காகச் செய்யும் வேண்டுதலைப் பிரதிபலிக்கிறது.

ஆனால் இங்கு பலிபீடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அக்கினியல்ல, அந்நிய அக்கினியே நாதாபினாலும் அபியூவினாலும் உபயோகிக்கப்பட்டது; அத்தகைய செய்கை தேவனுடைய கட்டளைக்கு விரோதமானது. இருவரும் கொண்டுவந்த அக்கினி பாவநிவிர்த்தியோடு சம்பந்தப்படவில்லை; அதன்மூலம் கல்வாரி சிலுவை உதாசீனஞ்செய்யப்பட்டது; இதனையே காயீனும் செய்தான்; இதனையே சவுல் ராஜாவும் செய்தான்; சர்வசாதாரணமாக இன்று உலகம் முழுவதும் கிறிஸ்தவ சபைகளினால் அந்நிய அக்கினி உபயோகிக்கப்படுகிறது.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவுக்குப் பதிலாக மனுஷகற்பனைகள் தாராளமாகப் பிரசங்கிக்கப்படுகிறது. நாதாபும் அபியூவும்போல அநேகமான கிறிஸ்தவர்கள் ஆவியில் மரித்துப்போயிருப்பதை அறியாதபடிக்கு ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களில் நிறைவேறியிருக்கிறது (**மத்.** 13:14-15); இதனிமித்தமே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"** (**யோவா.** 14:6) எனக் கூறியிருந்தார். தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனை, வேத வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தினாலும், சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையினாலும் மேற்கொள்ளப்படவேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய அக்கினி சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் இரத்தத்தோடு இணைந்திருக்கிறது; இது தவிர்ந்த வேறெந்த அக்கினியும் அந்நிய அக்கினியேயாகும். நாதாபு அபியூ ஆகியோரின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அக்கினி புறப்பட்டு வந்து இருவரையும் பட்சித்தது. இந்தச் சம்பவத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உண்மை என்னவென்றால்,

மனுஷனுக்கும், தேவனுடைய கோபத்திற்கும் மத்தியில் நிற்பது கிறிஸ்துவின் சிலுவையே; கிறிஸ்துவின் சிலுவையை (சத்தியத்தை) ஏற்றுக்கொண்டால், தேவகோபம் தணிகிறது; அதனை நிராகரிப்பவன்மேல் தேவகோபம் வெளிப்படுத்தப்படுகிறது (**ரோம. 1:18**).

நாதாபும் அபியூவும் மதுவைக் குடித்திருந்தார்கள் என அறியக்கூடியதாக இருக்கிறது (**லேவி. 10:9**); அவர்கள் மதிமயங்கி இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்; அப்படியே மது பிரதிபலிக்கும் **பொய்யான உபதேசங்களைத்** தற்போதைய கிறிஸ்தவர்கள் கேட்டு, மதிமயங்கி (**மத். 13:14-15**), சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தவிர்த்து வேறொரு இயேசுவை (**IIகொரி. 11:4**) ஏற்றுக்கொண்டு, எண்ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவர்கள் தேவகோபத்தினால் ஆவியில் மரித்துப்போயிருக்கிறார்கள்; நாம் இதனை சற்றுப் பொறுத்திருந்து தியானிப்போமாக!!

பெப்ரவரி

17

***அ**ந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தன் தாடியை மூடிக்கொண்டு, "தீட்டு, தீட்டு" என்று சத்தமிடவேண்டும். (லேவி. 13:45).*

"தீட்டு தீட்டு"

பழைய ஏற்பாட்டில் குஷ்டரோகி எனப்படுபவன் பாவியாக கருதப்படுவதனால், அவன் தன்னைப் பாவியென மற்ற இஸ்ரவேலியர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்பதற்காக அவன் கிழிந்த வஸ்திரம் தரித்தவனாக இருக்கவேண்டும் எனத் தேவனுடைய பிரமாணம் வலியுறுத்துகிறது; கிழிந்த வஸ்திரம், அவன் தான் தேவனைவிட்டுப் பிரிந்திருப்பதனையும், தன்னுடைய நீதி தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் போதுமான தல்ல என்பதனையும் பிரதிபலிக்கிறது.

அவன் தலையை மூடாமலிருப்பது அவன் தேவகோபத்திற்கு உட்பட்டிருக்கிறான் என்பதனையும், அவனுக்குத் தேவனுடைய பாதுகாப்பு இல்லை என்பதனையும் பிரதிபலிக்கிறது. மேலும், தான் பாவியென்றும், தனக்கும் தேவனுக்குமிடையில் உடன்படிக்கை இல்லாதபடியினால், பகைமையுண்டு என்பதனையும் பிரதிபலிக்கிறது. அவன் மற்ற இஸ்ரவேலியர்களுக்கு 100 அடிக்குக் கிட்டத் தற்செயலாக வந்தால், தன் தாடியை மூடிக்கொண்டு **"தீட்டு, தீட்டு"** என்று சத்தமிடவேண்டும் என்பதும், சத்தமிடா

விட்டால், அவனைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டுமெனவும் கூறப்பட்டிருக்கிறது. அன்றைய நிலைமை இன்றும் நீடிக்கிறது; நீர் இரட்சிக்கப்பட்டீரா? என்று கேட்டால் அநேகமான கிறிஸ்தவர் கள் தாம் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்ததாகவும், கர்த்தரு டைய இராப்போஜனம் தவறாமல் எடுப்பதாகவும், குறிப்பிட்ட ஒரு சபையில் அங்கத்தவனாக இருப்பதாகவும், தான் சபைக்குத் தவறாமல் போவதாகவும், தாம் சபை ஆராதனையில் கலந்து கொள்வதாகவும், வேதாகமத்தைப் படிப்பதாகவும், தன்னுடைய கிறிஸ்தவ அனுபவத்தைச் சாட்சியாகக் கூறுவதாகவும், தவறா மல் ஜெபம்பண்ணுவதாகவும், தானதருமங்களில் ஈடுபடுவதாக வும் என இப்படியாகப் பல்வேறுவிதமாகக் கூறுகிறார்கள். உண் மையில் இவர்கள் யாவரும் தாம் **"தீட்டு, தீட்டு"** என்று சத்தமிடு கிறார்கள்.

பாவியாயிருந்த நான் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை யும், அவர் எனக்காகத் தன்னைப் பலியாகச் சிலுவையில் ஒப்புக் கொடுத்து, தன் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, என் பாவத்தி லிருந்து எனக்கு விடுதலை தந்தார் என நான் விசுவாசிக்கிறேன் என்று ஒரு விசுவாசி பதில் சொல்லாவிட்டால், அவன் முழு உலகத்திற்கும் தன்னைத் **"தீட்டு, தீட்டு"** என அறிமுகப்படுத்து கிறான்; அப்படியே மதச்சார்புள்ள, மதநம்பிக்கையுள்ள உலகத் தாரும் தம்மைத் **"தீட்டு, தீட்டு"** என அடிக்கடி வெளிப்படுத்து கிறார்கள்; மேலும் பழைய ஏற்பாட்டின்படி அவன் தனியே குடி யிருக்கவேண்டுமெனவும், அவன் குடியிருப்பு பாளயத்துக்கு புறம்பே இருக்கவேண்டுமெனவும் தேவனுடைய பிரமாணம் வலி யுறுத்துகிறது. அவன் பாவியானபடியினால் அந்தப் பாவத்தி னால் அரசாளப்படுகிறான்; அந்தப் பாவம் அவனுக்குத் தனி மையை ஏற்படுத்துகிறது. ஜனங்களுக்கு மத்தியில் பாவியிருந் தாலும், அவனுடைய தனிமை கூடுகிறதேதவிரக் குறைவ தில்லை. பாவியாயிருக்கிற மனுஷனுடைய ஆத்துமாவை அவ னுடைய கல்வியோ, பணமோ, அதிகாரமோ சமூக அந்தஸ்தோ,

எதுவும் நிரப்பமுடியாது; ஏனெனில், மனுஷனுடைய ஆத்துமா மிகவும் பெரியது; அதை நிரப்பக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரால்மட்டுமே முடியும்; கிறிஸ்து இல்லாவிட்டால், மனுஷன் தனிமையானவனே. ஆயினும், நிச்சயமாகப் பாவத்துக்குத் தீர்வு உண்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அதற்குத் தீர்வாகும். குஷ்டரோகி ஒருவன் வந்து, அவரைப் பணிந்து, "....**ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்**" என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் நீங்கி சுத்தமானானென (**மத்.** 8:1-2) அறிந்திருக்கிறோம்; குஷ்டரோகியின் பாவத்தை நீக்கி, அவனைச் சுத்தமாக்குவதற்கு கிறிஸ்து ஒருவரால்மட்டுமே முடியும்.

அப்படியே பாவியாயிருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்புக்கொடுக்க, கிறிஸ்து ஒருவரால்மட்டுமே முடியும். ஒருவன் பாவத்திலிருந்து விடுதலைபெற்று, இரட்சிப்பைப் பெறுவதற்கும், பரிசுத்தப்படுவதற்கும், நோயிலிருந்து குணமாக்கப்படுவதற்கும், இருளைவிட்டு, ஒளியின் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவும், நரகத்தைத் தவிர்த்துப் பரலோகத்திற்குள் செல்வதற்கும் கிறிஸ்து ஒருவரே வழி. அவர் சிலுவைக்குச் சென்று அந்த வழியை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார்; அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்குச் செல்லமுடியாது (**யோவா.** 14:6). மனுஷன் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்து என்ற நாமத்தைத்தவிர வேறெந்த நாமமும் கட்டளையிடப்படவுமில்லை (**அப்.** 4:12). அவரே இரட்சகர், வேறெந்த இரட்சகரும் கிடையாது; ஆகையால், அவருடைய அழைப்புக்கு முழுமனிதர்களும் செவிகொடுப்பார்களாக (**மத்.** 11:28-30; **வெளி.** 22:17).

பெப்ரவரி

18

***அ**ந்தக் குற்றநிவாரணபலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசக்கடவன். பின்பு, ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து, தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலதுகையின் விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளித்து, தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும், முந்தப் பூசியிருக்கிற குற்ற நிவாரணபலியினுடைய இரத்தத்தின் மேல் பூசி, தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி. 14:14-18).*

"இரட்சிப்புக்குப் பின்பே பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம்"

பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் இரட்சிக்கப்படும்பொழுது கிடைக்கிறதேதவிர, அது ஒரு வேறுபட்ட அனுபவம் அல்ல என வாதாடும் கிறிஸ்தவர்கள் ஏராளம் (**யோவா.** 14:16). வேதத் திற்குப் பொருத்தமில்லாத வசனங்களை இவர்கள் தமக்கேற்ற மாதிரித் திரித்துத் தேவனுடைய ராஜ்யத்தில் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இடறலை ஏற்படுத்துகிறபடியினால், இவர்களைவிட்டு விலகு என்பதே தேவகட்டளையாக இருக்கிறது (**ரோம.** 16:17). நம்மு டைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு ஏறுவ தற்கு முதல் "**.....அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரி சுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள் விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங் கள் என்று கட்டளையிட்டார்**" (**அப்.** 1:4-5) எனச் சொல்லப்பட்டி ருக்கிறது.

அவர்கள் ஏறத்தாழ 500 பேராக (**Iகொரி.** 15:6) இருந்தார்கள்; இவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள்; ஆனால், இவர் களில் 120 பேர்மட்டுமே பரிசுத்த ஆவியினால் (**அப்.** 1:15, 2:4) நிரப்பப்பட்டார்கள்; மிகுதியான 380 பேரும் எங்கே போயிருந்தார் கள் என்பது நியாயமான கேள்வியே. தற்போதைய வன்முறை யாளர்கள்போன்றே இவர்களும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ் நானம் பெறுவதை நிராகரித்திருக்கலாம் என்று நினைப்பதற்குக் காத்திரமான சான்றுகள் உண்டு; அன்றும் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானத்தை வெறுத்தார்கள் (**ஏசா.** 28:11-12); இன்றும் வெறுக்கிறார்கள் (**Iகொரி.** 14:20-21).

இப்படியிருக்க, பழைய ஏற்பாட்டிலேயே இரட்சிப்புக்குப் பின்பு தான் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் என்பது மாதிரியாக முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "**குஷ்டரோகி**" பாவியான மனுஷனின் மாதிரியையும், "**இரத்தம்**" நமக்காகச்

சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தையும், **"எண்ணெய்"** பரிசுத்த ஆவியையும் பிரதிபலிக்கிறது; அதெப்படியெனில், இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம் நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தின்மூலம் பூசியபின்பே பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் வாசஞ்செய்கிறார் என்பது தெளிவாகிறது. அதன்பின்பே பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக நம்முடைய இருதயத்தில் செயற்படக்கூடிய சாத்தியக்கூறு உண்டு. இதனை மாதிரியாகக் கொண்டு இரத்தம் பூசப்பட்ட பின்பு (இரட்சிக்கப்பட்டபின்பு) அதன்மேல் எண்ணெய் (பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம்) பூசப்படுகிறது; இதன்மூலம், இரட்சிக்கப்பட்ட பின்பே ஒருவன் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறுகிறான் என்பது நிரூபிக்கப்படுகிறது (**அப். 8:14-17**); இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறுவதில்லை (**லூக். 11:13**).

பெப்ரவரி

19

கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக் கடாவைப் பாவநிவாரணபலியாகச் சேரப்பண்ணி, போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக் கடாவை, அதைக் கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்க வும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போக விடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி (லேவி. 16:9-10);

"வெள்ளாட்டுக்கடா"

ஜனங்களுக்கான ஆடு போக்காடா ஆடாகும்; அந்த ஆடு நம் முடைய பாவங்களைச் சுமந்து, நம்மிடத்திலிருந்த பாவத்தை அப்புறப்படுத்தும் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றப்போகிறதைப் பிரதிபலிக்கிறது. வாசஸ்தலத்தின் வாசலில், பிரதான ஆசாரியர் ஜனங்களின் பாவத்தை அறிக்கைபண்ணி, போக்காடா ஆட்டின்மேல் கை வைத்த பின்பு, அது வனாந்தரத்திற்குள் கொண்டுபோய் விடப்படு கிறது; அது பின்பு திரும்பி வருவதில்லை. நம்முடைய இரட்சக ராகிய இயேசுகிறிஸ்து நமது அந்தப் பாவத்துக்கும், பாவச்செயல் களுக்குமாக மரித்து, தம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் அவற் றைக் கழுவி, சுத்தமாக்கினார் (**1யோவா.** 1:7); நாம் அவற்றை ஒருபொழுதும் நினைவுகூராதபடி நம்மைவிட்டு அகற்றினார்.

இஸ்ரவேலியர்கள் போக்காடா ஆடு தம் கண்களுக்கு எட்டாத தூரமாக செல்லும்போது **"என் பாவம் என்னை விட்டு அகன்றது"** எனக் கூறுவார்கள். கிறிஸ்து நம்முடைய பஸ்காமட்டு மல்ல, அவர் நம்முடைய போக்காடா ஆடுமாயிருக்கிறார்.

பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் சென்று, ஜனங்களுக்காகவும், தமக்காகவும் பாவநிவிர்த்தி செய்வான் (**லேவி.** 16:5-17). பிரதான ஆசாரியன் தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறைக்குக் கீழ்ப்படியாவிட்டால், மரித்துப்போவானென ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். இறுதியாகப் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு வெளியால் வரும்பொழுது அவனுடைய வஸ்திரத்தொங்கல்களில் கட்டியிருக்கும் மணிச் சத்தம் கேட்டவுடன் பிரதான ஆசாரியன் ஜனங்களுக்காகவும், தமக்காகவும் மேற்கொண்ட பாவநிவிர்த்தியைத் தேவன் ஏற்றுக் கொண்டார் என்று நிம்மதியடைவார்கள்.

அப்படியே, நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து, நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவைக்குச் சென்று, தன்னைப் பலியாகக் கொடுத்து, நமக்காகப் பாவநிவிர்த்தி செய்த பின், உயிர்த்தெழுந்து, அவர் உன்னதத்திற்கு ஏறி, பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர் நம் சார்பில் தன்னுடைய சொந்தப் பரிசுத்த இரத்தத்தைச் சிலுவையில் சிந்தி, நமக்காகப் பாவநிவிர்த்தி செய்தார். அவருடைய பாவநிவிர்த்தியை முழுமனுஷகுலத்துக்குமாகச் சதாகாலத்திற்கும் தேவன் ஏற்றுக்கொண்டார். இது முழுமனுஷகுலத்திற்குமாகச் செய்யப்பட்டிருந்தும், அவரை விசுவாசிப்பவர்களே இதன் பலாபலன்களைப் பெறமுடியும் (**யோவா.** 3:16; **ரோம.** 10:9).

ஆவலோடு வாசஸ்தலத்தில் பிரதான ஆசாரியரின் வருகையை மணிச்சத்தத்தின்மூலம் கேட்டதுபோல, பெந்தெகொஸ்தே நாளன்று வானத்திலிருந்து சடுதியாக ஒரு சத்தம் உண்டானது. இஸ்ரவேலியர்களுக்குப் பிரதான ஆசாரியரின் வருகை சந்தோஷத்தை உண்டாக்கினதுபோல, நமக்கும் பரிசுத்த

ஆவியானவருடைய வருகை தெய்வீக வல்லமையையும் சந் தோஷத்தையும் கொண்டுவந்தது; அதுமட்டுமல்ல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிரோடு இருக்கிறார் என்றும், அவர் நமக்காகக் கொடுத்த பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது என்றும் நம்முடைய பாவம் நிவிர்த்தி செய்யப் பட்டிருக்கிறது என்றும் அவரின் உயிர்த்தெழுதலின்மூலம் சந்தே கத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆமென்.

பெப்ரவரி

20

***மா**ம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்து மாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்ட ளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய் கிறது இரத்தமே (லேவி. 17:11).*

"ஏன் இரத்தம்?"

மாம்சத்தின் ஜீவன் இரத்தத்திலிருக்கிறது; ஆகையால், **"இரத் தம் ஊற்றப்படும்போது"** என்பதன் பொருள் ஜீவன் கொடுக்கப் பட்டது என்பதனைக் குறிப்பிடுகிறது; அதனையே நமக்காகக் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றினார்.

இரத்தத்தில் எந்தவிதமான மாயவித்தையும் இல்லை; இரத் தம் ஊற்றப்படும்போது வியக்கத்தக்க விளைவுகளை உடையதா யில்லை; அதற்குப் பதிலாகக் கிறிஸ்துவின் ஜீவன் கொடுக்கப் பட்டது; அது மனுஷகுலத்தின் பாவத்தை நிவிர்த்தி செய்தது; அதேநேரம் அவருடைய ஜீவன், இரத்தம் ஊற்றப்படுவதன் மூலமே கொடுக்கப்பட்டது.

ஆயினும், பரிபூரணமான ஜீவனே கொடுக்கப்படவேண்டும் என்பது நிபந்தனையாயிருந்தது; ஆனபடியினால், அவருடைய சரீரமும் எல்லாவிதத்திலும் பரிபூரணமாயிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இந்தக் கார ணத்திற்காகவே அவருக்கு மரணம் சம்பவிப்பதற்கேதுவாகக்

கல்லினால் எறியப்பட்டுக் கொல்லப்படவில்லை; வேறெந்த வழி யினாலும் அவர் கொல்லப்படாமல் சிலுவையே அவருடைய மரணத்துக்குப் பொருத்தமானதாகக் கருதப்பட்டது.

அவர் சிலுவையிலிருக்கும்பொழுது, தன்னுடைய சரீரத்தி லிருந்த பலவிதமான காயங்களிலிருந்து அவருடைய ஜீவன் (இரத்தம்) ஊற்றப்பட்டது; ஊற்றப்பட்ட ஜீவன் (இரத்தம்) விசுவா சிக்கிறவனின் பாவங்கள் எல்லாவற்றையும் நிவிர்த்தி செய்தது **(யோவா. 3:16)**; இரத்தம் ஊற்றப்படாமல் பாவமன்னிப்பு இல்லை **(எபி. 9:22)**.

நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் உண்மை என்ன வென்றால், அந்த இரத்தம் கிறிஸ்துவினுடையதாக இருக்க வேண்டும்; வேறெதனுடையதும் அல்ல. அவருடைய இரத்தம் ஒன்றே போதுமானது. அந்த இரத்தம் ஏதேன் தோட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் களங்கப்படவில்லை. இந்தக் காரணத் திற்காகவே இயேசு கன்னியின் வயிற்றில் பிறக்கவேண்டியதா யிற்று. அவர் வழமைபோல பிறந்திருந்தால், வீழ்ச்சியின் பிரதி பலனைச் சுமக்கவேண்டும். அவரும் மற்ற மனுஷரைப்போலப் பாவத்தோடு பிறந்திருப்பார். கன்னி மரியாளுடைய வயிற்றில் பிறந்ததன்மூலம் வழமையான உடலுறவின்மூலம் அவர் உரு வாக்கப்படவில்லை; ஆனபடியினால், அவர் ஜென்மசுபாவத்துடன் பிறக்கவில்லை; அவர் ஆவியினாலேயே உருவாக்கப்பட்டார் **(மத். 1:20)**.

பெப்ரவரி

21

***ஒ**ருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் படைத்தால், அது முறைகேடு; இவ்வித முறைகேடு உங்களுக்குள் இராதபடிக்கு, அவனையும் அவர்களை யும் அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும். ஒருவன் மிரு கத்தோடே புணர்ந்தால், அவன் கொலைசெய்யப்படக் கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள். ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனித் தால், அந்த ஸ்திரீயையும் அந்த மிருகத்தையும் கொல் லக்கடவாய்; இருஜீவனும் கொலைசெய்யப்படவேண் டும்; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேல் இருப் பதாக (லேவி. 20:14-16).*

"இரத்தப்பழி"

தேவன் எதற்காகக் கொடூரமான இந்தக் கட்டளையை மனு ஷனுக்குக் கொடுத்தார் எனப் பலர் பிரமிப்பதுண்டு. மனுஷ குலத்தைக் காப்பாற்றவேண்டுமானால், இவ்வாறான கட்டளை தவிர்க்கமுடியாதது என்பதனை நாம் ஏற்றேயாகவேண்டும். ஒரு வனுக்குப் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டால் வைத்தியர்கள் உடம் பில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பகுதியை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றிவிடுகிறார்கள்; அகற்றாவிட்டால், அந்த மனுஷ னிலுள்ள புற்றுநோய் உடம்பின் சகல பகுதிகளுக்குள்ளும்

உட்சென்று சீக்கிரத்தில் அவனுடைய சரீரத்தில் மரணத்தை ஏற் படுத்தும்.

அவ்வாறே ஆதாமிலிருந்து கொள்ளைநோயாக மனிதனுக்குள் உட்சென்ற அந்த ஜென்மசுபாவம் புற்றுநோயாக சகல மனித ரையும் கெடுத்து, நரகத்துக்குள் சீக்கிரமாய் இழுத்துச்செல்லுமான படியினால், மனுஷகுலத்தைக் காப்பாற்றுவதற்காகத் தேவன் கடுமையான கட்டளைகளை உபயோகிக்கவேண்டியது தவிர்க்க முடியாததே. இவ்வாறான கட்டளைகள் நமக்குத் தெட்டத்தெளி வாக மனுஷனிலுள்ள சீரழிவைப் புடமிட்டுக் காட்டுகின்றன; என்ன அந்தச் சீரழிவு? அதெப்படியெனில், மனிதனில் சிறு தவறு கள்தான் உண்டு என்று பலர் நினைப்பார்கள். அப்படியல்ல, மனிதன் முற்றுமுழுவதும் தவறாகவே இருக்கிறான். மனிதன் சில வேளைகளில் சற்றுத் தவறான வழிகளை நாடுவதுண்டு எனப் பலர் கூறுவார்கள். அப்படியல்ல, மனுஷனுடைய முழு வழிகளும் தவறானதே. மனிதன் அந்தப் பாவத்தினால் சற்றுக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறான் எனப் பலர் கூறுவதுண்டு; அப்படி யல்ல, மனிதன் அந்தப் பாவத்தினால் ஒரு நாளில் 24 மணித்தி யாலமும், ஒரு கிழமையில் ஏழு நாட்களும் முற்றுமுழுவது மாக ஆளப்படுகிறான். அந்தப் பாவம் (பாவசுபாவம்) சொற்ப காலத்திற்கு அல்லது சொற்ப தூரத்திற்கு மனிதனை இழுத்துச் சென்றபின், அது பிற்பாடு செயற்படுவதில்லை எனப் பலர் தப்பாக நினைக்கிறார்கள். அப்படியல்ல, உண்மையில் பாதாளம் செல்லும்வரையும் அந்தப் பாவம் ஓயாது; நாளுக்குநாள் பலப் பட்டு, மிருகத்தைவிட மோசமான, இழிவான, அவலமான செயல்களைச் செய்யத்தூண்டும்.

கோடிக்கணக்கான மதுபானப்பிரியர்கள் தாம் குடிகாரர்களாக வருவோமென நினைத்து ஆரம்பத்தில் மதுபானத்தைக் குடிக்க வில்லை. அப்படியே போதைவஸ்துக்கும் வேசித்தனத்திற்கும் அடிமையானோர் இருக்கிறார்கள்; அப்படியே சூதாட்டக்காரரும் இருக்கிறார்கள். அந்தப் பாவம் அவர்களை நினைத்துப் பார்க்க

முடியாத தூரத்திற்கு இழுத்துச்செல்லும். அவர்கள் அந்தப் பாவத்துக்கு அடிமைகளாகச் செயற்படுகிறார்கள். ஆரம்பத்தில் அந்தப் பாவத்தின் உந்துதலும், அது இழுத்துச்செல்லும் மாம்சத்தின் கிரியைகளும் பார்வைக்கு இலகுவானதும் மனதுக்குச் சந்தோஷமானதாகவும் இருக்கும். சொற்ப காலத்திற்குப் பின்பு, சுற்றிவருகிற ராட்டினத்திற்குள் அகப்பட்டதுபோன்று, அதிலிருந்து வரமுயற்சி செய்தாலும், வரமுடியாமல் மீண்டும் மீண்டும் மாம்சத்தின் கிரியைகளின் பொறிக்குள் நிரந்தரமாக அகப்பட்டு, தத்தளிக்க வேண்டிவரும்; வரமுயற்சி செய்தாலும் வெளியே வர முடியாது. மனுஷனுடைய சுயபலத்தைவிட அந்தப் பாவத்தினுடைய வல்லமை மிகவும் அதிகமானபடியால், மனுஷனுடைய சுயபலத்தினால் அதிலிருந்து வெளியே வரமுடியாது; இதனையே **எபிரெயர்** 11:25ல் **"அநித்தியமான பாவ சந்தோஷங்களை**....." எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார். சொற்பகாலத்திற்கே மாம்சத்தின் கிரியைகள் (**கலா.** 5:18-21) பாவசந்தோஷங்களாயிருக்கின்றன. அதற்குப்பின் மனிதர்களுக்கு ஆரம்பத்தில் சந்தோஷமாயிருந்த பாவங்கள், அதுவே சீக்கிரத்தில் அவலமாக மாறுகின்றது; இறுதியில் அவைகளே அவனை மரணத்துக்குள் இழுத்துச்செல்லுகின்றன (**ரோம.** 6:23).

ஆகையால் அந்தப் பயங்கரமான, அழிவை ஏற்படுத்துகிற பூதாகரமான பாவத்துக்கு அந்த விசுவாசத்தின்மூலம் மனுஷன் மரித்து, கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருப்பதொன்றே (**கலா.** 2:20; **ரோம.** 6:3-5, 11) தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரே வழியாகும்; வேறேந்த வழியும் தேவனால் ஏற்படுத்தப்படவில்லை. அந்த ஒரே வழி சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே (**Iகொரி.** 2:2).

பெப்ரவரி

22

***ஒ**ருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக் கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும், அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அறுப்புண்டு போகக்கடவர்; அவன் தன் சகோ தரியை நிர்வாணப்படுத்தினான்; அவன் தன் அக்கிர மத்தைச் சுமப்பான். ஒருவன் சூதகஸ்திரீயோடே சய னித்து, அவளை நிர்வாணமாக்கினால், அவன் அவளு டைய உதிர ஊற்றைத் திறந்து, அவளும் தன் உதிர ஊற்றை வெளிப்படுத்தினபடியால், இருவரும் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும் (லேவி. 20:17-18).*

"ஒழுக்கப் பிரமாணங்களை மீறுதல்"

மனுஷகுலத்தின் அக்கிரமங்கள், அநீதிகள் யாவும் இஸ்ர வேலிய புத்திரர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வ தற்கு முன்பு, கானான் தேசத்தில் வசித்த புறஜாதியினரின் மாம் சத்தின் கிரியைகளாக இவைகள் இருந்தன; கானான் தேசத்தில் புறஜாதிகளான கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும்,

கானானியரும், கிர்சாசியரும், எபூசியரும் வசித்து வந்தனர்; இவர்கள் தேவனிடத்திற்குத் திரும்புவதற்குச் சந்தர்ப்பங்கள் இருந்தும், அவர்கள் தேவனிடத்தில் திரும்பவில்லை (**ரோம.** 1:19-21); ஆயினும், தேவன் 400 வருஷகாலமாக இவர்களுக்காக, இவர்களுடைய அக்கிரமம் நிறைவேறும் காலம்வரைக்கும் பொறுத்திருந்தார் என வேதம் வலியுறுத்துகிறது (**ஆதி.** 15:16). ஆதாமிலிருந்து தொற்று நோயாக மனுஷகுலத்தை ஆண்டு கொண்டிருக்கும் ஆதாமின் பாவம், எந்தளவு தூரத்திற்கு மனுஷ குலத்தை இழுத்துச்செல்லும் என்பதனை மேற்கூறிய வேதவாக் கியங்கள் தெட்டத்தெளிவாக நமக்கு உணர்த்துகின்றன.

பல கிறிஸ்தவர்கள் பாவச்செயல்களைச் சுட்டிக்காட்டும் உப தேசங்களை அவ்வளவாய் ரசிப்பதில்லை; ஆனால், பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த அறிவுரை சகல போதகர்களுக்கும் சேர்த்தே என்ப தனை நாம் ஏற்றேயாகவேண்டும் (**Iதீமோ.** 5:20; **IIதீமோ.** 4:2). பரிசுத்த ஆவியானவரே வலியுறுத்திக் கூறியிருக்க, அநேகமான போதகர்கள் அவர் சுட்டிக்காட்டும் வழியைவிட்டு விலகி, தாம் கொடுக்கும் செய்திகளில் பல்வேறுவிதமான விட்டுக்கொடுப்புக் களை மனுஷகற்பனைகளின்மூலம் உட்புகுத்தி, அதை வேறொரு சுவிசேஷமாகப் பிரகடனப்படுத்துகிறார்கள் (**IIகொரி.** 11:4). கிறிஸ்தவர்களின் பாவச்செயல்களைச் சுட்டிக்காட்டாமல், அவர் கள் விடுதலை பெறுகிற வழியைப் போதகர்கள் அறிவிக்க விரும்புகிறார்கள்.

அந்தப் பாவத்தினால் உந்தப்பட்டு, தேவனுக்கெதிராகச் செய் யும் பாவச்செயல்கள் என்ன என்பதனை அறியாவிட்டால், ஒரு வன் தான் பாவத்திலிருந்து விடுதலை அடையவேண்டுமென்ற எண்ணம் அவனில் மழுங்கடிக்கப்பட்டிருக்கும் (**மத்.** 13:13-15); எது சரி எது பிழை என்பது வேதவாக்கியத்தின் ஆதாரத்துடன் சுட்டிக் காட்டப்படவேண்டும் (**ரோம.** 4:3; **கலா.** 4:30). வெறுமனே சாதக மான செய்திகளைமட்டுமே உபதேசிக்கவேண்டும் என்பதல்ல,

பாதகமான செய்திகளையும் நாம் பிரசங்கிக்கவேண்டும். பொய்யான உபதேசங்களையும் அவற்றை உபதேசிப்பவர்களையும் சுட்டிக்காட்டுவது அநேகமான கிறிஸ்தவர்களுக்குத் தாங்கமுடியாததொன்றாயிருக்கிறது; ஏனென்றால், அவர்களே அந்தப் பொய்யான உபதேசத்தை விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. வேதவாக்கியத்தின் ஒளியினால் பாவச்செயல்கள் சுட்டிக்காட்டப்படுவதனால், அவர்கள் அதை எதிர்க்கிறார்கள்; எந்தக் காலமும் அந்தகாரம் வெளிச்சத்தை எதிர்க்கிறது. அந்த காரத்தில் நடப்பவர்கள் வெளிச்சத்தை முற்றுமுழுவதும் வெறுக்கிறார்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (**யோவா.** 3:19-21) எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

சத்தியம் பொய்யை வெளிப்படுத்தும்; அதுவே பரிசுத்த ஆவியானவருடைய வழி. பல போதகர்கள் பாதகமான பகுதியைப் போதிப்பதனால் ஏற்படும் எதிர்ப்பைச் சந்திக்க விரும்புவதில்லை; ஏசாயாவோ (**ஏசா.** 56:10-12); எரேமியாவோ (**எரேமி.** 38:1-6); எசேக்கியேலோ (**எசேக்.** 3:17-21); பவுல் அப்போஸ்தலரோ (II**தீமோ.** 2:16-18); பேதுருவோ (II**பேது. அதி:**2); அப்படிச் செய்யவில்லை; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் மிகவும் கடுமையாகப் பொய்யான உபதேசத்தை எதிர்த்தாரே (**மத். அதி:**23). இவர்கள் இஸ்ரவேலிய மதத்தலைவர்களின் மோசமான எதிர்ப்பைச் சந்தித்தார்களே. சகல பொய்யான வழிகளும், உபதேசங்களும் கிறிஸ்துவின் சிலுவையைவிட்டு விசுவாசத்தை அகற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் என்பதனை நாம் புரிந்து கொள்வோமாயின், சாத்தானின் தந்திரங்களுக்குள்ளும் (II**கொரி.** 2:11) ஆழங்களுக்குள்ளும் (**வெளி** 2:24) சிக்குண்டு வேதனைப்பட வேண்டியதில்லை.

பெப்ரவரி

23

உன் மதிப்பின்படி செலுத்தக்கூடாத தரித்திரனாயி ருந்தால், அவன் ஆசாரியனுக்கு முன்பாக வந்து நிற்கக் கடவன்; ஆசாரியன் அவனை மதிப்பானாக; பொருத்த னைபண்ணினவனுடைய திராணிக்கேற்றபடி ஆசாரி யன் அவனை மதிக்கக்கடவன். ஒருவன் பொருத்த னைபண்ணினது கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக. (லேவி. 27:8-9).

"விசேஷித்த பொருத்தனை"

லேவியராகமம் முற்றுமுழுவதாகத் தொழுகையைப்பற்றியே குறிப்பிடுகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இஸ்ரவேலின் நிலப்பரப்பு தேவனுடையதாகும்; அது இமானுவேலின் நில மாகும். இயேசுகிறிஸ்துவே உண்மையான பிரதான ஆசாரியர். வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இஸ்ரவேலியர்கள் நியமித்த விலை முப்பது வெள்ளிக்காசு; ஆனால், இஸ்ரவேலியர்களுக்கு அவர் நியமித்த விலை அவருடைய மகா பரிசுத்தமான விலையேறப்பெற்ற இரத்தம். **லேவியராகமம்** 27:1-13ல் ஒருவன் தேவனுக்குப் பொருத்தனை செய்ய விரும்பினால், அவன் எப்படி அந்தப்

பொருத்தனையின் பிரமாணங்களை நிறைவேற்றவேண்டும் என் பதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சகல பொருத்தனைகளும் தன்னிச்சையானதும் மனமுவந்து மேற்கொள்ளப்படுவதுமேயா கும். அநேகமான பொருத்தனைகள் வருத்தம், ஆபத்து, துன்பம், அபாயம் அல்லது மனக்கிலேசம் ஏற்படும்பொழுது அல்லது தேவ னிடத்தில் இருந்துபெற்ற ஆசீர்வாதத்திற்கு நன்றிக்கடனாகவோ அல்லது தேவனுக்கு பிரியமானதைப் பெற்றுக்கொள்வதற்காகவே மேற்கொள்ளப்படுகிறது. ஒருவன் தன்னையோ தன் மனைவி யையோ பிள்ளைகளையோ வேலைக்காரர்களையோ தேவனுக்கு அர்ப்பணம் செய்யலாம். ஒருவன் பிரத்தியேகமான பொருத் தனை செய்திருந்தால் நியாயப்பிரமாணத்தின்படி, வயதுக்கேற்ற படி இனத்துக்கேற்றபடி வரிகட்டவேண்டுமெனக் கூறப்பட்டிருக் கிறது; அந்த வரிப்பணம் ஆசாரியர்களுக்கு உரியதே.

தேவன் ஒருவரையும் கட்டாயமாகப் பொருத்தனை செய்ய வேண்டுமெனக் கேட்பதில்லை; ஆனால், ஒருவன் பொருத்தனை செய்வானாகில் அவன் அதைச் செலுத்தியேயாகவேண்டும் (**எண்.** 30:2). **சங்கீதம்** 15:4ல் கர்த்தருக்குப் பயந்தவன் ஆணை யிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும், தவறாதிருக்கிறான் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஒருபொழுதும் ஒருவன் தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் பெறுவதற்காகத் தேவனோடு பொருத்தனை செய்யாமல், விசுவாசத்தில் உறுதியாயிருப்பதே அவன் செய்ய வேண்டியது. விசுவாசம் ஒன்றே தேவனிடத்திலிருந்து பதிலைப் பெறுவதற்குத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியாகும். உதார ணமாக யெப்தா என்பவன் கர்த்தரோடு மேற்கொண்ட பொருத் தனையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (**நியாயா.** 11:30-31).

அவன் யுத்தத்தில் வெற்றியடைந்து திரும்பிவரும்போது, அவனுடைய ஒரே மகள் அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள் (**நியாயா.** 11:34). யெப்தா தான் செய்த பொருத்தனையை நினைத்து வேதனையடைந்தான் (**நியாயா.** 11:35); ஆனாலும், உண்மை நிலைமையைத் தேவனுக்குக்கூறித் தான் செய்த

தவறைத் தேவனுக்கு வாயினால் அறிக்கையிட்டுத் தேவனிடம் மன்னிப்புக்கேட்டு, பாவநிவாரணப்பலியைச் செலுத்தி, பலிக்குரிய மீட்பரையும் அவர் சிலுவையில் (பலிபீடத்தில்) செய்யப்போகிற தையும் விசுவாசித்திருப்பானானால், தேவன் அவனை மன்னித் திருப்பார்; ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை.

தேவன் நம்மை விசுவாசிக்குமாறு கேட்கிறாரேதவிரப் பொருத்தனை செய்யும்படி கேட்கவில்லை. யெப்தா தேவனிடத் திலிருந்து பதிலைப்பெற்று யுத்தத்திற்குச் செல்வானாகில் தேவன் நிச்சயமாக வெற்றியைக் கொடுப்பார்; அவன் பொருத் தனை பண்ணவேண்டிய அவசியமில்லை. ஆனபடியால், நாம் தேவனோடு பொருத்தனை செய்து அதைச் செய்துமுடிக்க திராணியில்லாமற்போனால் தேவனிடத்தில் மனம்வருந்தி நாம் செய்த தவறுக்கு (அது எவ்வளவு பாரதூரமானதாயிருந்தாலும்) மன்னிப்புக்கேட்போமாயின், தேவன் அதை மன்னிக்க வல்லவரா யிருக்கிறார் (**1யோவா. 1:9**) என்பதனை நிச்சயமாக அறிந்துகொள் வோமாக; ஆனால், பொருத்தனை செலுத்த வல்லமையிருப்பின் நிச்சயமாகச் செலுத்தியே தீரவேண்டும். ஆகவே, தேவனோடு பொருத்தனை செய்யாமல், அவர் நமக்குத் தந்த மகா பரிசுத்த விசுவாசத்தில் (**1கொரி. 2:2**) உறுதியாயிருப்பதே நாம் ஜெயங் கொள்வதற்குவேண்டிய தேவனுடைய வழிமுறையாகும்.

பெப்ரவரி

24

ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டு வந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது (எண். 11:8).

"கிறிஸ்துவின் சோதனையும் வேதனையும்"

மன்னா கிறிஸ்துவின் மாதிரியைப் பிரதிபலிக்கிறது; மன்னா ஜனங்களால் பொறுக்கப்பட்டது, ஏந்திரங்களில் அரைக்கப்பட்டது, உரல்களில் இடிக்கப்பட்டது, பானைகளில் சமைக்கப்பட்டது; அப்பங்களாகச் சுடப்பட்டது. கிறிஸ்துவின் மாதிரியைப் பிரதிபலிக்கிற (**யோவா. 6:58**) மன்னாவை ஜனங்கள் உபயோகித்த முறை, அவருடைய வாழ்க்கையிலும், சிலுவையிலும் அவர் பட்டபாடுகளையும், வேதனைகளையும் பிரதிபலிக்கிறது.

நாம் சிலவேளைகளில் கிறிஸ்து சோதனைக்கு அகப்பட வில்லையென்று தவறாக விமர்சனஞ் செய்வதுண்டு; உண்மையில் நாம் ஒருபொழுதும் அனுபவித்திராத சோதனையையே அவர் அனுபவித்தார். சாத்தான், அவரை நாம் கற்பனையிலும் கண்டிராத சோதனைக்குட்படுத்தினான் (**எபி. 4:15**) என்பது தெளிவாகிறது; இன்னும் சிலர் அவரை வேறுவிதமாக எடைபோடுகிறார்கள்; அதெப்படியென்றால், ஆம், அவர் சோதனைக்கு உட்பட்டிருக்கலாம்; ஆனால், அவர் சோதனைக்குப் பலியாக

முடியாது; ஏனென்றால், அவர்களுடைய சிந்தனையின்படி அவர் தேவனாயிருக்கிறாரே; தேவன் பாவஞ்செய்யமுடியாது என்கிறார்கள். ஆம், இயேசு தேவனே; அவர் மனுஷகுமாரனாக வரும் பொழுது, அவர் தேவனாயிருப்பது நிறுத்தப்படவில்லை; உண்மையில் அவர் மனுஷனாகும்பொழுது தான் தேவன் என்ற உணர்வை ஒதுக்கிவைத்திருந்தாரேதவிர, தேவன் என்ற உடமையை அவர் ஒருபொழுதும் இழக்கவில்லை. ஆம், இந்த மாதிரியாக அவர் மனுஷ உருவத்திலிருக்கும்பொழுது, தவறக் கூடிய சந்தர்ப்பங்கள் நிச்சயமாக உண்டு; அப்படியில்லையாயின் சாத்தானின் சோதனை ஒரு கேலிக்கூத்தாக அல்லவா அமையும்; அதுமட்டுமல்ல, பிந்தின ஆதாமாக அவர் இருக்கிற படியினால், முந்தின ஆதாம் போன்று தவறக்கூடிய சந்தர்ப்பங்கள் நிச்சயமாக அவருக்கு இருந்தது அல்லது இருந்திருக்க வேண்டும்; அப்படி இல்லையாயிருந்தால், அவரால் அந்த மாதிரியின் பங்களிப்பு நிறைவேற்றப்படவில்லை (**1கொரி. 15:45-50**).

பெப்ரவரி

25

***அ**ர்னோன் ஆற்றங்கரையில் இருக்கிற ஆரோ வேரும் ஆற்றண்டையில் இருக்கிற பட்டணமும் தொடங்கி, கீலேயாத்வரைக்கும் நமக்கு எதிர்த்துநிற் கத்தக்க அரணிப்பான பட்டணம் இருந்ததில்லை, எல்லாவற்றையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார் (உபா. 2:36).*

"நமக்கு எதிர்த்துநிற்கத்தக்க அரணிப்பான பட்டணம் இருந்ததில்லை"

புதிய உடன்படிக்கையின்படி இந்தச் சத்துருக்கள் எல்லாரை யும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முற்றுமுழுவது மாகச் சிலுவையில் தோற்கடித்திருக்கிறார் (**கொலோ.** 2:14-15). அப்படியே தேவனால் நியமிக்கப்பட்ட வழியைப் பின்பற்றினால், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் தலைதூக்கும் ஒவ்வொரு சத்துருக்களையும் தோற்கடிக்கமுடியும். அந்த **"வழி"** கர்த்தரா கிய இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றி யதிலும் நம்முடைய விசுவாசத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்து தலேயாகும் (**லூக்.** 9:23; **ரோம.** 6:3-5). அதெப்படியெனில், நம் முடைய **ஒருமித்த நோக்கு**: இயேசுகிறிஸ்துவிலும் (**யோவா.** 14:6), நம்முடைய **விசுவாசத்தின் குறிக்கோள்**: எப்பொழுதும் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து சிலுவையில்

நிறைவேற்றியதன் எல்லைக்குள்ளேயே செயற்படுகிறபடியினால் (**ரோம**. 8:2) அவர் வல்லமையாக நமக்குள் சட்டபூர்வமாக அசைவாடி, நமக்குத் தேவையான உதவியைத் தந்தருளுவார்; இதுவே ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறையாகும் (**லூக்**. 9:23; **ரோம**. 6:3-14, 8:1-2, 11; I**கொரி**. 1:17-18, 21, 23, 2:2; **எபேசி**. 2:13-18; **கொலோ**. 2:14-15).

பெப்ரவரி

26

உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்துகையில், நீ உன் இருதயத்திலே: என் நீதியினிமித்தம் இந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி கர்த்தர் என்னை அழைத்துவந்தார் என்று சொல்லாயாக; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமே கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார் (உபா. 9:4).

"தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்பொழுது"

சுயநீதியே மனிதனுடைய அழிவுக்கு முக்கிய காரணமாயிருக்கிறது. நாம் இப்பூவுலகத்திற்குப் பாவிகளாகவும், ஆவியில் மரித்தவர்களாகவும், தேவ நீதியற்றவர்களாகவும், பிரமாணங்களைக் கைக்கொள்கிறவர்களாகவும், சாத்தானுடைய பிள்ளைகளாகவும், அவனைச் சேவிப்பவர்களாகவும் (**யோவா. 8:44**), இருயத்தில் விருத்தசேதனமற்றவர்களாகவும், கிறிஸ்துவைச் சேராதவர்களாகவும், இஸ்ரவேலியரின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களாகவும், இவ்வுலகத்தில் ஜீவனுள்ள தேவனை அறியாதவர்களாகவும் இருந்தோம் (**எபேசி. 2:11-12**).

முன்னே தூரமாயிருந்த நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தினால் சமீபமானோமேதவிர (**எபேசி. 2:13**) நம்முடைய எந்தத் தராதரத்தினாலுமல்ல என்பதனை நாம்

தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் (**எபேசி.** 2:8-9). இஸ்ரவேலியர்களைத் தேவன், அவர்களிடம் ஒரு நீதியும் கிடையாது என்றும், அவர்கள் கலகக்காரர், வணங்காக் கழுத்துள்ளவர்கள் என்றும் விபரமாக அவர்களுடைய மீறுதல்களை **உபாகமம்** 9ம் **அதிகாரத்தில்** மோசேமூலம் வெளிப்படுத்தியிருந்தார். அப்படியே, பவுல் அப்போஸ்தலரும் கொரிந்தியரை நோக்கி **Iகொரிந்தியர்** 6:9-11ல் குறிப்பிட்டிருக்கிறார். இதன்மூலம் நாம் அறிந்து கொள்ளவேண்டியது என்னவெனில், நம்முடைய விசுவாசக் கப்பல் பலம் பொருந்திய தீயசக்திகளாகிய மாம்சம், உலகம், பிசாசு போன்றவைகளின் தாக்குதலினால் சீரழிந்து, சின்னாபின்னமாகக்கூடிய சந்தர்ப்பம் நிச்சயமாக உண்டு.

நம்முடைய சுயபலத்தால் ஒருபொழுதும் இந்த அந்தகார சக்திகளை வெல்லமுடியாது. நாள்தோறும் அநேகமான கிறிஸ்தவர்கள் தம்முடைய சுயபலத்தினால் பல்வேறு வழிகளையும் யுக்திகளையும் கையாண்டு, அந்தகார சக்திகளுக்கெதிராக யுத்தஞ்செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காகத் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, இந்த யுத்தங்கள் யாவற்றையும் சிலுவையில் வெற்றிகரமாகச் செய்து, பாரிய வெற்றியை நம் சார்பில் ஈட்டியுள்ளார் (**கொலோ.** 2:14-15) என்பதனை அறிந்து, அதனை இருதயத்தில் உணர்ந்து, அதனை விசுவாசித்து (**Iகொரி.** 2:2) அந்த விசுவாசத்தில் நிலைத்திருந்து, கிறிஸ்துவுக்குள் நம்மைப் பலப்படுத்திக்கொள்வதொன்றே அந்தகார சக்திகளைத் தோற்கடிக்கத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியாகும் (**ரோம.** 8:2); ஆனால், துரதிஷ்டவசமாக அநேகமான கிறிஸ்தவர்கள் சத்தியத்தை அறியாதவர்களாகவும், அதனை அறிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் விருப்பமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்; ஆனபடியால், அவர்களுக்கு விடுதலை கானல் நீராயிருக்கிறது. அவர்கள் தம்மை சீரழிந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுத்து, வஞ்சகத்தினால் ஏமாற்றப்பட்டு, தம்மைக் கெடுத்துக்கொள்கிறார்கள்.

பெப்ரவரி

27

***நீ** சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போது, கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறக்கடவாய் (உபா. 11:29).*

"இரு மலைகள்"

தேவனுடைய வார்த்தை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலில் அமைந்திருந்த இரு மலைகளைப்போல் இருக்கின்றது. அவை யாவன: **"ஏபால்" "கெரிசீம்"** மலைகளாகும். **ஏபால் மலையில்** பாவநிவிர்த்தி செய்வதற்காகப் பலிபீடம் இருந்தபடியினால் **(உபா. 27:4-6)** சாப மலை என்றும், **கெரிசீம் மலையில்** உடன் படிக்கைப் பெட்டி இருந்தபடியினால் **(யோசு. 8:33)** ஆசீர்வாத மலை என்றும் அழைக்கப்படுகிறது; அதுமட்டுமல்ல, ஏபால் மலை வரட்சியும் கரடுமுரடான மலை என்றும், கெரிசீம் மலை செழிப்பும் கரடுமுரடு இல்லாத மலை என்றும் சொல்லப்படு கிறது.

அப்படியே சில கிறிஸ்தவ சபைகள் ஆசீர்வாத சபைகளாக வும், சில சபைகள் முற்றுமுழுவதும் சாபச் சபைகளாகவும் இருப் பதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது; இரண்டுமே தவறாயிருக் கிறது. இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதையும் விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத் திருந்து முழுப்பலத்துடன் தேவ உத்தரவுக்குக் கீழ்ப்படிபவனுக்கே

தேவனுடைய வார்த்தை நிகரற்ற ஆசீர்வாதமாக இருக்கிறது; ஆனபடியால், ஒரு கிறிஸ்தவ சபை ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமாயின், அந்தச் சபை ஆசீர்வாதத்தையும், நியாயத்தீர்ப்பையும் படம்பிடித்துக்காட்டவேண்டும். அநேகமான கிறிஸ்தவர்கள் தாம் கிருபையின் காலத்தில் இருக்கிறபடியினால், நியாயத்தீர்ப்புத் தமக்குத் தடைசெய்யப்பட்டு இருக்கிறது என்று நிஜமாகவே நம்புகிறார்கள். அப்படியல்ல, தேவன் கிருபையும், இரக்கமும் உள்ளவராயிருக்கிறார்; ஆயினும், ஒருவன் அவருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளாமல், அவருடைய வார்த்தையைத் தொடர்ந்து மீறுவானாயின், இறுதியில் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தே தீருவான்; ஏனெனில், இரண்டும் அருகருகே உள்ளது (**உபா. 30:19; யோவா. 10:10**); இது விசுவாசிக்குச் சிட்சிப்பாகவும், அவிசுவாசிக்குக் கண்டிப்பாகவும் (சாபமாகவும்) வரும்.

மறுபடியும் நான் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், மனுஷனுக்கும் நித்திய நரகத்திற்கும் இடையில் இருப்பது கிறிஸ்துவின் சிலுவையே. தேவன் பாவத்தை முற்றுமுழுவதும் எதிர்க்கிறார்; ஆனால், கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே பாவத்துக்குத் தீர்வு சாத்தியமாகிறது. அவர் நம்மிடத்தில் அதிகமாக எதனையும் கேட்கவில்லை. அவர் நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். கர்த்தர் நற்கிரியைகளின் அடிப்படையிலும், தராதரத்தின் அடிப்படையிலும் செயற்படுவதில்லை; அப்படி அவர் செயற்பட்டால் நாம் நம்பிக்கையற்றுக் காணாமற் போய்விடுவோம்; அதற்குக் காரணம் தேவனுக்கு நாம் செலுத்தவேண்டிய நம்முடைய பாவத்தின் கடன்கள் சமாளிக்கமுடியாத அளவு பாரிய தொகையாயிருக்கிறபடியினால், சிலுவையைத்தவிர வேறெந்த வழியினாலும் அதனை நிவிர்த்தி செய்யமுடியாது. தேசத்தில் கர்த்தருடைய அறிவு எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அந்தத் தேசத்தின் அறிவும், ஆசீர்வாதமும் அதிகமாயிருக்கும்.

பெப்ரவரி

28

கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலி களை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு (உபா. 12:13).

"எச்சரிக்கையாயிரு"

உபாகமத்தில் மூன்று இடங்களில் எச்சரிக்கையாயிரு என்று கூறப்பட்டிருக்கிறது. இவை பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டி ருக்கிறபடியினால் அவைகளை நாம் கவனிக்கவேண்டியதில்லை எனப் பல கிறிஸ்தவர்கள் நிஜமாகவே நம்புகிறார்கள். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் நிழல்கள் எனவும் (**கொலோ. 2:16-17; எபி. 10:1**), புதிய ஏற்பாடு நிஜம் எனவும் நாம் அறிந்திருக்கிறோம். உண்மையில் புதிய ஏற்பாடு, பழைய ஏற் பாட்டுக்குள் மறைந்திருக்கிறதையும், பழைய ஏற்பாடு, புதிய ஏற் பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனைப் புரிந்து கொண்டால்மட்டுமே, பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம் புரி யும். அது எப்படி என்பதனை மேற்கூறிய வேதவாக்கியங்களி லிருந்து அறிந்துகொள்ளமுடியும்.

முதலாவதாக: **"கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு"** எனவும் தெரிந்துகொள்ளும் இடத்தில் மாத்திரம் சர்வாங்க தகனபலி யிட்டு, நான் உனக்குக் கற்பிக்கிற யாவையும் அங்கே செய்வா யாக என **உபாகமம் 12:13-14**ல் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருப்பது கல்வாரியின் மாதிரியைப்

பிரதிபலிக்கிறது. மனுஷகுலத்திற்கு கல்வாரி சிலுவைமூலமே இரட்சிப்பின் வழி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. வேறெந்த வழி யும் தேவனால் பிரகடனப்படுத்தப்படவில்லை (**யோவா. 14:6; அப். 4:12**).

இரண்டாவதாக: "**நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு**" என **உபாகமம் 12:19**ல் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறாகப் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் லேவியனின் மாதிரியானது, புதிய ஏற்பாட்டில் தேவனால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகரையும், மேய்ப்பரையும், போத கரையும் பிரதிபலிக்கிறது (**எபேசி. 4:12-13**) என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

மூன்றாவதாக: "**.....நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள் ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த படி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக்குறித்துக் கேட்டு விசாரியாதபடிக்கும் எச்சரிக் கையாயிரு**" என **உபாகமம் 12:30**ல் இஸ்ரவேலியர்கள் பழைய ஏற்பாட்டில் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே எச்சரிக்கையைப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர்மூலம் புதிய ஏற் பாட்டில் (**IIகொரி. 6:14-18**) கொடுத்திருக்கிறார்.

இப்படியாகப் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் அநேக எச்சரிக்கைகள் புதிய ஏற்பாட்டுக்குள் தேவன் உட்புகுத்தியிருப் பதை அறிந்து, அதன் தாற்பரியத்தை அறியும் அறிவில் வளர் வதே கிருபையும் சமாதானமும் நமக்குப் பெருகுவதற்குத் தேவ னால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வழிமுறையாகும் (**IIபேது. 1:2**).

பெப்ரவரி

29

உன் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் உன் சர்வாங்க தகனபலிகளை மாம்சத்தோடும் இரத்தத்தோடும்கூடப் பலியிடக்கடவாய்; நீ செலுத்தும் மற்றப் பலிகளின் இரத்தமும் உன் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் ஊற்றப்படக்கடவது; மாம்சத்தையோ நீ புசிக்கலாம் (உபா. 12:27).

"இரத்தம்"

இந்த வேதவாக்கியத்தில் இரத்தம் ஏன் புனிதமானது என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பலிபீடம் சிலுவையைப் பிரதிபலிக்கிறது. தேவனுடைய குமாரனால் ஊற்றப்பட்ட இரத்தம், அவருடைய ஜீவனைப் பிரதிபலிக்கிறது. அவர் மனுஷகுல மீட்பிற்காகத் தன்னையே பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். ஜென்மசுபாவம் இரத்தத்தின் மூலம் பிறப்பினூடாக மனுஷனுக்குள் உட்செல்கிறது; இரத்தத்தில் உயிர் இருக்கிறது; ஆனபடியினால், முழு மனுஷகுலமும் களங்கப்படுத்தப்பட்டு, அந்தப் பாவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பரிகாரம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்திலேயே உண்டு; அவருடைய இரத்தம் பரிபூரணமானது; ஏனென்றால், இயற்கையான சந்தான விருத்தியின் மூலம் இயேசுகிறிஸ்து பிறக்கவில்லை; அவர் பரிசுத்த ஆவியின் கட்டளைப்படி, கன்னி மரியாளின் கர்ப்பத்தில் உற்பத்தியானார் (**மத்.** 1:20). அவர் பரிபூரணமான,

கறைப்படுத்தப்படாத, மாசற்ற, பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார்; ஆனபடியினால்த்தான், அவர் சிலுவைக்குப் பரிபூரண மான பலியாகத் தன்னை ஒப்புக்கொடுக்க முடிந்தது. அவரி லிருந்து சிந்தப்பட்ட இரத்தம், விசுவாசியினுடைய கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள் சகலத்தையும் நிவிர்த்தி செய் கிறது (**1யோவா. 1:7**).

கிரேக்க மொழியில் மீட்பிற்கு மூன்று அர்த்தம் உண்டு;

(1) **அக்ராசோ: (Agorazo)** சாத்தானின் அடிமைச் சந்தையி லிருந்து வாங்கப்பட்டேன்;

(2) **எக்ஸ்ராசோ: (Exagorazo)** இனி ஒருபொழுதும் அடிமைச் சந்தையில் விற்கப்படுவதில்லை;

(3) **லுட்று: (Lutroo)** இது அவர் கொடுத்த விலை போதாது என பரலோகத்திலும் பூலோகத்திலும் பாதாளத்திலும் ஒருவராலும் சொல்லமுடியாது; ஏனெனில், அது குற்றமற்ற, மாசற்ற விலை யேறப்பெற்ற (**1பேது. 1:19**), ஒருபொழுதும் மாறாத (**மல்கி. 3:6; எபி. 13:8**) இரத்தம்.

மார்ச்

1

***உ**ங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி: நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிற வைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்* (உபா. 13:1-3).

"நீங்கள் அறியாத வேறே தேவர்கள்"

நாம் தீர்க்கதரிசனங்களை எப்படிச் சோதித்து அறியவேண்டும் என்றால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் உண்மையாக நிறைவேற்றப்படுவதுமட்டுமல்ல, அவைகள் வேதவாக்கியங்களோடு இசைந்திருக்கவும்வேண்டும் (**ரோம**. 4:3; **கலா**. 4:30); இதுவே விசுவாசியின் இறுதியானதும் பூரணமான சோதனையுமாகும். வேத

வாக்கியத்திற்கு எதிரான எந்தத் தீர்க்கதரிசனமும் எப்பொழுதும் பொய்யே; ஏனெனில், தேவன் வேதவாக்கியத்திற்கு முரணாக ஒருபொழுதும் ஒன்றையும் செய்யமாட்டார். பொதுவாகத் தீர்க்க தரிசனங்கள் வெளிப்படுத்துவதற்குரிய ஆதாரங்களை (Sources) மூன்று வகைப்படுத்தலாம்;

அவையாவன:

1. தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுக் கூறும் தீர்க்கதரிசனங்கள் (**அப்.** 3:21; I**தீமோ.** 3:15-17; II**பேது.** 1:21).

2. சாத்தானாலும் அவனுடைய அசுத்த ஆவிகளினாலும் ஏவப்பட்டுக்கூறும் தீர்க்கதரிசனங்கள் (**ஆதி.** 3:4-5; I**சாமு.** 28:6-25).

3. மனுஷ ஆவியினால் ஏவப்பட்டுக்கூறும் தீர்க்கதரிசனங்கள் (**எசேக்.** 13:1-23; I**கொரி.** 14:29-33).

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்கும், தேவனுடைய தீர்க்க தரிசிகளுக்கும் பயப்படவேண்டியதேதவிர (**லூக்.** 24:25; II**நாளா.** 20:20) பொய்யான தீர்க்கதரிசிகளுக்கல்ல; அவர்களின் கனிகளி னாலே அவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளா அல்லது சாத்தா னுடைய தீர்க்கதரிசிகளா என்பதனை இலகுவாக அறிந்துகொள்ள முடியும் (**மத்.** 7:16-20).

மார்ச்

2

***நீ** உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல் லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவ னாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தை யும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவரு டைய சந்நிதியில் புசிப்பாயாக (உபா. 14:22-23).*

"தசமபாகம்"

வருமானத்தின் பத்தில் ஒரு பகுதியே தசமபாகம் எனப்படும். தசமபாகத்தினுடைய அஸ்திபாரம் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்படவில்லை. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு நானூறு வருஷங்களுக்கு முன்பு ஆபிரகாமுக்கு இதுபற்றிய வெளிப்பாடு கொடுக்கப்பட்டது; கிறிஸ்துவின் மாதிரியாயிருந்த மெல்கிசேதேக்குக்கே ஆபிரகாம் தசமபாகத்தை முதல்முதலில் கொடுத்தான் (**ஆதி.** 14:19-20). விசுவாசமார்க்கத்தினர் எல்லாரும் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருக்கிறார்கள் (**கலா.** 3:7); இதன் பொருள், இந்த நிமிஷத்திலும் தசமபாகம் தொடர்கிறது. கிறிஸ்துவின் மாதிரியைப் பிரதிபலிக்கிற மெல்கிசேதேக்குக்கு

ஆபிரகாம் தசமபாகத்தைக் கொடுத்தான்; தசமபாகம் புதிய உடன் படிக்கையிலும் தொடர்கிறது; தேவனுடைய ஊழியத்திற்கு நாம் தசமபாகத்தைச் செலுத்தினால், நாம் கிறிஸ்துவுக்கே தசமபாகம் செலுத்துகிறோம்.

ஆனால், ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது; சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்து வைப் பிரசங்கியாத (**பிலி.** 4:17-19) எந்தக் கிறிஸ்தவ சபைகளுக் கும் அல்லது எந்த ஒரு ஊழியக்காரருக்கும் தசமபாகம் கொடுப் பது சாபத்திலேயே போய்முடியும் (**மல்கி.** 3:8-9) என்பதனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, சாத்தானுடைய ஊழியத்திற்கு (வேறொரு இயேசுவுக்கு [II**கொரி.** 11:4]) தசமபாகத்தைச் செலுத்தி, தங்களைக் கெடுத்தவண்ணமாயிருக்கிறார்கள்; கர்த்தர் இவர்களுடைய கண் களைக் திறந்தருளுவாராக.

மார்ச்

3

கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல் வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்திலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம் *(உபா. 18:21-22).*

"கர்த்தர் சொல்லாத வார்த்தைக்கு நீ பயப்படவேண்டாம்"

அநேகமான கிறிஸ்தவ சபைகளில் பொய்யான தீர்க்கதரி சனம் சர்வசாதாரணமாகத் தற்பொழுது உலாவிவருகிறது. தேவன் தனக்குக் கூறினார் எனவும் தேவன் தன்னிடம் சொப் பனத்தினால் பேசினார் எனவும் கூறித் தன் சகோதரர்களை அநேகர் ஏமாற்றுகிறார்கள். இவர்கள் தாம் வஞ்சிக்கப்பட்டது மட்டுமல்ல, மற்றவர்களையும் வஞ்சித்துச் சாத்தானின் நாசகாரத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள்; இவ்வாறான பொய்யான தீர்க்கதரிசனத்துக்கு அநேகர் இரையாகி, தம்மைக் கெடுத்துக் கொண்டனர் எனச் சொல்லுவதே பொருத்தமாயிருக்கிறது. ஆதாம் ஏவாள் காலத்தில் ஏற்பட்ட அதே வஞ்சனை வெவ் வேறு கோணத்தில் சாத்தானால் சமர்ப்பிக்கப்படுகிறது. கர்த்தர்

சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன்? என்ற கேள்வி, கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாரும் நிதானமாய் செயற்படவேண்டும் என்ற உண்மையை நமக்கு அம்பலப்படுத்து கிறது.

எல்லாக் கிறிஸ்தவ சபைகளும் தேவனுடைய ஏவுதலினால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்பதனையும், எல்லா ஊழியக்காரரும் தேவனுடைய ஊழியக்காரரல்ல என்பதனையும் முதற்கண் நாம் அறிந்திருக்கவேண்டும். தேவனால் அழைக்கப்படாத பலர் கிறிஸ்தவ சபைகளை நடத்துகின்றனர்; அப்படியானால் இவர்கள் யார்? அநேகர் சாத்தானுடைய ஊழியக்காரர்; இவர்கள் சாத்தானுக்கு ஊழியஞ்செய்கிறார்கள். இவர்களுடைய சபைகளில் வெளிப்படுத்தப்படும் தீர்க்கதரிசனங்கள் ஒன்றில் மாம்சத்தினால் அல்லது அசுத்த ஆவிகளின் ஏவுதலினால் சொல்லப்படுபவை களேயன்றித் தேவனால் ஏவப்பட்டுச் சொல்லப்படுபவைகள் அல்ல (**மத்.** 7:22); ஆனால், ஆண்டவரோ இவர்களை நோக்கி: "..... **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்**" (**மத்.** 7:23) என்கிறார். தேவனால் ஏவப்பட்டுக் கூறப்பட்ட தீர்க்கதரிசனமானால் அது நிச்சயமாக நிறைவேறும் (**உபா.** 18:22); ஆனால், அதுவும் முற்றுமுழுவதுமாகச் சரியென்ற ஒரு நிலைப்பாட்டுக்கு நாம் அவசரமாய் வரக்கூடாது (**உபா.** 13:1-3).

இன்றும் அப்படியே சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசியாத ஏராளமான கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனங்களையும், சொப்பனங்களையும் கூறுகிறார்கள். இவர்கள் சொல்வது நடந்தாலும், இவர்களுடைய தீர்க்கதரிசனங்களையும் சொப்பனங்களையும் கேளாதிருப்பீர்களாக என்று இன்றும் தேவன் எச்சரித்த வண்ணமாயிருக்கிறார் (**மாற்.** 8:15). அப்படியானால், நாம் எது உண்மை, எது பொய் என்று எப்படி அறிவது என்ற கேள்வி நியாயமானதே; இதற்குத் தீர்வு என்னவென்றால், ஒரு கள்ளத்

தீர்க்கதரிசி கூறும் தீர்க்கதரிசனமோ சொப்பனமோ அநேகமாக நிறைவேறாது; ஒருவேளை அது நிறைவேறினாலும் தேவனுடைய வார்த்தைக்கு இசைவாயிருக்கிறதா என்பதனை உறுதிப்படுத்தியபின்பே நாம் முடிவுக்கு வரவேண்டும். தேவனுடைய வார்த்தையோடு இசைவாயிருந்து கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறியிருந்தால், அந்தத் தீர்க்கதரிசனம் உண்மையானது இல்லையேல் அது பொய்யான தீர்க்கதரிசனம்; வேதவார்த்தைக்கு எதிரான எதுவும் பொய்யே.

அடுத்ததாக, சாத்தான் வேதவசனத்தைத் திரித்து, அதனுடைய உண்மைப் பொருளைக் களங்கப்படுத்துவதுண்டு; அவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கே வேதவசனத்தைத் திரித்துக் கூறுவானாகில், நமக்கு இன்னும் அதிகமாகச் செய்வான் (**மத்.** 4:6). வேதவசனத்தைத் திரித்து, ஒளியின் தூதனாக வந்து, தேவனுடைய பிள்ளைகளை வஞ்சிப்பான் (**IIகொரி.** 11:14-15) என்பதனை நாம் நிச்சயமாக அறிந்திருப்போமாக.

இப்படியிருக்க, உண்மையில் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இருந்தால் தேவன் அதை ஒருபொழுதும் நிராகரிக்கமாட்டார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (**மத்.** 7:15) என ஆண்டவர் கூறியிருக்கும் எச்சரிக்கையை நாம் நினைவு கூர வேண்டியவர்களாயிருக்கிறோம்; இல்லையேல் நாம் நம்முடைய ஆத்துமாவையே இழக்கவேண்டிவரும்.

மார்ச்

4

***நீ** உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங் களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களை யும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக; உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவ னாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் (உபா. 20:1).*

"நீ யுத்தஞ்செய்யும்போது தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"

இஸ்ரவேலியர்கள் யுத்தத்திற்குப் போகிற காரணம் சரியாக வும், நீதியாகவும் இருந்தால், கர்த்தராகிய ஆண்டவர் தான் அவர் களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இஸ்ர வேல் தேசத்திற்கு இந்த வாக்குத்தத்தம் கொடுத்திருந்தாலும், அந்த வாக்குத்தத்தம் தற்போதைய விசுவாசிகளுக்கும் உண்டு. அவர்கள் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடவேண்டியது தவிர்க்க முடியாததாயிருக்கிறபடியினால், அவர்களுடனும் கர்த்தர் இருப் பார் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

ஆவிக்குரிய யுத்தத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஈடுபட வேண்டும்; அது அவன்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது (**எபேசி.** 6:12). இந்த யுத்தத்தை வெற்றிகரமாகச் செய்வதாயிருந்தால், தேவ னால் நியமிக்கப்பட்ட வழியின்படியே நாம் யுத்தஞ்செய்ய வேண்டும்; அந்த வழி தேவனிடத்திலிருந்து பெறுகிற எல்லா

வற்றிற்கும் கிறிஸ்துவே ஆதாரமாக இருக்கிறார் என்றும், சிலுவை மூலமாகவே அது நமக்குக் கிடைக்கிறது என்றும் நாம் அறிந்திருக்கவேண்டும்.

அப்படியாயின் நம்முடைய ஒருமித்த நோக்கு: இயேசு கிறிஸ்துவிலும், நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள்: எப் பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையிலும் இருக்கவேண்டும். கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய எல்லையின் அடிப்படை யிலேயே பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயற்படுகிறபடி யினால், நாம் அதனை நிறைவேற்றும்பொழுது, பரிசுத்த ஆவி யானவர் நம்மில் வல்லமையாகச் செயற்பட்டு, வெற்றிபெற உதவிசெய்வார். இந்த வழியாகத்தான் வெற்றியைப் பெறமுடி யும்; இந்த வழியாகத்தான் அதனைப் பராமரிக்கவும் முடியும் (**ரோம.** 6:3-14, 8:1-2, 11, **எபேசி.** 2:13-18, **கொலோ.** 2:14-15; **கலா. அதி**:5, 6:14).

மார்ச்

5

***கொ**லைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத் திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலை செய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இர விலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந் நாளிலேதானே அதை அடக்கம்பண்ணவேண்டும்; தூக் கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந் தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தா யாக (உபா. 21:22-23).*

"ஏன் அந்தச் சிலுவை?"

இந்தக் காரணத்தின் நிமித்தமே இஸ்ரவேலிய மதத்தலைவர் கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர் (**மத்.** 27:23). மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் தேவனால் சபிக்கப்பட்டவன் என்பதனை அவர்கள் அறி வார்கள்; ஆனபடியினால், அவர் மேசியாவாக இருந்தால் தேவன் அவரை மரத்தில் தூக்கிப்போடவிடமாட்டார் என ஜனங்கள் நினைப்பார்கள் என்று அவர்கள் தமக்குள் நியாயப்படுத்திக்கொண் டனர்; ஆனால், இந்த விதமாகவே அவர் மரத்தில் தூக்கிப்போடப் படுவார் என்பதனை சிலுவை நிஜமாகிறதற்கு 1500 வருஷங் களுக்கு முன்பு மோசேக்கு ஆண்டவர், வெண்கலச் சர்ப்பத்தைக்

கம்பத்தில் (சிலுவையில்) நாட்டி நடைபெறப்போவதைப்பற்றி உணர்த்தியதை அவர்கள் மறந்துபோனார்கள் (**எண்.** 21:8-9).

இயேசு சிலுவைக்குப் போகவேண்டியது அவசியமானது; ஏனென்றால், மனுஷகுலத்தின் சகல பாவத்தையும் நிவிர்த்தி செய்வதற்கு அவர் சிலுவைக்குப் போகவேண்டும்; ஆயினும் அதனை விசுவாசிப்பவனே பாவத்திலிருந்து விடுதலை அடைவான் (**யோவா.** 3:16). ஆகையால், இயேசு தன்னுடைய பாவத்திற்காக (அவர் ஒரு பாவமும் செய்யவில்லை), சிலுவையில் சாபமாக்கப்படவில்லை; முழுமனுஷகுலத்தின் பாவத்திற்காகவே சிலுவையில் சாபமாக்கப்பட்டார் (**யோவா.** 1:29; **கலா.** 3:13). இயேசு பாவத்தின் விலையைச் சிலுவையில் செலுத்தியவுடன், ஒவ்வொரு பாவமும் அது எவ்வளவு மோசமான பாவமாயிருந்தாலும், நிவிர்த்திசெய்யப்பட்டது என்பதனையும், அந்த விலைக்குள் சகல பாவங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும்; அவர் தன்னுடைய இரத்தத்தினால் சகல பாவங்களையும் நிவிர்த்தி செய்திருக்கிறார் (**1யோவா.** 1:7).

பழைய ஏற்பாட்டில் ஒரு இஸ்ரவேலியன் சாவுக்குப் பாத்திரமான பாவத்தைச் செய்தால், முதலில் அவன் கல்லினால் எறிந்து கொல்லப்பட்டபின், அவனுடைய பிரேதம் சூரியன் அஸ்தமிக்கும் வரையும் பலமணி நேரம் அவன் சபிக்கப்பட்டவன் என்பதனைக் காண்பிப்பதற்காக மரத்தில் தொங்கவிடப்படும். முழு இரவுக்கும் மரத்தில் தொங்கவிடாமல் சூரிய அஸ்தமனத்துக்கு முன்பு மரத்திலிருந்த அவனுடைய பிரேதத்தை இறக்கி, அடக்கம் செய்யப்படும். உண்மையில் இங்கு சொல்லப்பட்ட மாதிரி இயேசு சிலுவையில் மரிக்கவேண்டும்; ஆயினும், அவர் தேவனால் சபிக்கப்படவில்லை; அவர் நமக்காகச் சாபமாக்கப்பட்டார்; சபிக்கப்பட்டார் என்பதற்கும் சாபமாக்கப்பட்டார் என்பதற்கும் இடையில் பாரிய வித்தியாசமுண்டு; ஒருவன் தன் பாவத்தினிமித்தம் தேவனால் சபிக்கப்படலாம்; ஆனால், ஒருபொழுதும்

இயேசு பாவஞ்செய்யவில்லை; ஆனபடியினால்த்தான் தேவனால் அவரைச் சபிக்கமுடியவில்லை; ஆனால், நமக்காக அவரைச் சாபமாக்கமுடிந்தது (**கலா.** 3:13). இது உறுதிப்படுத்தும் உண்மை என்னவென்றால், அவர் நம்முடைய பாவத்தின் தண்டனையைச் சிலுவையில் சுமந்தார் (**யோவா.** 1:29); அந்தத் தண்டனை மரணமேயாகும்.

மார்ச்

6

உன் திராட்சத்தோட்டத்திலே பற்பலவிதமான விதையை விதைக்காயாக; இப்படிச் செய்தால் நீ விதைத்தவைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய். மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாயாக (உபா. 22:9-11).

"தீட்டுப்படுத்தாதே"

மூன்று கட்டளைகள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; இவற்றில் பாரிய ஆவிக்குரிய பொருள் புதைந்திருக்கிறதை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்; பற்பலவிதமான விதை என்பது பொய்யான உபதேசத்தையும்; மாடும் கழுதையும் என்பது கலப்படமான சேவையையும்; ஆட்டுமயிரும் பஞ்சு நூலும் என்பது கலப்படமான நடத்தையையும் குறிப்பிடுகிறது. பொய்யான உபதேசம் மலட்டுத்தன்மையை உருவாக்கும்; தேவன் சிருஷ்டிக்கும்பொழுது எல்லாவற்றையும் நேர்த்தியாகவே சிருஷ்டித்தார். ஜாதிஜாதியாக சிருஷ்டித்தாரே தவிரக் கலப்படமாகச் சிருஷ்டிக்கவில்லை; அவருடைய சிருஷ்டியில் கலப்பில்லை, அவைகள் செழிப்புள்ளனவைகளாகவே இருந்தன; அது நல்லது என்று தேவன் கண்டார் (**ஆதி.** 1:24-25).

அப்படியே தேவஊழியக்காரரும் கலப்படமற்ற உபதேசங் களைப் போதிக்கவேண்டும் (**தீத்து 2:8; IIகொரி. 2:17**); தேவனு டைய வார்த்தையைப் போதிக்கவேண்டுமேதவிர மனுஷ கற்ப னைகளையும், மனுஷ பாரம்பரியங்களையும், மனுஷ பிரமா ணங்களையும், தேவனுடைய வார்த்தையோடு இணைத்து உபதே சித்தால் உலகம் இரட்சிக்கப்படப்போவதில்லை; கிறிஸ்தவர்கள் பரிசுத்தப்படப்போவதில்லை; எதிர்மாறான விளைவுகளையே சந்திக்கவேண்டிவரும் (**மாற். 7:7-9**).

நான் உம்முடைய வார்த்தைகளை அவர்களுக்குக் கொடுத் தேன் (**யோவா. 17:14**) என ஆண்டவர் கூறியிருக்கிறார். தேவ னுடைய வார்த்தைகளோடு மனுஷன் தன்னுடைய கற்பனை களையும் பிரமாணங்களையும் சேர்த்து உபதேசிப்பானாகில், அவன் தேவனுடைய வார்த்தையைப் புளிக்கப்பண்ணுகிறான். இவ்வாறான உபதேசத்தைக் கேட்பவர்களும் புளித்துப்போவார் கள்; கேட்பவர்களிடத்தில் ஆவிக்குரிய செழுமை ஏற்படாமல் ஆவிக்குரிய மலட்டுத்தன்மையே ஏற்படும் (**மாற். 8:15**).

இதனிமித்தமே அநேகமான கிறிஸ்தவர்கள் கனிகொடாமல் இருக்கிறார்கள். மாடு சுத்தமான மிருகம்; கழுதை அசுத்தமான மிருகம்; சுத்தமானதையும் அசுத்தமானதையும் இணைத்தால் அந்நிய நுகம் உருவாகிறது; இதனிமித்தமே, **IIகொரிந்தியர் 6:14-18**ல் பவுல் அப்போஸ்தலர் "**அந்நிய நுகத்திலே அவிசுவாசி களுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக....**" எனக் கூறியிருக் கிறார். மாடும் கழுதையும் ஒரே நுகத்தில் இணைவது தேவ னுடைய பிள்ளைகளும் பிசாசினுடைய பிள்ளைகளும் ஒன்றாக இணைவதையே குறிப்பிடுகிறது. அநேகமான கிறிஸ்தவர்கள் உலகத்தோடு இணைந்திருக்க விரும்புகிறார்கள் (**IIயோவா. 2:15**); அவிசுவாசிகளுடன் இணைந்திருக்க விரும்புகிறார்கள். இவ்வா றான இணைப்பு ஒருபொழுதும் தேவனுடைய அனுமதியைப் பெறாது என்பதனைப் பல கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தும், அவர்கள் உலக ஆவியினால் பிடிபட்டு சிக்குண்டு உலகத்தை

விட்டு, வெளியே வரவிருப்பமில்லாது இருக்கிறார்கள்; இவர்கள் வீணாய்த் தேவனுக்கு ஆராதனை செய்கிறார்கள்.

பிரபலமான ஊழியக்காரர் இரட்சிக்கப்படாத மனுஷரை ஊழியத்திற்குப் பாவிக்கிறார்கள்; அநேகமான கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படாத மனுஷருடன் சம்பந்தம் கலக்கிறார்கள்; பல போதகர்கள் இரட்சிக்கப்படாத மனுஷரை விவாகம்பண்ணி, அவர்களையும் இரட்சிப்புக்குள் கொண்டுவருமாறு ஆலோசனையும் கூறுகிறார்கள்!!! இவர்கள் சாத்தானுடைய ஆலோசனைக்காரர்களே தவிரத் தேவனுடைய ஊழியக்காரர் அல்ல; வேதத்திற்கு ஒவ்வாத ஆலோசனை கூறுபவர்கள், தேவனுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; இவர்களுடைய ஆலோசனைகளைக்கேட்டுத் தங்களைக் கெடுத்துக்கொண்ட கிறிஸ்தவர்கள் ஏராளம் (I**இராஜா.** 11:1-8).

அநேகமான கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளுடன் இணைந்து, வியாபாரம் செய்கின்றனர்; இவர்கள் அந்நிய நுகத்தில் தம்மை இணைத்துக்கொள்கிறார்கள். இவர்களுடைய வியாபாரம் ஒரு பொழுதும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படப்போவதில்லை (II**நாளா.** 20:35-37); நாசமும் மோசமும் நிர்ப்பந்தமும் இவர்களைப் பின்தொடரும். வேதத்தில் ஆடைகள் நம்முடைய நடத்தையைக் குறிப்பிடுகிறது; வெண்மையான பஞ்சுநூலினால் ஏற்படுத்தப்பட்ட ஆடை கிறிஸ்துவின் பரிபூரணத்தைக் குறிக்கிறது. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் இணைந்த ஆடை கிறிஸ்துவின் நீதியை அவமதிக்கிறது. மனுஷநீதியாகிய சுயநீதியோடு அப்பழுக்கற்ற தேவநீதியாகிய கிறிஸ்துவின் நீதியை நாம் இணைப்போமாகில் நாம் இரட்சிக்கப்படவில்லை அல்லது கிறிஸ்துவின் மகா நீதியை நாம் அவமதிக்கிறோம்; இது தேவனுடைய கோபத்தைச் சம்பாதிக்கவே உதவும் என்பதனைக் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக அறிவார்களாக (**ரோம.** 1:18).

மார்ச்

7

***எ**கிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அம லேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின் வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு. உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக்கொள்ள உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக் களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக் கடவாய்; இதை மறக்கவேண்டாம் (உபா. 25:17-19).*

"அமலேக்கின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்"

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டு வனாந்தரத் தின் வழியாக வரும்போது, ரெவிதீமிலே பாளயமிறங்கினார்கள்; ஆனால், அவர்களுக்கு அங்கு குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்த தென **யாத்திராகமம்** 17:1ல் நாம் காண்கிறோம். வனாந்தரத்தில் எவனுக்கும் கேள்விகள் உண்டாகும்; நாம் என்ன செய்கிறோம்? நாம் எங்கு போகிறோம்? நாம் எப்படிப் போவோம்? என்னத்தை உண்போம்? என்பதனைத் தம்முடைய முறுமுறுப்பின்மூலம்

இஸ்ரவேலியர்கள் தேவனுக்குத் தெரியப்படுத்தினார்கள். இவை எல்லாவற்றிற்கும் பதில் **"தேவன் ஒருவரே"** என்பதனைத் தெளிவாக இஸ்ரவேலியர்களுக்குத் தேவன் வெளிப்படுத்தியிருந்தார். அவர்கள் விடாய்த்திருக்கும்போது தேவன் தான் செய்யப்போகும் தம்முடைய மகத்துவமான இரட்சிப்பின் பாதையை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக அவர்களுக்குத் தண்ணீரைக் கொடுத்தார். தண்ணீர் பரிசுத்த ஆவியைப் பிரதிபலிக்கிறது. இஸ்ரவேலியர்கள் பரிசுத்த ஆவியின் அடையாளமாகிய தண்ணீரைப் பெற்றவுடன், அதனை அவர்கள் அனுபவிக்கவிடாமல் அமலேக்கியர் இஸ்ரவேலியருக்கு எதிராக யுத்தம் செய்தனர் (**யாத்.** 17:8). இதே இடறல் இன்றும் கிறிஸ்தவர்களெனச் சொல்லப்படுபவர்களால் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவர்களைப் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறவிடாமல் சாத்தானுடைய ஊழியக்காரர் தம்மால் இயன்றவரை வேதத்தைப் புரட்டி, விசுவாசத்தைப் பலவீனமாக்கி, பலவீனமடைந்த கிறிஸ்தவர்களைப் பரிசுத்த ஆவியினால் நிரம்பவிடாமல் தடுக்கிறார்கள்; இந்தப் பொறிக்குள் அகப்பட்டுத் தடுக்கப்பட்டோர் ஏராளம்.

இப்படியிருக்க, தண்ணீர் கிடைக்காமல் இஸ்ரவேலியர்கள் விடாய்த்திருக்கையில் அமலேக்கியர் இஸ்ரவேலியர்களின் பாளயத்தில் இருந்த பலவீனர்களையெல்லாம் வெட்டினார்களெனக் காண்கிறோம்; இதனுடைய ஆவிக்குரிய கருத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாதது. இந்த அமலேக்கியர் ஏசாவின் பேரப்பிள்ளைகள் (**ஆதி.** 36:12); ஏசா யாக்கோபின் சகோதரன்; அப்படியாயின் அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரர்களின் இனத்தவர்கள்; ஒரே மாம்சமானவர்கள். ஏசா தேவனை ஏற்றுக்கொள்ளவில்லை; யாக்கோபு தேவனை ஏற்றுக் கொண்டான் என அறிந்திருக்கிறோம்; அப்படியாயின் இஸ்ரவேல் புத்திரர்கள் ஆவிக்குரியவர்கள்; ஏசாவின் புத்திரர்கள் மாம்சத்திற்குரியவர்கள். இந்த ஆவிக்குரிய புத்திரர்களுக்கும், மாம்சத்திற்

குரிய ஏசாவின் புத்திரர்களுக்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டது. எக்காலத்திலும் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் செயற்படும் என்பதனை நாம் அறிந்திருக்கிறோம் (**கலா.** 5:17). அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவுடனேயே ஆவிக்குரிய யுத்தம் உடனடியாகப் பரந்தளவில் ஏற்படும் என்பதனையும் சாத்தான் உடனடியாகவே சோதனைகளை ஆரம்பிப்பான் என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும். மாம்சத்தைப் பிரதிபலிக்கும் அமலேக்கியர் முற்றுமுழுவதுமாகக் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இருதயத்திலிருந்து அகற்றப்படவேண்டும், இல்லையேல் ஆவிக்குரிய பலன்கள் எதையுமே நாம் பெறமுடியாது. **"நீ அமலேக்கியரின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்; இதை மறக்கவேண்டாம்"** (**உபா.** 25:19) என்ற தேவனுடைய கட்டளையை மோசே இஸ்ரவேலியருக்குக் கொடுத்திருந்தான்; இதனை இவர்கள் செய்யாவிட்டால் அவர்களை இளைப்பாற அமலேக்கியர்கள் ஒருபொழுதும் விடமாட்டார்கள்.

அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாமும் நம்முடைய மாம்சத்தின் சகல முயற்சிகளையும் வெறுக்காவிட்டால், **"கிறிஸ்துவுக்குள்"** இளைப்பாறமுடியாது (**மத்.** 11:28-30). மாம்சம் எந்தக் காலத்திலும் கிரியைகளையும் பிரமாணங்களையும் சுயநீதியையும் விரும்புமேதவிரத் தேவனை ஒருபொழுதும் விசுவாசிக்கமாட்டாது; அப்படியில்லை நாமும் தேவனை விசுவாசிக்கிறோமென மாம்சத்தில் செயற்படுகிறவர்கள் கூறுவார்களாயின் அவர்களுடைய விசுவாசம் தேவனுக்கேற்ற விசுவாசமில்லை (I**கொரி.** 2:2); இதனிமித்தம், அவர்கள் வேறொரு இயேசுவை விசுவாசிக்கிறார்கள் (II**கொரி.** 11:4). மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் எனப் பரிசுத்த ஆவியானவர், பவுல் அப்போஸ்தலர் மூலம் கூறியிருக்கிறார் (**ரோம.** 8:5-8).

இப்படியிருக்க, அமலேக்கியர் எனப்படும் மாம்சத்தையும், அதன் செயற்பாட்டையும் எவ்வாறு அப்புறப்படுத்தமுடியும் எனக் கிறிஸ்தவர்கள், சிந்திக்கிறார்கள்; இது மிகவும் இலகுவானது. இதுபற்றி **கலாத்தியர்** 5:24ல் **"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்"** எனக் கூறப்பட்டிருக்கிறது; ஆகையால், நாம் தொடர்ந்து இயேசுகிறிஸ்துவையும் அவர் சிலுவையில் செய்துமுடித்தவைகளையும் முற்றுமுழுவதுமாக விசுவாசித்து (**1கொரி.** 2:2), நாம் அந்த விசுவாசத்தில் மரணபரியந்தம் நிலைத்திருக்கவேண்டியதே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது (**யோவா.** 15:5-6). அப்படியாக, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்போமாகில், நாம் **"கிறிஸ்துவுக்குள்"** இருக்கிறோம் (**ரோம.** 6:3-5, 11); நாம் கிறிஸ்துவுக்குள் இருப்போமாகில் பரிசுத்த ஆவியானவர் நம்மில் வல்லமையாகச் செயற்பட்டு, மாம்சத்தின் கிரியைகள் யாவற்றையும் நம்மூலமாக நம்மிலிருந்து விலக்கி, ஆவியின் செயற்பாட்டை உறுதிப்படுத்துவார் (**ரோம.** 8:2); அவர் ஒருவரே இதனைச் செய்ய வல்லவராயிருக்கிறார். வேறெந்த வழியினாலும் மாம்சத்தை அப்புறப்படுத்த முயற்சிப்போமாகில், நம்முடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக மாம்சத்தை நாம் மீண்டும் பலப்படுத்துவோம் என்பதனை நிச்சயமாக அறிந்திருப்போமாக.

மார்ச்

8

***நீ**ங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரி பாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக் குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரே யிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய்; ஆனாலும் அதற் குள் நீ பிரவேசிப்பதில்லை என்றார் (உபா. 32:50, 52).*

"வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நீ பிரவேசிப்பதில்லை"

கர்த்தர் கட்டளையிட்டபடி கன்மலையோடு பேசுவதற்குப் பதிலாக, கன்மலையை இரண்டாம்தரம் அடித்த பாவச்செயல் மிகவும் துன்பத்தைத் தருகிற ஒரு பாவச்செயலாகும். கன்மலை கிறிஸ்துவையும், அவர் கல்வாரி சிலுவையில் அடிக்கப்படுவார் என்பதனையும், அவர் சிலுவையில் நிறைவேற்றப் போகிறதை யும், தாகமாயிருக்கிற மனுஷகுலத்திற்கு ஜீவத்தண்ணீர் அதனி லிருந்து புறப்படும் என்பதனையும் இது பிரதிபலிக்கிறது. திருப்பி மறுபடியும் அந்தக் கன்மலையை அடிக்கிறதென்பது மேற்கூறிய மாதிரியைச் சிதறடிக்கிறதுமட்டுமல்ல, ஒருமுறை கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பலி போதாது என்பதனைப் பல வந்தமாக வெளிப்படுத்துகிறது; இத்தகைய செய்கையின்மூலம்

கிறிஸ்துவின் சிலுவை நிராகரிக்கப்படுகிறது; சந்தேகத்திற்கிட மின்றி மோசே அடிக்கும்பொழுது அப்படிச் சிந்திக்கவில்லை; ஆயினும், அப்படியே தேவனால் கருதப்பட்டது (**எண்.** 20:11-13). முதல்முறை ரெவிதீமில் அடிக்கப்பட்ட கன்மலை கிறிஸ்து சிலு வையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்ததைப் பிரதிபலித்தது.

நாம் எல்லாரும் அறிந்திருக்கவேண்டியது என்னவென்றால், பிரமாணத்தின் கிரியைகள் அவைகள், தேவனுடைய பத்துக் கட்டளைகளாயிருந்தாலென்ன, நாம் உருவாக்கிய பிரமாணங் களாயிருந்தாலென்ன, மதப்பற்றுள்ள மார்க்கங்களினால் உருவாக் கப்பட்ட பிரமாணங்களாயிருந்தாலென்ன, **"கிறிஸ்துவினால் உங் களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது"** (**கலா.** 5:2) என்பதே பரி சுத்த ஆவியானவருடைய பதிலாயிருக்கிறது. நியாயப்பிர மாணம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைச் சுதந்தரிக்கமுடியாது. தேவனிடத்திலிருந்து நாம் பெறும் சகலத்திற்கும் கிறிஸ்துவே ஆதாரமாகவும், சிலுவையே மூலகாரணமாகவும் இருக்கிறது (**ரோம.** 6:3-14).

இதன் பொருள், தற்போதைய கிறிஸ்தவ உலகம் தொடர்ந்து கன்மலையை அடித்து, மோசே செய்த அதே பாவத்தைச் செய்த வண்ணமாயிருக்கிறது. அந்தப் பாவம் இப்பொழுது மிகவும் மோசமான பாவச்செயலாயிருக்கிறது. அதற்குக் காரணம் கன் மலை இப்பொழுது தீர்க்கதரிசனம் அல்ல, அது ஒரு வரலாறு. நியாயப்பிரமாணம் அதற்குப் பாதகமாயிருக்கிறது என்பதல்ல, நியாயப்பிரமாணத்திற்கு மனுஷனால் பரிபூரணமாகக் கீழ்ப்படிய முடியாது (**ரோம.** 8:7); ஆயினும், கர்த்தருடைய ஆசீர்வாதங் களை அவருடைய அனுமதியென்று எடுக்கக்கூடாது; அது எக் காலத்திலும் நாம் செய்யும் பெருந்தவறாயிருக்கிறது; அவரு டைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதே முக்கியமானது (**ரோம.** 4:3; **கலா.** 4:30).

மார்ச்

9

***யோ**சுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரி சுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான் (யோசு. 3:5).*

"நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்குள் பிரவேசம், பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. வனாந்தர வாழ்க்கை பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானத்தைப் பெறாத வாழ்க்கையைப் பிரகடனப்படுத்துக்கிறது. ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைத் தங்களுடைய தோள் களில் சுமந்து செல்லவேண்டும். உடன்படிக்கைப் பெட்டியும், ஆசாரியர்களும் கிறிஸ்துவின் மாதிரியாயிருக்கிறார்கள். ஜனங் கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்கிற ஆசாரியர் களைப் பின்தொடரவேண்டும் (**யோசு.** 3:3); ஆயினும், ஆசாரியர் களுக்கும் ஜனங்களுக்குமிடையில் அரைமைல் தூரம் இடை வெளி இருக்கவேண்டும்; ஏனென்றால், கிறிஸ்து சிலுவைக்குப் போய் மனுஷகுலத்தின் பாவத்தின் கடன்களை அப்பொழுது செலுத்தவில்லை; ஆகையால், நியமிக்கப்பட்ட ஆசாரியர்களைத் தவிர, ஜனங்கள் உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகாமையில் செல்லமுடியாது.

இந்தப் பிரயாணத்திற்கு முன்பு ஜனங்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது (**யோசு.** 3:5). இந்தப் பிரயாணத்தின்போதே யோர்தான் நதி திறக்கப்பட்ட அற்புதத்தை ஜனங்கள் கண்டார்கள். பழைய ஏற்பாட்டின்படி பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் இருதயத்தில் வாசஞ்செய்யமுடியவில்லை; ஏனென்றால், பாவத்தின் கடன்கள் இன்னும் செலுத்தப்படவில்லை (**எபி.** 10:4); ஆனபடியினால், தேவன் வெளிப்புறத்தையே பரிசுத்தமாக்கமுடியும். கல்வாரி சிலுவையில் பாவத்தின் கடன்கள் செலுத்தப்பட்டபடியினால், இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள்ளிருந்து (**யோவா.** 14:16-17) பரிசுத்தத்தை நடைமுறைப்படுத்தமுடியும்.

இஸ்ரவேலியர்களில் தேவன் அன்பாயிருந்தும், ஜனங்களுக்காக யோர்தான் நதி திறக்கப்படவில்லை; உடன்படிக்கைப் பெட்டிக்காகவே யோர்தான் நதி திறக்கப்பட்டது. உடன்படிக்கைப்பெட்டி கிறிஸ்துவைப் பிரதிபலித்ததன் நிமித்தமே யோர்தான் நதி திறக்கப்பட்டது. கிறிஸ்துவின் சிலுவையின் நிமித்தம் நம்முடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர்மூலம் கிறிஸ்து தற்பொழுது வாசஞ்செய்கிறார் (**கலா.** 2:20; **Iகொரி.** 3:16, 6:19); ஆனபடியினால், நாம் இப்பொழுது விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கையை உடையவர்களாக இருக்கிறோம் (**எபி.** 8:6).

மார்ச்

10

***யோ**சுவா கட்டளையிட்டபடி இஸ்ரவேல் புத்திரர் செய்து, கர்த்தர் யோசுவாவோடே சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் இலக்கத் திற்குச் சரியாகப் பன்னிரண்டு கற்களை யோர்தானின் நடுவில் எடுத்து, அவைகளைத் தங்களோடேகூட அக் கரைக்குக் கொண்டுபோய், தாங்கள் தங்கின இடத் திலே வைத்தார்கள். யோர்தானின் நடுவிலும் உடன் படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியரின் கால்கள் நின்ற இடத்திலே யோசுவா பன்னிரண்டு கற்களை நாட்டினான்; அவைகள் இந்நாள்மட்டும் அங்கே இருக் கிறது (யோசு. 4:8-9).*

"பன்னிரண்டு கற்கள்"

இந்த வேதவார்த்தைகளை வாசிப்பவன் கவனமாயிருக்கா விட்டால், கர்த்தர் யோசுவாவுக்குக் கட்டளையிட்டது என்ன என்பதனை அவனால் அறியமுடியாது. கர்த்தர் யோசுவாவுக்கு நியமித்த கட்டளை என்னவென்றால், இஸ்ரவேலிய புத்திரர்கள் யோர்தான் நதியைக் கடக்கும்பொழுது தண்ணீர் பிரிந்துபோகும் (**யோசு.** 4:3); அப்பொழுது யோர்தான் நதியின் ஆழத்திலிருந்து, பன்னிரண்டு கற்களை எடுத்து, கானான் தேசத்திற்குக் கொண்டு போய், அந்தக் கற்களினால் நினைப்பூட்டும் அடையாளம்

ஒன்றைக் கட்டுங்கள்; இந்த நாளில் கர்த்தர் உங்களுக்குச் செய்ததை அது நினைப்பூட்டும் என்றார். அப்படியே யோர்தான் நதியின் ஆழத்திலிருந்து கானான் தேசத்திற்குக் கொண்டுவந்த பன்னிரண்டு கற்களால் கில்காலில் கட்டப்பட்ட நினைவூட்டும் அடையாளம், ஜெயங்கொண்ட உயிர்த்தெழுந்த கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய கிருபையினாலும், அவருடைய வல்லமையினாலுமே இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்குள் நுழையமுடிந்தது என்பதனை அந்தக் கற்கள் சாட்சிபகர்கிறது.

எந்த இடத்தில் யோர்தான் நதியின் ஆழத்திலிருந்து பன்னிரண்டு கற்களை எடுத்துக் கானான் தேசத்திற்குக்கொண்டு சென்றார்களோ, அதே இடத்தில், வனாந்தரத்திலிருந்து எடுத்துக் கொண்டு வந்த பன்னிரண்டு கற்களை நாட்டவேண்டும் என்று யோசுவாவுக்குக் கர்த்தர் கட்டளையிட்டார். இஸ்ரவேலிய புத்திரர்கள் யோர்தான் நதியைக் கடந்தபின்பு, யோர்தான் நதி பழைய நிலைமைக்குத் திரும்பும்பொழுது அந்தக் கற்கள் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கும்; அதுவே தேவனுடைய ஏற்பாடு. ஆவிக்குரிய கண்ணோட்டம் இல்லாதவர்கள் இது ஒரு முட்டாள்த்தனமான வேலை என்பார்கள். இதன் ஆவிக்குரிய பொருள், இஸ்ரவேலியர்களின் 40 வருஷகால அவிசுவாசத்தையும் வனாந்தர மீறுதல்களையும் சுட்டிக்காட்டுகிறது; இஸ்ரவேலிய புத்திரர்களின் வனாந்தர உலைச்சல் முடிந்தது; அவர்களுடைய மீறுதல்கள் யோர்தானின் ஆழத்தில் புதைக்கப்பட்டது (**மீகா. 7:19**) என்று பிரகடனப்படுத்தப்படுகிறது; அவைகளைப்பற்றி இனிமேல் பேசவுங் கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார்.

இந்த இரண்டு ஞாபகச் சின்னங்களும் ரோமர் நிருபத்திலும், எபேசியர் நிருபத்திலும் சொல்லப்பட்ட பெரும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. யோர்தான் நதியின் ஆழத்தில் புதைக்கப்பட்டது, **ரோமர்** 6:3-5ல் சொல்லப்பட்ட கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தைப்பற்றிச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது; அங்கே

பழைய வாழ்க்கைக்கு மரித்து, புதிதான வாழ்க்கைக்கு எழுந்திருப்பதைப்பற்றிச் சொல்லப்படுகிறது; அங்கே அவன் கிறிஸ்துவின் மரணத்துக்குள் ஞானஸ்நானம் செய்யப்பட்டு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே அடக்கம்பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவனாய் எழுந்திருப்பதைப் பிரகடனப்படுத்துகிறது.

பன்னிரண்டு கற்களால் கில்காலில் கட்டப்பட்ட ஞாபகச் சின்னம் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையைத் தொடர்ச்சியாக ஞாபகமூட்டுகிறது. நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் மகிமையைச் சாட்சிபகரவேண்டும்; அந்த ஒரே ஒரு இரட்சகரே உழையான சேற்றிலிருந்து நம்மை வெளியே கொண்டு வந்தார் (**எபேசி. 2:13-18**). அதேநேரம் விசுவாசிகளின் துணிவான பாவம் என்னவென்றால், யோர்தானின் ஆழத்திற்கு நீந்திச் சென்று, சுழியோடி, கிண்டி இரண்டாவது ஞாபகச்சின்னத்தைப் பிரதிபலிக்கிற வனாந்தரத்திலிருந்து கொண்டுவந்த கற்களைத் தேடிக் கண்டுபிடிப்பதாகும் (**மீகா. 7:19**); இந்தச் செயல் தேவனால் மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்ட நம்முடைய பழைய பாவங்களை மீண்டும் நினைவூட்டுதலாகும். அந்தக் கற்கள் ஒருபொழுதும் மேலே கொண்டுவராதபடிக்குப் புதைக்கப்பட்டவைகளாயிருக்க வேண்டும்; கர்த்தரால் புதைக்கப்பட்டு, மறக்கப்பட்டவைகளை அப்படியே விட்டு விடுவோமாக.

மார்ச்

11

***அ**க்காலத்திலே கர்த்தர் யோசுவாவை நோக்கி: நீ கருக்கான கத்திகளை உண்டாக்கி, திரும்ப இரண்டாம் விசை இஸ்ரவேல் புத்திரரை விருத்தசேதனம்பண்ணு என்றார் (யோசு. 5:2).*

"இரண்டாம்விசை இஸ்ரவேல் புத்திரரை விருத்தசேதனம்பண்ணு"

இஸ்ரவேல் புத்திரர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியில் தற்பொழுது இருக்கிறார்கள்; ஆனால், கிடைத்த ஆசீர்வாதத்திற் குள்ளும், அதன் மகிமைக்குள்ளும் நுழைவதற்குத் தடையாகப் பலமான எரிகோ கோட்டைகள் இருக்கின்றன. பொதுவாகப் பார்க்கும்பொழுது எரிகோவை வெற்றிகொள்வது முடியாத காரி யம்; அதன் மதில்கள் பாரிய உயரமாயிருந்தது. ஆசீர்வாதத் திற்கு இடைஞ்சலாயிருக்கிற அந்தப் பட்டணம் தோற்கடிக்கப்பட வேண்டும்; ஆனால், தேவன் மாம்சத்திற்கு வெற்றியைக் கொடுப் பதில்லை; கிறிஸ்துவுக்கே வெற்றியைக் கொடுத்திருக்கிறார்; ஆனபடியினால் மாம்சம் சாகடிக்கப்படவேண்டும்.

மாம்சத்தை மரணத்துக்கு உட்படுத்துவதாயின், விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் பிரத் தியேகமாக வெளிப்படுத்தப்பட்டு, அந்த விசுவாசத்தில் நிலைத்தி ருக்கும்பொழுதே பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக நம்மில் செயற்பட்டு, நம்முடைய தேவைகளைத் தப்பாமல் நிறை

வேற்றுவார். அவர் ஒருவரே சட்டபூர்வமாக நம்முடைய வாழ்க்கையில் வல்லமையாகச் செயற்படுவதற்கு அதிகாரம் உள்ளவராயிருக்கிறார் (**ரோம.** 8:2). நாற்பது வருஷத்திற்கு முன்பு இஸ்ரவேலியர்கள் விருத்தசேதனம் செய்யப்பட்டனர் (**லேவி.** 12:3). ஆயினும், துரதிஷ்டவசமாக அப்போதைய சந்ததியினர் வனாந்தரத்தில் பிறந்தபடியினால், அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யப்படவில்லை (**யோசு.** 5:5). கிறிஸ்து என்ன செய்வார் என்பதற்கு மாதிரியாக எல்லா இஸ்ரவேலிய புத்திரர்களையும் விருத்தசேதனம் செய்யுமாறும், யுத்த மனிதர் எல்லாரையும் செயலிழக்கப்பண்ணி, அவர்கள் பல நாட்களுக்கு அதேநிலைமையில் இருக்கவேண்டும் என்றும் கர்த்தரிடத்திலிருந்து யோசுவா கட்டளையைப் பெற்றான். இஸ்ரவேலியர்கள் தாக்கப்பட்டால், யுத்த மனுஷருக்கு ஏற்பட்டிருக்கும் வலியின் நிமித்தம் இஸ்ரவேலை அவர்களால் காப்பாற்றமுடியாது என்பதனையும், இஸ்ரவேலின் பலம் அவர்களின் சரீரபலத்தில் அல்ல என்பதனையும் அவர்கள் உணரவேண்டும் எனத் தேவன் எதிர்பார்த்தார். விருத்தசேதனம் சிலுவையையும், சுயத்தின் மரணத்தையும் அடையாளமாகக் காட்டுகிறது.

முதலாவதாக, இரத்தம் விருத்தசேதனத்தின்போது சொட்டப்படுகிறது; அது கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவினால் சொட்டப்பட்ட இரத்தத்தைப் பிரதிபலிக்கிறது. **இரண்டாவதாக**, மாம்சத்திடமிருந்து விசுவாசி பிரிந்திருப்பதையும், பழைய சுயத்திற்கு மரணம் ஏற்பட்டதையும் பிரதிபலிக்கிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்ததன்மூலம் அவர் நம்மை அந்தப் பாவத்திலிருந்துமட்டுமல்ல, சுயத்திலிருந்தும் இரட்சித்தார் என்பதனை விருத்தசேதனம் பிரதிபலிக்கிறது. ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையிலிருக்கிற எரிகோவை வெற்றிகொள்ளவேண்டுமாயின், அவன் கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தொடர்ந்து விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுது, அவன் தன் சுயத்தில் தங்கியிருக்க

வேண்டியதில்லை; அதற்குப் பதிலாக ஆவியில் தங்கியிருக்க முடியும். எந்தக் காலத்திலும் பரிசுத்த ஆவி நம்மில் வல்லமை யாகச் செயற்படுவதற்கு, நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவின் சிலுவையில் நங்கூரமிடப்பட்டிருக்கவேண்டும் என்பதே பரிசுத்த ஆவியானவரின் நிபந்தனையாகும் (**ரோம.** 8:2).

மார்ச்

12

***இ**ஸ்ரவேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியி ருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள் (யோசு. 5:10).*

"இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரித்தார்கள்"

விருத்தசேதனத்திற்குப் பின்பு கர்த்தர் இப்பொழுது இஸ்ர வேல் புத்திரர்களுக்குப் பஸ்காவை ஆசரிக்குமாறு கட்டளையிட் டிருக்கிறார்; ஏனென்றால், வனாந்தரத்தில் சில காலமாகப் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை. பஸ்காவைச் சாப்பிடுவதன்மூலம் வெளிப்படையாக இஸ்ரவேல் பிரகடனப்படுத்துவது என்னவென் றால், எகிப்திலிருந்து தன்னுடைய மீட்புக்கும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியில் தன்னுடைய நிலைப்பாட்டுக்கும் காரணம் பஸ்கா ஆட்டுக்குட்டியின் விலையேறப்பெற்ற இரத்தமே என் பதை உறுதிப்படுத்துகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற மனுஷனைப்பற்றியும், அவர் சிலுவையில் நிறைவேற்றப்போகிற வேலையைப்பற்றியும் எங்கு சாட்சியாகப் பிரகடனப்படுத்தப்படு கிறதோ அங்கே ஆவிக்குரிய வெற்றியுண்டு; பஸ்கா இதனைப் பிரதிபலிக்கும் மாதிரியாயிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ஆண் ஆட்டுக்குட்டியைக் கொலைசெய்யவேண்டும்; அது கறைதிரையற்றதாயிருக்கவேண் டும்; அது கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் மரிப்பதையும்

பிரதிபலிக்கிறது; அந்த ஆட்டுக்குட்டியை முழுவதும் கசப்பான கீரையோடு சாப்பிடவேண்டும்; இது கிறிஸ்துவில் முற்றுமுழு வதும் பங்குபற்றவேண்டும் என்பதனைப் பிரதிபலிக்கிறது; ஆன படியால்த்தான் முழுவதும் சாப்பிடவேண்டும். கசப்பான கீரை எகிப்தில் இஸ்ரவேலிய புத்திரர்களின் அடிமைத்தனத்தைப் பிரதி பலிக்கிறது; அதிலிருந்து இஸ்ரவேலியர்கள் விடுதலை செய்யப் பட்டனர். விசுவாசிகளாகிய நாமும் ஒரே ஒரு வழியின்மூலமே ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை வாழமுடியும் என்ப தனை வெளிப்படையாக இது சொல்கிறது. அந்த வழி, இயேசு கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசு வாசத்தை வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பதே யாகும்; கிறிஸ்துவின் சிலுவையே எப்பொழுதும் நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும்; அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் வல்லமை யாகச் செயற்படுவார்; அவர் ஒருவரே நமக்கு வெற்றியைத் தர முடியும்.

சற்று உற்றுநோக்குவோமானால், சிலுவையின் வழி ஒரு பொழுதும் மாறுவதில்லை; மனுஷகுலம் சுயத்தை செம்மை யாக்குவதிலேயே கவனஞ்செலுத்துகிறது; ஆம், சுயம் செம்மை யாக்கப்படவேண்டியதே; அதனைப் பரிசுத்த ஆவியானவர் ஒரு வராலேயே செம்மையாக்கமுடியும் (**ரோம. 8:1-2, 11**); அவர் இதனைச் செய்வதற்கு, நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் கிறிஸ்துவின் சிலுவையில் இருக்கவேண்டும்; துரதிஷ்டவசமாக தற்போதைய போதகர்கள் பிரகடனப்படுத்தும் வழிமுறைகள், சுயத்தை செம்மையாக்குவதையே குறிக்கோளாகக் கொண் டுள்ளது; அத்தகைய முயற்சி ஒருபொழுதும் சாத்தியப்படாது (**ரோம. 8:7-8**).

மார்ச்

13

***பி**ன்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார்; உருவின பட்டயம் அவர் கையிலிருந்தது; யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அப்பொழுது கர்த்த ருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான் (யோசு. 5:13, 15).*

"உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு"

யோர்தான் நதியைக் கடந்து தனக்கு முன்பிருந்த வானளா விய மதில்களைக் கண்டபொழுது யோசுவாவுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. யோசுவா எரிகோவில் நடந்துகொண் டிருக்கும்பொழுது, இதோ ஒருவர் உருவின பட்டயத்தோடு அவ னுக்கு எதிரே நின்றார்; அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாகும்; இந்தத் தோற்றம், அவர் மனுஷனாக வருவதற்கு முன் பிருந்த தோற்றமாகும். யோசுவா அவரிடத்தில், நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று

கேட்டான் (**யோசு.** 5:13). யோசுவா முதலில் அவரை அடையாளங்காணவில்லை; தான் யார் என்பதனை அறிமுகப்படுத்தியவுடன் அவர் கர்த்தர் என்று அறிந்துகொண்டான்; நம்முடைய வாழ்க்கையில் தேவையான வெற்றியை அனுபவிப்பதற்கு முன்பு நாம் கிறிஸ்துவிடம் சரணடையவேண்டும்; நம்முடைய சகலத்தையும் அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

யோசுவா எப்படி அதனைச் செய்தான்? முற்றுமுழுவதும் சரணடைந்து, கிறிஸ்துவிடம் தன்னை எப்படி ஒப்புக்கொடுத்தான்? கர்த்தரால் சொல்லப்பட்டதற்குக் கீழ்ப்படிந்ததன் மூலமே அதனைச் செய்தான். இயேசுகிறிஸ்து யோசுவாவை நோக்கி: "....**உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது**" (**யோசு.** 5:15) என்றார்; இதே மாதிரியான கட்டளை மோசேக்கும் கொடுக்கப்பட்டது (**யாத்.** 3:5). இந்த வார்த்தையில் பொதிந்திருக்கும் ஆவிக்குரிய கருத்து என்னவெனில், அந்த நேரத்தில் ஒருவன் தன்னுடைய சொந்தக் காணியை இன்னொருவனுக்கு விற்பதாயிருந்தால், அவன் தன்னுடைய பாதரட்சையைக் கழற்றித் தன்னுடைய காணியை வாங்கப்போகிறவனிடத்தில் கையளிக்கவேண்டும். இந்தச் செய்கையின் பொருள், காணியின் சொந்தக்காரன் தனக்கு அந்தக் காணியின்மேல் இருக்கும் சகல கட்டுப்பாட்டையும் கைவிடுவதை உணர்த்துகிறது.

யோசுவா தன்னுடைய பாதரட்சையைக் கழற்றியதன்மூலம் "**என்னுடைய ஜீவனில் எனக்கு எவ்வித கட்டுப்பாடுமில்லை. உம்மிடத்தில் சரணடைந்து என் ஜீவனின்மேல் எனக்கிருக்கிற கட்டுப்பாட்டை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்**" என்றான். இந்த அறிவிப்பு எவ்வளவு நிறைவுள்ளது! இதன்மூலம் நாம் அறியவேண்டியது என்னவெனில், நமக்குத் தேவையான வெற்றியை நம்முடைய வாழ்க்கையில் அனுபவிப்பதற்கு முன்பு, நாம் எவ்வித கேள்வியுமின்றிக் முற்றுமுழுவதுமாகச் சரணடையும் இடத்திற்கு (கிறிஸ்துவின் சிலுவைக்கு) வரவேண்டும்; யோசுவா

சரணடையாவிட்டால், எரிகோவின் அலங்கம் இடிந்துவிழுவதை ஒருபொழுதும் கண்டிருக்கமுடியாது. தங்களுடைய சுயபலத்தி னால் இதனைச் செய்ய முயற்சித்திருப்பார்களாயின் படுதோல்வி யையே அடைந்திருப்பார்கள்; அதேபோல, இன்றும் அநேகர் தங் கள் சுயபலத்தில் நம்பிக்கைகொண்டு செயற்படுவதையே நோக்க மாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தராகிய ஆண்ட வரைவிடத் தங்களுக்கு அதிகமாய்த் தெரியும் என்றும், ஆண்ட வர் தங்கள்மேல் கட்டுப்பாடு வைத்திருப்பதை தாங்கள் விரும்ப வில்லை என்றும் சொல்வதே யதார்த்த நிலையாயிருக்கிறது. இதற்கு அவிசுவாசமே முக்கிய காரணமாயிருக்கிறது.

மார்ச்

14

***இ**ஸ்ரவேல் புத்திரர் சாபத்தீடானதிலே துரோகம் பண்ணினார்கள்; எப்படியெனில், யூதாகோத்திரத்துச் சேராகுடைய குமாரனாகிய சப்தியின் மகன் கர்மீக்குப் பிறந்த ஆகான் என்பவன், சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக்கொண்டான்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது (யோசு. 7:1).*

"இஸ்ரவேல் புத்திரர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது"

எரிகோவில் பெரும் வெற்றியை இஸ்ரவேல் ஈட்டியது; அந்த வெற்றி கர்த்தருக்குரியது. விசுவாசிகள் சில வேளைகளில் யோசுவாபோன்று, பெரும் வெற்றி சம்பவித்த பின்பு கவலையீன மாயிருந்துவிடுவது வழக்கம். அந்த நேரங்களில் மிதமிஞ்சிய நம்பிக்கையினால், ஜெபம் செய்வதற்கு மறந்து விடுவதுமுண்டு. ஆயீ பட்டணத்திற்குப் போவதற்கு முன்பு ஜெபம்பண்ணியிருந் தால், ஆகான் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் நேர்த்தியான ஒரு பாபிலோன் சால்வையையும், வெள்ளியை யும், பொன்னையும் எடுத்ததன்மூலம் தான் செய்த பாவத்தை அறிந்து, தேவனிடத்தில் மன்னிப்புக்கோரித் தோல்வியைத் தவிர்த்திருக்கலாம்; இஸ்ரவேலின் தோல்விக்கு ஆகானின் மறை வான பாவமே முக்கியமான காரணமாக இருந்தது. எரிகோவின் பொக்கிஷங்கள் (அவைகள் சாபத்தீடானவைகள்) ஒன்றும்

ஜனங்களால் எடுத்துக்கொள்ளப்படாமல், அவைகள் கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேர்க்கப்படவேண்டும் என்று கர்த்தரால் கட்டளையிடப்பட்டிருந்தது (**யோசு. 6:18-19**). வாழ்க்கையில் ஏற்படும் வெற்றியின்போது தேவன் ஒருவரே நம்மைப் பலப்படுத்தமுடியும்; வேறெந்தப் பலமும் நம்மிடத்தில் இல்லை.

ஆனால், நாம் மனம்போன போக்கில் பாவச்செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, தேவனால் நம்மைப் பலப்படுத்த முடியாது, அப்படிப் பலப்படுத்துவதாயிருந்தால், அவர் தன்னுடைய சுபாவத்தையும் பரிசுத்தத்தையும் நிராகரிக்கிறார். வல்லமையாகத் தன் ஜனங்களுக்கு மத்தியில் செயற்படுகிற அதே நேரம், அவர் தன்னுடைய சுபாவத்திற்கேற்றபடியே செயற்படவேண்டும். ஆகையால், எரிகோ பட்டணத்தை எவ்வளவு கோபத்தோடு நியாயந்தீர்த்தாரோ, அதே பயங்கரமான கோபத்தோடு இஸ்ரவேலின் பாளயத்திலுள்ள பாவத்தையும் நியாயந்தீர்க்கவேண்டும்; இரு இடத்திலேயும் நியாயத்தீர்ப்பு மரணமேயாகும்.

நியாயத்தீர்ப்பு, பாவத்தின் கண்டுபிடிப்பையும் துன்பத்தையும் கொடுக்கிறது; ஆனால், கிருபையோ ஆசீர்வாதத்தையும் வெற்றியையும் கொடுக்கிறது; ஆயினும் உண்மையுள்ளவர்களாயிருந்தால் மட்டுமே அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆகோரின் பள்ளத்தாக்கிலேயே ஆகானுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. யோசுவா பலவந்தப்படுத்தும்வரையும் அவன் மனந்திரும்ப மறுத்தான்; நாம் பாவத்திற்கு அதிகமாய்ப் பயப்பட்டு, கர்த்தரிடத்தில் செய்த பாவத்தை அறிக்கையிட்டு, அதனைப் பொருத்தமாகக் கையாண்டால் (**1யோவா. 1:9**), "**ஆகோரின் பள்ளத்தாக்கு**" (மரணப் பள்ளத்தாக்கு) "**நம்பிக்கையின் வாசலாக**" மாறும் (**ஓசி. 2:15**). கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலுமிருந்து தங்கள் கண்களை விலக்கும்பொழுது, அவர்கள் சுயத்தை நாடி, பரிசுத்த ஆவியானவரின் உதவியை நிராகரிக்கிறபடியினால், அவர்கள் தவறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் அப்படிச் செய்யும்பொழுது ஏன் அவர்கள்

தவறுகிறார்கள் என்பது அவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டு, மறு படியும் வெற்றியின் பாதையாகிய கிறிஸ்துவின் சிலுவைக்கு அவர்கள் கொண்டுவரப்படவேண்டும் (**கலா**. 6:1).

மார்ச்

15

***நீ** எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்தது போல, ஆயீக்கும் அதின் ராஜாவுக்கும் செய்யக்கட வாய்; அதில் கொள்ளையிட்ட பொருள்களையும் மிருக ஜீவன்களையும் உங்களுக்குக் கொள்ளையாக எடுத் துக்கொள்ளலாம், பட்டணத்துக்குப் பின்னாலே பதி விடையை வை என்றார் (யோசு. 8:2).*

"கொள்ளையிட்ட பொருள்களையும் மிருக ஜீவன்களையும் உங்களுக்குக் கொள்ளையாக எடுத்துக்கொள்ளலாம்"

தேவன் எதையாவது கொடுத்தால், அந்தப் பொக்கிஷத்தைத் தேவன் சொன்னமாதிரியே செய்து அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் (**யோசு.** 8:1-8). தற்போதைய கிறிஸ்தவ சமூகம் தேவ னுடைய அரசாங்கத்தை (தேவனுடைய வார்த்தையை) உதா சீனஞ்செய்து தங்களுடைய அரசாங்கத்தை (தங்களுடைய சொந்த வழிகளை) நடைமுறைப்படுத்தி, அதற்கு மிளகுப்பொடி தூவுவதுபோல் ஒன்றோ அல்லது இரண்டு வேதவசனங்களை அதன்மேல்த் தூவி, அதனைத் தேவனுடைய அரசாங்கம் என்று சொல்லுகிறார்கள். மனிதனுடைய இருதயத்தில் கர்ப்பந்தரித்த எதனையும், அது எவ்வளவாய் மதச்சார்பு உடையதாயிருந்தாலும், தேவன் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார். தேவன்

கட்டளை கொடுத்து, அந்தக் கட்டளை பின்பற்றப்பட்டால் வெற்றி உத்தரவாதம் செய்யப்படுகிறது. கர்த்தராகிய ஆண்டவரோடு பொருத்தமான உறவும், ஜெபமும், வேதப்படிப்பும், எல்லவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தி, அதனில் நிலைத்திருக்கும்பொழுதே வெற்றி நிச்சயம்.

பட்டணங்களைப் பாரமெடுத்து, அதனை அழிப்பது வெற்றியின் அடையாளமாக இருக்கிறது. அத்தகைய வெற்றியே நம் முடைய அன்றாட வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்தவேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமி தேவனுடைய பூமியாகும்; ஆனபடியினால், அதற்கு எதிராக எழும்புகிறவனைப் பட்டயத்திற்கு உட்படுத்தப்படவேண்டும்; அப்படியே விசுவாசிகளாகிய நாமும் தேவனுக்குரியவர்களாக இருக்கிறோம் (**I கொரி. 6:20**). நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவனுக்கு எதிராயிருக்கிற யாவும் ஆவியின் பட்டயத்திற்கு (**எபேசி. 6:17**) உட்படுத்தப்படவேண்டும்; ஆவியின் அக்கினி கொழுந்துவிட்டு எரிந்து, பதரை (மாம்சத்தை) எரிக்கவேண்டும் (**மத். 3:12**).

மார்ச்

16

***அ**ப்பொழுது யோசுவா: கர்த்தரின் தாசனாகிய மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டபடியும், மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியும், ஏபால் பர்வதத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு இருப்பாயுதம்படாத முழுக்கற்களால் ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (யோசு. 8:30).*

"ஏபால் பர்வதத்தில் ஒரு பலிபீடம்"

இஸ்ரவேலின் மத்தியில் இரு மலைகள் இருந்தன; அவைகள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்படவேண்டியவைகள். ஒன்று ஏபால் மலை, அது சாப மலை; மற்றது கெரிசீம் மலை, அது ஆசீர்வாத மலை; இரண்டும் ஒன்றுக்கு ஒன்று அருகருகே இருந்தன **(உபா. 11:29, 27:12-13)**.

கர்த்தர் ஏபால் மலையில் ஒரு பலிபீடத்தைக் கட்டுமாறு கட்டளையிட்டார்; அது பாவத்தின் மலையாகவும், நியாயத்தீர்ப்பின் மலையாகவும் இருந்தது. அந்தப் பலிபீடம் இயேசுகிறிஸ்துவையும், அவர் கல்வாரி சிலுவையில் செலுத்தப்போகிற விலையையும் படம்பிடித்துக்காட்டியது. இருப்பாயுதம்படாத முழுக்கற்களால் அந்தப் பலிபீடத்தைத் தேவனாகிய கர்த்தருக்கு யோசுவா கட்டினான். இதன் பொருள், கல்வாரியும், அது எதற்காக நிற்கிறதோ, அது ஒருபொழுதும் மாறுவதில்லை; கல்வாரி மனுஷனுடையதல்ல, அது தேவனுடையது.

கெரிசீம் மலையில் தேவனுடைய பெட்டி இருந்தபடியினால், அது ஆசீர்வதிக்கப்பட்ட மலையாக இருந்தது; துரதிஷ்டவசமாகத் தற்போதைய கிறிஸ்தவம் ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் கெரிசீம் மலையில் ஒரு பலிபீடத்தைக் கட்ட முயற்சிக்கிறது. அவர்கள் பலிபீடத்தை அடையாளங் காண்கிறார்களோ இல்லையோ அது வேறு விஷயம். நாம் அறிந்திருக்கவேண்டியது என்னவென்றால், நம்முடைய பிரச்னை அந்தப் பாவம் என்பதனை அறியாதிருந் தால், நமக்கு ஆசீர்வாதம் இல்லை. பாவம் தான் பிரச்னை என் பதனை ஏபால் மலை பிரதிபலிக்கிறது; பாவத்துக்கு ஒரே பதில், பலிபீடத்தைப் பிரதிபலிக்கும் கிறிஸ்துவின் சிலுவையேயாகும். ஆசீர்வாதத்திற்கு ஒரே வழி விசுவாசத்தில் நிலைத்திருந்து (I**கொரி.** 2:2), தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதலாகும்; இதனை கெரிசீம் மலை பிரதிபலிக்கிறது.

துரதிஷ்டவசமாக, நாம் தற்பொழுது ஒன்றில் **"ஆசீர்வாத சபைகளை"** அல்லது **"சாப சபைகளை"** உடையவர்களாக இருக் கிறோம். ஒன்றை விலக்கி, ஒன்றைப் பெரிதுபடுத்துவது முற்றி லும் தவறாயிருக்கிறது. வேதத்திற்கு இசைவான கிறிஸ்தவ சபைகள் பாவந்தான் மனுஷகுலத்தின் பிரச்னை என்பதனையும் (**ரோம.** 6:1-2), அதற்குப் பதில் கிறிஸ்துவின் சிலுவையே என்ப தனையும் (**ரோம.** 6:3-5,11) விளங்கிக்கொண்டு, அதனைப் புரிந்து, அதன்படி செயற்பட்டால், பரிபூரணமான ஆசீர்வாதம் பின்தொட ரும், இல்லாவிட்டால், ஆசீர்வாதம் இல்லை; ஏனென்றால் கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே சகல ஆசீர்வாதமும் நமக் குக் கிடைக்கிறது (**லேவி.** 9:21,-23; **மத்.** 6:33).

மார்ச்

17

***யோ**சுவா ஜனங்களை நோக்கி: நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்; அவர் பரிசுத்தமுள்ள தேவன், அவர் எரிச்சலுள்ள தேவன்; உங்கள் மீறுதலையும் உங்கள் பாவங்களையும் மன்னியார் (யோசு. 24:19).*

"எரிச்சலுள்ள தேவன்"

நாம் ஒரே ஒரு புருஷனை உடையவர்களாக இருக்கிறோம்; அவர் கர்த்தரேயாகும். வேறொரு புருஷனை அல்லது பல புருஷர்களையும் சேர்த்து வைத்திருப்பதை அவர் அனுமதியார்; அவர் எரிச்சலுள்ளவர். வேறு புருஷர்களான **"கிரியைகளின்"** புருஷன், **"பிரமாணத்தின்"** புருஷன், **"செல் குரூப்பின்"** புருஷன், **"மனோதத்துவத்தின்"** புருஷன், **"தேடுவோரைத் திருப்திப்படுத்தும்"** புருஷன், **"பன்னிரண்டு அரசாங்கத்தின்"** புருஷன், **"விசுவாச வார்த்தையின்"** புருஷன் எனப் பல புருஷர்கள் இருக்கிறார்கள். இந்தப் புருஷர்களை நம்பினால், தான் பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்கிறார். தேவனுடைய வார்த்தை கிடையாத பஞ்சமே, அந்தப் பஞ்சம் (**ஆமோ. 8:11-13**).

அநேகமான கிறிஸ்தவ சபைகளில் கர்த்தருடைய வார்த்தை கிடையாது; ஆகாப்பின் பஞ்சம் 3½ வருஷகாலம் இருந்தது. அவன் வேறொரு புருஷனைத் தேடினதே அந்தப் பஞ்சத்திற்கு முக்கியமான காரணம். யேசபேல் அந்தப் புருஷனைக் கொண்டு

வந்தாள்; ஆயினும், வேறொரு புருஷர்களுக்குத் தலை வணங்காத மீதியானவர்களும் இஸ்ரவேலில் இருந்தார்கள். பஞ்சத்தின் போது தன்னுடைய ஜனங்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் கர்த்தர் பராமரித்தார் (**Iஇராஜா. 18:13**). **உபாகமம் அதிகாரம் 13**ல் தேவன் தன் ஜனங்களைச் சோதிக்கிறார் என்பது தெளிவாயிருக்கிறது. **"கிரியைகளின்"** புருஷனையா?, **"பிரமாணத்தின்"** புருஷனையா? அல்லது **"மனோதத்துவத்தின்"** புருஷனையா? எந்தப் புருஷனைக் கிறிஸ்தவர்கள் நாடுகிறார்கள்? (**கலா. 3:2-3**) எரிச்சலுள்ள புருஷனிடம் தப்பமுடியாது என்பதனைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டும்; சுருக்கமாகச் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தவிர்ந்த (**Iகொரி. 1:23, 2:2**) சகலதும் வேறொரு புருஷனாகும் (**IIகொரி. 11:4**).

மார்ச்

18

***அ**தற்குக் கர்த்தர்: யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக் கொடுத்தேன் என்றார். அப்பொழுது யூதா தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கி: நாம் கானானிய ரோடே யுத்தம்பண்ண நீ என் சுதந்தரப் பங்குவீதத்தில் என்னோடேகூட எழுந்துவா; உன் சுதந்தரப் பங்கு வீதத்தில் நானும் உன்னோடுகூட வருவேன் என்றான்; அப்படியே சிமியோன் அவனோடேகூடப் போனான் (நியாயா. 1:2-3).*

"பரலோக யூதா"

கிறிஸ்து யூதா கோத்திரத்திலிருந்து வந்தார்; ஆனபடியினால் விசுவாசிகளாகிய நாம் பரலோகத்திலிருக்கிற யூதாவைப் பின் பற்றுவோமாயிருந்தால், வெற்றி நம்முடையதே.

சீக்கேமியரைப் படுகொலை செய்ததால் சிமியோன் சபிக்கப் பட்டான் (**ஆதி.** 49:5-7); இது பலவருஷங்களுக்கு முன்பு நடந்தது; அந்தச் சாபத்தின்படி இஸ்ரவேல் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை உடைமையாக்கும்பொழுது, சிமியோனுக்குச் சுதந்தரம் இஸ்ரவேலில் கொடுக்கப்படவில்லை. யூதா கோத்திரத்தினரே எல்லாரையும்விடக் கூடிய சுதந்தரத்தைப் பெற்றிருந்தார்கள்;

அவர்கள் தங்களுக்குக் கிடைத்த சுதந்தரத்தில் சிமியோனுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்தார்கள் (**யோசு.** 19:1).

அப்படியே, ஆதாமின் வீழ்ச்சியின் நிமித்தம் முழுமனுஷ குலமும் சபிக்கப்பட்டது; ஆகையால், சட்டப்படி நமக்கு எந்தச் சுதந்தரமும் கிடையாது. பரலோக யூதாவாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு வழியை ஏற்படுத்தினார். அதனைச் சிலுவையில் நிறைவேற்றி, தன்னுடைய சுதந்தரத்திற்குள் நமக்குச் சுதந்தரம் கொடுத்தார். அவர் ஏற்படுத்திய அந்த வழி யினால் பரலோகத்திற்குப் போகக்கூடிய பாக்கியம் நமக்குக் கிடைத்தது (**யோவா.** 14:1-3). அதுமட்டுமல்ல, அவரோடுகூடத் திரும்பிவந்து அவரோடுகூட ஆளுகை செய்யக்கூடிய பாக்கிய மும் நமக்குக் கிடைத்தது (**வெளி.** 1:6, 5:10, 20:6). பரலோக யூதா நமக்கேற்படுத்திய வழியை நாம் பின்பற்றுவோமாயிருந்தால், வெற்றி நமக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது (**ரோம.** 6:14).

மார்ச்

19

***அ**வள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்கவேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின்மேலிருந்து இறங்கினாள்; காலேப் அவளை நோக்கி: உனக்கு என்னவேண்டும் என்றான். அப்போது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான் (நியாயா. 1:14-15).*

"காலேப்பின் குமாரத்தியின் விசுவாசம்"

நியாயாதிபதிகள் 1:12-15ல் காலேப்பின் குமாரத்தியினதும், அவள் புருஷனுடைய விசுவாசமும் இங்கு மறுபடியும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காலேப்பின் விசுவாசம் அவனுடைய குமாரத்திக்குள்ளும், குமாரத்தியின் புருஷனுக்குள்ளும் ஊடுருவிச்சென்றது. நாம் எந்தக் காலமும் அறிந்திருக்கவேண்டியது **"விசுவாசம்"** ஒன்றே நம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய ஈவாகும். அநேகமான கிறிஸ்தவர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஏன் தேவனுக்கென்று வாழவில்லை என்று விசனப்படுகிறார்கள். சந்தேகத்திற்கிடமில்லாமல், நாம் எல்லா

வற்றையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்; ஆனால், விசுவாசத்தை மட்டும் கொடுப்பதில்லை. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமே அவர்களுடைய இரட்சிப்பையும், ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையையும் உறுதிப்படுத்துகிறது. **நியாயாதிபதிகள்** 1:15ல் சொல்லப்பட்டிருக்கிற **"நீர்ப்பாய்ச்சலான"** என்ற சொல், நித்திய விசுவாச ஆசீர்வாதத்தைப் பிரகடனப்படுத்துகிறது; அத்தகைய விண்ணப்பத்தைத் தேவன் எப்பொழுதும் கௌரவிப்பார்.

பலமுறை பரிசுத்த ஆவியானவர் காலேப்பினுடையதும், அவன் குமாரத்தியினுடையதும் விசுவாசத்தைப்பற்றி வேதாகமத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார். ஒரு காரணத்திற்காகவே இவ்விசுவாசம்பற்றி மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. கர்த்தராகிய ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் நீர்ப்பாய்ச்சலான ஜீவத்தண்ணீரை கொடுக்கவிரும்புகிறார்; ஆனால், அதனை நாம் விசுவாசத்தின்மூலமே பெறமுடியும். இதுபற்றி யாக்கோபின் கிணற்றடியிலிருந்த சமாரியப் பெண்ணுக்கு, ஆண்டவர் **யோவான்** 4:13-14ல் **"....நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்**".

காலேப்பின் குமாரத்திக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டால், அதனைச் செழிப்பாக்குவதற்கு நீர்ப்பாய்ச்சலான தண்ணீரைக் கேட்பதற்கும் தனக்கு உரிமை உண்டு என்று அவள் நினைத்தாள்; அவள் கேட்டதைப்பெற்று, நிலத்தையும் செழிப்பாக்கினாள். நீர்ப்பாய்ச்சலான தண்ணீர் பரிசுத்த ஆவியின் மாதிரியைப் பிரதிபலிக்கிறது. பரிசுத்த ஆவியின் அசைவாட்டம் நம் முடைய வாழ்க்கையில் இல்லாவிட்டால், ஆவிக்குரிய ஐசுவரியம் இருக்காது (**கலா.** 5:22-23; **IIகொரி.** 3:18).

மார்ச்

20

கர்த்தர் யூதாவோடேகூட இருந்ததினால், மலைத் தேசத்தாரைத் துரத்திவிட்டார்கள்; பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று (நியாயா. 1:19).

"தேவனிடத்திலிருக்கவேண்டிய விசுவாசம் சாத்தானுடைய ஆயுதங்களுக்குத் திரும்பியது"

நியாயாதிபதிகள் 1:19ல் சொல்லப்பட்டிருக்கும் வேதவாக்கியத்தைப் பரிசீலனை செய்வோமாயின், முதற்கண் கர்த்தர் யூதாவோடிருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூதேயாவினர் விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுதே அவர் அவர்களோடு இருந்தார், ஆனபடியினால், மலைத்தேசத்தாரைத் துரத்திவிட்டார்கள்.

யூதேயாவினர் எதுவும் செய்யவில்லை; அதற்குப் பதிலாக அவர்கள் கர்த்தரில் தங்கியிருந்தார்கள்; ஆயினும், மேற்கூறிய வார்த்தையின் கடைசிப் பகுதியைப் பரிசீலனை செய்வோமாயின், அங்கு சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், "**.....பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு அவர்களுடைய மனோநிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டதைக் காணக்கூடியதாயிருக்கிறது; இப்பொழுது

அவர்களுடைய கண்கள் **இருப்புரதங்களை** நோக்கிப்பார்க்கிறதே தவிர, கர்த்தரைப் பார்க்கவில்லை.

இப்படியிருக்க, நாம் கர்த்தரைவிட்டு நம்முடைய கண்களை விலக்கி, சாத்தானுடைய ஆயுதங்களைப் பார்க்க ஆரம்பிக்கிறது எவ்வளவு இலகுவாயிருக்கிறது. இஸ்ரவேலியர்களின் எவ்வித ஒத்துழைப்பும் இல்லாமல் எரிகோவின் மதில்களை நிர்மூல மாக்கிய தேவன் இருப்புரதங்களையும் நிர்மூலமாக்க வல்லவர் என்பதனைச் சிந்திப்பதற்கு அவர்களால் முடியாமற்போயிற்று. இதற்குக் காரணம் அவர்கள் அவரைப் பார்க்கவில்லை, இருப்புர தங்களையே பார்த்தார்கள். கர்த்தரைப் பார்க்காமல், இருப்புரதங் களைப் பார்க்க ஆரம்பித்தவுடன், இருப்புரதங்கள் பார்வைக்கும் சிந்தனைக்கும் பெருகிக்கொண்டேபோகும். அப்படியே கர்த்தரை விட்டு விலகி, சூழ்நிலைகளைப் பார்ப்போமானால், சூழ்நிலைகள் பெரிதாகிக் கொண்டேயிருக்கும் என்பதனைக் கிறிஸ்தவர்களா கிய நாம் அறிந்திருக்கவேண்டும்.

மார்ச்

21

இஸ்ரவேலர் பலத்தபோது, கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல் பகுதி கட்டப்பண்ணினார்கள் (நியாயா. 1:28).

"இஸ்ரவேலர் பலத்தபோது"

தோல்வியின்மேல் தோல்வி இங்கு பதிவுசெய்யப்பட்டிருக் கிறது. இதன் பொருள், புறஜாதிகளைத் துரத்திவிட இஸ்ரவேலி யர்களிடத்தில் வல்லமை இல்லாமற்போனது என்பதல்ல, அவர் கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய மறுத்து, புறஜாதி யினரைத் தங்களோடு தங்கியிருக்க அனுமதித்தனர்; அப்படி நடக்குமெனக் கர்த்தர் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

அவர்கள் பொருத்தமான விசுவாசத்தை நடைமுறைப்படுத்த வில்லை. மிகவும் மூர்க்கமான போர்த்திறமை வாய்ந்த பழங் குடியினராகிய எபூசியர்களை (தாவீது அழிக்கும் காலம்வரை) 500 வருஷகாலமாக எருசலேமில் தங்கியிருப்பதற்கு அனுமதித்தனர். எதிரிகள் தங்கள் மத்தியில் தங்கியிருப்பதற்கு அனுமதித்த நீடிய காலம் அது.

நம்முடைய வாழ்க்கையில் சாத்தான் அரணைக் கட்டியெ ழுப்பும் மாதிரியை அது ஒத்திருக்கிறது; ஆனால், கிறிஸ்துவி லும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் பொருத்தமான விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் சட்டபூர்வமாகச் செயற்படுவதற்குச்

சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினால், அவரே உலகத்தின் மேலும், மாம்சத்தின் மேலும், பிசாசின் மேலும் வெற்றியைக் கொண்டுவரமுடியும். ஏராளமான கிறிஸ்தவர்கள் தம்முடைய இருதயத்தில் எபூசியர்களை (மாம்சத்தின் கிரியைகளை) வைத்திருக்கிறார்கள்.

இஸ்ரவேலியர்களால் புறஜாதிகளை யேகோவாவிடத்தில் இழுத்துக்கொள்ளமுடியவில்லை; அதற்குப் பதிலாகப் புறஜாதிகள் தங்களுடைய நரகலான விக்கிரகங்களிடம் இஸ்ரவேலியர்களை இழுத்துச்சென்றனர். அப்படியே கிறிஸ்தவர்களும் இஸ்ரவேலியர்கள்போன்று தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். **"ஒதுங்கி இருப்பதை"** வேதாகமம் வலியுறுத்தவில்லை; ஆனால், நிச்சயமாகப் **"பிரிந்து இருப்பதை"** உறுதிப்படுத்துகிறது; அதாவது, நாம் உலகத்திலிருக்கிறோம்; ஆனால், உலகத்தின் வழிகளைப் பின்பற்றக்கூடாது **(ரோம. 12:2)**. உதாரணமாக, கப்பல் (விசுவாசி) தண்ணீரில் (உலகத்தில்) மிதக்கிறது, ஆனால், தண்ணீரைக் கப்பலுக்குள் வர அனுமதிக்கும்பொழுது, பிரச்னை ஆரம்பமாகிறது; கப்பல் (விசுவாசி) சீக்கிரத்தில் அமிழ்ந்துபோகும் **(IIகொரி. 6:14-18, 7:1)**.

மார்ச்

22

கர்த்தருடைய தூதனானவர் கில்காலிலிருந்து போகீமுக்கு வந்து: நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டுவந்து விட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை என்றும்; நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக்கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும் என் சொல்லைக் கேளாதேபோனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்? (நியாயா. 2:1-2).

"என் சொல்லைக் கேளாதேபோனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்?"

"கர்த்தருடைய தூதனானவர்" என்ற சொற்றொடர் **"ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து"** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். நாம் நினைப்பதுபோல, கிறிஸ்து தேவதூதன் அல்ல; ஆனாலும், சிலவேளைகளில் பரிசுத்த ஆவியானவர் தேவதூதன் என்ற சொல்லைப் பாவித்துத் தேவனையும், தேவதூதர்களையும், மனுஷரையும் அப்படி அழைக்கிறார். இந்த வேதவாக்கியத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் "**கர்த்தருடைய தூதன்**"

என்று அழைக்கிறார். இந்த வேதவாக்கியத்தில் பொதிந்திருக்கும் உட்கருத்தின்மூலம் தேவன் ஒருபொழுதும் வெற்றியை மாம்சத்துக்குக் கொடுப்பதில்லை என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கில்கால் என்ற சொல் **புரட்டிப்போடப்பட்டது** எனப் பொருள்படும். இஸ்ரவேல் புத்திரர்களின் வனாந்தர நிந்தை புரட்டிப் போடப்பட்டது என்பதே அதன் பொருளாகும் (**யோசு.** 5:9); ஆனபடியினால், **"கில்கால்"** வெற்றியை நிலைநாட்டின இடமாகும்.

இப்படியிருக்க, **போகீம்** என்பது **அழுகையின் இடமாகும்** அதென்னவென்றால், இஸ்ரவேலியர்கள் தேசத்தின் குடிகளைத் துரத்திவிடாமல் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் நடந்ததன் நிமித்தம் **போகீம்** என்று அந்த இடம் சொல்லப்பட்டது (**நியாயா.** 2:1-2).

கர்த்தராகிய ஆண்டவர் தேசத்தின் குடிகளைக் கலைத்து விடுவதற்குத் தான் உதவிசெய்வேன் என்று சொல்லாதிருந்தால், அவர்களைக் கலைத்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கமாட்டார்; தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (**எரேமி.** 32:27). இஸ்ரவேலியர்களோ கர்த்தரை நம்பாமல் தங்களுடைய பெலத்திலும் ஆற்றலிலும் நம்பியிருந்தார்கள். அது முற்றிலும் மாம்சமே; ஆனபடியினால், தோல்வியைச் சந்தித்தார்கள்; இதனிமித்தம் **"போகீம்"** என்று அழைக்கப்பட்டது பொருத்தமானதே.

விசுவாசி சகல மாம்சத்தின் கிரியைகளின்மேல் வெற்றியடையவேண்டுமென்பதே தேவனுடைய ஆலோசனையாகும். இதனை ஒரே வழியின் மூலமாகவே செய்யமுடியும்; இதனைச் செய்வதற்கு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவிலும், அவர் நமக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் (**Iகொரி.** 2:2) நிலைத்திருக்க வேண்டும் (**யோவா.** 15:4, 6). அப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக நம்மில் செயற்பட்டு, தேவையான வெற்றியை நமக்கு அளிப்பார்; வேறெந்த வழியினாலும் அவர் உதவி

செய்வதில்லை (**ரோம.** 8:1-2, 11). அவிசுவாசம் தோல்வியைத் தரும். கிறிஸ்துவின் சிலுவையில் விசுவாசம் இல்லாவிட்டால், அது அவிசுவாசமாகும்; சகல அவிசுவாசமும் அங்கேயே மைய மிடப்பட்டிருக்கிறது.

தோல்வியினால் எத்தனை விசுவாசிகள் **அழுகையின் இடத்தில்** நிற்கிறார்கள்? இவர்கள் கிறிஸ்துவிலும் சிலுவையிலும் விசுவாசத்தை நங்கூரமிடாமல், மாம்சத்தில் பலப்பட்டு, இந்தக் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

மார்ச்

23

***அ**வன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங் களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணு கிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என் றான் (நியாயா. 11:35).*

"ஐயோ! என் மகளே"

யெப்தா தனது மகளை யேகோவாவுக்குத் தகனபலியாக ஒப்புக்கொடுத்ததாக அநேகமான கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். கிறிஸ்தவர்கள் அப்படி நம்புவதற்கு ஆதாரமாக **நியாயாதிபதி கள்** 11:35-36ஐ எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி எதுவும் நடக்க வில்லை; ஏனென்றால், **லேவியராகமம்** 18:21, 20:2-5ன்படி அத்த கைய பலிகள் மிகவும் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. தகனபலியாக ஒப்புக்கொடாமல், அவள் யேகோவாவுக்குத் தொடர்ச்சியாகக் கன்னிமையைக் கடைப்பிடிப்பதாக அர்ப்பணஞ் செய்தான் (**நியாயா.** 11:37). **நியாயாதிபதிகள்** 11:39ல் **".... அவள் புருஷனை அறியாதிருந்தாள்"** என்ற சொற்றொடர் அதனை நிரூபிக்கிறது. இதன் பொருள், அவள் ஒருபொழுதும் திருமணஞ் செய்யவில்லை; அவள் யெப்தாவுக்கு ஒரே ஒரு மகளாக இருந்த படியினால், யெப்தாவின் மரணத்தோடும், அவளுடைய மரணத் தோடும் யெப்தாவின் சந்ததி முடிவுபெற்றது; ஆயினும் யெப்தா

எபிரெயர் 11:32ல் அந்த விசுவாசத்தில் பேராற்றல் வாய்ந்தவனாக இருந்தான் எனப் பரிசுத்த ஆவியானவர் சாட்சிகொடுக்கிறார். ஆம், அவன் கர்த்தரை விசுவாசித்தான், தேவன் அதனை அவனுக்கு நீதியாக எண்ணினார் (**ஆதி.** 15:6).

மார்ச்

24

***இ**ஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார் (நியாயா. 13:1).*

"மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப்
பொல்லாப்பானதைச் செய்தபடியால்"

அடிக்கடி இஸ்ரவேலியருடைய துர்க்குணம் இங்கு படம்பிடித்துக்காட்டப்படுகிறது. ஆழமான பாவத்துக்குள் அவர்கள் அடிக்கடி இறங்கிவிடுகிறார்கள்; அவர்களை உணர்வுக்குக் கொண்டுவருவதற்காகக் கர்த்தர் அவர்களைப் புறஜாதிகளிடம் ஒப்புக்கொடுத்தார். ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்கு அளவு கணக்கில்லாத வேதனைக்குமேல் வேதனையை அவர்கள் அனுபவிக்கும் பொழுது அவர்கள் கர்த்தருடைய நாமத்தை அழைத்து, அவரிடம் உதவி கோருகிறார்கள். எப்பொழுதும் கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களுக்குப் பதில் அளிக்கிறார்.

இந்தக் காலத்தில் பெலிஸ்தியர் தொடர்ந்து பிரபல்யம் அடைந்தவர்களாயிருந்து, தாவீதின் காலத்தில் அடக்கப்பட்டார்கள். பெலிஸ்தியர்கள் ஒரு உண்மையைப் பிரதிபலிக்கிறார்கள்; சிம்சோன் ஒரு கோட்பாட்டைப் பிரதிபலிக்கிறான்; அந்த உண்மை என்னவென்றால், கிறிஸ்தவர்களுடைய இருதயத்தில் எதிரிகள் (மாம்சத்தின் கிரியைகள்) வாசஞ்செய்கிறார்கள்;

அப்படியே பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலில் உள்ளார்ந்த எதிரிகளாக இருக்கிறார்கள்; அவர்கள் வெளிப்புற எதிரிகள் அல்ல. விசுவாசி உள்ளார்ந்த எதிரிகளை (மாம்சத்தின் கிரியைகளை) ஜெயங்கொள்ளுவதற்குத் தன்னுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் தொடர்ச்சியாக நிலைத்திருக்கவேண்டும் என்று கோரப்படுகிறான் (**லூக்.** 9:23). விசுவாசி தன்னுடைய வெற்றி கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே தனக்குக் கிடைக்கிறது என்பதனைத் தொடர்ந்து விளங்கிக்கொள்ளவேண்டும் (**ரோம.** 6:11); அப்பொழுதே பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் வாழ்க்கையில் பலமாக அசைவாடி, அவனுக்குத் தேவையான, விருப்பமான பயபக்தியைக் கொடுத்து, உள்ளார்ந்த எதிரிகளை முறியடிக்க உதவிசெய்கிறார் (**Iகொரி.** 1:17-18, 21, 23, 2:2; **கலா.** 6:14).

முதலில் நாம் உள்ளார்ந்த எதிரிகளைத் தோற்கடித்தால்த் தான் வெளியான எதிரிகளான உலகம், பிசாசு ஆகியவற்றைத் தோற்கடிக்கமுடியும்; இல்லையேல் உள்ளார்ந்த எதிரிகள் நம்மைத் தோற்கடிக்கும் என்ற உண்மையை, நாம் சவுல் ராஜா பெலிஸ்தியர்களைத் தோற்கடிக்காமல் தங்கள் மத்தியில் வாழ விட்டபடியினால், பெலிஸ்தியர்கள் சவுலைக் கொன்றனர் எனக் காண்கிறோம் (**Iசாமு.** 31:1-5).

மார்ச்

25

அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந் தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக் காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள் (நியாயா. 14:4).

"இது கர்த்தரின் செயல்"

பெலிஸ்தியர்களைப் பொறுத்தளவில் இஸ்ரவேலின்மேல் சாத்தானுடைய ஆழமான செயற்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. வேறு தேசத்தார் இஸ்ரவேலியரைக் கொடுமைப் படுத்தினார்கள்; ஆனால், பெலிஸ்தியர்கள் அவர்களைக் கொடு மைப்படுத்தவில்லை. அவர்கள் இஸ்ரவேலியரைக் கொடுமைப் படுத்தாமல், அதேநேரம் அவர்களைத் தங்களுடைய ஆளுகைக் குட்படுத்தினார்கள். கொடுமைப்படுத்தும் உணர்வில்லாமல், இஸ்ரவேலியர்கள் அடிமைத்தனத்தின் நுகத்தை ஏற்றுக்கொண் டனர். அநேகமான கிறிஸ்தவர்கள் இந்த வரலாற்றை உடைய வர்களாக இருக்கிறார்கள். உள்ளார்ந்த பொல்லாப்பின் கட்டுக் குள் தங்களைச் சமர்ப்பித்து, அதனுடைய ஆட்சியை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்தவர்களின் இந்த நிலைப்பாடு, ஆவிக் குரிய உணர்வின்மைக்கு அவர்களை வழிநடத்திச்செல்கிறது; சாத்தான் இந்த விதமாகத் தன்னுடைய புதிய ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்துகிறான். சாத்தானின் இந்தப் புதிய ஆட்சி

முறை, முந்திய வன்முறைக்கும், துன்புறுத்துதலுக்கும் வித்தியாசமானது.

சிம்சோனுடைய தேசத்தின் ஜனங்கள் சாத்தானின் இந்த ஆட்சியில் திருப்தியடைந்திருக்கிறார்கள் (**நியாயா.** 15:11). ஆனபடியினால், சிம்சோன் தன்னுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலியர்களை முந்தின நியாயாதிபதிகள் செய்ததுபோலப் பொதுவான எதிர்ப்புக் கிளர்ச்சியில் பங்குபற்றுவதற்குத் தூண்டமுடிய வில்லை; ஆனபடியினால், தனிப்பட்ட காரணத்தினூடாகச் சச்சரவுக்குள் கொண்டுவரவேண்டியது சிம்சோனுக்கு அவசியமாயிற்று. சிம்சோன் நிச்சயித்த திருமண ஏற்பாடு பெலிஸ்தர்களை சச்சரவுக்குள் இழுப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது; கர்த்தர் இதனை அனுமதித்தார்.

மார்ச்

26

***அ**ப்பொழுது யூதாவிலே மூவாயிரம் பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப்போய் பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான் (நியாயா. 15:11).*

"பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா?"

யூதேயாவினர் பெலிஸ்தியர்களுக்கு அடிமைகளாக இருப்பதை அறிந்திருந்தும் அந்த அடிமைத்தனத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பேச்சினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சாத்தானின் ஆளுகையின் புதிய யுக்தி இது என்பதனை அவர்கள் அறியாதிருந்தார்கள் (**நியாயா.** 14:4). சேனைகளாகிய இந்த மனுஷரின் பேச்சு எந்தளவு தூரத்திற்குப் பெலிஸ்தியர்களுடைய நுகம் அவர்களுடைய கழுத்தில் முற்றுமுழுவதும் கட்டப்பட்டு, இறுக்கப்பட்டு இருக்கிறது என்பதனைப் படம்பிடித்துக் காட்டுகிறது. உலகத்தின் எதிர்ப்பு நசரேய கிறிஸ்தவர்களுக்குக் கசப்பாயிருக்கிறது; அதைவிட ஆலயமாயிருக்கிற கிறிஸ்தவர்களின் எதிர்ப்பு அதிக கசப்பாயிருக்கிறது.

பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலை ஆட்சிசெய்தார்கள்; இஸ்ர வேலியர்கள் அவர்களை எதிர்ப்பதற்குப் பதிலாக மனநிறைவு அடைந்திருந்தார்கள். தங்கள் மத்தியில் ஒரு நசரேயன் இருந்து, தாம் அனுபவிக்கிற சமாதானத்தைக் குழப்புவதுமட்டுமல்ல, உலகத்தைத் தங்களுக்கெதிராகச் சினமூட்டுவதையும் அவர்கள் விரும்பவில்லை. தாங்கள் கருதும் சமாதானத்தைப் பராமரிப் பதற்காக சிம்சோனைக் கொடூரமான மரணத்துக்குள் உட்படுத்தும் சாத்தானின் திட்டத்திற்கு அமைய சிம்சோனை பெலிஸ்தியர் களிடம் கையளிப்பதற்கு சிம்சோனின் சகோதரர்கள் தயாராயிருந் தார்கள்.

இங்கு ஆவிக்குரிய தரக்குறைவு அடையாளக் குறியாயிருக் கிறது; கிறிஸ்தவத்தின் வரலாற்றிலும் இதேமாதியான தரக் குறைவை அடையாளங்காணமுடியும். சிம்சோன் தங்களை விடுவிப்பவனாக அவர்கள் போற்றிப் புகழாமல், தங்களுடைய எதிரியாக யூதேயாவினர் கருதினர். அப்படியே விசுவாசிகள் கூட சிம்சோனிலுள்ள குறைபாடுகளைப்பற்றிப் பேசத்தொடங்கி விடுவார்கள். மிகவும் தரக்குறைவான மோசமான ஆவிக்குரிய நிலைமையிலுள்ள இஸ்ரவேலியத் தலைவர்களைப்பற்றி அபூர்வ மாகவே பேசுவார்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் தங்களைப்பற்றி அறவே பேசுவதில்லை; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களையும் தற்போதைய கிறிஸ்தவர்களையும் நோக்கி: **யோவான்** 8:7ல் **"உங்களில்** (இந்தப்) **பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்"** எனக் கூறியது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது.

மார்ச்

27

பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான் (நியாயா. 16:1).

"சிம்சோன் காசாவுக்குப் போய், ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்"

"பின்பு" என்ற சொல், கழுதையின் தாடை எலும்பினால் ஆயிரம் பெலிஸ்தியர்களைக் கொன்ற சம்பவத்திற்குப் **"பின்பு" (நியாயா.** 15:16) என்பது தெளிவாகிறது; ஆனால், இது எவ்வளவு காலத்திற்குப் பின்பு என்பது தெளிவில்லை. சிங்கங்களைக் கிழிக்க சிம்சோனால் முடிந்தது; பெலிஸ்தியர்களை மேற்கொள்ள அவனால் முடிந்தது; ஆனால், தன்னுடைய இச்சைகளைக் கிழிக்க அவனால் முடியவில்லை; தன்னுடைய மாம்சத்தின் பசியை மேற்கொள்ள அவனால் முடியவில்லை. இவைகளை வெற்றிகொள்வதற்கு ஐந்து வழிகளல்ல, இரண்டு வழிகளல்ல, ஒரே ஒரு வழிதான் உண்டு.

அதென்னவென்றால், நமக்குத் தேவையான சகலத்திற்கும் கிறிஸ்துவே ஆதாரமாக இருக்கிறார் என்பதனையும், அதனைப் பெற்றுக்கொள்ளும் வழி கிறிஸ்துவின் சிலுவையே என்பதனை யும் முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். அடுத்ததாக, ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தை முற்றுமுழுவதுமாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும்

நங்கூரமிடவேண்டும்; பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினால் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட எல்லைக்குள்ளேயே செயற்படு கிறவரானபடியினால், அவருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்படுகிறது; அப்பொழுது அவர் வல்லமையாக நம்மில் செயற்பட்டு, நமக்கு உதவிசெய்யமுடியும். இந்த நிபந்தனையின் அடிப்படையிலேயே அவர் நமக்கு உதவிசெய்கிறார் (**ரோம**. 6:3-14, 8:1-2, 11).

மார்ச்

28

***அ**ப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இட்டு, கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி அந்நாட்களில் அங்கே இருந்தது (நியாயா. 20:26-27).*

"கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்"

நியாயாதிபதிகள் 19ம், 20ம் அதிகாரங்கள் இஸ்ரவேல் புத்திரர்களுக்கும் பென்யமீன் கோத்திரத்தாருக்கும் ஏற்பட்ட முறுகல் நிலைமையையும், இஸ்ரவேலுக்கு ஏற்பட்ட அழிவையும் படம் பிடித்துக்காட்டுகிறது. தகனபலிகளையும், சமாதான பலிகளையும் கொடுப்பதன்மூலம் இஸ்ரவேல் மனந்திரும்புதலில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது என்பது இங்கு பிரகடனப்படுத்தப்படுகிறது. மறுபடியும் அவர்களுடைய விசுவாசம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கியிருக்கிறது.

இஸ்ரவேல் கடைசியாகத் தேவனிடத்தில் மனந்திரும்பியதனாலும், துக்கத்தினால் தாம் பாவிகள் என்பதனை அறிக்கைபண்ணியதனாலும், தேவனை அண்டி நிற்கிறது. புதிய ஏற்பாட்டில்

விமர்சிக்கப்பட்டதுபோல, தங்களது குற்ற உணர்வை அறிக்கை செய்ததுமட்டுமல்ல, தாங்கள் தேவனுடைய கோபத்திற்குத் தகுதி யாயிருப்பதையும் உறுதிப்படுத்தினார்கள்; அதுமட்டுமல்ல, கிறிஸ்து என்னும் மனுஷனையும், அவர் செய்யப்போகும் வேலையையும் ஏற்றுக்கொண்டு, அந்தத் தேவனுடைய ஆட்டுக் குட்டியினால் மன்னிக்கப்படவும், அவரால் ஏற்றுக்கொள்ளப்பட வும் ஏதுவாகத் தங்களுடைய நியாயங்களை எடுத்துரைத்தனர். அவர்களுடைய ஆத்துமாக்கள் இப்பொழுது தாழ்மையடைந் திருக்கிறது. கிபியாவுக்கு எதிராக யுத்தத்திற்குப் போவதற்கு அவர்கள் தேவ நியதியின்படி தகுதியுள்ளவர்கள் எனப் போதிக்கப் பட்டனர். கிபியாவின் மனிதர்கள் தேவகோபத்தைப் பெறுவதற் குத் தகுதியுள்ளவர்கள்; அப்படியே அதனைப் பெறுவார்கள். இஸ்ரவேலும் தேவகோபத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர் களே; அவர்கள் முதலில் கிறிஸ்துவோடுசேர்ந்து, தேவகோபத் தில் பங்குபற்றியபின்பே (பலியை விசுவாசித்தபின்பே **[ரோம.** 6:3-5]) பென்யமீனுக்கெதிராகப் பட்டயத்தை உருவமுடியும்.

கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தவிர, வேறொன்றையும் தேவன் அடையாளங் காண்பதில்லை; இதன் பொருள், மனுஷனுடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும் பொழுதே தேவன் அவனை அடையாளங்காண்கிறார். மனு ஷன் தான் ஒரு பாவி என்பதனையும், தனக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதனையும், கிறிஸ்து யார் என்பதனையும், அவர் தன்னுடைய மீட்புக்குச் சிலுவையில் என்ன செய்தார் என்பத னையும் அவன் அறிந்திருக்கவேண்டியதை இது காண்பிக்கிறது.

மார்ச்

29

***அ**தற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம் மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வரு வேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக் கடவர் என்றாள் (ரூத். 1:16-17).*

"உண்மையான இரட்சிப்பின் வெளிப்பாடு"

ரூத்தின் உதாரணமே உண்மையான இரட்சிப்பின் உதாரணம்; தற்பொழுது கிறிஸ்தவ சபைகளில் சூழ்ந்திருக்கிற கோடிக்கணக் கான ஜனங்கள் இரட்சிக்கப்படவில்லை; ஆனபடியினால், அவர் கள் மறுபிறப்பைப் பெறவுமில்லை. ரூத்தின் அறிக்கை முழு வேதவாக்கியத்திலும் காணக்கூடிய மிகப்பெரிய அறிக்கையாக இருப்பதுமட்டுமல்ல, இரட்சிப்பைப்பற்றிச் சொல்லப்பட்ட உறுதி மொழியாகவும் இருக்கிறது; உண்மையில் கிறிஸ்துவிடம்

சேரும் ஒவ்வொருவரும் இந்தக் குணாதிசயங்களை உடையவர் களாக இருக்கவேண்டும்.

இந்த அர்ப்பணிப்பில் திரும்பிப் பார்க்கிறதென்ற பேச்சுக்கே இடமில்லை. தேவனுக்கெதிரான கலகத்திற்கும், உலகத்தின் விக்கிரகத்துக்கும் அவள் தன் பின்முதுகைக் காட்டினாள். மகிமையான தேவனைத் தொழுதுகொள்கிறவர்களுடனேயே தன்னையும் இணைத்துக்கொண்டாள். தான் இறந்தாலும், தன் னுடைய சரீரம் மோவாபுக்குப் போகக்கூடாது எனவும், இஸ்ர வேலிலேயே அடக்கம்பண்ணப்படவேண்டும் என்பதிலும் உறுதி யாயிருந்தாள். முன்பிருந்த தொடர்புகள் எல்லாவற்றையும் உதறித்தள்ளினதுமட்டுமல்ல, குடும்பத் தொடர்புகளையும் கை விட்டாள். தேவன் தன்னிடத்தில் வருபவர்களிடம் இந்தவித மான பயபக்தியையே கோருகிறார்; இதனைவிடக் குறைவான எந்தப் பயபக்தியும் இரட்சிப்பாக இருக்கமுடியாது.

நகோமி பெத்லெகேமுக்குத் திரும்பி வருகிறாள்; யேகோ வாவை ஏற்றுக்கொள்வதாயிருந்தால், பாவிகள் உலகத்தைவிட்டு விலகவேண்டியதுபோல, ரூத்தும் மோவாபைவிட்டு விலக வேண்டும்; ரூத் அதனைச் செய்வதற்கு விருப்பமாயிருந்தாள். மோவாபைவிட்டு விலகுவேன் என்று சொன்னதுமட்டுமல்ல, **"நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்"** என்றும் சொல்லி யிருந்தாள். அப்படியாயின் நகோமி எங்கு வழிநடத்துகிறாளோ அங்கே தானும் போவேன் என்றும் சொல்கிறாள்; அப்படியாயின், பரிசுத்த ஆவி எங்கு வழிநடத்துகிறாரோ அங்கே தான் போவேன் என்கிறாள்.

அடுத்ததாக, **"நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்"** என்பதன் பொருள், நீர் ஊழியஞ்செய்யும் இடம் எதுவோ, அதுவே நானும் ஊழியஞ்செய்யும் இடமாகும் என்று பிரகடனப்படுத்து கிறாள். அதுமட்டுமல்ல, மோவாபிய ஜனங்களோடு இனிமேலும் தன்னை அடையாளங்காண விரும்பவில்லை; தேவனுடைய ஜனங்களே தன்னுடைய ஜனங்கள் என்றும், இஸ்ரவேலின்

தேவனே தன்னுடைய தேவன் என்றும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள்; அவளால் மேற்கொள்ளப்பட்ட தெரிவு நித்திய காலத்திற்குரியது.

நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன் என்பதன் ஆவிக்குரிய பொருள், இந்தத் தீர்மானம் சடுதியாகத் தீர்மானிக்கப்பட்டதல்ல அல்லது உணர்ச்சிவசப்பட்டு மேற்கொண்டதல்ல; இந்தத் தீர் மானம் நித்தியகாலத்திற்கும் எடுக்கப்பட்டது. மகிமையான தேவனை ஏற்றுக்கொள்வதாயிருந்தால், தன் குடும்பத்தையும், தன்னுடைய காணி, பூமி, தேசத்தையும் விட்டு விலகவேண்டும் (**ஆதி.** 12:1), அவள் வைத்திருந்த எல்லாவற்றையும் கைவிட வேண்டும் (**IIகொரி.** 6:14-18); கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ் வொருவரும் அப்படியே செய்யவேண்டும்.

ரூத்தினுடைய அர்ப்பணிப்பு ஒரு பரிபூரணமான உதாரணமா யிருக்கிறது. அவளுக்குக் கிடைக்கப்போகிற வெகுமதி அவளு டைய கற்பனைக்கு அப்பாற்பட்டது. இந்தப் புறஜாதியான பெண், சபிக்கப்பட்ட மோவாபிய பெண்; அவளுடைய விசுவாசம் வரப் போகிற மேசியாவின் வம்சவரலாற்றில் இணைக்கப்பட்டிருக் கிறது; அதைவிடப் பெரிதான வெகுமதி வேறொன்றுமில்லை (**மத்.** 1:5).

மார்ச்

30

***ஆ**னாலும் பெத்ஷிமேசின் மனிதர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்தபடியினால், கர்த்தர் ஜனங்களில் ஐம்பதினாயிரத்து எழுபதுபேரை அடித்தார்; அப்பொழுது கர்த்தர் ஜனங்களைப் பெரிய சங்காரமாக அடித்ததினிமித்தம், ஜனங்கள் துக்கித்துக்கொண்டிருந்தார்கள் (1சாமு. 6:19).*

"பெத்ஷிமேசின் மனிதர்"

கர்த்தருடைய பெட்டியின் மூடியைத் திறந்தவுடன் பெத்ஷிமேசின் மனிதர் சோதனைக்குட்படுத்தப்பட்டார்கள். அவர்கள் கர்த்தரை அறிவதில் நாட்டங்கொள்ளாமல், வேடிக்கை பார்ப்பதில் அக்கறையுள்ளவர்களாக இருந்தார்கள். பெலிஸ்தியர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? பெலிஸ்தியர்களுக்கு என்ன சம்பவித்ததோ, அதேகதி இவர்களுக்கும் சம்பவித்தது. அதே துர்ப்பாக்கிய நிலைமை கிறிஸ்தவ சபைகளில் இல்லையோ? கிறிஸ்தவ சபைகளில் தேவன் பிரசன்னமாயிருந்தால், அங்கே ஆசீர்வாதமும் நியாயத்தீர்ப்பும் அருகருகே இருக்கும்.

கிறிஸ்தவ சபைகள் காலாதி காலமாகத் தேவனைப்பற்றி அறிய முயற்சித்ததெல்லாம் ஆசீர்வாதத்தைப்பற்றியதேதவிர வேறொன்றைப்பற்றியதும் அல்ல (**1கொரி.** 15:19); தேவனைத் தவிர்த்து, மற்றவைகளை அறிய முயற்சித்தால், அவர்கள் முயற்சித்தது சாத்தியப்படாது; ஏனென்றால், மீட்பும் நியாயத்தீர்ப்பும்

அருகருகே உண்டு என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது; ஆன படியினால் அங்கே பரலோகமும் நரகமும் உண்டு; இதனிமித்தம் மோசே **உபாகமம்** 30:19-20ல் **"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும் படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு, கர்த்தர் உன் பிதாக் களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசு மானவர் என்றான்"**.

இஸ்ரவேலியர்கள் செய்யவேண்டியது என்ன? கிறிஸ்தவர் கள் செய்யவேண்டியது என்ன? என்பதுபற்றி **உபாகமம்** 30:19-20ல் தெளிவாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மார்ச்

31

சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவை களையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லா வற்றையும், அழித்துப்போடமனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப்போட் டான் (1சாமு. 15:9).

"நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல்"

"நலமான எல்லாவற்றையும், அழித்துப்போடமனதில்லா திருப்பது" கிறிஸ்தவர்களிலுள்ள மிகப்பெரிய குறைபாடாகும். அற்பமானவைகளையும் உதவாதவைகளையும் அழித்துப்போட விரும்புகிறார்கள்; ஆனால், நலமானதை அழித்துப்போடுவது நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. நலமானது என்றால் என்ன? கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தவிர்த்து, வேறெதனிலும் நாம் நம்பிக்கை வைக்கும்பொழுது அவைகள் நலமானவைகளே. கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர்ந்த வேறெதுவும் நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோ ளாக இருக்குமாயின், அது எவ்வளவாய் ஆவிக்குரிய மகி மையை உடையதாயிருந்தாலும், அது அகற்றப்படவேண்டும்;

வேறெதனிலும் விசுவாசம் இருக்குமாயின், அது அழிக்கப்பட்டே யாகவேண்டும். அப்போதைய நிலைமையை இது படம்பிடித்துக் காட்டுகிறதுமட்டுமல்ல, தற்போதைய கிறிஸ்தவர்களையும் படம் பிடித்துக்காட்டுகிறது.

கர்த்தரோ சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து வையே ஏற்றுக்கொள்ளுகிறார் (**1கொரி. 1:23, 2:2**). சிலுவையில் நிறைவேற்றியதை விளங்குவது இலகுவானது; ஆனால், விசுவா சிப்பதோ கஷ்டமானது. மதப்பற்றுள்ள மனுஷன் தன்னுடைய சொந்த முயற்சியிலும், கிரியைகளிலும், அது எதுவாயிருந்தா லென்ன அதனில் ஒட்டிக்கொண்டிருக்கவே விரும்புகிறான் (**ஆதி. 21:10-12**); ஆனால், தேவனோ அதனை ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளமாட்டார் (**கலா. 4:30**).

ஏப்ரல்

1

***அ**ப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு என்றான்; ஏதோமிய னாகிய தோவேக்கு ஆசாரியர்கள்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்து பேரை அன்றையதினம் கொன்றான். ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபிலுமுள்ள புருஷரையும், ஸ்திரீ களையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடு களையும், கழுதைகளையும், ஆடுகளையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப்போட்டான் (1சாமு. 22:18-19).*

"ஆசாரியர்களின் கொலை"

சவுலின் ராஜ்யத்தின்போது மேற்கூறிய கொலைகள் நடந் தேறின; ஆயினும் தேவனுடைய அனுமதியில்லாமல் எதுவுமே நடக்காது என்பதனை நாம் முதற்கண் அறிந்துகொள்ளவேண்டும். **"ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?"** (**புலம்.** 3:37); ஆகவே தேவனே இதையும் அனுமதித்தார். தேவனுடைய மனுஷன் ஒருவன் சீலோவில் ஆசாரியனாயிருந்த ஏலியிடத்திற்கு வந்து, அவனை நோக்கி உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே மேற் கூறிய சம்பவமாகும் (**1சாமு.** 2:27-36); ஆனால், மேற்கூறிய

மரணங்களை ஏற்படுத்திய சவுல் மதநம்பிக்கையுள்ளவனே தவிர தேவனோடு உறவும் ஐக்கியமும் இல்லாதவன்.

மதம் ஒரு ஆபத்தான கொடிதான இரத்தவெறிகொண்ட ஒரு தொழில் எனக் கூறுவதே பொருத்தமானது. தேவனோடு உறவு விசுவாசத்தினாலேயன்றி **மதக் கிரியைகளினால்** அல்ல என்ப தனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். மதம் மாம்சத் தின் கிரியைகளை விரும்புமேதவிர ஒருபொழுதும் தேவனை விசுவாசிக்கமாட்டாது. கிறிஸ்தவம் எனத் தன்னைப் பிரகடனப் படுத்தும் அநேகமான கிறிஸ்தவ மார்க்கங்கள் யாவும் மதமே; உண்மையான கிறிஸ்தவம் என்பது மதமல்ல, உண்மையில் கிறிஸ்தவம் என்பது கிறிஸ்து என்ற மனுஷனோடு ஏற்படுத்தப் பட்ட உறவாகும்; மதம் (எதுவாயிருந்தாலென்ன) என்பது மனு ஷன் தன்னை மேம்படுத்த அல்லது தேவனை அறிந்துகொள்ள அவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழியாகும். இந்த வழியை அடைவதற்கு அவன் பிரமாணங்களை ஏற்படுத்தி அவற்றைச் செயற்படுத்தி, அதன்மூலம் தன் விருப்பத்தை (அது ஒருபொழு தும் சாத்தியப்படாதிருந்தும்) முடிவில்லாமல் பின்தொடர்கிறான்.

இவ்விதமான கிறிஸ்தவத்திற்கும் கிறிஸ்துவுக்கும் இடை யில் எவ்வித உறவுமில்லை; ஏனெனில், மதம் தேவனுடைய வழியல்ல; விசுவாசமே தேவனுடைய வழி; ஆனால், அவர்கள் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுவார்கள்; கதைப்பார்கள்; ஏன் வேதாக மத்தைப்பற்றிப் பிரசங்கமும் பண்ணுவார்கள்; ஆனால், அவர்கள் இரட்சிப்புக்குத் தம்முடைய முறைமைகளையும், சடங்குகளை யும் தாம் ஏற்படுத்திய பிரமாணங்களையும், சட்டதிட்டங்களை யுமே நம்பியிருக்கிறார்கள். இவர்கள் மறுபிறப்புப் பெறாதவர் கள் (**யோவா.** 3:3, 5); விக்கிரகாராதனைக்காரர்கள்; இவர்களால் ஏற்படுத்தப்பட்ட சகல கிறிஸ்தவ வழிகளும் இவர்களுடைய விக்கிரகங்களே. கிறிஸ்தவர்களுக்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்நாளிலே (மரணநாளில்) உங்களை அறியேன் எனக் கூறுவேன் என்றார் (**மத்.** 7:22-23).

தாவீது ஒருபொழுதும் சவுலுக்கெதிராக எக்காலத்திலும் யுத்தம் செய்யவில்லை; ஆனால், சவுலோ எப்படியாவது தாவீதைக் கொலை செய்யவேண்டும் என்பதில் திடமாயிருந்தான். பரிசுத்த ஆவியானவர் தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட அபிஷேகத்தைத் தாவீது தவறாக உபயோகித்து, சவுலுக்குத் தீங்கு செய்யவில்லை. தாவீது சவுலினுடைய தீங்கான எண்ணத்தை அறிந்திருந்தும், சவுலின்மேல் அன்புசெலுத்தினான். சவுலின் கொலை முயற்சிக்குத் தப்பின அபியாத்தாரை "....**நீ என் ஆதரவிலே இரு என்றான்**" (**1சாமு. 22:23**).

இந்தச் சந்தர்ப்பத்தில் தாவீதோடு சேர்ந்துகொண்ட அபியத்தாருக்கு எவ்வித முன்னேற்றமும் வெளிப்படையாயிருக்கவில்லை. தாவீதும் அபியத்தாரும் தொடர்ச்சியாக சவுலினால் துன்புறுத்தப்பட்டனர். அபியத்தார் தன்னைத் தாவீதோடு உட்படுத்தித் தேவனுக்குப் பிரியமான முடிவை (அது தனக்குத் துன்பமாயிருந்தும்) எடுத்தான். அப்படியே ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் தாவீதோடு கூடிக்கொண்டனர் (**1சாமு. 22:2**). இவர்கள் அபியத்தார்போன்று அபிஷேகம்பண்ணப்பட்ட தாவீதின் பக்கம் சேர்ந்ததினிமித்தம் சிறிது துன்பப்பட்டாலும், அவர்கள் தமக்குரிய மேன்மையைப் பின்பு பெற்றுக்கொண்டனர். தாவீதோடு சேர்ந்துகொண்ட அபியத்தார் பின்பு இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனாக இருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மதத்தின் (சவுலின்) செயற்பாட்டிற்கும் விசுவாசத்தின் (தாவீதின்) செயற்பாட்டிற்குமுள்ள வேறுபாட்டை நாம் இங்கு அறியக்கூடியதாயிருக்கிறது.

ஏப்ரல்

2

கர்த்தர் நாபாலை வாதித்ததினால், ஏறக்குறையப் பத்துநாளுக்குப்பின்பு, அவன் செத்தான் (1சாமு. 25:38).

"நாபாலின் மரணம்"

அவன் ஒருவரும் தம்மோடு பேசக்கூடாதபடிக்குப் பேலியாளின் மகனாயிருக்கிறான் (**1சாமு.** 25:17) என வேதவசனம் அறிவுறுத்துகிறது. தாவீதின் வேண்டுகோளை நாபால் நிராகரித்தது மட்டுமல்ல, தாவீதைக் கேலிசெய்தான் எனவும் நாம் காண்கிறோம் (**1சாமு.** 25:10-11). கர்த்தர் நாபாலைச் சங்கரித்தார்; ஆனால், நாபாலைவிட மிகுந்த உபத்திரவத்தைக் கொடுத்த சவுலை எதற்காகக் கர்த்தர் நீண்டகாலமாகத் தப்பவிட்டிருந்தாரென்பது பலருக்குப் புதிராயிருக்கிறது; இதற்குரிய பதில் மிகவும் இலகுவானது; ஆனால், பலர் அவ்வாறான பதிலை விரும்புவதில்லை.

தாவீதைப் பண்படுத்த, கர்த்தருக்கு சவுல் அவசியமாயிருந்தான்; தாவீது முற்றுமுழுவதுமாகத் தேவனை நம்பியிருப்பதற்கும் அவருடைய முகத்தை இடைவிடாமல் நாடுவதற்கும் சவுலினுடைய உபத்திரவம் தாவீதுக்குத் தேவையாயிருந்தது; இதன் மூலம் நாம் அறிந்துகொள்வது என்னவெனில், உண்மையான கிறிஸ்தவர்களுக்கு வரும் துன்பங்களையும் சந்தோஷங்களையும் அனுமதிப்பவர் கர்த்தரே; கர்த்தரின் அனுமதியில்லாமல் கிறிஸ்தவர்களுக்கு எதுவும் நடப்பதில்லை (**புலம்.** 3:37).

தாவீதைக் கொலை செய்யவேண்டுமென்ற சவுலின் முயற்சி, தாவீது கர்த்தரிடம் உதவியையும் வழிகாட்டுதலையும் பலத்தை யும் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது; ஆகவேதான், கர்த்தர் சவுலைச் சங்கரியாமல் நீண்டகாலமாகத் தப்பவிட்டார். பல முறை விசுவாசிகளாகிய நாம் நம்முடைய எதிரிகளை நம்மை விட்டு விலக்க முயற்சிசெய்கிறோம்; ஆனால், கர்த்தரோ அவை நம்மோடு இருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறார். தாவீது போன்று நாமும் அவருடைய முகத்தை நாடவும் நம்முடைய எதிரிகளின் இக்கட்டிலிருந்து விடுபடவும் தேவனை முற்றுமுழு வதுமாக சகலத்திற்கும் நம்பியிருக்கக்கூடிய நிலைமையைக் கர்த்தர் உருவாக்குகிறார்.

கர்த்தருக்குக் கீழ்ப்படிய மறுப்பது மனுஷகுலத்தின் சாபக் கேடாயிருக்கிறது. ஆதி மனிதனின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட அந்தப் பாவத்தின் நிமித்தம் மனுஷனுக்கும் தேவனுக்குமிடை யில் பகை உருவாகியிருந்தது (**ஆதி.** 3:15). இந்தப் பகைமை விசுவாசத்தின்மூலம் அப்புறப்படுத்தப்பட்டு (**எபேசி.** 2:14-16), தேவ னுக்கும் மனுஷனுக்குமிடையில் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒற்றுமையைப் பலப்படுத்தி விசுவாசத்தில் நிலைத்திருக் கத் தேவன் மேற்கூறியவாறு பல்வேறு வழிகளினால் தன்னிடத் தில் திரும்பிய தன் பிள்ளைகளை வழிநடத்துகிறார். தேவன் சவுலைப் பொருத்தமான நேரத்தில் தாவீதைவிட்டு அப்புறப் படுத்தியதுபோல (**1சாமு.** 31:1-5), நமக்கு அனுமதித்திருக்கும் கட் டுக்கள் கவலைகள் துன்பங்கள் வேதனைகள் எல்லாவற்றிலிருந் தும் விடுதலை தருவார். இதற்கு நாம் விசுவாசத்தில் நிலைத் திருப்பதே தேவனுடைய வேண்டுகோளாயிருக்கிறது (**1கொரி.** 2:2); ஆனால், மேற்கூறியவைகள் மிகவும் தீங்கு விளைவிக்கிற தாயிருந்தாலும், நாம் முழங்கால்படியிட்டு அவரிடம் திரும்பி சத்தியத்தில் பலப்பட உதவியாயிருக்கிறபடியினால், நமக்குத் தீங்காய்த் தோற்றமளிக்கிற யாவும் நமக்கு ஆசீர்வாதமேயன்றித் தீங்கல்ல (**எபி.** 12:11) என்பதனை நாம் நிச்சயமாக அறிவோமாக.

ஏப்ரல்

3

பின்பு தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும் படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக் கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித் துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான் *(1சாமு. 27:1).*

"நான் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்"

தாவீது இப்பொழுது பயத்தின் ஆவிக்கு இடங்கொடுத்திருக் கிறானே தவிர, அந்த விசுவாசத்திற்கு இடங்கொடுக்கவில்லை. சொற்பநேரத்திற்கு முன் (**1சாமு. அதி**:26) கர்த்தர் சவுலினிடத்தி லிருந்து விடுதலை கொடுத்ததைச் சீக்கிரமாய்த் தாவீது மறந்து போனான். அழுத்தம் தீவிரப்படுத்தப்பட்டவுடன் தேவனுடைய வாக்குத்தத்தத்தில் மனதை ஒருமுகப்படுத்துவது பலமான விசு வாசிக்கும் கஷ்டமான விஷயம் என்பதனைத் தாவீதின் செயல் நிரூபித்திருக்கிறது. பயம் ஒவ்வொரு பக்கத்தினாலும் தாவீதைச் சூழ்ந்தவுடன் **"நான் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து**

போவேன்" என்று அவன் நினைத்தான். தாவீது இவ்வளவு சீக் கிரமாய்த் தனக்குக் கிடைத்த நிச்சயமான வாக்குத்தத்தத்தை மறந்துபோனான்; ஆனால், சவுல் அதனை மறக்கவில்லை (**I சாமு. 24:20**). தாவீதிற்குப் பெலிஸ்தியர் மத்தியில் எவ்வித சம்பந்தமும் இல்லை; அப்படியே விசுவாசிக்கு அவிசுவாசியின் மத்தியில் எவ்வித சம்பந்தமும் இல்லை (**II கொரி. 6:14-18**).

விசுவாசத்தின் பாதை கரடுமுரடானதுதான் (**I சாமு. 14:13**); ஆனால், அது தேனைக் கொடுக்கும் (**I சாமு. 14:27**) என்பதனை அநேகர் அறியாதிருக்கிறார்கள். விசுவாசப்பாதையைக் கைவிட் டால், கர்த்தரோடு சஞ்சரித்தபோது கிடைத்த அனுபவங்களெல் லாம் நிறுத்திவைக்கப்படுகின்றது. முன்னேற்றம் இல்லாமல் இருக்கிறதுமட்டுமல்ல, பின்னடைவையும் துரிதப்படுத்துகிறது. **I சாமுவேல் 22:5**ல் விசுவாசம் தாவீதிடம் **"நீர் அரணில் இராமல் யூதாதேசத்திற்குப் புறப்பட்டுவாரும்"** என்றது; ஆனால், பயம் தாவீதிற்கு **"நான் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து போவேன்"** என்று சொன்னது. தேவனோடு ஐக்கியமும் அதே நேரம் பெலிஸ்தியரோடு ஐக்கியமும் சாத்தியப்படமாட்டாதே. பெலிஸ்தியரோடு வசிப்பதற்கு விரும்பினால், தேவனுடைய ஜனங்களோடு யுத்தஞ் செய்வதற்கும் தயங்கமாட்டோம் (**I சாமு. 29:8**).

தேவன் தாவீதின் மேலிருந்த அன்பினால், அவனுடைய பாது காப்புக்காக அவனுக்கு எதிராக எடுக்கப்பட்ட நகர்வுகள் எல்லா வற்றையும் ஒதுக்கித்தள்ளிய அதேநேரம் சிட்சையையும் அனு மதித்தார் (**I சாமு. அதி:30**). தாவீது ஆகிசுடன் இணைந்த நட வடிக்கையினால் அவனுக்குக் கிடைக்கவேண்டிய ராஜ்யம் தாமத மானதுமட்டுமல்ல, அவனோடு சேர்ந்த 600 பேரும் தேவனுக்கெதி ராகப் பாவச்செயல்களில் ஈடுபடச் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தி யது. தாவீது என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரியும்; ஆனால், நாம் என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரி யுமோ? எந்தக் காலத்திலும் நம்முடைய விசுவாசத்தைக்

கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி (**1கொரி. 2:2**), அந்த விசுவாசத்தில் நிலைத்திருக் கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவார் (**யோவா. 16:13**); அது ஒன்றே தேவனால் நியமிக்கப்பட்ட வழியாகும்.

ஏப்ரல்

4

***தே**சத்திலே குடியிருக்கிற எபூசியர்மேல் யுத்தம் பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடேகூட எருச லேமுக்குப் போனான். அவர்கள்: இதிலே பிரவேசிக்க தாவீதினால் கூடாது என்று எண்ணி, தாவீதை நோக்கி: நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை; குருடரும் சப்பாணி களும் உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள் (**II**சாமு. 5:6).*

"குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்"

எபூசியர்கள் தாங்கள் பலமானவர்கள் என்றும், தாவீது பல வீனன் என்றும், தங்களிடத்திலுள்ள குருடர்களும் சப்பாணிகளும் தாவீதைத் தடுப்பார்கள் என்றும் ஆர்ப்பரித்தார்கள். இதேமாதிரி சாத்தான் விசுவாசிகளைத் துன்புறுத்துவது வழமையான செய லாயிருக்கிறது. விசுவாசியை நோக்கிச் சாத்தான், நீ ஒருபொழு தும் உன்னைச் சுற்றியிருக்கிற மாம்ச இச்சைகளையும், மாம் சத்தின் கிரியைகளையும், பலமான கட்டுகளையும் உதறித்தள்ளி வெற்றிவாகைசூட உன்னால் முடியாது என்று சொல்லித் துன் புறுத்துவது அவனுடைய வழக்கமாயிருக்கிறது (**II சாமு.** 5:6).

யோசுவா எபூசியரைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினான் (**யோசு.** 11:7-12); யூதேயாவினர் எருசலேமைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார்கள் (**நியாயா.** 1:8); ஆனால், அவர்கள் எரு சலேமை அந்த நேரத்தில் சுதந்தரித்துக்கொள்ளாமல், அக்கினிக்கு

இரையாக்கிவிட்டார்கள்; அதனால், முன்பு அங்கிருந்த எபூசியர் கள் மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பினார்கள். 40 வருஷ காலமாக ஆட்சி புரிந்த சவுல் ராஜா எபூசியர்களை வெற்றி கொள்ளவில்லை; ஆனபடியினால், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியின் மத்தியில் இஸ்ரவேலியர்களுக்கு எதிரிகளான எபூசியர் களும் இருந்தார்கள்.

தாவீது ராஜாவானவுடன் தன்னுடைய முதல் வேலையாக எபூசியர்களை முறியடித்து, எருசலேமைப் பிடித்துக்கொள்ளத் திட்டம் தீட்டியிருந்தான். நமக்கு உள்ளேயிருக்கும் எதிரிகளான மாம்ச இச்சைகளையும், மாம்சத்தின் கிரியைகளையும், பலமான கட்டுகளையும் முதலில் நாம் அழிக்காவிட்டால், இறுதியில் வெளியிலுள்ள எதிரிகளான பிசாசும், உலகமும் நம்மை அழிக் கும்; அப்படியே சவுல் ராஜாவுக்கும் பெலிஸ்தியர்கள் செய்தனர் (**1சாமு. 31:1-5**).

ஏப்ரல்

5

***அ**வர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்த படியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான் (II சாமு. 6:6-7).*

"அநேகமான பிரசங்கமேடைகள் ஜீவனுக்குப் பதிலாக மரணத்தையே உண்டாக்குகின்றன"

"நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது" என்ற சொற்றொடரைப் பரிசீலனை செய்யும்பொழுது, எப்பொழுதும் அந்தக் களம் இருக்கிறதை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது; மேலும் வேதவாக்கியத்தின்படி **ஊசா தேவனுடைய பெட்டியைப் பிடித்தான்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. **"அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபமூண்டது"** (II சாமு. 6:7) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வேதவாக்கியங்களை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் நடு நடுங்கித் தம்முடைய இருதயத்தில், தேவன் அப்பொழுது செயற்பட்டதுபோல தற்போதைய கிருபையின் காலத்தில் செயற்

படாமல் இருக்கிறார் என நினைத்து, சந்தோஷமடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை; அப்படியல்ல, அவர் தொடர்ந்தும் அப் படியே செயற்படுகிறார்; கோடிக்கணக்கானோர் ஆவியில் மரித் துப்போயிருக்கிறார்கள். தேவகோபம் முன்பிருந்ததுபோல் அல் லாமல் இப்பொழுது குறைவாக மூளவில்லை. தேவன் **"நான் கர்த்தர், நான் மாறாதவர்"** என்று **மல்கியா** 3:6லும், **"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"** என்று **எபிரெயர்** 13:8லும் சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமான கிறிஸ்தவ சபைகள் ஜீவனைப் பிறப்பிப்பதாயிராமல் மரணத் தைப் பிறப்பிக்கிற களங்களாக இருக்கிறது. சிலுவையில் அறை யப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும்பொழுது அங்கே ஜீவன் உண்டு (**யோவா.** 6:54); வேறொரு சுவிசேஷத்தைப் (**IIகொரி.** 11:4; **கலா.** 1:6-9) பிரசங்கிக்கும்பொழுது அங்கு ஜீவன் இல்லை (**யோவா.** 6:53). கிறிஸ்துவின் சிலுவையைத் (**Iகொரி.** 1:23, 2:2) தவிர்ந்த வேறெந்தப் பிரசங்கமும் மரணத்தையே பிறப்பிக்கிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

ஏப்ரல்

6

***தே**வனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லா வற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீதுராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான். கர்த் தருடைய பெட்டியைச் சுமந்துபோகிறவர்கள் ஆறு தப்படி நடந்தபோது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக் கடாக்களையும் பலியிட்டான் (IIசாமு. 6:12-13).*

"தாவீது தேவனுடைய பெட்டியைக் கொண்டுவந்தான்"

தேவன் தன்மீது காரணம் இல்லாமல் கோபப்படவில்லை என்பதனைத் தாவீது அறிந்துகொண்டான். கர்த்தருடைய வார்த் தையின்படி தான் செய்த தவறைச் சரிப்படுத்தி, மிகுந்த சந்தோ ஷத்தோடே உடன்படிக்கைப் பெட்டியைத் தாவீது எருசலேமுக் குக் கொண்டுவந்தான்.

IIசாமுவேல் 6:13ஐப் பரிசீலனை செய்யும்பொழுது ஆறு தப்படி நடந்தபோது (ஒவ்வொரு 18 அடிக்கு) மாடுகளையும், கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் தாவீது பலியிட்டான் என்று அறியப்படு கிறது; மாம்சசிந்தையை உடையவர்கள் இத்தகைய செயலைப்

பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஒரு செயல் என்றும், வீண்செலவு என் றும் சொல்லுவார்கள்; ஆனால், கல்வாரி சிலுவையை ஒருவன் உற்றுநோக்கிப் பார்க்கும்பொழுது தாவீதின் செயல் அப்படியல்ல என்பதனை அறிந்துகொள்வான்; ஏனென்றால், தாவீது கொடுத்த பலிகள் யாவும் வரப்போகிற கிறிஸ்துவையும், அவர் சிலுவை யில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கப்போவதையும் பிரதி பலிக்கிறதே.

II சாமுவேல் 6:14ல் தாவீது நடனம் பண்ணினான் என்பதனைப் பார்க்கும்பொழுது, இந்த நடனம் மதப்புரளியல்ல, அவன் ஆவி யிலேயே ஆடினான்; ஏனென்றால், **"கர்த்தருக்கு முன்பாக"** என்று சொல்லப்பட்டிருக்கிறதே. மதச்சடங்குகள் மதநடவடிக் கைகளை உற்பத்திசெய்கிறது; அதனில் ஆவிக்குரிய சிறப்பு எதுவுமில்லை. ஆயினும் ஆவியினால் உற்பத்திசெய்யப்படும் கிரியைகள் சபைக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. **"சணல் நூல் ஏபோத்"** ஒரு மேலங்கி; இது சிறுபிள்ளைகள் தரித்திருக்கும் ஆடையைப்போன்றது. அது ஒரு ஆசாரியருக்குரிய மேலங்கி யாக இருக்கமுடியாது; அப்படித் தரிப்பதற்குத் தாவீதுக்கு உரிமை யில்லை (**II சாமு. 6:14**).

நாம் இப்பொழுது வல்லமையான ஒரு எழுப்புதலையே இந்தச் சம்பவத்தில் காணக்கூடியதாயிருக்கிறது. இஸ்ரவேலின் பெலன் அதனுடைய வலிமைமிக்க இராணுவத்தில் அல்ல, அதனுடைய ஐசுவரியத்தில் அல்ல, கர்த்தருடைய உடன்படிக் கைப் பெட்டியிலேயே இருக்கிறது; அது கர்த்தருடைய பிரசன் னத்தைப் பிரகடனப்படுத்துகிறது.

ஏப்ரல்

7

அ**வன் எங்கே என்று ராஜா கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இதோ, அவன் லோதேபாரிலே அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான் என்றான் (II**சாமு. 9:4).

"லோதேபார்"

"லோதேபார்" என்பது **"அந்த வனாந்தரமான இடம்"** எனப் பொருள்படுகிறது. இரட்சிக்கப்படாத ஜனங்கள் அந்த இடத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் சமூகத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தாலும், பெரும் ஐசுவரியவான்களாக இருந்தாலும், திரவியசம்பன்னர்களாக இருந்தாலும், எனக்கு ஒரு குறைவுமில்லை (**வெளி.** 3:17) என்று சொன்னாலும் வனாந்தரத்திலேயே இருக்கிறார்கள்; அவர்களை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அப்படியே பார்க்கிறார்.

இவர்கள் தேவனுடைய எல்லாவற்றையும் இழந்து கைவிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மனுஷன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மனப்பூர்வமாகத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்வரையும் தன்னுடைய சொந்த நிலைமையை அறியான்; கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்பே தன்னுடைய உண்மையான நிலைமையை அறிந்து, உணர்ந்துகொள்வான்; உண்மையில் தான் யார் என்பதனையும், வாழ்க்கையில் தன்னுடைய தூதுப்பணி என்ன

என்பதனையும் அறிந்துகொள்வான். கோடிக்கணக்கானோர் தொடர்ச்சியாக அடிக்கடி தங்களை **"அறிந்துகொள்ள"** முயற்சிக் கிறார்கள்; அது அவர்களால் முடியாது; ஏனென்றால், தவறான இடத்திலிருந்து அவர்கள் பார்க்கிறார்கள்; கிறிஸ்துவை ஒருவன் கண்டுகொண்டவுடன் அவன் தன்னைக் கண்டுகொள்கிறான்; அது வரைக்கும் வீணாகப் பார்க்கிறார்கள்.

மனுஷன் தேவனாலே உருவாக்கப்பட்டபடியினால், தேவன் ஒருவரே அவனுடைய இருதயத்தின் அடக்கமுடியாத விருப்பத் தைத் திருப்திப்படுத்தமுடியும்; வேறொன்றினாலும் சாத்தியப் படாது. புகழ், ஐசுவரியம், பணம், வல்லமை ஆகியன அவனு டைய ஆவிக்குரிய தாகத்தைத் தணிக்கப்போவதில்லை; இதனி மித்தமே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சமாரிய ஸ்திரீயை நோக்கி: **".....இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடி யும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக் கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது** (வேறெதனி லும் தாகம் இருக்காது); **நான் அவனுக்குக் கொடுக்கும் தண் ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற் றாயிருக்கும்" (யோவா. 4:13-14)** எனக் கூறினார்.

ஏப்ரல்

8

***இ**ப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்திய னாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவி யாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக் கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும் (II சாமு. 12:10).*

"பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்"

வீழ்ந்துபோன மனுஷனிலுள்ள சுபாவம் பாவத்தினால் நிறைந் திருக்கும் என்பதுபற்றி இந்த வேதவாக்கியம் ஆழ்ந்த அறிவைப் போதிக்கிறது. இதனை வாசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் தாழ்மையடையும் படிப்பினை கொடுக்கப்படுகிறது. அவனிடத்தி லிருக்கிற உண்மையான சுபாவம் அதுவேயாகும். தேவனுடைய கட்டுப்பாடு இல்லாமல், சோதனை கவர்ச்சிகரமாக்கப்பட்டு, கெட் டித்தனமாய்க் கொடுக்கப்பட்டால் கேட்டுக்கு எல்லையே இல்லை; எவ்வளவு அவமானத்தையும், வெட்கத்தையும், கபடத் தையும் மனுஷன் பொருட்படுத்தமாட்டான்.

தேவன் தாவீதை ராஜாவாக எழுப்பி, தேவனுடைய அரசு எப்படியிருக்கும் என்பதனைச் சாட்சியாக விளங்கப்பண்ணினார். தாவீதோ மனுஷனாக இருப்பதனால், தேவனுடைய பரிபூரணத் தைப் பிரதிபலிப்பது முடியாதகாரியம் என்பது தெளிவாக இருக் கிறது. உரியாவின் மரணத்தில் தாவீது பொய்யைப் பிணைந்து, தேவனுடைய சாட்சியைப் பொய்யாக்கினான். தேவன் சகல

ஜனங்களுக்கும் முன்பாகத் தாவீதைச் சிட்சித்து, நியாயந்தீர்த்து, தன்னுடைய கொள்கையை நிலைநாட்டினார்; ஒரு குமாரனால் தாவீது அவமானப்படுத்தப்பட்டான் (II**சாமு.** 13:4, 11-12); இன்னொரு குமாரனாலே நாடு கடத்தப்பட்டான் (II**சாமு.** 15:14); மூன்றாவது குமாரன் தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணினான் (I**இராஜா.** 2:22); குடிமகன் ஒருவனால் தாவீது சபிக்கப்பட்டான் (II**சாமு.** 16:5). தாவீதினுடைய ஜனங்கள் அவனுக்கு எதிராக நம்பிக்கைத் துரோகத்தில் ஈடுபட்டு, அவனைவிட்டு விலகினார்கள் (II**சாமு.** 17:1-3); அவனுடைய பிள்ளையைக் கர்த்தர் அடித்தார் (II**சாமு.** 12:15). அவனுடைய வீட்டைவிட்டு ஒருபொழுதும் பட்டயம் விலகவில்லை (II**சாமு.** 12:10). இந்தச் சம்பவத்திற்குப்பின்பு, தாவீதின் வாழ்க்கை தொடர்ச்சியாகத் துக்கம் நிறைந்ததாகவும், பரவலாகப் பெரும் இடறல்கள் நிறைந்ததாகவும் இருந்தது.

ஏப்ரல்

9

***நா**ன் இந்தக் காரியத்தை உபமானமாய்ப் பேசுகிற தற்கு உமது அடியானாகிய யோவாப் அதற்குக் காரண மாயிருந்தான்; ஆனாலும் தேசத்தில் நடக்கிறதை யெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவ தூதனுடைய ஞானத்தைப்போல் இருக்கிறது என்றாள் (IIசாமு. 14:20).*

"நான் இந்தக் காரியத்தை உபமானமாய்ப் பேசுகிறதற்கு"

தேவனுடைய மீட்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து, அதன் மூலமாகத் தேவனுடைய வார்த்தைக்கு அடிபணிந்து, அதற் கேற்றபடி நம்முடைய வாழ்க்கையை நெறிப்படுத்தாவிட்டால், நம்முடைய இருதயம் உலக ஞானத்தில் சிக்கிக்கொள்ளும் என் பதனைக் கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். தெக்கோ வாவின் புத்தியுள்ள ஸ்திரீ உலகத்தைப் பிரதிபலிக்கிறாள்; அவ ளுடைய உயர்ந்த ஞானத்தின் பொறிக்குள் மாட்டுப்படுவதற்கு, தாவீது அப்சலோமின் தகப்பன் என்ற முறையில் அவன் மேலுள்ள அன்பு காரணமாயிருந்தது; ஆனால் ஒரு ராஜா என்ற முறையில் தன் கடமையைச் செய்யவேண்டியதே அவசிய மானது. தேவனுடைய பிரமாணம் அப்சலோமுக்கு மரணத்தைக் கட்டளையிடுகிறது.

தாவீது ராஜா தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நிறை வேற்றியிருக்கவேண்டும். தாவீது அப்படிச் செய்திருந்தால், எத்தனையோ உயிரைப் பாதுகாத்திருக்கமுடியும். தனக்கேற்ற அவமானத்தையும், தான் செய்த பாவச்செயல்களையும் தவிர்த் திருக்கமுடியும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அம் னோனுக்கு மரணதண்டனையை நிறைவேற்றியிருந்தால் **IIசாமு வேல்** 13:14ல் குறிப்பிட்ட மிகப்பெரிய தீங்கைத் தவிர்த்திருக்க முடியும். இவை யாவும் உறுதிப்படுத்துவது என்னவென்றால், மனுஷன் தாமதமாகக் கற்றுக்கொள்கிறதுமட்டுமல்ல, தேவ னைத் தவிர்த்துத் தன் சொந்த பலத்தில் கிறிஸ்தவன் நடக்கும் பொழுது, தன் வாழ்நாள் முழுவதும் தனக்குக் கசப்பை ஏற் படுத்துகிறான் என்பதனையும் அவன் அறிந்திருக்கவேண்டும். தேவனுடைய சித்தம் தேடப்பட்டதா என்பதே இந்த அதிகாரத்தின் மிகமுக்கியமான கேள்வியாயிருக்கிறது; இல்லை என்பதே பதி லாயிருக்கிறது.

ஏப்ரல்

10

***இ**ந்தப்பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான் (IIசாமு. 15:6).*

"அப்சலோமின் ஆவி"

IIசாமுவேல் 15ம் அதிகாரம் அப்சலோமின் இரண்டக ஊடுரு வலையும், அவனுடைய ஆவி ஏற்படுத்திய கொடூரத்தையும் தெளிவாக அம்பலப்படுத்துகிறது. தேவனுடைய அதிகாரத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அப்சலோமின் ஆவி நாடு கிறது; நிச்சயமாக அத்தகைய முயற்சி தோல்வியிலேயே முடி யும்; ஆனால் அதனால் ஏற்படும் சேதம் அதிகம்.

தேவனுடைய ஊழியத்தில் அப்சலோமின் ஆவியின் ஊடுரு வல் நிறைந்துபோயிருக்கிறது. இதன் பொருள், தேவனால் அபி ஷேகம்பண்ணப்பட்ட மனுஷனுடைய இடத்தை ஒருவன் பல் வேறு முயற்சிகளை மேற்கொண்டு, தன்னைத்தான் அபிஷேகம் பண்ணி, தேவனுடைய இடத்தைத் தான் அபகரித்துக்கொள்வ தாகும். சபைகளுக்குள் கலகம் ஏற்படுவதற்குக் காரணம் இந்த அப்சலோமின் ஆவியே. அநேகமான மதப்பற்றுள்ள கிறிஸ்தவ மார்க்கங்களுக்குள் அப்சலோமின் ஆவி நிறைந்திருக்கிறது; ஏனென்றால், அரசியல் சாணக்கியம் பரவலாக, வழமையான ஒன்றாகக் காணப்படுகிறது; ஆகையால், அப்சலோமின் ஆவி

அங்கு ஆளுகை செய்கிறது. சபையில் தேவ ஆவிக்குப் பக்கத் தில் இது அமர்ந்திருக்கிறது. தேவ ஊழியத்தினுடைய சரித்தி ரத்தை ஆராய்ந்து பார்க்கையில் அப்சலோமின் ஆவி தொடர்ச்சி யாக ஆட்சிசெய்த வண்ணமாகவே இருக்கிறது; தேவ ஆவிக்கு முதன்மையோ, மேன்மையோ கொடுக்கப்படுவதில்லை.

ஏப்ரல்

11

***அ**வர்கள் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள். அப்சலோம் உயிரோடே இருக்கையில்: என் பேரை நினைக்கப்பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான்; அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும் (II சாமு. 18:17-18).*

"அப்சலோமின் அடையாளம்"

யோவாப்பின் ஆயுததாரிகளாகிய பத்து சேவகர்கள் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக் கொன்றுபோட்டார்கள். பின்பு அவர்கள் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்களென **II சாமுவேல் 18:15,17**ல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது; இது அப்சலோமுக்கு ஏற்பட்ட பெரும் அபகீர்த்தியாகப் போய்விட்டது; இதன்மூலம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்யும் சகல ஜனங்களுக்கும் இதுவே

தீர்ப்பாயிருக்கும் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்சலோம் தாவீதுக்கு எதிராக செயற்பட்டிருந்தும், குறிப்பாகத் தாவீதின் குமாரனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு எதிராகவே கிளர்ச்சி செய்தான். தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி தாவீதின் ஆட்சி; அந்த ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்பவன் தாவீதுக்கல்ல, தேவனுக்கெதிராகவே கிளர்ச்சிசெய்கிறான்; இது மரணத்துக்குரிய பாவம் (**IIயோவா. 5:16-17**); ஆயினும், தாவீதும் பொல்லாத பாவத்தைச் செய்தானே? அவன் வேசித்தனம் செய்ததுமட்டுமல்ல (**IIசாமு. 11:1-4**), தான் தவறான நடத்தைக்குட்படுத்திய பெண்ணின் சொந்தப் புருஷனையும் கொலைசெய்தானே (**IIசாமு. 11:7-17**), அது மரணத்துக்குரிய பாவமில்லையோ எனப் பலர் தர்க்கிப்பதுண்டு. அப்சலோமின் பாவத்துக்கும் தாவீதின் பாவத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்வோமாயின் யாருடைய பாவம் பொல்லாதது என்பதனை நாம் உணர்ந்துகொள்ளமுடியும்; எல்லாப் பாவங்களும் அவருடைய பிரமாணங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டதன் பிரதிபலனேயாகும்.

ஆனால், தாவீதினுடைய பாவம் கட்டுப்படுத்தமுடியாத தீவிர உணர்ச்சியினால் மேற்கொள்ளப்பட்ட பாவம்; இது மாம்சத்தின் கிரியை எனப்படும் (**கலா. 5:15-20**). தான் மேற்கொண்ட வேசித்தனத்தை மூடுவதற்குத் தாவீதினால் மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனமே பத்சேபாளின் புருஷனின் கொலைக்குக் காரணமாயிருந்தது; ஆனால், அப்சலோம் சாத்தானோடு கூட்டுச்சேர்ந்து, சாத்தான் தேவனுக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியைப்போலவே (**ஏசா. 14:13-14**) அப்சலோமுடைய பாவமும் இருந்தது; இது மகா பொல்லாத பாவம்; ஆனால், அநேகமான கிறிஸ்தவர்கள் அப்படிப் பார்ப்பதில்லை; அவர்கள் அப்சலோமுக்குச் சார்பாகவே பேசுவார்கள்: அப்படியே இஸ்ரவேலியர்களும் செய்தார்கள்; ஏனெனில் அப்சலோமின் கிளர்ச்சி மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சரிபோன்றே தோன்றும்.

அடுத்ததாகத் தாவீது தன்னுடைய பாவத்துக்கு மற்றவர் களைப் பங்காளிகளாக்கவில்லை; ஆனால், அப்சலோமோ தன்னு டைய பாவச்செயலுக்கு முழு இஸ்ரவேலியர்களையும் இழுத்துச் சென்றான். இது இஸ்ரவேலின் அஸ்திபாரத்தையே நிர்மூலமாக் கும் செயல்மட்டுமல்ல, தேவனுடைய மனிதகுல மீட்பின் திட்டத்திற்கு எதிரான கிளர்ச்சியுமாகும். மேலும், தாவீது தான் செய்த பாவத்துக்கு மனம் வருந்தினான் (**சங். அதி:51**); ஆனால், அப்சலோமோ தன்னுடைய பாவத்துக்கு மனம் வருந்தினதாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. சாத்தானும் தன்னு டைய கிளர்ச்சிக்கு மனம் வருந்தவில்லை; அப்படியே அவனு டைய பிள்ளைகளும் தம்முடைய பாவங்களுக்கு மனம் வருந்து வதில்லை. தாவீதோ கர்த்தருக்குப் பிரியமானவனாயிருக் கிறான்; ஆனால், அப்சலோமோ தேவனை அறிவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. அப்படியாயின் அவன் மரித்து, அவனுடைய ஆத்துமா எரிநரகத்துக்குள் தள்ளப்படவேண்டியது அப்சலோமின் தெரிவாயிருக்கிறது (**யோவா. 3:16-18**). அப்படியே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சக ராக ஏற்றுக்கொள்ளாத யாவருடைய முடிவும் அப்சலோமின் முடிவாகவே இருக்கும்.

ஏப்ரல்

12

***யோ**வாப் கூஷியை நோக்கி: நீ போய், கண்டதை ராஜாவுக்கு அறிவி என்றான்; கூஷி யோவாபை வணங்கி ஓடினான். சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் இன்னும் யோவாபை நோக்கி: எப்படியானாலும் கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே என்று திரும்பக் கேட்டதற்கு, யோவாப்: என் மகனே, சொல்லும்படி உனக்கு நல்ல செய்தி இல்லாதிருக்கையில், நீ ஓட வேண்டியது என்ன என்றான் (IIசாமு. 18:21-22).*

"சொல்லும்படி நல்ல செய்தி இல்லாதிருக்கையில், நீ ஓடவேண்டியது என்ன"

நாம் சற்று விபரமாக **IIசாமுவேல்** 18:19-32ம் வசனம்வரையும் உற்றுநோக்குவோமாயின் யுத்தமுனையிலிருந்து தாவீது ராஜாவுக்கு செய்தி எவ்வாறு கொடுக்கப்படுகிறது என்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறது. **"சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ்: கர்த்தர் ராஜாவை அவர் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்னும் செய்தியை அவருக்குக் கொண்டுபோக, நான் ஓடட்டுமே என்றான்"** (**IIசாமு.** 18:19). அகிமாஸ் ஓடவேண்டுமென்று விரும்புகிறான்; ஆனால், ராஜாவிடம் கொடுப்பதற்கு அவனிடம் செய்தியில்லை (**IIசாமு.** 18:22). இதேபோல, அவிசுவாசிகளும், தேவனுடைய வழியைப் பின்

பற்றாத கிறிஸ்தவர்களும் தேவனைப்பற்றிய செய்தி தம்மிடம் உண்டு என நிஜமாகவே நம்பித் தேவனுக்காக ஓடுகிறார்கள். வஞ்சக ஆவியின் வற்புறுத்தலின் நிமித்தமே இவர்கள் இவ்வாறான ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுகிறார்கள். சாதோக்கின் குமாரன் நானும் ஓடட்டுமே என்று திரும்பக் கேட்டதற்கு யோவாப்: என் மகனே, சொல்லும்படி உனக்கு நல்ல செய்தி இல்லாதிருக்கையில், நீ ஓடவேண்டியது என்ன என்றான்.

அப்படியே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப்பற்றிய (I**கொரி.** 2:2) செய்தி இல்லாதிருக்கையில், அநேகமான போதகர்கள் சபையினருக்கு மனுஷனுடைய கற்பனைகளையும் பிரமாணங்களையும் ஒழுக்க விதிமுறைகளையும் மனோதத்துவ மனோவசிய உலக ஞானங்களையும் சுவிசேஷ செய்திகளாகக் கொடுத்து, அதற்கு ஆதாரமாகப் பொருத்தமற்ற வேதவாக்கியங்களைச் சமர்ப்பித்து சாத்தானுடைய ஊழியத்தை நிறைவேற்றுகிறார்கள். இவர்கள் வேறொரு சுவிசேஷத்தையும் வேறொரு இயேசுவையும் போதித்து, வேறொரு ஆவியை சபையினர்மேல் கட்டவிழ்த்து விடுகிறார்கள் (II**கொரி.** 11:4). நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் எனப் பவுல் அப்போஸ்தலர் குறிப்பாகக் கூறியிருப்பது (I**கொரி.** 1:23) போதிக்கவேண்டிய செய்தி என்ன, கொடுக்கவேண்டிய செய்தி என்ன என்பதனை வலியுறுத்துகிறது.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கியாத எந்தச் செய்தியும் தேவனுடைய செய்தியல்ல என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். அநேகமான போதகர்கள்மட்டுமல்ல, ஏராளமான கிறிஸ்தவர்களும்கூட வீணாக ஓடுகிறார்கள்; அவர்களிடம் ஆத்துமாவுக்குத் தேவையான செய்தியில்லை. இப்படியிருக்க, "**யோவாப் கூஷியை நோக்கி: நீ போய், கண்டதை ராஜாவுக்கு அறிவி என்றான்**....." (II**சாமு.** 18:21). கூஷி அகிமாசைப்போல நன்றாக ஓடக்கூடியவனல்ல; ஆனாலும், ராஜாவுக்குக் கொடுக்கவேண்டிய செய்தி அவனிடம்

உண்டு; ஆகவே தேவையானது செய்தியேதவிர ஓட்டமல்ல. அகிமாஸ் கூஷியைவிட வேகமாக ஓடியும் ராஜாவுக்கு செய்தி கொடுக்கமுடியவில்லை. "**.....ராஜா: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டதற்கு, அகிமாஸ் யோவாப் ராஜாவின் வேலைக்காரனையும் உம்முடைய அடியானையும் அனுப்புகிறபோது, ஒரு பெரிய சந்தடியிருந்தது; ஆனாலும் அது இன்னதென்று தெரியாது என்றான்; அப்பொழுது ராஜா நீ அங்கே போய்நில் என்றான்.....**" (**II சாமு. 18:29-30**).

ஆயிரக்கணக்கான போதகர்கள் சந்தடியைக் காண்கிறார்களே தவிர அவர்களிடம் கொடுக்கவேண்டிய செய்தி இல்லை. சந்தடியை அவர்கள் காண்கிறார்கள் ஆனால், அது என்ன என்பதனை அறியாதிருக்கிறார்கள். கூஷி என்பவன் அகிமாசைவிட வேகமாக ஓட இயலாவிட்டாலும் ராஜாவை அணுகியவுடன் ராஜாவிடம் கொடுப்பதற்குத் தேவையான செய்தியை உடையவனாயிருந்தான்.

தேவனே! உம்மால் தெரிவுசெய்யப்பட்ட, உம்மால் அபிஷேகம் பண்ணப்பட்ட, ஆவியில் நடக்கிற, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழியை அறிந்த போதகர்களை (**எரேமி.** 3:15), அழிந்துகொண்டிருக்கும் உலகத்திற்குக் கொடுத்து, உம்முடைய செய்தியைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்யும்; ஆமென்.

ஏப்ரல்

13

***அ**ப்படியே ராஜா பலியிட கிபியோனுக்குப் போனான்; அது பெரிய மேடையாயிருந்தது; அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான். கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்தில் தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார் (1இராஜா. 3:4-5).*

"சாலொமோனுக்குக் கர்த்தரின் தரிசனம்"

சாலொமோனுக்குக் கர்த்தர் சொப்பனத்திலே தரிசனமானார்; இந்த மாபெரும் தரிசனம் எப்பொழுது ஏற்பட்டது? சாலொமோன் கிபியோனுக்குப்போய் அங்குள்ள பலிபீடத்தில் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தியபின்பே இந்தத் தரிசனம் ஏற்பட்டது என்பதனை நாம் அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. ஆயிரம் மிருகங்களைப் பலியாகக் கொடுத்ததன்மூலம் சாலொமோன் இஸ்ரவேலின் ஐசுவரியம் அதன் பலம் அதன் விடுதலையாவும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்திலேயே தங்கியிருக்கிறது என்பதனை நன்கு அறிந்திருக்கிறான்.

நம்முடைய ஆண்டவர் நமக்கு எதனைத் தந்தாலும், சிலுவை மூலமே அதனைத் தருகிறார். இயேசுகிறிஸ்துவே சகலத்திற்கும் ஆதாரமாக இருந்தாலும், சிலுவைமூலமாகவே அதனைச் செய்கிறார். அப்படியாயின் சிலுவைமூலமாகவே அவர் நமக்குள்

வந்து பரிசுத்த ஆவியின்மூலமாக வாசஞ்செய்கிறார் (**1கொரி.** 3:16). கிறிஸ்துவின் சிலுவை நிராகரிக்கப்பட்டால், அவர் நமக்குத் தரவிரும்பும் சகலத்தையும் வரவிடாமல் தடுத்து, நாமே அந்த வாசலை மூடிவிடுகிறோம். **சாலொமோன் இந்தப் பலிகளைக் கொடுத்ததனால் தேவனிடத்திலிருந்து எதையும் சம்பாதிக்கவில்லை; ஆனால், இதன் வழியாகத்தான் தேவனை நாடினான்;** அவர் அவனுடைய விருப்பத்தைக் கொடுத்தார்.

அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (**ஆதி.** 15:6) என்று சொல்லப்பட்டிருக்கிறது; அன்று எப்படியோ இன்றும் அப்படியே (**எபி.** 13:8), ஒரு மாற்றமும் இல்லை; இருபக்கமும் மூடப்படாத அழைப்பை சாலொமோனுக்குக் கொடுத்தார். **"நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்"** என்ற திறந்த வாசலை அவனுக்கு ஏற்படுத்தினார்; இன்றும் அதேமாதிரி நமக்குத் திறந்த வாசலும் இருபக்கமும் மூடப்படாத அழைப்பும் தரப்பட்டிருக்கிறது; ஆண்டவர் இயேசுவின் மூடப்படாத திறந்த அன்பைப் பிரதிபலிக்கும் சில வாக்குத்தத்தங்களைப் பார்ப்போம் (**மத்.** 7:7-8, 17:20, 18:19, 21:22; **மாற்.** 9:23, 11:24; **யோவா.** 14:13-14, 15:7, 16:23-24; **பிலி.** 4:6-7; **1யோவா.** 3:22, 5:14-15).

ஆண்டவரே மேற்கூறிய வாக்குத்தத்தங்களை நமக்குப் பொழிந்தருளியிருக்கிறார். பழைய உடன்படிக்கையின் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களைவிடப் புதிய உடன்படிக்கையின் பரிசுத்தவான்களுக்கு அநேகமான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது (**எபி.** 8:6). இதனால்த்தான் யோவான்ஸ்நானனைவிட நாம் எவ்வளவோ பாக்கியவான்கள் என ஆண்டவர் கூறியிருந்தார் (**லூக்.** 7:28); இந்தப் பாக்கியம் நம்முடைய தராதரத்தினால் அல்ல, கிறிஸ்து நம் சார்பில் சிலுவையில் நிறைவேற்றியதன் நிமித்தமே நமக்குக் கிடைத்தது என்பதனை நாம் மறவாதிருப்போமாக; ஆயினும், நம்முடைய

அழைப்புக்கேற்பத் தேவன் நம்மோடு செயற்படுகிறார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும்.

ஒரு முதிர்ச்சியடைந்த விசுவாசி தேவனுடைய வழிநடத்தலை எல்லாவற்றிற்கும் நாடுவான்; நிகழ்ச்சிநிரலைத் தான் ஏற்படுத்தாமல் அதனைப் பரிசுத்த ஆவியானவரின் கையில் விட்டுவிடுகிறான். பின்பு தேவனுடைய அழைப்புக்கேற்ப நம்முடைய தேவைகளை விண்ணப்பிக்கிறோம்; ஆயினும், நாம் மிகவும் அவதானமாயிருக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையைத் தேவனுக்கு எதிராக ஒருபொழுதும் பாவிக்கக்கூடாது. உதாரணமாக, **மத்தேயு** 21:22ல் **"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்"** எனக் கூறப்பட்டிருக்கிறது. அவர் நம்முடைய வாழ்க்கைக்குத் தன்னுடைய சித்தத்தையே குறிப்பிட்டிருக்கிறார். அந்த அடிப்படையில் நாம் கேட்கலாம்; சுயநலத்தையுடைய நிகழ்ச்சிநிரல் ஒருபொழுதும் அனுமதிக்கப்படமாட்டாது. நம்முடைய ஆண்டவரே கெத்சமனே தோட்டத்தில் உதாரணமாய் நடந்தார்.

அவர் **லூக்கா** 22:42ல் **".....ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்"**. துரதிஷ்டவசமாக **"விசுவாச வார்த்தை"** மார்க்கத்தினர் பொருத்தமான அறிக்கையிடுவதனால் எதனையும் பெற்றுக்கொள்ளலாம் என்கிறார்கள்; அந்தவிதமான முயற்சி நாசத்தையே ஏற்படுத்தும் என்பதனைப் புரிந்துகொண்டால் நலமாயிருக்கும்.

கர்த்தருடைய ஜெபத்தில் உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோலப் பூமியிலும் செய்யப்படுவதாக (**மத்.** 6:10; **லூக்.** 11:2) என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ஏப்ரல்

14

***இ**வன் இரண்டு வெண்கலத் தூண்களை உண் டாக்கினான்; ஒவ்வொரு தூண் பதினெட்டு முழ உயர மும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது (**I**இராஜா. 7:15).*

"இரண்டு வெண்கலத் தூண்கள்"

இரண்டு வெண்கலத் தூண்களைப்பற்றி ஏழு தரம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியினால், (**Iஇராஜா. 7:15; IIஇராஜா. 25:13; Iநாளா. 18:8; IIநாளா. 3:15; எரேமி. 27:20, 52:17; வெளி. 3:12**) இதன் முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. **Iநாளாகமம் 18:8**ல் இந்தத் தூண்களுக்கு உபயோகிக்கப்பட்ட வெண்கலம் தாவீதினால் சீரியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது புறஜாதிகளின் பிரதேசத்திற்குள் பிரவேசித்து, திடீர் தாக்குதல் நடத்தி, அவர்களிடமிருந்து வெண்கலத்தை எடுத்துக் கொண்டது எதனை அடையாளமாகக் காட்டுகிறது என்றால், விசுவாசிக்கிற பாவிகளைத் தேவன் தன்னுடைய ராஜ்யத்திற் குள் இழுத்துச்செல்வதைக் காட்டுகிறது. தாவீது இதனை எடுத் துக்கொள்வதற்கு முன்பு இந்த வெண்கலங்கள் அந்நிய தேவர் களுக்கு விளக்குத்தண்டுகளாகவும், கதவுகளாகவும், புறஜாதி களின் தேவர்களுடைய பலிபீடங்களாகவும், சகலவித தட்டு முட்டுக்களாகவும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது; விசுவாசிக்கிற

பாவிகள் உலகத்திலிருந்து தேவனுடைய கிருபைக்குள் கொண்டு வரப்படுவதை இது பிரதிபலிக்கிறது.

நியமிக்கப்பட்ட நேரம் வந்தபொழுது சாலொமோன் இந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக உருக்கி, அவைகளுடைய முந்தின தோற்றத்தை அழித்துப்போட்டான். நம்முடைய கடந்தகால அக்கிரமங்கள் கிறிஸ்துவுக்குள் அழிக்கப்பட்டதை இது பிரதிபலிக்கவில்லையா? (**IInாளா. 4:17**). நாம் ஒரு தப்பான அபிப்பிராயத்தை உடையவர்களாக இருக்கிறோம்; அதெப்படியென்றால், அவிசுவாசிகளின் ஆற்றல்கள், கெட்டித்தனங்கள் ஆகியவற்றை அவர்கள் கர்த்தருக்குள் வந்தவுடன் எவ்வளவாய் கிறிஸ்துவினுடைய ஊழியத்திற்கு அவைகளை உபயோகிக்க முடியும் என்று எண்ணுகிறோம். உண்மையில் அவைகள் எதுவும் தேவனுக்கு உபயோகிக்கமுடியாது. அவர்களிலிருக்கும் உலகமும், மாம்சமும், ஆற்றல்களும், கெட்டித்தனங்களும் முற்றுமுழுவதும் அகற்றப்படவேண்டும் (**IInாளா. 4:17**). பரிசுத்த ஆவியானவர் ஒருவரே தன்னுடைய பரிபூரண வழியைச் செயற்படுத்தவேண்டும்.

இப்படியிருக்க, ஆசரிப்புக் கூடாரத்தோடு ஆலயத்திற்கு முன்பாக இந்தப் பிரசித்தமான வெண்கலத்தூண்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அதன் சிறப்பியல்புகள் விநோதமாக இருக்கிறது; ஏனென்றால், ஆசரிப்புக் கூடாரத்தில் தேவன் அவர்களுடைய பிரயாணத் துணையாளராக இருந்தார்; ஆனால், ஆயிரம் வருஷகால ஆட்சியின்போது அவர்களோடு வசிப்பார். இந்தத் தூண்கள் சிற்பக்கலை வேலையாயிருந்து, அதன் பலத்தையும், அழகையும், கிருபையையும், அதன் தலைசிறந்த இரம்மியத்தையும் எடுத்துக்கூறும் காட்சியாயிருந்தது.

இந்தத் தூண்கள் ஆயிரம் வருஷகாலத்தின்போது இயேசு கிறிஸ்து ராஜாவாக இருப்பார் என்பதனைப் படம்பிடித்துக்காட்டுகிறது. பூமியில் அவர் தன்னுடைய ராஜ்யத்தை அமைக்கும் பொழுது அவருடைய பலத்தையும், கிருபையையும், அழகையும்,

அவருடைய வாழ்க்கையையும், அவரில் காணப்படும் கனியையும்பற்றிக் குரல் கொடுக்கிறது.

இந்த வெண்கலத்தூண்கள், உதிக்கும் சூரியனை எதிர்நோக்கியிருந்தபடியினால், அவைகளில் சூரியஒளிபடும்போது தூண்களின் பிரகாசமான ஒளி மேலும் மெருகூட்டப்பட்டது.

அவைகள் கிறிஸ்துவின் மகிமையைக் காட்டுகிற அதேநேரம், தேவனுடைய வீட்டின் கதவாகவும் பிரதிபலிக்கிறது. ஆயினும், நம்முடைய ஆண்டவர் **வெளி.** 3:12ல் **"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்** ....." எனக் கூறியிருக்கிறார்; இதன் பொருள், ஒவ்வொரு விசுவாசியும் வெண்கலத் தூண்களின் மாதிரியாயிருந்து, ஆயிரம் வருஷ ஆட்சியின்போது கிறிஸ்துவுடனேகூட இந்தப் பூமியை ஆளுவார்கள்.

ஏப்ரல்

15

***சா**லொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை (இராஜா. 11:4).*

"விசுவாசத்தினால் நியாயப்படுத்துதல்"

சாலொமோனுடைய மனைவிகள் அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி அவனுடைய இருதயத்தைச் சாயப்பண்ணினார்கள் என்று வேதம் வலியுறுத்துகிறது. தேவன் சகல பாவங்களையும், குறிப்பாக விக்கிரகாராதனையை வெறுக்கிறார். ஆயினும், இதே வேதவாக்கியத்தில் தாவீதின் இருதயம் தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சுயநீதியை உடையவர்கள் இந்த வேதவாக்கியத்தின் தாற்பரியத்தை அறியமுடியாது; ஏனென்றால், தாவீதின் அருவருப்பான பயங்கரமான பாவங்களை எந்த வழியில் பார்த்தாலும் சாலொமோனுடைய பாவத்தைவிட மோசமாயிருக்கிறது என்பார்கள்.

தாவீது பத்சேபாளோடு விபசாரத்தில் ஈடுபட்டதையும், அவளுடைய புருஷனாகிய உரியாவைக் கொலைசெய்ததையும் எப்படி சாலொமோனுடைய பாவத்தோடு ஒப்பிடமுடியும் என சுயநீதி ஆர்ப்பரிக்கிறது. தாவீது மேற்கூறிய பாவங்களைமட்டுமல்ல,

இன்னும் அநேகமான பாவங்களைச் செய்தான் என வேதம் உறுதிப்படுத்துகிறது. ஏதோ ஒரு வழியில், இந்தக் குற்றங்கள் மற்றக் கிறிஸ்தவர்களிடம் இல்லையோ? **"இல்லை"** என்று ஒருவன் மார்தட்டுவானாயின் எதற்காக ஆண்டவர் "..... **உங்களில்** (இந்தப்) **பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல் லெறியக்கடவன்...."** என **யோவான்** 8:7ல் வேதபாரகர்களுக்கும், பரிசேயர்களுக்கும் சொல்லியிருந்தார் என்பதனைச் சிந்தித்து, அதே கேள்வி ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தும் என்பதனை உணர்ந்துகொள்வானாக. எல்லாரும் இழிவான முறையில் தங்களுடைய வாழ்க்கையில் என்றோ ஒருநாள் தவறியுள்ளனர்; அதனை மனுஷன் அறியாவிட்டாலும் தேவன் நன்கு அறிவார்; ஆயினும் தாவீதைமட்டுமல்ல, ஒவ்வொரு மறுபிறப்புப் பெற்ற கிறிஸ்தவனையும் **"பரிபூரணமானவன்"** எனத் தேவன் அவன்மேல் முத்திரை குத்துகிறார்;

"நியாயப்படுத்துதலே" (Justification) இதற்குப் பதிலாகும். செய்த பாவச்செயல்களுக்கு பாவமன்னிப்பைக்கோரி, மனம் வருந்தி, மனந்திரும்பினால் (**Iயோவா. 1:9**) தேவன் அதனை மன்னித்து, அவன் அந்தப் பாவசெயலைச் செய்யவில்லை என்றே கருதுகிறார். ஆகையால், தாவீதினுடைய பயங்கரமான பாவச் செயல்களுக்கு உண்மையாக மனம்வருந்தி அவன் பாவமன்னிப்பைக் கேட்டபடியினால் (**சங். அதி:51**), அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, கழுவப்பட்டது; இதனிமித்தம் தேவன் அவனைப் பரிபூரணமானவன் என முத்திரை குத்துகிறார்; ஏனெனில், பரிபூரணமானவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) அவன் இருந்தான்; அதனால் அல்லவோ தாவீது **"கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டுவந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை"** (**சங். 18:21; IIசாமு. 22:22-24**) எனப் பணிவாகச் சொல்கிறான். **"நியாயப்படுத்துதல்"** உறுதிப்படுத்துவது என்னவென்றால், தேவன் அப்படியான பாவச்செயல்கள் ஒருபொழுதும் நடைபெறவில்லை என்றே கணிக்கிறார்.

அப்படியே சாலொமோனும் சுத்தஇருதயத்தோடு தான் செய்த பாவச்செயல்களுக்கு மனம்வருந்தி, மனந்திரும்பியிருக்கலாம்; ஆயினும், கடைசிவரைக்கும் வேதவாக்கியத்தில் அவன் தேவனிடத்தில் திரும்பினதாகச் சொல்லப்படவில்லை; ஆனாலும், **பிரசங்கி** 12:13ல் **"..... தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனிதர்மேலும் விழுந்த கடமை இதுவே"** எனக் கூறியிருக்கிறான். இதிலிருந்து சாலொமோன் ஒருவேளை தேவனிடத்தில் திரும்பியிருக்கலாம் என நம்பப்படுகிறது; ஆயினும் அது ஊகமே; ஏனென்றால், இதைப்பற்றி வேதம் மௌனம் சாதிக்கிறது!

ஏப்ரல்

16

***அ**ப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன் என்றான் (1இராஜா. 13:7).*

"வெகுமானம்"

மறுபிறப்புப்பெற்ற கிறிஸ்தவர்களும், தேவனால் அழைக்கப் பட்ட போதகர்களும் தற்பொழுது பெரும் ஆபத்தை எதிர்நோக்கி யிருக்கிறார்கள். அவர்கள் உலகத்தின் வெகுமானத்திற்காகக் கையேந்தி நிற்கிறார்கள். வெகுமானத்தை நிராகரிப்பது அல்லது அதனை இழப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. அநேகமான கிறிஸ்தவர்கள் உலகத்தின் கைதட்டல் நிறைந்த ஆரவாரத்தையும், உலகத்தினுடைய சம்மதத்தையும், உலகத் தின் வெகுமதியையும் பெறுவதற்குக் கடும்பிரயத்தனம் செய் கிறார்கள். அந்த வெகுமானத்தைப் பெறவேண்டுமானால், அதற்கு ஒரு விலை கொடுத்தாகவேண்டும்; அந்த விலை என்ன வென்றால், போதகர்கள் தேவ செய்தியை விட்டுக்கொடுக்க வேண்டும். தேவனுடைய பலிபீடத்துக்குப் பதிலாக வேறொரு பலிபீடத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்; எந்த விலை கொடுத்தாகு தல் ஒருமைப்பாட்டைப் பேணவேண்டும்; இப்படியாக விட்டுக் கொடுப்புத் தொடர்கிறது.

மேற்கூறிய வேதவாக்கியத்தின்படி தேவனுடைய மனுஷன் ராஜாவின் அழைப்பை நிராகரித்து, தேவனுடைய வார்த்தைக்குக்

கீழ்ப்படிந்தான் (**1இராஜா.** 13:7-10); ஆனால், விட்டுக்கொடுத்துத் தன்னைக் கெடுத்துக்கொண்ட கிழவன் தீர்க்கதரிசியின் சதியைத் தேவ மனுஷனால் அடையாளங்காணமுடியவில்லை; அவனுடைய பொறியில் அகப்பட்டு, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் தன்னைக் கெடுத்துக்கொண்டான். ஆம், உலகத்தை அடையாளங்காண்பது இலகுவானது; ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளை அடையாளங்காண்பது அவ்வளவு இலகுவான விஷயம் அல்ல; இதன் பிரதிபலனாக ஒருவன் தன் ஆத்துமாவையே இழந்துபோகவேண்டிவரும் (**நீதி.** 7:21-23, 26-27) என்பது இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஏப்ரல்

17

***ஆ**காப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீ யல்லவா என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்ட ளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவே லைக் கலங்கப்பண்ணுகிறவர்கள் (1இராஜா. 18:17-18).*

"பயப்படாமல் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்து"

மனுஷன் எந்தக் காலமும் மற்றவனில் குற்றத்தைச் சுமத்து வது சர்வசாதாரணமாக இருக்கிறது; இது ஆதாம், ஏவாளோடு ஆரம்பமானது. தன்னுடைய தவறுக்காக ஆகாப் எலியாவின் மேல் குற்றஞ்சுமத்தினான். எலியாவின் பதில் நேரடியானதும், ஆகாப்பினுடைய இருதயத்தைக் கண்டிப்பதுமாயிருந்தது. எலியா தேவனுடைய வார்த்தையைப் பயப்படாமலும், அதே நேரம் தன்னுடைய ஜீவனுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றிப் பொருட்படுத்தாமலும், அதுபற்றிக் கவலைப்படாமலும் சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொன்னான்; அதேநேரம் ஆகாப்பின் பதிலையும் அவன் எதிர்பார்க்கவில்லை; ஆனால், 1**இராஜாக்கள்** 18:19ல் எலியா ஆகாப்பை நோக்கி: **"இப்போதும் கர்மேல் பர்வ தத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பதுபேரையும், யேசபேலின் பந்தியிலே**

சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும்" எனச் சொல்லியிருப்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்; ஆகாப் கீழ்ப்படிந்தான்; ஏனென்றால், தேசம் ஆதரவற்று, கைவிடப்பட்ட நிலைமையிலிருந்தது. மனுஷ வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய அற்புதம் இங்கு நடந்தேறியது (**1இராஜா. அதி:18**).

ஏப்ரல்

18

***அ**ந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற் கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றி லும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக் கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி (1இராஜா. 18:32),*

"வாய்க்கால்"

"வாய்க்கால்" என்பது உலகத்தைவிட்டுப் பிரிந்திருப்பதைப் பற்றிச் சொல்லப்படுகிறது; அது கிறிஸ்துவின் சிலுவையி னாலேயே சாத்தியப்படுகிறது. தேவனுடைய ஜனங்கள் எப் பொழுதும் தேவனுக்கென்று பிரிந்திருக்கவேண்டும். உடனடி யாக நாம் அறிந்திருக்கவேண்டியது **"பிரிந்திருத்தல்"** என்பது **"ஒதுங்கியிருத்தல்"** எனப் பொருள்படாது. நாம் உலகத்திலிருக் கிறோம், ஆனால், உலகத்தினுடையவர்களல்ல; அதாவது, உல கத்தினுடைய வழிகளைப் பின்பற்றக்கூடாது; மற்றத் தேசங் களைவிட்டு இஸ்ரவேல் பிரிந்திருக்கவேண்டும் என்று கட்டளை யிடப்பட்டிருக்கிறது (**யாத்.** 12:43-48; **லேவி.** 20:24,26). புதிய ஏற் பாட்டிலும் இதேமாதிரியான கட்டளை கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது (**வெளி.** 18:4; **கொலோ.** 2:20-21; **ரோம.** 12:2).

இதுபற்றி **II கொரிந்தியர்** 6:17ல் **"ஆனபடியால், நீங்கள் அவர் கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவை களைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** எனச்

சொல்லப்பட்டிருக்கிறது; அப்படியில்லை என்று உலகத்தோடு தொடர்பு ஏற்படுத்துகிற கிறிஸ்தவவர்களைப்பற்றி **யாக்கோபு** 4:4ல் **"விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்"** எனக் கூறியிருக்கிறான்.

ஆயினும் மனுஷ கற்பனைகள், மனுஷ பிரமாணங்கள், மனுஷ கட்டளைகள்மூலம் கிறிஸ்தவர்களை உலகத்திலிருந்து பிரிக்கமுடியாது; உலகத்திற்குப் பதில் கல்வாரி சிலுவையேயாகும் (**கலா.** 6:14). சிலுவைக்கு ஜனங்கள் இழுக்கப்பட்டவுடன் அவர்கள் தாமாகவே உலகத்தைவிட்டுப் பிரிந்திருப்பார்கள். அதேபோன்று, பிரமாணங்கள்மூலம் எவரையும் இரட்சிக்கமுடியாது;

இப்படியிருக்க, சிலுவை மனுஷனை உலகத்தைவிட்டுப் பிரிக்கிறதுபோல, பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் விறைத்துப்போன மதத்தைவிட்டுக் கிறிஸ்தவர்களைப் (Cold Religion) பிரிக்கிறது. முன்பு வாய்க்கால் இருந்ததுபோல, இப்பொழுதும் வாய்க்கால் இருக்கிறது; எந்த மனுஷனும் அந்த வாய்க்காலை **"வார்த்தை என்ற தண்ணீரைத் தவிர"** வேறு எதனாலும் நிரப்பினால், அவனுக்கு ஐயோ!

ஏப்ரல்

19

***எ**லியா செய்த எல்லாவற்றையும்; அவன் தீர்க்க தரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறி வித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிரா ணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந் நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன் னாள் (1இராஜா. 19:1-2).*

"எலியாவும் யேசபேலும்"

1இராஜாக்கள் 18ம் அதிகாரத்தில் கர்த்தருடைய பலத்தினால் எலியா செய்த அற்புதங்கள் பாரிய மாற்றத்தை இஸ்ரவேலில் ஏற்படுத்தியிருந்தது என்பதனை வேதம் உறுதிப்படுத்துகிறது. பாகாலின் தீர்க்கதரிசிகளும் தோப்பு விக்கிரகங்களும் ஏற்படுத்திய அனர்த்தம் அம்பலப்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் வரப்போ கிற இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டியதொன்றே இஸ்ர வேலுக்குத் தேவன் நியமித்த கட்டளையாகும்; அந்தக் கட்டளை கர்த்தரிடத்திலிருந்து வந்த அக்கினியினால் மறுபடியும் உறுதிப் படுத்தப்பட்டது; அந்தக் கட்டளையில் இன்றும் மாற்றமில்லை; இனிமேலும் அது மாறப்போவதில்லை. இஸ்ரவேல் வரப்

போகிற இயேசுவை விசுவாசித்தது; நாமோ வந்த இயேசுவை விசுவாசிக்கிறோம்; விசுவாசத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

பொய்யான உபதேசத்தை அப்புறப்படுத்தாமல் தேவனுடைய மீட்பின் திட்டத்தை இஸ்ரவேலியர்கள் மத்தியில் பலப்படுத்த முடியாது என்பதனை உணர்ந்த எலியா கர்த்தருடைய ஏவுதலின் படி பாகாலின் தீர்க்கதரிசிகளைச் சங்காரம் செய்தான் (**1இராஜா. 18:40**). பழைய ஏற்பாட்டில் பொய்யான உபதேசத்தை அப்புறப் படுத்தத் தேவையான பிரமாணம் **உபாகமம் 13:1-5**ல் கொடுக்கப் பட்டிருக்கிறது; புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரே அத னைச் செய்கிறார் (**1தீமோ. 2:16-18**).

எலியா செய்த எல்லாவற்றையும், பாகாலின் தீர்க்கதரிசி களைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டதையும் ஆகாப் தன் மனைவி யேசபேலுக்கு அறிவித்தான். அவளோ எலியாவை, தான் சங்கரிப்பேன் எனப் பயமுறுத்தினாள். கர்த்தர் தன்னோடு இருக்கும்பொழுது யேசபேலினுடைய பயமுறுத்தல் சாத்தியப் படாதே என்பதனை (**ரோம. 8:31**) கர்த்தருடைய தீர்க்கதரிசியான எலியாவினால் அப்பொழுது புரிந்துகொள்ள முடியாமற்போய் விட்டது. பயத்தின் ஆவியினுடைய பலமான அழுத்தமே எலி யாவின் தடுமாற்றத்துக்குக் காரணமாயிருந்தது.

கிறிஸ்தவர்களும், கர்த்தருடைய ஊழியக்காரரும் அறிந்தி ருக்கவேண்டியது என்னவென்றால், பாரிய வெற்றியைக் கர்த்த ருடைய பலத்தினால் நிறைவேற்றியவுடன் சாத்தான் உடனடி யாகவே பெரும் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டு, கர்த்தருடைய ஊழியக்காரர் ஈட்டிய வெற்றியைப் பிசுபிசுக்கச் செய்கிறான். நம்முடைய விசுவாசத்தைச் சோதிப்பதற்குக் கர்த்த ரால் அனுமதிக்கப்பட்ட சோதனையே இது. இதற்குப் பதில் **விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதேயாகும்** (**1தீமோ. 6:12**).

இங்கு நாம் அறிந்திருக்கவேண்டியதும், ஞாபகத்தில் வைத்தி ருக்கவேண்டியதும் என்னவென்றால், **"நேற்றைய விசுவாசம்**

இன்றைய தேவைக்குப் போதுமானதல்ல" என்பதேயாகும். தேவனுடைய பிள்ளைகள் தொடர்ச்சியாக, அநுதினமும் தேவ பிரசன்னத்தைப் பெற்றிருக்கவேண்டும் (**லூக்.** 9:23).

யேசபேலினால் தான் சொன்னதை நிறைவேற்றமுடியுமாயி ருந்தால் (**1இராஜா.** 19:1), அவள் தூதர்களை அனுப்பாமல் உடன டியாகவே போர் வீரர்களை அனுப்பியிருக்கலாமே? அவள் அதனைச் செய்யவில்லை; தன்னுடைய ஜீவனுக்கும் போர் வீரர் களுடைய ஜீவனுக்கும் அவள் பயந்தபடியினால், அப்படிச் செய்ய முடியவில்லை. எலியாவின் பயம் ஆதாரமற்றதுபோல, பலமான தேவனுடைய பிள்ளைகளின் பயமும் ஆதாரமற்றது. பலமான தேவனுடைய தீர்க்கதரிசி இப்பொழுது பயத்தின் ஆதிக்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறான். பயம் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தைவிட்டு விலக்க நிர்ப்பந்திக்கும் (**1இராஜா.** 19:3). பயம் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தி, அதற்குப் பலியானவனைத் தனி மைப்படுத்தும்; இதனிமித்தம் வேலைக்காரனை பெயர்செபாவில் எலியாவிட்டுச்சென்றான். **"அற்ப விசுவாசியே ஏன் பயப்பட் டாய்"** என்று அடிக்கடி ஆண்டவர் கூறியதை ஞாபகப்படுத்தித் திடன்கொண்டு, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவோமாக.

ஏப்ரல்

20

***அ**ப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய், பன்னிரண்டு ஏர்பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான்; எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான் (1இராஜா. 19:19).*

"கர்த்தரின் அழைப்பு"

விநோதமான முறையில் எலிசா ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தும், அந்த அழைப்பை எலிசா கௌரவித்து, அதனை ஏற்றுக்கொண்டவிதமும், அதனில் பொதிந்திருக்கும் ஆவிக்குரிய பொருளையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்திருக்க வேண்டும்.

எலியா எலிசாவைக் கர்த்தர் சொன்னவிதமாய் (**1இராஜா. 19:19**) தேடிப்போகும்பொழுது தீர்க்கதரிசிகளின் பாடசாலையைத் தாண்டிப்போய், எலிசாவின் மேல் அழைப்பின் அடையாளமாகத் தன் சால்வையைப் போட்டான். எலியா பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டே இந்த உழவனாகிய எலிசாவின்மேல் தன் சால்வையைப் போட்டான். மனுஷருடைய சிந்தனைக்கும் தேவனுடைய சிந்தனைக்குமுள்ள பாரிய வித்தியாசம் இங்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எலியா மனுஷருடைய சிந்தையின்படி ஏவப்பட்டால், தீர்க்கதரிசிகளின் பாடசாலைக்கல்லவோ போயிருப்பான்!

காட்டாத்திப் பழத்தைப் பொறுக்கிய ஆமோசைத் தேவன் தன்னுடைய ஊழியத்திற்குத் தெரிவுசெய்தார்; பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாயிராத பவுலைத் தேவன் அப்போஸ்தலனாகத் தெரிவு செய்தார்; படிப்பறிவற்ற மூடியைத் (D.L. Moody) தேவன் தெரிவு செய்தார்.

இப்படிப்பட்ட மனிதர் மூலமாக ஜனங்களைத் தேவன் கண்டிக்கிறார்; நீதியை உபதேசிக்கிறார்; சீர்திருத்தம் செய்கிறார்; இரட்சிக்கிறார்; நொறுங்குண்டவர்களை விடுதலையாக்குகிறார்; குருடர்களுக்குப் பார்வை கொடுக்கிறார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை கொடுக்கிறார்; மரித்தவனை உயிர்ப்பிக்கிறார். இப்படியாகத் தேவன் தன்னுடைய அதிகாரபூர்வமான ஊழியத்திற்குப் புத்துயிர் ஊட்டுகிறார்.

இப்படியிருக்க, எலியாவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கதரிசன அழைப்புக்குக் கீழ்ப்படிவதற்கு இதைவிட அதிகமாய் எலிசா என்ன செய்யமுடியும்? எலிசா அழைப்பைக் கண்டவுடன் "....**அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான். அதற்கு அவன்: போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள் என்றான்"** (**1இராஜா.** 19:20). எலியா உடனடியாகவே அவனுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டான்.

இந்த உலகத்தின் அழைப்பை முற்றுமுழுவதுமாக உதறித் தள்ளுவதற்கு அடையாளமாக **"அப்பொழுது அவன் இவனை விட்டுப் போய், ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டபிற்பாடு, அவன் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ்செய்தான்"** (**1இராஜா.** 19:21); இது ஒரு பிரியாவிடையேதவிர மத விருந்தல்ல, எலிசா இத்தகைய செயல்மூலம் அறிவிப்பது என்ன

வென்றால், **"இனி ஒருபொழுதும் பழையனவைகளுக்குத் திரும்பமாட்டேன்; முற்றுமுழுவதுமாகத் தேவனுடைய அழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதற்கு என் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிவேன்"** என்று பிரகடனப்படுத் தினான்; அப்படியே கடைசிவரையும் வாழ்ந்தான்.

எலிசாபோன்றே வேறொருவிதமாக அடியேனும் ஊழியத் திற்கு அழைக்கப்பட்டேன்; அப்பொழுது வேத அறிவற்ற நான் அழைப்பை அறிந்தவுடன் எலிசாபோன்றே செயற்பட்டேன். எனக்கு ஜீவனாயிருந்த கல்வியையும், தொழிலையும் தூக்கி யெறிந்தேன்; கர்த்தர் என்னை ஒருபொழுதும் கைவிடவில்லை. இந்த வேதவாக்கியங்களைப் படிக்கும்பொழுது கர்த்தருடைய அழைப்பையும், அவருடைய செய்கைகளையும் யாரால் புரிந்து கொள்ளமுடியும்?

ஏப்ரல்

21

***அ**ப்பொழுது பெனாதாத் இவனைப் பார்த்து: என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவில் செய்ததுபோல, நீரும் தமஸ்கு விலே வீதிகளை உண்டாக்கிக்கொள்ளலாம் என்றான். அதற்கு அவன், இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லி, அவ னோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிட் டான் (1இராஜா. 20:34).*

"ஆகாப்பின் உடன்படிக்கை"

சீரியர்கள் இரண்டாம் முறையும் தோற்கடிக்கப்பட்டபின்பு, இஸ்ரவேலின் விரோதியும் சீரியாவின் ராஜாவுமாகிய பெனா தாத்தோடு ஆகாப் உடன்படிக்கைபண்ணியபின் அவனை அனுப்பி விட்டான். இது ஆகாப்புக்கும் பெனாதாத்துக்குமிடையில் ஏற் படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும். ஆகாப் ஏற்படுத்தின இந்த உடன்படிக்கையின்மேல் தேவன் சந்தோஷமடையவில்லை. அவர் தம்முடைய தீர்க்கதரிசியின்மூலம் "..... **சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும் படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு**

ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று கர்த்தர் சொல்கிறார் என்றான்" (1இராஜா. 20:42);

அதேபோன்று, கிறிஸ்தவத்தின் இன்றைய அனுமதிச் சொல் லாகிய **"ஒருமைப்பாடு"** முற்றுமுழுவதுமாக ஆகாப்பின் உடன் படிக்கை ஒத்ததே. ஆகாப் தேவனுடைய வார்த்தைக்கும் அவருடைய விருப்பத்துக்கும் எதிராக விட்டுக்கொடுத்தான். அப் படியே உலகத்தோடும் களங்கப்படுத்தப்பட்ட கிறிஸ்தவத்தோடும் ஏற்படும் **"அந்த ஒருமைப்பாட்டின்"** அடிப்படையில் ஏற்படும் உடன்படிக்கையும் தேவனுடைய வார்த்தைக்கு எதிரான விட்டுக் கொடுப்பேயாகும்.

வேதவார்த்தையின்படி **"ஒருமைப்பாடு"**, ஒரே காரியத்தை பேசுபவர்களோடும் பிரிவினை இல்லாமல் ஏகமனதும் ஏகயோ சனையும் உள்ளவர்களோடும் மட்டும் இருக்கவேண்டுமேதவிரக் கிறிஸ்தவம் என்ற பேரில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை முற்றுமுழுவதுமாக விசுவாசிக்காதவர்களோடோ அல்லது உலகத்தோடோ உடன்படிக்கையை ஏற்படுத்தக்கூடாது. இதுபற்றிப் பரிசுத்த ஆவியானவர் **1கொரிந்தியர் 1:10**ல் கூறி யிருக்கிறார். பிரிவினைகளையும் இடறல்களையும் தேவனு டைய ராஜ்யத்தில் ஏற்படுத்துபவர்களைவிட்டு விலகவேண்டு மென்று வேதவார்த்தை உறுதிப்படுத்துகிறது. ஒரேமாதிரியான விசுவாசமில்லாதவர்களுடன் ஒருபொழுதும் இணையமுடியாது; அவ்வாறான இணைப்பு தேவனுடைய ராஜ்யத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்திப் பிரிவினைகளை உண்டாக்குமானபடியினால் இது பற்றிப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர் 16:17**ல் இதனை உறுதிப் படுத்தியிருக்கிறார்.

ஏப்ரல்

22

***நா**போத் ஆகாபை நோக்கி: நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான். இப்படி என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யெஸ்ரயேல னாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக் காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின்மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தான் (1இராஜா. 21:3-4).*

"நாபோத்தின் திராட்சத்தோட்டம்"

நாபோத்தின் திராட்சத்தோட்டம் அவனுடைய பிதாக்களின் சுதந்திரம். நாபோத்தின் திராட்சத்தோட்டம், கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவன் தந்த மகா பரிசுத்தமான இரட்சிப்பைப் பிரதி பலிக்கிறது. தேவன் நமக்குத் தந்த இரட்சிப்பு ஒன்றே நம்மு டைய ஆவிக்குரிய சுதந்திரமாகும். நாபோத்தின் திராட்சத் தோட்டம் ஆகாப்பின் வீட்டுக்கு அடுத்திருக்கிறது. அப்படியே தேவன் நமக்குத் தந்த இரட்சிப்பு எனப்படும் ஆவிக்குரிய சுதந் திரம் உலகத்திற்கு அருகிலிருக்கிறது. நாபோத்தின் பிதாக்களின் சுதந்திரமான திராட்சத்தோட்டம் எப்படி ஆகாப்பின் கண்களுக்குக் கவர்ச்சிகரமாக இருந்ததோ, அப்படியே தேவன் நமக்குத் தந்த

ஆவிக்குரிய சுதந்திரமான இரட்சிப்பும் உலகத்திற்கு அருகிலிருக் கிறபடியினால், வல்லமையுள்ள தீயசக்திகளாகிய உலகம், பிசாசு, மாம்சம் ஆகியவைகள் எப்படியும் நம்முடைய சுதந்திரத் தைப் பறித்துக்கொள்ளக் கங்கணங்கட்டி நிற்கின்றன என்பதனை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். ஆகாப் எப்படி நாபோத்தை வற்புறுத்தினானோ அப்படியே நாமும், நம்முடைய விசுவாசத்தைவிட்டு (**1கொரி.** 2:2) விலகு மாறு நிச்சயமாக இந்தத் தீயசக்திகளினால் வற்புறுத்தப்படு வோம். தேவனுடைய கண்டித்தலைப் பொருட்படுத்தாமல் விட்டுக்கொடுப்பு செய்யுமாறு விசுவாசிகளாகிய நாம் வற்புறுத் தப்படுவோம். நாபோத்தினுடைய யுத்தம் அவனுடைய மரணத் திற்கு (**1இராஜா.** 21:13-14) வழிவகுத்ததுபோல நாமும் இறுதிவரை தேவன் நமக்குத் தந்த விசுவாசத்தைவிட்டு விலகாமல் அதைப் பாதுகாப்பதற்காக யுத்தஞ்செய்யவேண்டும் (**1தீமோ.** 6:12; **யூதா** 3).

இப்படியிருக்கையில் நமது தெரிவு என்ன? ஒன்றில் தேவன் நமக்குத் தந்த ஆவிக்குரிய சுதந்திரத்தில் எந்தப் பங்கையும் சாத்தானுக்கு நிராகரிக்கலாம், அப்படிச் செய்வோமாகில் நாபோத் துக்கு ஏற்பட்டதுபோல சரீர மரணத்தைப் பெற்று, ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம்; இல்லையேல், அடுத்த தெரி வாக நாம் சாத்தானுக்கு நம்முடைய ஆவிக்குரிய சுதந்திரத்தை விற்கவேண்டிவரும். அப்படி விற்போமாகில் (அதெப்படியெனில், நம்முடைய மகா பரிசுத்த விசுவாசத்தை விட்டு விலகுவது அல்லது அதைப் பலவீனப்படுத்துவதே அந்த விற்பனையாகும்) நாம் சரீரத்தில் ஜீவனைப்பெற்று, ஆவியில் மரணமடைய வேண்டும்; சாத்தான் நிச்சயமாக நமக்குத் தேவன் தந்த இரட்சிப் பைவிட இன்னும் திறமான ஆவிக்குரிய சுதந்திரத்தைத் தரு வேன் என்று உறுதியாகக் கூறுவான். அப்படியே சாத்தான் நீங் களும் தேவர்களைப் போலிருப்பீர்கள் என்று கூறி ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினானே (**ஆதி.** 3:5). மேலும், பிந்தின ஆதா மாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து

பணிந்துகொண்டால் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவை களின் மகிமையையும் உமக்குத் தருவேன் என வாக்குறுதி கொடுத்தானே (**லூக்.** 4:5-6); அப்படியே இதோ, நாபோத்துக்கும் சாத்தான் ஆகாப் மூலம் உன்னுடைய திராட்சத்தோட்டத்தைப் பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதன் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன் என்றான். இப்படியாக இன்னும் பல கவர்ச்சிகளினால் வஞ்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் ஏராளம். நாபோத்தோ சாத்தானின் இந்த வஞ்சகத்திற்கு இடங் கொடாமல் சுதந்திரத்தைக் கொடுத்தவரை நோக்கி ஜெபம்பண்ணி னான் (**1இராஜா. 21:3**).

சாத்தானுடைய வஞ்சகத்தின் கவர்ச்சியைச் சற்றுப் புரிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும்; ஆகாப்புக்கு நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைப் பார்க்கிலும் நல்ல திராட்சத் தோட்டம் இருக்குமாயின் அவன் எதற்காக நாபோத்தின் திராட் சத்தோட்டத்தை விரும்பவேண்டும்!!! இந்தவிதமாகச் சாத்தானின் வஞ்சனை முடிவில்லாமல் தொடர்கிறது; இந்த வஞ்சனைக்குப் பலியானோர் அநேகர். நாபோத்தின் திராட்சத்தோட்டம் அவ னுக்கு மகிமையின் தேவனால் கொடுக்கப்பட்டது; அப்படியே இரட்சிப்பும் மகிமையின் தேவனால் பாரியவிலை கொடுத்து நமக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது; தேவனுடைய நியாயப்பிரமா ணத்தில் பிதாக்களின் சுதந்தரத்தை விற்பது தடைசெய்யப்பட் டிருக்கிறது (**லேவி. 25:23-24**); ஆயினும், தவிர்க்கமுடியாமல் கடுமையான பணநெருக்கடியின் நிமித்தம் விற்றாலும் **யுபிலி** வருஷத்தில் விற்கப்பட்ட எல்லாம் மறுபடியும் ஆரம்ப சொந்தக் காரனிடத்திற்குச் செல்லும் (**எண். 36:7**).

தேவன் நமக்குத் தந்த மகா பரிசுத்தமான விசுவாசத்தை விட்டு, நாம் விலக மறுப்பின் அல்லது பலவீனப்படுத்த இடம் கொடாதிருப்பின் சாத்தானும் அவன் கூட்டமும் பெரும் சினமும் சலிப்பும் அடைகின்றன (**1இராஜா. 21:4**) என்பதனை நிச்சயமாகக்

கிறிஸ்தவர்கள் அறிவார்களாக; நாபோத்து ஆகாப்பின் மனைவி யின் தந்திரத்தால் கொல்லப்பட்டான் (**1இராஜா. அதி:21**); ஆனால், அவனோ நித்தியஜீவனைப் பெற்றுக்கொண்டான்; அப்படியே நாமும் நம்முடைய ஆவிக்குரிய சுதந்தரத்தை இழந்துபோகாமல் அதனை அந்த விசுவாசத்தின் மூலம் காப்பாற்றுவோமாக (**1இராஜா. அதி:21**). ஒருவேளை இதனிமித்தம் நமக்கு சரீரத்தில் மரணம் ஏற்படலாம்; ஆனால், ஆவியில் நித்தியஜீவனைப்பெற்று, தேவனுக்குள் பலப்படமுடியும் (**மத். 10:28**); ஆகையால், நாபோத் போன்று என்ன இக்கட்டு வந்தாலும் ஆண்டவரின் புத்திமதியை நாம் உறுதியாகப் பின்பற்றுவதே நமக்கு இருக்கும் ஒரே வழி யாகும்.

ஏப்ரல்

23

***எ**தினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப் பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசி கள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய் என்றார் (1இராஜா. 22:22).*

"பொய்யின் ஆவி"

இங்கு கூறப்பட்டிருக்கும் அந்த ஆவி அசுத்த ஆவியே. இந்த அசுத்த ஆவி சாத்தானைச் சேவிக்கிற அதேநேரம் தேவனுடைய கட்டளையையும் நிறைவேற்றுகிறது. இந்த அசுத்த ஆவி சாத் தானோடு தேவன் வாசமாயிருக்கும் பரலோகத்தின் ஒரு பகுதி யில் வாசமாயிருக்கிறதை மிகாயா தீர்க்கதரிசி உறுதிப்படுத்து கிறான் (**1இராஜா.** 22:20-21). மேலும் இதுபற்றி யோபுவின் புஸ்த கத்தில் "**ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான். கர்த்தர் சாத்தானைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என் றான். கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய**

அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை" என (**யோபு 1:6-8; 2:1-7**) விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது;

மறுக்கமுடியாத அளவு வேதவார்த்தைகளினால் நிரூபிக்கப் பட்டிருக்கப் பலர், அப்படியல்ல தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்ப தில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்ட வர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் என **வெளி. 21:27**ல் கூறப்பட்டிருக்கிறபடியினால், தேவன் வாசமாயிருக்கும் மகிமை யான வாசல்களில் பிசாசு வாசமாயிருக்கமுடியாது என்கிறார் கள்; ஆனால், **வெளி. 21:27**ல் கூறப்பட்டிருப்பது புதிய வானமும் புதிய பூமியைப்பற்றியதுமேயன்றித் தற்பொழுது தேவன் வாசமா யிருக்கும் பரலோகம் பற்றியது அல்ல என்பதனை இவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்.

ஏப்ரல்

24

***அ**தற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான் (IIஇராஜா. 2:10).*

"நீ கண்டால் உனக்குக் கிடைக்கும் இல்லாவிட்டால் கிடையாது"

நாம் கேட்டுக்கொள்வது எதுவோ அதனை விசுவாசத்தினால் காணவேண்டும். எலியாவிலுள்ள ஆவியின் வரம் இரட்டிப் பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என எலிசா கேட்டுக் கொண்டான். எலியா அதனை அரிதான காரியம் என்று சொன் னான்; அதன் ஆவிக்குரிய பொருள், நீ மிக உயர்ந்த கோரிக்கை யைக் கேட்டிருக்கிறாய், "**.....உன்னைவிட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக் கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்**" (II**இராஜா. 2:10**).

ஆனபடியினால், வாசகராகிய நீர் காண்கிறது என்ன? எழுப்பு தலை (Revival) நீர் காண்கிறீரா? உம்மிடத்தில் இருப்பதைவிட எப் பொழுதும் அதிகமாகக் கேட்கவேண்டும். உம்முடைய வேண்டு தல்கள் உம்மால் முடியாத விஷயமாக இருக்கவேண்டும்; நம் முடைய வேண்டுதலுக்குத் தேவன் எந்தவித வரையறையையும் நிபந்தனையாக விதிக்கவில்லை; இப்படியிருக்க, இங்கு நடந்தது என்ன?

முதலாவதாக அக்கினி வந்தது; அது தேவனுடைய மகிமை யைப் பிரதிபலித்தது. எலியா பரலோகத்திற்கு ஏறிப்போவதை எலிசா கண்டான். அந்த நேரத்தில் எலியாமட்டுமே பரலோகத் திற்குப் போனான். மற்றப் பரிசுத்தவான்கள் எல்லாரும் பரதீசுக் குப் போனார்கள். எலியா ஒருவனே சுயசரீரத்தோடு பரலோகத் திற்குச் சென்றான். மகிமையான சரீரத்தைப் பெறுவதற்காக எக் காளச் சத்தம் ஊதும்வரையும், அவன் காத்துக்கொண்டிருக் கிறான்; அவன் பரலோகத்திற்குச் செல்லும்பொழுது தன் சால் வையை விட்டுச்சென்றான்; எலிசா அதனை எடுத்துக்கொண் டான்; இப்பொழுது அது அவனுக்குரியது. எலிசா கண்டான்; ஆனால், அவனோடு இருந்தவர்கள் அதனைக் காணவில்லை. அரிதான காரியத்தைக் கேள் என்று தேவன் சொன்னார், நாமும் அந்த விசுவாசத்துடன் கேட்போமா?

ஏப்ரல்

25

பின்பு அந்தப் பட்டணத்தின் மனிதர் எலிசாவை நோக்கி: இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள் (IIஇராஜா. 2:19).

"தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம்"

எரிகோ பட்டணம் நச்சுத் தண்ணீரின் நிமித்தம், கெட்டுப் போயிருக்கிறது; அதன் பிரதிபலனாக நிலமும் பாழ்நிலமாகப் போயிற்று. எரிகோ தேவனால் சபிக்கப்பட்ட பட்டணம்; யோசுவாவின் காலத்தில் இந்தப் பட்டணத்தில், வேற்று மத வழிபாடுகள் பரவலாக அனுசரிக்கப்பட்டது; இதனிமித்தம் அந்தப் பட்டணத்தைச் தேவன் சபித்தார்; அப்படியே அதே பாவத்தினால், உலகமும் சபிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்தின் பிரச்னை என்ன என்பதனை எலிசாவுக்குச் சொன்னார்கள்; மனுஷன் பிரச்னையைக் காணமுடியும்; ஆனால், அதற்குத் தீர்வு அவனிடத்தில் இல்லை; பரிசுத்த ஆவியானவர் இந்தப் பிரச்னைக்கு ஒரு அருமையான தீர்வை எலிசாவுக்குக் கொடுத்தார். அந்தத் தீர்வு சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது.

அதென்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் எலிசாமூலம் அந்தப் பட்டணத்தின் மூப்பர்களுக்கு ஒரு புதுத்தோண்டியைக் கொண்டுவருமாறு பணித்தார் (II**இராஜா.** 2:20). களிமண்ணினால்

செய்யப்பட்ட புதுத்தோண்டி பாவமில்லாத கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரதிபலிக்கிறது. இது அவர் மனுஷனுக்காக, மனுஷனாக வருவார் என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. முந்தின ஆதாமைப் போலல்லாமல் (**Iகொரி.** 15:45-47) பிந்தின ஆதாமாகக் கன்னியின் வயிற்றில் பரிசுத்த ஆவியின் உத்தரவின்படி உற்பத்தியாகிப் பிறந்து வருவார் என்பதனையும் உறுதிப்படுத்தியது (**ஆதி.** 3:15). அவர் புதுமனுஷனாகவே பிறந்து முந்தின ஆதாம் இழந்துபோன எல்லாவற்றையும் மீட்டுக்கொள்வார் என்பதனைப் புதுத்தோண்டி பிரதிபலித்தது.

எலிசா புதுத்தோண்டிக்குள் உப்பைப் போட்டுக்கொண்டு வாருங்கள் என்று சொன்னான்; உப்பு களங்கமில்லாத தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்கிறது. இதன் பொருள், இயேசு வார்த்தையின்படி வாழ்ந்தார், வார்த்தையின்படி செயற்பட்டார், வார்த்தையில் நிலைத்திருந்தார், வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார், வார்த்தையில் தவறவில்லை; உண்மையில் அவரே ஜீவவார்த்தையாகவும் இருந்தார் (**யோவா.** 1:1, 14, 29). எலிசா நீரூற்றண்டைக்கு புதுத்தோண்டியை எடுத்துச்சென்று உப்பை அதிலே போட்டு, இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இதில் சாவு மில்லை, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொன்னார் என்றான் (**IIஇராஜா.** 2:21).

தேவனுடைய வார்த்தை நஞ்சைச் சுரக்கும் நீரூற்றுக்குள் எறியப்படவேண்டும்; இது தவிர, வேறெந்தத் தீர்வும் அதற்கு இல்லை. ஆகையால்த்தான், தேவனுடைய சுவிசேஷம் உலகமெங்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் (**மாற்.** 16:15). கிறிஸ்து ஒருவரே மரணபரியந்தம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார் (**பிலி.** 2:8); அவர் ஒருவராலேயே இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டோரை விடுதலையாக்கவும் முடியும் (**லூக்.** 4:18). நச்சுத்தண்ணீர் மனுஷனுடைய இருதயத்திலிருக்கிற பாவசுபாவத்தைப் பிரதிபலிக்கிறது; இதனைச் சுகப்படுத்த அவர் சிலுவைக்குப் போகவேண்டியதாயிருந்தது.

சிலுவைக்குப்போய், தன்னையே இந்த அக்கிரமத்திற்குள் எறிய வேண்டியிருந்தது (II**கொரி.** 5:21); இதன் பின்பே இருதயத்தி லிருந்து இடைவிடாமல் சுரக்கிற நஞ்சிலிருந்து மனுஷனுடைய ஆத்துமாவைக் குணப்படுத்தமுடிந்தது; இதனையே எரிகோவைக் குணப்படுத்துதல் பிரதிபலிக்கிறது.

மனுஷனுடைய தீர்வு எவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தாலும், அதனால் ஒரு பலனும் இல்லை. நச்சுத்தண்ணீரைக் குணப் படுத்துவதாயிருந்தால், ஆரம்ப இடத்திற்குச் (Source) செல்ல வேண்டும்; கிறிஸ்துவே அதனைச் செய்தார்; சிலுவையிலேயே இது நிறைவேற்றப்பட்டது. ஆகையால்த்தான் பவுல் அப்போஸ் தலர் **கலாத்தியர்** 6:14ல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலு வையைக் குறித்தே மேன்மைபாராட்டுவதாகக் கூறியிருந்தார். நச்சுத்தண்ணீருக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டது; அப்படியே கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வரும்போது பூமியில் சாவும் இல்லை, பாழும் இல்லை (**வெளி** 21:4).

ஏப்ரல்

26

***கே**யாசி அவர்களுக்கு முன்னே போய், அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான்; ஆனாலும் சத்தமும் இல்லை, உணர்ச்சியும் இல்லை; ஆகையால் அவன் திரும்பி அவனுக்கு எதிர்கொண்டு வந்து: பிள்ளை விழிக்கவில்லை என்று அவனுக்கு அறிவித்தான் (IIஇராஜா. 4:31).*

"பிள்ளை விழிக்கவில்லை"

என்ன நோக்கத்திற்காக எலிசா தன் தடியை "**அந்தப் பிள்ளையின் முகத்தில் வை**" என்றான் என்பதுபற்றி எந்த விளக்கமும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை (II**இராஜா.** 4:29). அந்தத் தடி சமயச் சடங்கைப் பிரதிபலிக்கிறது. இதன்மூலம் செத்துப் போயிருக்கிற பிள்ளையின்மேல் செத்துப்போயிருக்கிற தடி ஒரு பொழுதும் ஜீவனைக் கொடுக்கமாட்டாது என்பது நிரூபிக்கப் பட்டது. மதச் சடங்குகள் வேதவாக்கியத்திற்கு இசைவாக இருந்தாலும், மரணத்திற்கு முன்பாக அது செயலிழந்து விறைத்துப் போகிறது. மதமோ, மதச்சடங்குகளோ யாரையும் எந்தக் காலத்திலும் விடுதலை செய்ததில்லை; விடுதலை செய்யவும் முடியாது; அதற்கு அந்தப் பெலன் கிடையாது. கிறிஸ்துவின் சிலுவைமூலமாக இயேசுகிறிஸ்துவின் வல்லமை பரிசுத்த ஆவியினால் நமக்குத் தரப்படுகிறது (**யோவா.** 7:37-39); அது ஒன்றே ஜீவனைக் கொடுக்கிறது. எலிசா தேவனால் ஏற்படுத்தப்பட்ட

அந்த வழியைப் பின்பற்றி அந்தப் பிள்ளையின் உயிரை மீண்டும் பெற்றுக்கொண்டான் என ॥**இராஜாக்கள்** 4:32-35ல் **"எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின் மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக் கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக் கிட்டப் போய் அவன்மேல் குப்புறப்படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதே வழியைப் பவுல் அப்போஸ்தலர் பின்பற்றவில்லையா? **(அப். 20:9-10)**.

ஏப்ரல்

27

***சா**ப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அந்தக் கூழில் எடுத்துச் சாப்பிடுகிறபோது, அதைச் சாப்பிடக்கூடாமல்: தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள் (IIஇராஜா. 4:40).*

"பானையில் சாவு இருக்கிறது"

எலிசா, தீர்க்கதரிசிகளுடைய புத்திரர்களின் பஞ்சத்தைப் போக்குவதற்கு அவன் தன் வேலைக்காரனை நோக்கி: "**.....நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்றான்**" (II**இராஜா.** 4:38). எலிசா அவர்களுக்குத் தேவனுடைய போஜனத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தான்; சுவிசேஷமே நிச்சயமாகப் பெரிய பானையை நிரப்பமுடியும்.

தேவன் கொடுத்த போஜனத்தில் திருப்தியடையாத "**ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்துவந்து, அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான்...**" (II**இராஜா.** 4:39) என அறியக்கூடியதாயிருக்கிறது. பேய்க் கொம்மட்டிக்காய்கள் பொய்யான உபதேசத்தைப் பிரதிபலிக்கிறது. தேவனுடைய வார்த்தையோடு வேறொன்றைச் சேர்க்கும் முயற்சியிலிருந்து, அன்று தொடக்கம் இன்றுவரை மனுஷன்

ஓய்ந்தபாடில்லை; அத்தகைய முயற்சி மரணத்தையே ஏற் படுத்தும்.

பேய்க்கொம்மட்டிக்காய்கள் சகலதும் பொய்யான உபதேசங் களைப் பிரதிபலிக்கிறபடியினால், அவைகள் மரணத்தை ஏற்ப டுத்தும்; துரதிஷ்டவசமாகக் கிறிஸ்தவ சபைகளில் பிரசங்கிக் கப்படும் உபதேசங்கள் வேதவார்த்தைக்கு ஒவ்வாதபடியினால், அவைகள் பேய்க்கொம்மட்டிக்காய்களாக இருக்கிறது. கிறிஸ்து வின் சிலுவையின்மேல் கட்டியெழுப்பப்படாத எந்த உபதேசமும் (I**பேது.** 1:18-20) வெளித்தோற்றத்திற்கு சரியாகத் தெரிகிற போலி யான பொய்த்தோற்றத்தையுடைய உபதேசங்களாக இருப்பத னால், அவைகள் மரணத்தையே கொண்டுவரும். போஜனம் (மாவு) தேவனுடைய வார்த்தையாக இருக்கிறபடியினால், அன் றும், இன்றும் அதுவே **"பானையில் இருக்கிற சாவுக்கு"** தீர்வாக இருக்கிறது (II**இராஜா.** 4:41). நாம் தேவனுடைய வார்த்தையோடு வேறொன்றைச் சேர்ப்பதிலிருந்தோ அல்லது அதிலிருந்து ஏதா வதை அகற்றுவதிலிருந்தோ, எப்பொழுது ஓயப்போகிறோம் (**வெளி.** 22:18-19)? ஒவ்வொரு முறையும் அது மரணத்தையே ஏற்படுத்துகிறது. சாத்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைச் சோதிக்கும்பொழுதும் இப்படிச் செய்தான்; ஒவ்வொரு சோதனை யையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய வாயி லிருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையினாலும் முறியடித் தார் (**மத்.** 4:3-10); அதுவே சகல பிரச்னைகளுக்கும் தீர்வாயிருக் கிறது.

ஏப்ரல்

28

அ*தற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி என்றான். அதற்கு அவன்: அதை ஜனங்களுக்குச் சாப்பிடக் கொடு; சாப்பிட்டபிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக் கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப் பொழுது அவர்களுக்கு முன்பாக அதை வைத்தான்; கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட் டதுமன்றி மீதியும் இருந்தது (II****இராஜா. 4:43-44).*

"மனுஷனுடைய ஆத்துமா மிகவும் பெரியது;
தேவனே அதனை நிரப்பவல்லவர்"

எலிசாவின் இன்னொரு அற்புதத்தை **IIஇராஜாக்கள் 4:42-44** பிரகடனப்படுத்துகிறது. இந்த வேதவாக்கியத்தில் தேவனுடைய மனுஷனுக்கு **"முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும்"** ஒரு மனுஷன் கொண்டு வந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. **"வாற்கோதுமை அப்பம்"** இயேசுகிறிஸ்துவையும் **"தாள் கதிர்கள்"** தேவனுடைய வார்த்தையையும் பிரதிபலிக்கிறது.

எலிசா அதனை **"ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு"** என்று தன் பணிவிடைக்காரனிடம் சொன்னான்; ஆனால், பணிவிடைக் காரன் மாதிரியே மனிதர் இயேசுகிறிஸ்துவை அனுமானிக்

கிறார்கள். உலகம் அவரை ஒரு மனுஷனாகவும், வேண்டுமென் றால் கொஞ்சம் அதிகமாக அவரை ஒரு தீர்க்கதரிசியாகவும் நம்புவதற்குத் தயாராயிருக்கிறது. அவர் மனுஷனுடைய இருத யத்தின் பசியைப்போக்க வல்லவர் என்பதனை நம்புவதற்குத் தயாராயில்லை; ஆனால், உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்தா லும், மனுஷனுடைய பசியைப் போக்கமுடியாமல் இருக்கிறது என்பதனை அவர்கள் சிந்தித்துப்பார்ப்பதில்லை; இயேசுகிறிஸ்து ஒருவரே மனுஷனுடைய இருதயத்தின் பசியையும் தாகத்தை யும் தீர்க்க வல்லவராயிருக்கிறார் (**யோவா. 7:37-39; வெளி. 22:17**).

II**இராஜாக்கள் 4:42**ம் வார்த்தையின்படி எலிசா "**அதை ஜனங் களுக்குச் சாப்பிடக்கொடு**" என்றான்; கர்த்தருடைய வார்த்தை யின்படி பணிவிடைக்காரன் அவர்களுக்கு முன்பாக அதனை வைத்தான் எனவும், II**இராஜாக்கள் 4:44**ம் வசனம் "**அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது**" எனச் சொல்கிறது.

இஸ்ரவேலியர்களும் அவர் வந்திருந்தபொழுது அப்படித்தான் அவரைக் கருதினார்கள் (**மத். 16:13-14**). ஆனபடியினால், அவ ரைத் தேவனுடைய குமாரன் என்றும், அவர் மனுஷனுடைய இருதயத்தின் தாகத்தைத் தீர்க்கவே வந்தார் என்றும் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். மனுஷனுடைய ஆத்துமா மிகவும் பெரியது; அவரே அதனை நிரப்ப வல்லவர் என்பதனை இந்த அற்புதம் படம்பிடித்துக்காட்டுகிறது; அவர் சிலுவைக்குச் சென்று அதனைக் கிருபையாக மனுஷனுக்குக் கொடுத்தார்.

ஏப்ரல்

29

***அ**ப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான் (II**இராஜா.** 5:10).*

"நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு"

சீரிய ராஜாவின் படைத்தலைவனான நாகமானைப்பற்றி II**இராஜாக்கள்** 5ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் அவன் தன் ஆண்டவனிடத்தில் ஒரு **"பெரிய மனுஷனும்" "எண்ணிக் கையுள்ளவனும்" "மகா பராக்கிரமசாலியாகவும்"** இருந்தான் எனக் கூறியுள்ளார்; ஆனாலும், என்ன பிரயோஜனம்? அவனோ **"குஷ்டரோகியாக"** இருந்தான் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் குஷ்டரோகத்திற்கு மரணம் எனத் தீர்ப்பளிக் கப்பட்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் அதனைப் பாவம் என முத்திரையிட்டிருக்கிறார்; பூமியில் அந்த நோய்க்கு நிவாரணம் இல்லாததுபோல, அந்தப் பாவத்துக்கும் பூமியில் நிவாரணம் இல்லை.

பரிசுத்த ஆவியானவர் ஒரு சிறு பெண்ணைக் குறிப்பிட்டு, அவளுடைய பெயரை அறிவிக்காமல், அவள் இஸ்ரவேலி லிருந்து சிறைக்கைதியாக சீரிய தண்டுகளினால் பிடித்துக் கொண்டு வரப்பட்டாள் என்றும், அந்தச் சிறு பெண் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள் என்றும்

சொல்லியிருக்கிறார். நாகமான் குஷ்டரோகத்தினால் பீடிக்கப் பட்டிருப்பதை அவள் கேள்விப்பட்டு, **"அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசி யினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவரு டைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்"** (II**இராஜா.** 5:3); சிறைக்கைதியாகக் கொண்ட வரப்பட்ட இந்தச் சிறு பெண் ஒரு அடிமையாக அந்நிய தேசத்தில் சேவித்துக் கொண்டிருந் தாள். அவள் இலகுவாக மனச்சோர்வு வியாதியினால் பீடிக்கப் பட்டிருக்கலாம், தன்னுடைய நிலைமைக்காகத் தேவனைக் குற்றம் பிடித்திருக்கலாம்; ஆனால், அவைகள் ஒன்றும் அவ ளைக் கட்டுப்படுத்துவதற்கு இடங்கொடுக்காமல், தான் கொண்டு வரப்பட்ட இடத்தில் தன்னுடைய விசுவாசத்தைப் பராமரித்துக் கொண்டு, தேவனைச் சேவித்தாள். இந்தச் சிறு பெண்ணிடத்தி லிருந்து கிறிஸ்தவர்களாகிய நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப் பினை உண்டே.

இந்தச் சிறு பெண்ணின் வார்த்தையை நம்பி, நாகமான் பல கோடிக்கணக்கான பணத்தை எடுத்துக்கொண்டு இஸ்ரவேலுக்குப் புறப்பட்டான். தன்னுடைய நோயைக் குணமாக்குவதற்கு இந்தப் பணத்தைப் பாவிக்க அவன் உத்தேசித்திருந்தான்; இரட்சிப்பை விலைகொடுத்து வாங்குவதில் உலகம் ஓய்ந்தபாடில்லை; அது மட்டுமல்ல, எலிசாவிடம் போவதற்குப் பதிலாக முதலில் இஸ்ர வேல் ராஜாவிடம் நாகமான் சென்றான். இஸ்ரவேலின் ராஜா என்ன செய்யமுடியும்? என்பதனை அவனால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. மனுஷனிடம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு இல்லை என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். எலிசா இத னைக் கேள்விப்பட்டு, **".....அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ர வேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான்"** (II**இராஜா.** 5:8).

நாகமான் எலிசாவிடம் வந்தான்; அவனுடைய எதிர்பார்ப்பின் படி சம்பவங்கள் நடக்கவில்லை; எலிசா அவனை வரவேற்க

முன் வரவில்லை; அதற்குப் பதிலாகக் கேலிக்கிடமான (நாகமானைப் பெறுத்தளவில்) செய்தியைத் தன் வேலைக்காரன்மூலம் அனுப்பியிருந்தான். அந்தச் செய்தி என்னவென்றால், **"நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு"** என்பதேயாகும்; ஏன் ஏழு இலக்கத்தை எலிசா தெரிவுசெய்தான்? அதில் எந்தவிதமான மாயவித்தையும் இல்லை; அது முழுமையான பூரணத்துவம், நிறைந்த மீட்பின் திட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது; அது கிறிஸ்து வினால் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட வேலையைக் குறிப்பிடுகிறது. இரட்சிப்பு ஒரு மனுஷனை முழுமையாக்குகிறது; எத்தனையோ கோடிக்கணக்கான ஜனங்கள் கல்வாரித் தண்ணீரில் மூழ்கித் தங்களுடைய பாவங்களைக் கழுவியிருக்கிறார்கள். மனுஷன் ஆவிக்குரிய அழுக்கு நிறைந்தவனாக இருக்கிறான்; உலகத்தின் சவுக்காரங்களினால் இந்த ஆவிக்குரிய அழுக்கைக் கழுவிச் சுத்தப்படுத்தமுடியாது. இந்த ஆவிக்குரிய அழுக்கை இயேசுகிறிஸ்துவினுடைய குற்றமற்ற மாசற்ற விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மட்டுமே சுத்தப்படுத்தமுடியும்.

ஏப்ரல்

30

***அ**ப்பொழுது அவன் இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவரத் தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? (IIஇராஜா. 5:26).*

"பணத்தை வாங்குகிறதற்கு இது காலமா?"

குணமாக்கப்பட்ட நாகமான் நன்றியுடன் எலிசாவிடம் திரும்பி வந்து, **"....ஒரு காணிக்கையை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்"** (II**இராஜா.** 5:15); எலிசா எந்த வெகுமதியையும் அவனிடமிருந்து பெறவில்லை. வேறு சந்தர்ப்பங்களில் எலிசா வெகுமதிகளைப் பெற்றிருக்கிறான் என்பது கேயாசியின் அங்கலாய்ப்பின்மூலம் நிரூபிக்கப்படுகிறது (II**இராஜா.** 5:20); அப்படியாயின், தற்பொழுது நாகமானிடமிருந்து வெகுமதியை வாங்க மறுப்பதற்குக் காரணம் என்ன? நடந்த சகல சம்பவங்களும் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றப்போவதைப் பிரதிபலிக்கிறது; அது ஒன்றே இரட்சிப்பைக் கொடுக்கிறது (**யோவா.** 3:16); அதற்கு எந்த விலையையும் யாரும் கொடுக்கமுடியாது. எலிசா

வெகுமதியைப் பெற்றிருந்தால் உடனடியாகவே கிருபை செல்லு படியற்றதாகிறது; அதுமட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவின் விலை யேறப்பட்ட **"இரத்தம்"** கேலிசெய்யப்படுகிறது.

இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வேலைக்கார னாகிய கேயாசி, திரும்பிப்போய்க்கொண்டிருந்த நாகமானை முந்திஓடி, எலிசா தன் மனதை மாற்றிக்கொண்டதாகப் பொய் சொல்லி, பணத்தைப்பெற்றுக்கொள்ள விரும்புவதாக நாகமா னுக்கு அறிவித்து, **"இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும்"** (II**இராஜா.** 5:22-23) வாங்கிக்கொண் டான்; இந்தச் செய்கையின் முடிவு சந்தோஷமாக இருக்க வில்லை. கேயாசி கிறிஸ்துவின் மாதிரியைக் கேலி செய்தபடி யினால், பரிசுத்த ஆவியானவர் **"ஆகையால் நாகமானின் குஷ் டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்....."** (II**இராஜா.** 5:27) என எலிசா மூலமாக உணர்த் தினார்.

இது சகலருக்கும் ஒரு படிப்பினையாக அமைகிறது; அதென்னவென்றால், ஒருபொழுதும் இரட்சிப்பை விலை கொடுத்து வாங்கமுடியாது. உண்மையில் தேவனிடத்தில் எது வும் விற்பனைக்கு இல்லை; சகலதும் வரங்களாக இருக்கிறது. இரட்சிப்பை உழைத்துப் பெறமுயற்சித்தால், பாவம் நம்மில் தொடர்ந்து இருக்கும். ஒருவன் அந்தப் பாதையைத் தெரிவு செய்தால், பாவம் சதாகாலமும் அவனில் தங்கியிருக்கும்; பவுல் அப்போஸ்தலர் இதுபற்றி **ரோமர்** 10:3லும் 11:21லும் கூறியிருந் தார். இதன் பொருள், தேவனுடைய மீட்பின் திட்டமாகிய கிறிஸ்துவின் சிலுவை உதாசீனஞ்செய்யப்பட்டால், அதன் பிரதி பலன் அழிவே!

மே

1

***ஒ**ருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகை யில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப் பண்ணி, அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான் (IIஇராஜா. 6:5-7).*

"ஒரு கொம்பு"

தற்போதைய காலத்தில் அந்தக் கோடரியின் பெறுமதி அற்ப மானது; அந்தக் கோடரியின் இழப்பு தற்பொழுது ஏற்பட்டால், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படமாட்டாது; ஆயினும், அந்தக் காலத்தில் அந்த இழப்பு குறிப்பிடப்பட்ட முதலீடாகக் கருதப்பட்டதனால், அதன் இழப்பு கணிசமான நஷ்டமே.

இழந்துபோன அந்தக் கோடரியை மீட்டுக்கொள்வதற்கு எலிசா தெரிந்துகொண்ட அந்தக் கொம்பு, எவ்வளவு கரடுமுரடானதாக இருந்தாலும், அது கிறிஸ்துவின் சிலுவையைப் பிரதிபலிக்கிறது; இந்தப் பெரிய படிப்பினையிலிருந்து நாம் கல்வாரி சிலுவையின்

வல்லமையை அறிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் கல்வாரி மூலமாகவே கிடைக்கிறது. எலிசா பிரச்னைக்குத் தீர்வாகக் கிறிஸ்துவின் சிலுவையைப் பயன்படுத்தினான். துரதிஷ்டவசமாகத் தற்போதைய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை ஒருபக்கம் ஒதுக்கிவைத்து, வேறொன்றைத் தீர்வாக நாடுகிறார்கள்; வேறொன்று அது எதுவாயிருந்தாலென்ன, எவ்வளவு ஆவிக்குரிய கனம் நிறைந்ததாயிருந்தாலென்ன அது எந்தக் காலத்திலும் மரணத்தையே கொண்டுவரும் (**I கொரி.** 2:2).

கிறிஸ்துவின் சிலுவை ஒரு நிறைவேற்றப்பட்ட வேலையாயிருக்கிறது (**யோவா.** 19:30); ஆனபடியினால், ஒவ்வொரு விசுவாசியும் தன் கையை நீட்டி, அதனை எடுத்துக்கொள்வானாக. கிறிஸ்துவின் சிலுவை பிரதிபலிப்பது யாவும் நம்முடையதே. கேட்பவன் எவனும் விசுவாசத்தின்மூலம் பெற்றுக்கொள்கிறான் (**லூக்.** 11:10). தன் பிரச்னைக்கு ஏற்றமாதிரிக் கொம்பை எறிந்து (கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசித்து) தனக்குத் தேவையானதைக் கையை நீட்டி, ஒவ்வொருவனும் எடுத்துக்கொள்வானாக.

மே

2

ராஜா பின்னையும் அவளைப் பார்த்து: உனக்கு என்னவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள்: இந்த ஸ்திரீ என்னை நோக்கி: உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி: நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்துவிட்டாள் என்றாள் (II.இராஜா. 6:28-29).

"தன்னினந்தின்னி"

II.இராஜாக்கள் 6:24ல் **"இதற்குப்பின்பு சீரியாவின் ராஜா வாகிய பெனாதாத் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து சமாரியாவை முற்றிக்கைபோட்டான்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்படியானால் II.இராஜாக்கள் 6:23க்கும் II.இராஜாக்கள் 6:24க்கும் இடையில் முரண்பாடு உண்டு எனச் சிலர் விமர்சிப்பதுண்டு; அப்படி எந்த முரண்பாடும் இல்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். II.இராஜாக்கள் 6:8ல் சொல்லப்பட்ட சீரிய ராஜாவின் இராணுவம் தப்பியோடியதைப்பற்றியே II.இராஜாக்கள் 6:23ல் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால், II.இராஜாக்கள் 6:23க்கும் II.இராஜாக்கள் 6:24க்கும்

இடையில் பல வருடங்கள் கழிந்து, புதிய ஆட்சி சீரியாவில் அப்பொழுது இயங்கியது.

சமாரியாவில் ஏற்பட்டிருக்கும் அவலம், ஆகாப் பதவியி லிருந்தபொழுது பெனாதாத்தைக் கொன்றிருந்தால் **II இராஜாக்கள்** 6ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற துன்பத்தை இஸ்ரவேலியர்கள் தவிர்த்திருக்கலாம்; ஆகாப்பைக் கண்டித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசியின் வார்த்தையின்படியே சமாரியாவின் முற்றுகை நிறைவேறினது (**I இராஜா. 20:31-34, 42**). **II இராஜாக்கள் 6:25**ன்படி சீரிய இராணுவத்தின் முற்றுகையினால் சமாரியப்பட்டணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது; பஞ் சம் கொடிதாயிருந்தபடியினால், இஸ்ரவேலிய ஜனங்கள், தன் னினந் தின்னிகளாக மாறினார்கள்; **II இராஜாக்கள் 6:29**ல் **"அப் படியே என் மகனை ஆக்கித்தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி: நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்துவிட்டாள் என்றாள்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுக்குத் தங்களுடைய புற முதுகைக் காட்டுபவர்களுக்கு இப்படி நடக்குமென மோசே முன் கூட்டியே எச்சரித்திருந்தான் (**உபா. 28:53-57**).

இந்தக் கொடுமை இப்பொழுது கிறிஸ்தவர்கள் மத்தியில் நடக்கவில்லையா? தேவனுடைய வழியைப் பின்பற்றாமல், தேவனுக்கு புறமுதுகைக் காட்டுகிற கிறிஸ்தவர்கள், தங்களு டைய பிள்ளைகளை உலகத்தின் ஆசாபாசங்களை அனுபவிப் பதற்கு அனுமதித்து, அவர்களை உயிரோடே தின்கிறார்கள்!!

மே

3

குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுகவாசலில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? (IIஇராஜா. 7:3).

"நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?"

இஸ்ரவேலின் வடபிராந்திய ராஜ்யம் பட்டினியினாலும், அடிமைத்தனத்தினாலும், சூழப்பட்டிருந்தது. அப்பொழுது சீரியர்கள் சமாரிய பட்டணத்தை முற்றுகை போட்டிருந்தனர். உணவு இல்லை; நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்தது (II**இராஜா.** 6:25). பழைய ஏற்பாட்டில் குஷ்டரோகம் அந்தப் பாவத்தின் மாதிரியைப் பிரதிபலித்தது. இஸ்ரவேலியரின் பார்வைக்குக் குஷ்டரோகிகளில் நம்பிக்கையில்லை. எத்தனை கிறிஸ்தவர்கள் அந்த அபாயகரமான நிலைமையில் சஞ்சரிக்கிறார்கள்; இந்த நிலைமை வேதனைக்குரிய நிலைமை. எந்த உதவியும் எந்த வழியும் அவர்களுக்கு இல்லை; தேவன் ஒருவரே அவர்களுக்கு இருக்கும் ஒரே வழியாகும். **நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?** என்ற சொற்றொடரில் விசுவாசத்தை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது.

இந்த வேதவாக்கியத்தில் நாலு குஷ்டரோகிகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது; குஷ்டரோகிகளாகிய நாலுபேரும் ஒலிமுகவாசலில் இருந்தார்கள்; அவர்கள் பட்டணத்திற்குள்

செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை; அவர்களும் பட்டினியினால் செத்துக்கொண்டிருந்தார்கள். இந்தப் பரிதாபகரமான நிலைமையில் இருக்கும்பொழுது, அவர்கள் தமக்குள் ஒருவரை ஒருவர் நோக்கி: **நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?** என்று பேசிக்கொண்டனர்.

அவர்கள் சீரியருடைய பாளயத்திற்குப்போகத் தயாரானார்கள். ஒருவேளை சீரியர்கள் நமக்கு உணவு தருவார்கள்; இந்த முயற்சியில் நாம் மரித்தால், இப்பொழுது இருக்கிற நிலைமை ஒன்றும் அதனைவிட மோசமானதல்ல. எப்படியோ நாம் சாகப் போகிறோம்; ஆனபடியினால், இழப்பதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லி, நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்; ஏனென்றால், விசுவாசம் நடவடிக்கையைக் கோருகிறது (**யாக்.** 2:20).

அப்படியே, எந்தப் பக்கத்திலும் எந்த உதவியும் இல்லாத எத்தனையோ கிறிஸ்தவர்கள் நம்பிக்கையை இழந்து, கிறிஸ்தவத்தைவிட்டு விலகியுள்ளனர். பாவத்தின்மேல் பாவத்தைச் செய்கிறார்கள்; இது குஷ்டரோகத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த மோசமான நிலைமையில் இருக்கும்பொழுது மற்றக் கிறிஸ்தவர்கள் பாவத்தில் ஈடுபட்டிருக்கும் அந்தக் கிறிஸ்தவர்களைப் புறம்பே தள்ளிவிடுவார்கள்; ஆனால், தேவன் நம்மைப் புறம்பே தள்ளுவதில்லை என்பதனை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார்; நம்முடைய ஆத்துமாவை மீட்டுக்கொள்வதற்குப் பெரும் விலையைக் கொடுத்திருக்கிறார்; நாம் தொடர்ந்து சோர்வாயிருந்து, செயற்பட மறுப்போமானால், தேவன் எதனையும் செய்யமுடியாது; ஆனால், நாம் தேவனிடத்தில் பாவத்திற்கு மன்னிப்புக்கேட்டு, தன்னிடம் திரும்புவோம் எனக் காத்துக்கொண்டிருக்கிறார். அந்த நாலு குஷ்டரோகிகளும் **"நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?"** என்று சொன்னதுபோல, நாமும் சொல்லி, அந்த விசுவாசத்தை நாடுவோமாக.

கிறிஸ்தவர்களுக்குத் தேவனே ஒரே நம்பிக்கை; அவர்கள் எழும்பித் தூசைத்தட்டி, உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு, தேவனுடைய குமாரனிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றி யதிலும் நம்பிக்கையை வெளிப்படுத்தி, அதனில் நிலைத்திருப் பார்களானால், அவர்கள் இழக்கப்போவது என்ன? குஷ்டரோகி களுக்கு ஏற்பட்ட நன்மையைப்போல, கிறிஸ்தவர்களுக்கும் ஏற் படலாம் அல்லவோ? அவிசுவாசிகளான அந்த நாலு குஷ்ட ரோகிகளும் உலகத்தின் விசுவாசத்தைக் கடைப்பிடித்து, பலனை அடையக்கூடுமானால், அந்த விசுவாசத்தையுடைய (**1கொரி. 2:2**) கிறிஸ்தவர்கள் எவ்வளவாய்ப் பலன் பெறமுடியும்?

மே

4

பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள் (II இராஜா. 7:9).

"இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்தால், குற்றம் நம்மேல் சுமரும்"

சமாரியாவின் சூரிய அஸ்தமனம் மனுஷகுலத்தில் அவமானம் நிறைந்த சம்பவத்தோடு நிறைவுபெற்றது (II**இராஜா.** 6:25). அதே சூரியன் அடுத்த நாள் காலை மனுஷ வரலாற்றிலேயே பெற்றிராத ஆசீர்வாதங்களோடு உதித்தது; தேவன் மேலுள்ள விசுவாசம் இதனைச் சாதித்தது.

சமாரியா உலகத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அங்கு பசி உண்டு; பட்டினி உண்டு, நோவு உண்டு, வேதனை உண்டு; அவர்கள் பட்டினியினால் சாகிறார்கள். குஷ்டரோகிகள் பரிதாபத்திற்குரியவர்களாக இருந்தும், அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற போதகர்களைப் பிரதிபலிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து வைப்பற்றிய சுவிசேஷத்தில்த்தான் அபரீதம் உண்டு; அது

ஒன்றே பசியாயிருக்கிற உலகத்தின் அடங்காத ஆசைகளைத் திருப்திப்படுத்தமுடியும்.

நம்மிடத்திலே மாபெரும் நற்செய்தி உண்டு; உண்மையில் மனுஷன் என்றுமே அறிந்திராத நற்செய்தி அது; அந்த நற் செய்தி. **"இயேசு இரட்சிக்கிறார்; இயேசு குணமாக்குகிறார்; இயேசு பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் செய்கிறார்; இயேசு விடுதலை செய்கிறார்; இயேசு பரிசுத்தப்படுத்துகிறார்; இயேசு மீண்டும் வருகிறார்** என்பதேயாகும்.

நாம் எழும்பும்பொழுது தேவன் எழும்புகிறார்; இதனை ஒரு பொழுதும் நாம் மறந்துவிடக்கூடாது (**செப்.** 3:17). சீரியருடைய பாளயத்திற்குள் குஷ்டரோகிகள் சென்றவுடன், **"ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு** (குஷ்டரோகிகளின் காலடிகள் மூலம்) **இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினார்"** (II**இராஜா.** 7:6).

சீரியர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: **"இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் என்று சொல்லி, இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய், தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளயத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாகவிட்டு, தங்கள் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள்"** (II**இராஜா.** 7:6-7). பாளயத்திற்குள் சென்று புசித்துக் குடித்த பின்பு குஷ்டரோகிகள் **".....ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்**

என்றார்கள்" (II**இராஜா.** 7:9). கர்த்தரால் தரப்படுவது அற்புதமும் அபரீதமானதுமாயிருக்கிறது.

நம்முடைய ஒவ்வொரு தேவைகளையும் அவைகள் சந்திக் கிறது; அதேநேரம் நாமும் நற்செய்தியாகிய சுவிசேஷத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; அது உலகத்தின் ஒவ் வொரு தேவைகளையும் சந்திக்கிறது. சீரியர்கள் விட்டுவைத் ததை சமாரியர்கள் ஏற்றுக்கொண்டதுபோல, உலகம் கிறிஸ்து வைப்பற்றிய நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாது என்பதனை நாம் அறிந்திருக்கிறோம்; ஆனாலும், சிலர் நிச்சயமாக ஏற்றுக்கொள் ளுவார்கள்; ஏற்றுக்கொள்ளுபவர்கள் சொல்லமுடியாத ஆசீர்வா தங்களைக் காண்பார்கள்; பழைய குஷ்டரோகிகள்போல, நற் செய்தியை எடுத்துச்செல்லவேண்டிய கடமைப்பாடு நமக்குண்டு (**ரோம.** 1:14-15).

மே

5

இவர்கள் அவனை நோக்கி: இந்த நாள் நெருக்கமும் கண்டிதமும் தூஷணமும் அநுபவிக்கிற நாள்; பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை (IIஇராஜா. 19:3).

"பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை"

மனுஷருக்கும் சபைகளுக்கும் தேசத்துக்கும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றவேண்டிய நேரம் ஒன்று வருகிறது. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பெலன், சொந்தப் பெலத்தைப் பற்றியோ அல்லது தேசத்தின் பெலத்தைப்பற்றியோ சொல்லப் படவில்லை; தேவபெலத்தைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கிறது. எசேக்கியா ராஜா, யூதா பாவஞ்செய்தது என்பதனை அறிந்திருந்தான். அந்தக் காரணத்தின் நிமித்தமே தேவன் யூதாவைச் சிட்சிப்பதற்கு அசீரியா ராஜாவின் படையெடுப்பை அனுமதித்திருக்கிறார் என்பதனையும் அறிந்திருந்தான். ஆனபடியினால், கர்த்தரிடத்தில் யூதாவின் நீதியின் நிமித்தம் உரிமையாக விண்ணப்பம் செய்யமுடியவில்லை; ஆனபடியினால், தேவனுடைய இரக்கத்தை நாடுவதைத்தவிர அவனுக்கு வேறுவழியில்லை (II**இராஜா.** 19:15-19). அப்படியே தாவீதும் தனக்கேற்பட்ட இக்கட்டின்போது **"நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே**

விழாதிருப்பேனாக" (II**சாமு. 24:14**) என்று கூறினதை எசேக்கியா ராஜா ஞாபகப்படுத்தியிருக்கலாம்.

நாம் தேவனுடைய இரக்கத்தை நாடுவதே புத்திசாலித்தன மானது. அப்படியே தற்போதைய காலத்திலும் எழுப்புதலைக் கொண்டுவருவதற்குத் தேவன் தயாராயிருக்கிறார்; ஆனால், அதனை நடப்பிப்பதற்கு சபைகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பெலனில்லை; ஆனபடியினால், கிறிஸ்தவ சபைகளுக்கும் மறு பிறப்புப்பெற்ற கிறிஸ்தவர்களுக்கும் இருக்கும் ஒரே நம்பிக்கை, எசேக்கியா ராஜாபோன்று தேவனுடைய இரக்கத்தை நாடுவதே யாகும். கீழ்ப்படிவு, தாழ்மை, நொறுங்குண்டதும் நருங்குண்டது மான இருதயம் (**சங். 51:17; ஏசா. 66:2**), சுயபலத்தில் தங்கியிருக் காமல் (**ரோம. 10:2-3**), முற்றுமுழுவதும் தேவனிடத்தில் தங்கியி ருத்தல் போன்றவைகளே இரக்கத்தை நாடும் வழிகளாகும். இந்த வழிகளைக் கடைப்பிடித்தால் எசேக்கியா ராஜாவின் விண் ணப்பத்தைக் கேட்டதுபோலவும், தாவீதின் விண்ணப்பத்தைக் கேட்டதுபோலவும், நம்முடைய விண்ணப்பத்தையும் தேவன் கேட்பார்; நமக்கும் இரங்குவார்; ஆமென்.

மே

6

***அ**கசியாவின் தாயாகிய அத்தாலியாள் தன் குமாரன் இறந்துபோனதைக் கண்டபோது, எழும்பி ராஜவம்சஸ்தர் யாவரையும் சங்காரம்பண்ணினாள் (IIஇராஜா. 11:1).*

"ஸ்திரீயீன் வித்துக்கு எதிராகச் சாத்தானின் சதி"

விக்கிரகாராதனைக்காரராகிய இஸ்ரவேலரோடு சொந்தங் கொண்டாடின யோசபாத்தின் பாவம் எந்தளவு தூரத்திற்குச் சாத்தானால் திட்டமிடப்பட்டது என்பதனை அநேகர் அறியாமலிருக்கிறார்கள். அத்தாலியாள் என்ற ஒரே பெண் யூதாவின் ராஜாத்தியாக ஆட்சிசெய்தாள். இவள் ஒம்ரியின் பேரப்பிள்ளையும் (II**நாளா.** 22:2), ஆகாப் யேசபேலின் குமாரத்தியாகவும் இருந்தாள். யூதாவின் ராஜாவாகிய யோராமுக்கும் யேசபேலின் குமாரத்தியாகிய அத்தாலியாளுக்குமிடையில் நடைபெற்ற திருமணம், சாத்தானால் யூதேயாவுக்கு விக்கிரகாராதனை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட பாரிய திட்டம் என்பதனை யோசபாத் சிந்திக்கவில்லை.

அப்படியே கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒற்றுமை என்ற பேரில் உலகத்தோடு உறவை ஏற்படுத்துவது நாசத்தையும் மோசத்தையும் விளைவிக்கும் என்பதனை அவர்கள் சிந்திப்பதில்லை. சாத்தானுடைய இந்தப் பாரிய திட்டத்தின்படி யேசபேல் இஸ்ரவேலுக்கு என்ன செய்தாளோ, அதனையே

அத்தாலியாள் யூதேயாவுக்குச் செய்து, ஸ்திரீயின் வித்தை (**ஆதி.** 3:15) வரவிடாமல் தடுத்தாள் என்பதனை யூதா அறிந்திருக்க வில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இந்த அருவருக்கத்தக்க ஏற்பாட்டின்மூலம் தன் குமாரனை விக்கிரகாராதனைகாரரும், இஸ்ரவேலின் மோசமான ஆட்சியாளர்களுமாகிய ஆகாப், யேச பேல் என்பவர்களின் குமாரத்திக்குத் திருமணஞ் செய்வதன் மூலம் ஏற்படுத்தியிருந்தான். யோசபாத்தின் சிந்தனை எதுவா யிருந்தாலென்ன சாத்தான் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஸ்திரீயின் வித்தை அழிப்பதற்கு அவளை உபயோகித்தான். இந்த உலகத்திற்கு மேசியா வந்து பிறக்காதபடிக்கு நுட்பமாக யோசபாத்தின் மூலம் சாத்தான் திட்டம் தீட்டியிருந்தான். ஆனா லும், சாத்தானின் திட்டம் தொடர்ச்சியாகப் பிசுபிசுத்துப்போனதை II**இராஜாக்கள்** 11:2 மறுபடியும் நிரூபிக்கிறது; ஆனால், அதனால் ஏற்பட்ட சேதத்தையும் அழிவையும் நிச்சயமாக **"யோசபாத்தின் பாவம்"** நியாயப்படுத்தமுடியாது; அப்படியே கிறிஸ்தவர்களின் பாவத்தையும் நியாயப்படுத்தமுடியாது.

மே

7

அ**ந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (II**இராஜா. 20:1).

"எசேக்கியாவின் மரணத்துக்கு ஏதுவான நோய்"

இந்த வியாதி எசேக்கியா ராஜாவின் ஆட்சியின் 14ம் வருஷத்தின்போது ஏற்பட்டது. அப்பொழுது அவனுக்கு வயது 39. கடந்த இரண்டு வருஷகாலத்திற்குள்ளேயே இந்தச் சம்பவம் ஏற்பட்டது. அசீரியரின் படையெடுப்பும் அதனைத் தொடர்ந்து 19ம் அதிகாரத்தில் ஏற்பட்ட அதிசயிக்கத்தக்கதான விடுதலையும் காரணமாக இருந்திருக்கலாம்.

இந்த வேதவாக்கியத்தில் எசேக்கியாவின் நோய்க்குரிய காரணம் சொல்லப்படவில்லை; ஆகிலும் II**நாளாகமம்** 32ம் அதிகாரத்தில் மனமேட்டிமைதான் முக்கியமான காரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தேவனுடைய ஆசீர்வாதத்தினிமித்தம் மனமேட்டிமை அடைந்ததுமட்டுமல்ல, எருசலேம் குடிகளும் மனமேட்டிமை அடைந்ததே எசேக்கியாவின் நோய்க்கு முக்கியமான காரணமாகும். அவனும் எருசலேம் குடிகளும் தேவனுக்கு

எதிராகப் பாவஞ்செய்ததன் நிமித்தமே கர்த்தர் இந்த நோயை அனுப்பி, நியாயத்தீர்ப்புக் கொடுக்கவேண்டியதாயிற்று.

எசேக்கியா ராஜாவின் ஆட்சி, ஒருபொழுதும் நடக்காத ஆவிக்குரிய சீர்திருத்தத்துடன் ஆரம்பமானது; இதனிமித்தம் அபரீதமாக அவனைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அந்த ஆசீர்வாதம் அவனுக்கு மனமேட்டிமையைக் கொடுத்தது; அவனைச் சிட்சித்து, உணர்வுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமானபடியினால், சாவுக்கேதுவான நோயைக் கர்த்தர் அவனுக்கு அனுப்பியிருந்தார்.

ஆனாலும், அவன் தன் பாவத்தை உணர்ந்து, தேவனிடம் அழுது மன்னிப்புக்கேட்டதன் நிமித்தம் (I**யோவா.** 1:9) தேவன் அவனை மன்னித்து, குணமாக்கி, விடுதலை கொடுத்தார் என்பதனை நினைவுகூருவோமாக (II**இராஜா.** 20:3-5).

மே

8

***அ**ப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப் புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமான தைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழு தான் (IIஇராஜா. 20:2-3).*

"எசேக்கியாவின் விண்ணப்பமும் அவன் அழுகையும்"

எசேக்கியா ராஜா தன்னுடைய ஐசுவரியம், மகிமை, யூதேயா வின் பெருமிதஉணர்வு, எருசலேம் இவை எல்லாவற்றிற்கும் முகத்தைத் திருப்பி, **"ஐயோ அதமானேன்"** என்று புலம்புகிறான். எந்த நம்பிக்கையுமற்று, தேவனுடைய இரக்கத்தில் அவன் தங்கி யிருந்தான். அவனுடைய ஜெபத்தை உற்றுநோக்கினால் சற்றுப் பெருமை நிறைந்த ஜெபமாகத் தோற்றமளிக்கிறது. அப்படி யல்ல, அவன் கர்த்தருக்குச் சொல்வது என்னவென்றால், தான் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைத் தன்னுடைய முழுப்பலத் தையும் உபயோகித்து, தன்னால் இயன்றளவு கெட்டித்தனமாகச் செய்ய முயற்சித்ததாகக் கூறுகிறான்.

நியாயப்பிரமாணம் எவ்வளவு மேன்மையாக இருந்தாலும், அதனால் தேவனிடத்திலிருந்து எந்தத் தகுதியையும் ஆதாயப் படுத்திக்கொள்ளத் தன்னால் முடியவில்லை என்று அவனுடைய அழுகை குறிப்பிடுகிறது. தான் எவ்வளவு ஊக்கமாக அதனைச் செய்தும், அதனைப் பராமரிக்க முயற்சித்தும், அதனால் ஒரு பிர யோஜனமும் ஏற்படவில்லை என்பதனைத் தான் விளங்கியிருப்ப தாக அழுதான்; இதன் பிரதிபலனாகக் கிருபையிலிருந்து விழுந் தேன் என்பதனையும் உணர்ந்தான் (**கலா.** 5:4). **"விசுவாசத்தி னால் நியாயப்படுத்துதலுக்குப்"** பதிலாக **"கிரியைகளினால் நியாயப்படுத்துதலுக்கு"** தன்னை ஒப்புக்கொடுத்ததே தன்னு டைய இருதயத்தில் மேட்டிமையை உண்டாக்கினது என்பதனை அவன் விளங்கியிருந்தான்; ஆம், அதுவே மேட்டிமையை உண் டாக்கினது; கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு பெரும் படிப்பினை யாக அமைகிறது.

மே

9

பின்பு ஏசாயா: அத்திப்பழத்து அடையைக் கொண்டு வாருங்கள் என்றான்; அதை அவர்கள் கொண்டு வந்து, பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது அவன் பிழைத் தான் (IIஇராஜா. 20:7).

"எசேக்கியாவைக் குணமாக்குவதற்கு அடை தேவையா?"

குற்றம் தேடி அலைபவர்கள், தேவன் எசேக்கியா ராஜாவைக் குணமாக்கியிருந்தால், எதற்காக அத்திப்பழத்து அடையைப் பிள வையின்மேல் பற்றுப்போடவேண்டும் எனக் கேள்வி கேட்ப துண்டு; மேலும், குணமாக்குதல் பூரணப்படவேண்டுமானால், தேவனுக்கு அத்திப்பழத்து அடை தேவையா? என்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், தேவனுக்கு ஒன்றும் தேவை யில்லை; ஆனால், அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு நோக்கம் உண்டு. ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் வாழ்க் கையிலும் அவர்களுடைய இருதயத்திலும் விசுவாசத்தை உரு வாக்குவதே தேவனுடைய பொதுவான நோக்கமாகும். தேவன் நம்முடைய இருதயத்தில் மனமேட்டிமை உண்டாக்குவதற்கு எதுவும் செய்வதில்லை; விசுவாசத்தைப் பலப்படுத்துவதே அவரு டைய முக்கிய நோக்கமாகும் (**மாற்.** 9:23).

தேவன் அவருக்கு விருப்பமான முடிவைக் கொண்டுவரு வதற்கு உடனடியாக நோயைக் குணமாக்கினால் என்ன? ஒரு

டாக்டர் மூலமாகவோ அல்லது ஒரு மருந்தின் மூலமாகவோ அல்லது வேறெதனின் மூலமாகவோ நோயைக் குணமாக்கினால் என்ன? என்ன வித்தியாசம் ஏற்படப்போகிறது? தேவனுடைய நோக்கங்கள் நம்முடைய நோக்கங்களைவிட மகா பெரிதாயிருக்கிறது; அநேகந்தரம் நாம் நமக்குப் பிரியமான குணமாக்குதலை ஆர்வத்துடன் பார்க்கிறோம்; ஆனால், தேவன் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியிலும், ஆவிக்குரிய முதிர்ச்சியிலும் அக்கறையுள்ளவராக இருக்கிறபடியினால், அதற்கேற்றபடியே செயற்படுகிறார்.

மே

10

***யா**பேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம் பெற்றவனாயிருந்தான். அவன் தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள். யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாத படிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார் (நாளா. 4:9-10).*

"யாபேசின் ஜெபம்"

பரிசுத்த ஆவியானவர் நாளாகம வரலாற்றைக் குறிப்பிடும் போது, யாபேசை **"சகோதரரைப்பார்க்கிலும் கனம் பெற்றவனாயிருந்தான்"** எனக் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம் அவன் தேவன்மேல் நம்பிக்கையுள்ளவனாகவும், அவரை அறிவதில் பசியும் தாகமும் உள்ளவனாகவும் இருந்தான்.

எபிரெயப் பண்பாட்டின்படி, அதிகமாகத் தாய்மாரே பெற்ற பிள்ளைக்குப் பெயர் வைப்பதுண்டு; இதற்குச் சில விதிவிலக்கும் உண்டு; அந்தப் பண்பாட்டில் பெயர் முக்கியமானது. பரிசுத்த ஆவியானவர் பெயரை ஏவாவிட்டால், அந்தப் பிள்ளை

எப்படி வரவேண்டுமெனத் தாய் விரும்புகிறாளோ அப்படியே பெயர் வைப்பதுண்டு அல்லது ஏதாவது ஒரு நடந்த சம்பவத்தை நினைவூட்டுவதற்கு அந்தச் சம்பவத்தின் பெயரை வைப்பதும் உண்டு; அந்தச் சம்பவம் சந்தோஷமாகவும் இருக்கலாம் அல்லது துக்கமாகவும் இருக்கலாம்.

இப்படியிருக்க, இந்தப் பையனுக்கு அவனுடைய தாய் யாபேஸ் என்று பெயரிட்டாள். யாபேஸ் என்பதன் பொருள், **"இவன் எனக்குத் துக்கத்தை ஏற்படுத்துகிறான்"** அல்லது **"என்னால் இவனை பராமரிக்கமுடியாது"** அல்லது **"இவன் தேவையில்லை"** எனப் பொருள்படும்; ஆனபடியினால் யாபேஸ் என்ற அந்தப் பெயர், அவன் பிறக்கும்பொழுது இருந்த பாதகமான சூழ் நிலையை அவளுக்கு ஞாபகமூட்டினது. அந்தச் சூழ்நிலை அவனுக்குக் கசப்பை ஏற்படுத்தி, அவனுடைய வாழ்க்கையையே அழித்திருக்கலாம்; ஆனால், யாபேசோ அந்தக் கசப்பான நிலைமையைக் கர்த்தரிடம் எடுத்துச்சென்றான். ஒருவன் கர்த்தரை அறிந்திருந்தால், எந்தப் பிரச்னையும், அது எவ்வளவு கடுமையாயிருந்தாலும், அவர் அதனை ஆசீர்வாதமாக மாற்றுவார்; உண்மையில் தேவன் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுவதில் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்.

அதேபோல, கசப்பான தண்ணீரை மதுரமான தண்ணீராகவும் (**யாத்.** 15:22-26), கானான் தேசத்தில், தண்ணீரைத் திராட்சரசமாகவும் மாற்றினார் என்பதனை நாம் இத்தருணத்தில் நினைவுகூருவோமாக (**யோவா.** 2:1-11); ஆனபடியினால், தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவரை விசுவாசிப்போமானால் (**மாற்.** 9:23), அவரால் முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (**எரேமி.** 32:27).

யாபேஸ்போன்று ஒவ்வொரு விசுவாசியும் தன்னை ஆசீர்வதிக்கவேண்டுமென்று தேவனிடத்தில் விண்ணப்பிக்கவேண்டும்; ஏனென்றால், தேவன் எப்பொழுதும் ஆசீர்வதிக்கிறவர்; மேலும், அந்த விசுவாசி யாபேஸ்போன்று, தன்னுடைய ஆவிக்குரிய, சரீர, பொருளாதார எல்லைகளைப் பெரிதாக்குமாறும், தனக்குப்

பெரும் தரிசனத்தைத் தருமாறும், அவருடைய கரம் தன்னோடு இருக்கவேண்டுமென்றும் விண்ணப்பிக்கவேண்டும்; ஏனென்றால், அவருடைய கரம் எதனையும் செய்யமுடியும் (**மத்.** 19:26); மேலும், விசுவாசி யாபேஸ்போன்று, தீங்கு தன்னைத் துக்கப் படுத்தாதபடிக்குத் தன்னைக் காத்தருளவேண்டுமென்றும் தேவ னிடத்தில் விண்ணப்பிக்கவேண்டும்; யாபேசினுடைய குடும்பத் தைத் தீங்கு கொள்ளைநோய்போலத் தாக்கிய வண்ணமாயிருந் தது; ஆனால், யாபேஸ் கேட்டதைத் தேவன் கொடுத்தார். விசு வாசிகளாகிய நாமும், யாபேஸ்போல விண்ணப்பம்பண்ணி, தேவ னிடத்திலிருந்து சகலத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என் பதே பரிசுத்த ஆவியானவரின் அறிவுரையாகும்.

மே

11

சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரருக்கு மிகவும் பயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்ட யத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால் அப்படிச் செய்யமாட்டேன் என்றான். அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான் (நாளா. 10:3-4).

"சவுல் ராஜாவின் தற்கொலை"

சவுல் ராஜா தற்கொலை செய்துகொண்டான்; அவனுடைய ஆரம்பம் மகிமையாயிருந்தது; ஆனால், முடிவோ, வேதனைக்கு மேல் வேதனையைச் சுவீகரித்துக்கொண்டது. அவன் தனக்குள் ளிருந்த எதிரிகளைத் தோற்கடிக்கத் தவறினான்; அவனுடைய உள்ளார்ந்த எதிரிகள் பிடிவாதம், மதம், தற்பெருமை, மற்றும் மாம்சத்தின் கிரியைகளுமாகும் (**கலா. 5:19-21**). இந்த உள்ளார்ந்த எதிரிகளை அவனால் வெற்றிகொள்ள முடியாமற்போனபடியி னால், அவனுக்கு வெளியேயிருந்த எதிரிகளான பெலிஸ்தியர்

களினால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்; இது நமக் கொரு படிப்பினையாக அமையவேண்டும்.

இதன் முடிவாக இஸ்ரவேலியர்களின் வாசஸ்தலத்தை பெலிஸ்தியர்கள் தங்களுடைய வாசஸ்தலமாக மாற்றிவிட்டார் கள் (**1நாளா. 10:5-7**). இதே நிலைமை தற்பொழுது நடைமுறையி லிருக்கிறது; அதெப்படியென்றால், தேவனால் நமக்குத் தரப்பட்ட வைகளைச் சாத்தான் தனக்குக் குடியிருப்பாக மாற்றிக்கொள்ள விரும்புகிறான். எதிரிகள் எந்தக் காலமும் பரம்பரைச் சொத் துக்களை அழிப்பதற்காக யுத்தத்தில் ஈடுபட்டவண்ணமாய் இருக் கின்றனர் என்பதனை நாம் அறிந்து, எச்சரிக்கையாக இருப்போ மாக. விசுவாசிகளுடைய இறுதித்துளி இரத்தத்தையும் சாத்தான் காணத்துடிக்கிறான் என்பது வெளிப்படையாயிருக்கிறது (**1நாளா. 10:8**). சாத்தானோடு விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இட மில்லை; அவனை நாம் அழிக்கவேண்டும் இல்லையேல், அவ னால் நாம் அழிக்கப்படுவோம் என்பதற்கு சவுலும் அவன் பிள்ளைகளும் அருமையான உதாரணமாயிருக்கிறார்கள்.

1சாமுவேல் அதி:31ல் சவுலின் மரணம் பதிவு செய்யப்பட் டிருக்கிறது; **1நாளாகமம் அதி**:10ல் சவுலினுடைய மரணத்துக்குக் காரணம் என்ன என்பது பரிசுத்த ஆவியானவரினால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (**1நாளா. 10:13-14**). மனுஷன் சம்பவத்தின் வெளிப்படையான காரணங்களைப் பார்க்கமுடியும்; ஆனால், பரி சுத்த ஆவியானவரே அந்தச் சம்பவத்தின் ஆவிக்குரிய காரணங் களை வெளிப்படுத்தமுடியும். **முதலாவதாக**, சவுல் கர்த்தரு டைய வார்த்தையைக் கைக்கொள்ளவில்லை; **இரண்டாவதாக**, அவன் கர்த்தருக்கு எதிராகத் துரோகஞ்செய்தான். **மூன்றாவ தாக**, கர்த்தரைத் தேடாமல், அஞ்சனம் பார்க்கிறவர்களைத் தேடி னான்; இதற்காகவே சவுலைக் கர்த்தர் கொன்றார்; ஆம், பெலிஸ் தியர்கள் அவனைக் கொல்வதற்கு அனுமதித்தார்.

ஆனால், சவுல் கர்த்தரைத் தேடினான் என்று **1சாமுவேல் 28:6**ல் சொல்லப்பட்டிருக்கிறது; ஆயினும், அந்தத் தேடுதலின்

போது மனந்திரும்பவேண்டும் என்ற எண்ணம் அவனுடைய மனதில் தோன்றவில்லை. சவுல் உண்மையாக அந்த நேரத்தில் மனந்திரும்பியிருந்தால், கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு, அவனுக்கு உதவி செய்திருப்பார்; ஆனால், மனுஷன் தன்னுடைய பிடிவாதத்திலும், கலகத்திலும் தொடர்ச்சியாயிருக்க விரும்புகிறானேதவிர, மரணத்திலும்கூட மனந்திரும்ப அவனுக்கு விருப்பமில்லை. எத்தனையோ அவிசுவாசிகளிடத்தில் சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும்பொழுது நாங்கள் இந்துக்களாகப் பிறந்தோம், இந்துக்களாகவே சாவோம் என்று கூறுவது சர்வசாதாரணமாயிருக்கிறது. இத்தகைய பிடிவாதக்காரர்களின் முடிவு சவுல்போன்று தற்கொலையில் முடிந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன்; தற்கொலை ஆவி அவர்களை நிர்மூலமாக்குகிறது.

மே

12

பின்பு தாவீது இஸ்ரவேலனைத்தோடுங்கூட எபூசாகிய எருசலேமுக்குப் போனான்; எபூசியர் அத்தேசத்தின் குடிகளாயிருந்தார்கள். அப்பொழுது எபூசின் குடிகள் தாவீதை நோக்கி: நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை என்றார்கள்; ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று (நாளா. 11:4-5).

"எருசலேம் தாவீதின் நகரமாயிற்று"

நம்முடைய இருதயத்தில் சாத்தானால் கட்டியெழுப்பப்படும் அரண்களின் மாதிரியாக எபூசியர்கள் இருக்கிறார்கள். சவுல் ராஜா ஒருபொழுதும் எபூசியரைத் தோற்கடிக்கவில்லை; அவர்கள் எருசலேமிலேயே இருந்தார்கள். எபூசியர்கள் உட்புறத்து எதிரிகள்; பெலிஸ்தியர்கள் வெளிப்புறத்து எதிரிகள்; உட்புறத்து எதிரிகளை சவுல் ராஜா தோற்கடிக்க முடியாமல்போனபடியினால், வெளிப்புறத்து எதிரிகள் சவுல் ராஜாவைத் தோற்கடித்தார்கள்.

அப்படியே நாமும் நம்முடைய இருதயத்தில் சாத்தானால் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் அரண்களைத் தோற்கடிக்காமல் விட்டால் (**கலா.** 5:19-21), இறுதியில் நிச்சயமாக அவைகள் நம்மை மேற்கொள்ளும்; இதுபற்றி **II கொரிந்தியர்** 10:4-5ல் பவுல் அப்போஸ்தலர் "**எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்ற**

வைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம்" எனக் கூறியிருக்கிறார். இதனை எப்படிச் செய்யமுடியும்? என்பதே கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கும் முக்கியமான பிரச்னையாகும். விசுவாசி தன்னுடைய விசுவாசத்தைப் பிரத்தியேகமாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலு வையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அந்த விசுவாசத் தில் நிலைத்திருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் வல்லமை யாக நம்மில் செயற்பட்டு, இந்த மாபெரும் இக்கட்டிலிருந்து நமக்கு விடுதலை தருவார்; அவருடைய உதவியில்லாமல் இந்த யுத்தத்தை ஒருபொழுதும் வெல்லமுடியாது (**ரோம.** 8:1-2, 11).

சாத்தான் நம்மைப் பரியாசம்பண்ணி, தான் நீடியகாலமாக அந்த அரண்களை ஸ்தாபித்து, கட்டிவைத்திருக்கிறபடியினால், தன்னுடைய இருப்பிடத்தைவிட்டுத் தன்னைத் துரத்த இயலாது என்று பிரகடனப்படுத்துவான் (**நாளா.** 11:5). கிறிஸ்துவின் சிலு வையிலுள்ள விசுவாசத்தின் மூலமாகச் சாத்தான் கட்டியெழுப் பின ஒவ்வொரு அரணையும் நிர்மூலமாக்கி, சாத்தானையும் அவனுடைய கூட்டத்தையும் துரத்திவிடமுடியும் (**1கொரி.** 1:17-18; **கொலோ.** 2:14-15; **ரோம.** 8:25) என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்.

மே

13

பெலிஸ்தர் பாஸ்தம்மீமிலிருக்கிற வாற்கோதுமை நிறைந்த வயல்நிலத்தில் யுத்தத்திற்குக் கூடிவந்த போதும், ஜனம் பெலிஸ்தரைக் கண்டு ஓடினபோதும் இவன் தாவீதோடே அங்கே இருந்தான். அப்பொழுது அவர்கள் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தரை மடிங்கடித்தார்கள்; அதினாலே கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார் (நாளா. 11:13-14).

"வாற்கோதுமை நிறைந்த வயல்நிலத்தில் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்"

வாற்கோதுமை, தானியங்களில் மிகவும் குறைந்த பெறுமதி உள்ளதாக இருப்பதனால், பலர் சிலவேளைகளில் அதனைப் பாதுகாப்பதற்காக யுத்தஞ்செய்வதில் பிரயோஜனமில்லை என்று நினைத்திருக்கலாம்; ஆனால், கர்த்தரோ, நம்முடைய பரம்பரைச் சொத்துக்கள், அவைகள் எவ்வளவு முக்கியத்துவம் இல்லாதிருந்தாலும், வேரோடு சாத்தான் களையப்படவேண்டும் என விரும்புகிறார்; அற்ப விஷயத்தில் கவனம் இல்லாமல் இருந்தால், வெகு சீக்கிரத்தில் அவைகள் மலையைப்போலப் பெரிதாக வளரும்; கிறிஸ்தவத்தில் விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

கர்த்தருடைய ஜனங்கள் அந்த வாற்கோதுமைப்பயிரை வளர்ப் பதற்கு மிகுந்த தீவிரமாக உழைத்தார்கள். அறுவடைக் காலம் வரும்பொழுது பெலிஸ்தர்கள் திடீரெனப்பாய்ந்து, இஸ்ரவேலியர் களுக்குரியதைப் பறித்துக்கொள்வார்கள். சாத்தான் விசுவாசி களிடமிருந்து அவர்களுடையதைப் பறித்துக்கொள்வதை இது உதாரணமாகக் காட்டுகிறது. நாம் தேவனால் நியமிக்கப்பட்ட வழியைப் பின்பற்றாதிருந்தால், சாத்தான் இவ்விதமாகவே நம்மு டைய சொத்துக்களைக் கொள்ளையடிக்கிறான் என்பதனைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்தி ருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் சட்டபூர்வமாக நம்மில் வல்லமையாக அசைவாடுவார்; இதுவே தேவனால் நியமிக்கப் பட்ட வழியாகும். பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருக்கிறபடி யினால், அவரால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை. அநேகந் தரம் அவர் அதனைச் செய்யமுடியாமலிருப்பதன் காரணம், நாம் வேதவார்த்தையைப் பின்பற்றாமல் இருப்பதேயாகும்; நாம் வேறொரு இயேசுவைப் (**IIகொரி. 11:4**) பின்பற்றுவதே இதற்கு முக்கியமான காரணமாகும்.

பரிசுத்த ஆவியானவர் ஒருபொழுதும் வேறொரு இயேசுவை கணக்குக்கு எடுப்பதில்லை என்பதனை நிச்சயமாக அறிந்திருப் போமாக; அதெப்படியெனில், நாம் கிறிஸ்துவைச் சேவிப்பதாகப் பலமாக ஆர்ப்பரிக்கிறோம்; ஆனால், கிறிஸ்துவின் சிலுவை யைத் தவிர்க்கிறோம் அல்லது அதனை உதாசீனஞ்செய்கிறோம் அல்லது அதனோடு இன்னொன்றையும் இணைக்கிறோம். கிறிஸ்துவின் சிலுவை உதாசீனஞ்செய்யப்பட்டிருப்பின், நாம் வேறொரு இயேசுவையே சேவிக்கிறோம் என்பதனைக் கிறிஸ்த வர்கள் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

மே

14

***நா**ன் இதைச் செய்யாதபடிக்கு, என் தேவன் என் னைக் காத்துக்கொள்ளக்கடவர்; தங்கள் பிராணனை எண்ணாமல்போய் அதைக் கொண்டுவந்த இந்த மனு ஷரின் ரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி அதைக் குடிக்கமாட்டேன் என்றான். இப்படி இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள் (நாளா. 11:19).*

"நான் இதைச் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காத்துக்கொள்ளக்கடவர்"

கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவின் பலியை ஒருபொழுதும் தன் சொந்த நலனுக்காகப் பாவிக்கக்கூடாது என்பதே இந்த வேத வாக்கியத்தின் பொருளாகும்; அந்தப் பலி என்ன நோக்கத்திற் காகக் கொடுக்கப்பட்டதோ அதற்கே உபயோகிக்கவேண்டும்; அந்த நோக்கம் ஆத்ம இரட்சிப்பேயாகும்; அதனை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காகக் கிறிஸ்து தன்னுடைய ஜீவனையே சிலுவை யில் ஊற்றினார்.

ஆனபடியினால்த்தான், விசுவாச வார்த்தை மார்க்கத்தின் உப தேசம் பொய்யானதும் தவறானதுமாயிருக்கிறது; இந்த மார்க்கம் தன்னுடைய சொந்த நலனுக்குக் கிறிஸ்துவைப் பாவிக்கிறது; அந்தச் சொந்த நலன் ஐசுவரியமேயாகும். ஆம், தேவன்

அபரீதமாக ஆசீர்வதிப்பது உண்மைதான்; ஆயினும், அந்த ஆசீர் வாதம் பிரத்தியேகமாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நாம் விசுவாசத்தை வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுதே சாத்தியமாகிறது. உண்மை நிலைமை என்னவென்றால், இந்தப் பொய்யான உப தேசத்தின்மூலம் பூரண நன்மையை அடைவது போதகர்களே யாகும். வேதத்தைப் புரட்டிப் பல்வேறு தந்திரங்களை உபயோ கித்து, விசுவாசிகளிடமிருந்து பணம் கறக்கப்படுகிறது.

இப்படியிருக்க, இந்த வேதவசனத்தில் சொல்லப்பட்ட மனு ஷரின் நாமம் நித்தியத்திற்கும் வேதவாக்கியத்தில் பதிவுசெய்யப் பட்டிருக்கிறது; என்ன கௌரவம், என்ன சலுகை. உலகத்தி லிருக்கிற எந்த விசுவாசியும் கர்த்தரை ஒழுங்காகப் பின்பற்று வானாயின் அதே சக்தியையும், வல்லமையையும் பெறமுடியும் (**நாளா. 11:24**). **நாளாகமம் 11:23**ஐப் பரிசீலனை செய்வோமாகில் இங்கு பெரும் ஆவிக்குரிய உண்மை தரப்பட்டிருக்கிறது. அதென்னவெனில், தோற்கடிக்கப்பட்ட அசுத்த ஆவிகள் தேவனு டைய பிள்ளைகளை அழிப்பதற்கு மறுபடியும் முயற்சிசெய்யும். அவைகள் நமக்குள் நுழையாதபடி நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இப்படியே பெனாயா செய்தான்; இயேசுவின் நாமத்தினால் இதனைச் செய்யமுடியுமேதவிர வேறெந்த வழியி னாலும் அல்ல என்பதனை நாம் அறிந்திருப்போமாக.

மே

15

***தா**வீது கீசின் குமாரனாகிய சவுலினிமித்தம் இன்னும் மறைவாயிருக்கையில், சிக்லாகிலிருக்கிற அவனிடத்திற்கு வந்து, யுத்தத்திற்கு ஒத்தாசை செய்த வில்வீரரும், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைவாட்டமான பராக்கிரமசாலிகளான மற்றமனுஷருமானவர்கள்: சவுலின் சகோதரராகிய பென்யமீன் கோத்திரத்தில்* (I**நாளா.** 12:1-2),

"யுத்தத்திற்கு ஒத்தாசை செய்பவர்கள்"

I**நாளாகமம்** 12ம் அதிகாரம் ஒரு மகிமையான அதிகாரம்; ஏனென்றால், இஸ்ரவேலியர்கள் கடைசியாகத் தேவனுடைய சித்தத்தின்படி நடப்பதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். இது தாவீதின் இருளடைந்த நாட்களில் தொடங்கி, கற்பனைக்கு அப்பாற்பட்ட வெற்றியோடு முடிவடைகிறது. தற்பொழுது தேவையானது யுத்தத்திற்கு ஒத்தாசை செய்பவர்கள்; ஏனென்றால், பாரிய யுத்தத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இது சாதாரணமான யுத்தமல்ல, பயங்கரமான யுத்தம் (II**கொரி.** 10:3; I**தீமோ.** 1:18, 6:12; I**பேது.** 2:11). இந்த யுத்தம் நமக்குண்டு என்று பவுல் அப்போஸ்தலர் **எபேசியர்** 6:12ல் கூறியிருப்பதுமட்டுமல்ல, அந்த யுத்தத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதனையும் பரிசுத்த ஆவியானவர்

வெளிப்படுத்தியிருக்கிறார் (**எபேசி.** 6:13-18). இந்த யுத்தத்தை நடத்துவதற்குத் தேவன் ஏற்படுத்திய வழியைவிட்டு, வேறு வழி களைப் பின்பற்றினால் நிச்சயமாகத் தோல்வியிலேயே போய் முடியும்; பிரத்தியேகமாக, அந்த விசுவாசமே தேவனால் ஏற்படுத் தப்பட்ட வழியாகும்.

தாவீதினிடத்தில் வந்தவர்கள் பென்யமீன் கோத்திரத்தார்கள்; இவர்கள் யுத்தத்திற்கு ஒத்தாசை செய்வதற்கு வந்திருக்கிறார்கள். சவுல் ராஜாவும் பென்யமீன் கோத்திரத்தானாக இருந்தும், இவர் கள் தாவீதினிடத்தில் வந்தவர்கள்; கர்த்தருடைய அபிஷேகம் தாவீதினிடத்தில் இருக்கிறதேதவிர, சவுல் ராஜாவினிடத்தில் இல்லை என்பதனை அவர்கள் அறிந்திருந்தார்கள். இந்த மனிதர் சவுல் ராஜாவைக் கைவிட்டு, தாவீதினிடத்தில் வருவதற்கு எவ் வளவு விசுவாசம் அவர்களுக்குத் தேவையாயிருந்தது? அதே போல, மதத்தைவிட்டுப் பரலோகத்தின் தாவீதினிடத்திற்கு (இயேசுகிறிஸ்துவினிடத்திற்கு) வருவதற்கு தற்பொழுது எவ் வளவு விசுவாசம் தேவையாயிருக்கிறது? தாவீது நாடோடியா யிருந்தும், அவனிடத்தில் கர்த்தருடைய அபிஷேகம் இருந்ததே; கிறிஸ்தவர்கள் மாம்சத்தை நாடாமல், அபிஷேகத்தை நாடுவார் களாக.

மே

16

காத்தியரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, சிங்க முகம்போன்ற முகமும், மலைகளிலிருக்கிற வெளி மான் வேகம்போன்ற வேகமுமுள்ளவர்களாயிருந்து, யுத்தசேவகரான பராக்கிரமசாலிகள் சிலரும் வனாந் தரத்திலுள்ள அரணான இடத்தில் இருக்கிற தாவீது பட்சமாய்ச் சேர்ந்தார்கள் (நாளா. 12:8).

"சிங்கமுகம்போன்ற முகமும், வெளிமான் வேகமும்"

வேதவாக்கியத்தை உற்றுநோக்கும்பொழுது தாவீதின் பட்ச மாய்ச் சேர்ந்த காத்தியர் பிரத்தியேகமான குணாதிசயங்களை உடையவர்களாயிருந்தார்கள். இவர்கள் **"சிங்கமுகம்போன்ற முகமும்" "மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம்போன்ற வேகமுமுள்ளவர்களாயிருந்து" "யுத்த பராக்கிரமசாலிகளா யிருந்தார்கள்"** என வேதம் உறுதிப்படுத்துகிறது; அதெப்படியெ னில், இவ்விதமாய் இவர்கள் ஆவிக்குரிய உலகத்தில் தோற்ற மளித்தார்கள். அசுத்த ஆவிகள் இவர்களுக்கு எதிராக வரும் போது, இவர்களைச் சாதாரண மனுஷராகக் காணவில்லை; அதற்குப் பதிலாக விசுவாசத்தில் மகா பலவான்களையே சந் திக்கவேண்டியதாயிருந்தது எனப் பரிசுத்த ஆவியானவர் சாட்சி பகர்கிறார். காத்தியர்கள் அப்படித் தம்மை எண்ணவில்லை; ஆனால், பரிசுத்த ஆவியானவர் அவர்களை அப்படிப் பார்க்கிறார் என வேதம் உறுதிப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவர் நம்மை எப்படிப் பார்க்கிறார்? ஆவிக்குரிய உலகத்தில் நாம் காத்தியர்கள் போன்று இருக்கிறோமோ என்பதனைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது; காத்தியர்கள் அந்த கார சக்திகளைப் பயமுறுத்தி, அடிபணிய வைத்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் புறப்படும்போது பிசாசானவன் அவர்களை யாரென அறிவான். விசுவாசிகளாகிய நாம் காத்தியர்கள் போன்று இருப்பதற்கு நம்மை எப்படி நடத்தவேண்டுமென சில ஆலோசனைகளை வேதவாக்கியங்கள் நெறிப்படுத்துகிறது;

அவையாவன:

(1) நாம் ஒருபொழுதும் குறைசொல்லாதவர்களாக இருக்கவேண்டும்; (2) நாம் எக்காலத்திலும் தலையை உயர்த்திப் பார்க்கிறவர்களாயிருக்கவேண்டும்; (3) **எதுவாயிருந்தாலும் நம்முடைய ஆண்டவரை மகிமைப்படுத்தவேண்டும்;** (4) சூழ்நிலைகளைப் பார்ப்பதை அறவே நிறுத்தவேண்டும்; (5) வேதவாக்கியத்தில் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கவேண்டும்; (6) கிறிஸ்துவின் சிலுவையே எக்காலத்திலும் விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும்; (7) முற்றும் ஜெயங்கொள்கிறவர்களாக நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தவேண்டும்!

இப்படியிருக்க, காத்தியர் **"வனாந்தரத்திலுள்ள அரணான இடத்தில் இருக்கிற தாவீது பட்சமாய்ச் சேர்ந்தார்கள்"** என வேதவாக்கியம் உறுதிப்படுத்துகிறது. இந்த நேரத்தில் தாவீது வனாந்தரத்தில் சஞ்சரித்தான்; வெளிப்படையாக அவனிடத்தில் கவரப்படுவதற்கென ஒன்றுமில்லை; அவனை வெறுப்பதற்கேற்ற சூழ்நிலைகளே தாராளமாக இருந்தது. சூழ்நிலைகளும் வெளித்தோற்றமும் விரும்பப்படத்தக்கதாக தாவீதினிடத்தில் இல்லாதிருந்தும், தேவனுடைய கரம் அவனோடு இருந்ததைக் காத்தியர்கள் அறிந்துகொண்டனர்; அது அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது; காத்தியர்கள்போன்று ஒவ்வொரு விசுவாசியும் உலகத்திலிருந்து தன்னை வேறுபடுத்தி, பரலோகத்தின் தாவீதாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் சேரக்கடவன்.

விசுவாசிகளாகிய நாம் உலகத்தில் இருக்கவேண்டும், ஆனால், உலகமாக மாறிவிடக்கூடாது என்பதே அதன் பொருளாகும்; அதெப்படியெனில், உலகத்தின் வழிமுறைகளை நாம் பின்பற்றக் கூடாது. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டுமென (**IIகொரி. 6:14-18**) வேதத்தில் கூறப்பட்டிருந்தாலும், ஒதுங்கியிருக்கவேண்டுமென வேதத்தில் சொல்லப்படவில்லை (**ரோம. 6:11**).

நாம் கிறிஸ்துவுக்காகப் பிரிந்திருக்கும்பொழுதே உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கமுடியும்; பிரிந்திருப்பதென்பது ஒன்றிலிருந்து (உலகத்திலிருந்து) இன்னொன்றுக்குப் (தேவனுக்கென்று) பிரிந்திருப்பதாகும். அப்படியே விசுவாசிகளாகிய நாமும் கிறிஸ்துவுக்காக உலகத்திலிருந்து பிரிந்திருக்கிறோம். உலகத்தினுடைய நடைமுறை இந்தப் பிரபஞ்சத்தின் அதிகாரியாகிய சாத்தானால் நடைமுறைப்படுத்தப்படுகிறது (**லூக். 4:5-6**). உலகத்திற்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் சம்பந்தமில்லை; நாம் உலகத்தில் இருக்கிறோம்; ஆனால், நாம் உலகத்தினுடையவர்கள் அல்ல (**யோவா. 15:19**). I**நாளாகமம் 12:8, 15** நம்மில் செயற்படவேண்டுமானால் காத்தியர்கள்போன்று பரலோகத்தின் தாவீதாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பக்கம் சாய்ந்திருப்போமாக.

மே

17

***அ**வர்கள் தேவனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு புதுரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்; ஊசாவும் அகியோவும் ரதத்தை நடத்தினார்கள். தாவீதும் சகல இஸ்ரவேலரும் தங்கள் முழுப் பலத்தோடும் தேவனுக்குமுன்பாகச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் மேளங்களையும் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் சேவித்து மகிழ்ச்சியாய் ஆடிப்பாடினார்கள் (நாளா. 13:7-8).*

"புதுரதம்"

தேவனுடைய பெட்டி தேவகட்டளைப்படி ஆசாரியர்களின் தோளில் சுமந்துகொண்டு வரவேண்டும் (**யோசு.** 3:6-8). இதனைத் தவிர வேறெந்த விதமான இரதத்திலும் அல்ல; ஆசாரியர்கள் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறார்கள். இந்த அடையாளம் கர்த்தருடைய பிரசன்னம் கிறிஸ்துவிலேயே உண்டு என்பதனையும், கிறிஸ்துவுக்குள்ளேயே உண்டு என்பதனையும் படம்பிடித்துக் காட்டுகிறது; இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. மனுஷனால் உருவாக்கப்படும் ஒவ்வொன்றும், அது எதுவாயிருந்தாலென்ன அவை யாவும் ஒவ்வொருவிதமான புதுரதமேயாகும்; அது நிச்சயமாகத் தோல்வியிலேயேமுடியும். கர்த்தருடைய பெட்டியைத் திருப்பி அனுப்புவதற்கு விருத்த சேதனமில்லாத பெலிஸ்தர்கள் புதுரதத்தை உருவாக்கினார்கள்

(I**சாமு.** 6:7). அப்படியே தாவீதும் செய்யவில்லையா? உலகம் தற்பொழுது கிறிஸ்தவ சபைகளுக்குள் உட்பிரவேசித்துவிட்டது; இதன் பிரதிபலன் புதுப்புது இரதங்களே.

செய்யவேண்டியது என்ன? நாடவேண்டியது என்ன? என்பது தேவனுடைய வார்த்தையிலேயே உண்டு (II**பேது.** 1:3). வேத வார்த்தையைவிட்டு, விலகினால் அது மரணத்தையே ஏற்படுத் தும். துரதிஷ்டவசமாக இப்பொழுது கிறிஸ்தவ சபைகள் புது ரதங்களினால் நிறைந்திருக்கிறது. இதற்கு மிகமுக்கியமான காரணம் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கிப்பார் இல்லை; வேறொரு இயேசு தாராளமாகப் பிரசங் கிக்கப்படுகிறது (II**கொரி.** 11:4); அதன் பிரதிபலன் புதுரதங்களே.

தாவீதும் சகல இஸ்ரவேலியர்களும் தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஆடிப்பாடினார்கள் என்று I**நாளாகமம்** 13:8 பிரகடனப் படுத்துகிறது. தற்போதைய சபைகளில் நடக்கிற ஆடல்கள் பாடல்களை இது ஒத்திருக்கவில்லையா? இவை யாவும் மதப் புரளிகளேதவிர, வேறொன்றுமில்லை. இத்தகைய செயல்கள் முற்றிலும் தவறானது; இவை மிகுந்த ஆர்ப்பரிப்புடையவை களாக இருந்தும், இவை காணாமற்போனவர்களின் ஆர்ப்பரிப் பாகும். இவை யாவும் பல்வேறுவிதமான மதப்புரளிகளாகும்; இந்தச் சபையில் உள்ளவர்கள் ஆவியில் மரித்துப்போயிருக் கிறார்கள். இந்தச் சபைகளில் பரிசுத்த ஆவியானவர் இல்லை; வேறொரு ஆவியின் பிரசன்னமே அங்குண்டு; வேதவார்த்தை யின்படி செயற்பாடுகள் இல்லாதிருந்தால், அவை யாவும் மதநம் பிக்கையைப் பிரதிபலிக்கிறது. அது ஒருபொழுதும் தேவனு கேற்றதாக இருக்கப்போவதில்லை; அது மரணத்தையே கொண்டு வரும். அபியூவும் நாதாபும் வேதவார்த்தையை உதாசீனஞ் செய்தார்கள்; தேவனுடைய சந்நிதியிலேயே அவர்களுக்கு மர ணம் சம்பவித்தது (**லேவி.** 10:1-2) என்பதனை ஞாபகமூட்டு வோமாக.

மே

18

***அ**ப்பொழுது கர்த்தர் ஊசாவின்மேல் கோபம் மூண்டவராகி, அவன் தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினதினிமித்தம் அவனை அடித்தார்; அங்கே அவன் தேவசமுகத்தில் செத்தான் (1நாளா. 13:10).*

"ஊசாவின் மரணம்"

புதுரதத்தின்மேல் ஏன் பெட்டியைக் கொண்டு வரமுடியாதென அதிகமான கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். பெலிஸ்தர்கள் புதுரதத்தின்மேல் வைத்துத் தேவனுடைய பெட்டியைத் திருப்பி அனுப்பினார்கள் என்று காரணமும் காண்பிக்கிறார்கள். துரதிஷ்டவசமாகத் தற்போதைய கிறிஸ்தவ சபைகள் **"புதுரதங்களினாலும்" "உலகத்தினுடைய வழிமுறைகளினாலும்"** நிறைந்துபோயுள்ளன. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எதுவும் புதுரதங்களாயிருக்கின்றன; அதன்முடிவு மரணமேயாகும்.

தேவனுடைய பெட்டி ஆசாரியர்களின் தோள்மூட்டில் வைத்தே சுமக்கப்படவேண்டும்; அதுவே தேவநியதி (**யோசு.** 3:6-8). எதற்காக ஆசாரியர்கள்? பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்களே தேவனுக்கும் மனுஷனுக்குமிடையில் மத்தியஸ்தர்களாக இருந்தனர்; அவர்கள் கிறிஸ்துவின் மாதிரியாக இருந்தனர். அவர்கள் பரிபூரணமற்றவர்களாகவும், மனுஷர்களாகவும் இருந்தபடியினால், நிஜத்தைப் பிரதிபலிக்கிற மாதிரியாக அவர்கள் இருந்தனர்; அவர்கள் நிஜமல்ல, நிழல்களே. ஆசாரியர்களே உடன் படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்குத் தேவனால் தகுதி

பெற்றவர்கள்; தாவீதும் பிரதான ஆசாரியர்களும் இதனை நன்கு அறிந்திருக்கவேண்டும்; அவர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப் புதுரதத்தில் கொண்டுவரத் தீர்மானித்தபடியினால், தேவனுடைய பெட்டி ஆசாரியர்களின் தோள்மூட்டில் வைத்துச் சுமக்கவேண்டும் என்பதனை அவர்கள் உதாசீனஞ்செய்தார்கள் என்பது தெளிவாகிறது.

தேவனுக்கு நாம் செய்வது எதுவோ, அது கிறிஸ்துவின் சிலுவையின் அடிப்படையில் அமையாவிட்டால் அது புதுரதமே; அதனைத் தேவன் ஒருபொழுதும் அங்கீகரிக்கமாட்டார். அப்படியாயின் சகல தொழுகைகளும், தேவனுடைய ஊழியத்திற்குப் பணம்கொடுப்பதும் கிறிஸ்துவின் சிலுவையின் அடிப்படையிலேயே கொடுக்கப்படவேண்டும் (**பிலி. 4:18-19**); நாம் கேட்கும் செய்திகள் நூற்றுக்கு நூறுவீதம் கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றியதாகவே இருக்கவேண்டும். அதென்னவெனில், நம்முடைய **விசுவாசத்தின் குறிக்கோள்** எப்பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றியதாகவே இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் தற்போதைய கிறிஸ்தவ சபைகள் இயங்குகிறதா? இல்லை என்றே கூறவேண்டியதாயிருக்கிறது; இதன் பிரதிபலனைப் பார்ப்போம்.

(1) எந்த ஒரு விசுவாசியும் கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவனுடைய ஆவி பலவீனமடைந்து, காலகதியில் ஆத்துமாவையே இழந்து போகக்கூடிய சாத்தியக்கூறு நிச்சயமாக உண்டு.

(2) தனிப்பட்ட முறையில் விசுவாசி ஆத்துமாவில் பலவீனமடைவதுமட்டுமல்ல, கிறிஸ்தவ மார்க்கங்களும் வேதத்தில் நம்பிக்கை இழந்து, உலகத்தின் வழிகளைப் பின்தொடர்வார்கள்.

எந்த உபதேசமோ, எந்தத் திட்டமோ, எந்த ஆலோசனையோ தேவனிடத்திலிருந்து வந்ததாயிருந்தால், அது கிறிஸ்துவின் சிலுவையின் அடிப்படையிலேயே உருவாகியிருக்கவேண்டும்; அப்படி இல்லாவிட்டால் அவை யாவும் புதுரதங்களே. வேதவாக்கியத்

தின்படி **"தாவீதும் சகல இஸ்ரவேலரும் தங்கள் முழுப்பலத்தோடும் தேவனுக்கு முன்பாகச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் மேளங்களையும் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் சேவித்து மகிழ்ச்சியாய் ஆடிப்பாடினார்கள்"** (**1நாளா. 13:8**) எனச் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வித மனக்கிளர்ச்சிகள் காண்பிக்கப்பட்டாலென்ன, அவைகள் எவ்வளவு தீவிரமாயிருந்தாலென்ன, அதன் சடங்குகள் பார்ப்பதற்குப் பிரமிப்பை ஏற்படுத்தினாலென்ன, கிறிஸ்துவின் சிலுவையின் அடிப்படையில் அவைகள் இல்லாவிட்டால் மரணமே அதன் முடிவாகும்.

தற்போதைய அநேகமான கிறிஸ்தவ சபைகள் தம்முடைய ஆவிக்குரிய மலட்டுத்தன்மையை மிகுந்த ஆரவாரத்தினால் மூடி மறைக்க முயற்சிக்கிறார்கள்; தாவீதுக்குச் சரியாகத் தென்பட்டவைகள் வெகுசீக்கிரத்தில் முற்றிலும் தவறென்று பின்பு நிரூபிக்கப்பட்டது. நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் கிறிஸ்துவின் சிலுவையில் இருக்கும்பொழுதே தேவனுடைய அங்கீகாரம் கொடுக்கப்படுகிறது.

இதன்பொருள் சடங்குகளையோ, கிரியைகளையோ தேவன் கவனிப்பதில்லை; அவர் அந்த விசுவாசத்தையே கவனிக்கிறார் (**ரோம. அதி:4, 5; யோவா. 6:28-29**). அநேகமான புஸ்தகங்கள் மனுஷ ஞானத்தினால் எழுதப்பட்டிருக்கிறபடியினால் விசுவாசிக்கு அதனால் ஒரு பிரயோசனமுமில்லை என யாக்கோபு உறுதிப்படுத்தியிருக்கிறார் (**யாக். 3:15**); அதெப்படியெனில் மனுஷ ஞானத்தினால் எல்லாவற்றையும் பெறமுடியுமானால், கிறிஸ்து சிலுவையில் மரித்தது வீணாயிருக்குமே (**கலா. 2:21**).

மே

19

***அ**ப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டும் வழங்கிவருகிற பேரேஸ் ஊசா என்னும் பேரிட்டு, அன்றையதினம் தேவனுக்குப்பயந்து: தேவனுடைய பெட்டியை நான் என்னிடத்துக்குக் கொண்டுவருவது எப்படியென்று சொல்லி (நாளா. 13:11-12),*

"தாவீது விசனமடைந்து பயந்தான்"

கர்த்தர் ஊசாவை அடித்ததன் நிமித்தம் தாவீது விசனப்பட்டான் என்று வேதவாக்கியம் சொல்கிறது; விசனப்பட்டான் என்பதன் பொருள், அவன் துக்கமடைந்தான் எனப்படும். அவன் துக்கப்படுவது பொருத்தமானதே; ஏனென்றால், அவனிலும் ஒரு பகுதி குற்றம் சுமந்திருந்தது. தாவீது வேதவார்த்தையின்படி நடந்திருந்தால், கர்த்தருடைய பெட்டியை எப்படித் தன்னிடத்திற்குக் கொண்டுவருவது என்பதனைப்பற்றி அறிந்திருக்கமுடியும்; ஆனபடியினால், ஊசாவின்மீது தண்டனை வருவதற்கு தாவீதும் பொறுப்பாயிருந்தான். அவனுடைய முதிர்வயதின் காலத்தில் கர்த்தருடைய பெட்டியைப் பொறுத்தளவில் அதனை எப்படிக் கையாளுவது என்பதனைப்பற்றி எல்லாரையும்விட அவன் அறிந்தவனாயிருந்தான். தாவீது விசனப்பட்டானோ இல்லையோ தேவன் தன்னுடைய வார்த்தையை ஒருபொழுதும் மாற்றுவதற்கில்லை; இதுபற்றி எல்லாரையும்விட ஊசாவுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கவேண்டும்; ஏனெனில், அவன்

அபினதாபின் குமாரன்; கர்த்தருடைய பெட்டி அவனுடைய வீட்டிலே பல வருஷகாலமாக இருந்தது (**1சாமு.** 7:1); ஆயினும் கர்த்தருடைய பெட்டியை எப்படிப் பராமரிக்கவேண்டும் என்ப தனை அவன் அறியவில்லை அல்லது உதாசீனஞ்செய்தான்; வேதவார்த்தை என்ன சொல்கிறது என்பதனைப்பற்றி அவன் அவ்வளவாய்க் கவலைப்படவில்லை.

கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் தாவீதே ஊசாவின் மரணத் துக்குப் பொறுப்பேற்கவேண்டுமென்று நிஜமாக நம்புகிறார்கள்; ஏனென்றால், தாவீதே அந்தப் பொறுப்பை ஊசாவிடம் கையளித் தான் என்று தர்க்கவாதம் செய்கிறார்கள். ஊசா தன் பொறுப்பை அறிந்தல்லவா இருக்கவேண்டும் என அவர்கள் சிந்திப்பதில்லை. கோடிக்கணக்கானோர் தற்பொழுது நரகத்திலிருப்பதற்கு முக்கிய காரணம், அவர்கள் அந்தப் பொறுப்பைப் போதகர்களிடத்தி லேயோ அல்லது பாதிரியாரிடத்திலேயோ விட்டுவிட்டதே யாகும். ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தையை அறிந் திருக்கவேண்டுமென்றும் (**யோவா.** 8:32; **1தீமோ.** 2:4) அதன் பொறுப்பை அவர்களே சுமக்கவேண்டுமென்றும் கர்த்தர் எதிர் பார்க்கிறார்; விசுவாசி, அதிகாரத்திலிருப்பவன் சரியாயிருந்தா லென்ன, தவறாயிருந்தாலென்ன கேள்வி ஒன்றும் கேட்காமல் அவனுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்ற நிலைப்பாடு எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை; உண்மையில் அதற்கு எதி ராகவே சொல்லப்பட்டிருக்கிறது (**எசேக்.** 18:20).

இந்த நாளில் தான் மரணத்துக்கு எவ்வளவு சமீபமாக **"வந்து விட்டேன்"** என்பதனை உணர்ந்த பயம் தாவீதை ஒடுக்கியது. அநேகமான கிறிஸ்தவர்கள் விசனப்படுகிறார்கள்; ஆனால், தேவ னுக்குப் பயப்படுகிற பயம் அவர்களிடத்தில் இல்லை. தாவீதோ பயந்து **"தேவனுடைய பெட்டியை நான் என்னிடத்திற்குக் கொண்டுவருவது எப்படி"** என்று மனம் வருந்தி அழுது, தேவ னுடைய ஆலோசனையை நாடினான்; சகலதும் தேவனுடைய வழியின்படியே நடத்தப்படவேண்டும்.

மே

20

***பெ**ட்டியைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்திலே கொண்டுவராமல், அதைக் கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலே சேர்த்தான். தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் (நாளா. 13:13-14).*

"ஓபேத்ஏதோம்"

ஊசாவுக்குச் சாபமாயிருந்தது ஓபேத்ஏதோமுக்கு ஆசீர்வாத மாக மாறியது. நாம் அதிகமாக நமக்கு **"எழுப்புதல்"** வேண்டு மென்று சொல்வது வழக்கம்; உண்மையான எழுப்புதல் வரும் பொழுது, ஜீவனும் மரணமும் உண்டாயிருக்கும். **1இராஜாக்கள் 18**ம் அதிகாரத்தில் எலியா எழுப்புதலைக் கொண்டுவந்தபொழுது, ஜீவனும் மரணமும் உண்டாகவில்லையா? **"எழுப்புதல்"** எந்தக் காலமும் சிலுவையின் செய்தியைப் பிரகடனப்படுத்தப்படும் பொழுதே உண்டாகிறது.

அநேகமான இஸ்ரவேலியர்களுக்கு **"எழுப்புதல்"** மரணத்தைக் கொண்டுவருகிறபடியினால், அவர்கள் கர்த்தருடைய பெட்டியை வயல்வெளியில் விட்டுவிடுகிறதுதான் நல்லதென்று நினைத்து, 70 வருஷகாலமாக வனத்தின் வெளிகளில் (அபினதாப் வீட்டில்) தேடுவாரற்று விட்டுவிட்டார்கள். **சங்கீதம் 132:6**ல் **"இதோ, நாம்**

எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு, வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பெட்டி தேவனுடைய பிரசன்னத்தைப் பிரதிபலிக் கிறது; தேவனுடைய பிரசன்னத்தைக் கிறிஸ்தவர்களும் விரும்பு வதில்லை; ஏனென்றால், அது மரணத்தை (கண்டிப்பை) ஏற்ப டுத்துகிறதே!

ஓபேத்ஏதோமோ, கர்த்தருடைய வார்த்தையைத்தேடி, அதன் படி கர்த்தருடைய பெட்டியைப் பொருத்தமான முறையில் பரா மரித்தான். கர்த்தர் அவனுக்கு அளப்பரிய ஆசீர்வாதத்தைக் கட் டளையிட்டார். ஓபேத்ஏதோமின் வீட்டில் கர்த்தருடைய பெட் டியை விடுமாறு தாவீது கர்த்தரினால் ஏவப்பட்டான் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால், அந்த மனுஷன் தாவீதைவிட அந்தப் பெட்டியைப் பொருத்தமாகப் பராமரிக்கும் முறையை அறிந்திருந்தான்; அவனுடைய இருதயம் கர்த்தரை அதிகமாய் நாடினது என்பது தெளிவாகிறது. ஒரு மனுஷன் தேவனுடைய வார்த்தையை உதாசீனஞ் செய்தபடியினால் மரித் தான்; இன்னொருவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த படியினால், அவனையும், அவனுடைய வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் தேவன் ஆசீர்வதித்தார் (**II சாமு.** 6:12). தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவு அப்பொழுதும் ஆசீர்வாதத்தைக் கொடுத்தது; இப்பொழுதும் அதுவே ஆசீர்வாதத் தைக் கொடுக்கிறது.

மே

21

***தா**வீது சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டதைப் பெலிஸ்தர் கேள்விப் பட்டபோது, பெலிஸ்தர் எல்லாரும் தாவீதைத் தேடும் படி வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது அவர் களுக்கு விரோதமாகப் புறப்பட்டான். பெலிஸ்தர் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள் (நாளா. 14:8-9).*

"பெலிஸ்தர்மேல் தாவீதின் வெற்றி"

பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் கிடைத்தது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் சாத்தான் தன்னுடைய முழுப் பலத்தையும் தாவீதுக்கெதிராக உபயோகித்தான்; அப்படியே விசு வாசி பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெற்றவுடன் சாத் தான் சோதனையை அவசரம் அவசரமாக நடத்துகிறான்; இதற் குத் தேவனுடைய குமாரனும் விதிவிலக்கில்லை (**மத்.** 4:1) என் பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

"தேடும்படி வந்தார்கள்" என்பது தாவீதைக் கொலைசெய் வதற்குப் பெலிஸ்தர் எல்லாரும் கூடினார்கள் என்பதே அதன் ஆவிக்குரிய பொருளாகும்; ஆனால், தாவீது அதனைக் கேட்ட போது அவர்களுக்கு விரோதமாகப் புறப்பட்டான் என்று சொல் லப்பட்டிருக்கிறது (**1நாளா. 14:8**).

ரெப்பாயீம் பள்ளத்தாக்கு இராட்சதர்களின் பள்ளத்தாக்கு; மாம்சம் இராட்சதர்களை ஒருபொழுதும் மேற்கொள்ளமுடியாது என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். தேவனுடைய ஆவியினாலேயே இராட்சதர்களை மேற்கொள்ளமுடியும். இந்த இராட்சதர்கள் பெலிஸ்தர் தேசத்தில் வசித்தார்கள்; அதென்னவென்றால், ஒரு கிறிஸ்தவனிடத்தில் பாவத்தினுடைய சக்திகள் (The Energies of Sin) வாசஞ்செய்கிறது என்பதனை இது எடுத்துக்காட்டுகிறது. இதனையே பவுல் அப்போஸ்தலர் **ரோமர் 7:17**ல் **"ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது"** எனக் கூறியிருக்கிறார்.

கிறிஸ்து விசுவாசியின் அரியாசனத்தில் அமர்ந்தவுடன் இந்தப் பாவசக்திகள் யாவும் தங்களுக்குள் ஒன்றுகூடிக் கிறிஸ்துவை விசுவாசியின் இருதயத்தில் பலமாக எதிர்க்கிறது. தெய்வீக விசுவாசமும், குழந்தைத்தனமான கீழ்ப்படிவும் விசுவாசியில் இருந்தால்மட்டுமே, தேவனுடைய கரம் அவனோடே கூட இருக்கும்; அப்பொழுது ஒன்றுகூடின பாவத்தின் சக்திகள் மேற்கொள்ளப்பட்டு, பெரும் வெற்றி உணரப்படும்; விசுவாசிகளுக்கு அவைகளின்மேல் பரிபூரணவெற்றி இருக்கவேண்டும் (**யோவா. 10:10; IIIயோவா. 2**).

மே

22

பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது தேவனைக் கேட்டபோது, கர்த்தர் போ, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார் (நாளா. 14:10).

"பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா? அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா?"

தாவீது இப்பொழுது ஒரு படிப்பினையைப் பெற்றிருக்கிறான் என்பது தெளிவாகிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவருவதற்கு முன்பு தேவனிடத்தில் ஆலோசனை செய்யாதபடியினால் ஏற்பட்ட மரணம் இப்பொழுது தாவீதை எதற்கும் தேவனிடத்தில் விண்ணப்பஞ் செய்வதற்குத் தூண்டுகிறது; இதன் பிரதிபலன் எப்பொழுதும் வெற்றியே.

பாகால் என்று அழைக்கப்படுகிற இந்த இடம் அந்நிய தேவர்களால் நிறைந்திருந்தது; அந்த இடத்திற்கு வந்தபொழுது தாவீது **"தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப் பண்ணினார்"** என்றான்; அப்படியே நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனை விக்கிரக தேவர்கள் உண்டு? என்பதனை சிந்தித்துப்பார்ப்போமாக. **நாம் தேவனை அணுகமுடியாதபடிக்கு நம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எந்தத் தடைகளும், விக்கிரகங்களெனப் பரிசுத்த ஆவியானவர் முத்திரையிடுகிறார்**.

தண்ணீர் தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்கிறது; அந்தத் தண்ணீர் விக்கிரக தேவர்களை அகற்றிச் சுத்தஞ்செய்தது என்பதனையே தாவீது **"தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல"** எனக் கூறியிருந்தான்; அப்படியே நாளாந்த வாழ்க்கையில் தலை தூக்கும் விக்கிரக தேவர்களை அகற்றிச் சுத்தஞ்செய்யவேண்டும்; அதனை நம்முடைய சாதுரியத்தினால் ஒருபொழுதும் அழிக்க முடியாது; தேவனுடைய ஆவியினாலேயே முடியும் (**சகரி. 4:6**). அங்கே **"அவைகள் அக்கினியாலே சுட்டெரிக்கப்பட்டன"** எனக் காண்கிறோம் (**Iநாளா. 14:12**); அப்படியே ஆவியின் அக்கினி நம் முடைய பதரையும் (நம்முடைய மாம்சத்தையும்) சுட்டெரிப்ப தாக (**மத். 3:11-12**).

இதற்கு நாம் செய்யவேண்டியது கிறிஸ்துவிலும், அவர் சிலு வையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தி (**Iகொரி. 2:2**), அந்த விசுவாசத்தில் நிலைத்திருந்தால் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் தன் வேலையைச் செய்யதுமுடிப்பார் (**யோவா. 16:13-15; ரோம. 8:2, 11**).

மே

23

***பெ**லிஸ்தர் மறுபடியும் வந்து அந்தப் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள். அப்பொழுது தாவீது திரும்பத் தேவனிடத்தில் விசாரித்ததற்கு, தேவன் நீ அவர்களுக்குப் பின்னாலே போகாமல், அவர்களுக்குப் பக்கமாய்ச் சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, யுத்தத்திற்குப் புறப்படு; பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, தேவன் உனக்கு முன்னே புறப்பட்டிருப்பார் என்றார் (நாளா. 14:13-15).*

"தொடர்ச்சியான விண்ணப்பத்தின் பிரதிபலன்"

சாத்தான் திரும்பி வரமாட்டான் என்று நாம் நினைப்போமானால், பாரதூரமான தவறு விடுகிறோம். அவன் துருவித்துருவி ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஆராய்ந்து பார்க்கிறான். பெரும் வெற்றி நமக்குக் கிடைத்தவுடன் அவன் மறுபடியும் வரமாட்டான் என்ற சிந்தனை நமக்குத் தூரமாயிருப்பதாக. ஆயினும், முதற்கிடைத்த வெற்றியும், அந்த வெற்றியைப் பெற்றுக் கொள்ளக் கர்த்தரிடம் ஆலோசனைசெய்து, உபயோகித்த வழி முறைகளையும் அடுத்துவரும் யுத்தத்திற்குப் போதுமானதென்று அதனில் தங்கியிருக்கக்கூடாது.

தாவீது பெலிஸ்தரோடு இரண்டாவது யுத்தத்திற்குக் கர்த்தரிடம் ஜெபம்பண்ணாமல் முந்தின யுக்தி போதுமென்றிருந்தால், சந்தேகத்திற்கிடமின்றி நிச்சயமாகப் படுதோல்வியில் முடிந்திருக்கும். மாம்சத்துக்கு வெற்றியைத் தேவன் கொடுக்கமாட்டார் என்ற படிப்பினையைத் தாவீது அறிந்திருக்கிறான்; மாம்சம் தாழ்த்தப்படவேண்டும்; ஆனபடியால்த்தான் தாவீது திரும்பத் தேவனிடம் விசாரித்தான் (**1நாளா. 14:15**). தாவீது பெலிஸ்தர்களுக்கு எதிராகப் போகாமல், அவர்களைவிட்டு, ஓடவேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது. யுத்தவீரனாகிய தாவீதுக்கு அந்தச் செய்கை தாழ்மையை ஏற்படுத்தியது; அப்பொழுது அவன் ஒளிக்கவும், தாமதித்துக் காத்திருக்கவும், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கும், அவரின் வல்லமைக்குக் காத்திருக்கவும் கற்றுக்கொண்டான்; இரண்டு வெற்றியும் ஒரேமாதிரி இருக்கப் போவதில்லை; ஆகையால், இருதயத்தை நெறிப்படுத்தி, தேவனிடத்தில் ஜெபம்பண்ணுவதன்மூலம் பெலிஸ்தரை முன்பும் பின்பும் தோற்கடிக்க முடிந்தது.

தாவீது கேட்ட **"சத்தம்"** பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது (**1நாளா. 14:15**). பெந்தெகொஸ்தே நாளன்று அவர் வந்து விசுவாசியிடம் நிரந்தரமாகத் தங்கினார் (**அப். 2:3**). தேவனுடைய சிந்தையை நாம் உடையவர்களாயிருந்தால், எப்பொழுதும் நமக்கு வெற்றியுண்டு (**1நாளா. 14:16**). தாவீது தேவன் கற்பித்தபடி நடந்தபடியினால் வெற்றியும் கீர்த்தியும் உண்டாயிற்று. அப்படியே தாவீதின் குமாரன் இந்தப் பூமி எல்லாவற்றையும் ஆளும்பொழுது, அவருடைய கீர்த்தி சகல தேசங்களிலும் வியாபித்திருக்கும்; இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சாத்தியமாகும்.

மே

24

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி தாவீதின் நகர மட்டும் வந்தபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா ஆடிப்பாடி வருகிறதைக் கண்டு, அவனைத் தன் இருதயத்திலே அவமதித்தாள் (நாளா. 15:29).

"மீகாளின் பாவம்"

ஆவிக்குரிய எதனையும் மாம்சத்தினால் புரிந்துகொள்ளமுடியாது; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 2:14ல் **"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்"** எனக் கூறியிருக்கிறார். ஆவிக்குரிய எல்லாவற்றையும் மாம்சம் அற்பமாக எண்ணும்; பரிசுத்த ஆவியின் அதிகார எல்லைக்குள் நடந்தது எல்லாம் சவுல் ராஜாவின் குமாரத்திக்கு வெறுப்பூட்டுகிறதாயிருந்தது.

அப்படியே பரிசுத்த ஆவியானவருடைய அசைவாட்டம் எந்தக் காலத்திலும் சபையிலிருப்பவர்களுக்கு வெறுப்பூட்டுவதாக இருக்கிறது. சபையில் அபரீதமாக மாம்சம் இருப்பதனாலேயே இந்த விபரீதம் ஏற்படுகிறது. தாவீது மாம்சத்தின் இகழ்ச்சியைப் பொருட்படுத்தாமல், **IIசாமுவேல்** 6:22ல் **"இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்;**

அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன்“ என்று சொன்னான்.

ஆம், சகல மனுஷரிலும் கௌரவமானவனாகப் பெயரளவில் தாவீதின் குமாரனாகிய மேசியாவின் வம்சத்தை அவன் உடைய வனாக இருந்தானே. மாம்சம் எவ்வளவு மேன்மையாகத் தன் னைக் கருதினாலும், அதனால் தேவனுக்குக் கனியைக் கொடுக்க முடியாது; அதுவே மாம்சத்தின் தற்பெருமையாகும்.

மாம்சத்தின் கிரியைகளுக்குத் தண்டனையுண்டு என்பது பற்றிப் பரிசுத்த ஆவியானவர் “**அதினால் சவுலின் குமாரத்தி யாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது**” என **IIசாமுவேல் 6:23**ல் கூறியிருக்கிறார். இது பற்றிப் பவுல் அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, “**இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ் யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன் னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்**” எனக் **கலாத்தியர் 5:21**ல் உறுதியாகக் கூறியிருக்கிறார். கிறிஸ் தவ சபை தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாவிட்டால், அங்கு சந்தோஷம் இல்லை; இதன் பிரதிபலன் சபை மலட்டுத் தன்மையுள்ளதாக மாறும்.

மே

25

மறுபடியும் ஒரு யுத்தம் காத்திலே நடந்தபோது, அங்கே நெட்டையனான ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்கு அவ்வாறு விரலாக இருபத்துநாலு விரல்கள் இருந்தது, அவனும் இராட்சத சந்ததியாயிருந்து, இஸ்ரவேலை நிந்தித்தான்; தாவீதின் சகோதரனாகிய சிமேயாவின் குமாரன் யோனத்தான் அவனைக் கொன்றான். காத்தூரிலிருந்த இராட்சதனுக்குப் பிறந்த இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள் (நாளா. 20:6-8).

"இராட்சதன் இஸ்ரவேலை நிந்தித்தான்"

ISAமுவேல் அதி:17, IISAமுவேல் அதி:21, INாளாகமம் அதி. 20 ஆகிய அதிகாரங்களில் ஐந்து இராட்சதர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் சகோதர்கள் என்று **IISAமுவேல்** 21:19-22ல் அறியக்கூடியதாயிருக்கிறது. இவர்கள் கடைசியாயிருந்த வல்லமையான இராட்சத இனத்தினர். இவர்கள் மனுஷ குமாரத்திகளுக்கும், வீழ்ந்துபோன தேவதூதர்களுக்கும் பிறந்தவர்கள் (**ஆதி.** 6:4). மனுஷகுமாரத்திகளைக் கெடுத்து, ஸ்திரீயின் வித்தாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷனாக வந்து, மனுஷகுலத்தை மீட்காதபடிக்குச் சாத்தானால் எடுக்கப்பட்ட முயற்சி இதுவாகும்.

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படும் தடைகளை இது பிரதிபலிக்கிறது. தேவனுடைய ஆட்சி நம்முடைய வாழ்க்கையில் அதிகாரம் செலுத்தாமல் இருப்பதற்குச் சாத்தான் எடுக்கும் முயற்சியை இது பிரதிபலிக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் தடைகளை ஏற்படுத்தும் ஒவ்வொரு சாத்தானுடைய இராட்சதர்களும் அழிக்கப்படவேண்டும் (**கலா.** 5:19-21); விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. மாம்சம் செத்து, ஆவி ஒப்புயர்வற்ற அதிகாரத்தை நம்மில் செலுத்தவேண்டும். இதனைச் செய்வதற்கு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தைப் பிரத்தியேகமாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அதனில் நிலைத்திருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்படுகிறபடியினால், அவர் நம்முடைய இருதயத்தில் மகா வல்லமையாகச் செயற்பட்டு, பரிபூரண வெற்றியைப் பெற்றுக்கொள்ள உதவுவார் (**ரோம.** 6:3-14, 8:1-2, 11).

மே

26

***அ**ப்பொழுது யோவாப்: கர்த்தருடைய ஜனங்கள் இப்போது இருக்கிறதைப்பார்க்கிலும் நூறத்தனையாய் அவர் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் ராஜா வாகிய என் ஆண்டவனே, அவர்களெல்லாரும் என் ஆண்டவனின் சேவகரல்லவா? என் ஆண்டவன் இதை விசாரிப்பானேன்? இஸ்ரவேலின்மேல் குற்றமுண்டாக இது நடக்கவேண்டியது என்ன என்றான். யோவாப் அப்படிச் சொல்லியும், ராஜாவின் வார்த்தை மேலிட்ட படியினால், யோவாப் புறப்பட்டு, இஸ்ரவேல் எங்கும் சுற்றித்திரிந்து எருசலேமுக்கு வந்து (I நாளா. 21:3-4),*

"இஸ்ரவேலின்மேல் குற்றமுண்டாக இது நடக்கவேண்டியது என்ன"

I**சாமுவேல்** 24:1ல் இஸ்ரவேல், யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று கர்த்தர் தாவீதை ஏவினார் என்று சொல்லப்பட்டி ருக்கிறது; ஆனால், I**நாளாகமம்** 21:1ல் சாத்தான் தாவீதை ஏவி னான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதவார்த்தைகளுக்கு இடையில் முரண்பாடு இல்லை; கர்த்தர் சொல்கிறதையே சாத் தான் செய்கிறான். நியமித்த எல்லையைவிட ஒரு அங்குலந் தன்னும் மேலதிகமாக அவனால் போகமுடியாது. சாத்தான் கர்த்தருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும் (**யோபு** 1:6, 2:1);

தாவீதின் தற்பெருமை இப்படியாக ஏவினது. பெலிஸ்தர்கள், அம்மோனியர்கள், சீரியர்கள் சாதிக்கமுடியாத நஷ்டத்தை, மன தில் ஏற்பட்ட நாசூக்கான ஏவுதலின் ஆயுதத்தின்மூலம் சாதிக்க முடிந்தது. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை (**ஆதி.** 13:14-17) மாம்சசிந்தையினால் நிச்சயப்படுத்தவேண்டுமோ? அத்தகைய முயற்சி ஆத்துமாவுக்கு மரணத்தையே ஏற்படுத்தும்; அத்தகைய முயற்சி வேதத்தை நாடிச்செல்லவில்லை, அதற்குப் பதிலாக வேதத்தைவிட்டு விலகிச்சென்றது.

ஆனாலும், கணக்கெடுப்பதில் தவறில்லை; கணக்கெடுக்க விருப்பமாயின், **யாத்திராகமம்** 30:12-16ன்படி எண்ணப்படுகிறவர் களின் தொகையில் சேருகிற ஒவ்வொருவனும் அரைச் சேக்கல் வெள்ளி கொடுக்கவேண்டும். இதனை மீட்கும்பொருள் என்று சொல்லப்படுகிறது. இதன் பொருள், இஸ்ரவேலியர்கள் மீட்கப் பட்டது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலேயே தவிர, வேறுவழிகளினால் அல்ல என்பதனை நாம் அறிந்திருக்கவேண் டும். மேலும், பழைய ஏற்பாட்டில் **"வெள்ளி"** மீட்பின் மாதிரி யைப் பிரதிபலிக்கிறது; இதனை உதாசீனஞ்செய்தால், சிலு வைக்கு அப்பால் போகமுயற்சி எடுக்கப்படுகிறது; தேவன் அதனை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

யோவாப்புக்கு அரைச் சேக்கலின் முக்கியத்துவம் தெரியுமா என்பது சந்தேகந்தான்; ஆனாலும், அவனின் புத்திமதி சரியே. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வரமுயற் சித்தபொழுது, கர்த்தரிடம்மட்டும் ஆலோசனை கேட்காத மாதிரி (**!நாளா. 13:அதி**) இப்பொழுதும் தாவீது கர்த்தருடைய வார்த்தை யைத் தேடாமலிருந்தான். தேவன் தன்னுடைய வார்த்தையை மீறுவதை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். தனக்கு மிகவும் கிட்டிய தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தாலும், வேதவார்த்தையை மீறுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்; மீறினால் அதன் பிரதிபலன் சந்தோஷமாக இருக்கப்போவதில்லை.

மே

27

***அ**ப்பொழுது கர்த்தர், தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்துடனே பேசி, நீ தாவீதினிடத்தில் போய்: மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்; அதை நான் உனக்குச்செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார் (1நாளா. 21:9-10).*

"மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்; அதை நான் உனக்குச்செய்வேன்"

இஸ்ரவேலைத் தொகையிடும்பொழுது தாவீது கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்காமல் (**யாத்.** 30:12), உதாசீனஞ் செய்தபடியினால், கர்த்தர் இஸ்ரவேலை வாதித்தார் (**1நாளா.** 21:7). மீட்கும் பொருளான **"வெள்ளி"** ஆத்தும மீட்பையும், கல்வாரி சிலுவையையும் பிரதிபலிக்கிறது. கிறிஸ்துவின் சிலுவையை உதாசீனஞ்செய்து, இந்த மாதிரியான நடவடிக்கையில் ஈடுபடும் ஒவ்வொருவரையும் கர்த்தர் வாதிப்பார்; உண்மையில் வேறொரு தெரிவும் அவரிடத்தில் இல்லை.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு கிறிஸ்துவின்மேல் என உலகத் தோற்றத்திற்கு முன்னமே தீர்மானிக்கப்பட்டது (**1பேது.** 1:18-20); இங்கு கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றியே பேசப்படுகிறது. ஒருவன் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பானாயின், அவன்மேல்,

அந்த நியாயத்தீர்ப்பு விழும். சிலுவை உதாசீனஞ் செய்யப்பட் டால், தவிர்க்கமுடியாமல் நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவேண் டியதே.

சிலுவையை அவமதித்தால், அது மிகப்பெரிய பாவம்; உதா சீனஞ் செய்பவர்கள் வெகு புத்தியீனமாய்ச் செய்கிறார்கள் (I**நாளா.** 21:8). காத்மூலம் செய்தி தாவீதுக்கு அனுப்பப்படுகிறது; காத்தின்மூலம் அனுப்பப்பட்ட செய்தியைத் தாவீது கேட்டான். தற்பொழுது தீர்க்கதரிசிகளின் செய்திகளைக் கிறிஸ்தவர்கள் கேட்பதில்லை. எவ்வாறாயினும், பாவம் எப்படியோ, ஒன்றில் கிறிஸ்துவில் அல்லது மனுஷனில் விசாரிக்கப்படவேண்டும். பாவத்துக்கு ஒரே பதில் கிறிஸ்துவின் சிலுவையே (**எபி.** 10:12). தண்டனையை அறிந்து, விசனப்பட்ட தாவீது தான் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருப்பதாகக் கூறினான் (I**நாளா.** 21:13); ஆனாலும், அவன் தெரிந்துகொண்ட தண்டனை புத்திசாலித்தன மானது.

யாத்திராகமம் 30:12ல் தொகையிடப்படும் ஒவ்வொரு ஆளுக் கும் மீட்பின் பொருளான வெள்ளியை செலுத்தாவிட்டால், வாதை உண்டு என்று கர்த்தர் கூறியிருக்கிறார். மீட்பின் விலையை செலுத்தாவிட்டால், வாதை உண்டென்று சொன் னாரேதவிர, எப்படியான வாதை என்று சொல்லவில்லை; அதனை அவரே தீர்மானிக்கிறார்; ஆனால், எந்தவிதமான வாதை யாயிருந்தாலும், கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தை (I**கொரி.** 2:2) விசுவாசிப்பதன்மூலம் நிறுத்தமுடியும் (**எண்.** 21:8-9; II**சாமு.** 24:25).

மே

28

என் குமாரனாகிய சாலொமோனே, நீ பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருத யங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங் களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார் (நாளா. 28:9).

"நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால், அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்"

ஒரு நேரத்தில் சாலொமோன் தேவனுடைய பிள்ளையாயிருந் தான்; அவன் கர்த்தரில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீ தின் கட்டளைகளில் நடந்தான் (I**இராஜா.** 3:3); அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார் (II**சாமு.** 12:24). ஆயினும், அவனுடைய பிற்காலத்தில் அவன் கர்த்தரைப் பூரணமாகப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானவைகளைச் செய்தான்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள் (I**இராஜா.** 11:1-8). அவர் கற்பித்ததைக் கைக் கொள்ளாமற்போனபடியினால், கர்த்தர் அவன்மேல் கோபமாகி, அவனுடைய பின்வாங்கின நிலைமையினால் அவனுக்கெதிராக

நடக்கவேண்டியிருந்தது (**1இராஜா. 11:9-40**). கர்த்தர் அவனுடைய ராஜ்யத்தை அவனிடத்திலிருந்து எடுத்து இறுதியில் அதனை அழித்தார்; பாவத்தின் நிமித்தமே இந்த அழிவு ஏற்பட்டது. இஸ்ரவேல் மனந்திரும்பினபின்பு அந்த ராஜ்யம் மீண்டும் புதுப் பிக்கப்படும் (**சகரி. 12:10**); மேசியாவுக்குக்கீழ் அந்த ராஜ்யம் நித்திய ராஜ்யமாயிருக்கும்.

அவர் நம்மிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம் **"நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்....."** (**1நாளா. 28:9**) என்பதாகும். கடந்தகால, நிகழ்கால, வருங்கால சிந்தனைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். **"நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்"** (**1நாளா. 28:9**) என்ற இந்த மிகப்பெரிய வாக்குத்தத்தம் கர்த்தருடைய எல்லா வேதவார்த்தைகளிலும் மிகமுக்கியமானது.

ஒருவன் துர்க்குணத்தோடு இருந்தாலென்ன, அவன் கர்த்தரை முழுஇருதயத்தோடு தேடுவானாயிருந்தால், அவன் கர்த்தரைக் காணமுடியும். மிகுந்த ஆறுதல் இந்த வார்த்தையின்மூலம் நமக்கு வாக்குத்தத்தமாகத் தரப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் பார்த்தால், நாம், நம்முடைய புறமுதுகைக் காண்பிப் போமானால், அவரும் தம்முடைய புறமுதுகை நமக்குக் காண்பிப்பார் (**நீதி. 1:30-33**). இந்த வேதவாக்கியம் பரவலாக உபதேசிக்கப்படும் **"நிபந்தனையற்ற நித்திய பாதுகாப்பு"** என்ற உபதேசத்தைத் தவிடுபொடியாக்குகிறது.

மே

29

***யோ**ர்தானுக்கடுத்த சமனான பூமியில் சுக்கோத் திற்கும் சரேத்தாவுக்கும் நடுவே களிமண் தரையிலே ராஜா அவைகளை வார்ப்பித்தான் (II**நாளா.** 4:17).*

"களிமண் தரையிலே வார்ப்பித்தான்"

கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான சகலத்தையும் ஈராம் சுத்தமான வெண்கலத்தினால் பண்ணினான் (II**நாளா.** 4:16). என நாம் காண்கிறோம். தாவீது ராஜா தான் யுத்தம் செய்த இடங்களிலிருந்து பெற்றுக்கொண்ட பொன்னையும் வெள்ளியை யும் வெண்கலத்தையும் இரும்பையும் தன்னுடைய பண்டக சாலைகளில் ஏராளாமாகக் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் சேர்த்து வைத்தான்; அதுமட்டுமல்ல, தனக்குச் சொந்தமானவை களிலும் ஏராளாமான பொன்னையும் வெள்ளியையும் வெண் கலத்தையும் இரும்பையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் காணிக்கையாகக் கொடுத்தான் (I**நாளா.** 29:3).

தாவீதின் பண்டகசாலையில் இருந்த ஏராளமான வெண்கலத் தின்மூலம் கர்த்தரின் ஆலயத்திற்கு முன்பாக நாட்டுவதற்கு இருபாரிய வெண்கலத்தூண்களையும் அதன்மேல் கும்பங்களும் குமிழ்களும், தூண்களை அலங்கரிக்க மாதுளம் பழங்களும் மற் றும் ஆதாரங்களையும், ஆதாரங்களின் மேலிருக்கும் கொப்பரை களையும் கடல்தொட்டியையும் செப்புச்சட்டிகளையும் சாம்பல் கரண்டிகளையும் முள்துறடுகள் முதலான பணிமூட்டுக்களையும்

ஈராம் செய்தான். யுத்தமுனையில் புறஜாதிகளிடமிருந்து கைப் பற்றப்பட்ட இந்த வெண்கலங்கள் யாவும் பல்வேறு உருவங் களில் இருந்தன. சாலொமோன் ஆலயத்தைக் கட்டும் காலம் வரைக்கும் அவைகள் தாவீதினுடைய பண்டகசாலைகளில் இருந்தன; ஆனால், இப்பொழுதோ அந்த வெண்கலங்கள் யாவும் கொண்டுவரப்பட்டு யோர்தானுக்கடுத்த சமனான பூமியில் சுக் கோத்திற்கும் சரேத்தாவுக்கும் நடுவே களிமண் தரையிலே ஆல யத்திற்குத் தேவையான முறையிலே உருமாற்றம் செய்து, உரு வாக்கப்பட்டது.

இது எதனைப் பிரதிநிதிப்படுத்துகிறது என்பதும், இதன் ஆவிக் குரிய கருத்து என்ன என்பதும்தான் இங்கு முக்கியமானது. நாம் கிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் செய்யப்பட்டு, அவ ரோடுகூட சரீரரீதியாக இணைந்து (**Iகொரி.** 12:13), அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டு, அவரோடுகூட மரித்து, அவரோடு கூட அடக்கம்பண்ணப்பட்டு, அவர் உயிர்த்தெழும்போது, அவருக் குள் இருந்த நாமும் அவரோடுகூட உயிர்த்தெழுந்தோம் என்ற அறிவு மிகமுக்கியமானது (**ரோம.** 6:3-5). மேலும், இது நம்மு டைய பழைய சுயத்துக்கு மரணமும், புதிய சுயம் கிறிஸ்துவின் சாயலில் உருவாக்கப்படுவதையும் குறிப்பிடுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாய் இருக்கிறோம். பழையனவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின (**IIகொரி.** 5:17); அப்படியானால் நம்முடைய பழைய சாயல் அழிக்கப் பட்டது; நாம் முன்பிருந்த எந்த மாதிரியையும் தேவன் பயன் படுத்துவதில்லை.

புறஜாதிகள் பொன்னினாலும் வெள்ளியினாலும் வெண்கலத்தி னாலும் இரும்பினாலும் உருவாக்கின விக்கிரகங்கள் இப்பொழுது ஈராமினால் உருக்கப்பட்டு, புதிதான அச்சுக்குள் வார்த்து, தேவனு டைய ஆலயத்தின் தேவைகளை நிறைவேற்றினதுபோல, இரட் சிக்கப்பட்ட நாமும் கிறிஸ்துவின் சாயலில் பரிசுத்த ஆவி

யானவரினால் உருமாற்றம் செய்யப்படுகிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காகத் தன்னைப் பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்துத் தன்னுடைய பரிசுத்த இரத்தத் தைச் சிந்தி, நம்முடைய பாவத்திலிருந்து விடுதலையைத் தந்து, நம் ஒவ்வொருவருக்கும் இந்தப் பாக்கியத்தை உறுதிப்படுத்தியி ருக்கிறார். அவரையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதை யும் விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்போமாக (**கொலோ. 2:6-7; எபி. 3:14**).

மே

30

***அ**வர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த தினால், வானம் அடைபட்டு மழை பெய்யாதிருக்கும் போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கை பண்ணி, தேவரீர் தங்களைக் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால், பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உம்முடைய தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக (II நாளா. 6:26-27).*

"இந்த ஸ்தலம், இந்தத் தேசம்"

சாலொமோனின் ஜெபத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது **"ஸ்தலம்"** என்றும் **"தேசம்"** என்றும் 8 தரம் குறிப்பிட்டிருப்பதை நாம் கவனிக்கக்கூடியதாயிருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை; ஏனென்றால், அப்பொழுது அந்த ஆலயத்திலேயே தேவன் வாசஞ்செய்தார் (**தானி.** 6:10). இப்பொழுது கிருபையின் காலத்தில் நாம் சஞ்சரிக்கிறபடியினால், ஜெபம்பண்ணும்பொழுது நாம் எந்தப் பக்கத்திற்குத் நம்முடைய

முகத்தைத் திசைதிருப்பினாலும் பரவாயில்லை; காரணம் என்ன வென்றால், கர்த்தர் பரிசுத்த ஆவியினுடைய வல்லமையினால், மறுபிறப்புப்பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் வாசஞ்செய் கிறார் (**I கொரி. 3:16**). ஆனபடியினால், இப்பொழுது எங்கிருந்தா லும் அவன் தேவனை நோக்கி ஜெபம்பண்ணமுடியும்; இது சாத் தியமானது சிலுவையின்மூலமே என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். இதனிமித்தமே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரியப் பெண்ணை நோக்கி **யோவான் 4:21-22**ல் "**.....நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங்காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது**" எனக் கூறியிருந்தார்.

இந்தத் தேசம் எனச் சொல்லப்படுவது ஐப்பிராத்து நதிக்கும் மத்தியதரைக்கடலுக்குமிடைப்பட்ட பிரதேசமாகும். இதுபற்றி **யோசுவா 1:4**ல் "**வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத் திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்**" எனச் சொல்லப் பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்திற்கும் இந்தத் தேசம் வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத னையே கர்த்தர் மோசே மரிப்பதற்கு முதல் அவனுக்குக் காட்டி னார் (**உபா. 34:1-4**). சிலர் அமெரிக்காவும் இங்கிலாந்துமே தற் பொழுது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியென்று பிரச்சாரம் செய்கின்றனர். அதில் எந்தவித உண்மையும் இல்லை; வேதத் தில் அத்தகைய பிரச்சாரத்திற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

மே

31

***ஆ**சா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் வந்து, ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசா வினிடத்தில் போக்கும் வரத்துமாயிராதடிக்கு ராமாவைக் கட்டினான். அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுள்ள வெள்ளியும் பொன்னும் எடுத்து, தமஸ்குவில் வாசம்பண்ணுகிற பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவினிடத்துக்கு அனுப்பி (II நாளா. 16:1-2).*

"பாஷா ஆசாவுக்கு விரோதமாக ராமாவைக் கட்டினான்"

இலட்சக்கணக்கான ஜனங்கள் இஸ்ரவேலைவிட்டு, விலகி யூதாவுக்கு வந்துசேர்ந்தார்கள்; தேவனை ஆலயத்தில் தொழுது கொள்வதே அவர்களுடைய நோக்கமாயிருந்தது. இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா அவர்களுடைய யாத்திரையைத் தடைசெய்யும் நோக்கத்தோடு எல்லைப்புறப் பட்டணமாகிய ராமாவில் ஒரு மதிலைக்கட்டித் தடையை ஏற்படுத்தினான்.

ஒரு உபதேசத்தையோ அல்லது ஒருவகை சுவிசேஷத்தையோ உருவாக்கி, அதனைப் புனரமைப்புச் செய்யமுயற்சி செய்யும் போதகர்கள், தங்களுடையதல்லாத வேறொன்றைக்

கேட்பதற்கு ஜனங்களுக்கு இருக்கும் சுயாதீனத்தைத் தடைசெய்வது ஒன்றே தாம் தவறு என்பதனைப் பிரகடனப்படுத்தும் மிக முக்கியமான அடையாளமாகும். சாத்தானுடைய மிகப் பெரிய ஒரு ஏற்பாடு தேவனுடைய உண்மையான தொழுகையைக் கை நீட்டிப் பெற்றுக்கொள்ளாத அளவு தூரத்துக்கு அப்புறப்படுத்துவதும், அந்த வரையறையை அடைவதற்கு முயற்சி செய்பவனைப் பலவந்தமாகப் பயமுறுத்தி, தடுத்து நிறுத்துவதுமாகும். அநேகமான கிறிஸ்தவ சபைகள் இந்த வன்முறையில் ஈடுபட்டிருக்கிறது.

பாஷாவினுடைய விஷயத்தில் தனக்குத் தேவையான உதவியைப் பெறுவதற்குத் தேவனை நம்பியிருப்பதற்குப் பதிலாக, சீரியாவை ஆசா கூலிக்கு அமர்த்தினான். ஆசாவினுடைய திட்டம் இராணுவரீதியில் வெற்றிபெற்றது; ஆனால், ஆவிக்குரிய ரீதியில் படுதோல்வியடைந்தது. இதற்குப் பின்பு நடந்த சம்பவங்கள் ஆசாவினுடைய இரட்சிப்பையே கேள்விக்குறியாக்கியது. சுயதிட்டத்தின் வெற்றி எப்பொழுதும் ஆவிக்குரிய நாசத்தையே ஏற்படுத்தும்.

பழைய விசுவாசத்தை நினைப்பூட்டி, புதிய வெற்றிகளை வெல்லமுடியாது என்பதனை நாம் எந்தக் காலத்திலும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்; ஒவ்வொரு நெருக்கடியின்போதும் புதுப்பிக்கப்பட்ட விசுவாசம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் (**I நாளா. 14:14-15**).

இதனையே அநுதினமும் விசுவாசிக்கவேண்டும் (கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் [**I கொரி. 2:2**]) என புதிய ஏற்பாட்டில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து **லூக்கா 9:23**ஐ அநுதினமும் செய்யும்படி கட்டளையிட்டார்.

ஜான்

1

யோ*ய்தா மரணமடைந்தபின்பு யூதாவின் பிரபுக்கள் வந்து, ராஜாவைப் பணிந்துகொண்டார்கள்; அப்பொழுது ராஜா அவர்களுக்குச் செவிகொடுத்தான். அப்படியே அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தை விட்டுவிட்டு, தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் சேவித்தார்கள்; அப்பொழுது அவர்கள் செய்த இந்தக் குற்றத்தினிமித்தம் யூதாவின் மேலும் எருசலேமின்மேலும் கடுங்கோபம் மூண்டது (II****நாளா****. 24:17-18).*

"யோய்தா மரணமடைந்தபின்பு"

யோவாஸ் ராஜா தன்னுடைய ஆட்சியின் ஆரம்பத்தில் ஆசாரியனாகிய யோய்தாவின் பக்கம் திரும்பியிருந்தான். யோய்தா தேவனுடைய மனுஷனாயிருந்தான். யோய்தா மரணமடைந்தபின்பு, யோவாஸ் யூதாவின் பிரபுக்கள் பக்கம் திரும்பி, அவர்களுக்குச் செவிகொடுத்தான். அவர்களோ அநீதியான கொடுமையான மனுஷராக இருந்தார்கள். மனுஷன் நல்லவனாயிருந்தாலென்ன, கொடுமை நிறைந்தவனாயிருந்தாலென்ன மனுஷனுக்குச் செவிகொடுப்பது நாசத்தையே ஏற்படுத்தும். யோவாஸ் ராஜா தேவனுக்குச் செவிகொடுத்து, அவர் பக்கம் திரும்பி

இருந்தால், அவனுடைய வரலாறு எவ்வளவு பிரகாசமாயிருந் திருக்கும்.

யூதாவின் பிரபுக்கள் ராஜாவாகிய யோவாசைச் சத்தியத்தை விட்டு விலக்கி, பாவத்துக்குள் வழிநடத்தினார்கள். வழமையாக ராஜாக்களே, பிரபுக்களையும், ஜனங்களையும் தவறான வழியில் நடத்துபவர்களாயிருந்தார்கள்; ஆனால், இங்கு அப்படியில்லை; தேவனுடைய கோபம் எந்தக் காலத்திலும் பாவத்தின்மேல் கட் டாயமாக வரவேண்டும். பாவம் என்ன ரூபத்தில் வந்தாலும், தேவன் அதனைச் சகிக்கமாட்டார். அப்படியாயின், மனுஷனுக்கு இருக்கும் ஒரேவழி, கல்வாரி சிலுவையில், நம்முடைய பாவத் துக்காகக் கிறிஸ்துவின்மேல் விழுந்த கோபத்தை ஏற்றுக்கொள் வதேயாகும். கிறிஸ்து எந்தப் பாவமும் செய்யவில்லை, அவ ரில் எந்தப் பாவமும் இல்லை (**Iகொரி. 5:21; எபி 7:26**); அவர் நமக் காகச் சிலுவையில் நிறைவேற்றியதை ஏற்றுக்கொள்வதொன்றே நமக்கிருக்கும் ஒரே விடுதலையாகும்; அப்படியில்லாவிட்டால், நம்மேல் விழுந்த கோபத்தை அனுபவிக்கவேண்டியதேதவிர வேறெந்த வழியும் நமக்கு இல்லை.

தேவன் ஒருபொழுதும் மனுஷனை அழிந்துபோக, அவன் பாட்டுக்குப் போகவிடுவதில்லை; அவர் கடைசிவரையும் தன்னி டம் திருப்புவதற்கு முயற்சிசெய்வார்; மனுஷன் செவிகொடுத் தால், பிழைப்பான் இல்லையேல், தன்னைத்தான் அழித்துக் கொள்ளுவான். அவர்களே தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள் என **IIநாளாகமம் 24:19**ல் சொல்லப்பட்டிருக்கிறது. சத்தியத்தை விட்டு விலகினால், அவர்களைப் பாதுகாப்பதற்கு வேறெந்தப் பெலனும் போதுமானதல்ல (**யோவா. 8:32**).

ஜான்

2

***அ**ப்பொழுது தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனான சகரியாவின்மேல் இறங்கினதினால், அவன் ஜனத்திற்கு எதிரே நின்று: நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறது என்ன? இதினால் நீங்கள் சித்திபெறமாட்டீர்களென்று தேவன் சொல்லுகிறார்; நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால் அவர் உங்களைக் கைவிடுவார் என்றான் (II நாளா. 24:20).*

"தேவனுடைய ஆவி சகரியாவின்மேல் இறங்கியது"

தன் தகப்பனாகிய யோய்தா மரணமடைந்த பின்பு, அவன் குமாரனாகிய சகரியா பிரதான ஆசாரியனாயிருந்தான். விசுவாசி தேவனுடைய கட்டளைகளை மீறும்பொழுது, பணத்தின் ஐசுவரியத்தைப்பெற்றாலும், நிச்சயமாக ஆவிக்குரிய ஐசுவரியத்தைப் பெறமாட்டான். இந்த உண்மையை சகரியாமூலம் கர்த்தருடைய ஆவியானவர் எல்லா மனுஷரும் விளங்கக்கூடிய முறையில் ஒரு தீர்க்கதரிசனத்தைக் கொடுத்தார். அதென்ன வென்றால், **"நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால் அவர் உங்களைக் கைவிடுவார்"** என்பதேயாகும். அப்படியானால், நாம் அவரை விட்டுவிடாதிருந்தால், அவரும் நம்மைக் கைவிடமாட்டார் என்பது தெளிவாகிறது.

ஆவியானவருடைய அசைவாட்டம் இருந்தால், நிச்சயமாக அங்கே பிசாசின் அசைவாட்டமும் உண்டு என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; மேற்கூறிய தீர்க்கதரிசனம் வெளிப்பட்ட வுடன், ராஜாவும், அவனிடம் வந்துசேர்ந்த யூதேயாவின் பிரபுக் களும் கோபமடைந்து, சகரியாவுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி, அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள். இங்கு சொல் லப்பட்டிருக்கும் சகரியா, சகரியா புஸ்தகத்தை எழுதிய தீர்க்க தரிசி அல்ல என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். இரண்டு சகரியாவும் கல்லால் ஏறியப்பட்டு மாண்டார்கள் என்பது குறிப் பிடத்தக்கது. ஒருவன் ஆலயப்பிராகாரத்திலும் (II**நாளா.** 24:21), மற்றவன் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவேயும் (**மத்.** 23:35) கல்லினால் எறிந்து கொல்லப்பட்டனர்.

சகரியா மரிக்கும்பொழுது "....**கர்த்தர் அதைப் பார்ப்பார், அதைக் கேட்பார் என்றான்"** (II**நாளா.** 24:22); அப்படியே நியாயத் தீர்ப்பு அவர்கள் எல்லார்மேலும் வந்தது (II**நாளா.** 24:23-25). நடந்த சம்பவத்தைப் பார்க்கும்பொழுது யோவாஸ் பரலோகத்திற்குச் சென்றிருப்பானா என்பது சந்தேகமாயிருக்கிறது. எப்படியான ஆரம்பம் எப்படி முடிந்தது? இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினை, மனுஷன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதொன்றே தேவையானது; ஆனால், அவன் விசுவா சத்திற்குக் கீழ்ப்படியாவிட்டால், தேவனுடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிய அவனால் முடியாது; கீழ்ப்படியவேண்டிய அந்த விசு வாசம், சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவாகும் (I**கொரி.** 2:2).

ஜான்

3

***அ**வன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூப பீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான் (II**நாளா. 26:16).*

"உசியாவின் பாவம்"

உசியா பலப்படுமட்டும் ஆச்சரியமாக அவனுக்கு அனுகூலம் உண்டாயிற்று என்றும், அவனுடைய கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று என்றும் II**நாளாகமம்** 26:15ல் சொல்லப்பட்டிருக்கிறது; தேவன் அவனை ஆசீர்வதித்தார்; ஆனால், அவன் பலப்பட்ட பொழுது ஆபத்தான மண்டலத்திற்குள் பிரவேசித்தான். பவுல் அப்போஸ்தலரோ தான் எப்பொழுது பலமாயிருந்தார் என்பது பற்றி II**கொரிந்தியர்** 12:10ல் **"அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்"** எனக் கூறியிருப்பதை நாம் அவதானமாகக் கவனிக்கவேண்டும்.

ஆனால், நாம் நினைப்பதைவிட உசியாவின் மீறுதல் விபரீதமானது; பொன்தூபபீடத்தில் தூபங்காட்ட எடுத்த முயற்சியின் நிமித்தம் தனக்கு ஒரு இரட்சகர் தேவையில்லை என அவன்

பிரகடனப்படுத்துகிறான். ஆசாரியர் ஒருவனே தூபம் காட்டமுடியும்; ஏனென்றால், அவன் கிறிஸ்துவின் மாதிரியும், கிறிஸ்து தேவனுக்கும் மனுஷனுக்குமிடையில் மத்தியஸ்தராகவும் இருக்கிறதைப் பிரதிபலிக்கும் மாதிரியாகவும் இருக்கிறபடியினால், ஆசாரியரைத்தவிர வேறொருவரும் தூபம் காட்டமுயற்சிக்கக் கூடாது.

அப்படியே தற்போதைய கிறிஸ்தவ சபையினரும் சிலுவையை உதாசீனஞ்செய்து, அதனை நிராகரித்து, தங்களுடைய பாவச்செயல்களை உறுதிப்படுத்துகின்றனர். கிறிஸ்துவை இரட்சகராகத் தொழுதுகொள்ளவேண்டும்; சிலுவையின்மூலமே அவர் நம்முடைய இரட்சகராக இருக்கிறார் (**Iகொரி. 1:17-18, 23, 2:2**). ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வேறேதாவது வழியினால் தொழுதுகொண்டால் அல்லது வேறொரு வழியினால், அவரைத் தேடினால், அவன் வேறொரு இயேசுவையே தேடுகிறான்; வேறொரு இயேசுவைத் தேவன் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார் (**IIகொரி. 11:4**).

ஜான்

4

***அ**ப்பொழுது உசியா கோபங்கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரிய ரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவ னென்றுகண்டு, அவனைத் தீவிரமாய் அங்கிருந்து வெளிப்படப்பண்ணினார்கள்; கர்த்தர் தன்னை அடித்த தினால் அவன் தானும் வெளியே போகத் தீவிரப்பட் டான் (II நாளா. 26:19-20).*

"உசியாவின் நெற்றியிலே குஷ்டரோகம்"

இரட்சகருடைய தலையீடு இல்லாமல் தேவனைத் தொழுது கொள்ள முயற்சித்தபடியினால், கர்த்தர் அவனைக் குஷ்டரோகத் தினால் அடித்தார். பிரதான ஆசாரியருடைய நெற்றியில் "**கர்த் தருக்குப் பரிசுத்தம்**" என்று எழுதப்பட்ட பொற்தகடு கட்டப்பட்டி ருக்கிறது. உசியாவினுடைய நெற்றியிலோ பாவம் நிறைந்திருக் கிறது என்பதற்கு அறிகுறியாகக் குஷ்டரோகம் காண்பிக்கப்பட்டி ருக்கிறது. நாம் எப்பொழுதும் அறிந்திருக்கவேண்டிய விஷயம்

என்னவென்றால், ஒரு விசுவாசியைப் பொறுத்தளவில் அவனுக்குக் கிறிஸ்துவே ஆதாரம் என்பதனையும் சிலுவையின் மூலமாகவே சகலதும் அவனுக்குக் கிடைக்கிறது என்பதனையும் அவன் உறுதியாக அறிந்திருக்கவேண்டும். சிலுவையல்லாமல் கர்த்தரிடத்திலிருந்து வேறேதாவது வழியில் நம்முடைய தேவைகளைப்பெற முயற்சிப்போமானால், உசியா நானே இரட்சகரென உரிமைகோரினதுபோல, சிலவேளைகளில் அறிந்தோ அறியாமலோ நாமும் நாமே இரட்சகர் என்று உரிமைகோருகிறோம்.

உசியா தன்னைத் தேவன் கொல்லப்போகிறார் எனப் பயந்து **"தானும் வெளியே போகத் தீவிரப்பட்டான்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய இரக்கத்தினால் உடனடியாக மரிக்காமல் தப்பினான். இப்படியே சுய இரட்சகர்களுக்கும் நடக்கும் என்பதனை அறிந்திருப்போமாக; குஷ்டரோகம் அவனுடைய நெற்றியில் ஆரம்பமாயிற்று; ஆனால், பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கிற பொற்தகடு பிரதான ஆசாரியரின் நெற்றியில் அணியப்பட்டிருக்கிறது. அந்தச் சிறப்புப் பெயருக்குத் தகுதியானவர் கிறிஸ்து ஒருவரேயாகும். கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசிக்கும்பொழுதே மனுஷன் பரிசுத்தமாயிருக்கிறான். கிறிஸ்துவில் பொருத்தமான விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுதே தேவநீதியும், பரிசுத்தமும் ஒருவன்மேல் உடனடியாகவே சுமத்தப்படுகிறது; அப்படியில்லாவிட்டால், பரிசுத்தம் அவனில் இல்லை; குஷ்டரோகமே அவனில் இருக்கிறது; ஆயினும், உசியா மனந்திரும்பினதாக வேதத்தில் சொல்லப்படவில்லை (II**நாளா.** 26:23).

ஜான்

5

***அ**ப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அந்த இரதத்தின்மேலிருந்த அவனை இறக்கி, அவனுக்கு இருந்த இரண்டாவது இரதத்தின்மேல் ஏற்றி அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவன் மரண மடைந்து தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டான்; யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யோசியாவுக்காகத் துக்கங்கொண்டாடினார் கள் (IIநாளா. 35:24).*

"யோசியாவின் திடீர் மரணம்"

வேதவல்லுனர்களும் கிறிஸ்தவர்களும் யோசியா ஏன் இப் படிச் செய்தான் என்ற தர்க்கவாதத்தை அந்தக் காலந்தொடக்கம் இன்றுவரையும் ஏறெடுத்தவண்ணமாயிருக்கிறார்கள். இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்களைவிட மேலதிகமாக வேதவாக்கியங் களில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

கிடைக்கப்பட்ட தகவல்களைப் பார்த்தால், கர்த்தர் யோசி யாவை எச்சரிக்கை செய்திருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஆயினும், யோசியா அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தின தாகத் தெரியவில்லை; ஏனென்றால், இந்தப் புறஜாதியும், புற மதத் தலைவனுமாகிய பார்வோனோடு கர்த்தர் பேசினார் (II**நாளா.** 35:21) என்பதனை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

யோசியா ராஜாவினால் அதனை ஏற்றுக்கொள்ளவும் முடிய வில்லை; இந்த மாதிரியான தவறுகளை நாமும் விடுவதுண்டு. மிகவும் சொற்பமான தகவல்களே கொடுக்கப்பட்டிருக்கிறபடி யினால், அபிப்பிராயத்தைமட்டுமே நாம் மேற்கொள்ளமுடியும். கர்த்தர் கழுதைமூலமும் பேசமுடியும் (**எண்.** 22:30), பின்வாங் கிப்போன தீர்க்கதரிசியின்மூலமும் பேசமுடியும் (**இராஜா.** 13:19-22); அபிமெலேக்கு மூலமும் பேசமுடியும் (**ஆதி.** 20:3-7).

இப்படியிருக்க, யோசியாவின் சீர்திருத்தங்கள் யூதாவில் பல மாக இருந்தும், யூதேயாவினருடைய இருதயம் கர்த்தரிடத்தில் அவ்வளவாகத் திரும்பவில்லை; ஆனபடியினால், கர்த்தர் யோசி யாவைத் தன்னிடமாக எடுத்துக்கொண்டார். ஏனென்றால், யூதே யாவுக்கு நியாயத்தீர்ப்பின் காலம் நெருங்கிவிட்டது. இதனை மனதில் வைத்தே ஏசாயா தீர்க்கதரிசி "**நீதிமான் மடிந்துபோ கிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்தி மான்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்கு வராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை**" என **ஏசாயா** 57:1ல் கூறியி ருந்தான்.

ஜான்

6

பின்பு நான் அவர்களை நோக்கி: எருசலேம் பாழா யிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட் டெரிக்கப்பட்டுக்கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறு மையையும் பார்க்கிறீர்களே; நாம் இனி நிந்தைக்குள் ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டு வோம் வாருங்கள் என்று சொல்லி (நெகேமி. 2:17).

"எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்"

அன்றைய ஆலயத்தின் வாசல்கள் அக்கினியினால் சுட்டெரிக் கப்பட்டிருக்கிறதுபோல, இன்றைய கிறிஸ்தவ சபைகளும் உடைத்தெறியப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் அலங்கம், ஜெப அலங்கம், வேதப்படிப்பு அலங்கம் ஆகிய அலங்கங்கள் தற்பொழுது அடியோடு சுட்டெரிக்கப்பட்டி ருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மீட்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படியும் அலங்கம் பரிதாபகரமாகச் சுட்டெரிக்கப்பட்டிருக் கிறது.

இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றி யதையும் பிரதிபலிக்கும் மீட்பின் திட்டத்தின் அலங்கம் ஏறி மிதிக்கப்படுகிறது. எருசலேம் அப்பொழுது நிந்தையாயிருந்தது போல, இப்பொழுது கிறிஸ்தவ சபைகள் தேவனுடைய பார் வைக்கு நிந்தையாயிருக்கிறது என்பதனைக் கடைசிக்கால சபை

யாகிய லவோதிக்கேயா சபைக்குக் கர்த்தர் சொல்லியது எவ் வளவு பொருத்தமாயிருக்கிறது; இதுபற்றி **வெளி.** 3:14-20ல் **"லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும் :, தேவ னுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலு மின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். நீ நிர்ப்பாக்கிய முள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குரு டனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரி யவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒருகுறை வுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்; நான்நீ ஐசுவரிய : வானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னி டத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்கிறவர் களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத் தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிர வேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என் னோடே போஜனம்பண்ணுவான்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜான்

7

***நா**ங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சல டைந்து, யூதரைச் சக்கந்தம்பண்ணி: அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக் கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒருநாளிலே முடித் துப்போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண் மேடுகளான கற்களுக்கு உயிர்கொடுப்பார்களோ, என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் சேனைக் கும் முன்பாகச் சொன்னான். அப்பொழுது அம்மோனி யனாகிய தொபியா அவன் பக்கத்தில் நின்று: அவர் கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர் களுடைய கல் மதில் இடிந்துபோகும் என்றான் (நெகேமி. 4:1-3).*

"சுட்டெரிக்கப்பட்ட கற்கள்"

சத்துருவான சன்பல்லாத் பல்வேறு வழிகளினால் யூதர்கள் ஆலயத்தின் மதிலைக்கட்டுவதற்குத் தடையாக இருந்தான். கிறிஸ்தவர்களாகிய நாமும் அந்தமாதிரியான தடைகளை நம் முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் சந்திக்கவேண்டியதாயிருக் கும் என்பதனைக் கிறிஸ்தவர்கள் மறந்துவிடக்கூடாது; ஏனெ னில், சாத்தானுடைய யுக்திகள் எப்பொழுதும் பலன் தருவத னால், தன் யுக்திகளை அடிக்கடி மாற்றவேண்டிய அவசியம்

அவனுக்கில்லை. சன்பல்லாத்தின் எதிர்ப்புக்களை நாம் உன்னிப் பாகக் கவனிக்கவேண்டும்.

- அவனுக்குக் கோபம் வந்தது, எரிச்சலடைந்தான், அவர் களை சக்கந்தம் (கேலி) பண்ணினான்.
- ஆலயத்தின் மதிலைக் கட்டும் யூதர்களை **"அற்பமான யூதர்கள்"** என்று அழைத்தான் (**நெகேமி.** 4:2).
- அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ (**நெகேமி.** 4:2) என்று கேலிபண்ணினான்.
- பலியிடுவார்களோ (**நெகேமி.** 4:2) என்று பார்வோனைப் போல் உக்கிரகோபம் (**யாத்.** 5:7-9, 17) அடைந்தான்.
- ஒரு நாளிலே முடித்துப்போடுவார்களோ? (**நெகேமி.** 4:2) என்றான்.
- சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர்கொடுப்பார்களோ (**நெகேமி.** 4:2) என்று கூக்குரலிட்டான்.

இன்னுமொரு சத்துருவான அம்மோனியனாகிய தொபியா, அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர் களுடைய கல் மதில் இடிந்துபோகும் என்றான் (**நெகேமி.** 4:3). அந்த யூதர்களிடமிருப்பது சுட்டெரிக்கப்பட்ட கற்களே; அதற்குப் பெலனும் இல்லை, தைரியமும் இல்லை என்பதே அவர்களு டைய அனுமானம்; ஆனால், அவர்கள் அறியாதது என்னவெ னில், தேவன் சுட்டெரிக்கப்பட்ட கற்களையே பாவிக்கிறார்; அதெப்படி சாத்தியமாகும் எனக் கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படு வது வேதனைக்கு மேல் வேதனையாயிருக்கிறது.

சுட்டெரிக்கப்பட்ட கற்களையே தேவன் அழைத்திருக்கிறார்; அவர்களே ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டு (**எபேசி.** 6:12) உஷ்ணத்தை அனுபவித்து, அதன் பலனாக நஷ்டத்தை அனுப வித்தவர்கள்; அவர்களில் தழும்பு வெளிப்படையாகத் தெரிகிறது; அவர்கள் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; இவர்கள் சுயநீதியில் செயற்படாமல், தேவநீதியில் செயற்படுபவர்கள் (**ரோம.** 10:3); அவர்களே பரிசுத்த ஆவியின் கைகளினால் இலகுவாக தனக்கு

ஏற்றபடி வளைக்கப்படக்கூடியவர்கள்; தேவன் சுட்டெரிக்கப்பட்ட கற்களையே பாவிப்பார்.

எகிப்து, ஆகார், அபிமலேக்கு ஆகியவை ஆபிரகாம் ஒரு சுட்டெரிக்கப்பட்ட கல் எனச் சாட்சியளிக்கிறது. யாக்கோபை உடனடியாகவே அவன் ஒரு சுட்டெரிக்கப்பட்ட கல் என அறியக் கூடியதாயிருக்கிறது. அப்படியே தாவீதையும், ஏசாயாவையும், எரேமியாவையும், பேதுருவையும் பவுல் அப்போஸ்தலரையும் மற்றும் வேதாகமத்தில் **எபிரெயர்** 11ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட பரிசுத்தவான்கள் யாவரும் சுட்டெரிக்கப்பட்ட கற்களாயிருக்கிறார்கள். சுட்டெரிக்கப்படாத கல்லாயிருப்பவன் இன்னும் ஆவிக்குரிய அரங்கத்தில் ஆவிக்குரிய யுத்தத்தைச் சந்திக்காமல் சாத்தானோடு உடன்படிக்கை செய்தவனாகும் (**லூக்.** 14:28-35); ஆகையால், நெகேமியா சுட்டெரிக்கப்பட்ட கற்களைமட்டுமே ஆலயத்தின் மதில்களைக் கட்டுவதற்குப் பாவிக்கமுடியும். சுட்டெரிக்கப்பட்ட கற்களாக இருப்பவர்கள் பலமான விசுவாசத்தினாலேயே சுட்டெரிக்கப்பட்டார்கள் என்பதனை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவிசுவாசிகளைப்பற்றியோ அல்லது விசுவாசத்தைத் திசைதிருப்பினவர்களைப்பற்றியோ சாத்தான் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

ஜான்

8

கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலை செய்தார்கள்; எக்காளம் ஊதுகிறவன் என்னண்டை யிலே நின்றான் (நெகேமி. 4:18).

"எக்காளம் ஊதுகிறவன்"

நெகேமியாவோடு சேர்ந்து ஆலயத்தின் மதிலைக் கட்டுபவர் கள் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்ட வர்களாய் வேலை செய்தார்கள். அவர்கள் ஆலயத்து மதிலைக் கட்டுவதுமட்டுமல்ல, அவர்கள் அதனையும் தங்களையும் பாது காக்கிறவர்களாயுமிருந்தார்கள். இதேபோல புதிய ஏற்பாட்டில் "…. **ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்" (எபேசி.** 6:17) எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார்.

நெகேமியாவின் காலத்தில் தன்னுடைய ஆயுதத்தை ஏந்தி யிராத வேலைக்காரன் பாதுகாப்பற்ற வேலைக்காரன். சத்துரு வானவன் அன்றுபோல் இன்றும் ஆவியில் தாக்குதலை நடத்திய வண்ணமேயிருக்கிறான். அப்படியானால், விசுவாசி ஆவியின் பட்டயத்தை எந்நேரமும் ஏந்திய வண்ணமே இருக்கவேண்டும்; அதன் பொருள் வேதவசனத்தை அறிந்து, அதன் ஆவிக்குரிய பொருளை அறிந்திருக்கவேண்டும்; வேதவாக்கியத்தின் ஆவிக் குரிய பொருளை அறியாதவன் பாதுகாப்பு இல்லாதவன். போதிய அறிவில்லாவிடில் சத்துருவுக்கு முன்பாகப் பாதுகாப்பு அற்றவனாயிருக்கிறான்; இதனிமித்தமே, அநேகர் பொய்யான

உபதேசங்களுக்கு இரையாகிப் போயிருக்கிறார்கள். அவர்கள் வேதவசனத்தை (ஆவியின் பட்டயத்தை) உபயோகித்து எதிரியின் தாக்குதலை முறியடிக்காவிட்டால் இலகுவாக எதிரியினால் பிடிபட்டுப்போவார்கள். கள்ள அப்போஸ்தலர்கள் (சாத்தானின் ஊழியக்காரர் [II**கொரி.** 11:13-15]) எவ்வாறு பேதைகளான விசுவாசிகளைத் தந்திரமாக இணங்கப்பண்ணுகிறார்கள் என்பதனையும், பிடிபட்ட விசுவாசிகளின் பரிதாபகரமான நிலைமையையும் சாலொமோன் தெளிவாக **நீதிமொழிகள்** 7:21-23, 26-27ல் கூறியிருக்கிறான்.

இதனிமித்தமே, பவுல் அப்போஸ்தலர் I**தீமோத்தேயு** 2:15ல் நாம் எப்படி நடக்கவேண்டும் எனக் கூறியிருக்கிறார். அதெப்படியெனில், கிறிஸ்துவின் சிலுவையில் விசுவாசத்தை வைத்திருப்பவன் ஒருபொழுதும் வெட்கப்பட்டுப்போவதில்லை எனவும், வேறெதனிலும் விசுவாசத்தை வைத்திருப்பவன் சந்தேகத்துக்கிடமின்றி அவமானத்தைச் சந்திக்கிறான் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது; மேலும் கிறிஸ்துவின் சிலுவையின் தாற்பரியத்தை (இரட்சிப்புக்கும் பரிசுத்தத்திற்கும், நாளாந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கும்) அறியாவிட்டால், அவன் சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்து அறியவும்முடியாது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. சத்தியத்தை அறியாவிட்டால், விசுவாசி, தன்னை சாத்தானுக்கு இரையாக ஒப்புக்கொடுக்கிறான் (I**தீமோ.** 2:15-18); தற்போதைய கிறிஸ்தவர்களின் பரிதாபகரமான நிலைமை இதுவே.

ஜான்

9

என் தேவனே, தொபியாவும் சன்பல்லாத்தும் செய்த இந்தச் செய்கைகளுக்குத்தக்கதாக நீர் அவர்களையும், நொவதியாள் என்னும் தீர்க்கதரிசியானவளையும், எனக்குப் பயமுண்டாக்கப்பார்த்த மற்றத் தீர்க்கதரிசி களையும் நினைத்துக்கொள்ளும் (நெகேமி. 6:14).

"தேவனே, இவர்களை நினைத்துக்கொள்ளும்"

துரதிஷ்டவசமாகத் தேவனுடைய ஜனங்கள் உலகத்தோடு சேர்ந்து, தேவனுடைய மனுஷனாகிய நெகேமியாவை அழிப் பதற்கு முயற்சி செய்வதை **நெகேமியா** 6:13ல் காணக்கூடியதா யிருக்கிறது; இந்த அவலட்சணமான வழிமுறை இன்னும் தொடர்கிறது. நெகேமியாவுக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டுவ தற்கு சில தீர்க்கதரிசிகளும், நொவதியாள் என்ற தீர்க்கதரிசியும் உலகத்துடன் ஒன்று சேர்ந்தனர்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்வதற்கேது வாக யூதாஸ்காரியோத்து பிரதான ஆசாரியர்களோடும், ரோமர் களோடும் கூட்டுச்சேர்ந்த மாதிரி இன்றும் தேவமனுஷருக்கெதி ராகச் சதித்திட்டம் தீட்டப்படுகிறது; உண்மையில் மோசமான தீங்கு சபைக்குள்ளிருந்தே ஆரம்பமாகிறது! நான் சொல்லப்போ கிறதை எந்தக் காலத்திலும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண் டும். தீர்க்கதரிசனத்திற்கு நேரமும் திகதியும் குறிக்கப்பட்டிருக் கும்பொழுது, அது நிறைவேறாவிட்டால் அல்லது தீர்க்க

தரிசனத்தில் சொல்லப்பட்டவைகள் வேதவாக்கியத்திற்கு இசை வாயிராவிட்டால், சொல்லப்பட்ட பொய்யான செய்தி கள்ளத் தீர்க்கதரிசிகளிடமிருந்தே வந்தது; தற்பொழுது பூமி கள்ளத்தீர்க்க தரிசிகளினால் நிறைந்துபோயிருக்கிறது.

இதுபற்றி **1யோவான் 4:1-3ல் "பிரியமானவர்களே, உலகத் தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம் சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவ னால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது"** என அப்போஸ்தலர் யோவான் கூறியி ருக்கிறார்.

ஆனால், ஒற்றுமை என்ற போர்வையினால் அவர்கள் வஞ் சிக்கப்பட்டிருக்கையில், அவர்களிடம் கணக்குக்கேட்பது தவிர்க் கப்பட்டிருக்கிறபடியினால், **"தேவனே இவர்களை நினைத்துக் கொள்ளும்"** என்று ஜெபம்பண்ணுவது மட்டுமே நமக்கு இருக் கிற ஒரே ஒரு வழியாகும்.

ஜான்

10

***அ**ப்பொழுது ராஜாவின் அரமனை வாசலிலி ருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து: நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன என்று கேட்டார்கள். இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும், அவன் தங்களுக்குச் செவி கொடாதபோது, தான் யூதன் என்று அவன் அவர் களுக்கு அறிவித்திருந்தபடியால், மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, அதை ஆமானுக்கு அறிவித்தார்கள் (எஸ்தர் 3:3-4).*

"மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ?"

மொர்தெகாய், தான் ஏன் ஆமானை வணங்கி நமஸ்கரிக்க வில்லை என்ற காரணத்தை ராஜாவின் அரண்மனை ஊழியக் காரருக்கு விபரித்துக் கூறினான். ஆமானை அவமதிப்பதோ அல்லது ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறதோ தன்னுடைய நோக்கம் அல்ல. தான் ஒரு எபிரெயனாக இருப்ப தனாலும், தான் ஜீவனுள்ள ஒரே ஒரு தேவனையே வணங்குவத னாலும் வேறொருவரையும் தன்னால் வணங்கமுடியாது என்ற தன்னுடைய நிலைப்பாட்டை மொர்தெகாய் கூறியிருந்தான். இந்த மாதிரியான நமஸ்காரத்தைத் தானியேல் செய்யாததனி மித்தம் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்டான் (**தானி.** 6:16).

மூன்று இளவரசர்களாகிய யூதர்களும் அக்கினிச்சூளையில் போடப்பட்டார்கள் (**தானி.** 3:21); மொர்தெகாயின் அறிக்கை, அவன் தானியேலுடையதும், மூன்று இளவரச யூதர்களுடைய தோழன் என்பதனையும் உறுதிப்படுத்தியது. உண்மையில் ஆமான் ஒரு அமலேக்கியன்; ஆனபடியினால், அவன் தேவனுக்குப் பகைஞன். **யாத்திராகமம்** 17:16ன்படி **"அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும்"** என மோசே சொல்லியிருந்தான்.

தேவனுடைய பகைஞர்கள் மொர்தெகாயின் பகைஞர்கள்; ஏனென்றால், மொர்தெகாய் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தான். இதுவும் ஆமானை மொர்தெகாய் கனம்பண்ணாததற்கு மேலதிகமான காரணமாகும். கர்த்தருடைய ஊழியக்காரர் சில வேளைகளில் உயிருக்கு ஆபத்தான தீர்மானங்களை எடுக்க வேண்டிவரும். வேதத்தில் தம்முடைய உயிரைக் கர்த்தருக்கென்று கொடுத்தவர்கள் உண்டு (**வெளி.** 12:11; 20:4). மேலும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு** 10:28ல் **"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"** எனக் கூறியிருக்கிறார்.

ஜான்

11

***ஊ**த்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான் (யோபு 1:1).*

"உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்"

நான்கு குணாதிசயங்களைத் தேவன் யோபுவில் கண்டிருக் கிறார். யோபு இசக்காரின் குமாரனும், யாக்கோபுக்குப் பேரனுமா வான். இவன் ஏதோமுவுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடைப் பட்ட ஊத்ஸ் என்னும் தேசத்தில் குடியிருந்தான். யோபு உத்த மனாயிருந்தான் என்பதன் பொருள், அவன் பாவமில்லாத பூர ணத்துவத்தை உடையவனாயிருந்தான் என்பதல்ல; பாவஞ்செய் யாத மனுஷன் இல்லையே (**1இராஜா. 8:46; ரோம. 3:23**) என்று சாலொமோனும் பவுல் அப்போஸ்தலரும் கூறியிருக்கிறார்கள்; அப்படியானால் யோபு தேவனைப் பிரியப்படுத்துவதற்குத் தன் னால் முடிந்தளவு முயற்சிசெய்ததுமட்டுமல்ல, உத்தமனாயிருப் பதற்கும் முயற்சிசெய்தான் எனப் பொருள்படுகிறது. ஆனால், பாவம் மேற்கொள்ளாத வாழ்க்கை சாத்தியமாகும் என்று **ரோமர் 6:14**ல் சொல்லப்பட்டிருக்கிறது. பாவம் மேற்கொள்ளாத வாழ்க்கை என்றால், ஒருக்காலும் பாவஞ்செய்யாத வாழ்க்கை எனப் பொருள்படாது; இதுபற்றித் தாவீது **சங்கீதம் 18:21-23**ல்

"கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்; அவருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை. அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்" எனச் சொல்லியிருப்பதே உத்தமமான வாழ்க்கையாகும்.

இப்படியிருக்க, யோபு என்ற புஸ்தகம் உலகத்திலேயே பழமை வாய்ந்த புஸ்தகமாகும்; இது மோசேயினால் எழுதப் பட்டது (**லூக்.** 24:27, 44). இந்தப் புஸ்தகத்தில் ஏன் நல்ல மனுஷன் துன்புறுத்தப்படுகிறான் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக் கிறது. ஆம், ஒரு மனுஷனும், இயேசுகிறிஸ்துவைத்தவிர நல்லவன் அல்ல; தேவன் ஒருவரைத்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே சொல்லியிருக்கிறார் (**மத்.** 19:17). ஆனபடியினால், முழுமனுஷ குலமும் பரிசுத்தப்படவேண்டும் என்பது தெளிவாகிறது. இந்த விஷயத்தை முதல்முறையாக எடுத்து வேதாகமத்தில் பதிலளித் திருப்பது சுவாரஸ்யமான செய்தியாயிருக்கிறது. கர்த்தராகிய ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வது இலகுவானது (**ரோம.** 10:9-10, 13; **யோவா.** 3:16); ஆனால், தேவனுக்கு முன்பாக உத்தமனாக நடப்பது மிகவும் கஷ்டமான விஷயம்; ஆனபடியினால், பரிசுத்தம் அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் அவசியமாயிருக்கிறது. யோபுவோடு ஆரம்பித்து, வேதாகமத்தில் 99%ஐப் பரிசுத்தம் உள்ளடக்குகிறது. நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே (**1பேது.** 1:16; **லேவி.** 11:45).

ஜான்

12

விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடி கிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ் செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்தி ருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத் தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர் கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான் (யோபு 1:5).

"யோபு தன் பிள்ளைகளுக்காகப் பலி கொடுத்தான்"

யோபு தன் பிள்ளைகளுக்காக சர்வாங்க தகனபலி செலுத்து வதை நாம் காண்கிறோம். நியாயப்பிரமாணம் தேவனால் கொடுக்கப்படுவதற்குமுன்பு, வீட்டின் தலைவனே வீட்டின் ஆசா ரியனாகும். யோபு மீட்பராகிய தேவனிலும், அவரைப் பிரதி பலிக்கும் பலியிலும் விசுவாசமுள்ளவனாயிருந்தான் என்பது புலனாகிறது. இவ்வாறான விசுவாசம் அவனுக்குப் பெரும் ஆசீர் வாதமாயிருந்தது; ஆனால், அவ்வாறான பலிகளின்மூலம் தன்னு டைய குமாரர்களினதும் குமாரத்திகளினதும் பாவத்துக்கு ஒரு பொழுதும் பரிகாரம் காணமுடியாது. அவர்களே பலியைக் கொடுத்து, மீட்பரை விசுவாசித்து, தம்முடைய பாவத்தை

மூடிக்கொள்ளவேண்டும். அவனவன் தன்னுடைய பாவத்துக்குப் பரிகாரம் தேடவேண்டுமேதவிர இன்னொருவன் அல்ல என்பது பற்றிக் கர்த்தர் தெளிவாக **எசேக்கியேல்** 14:13-20ல் கூறியிருக் கிறார். சிலர் தேவனுடைய கிருபை எதற்காக யோபுவினுடைய குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் கிடைக்கவில்லை? யோபு வைத் தேவன் சோதிப்பதற்காக யோபுவின் குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் எதற்காக மரணத்தை அனுமதித்தார்? என்று அங்கலாய்க்கிறார்கள். **யோபு** 1:5ல் இந்தக் கேள்விக்குரிய விடை யைக் காணக்கூடியதாயிருக்கிறது. யோபுவின் குமாரர்களும் குமாரத்திகளும் தேவனை அறியாதிருந்தார்கள்; ஆனால், யோபுவோ மிகுந்த தேவபக்தி உள்ளவனும் தேவனுக்குப் பயந்த வனும் உத்தமனும் சன்மார்க்கனும் பொல்லாப்புக்கு விலகுகிற வனுமாயிருந்தான்.

தேவனுடைய கிருபையும் ஆசீர்வாதமும் இரக்கமும் அவர் களுக்குத் தாராளமாக யோபுவின் நிமித்தம் கிடைத்தும், அவர் கள் தேவனைச் சேவிக்கவில்லை; ஆனால், யோபுவின் குமாரர் களையும் குமாரத்திகளையும் குறிப்பிடும்போது **புசித்துத் திராட் சரசம் குடிக்கிறபோது (யோபு** 1:18) என்றே கூறப்பட்டிருக்கிறது. யோபுவின் பக்தியையும் விசுவாசத்தையும் நடத்தையையும் அவனுடைய குமாரர்களும் குமாரத்திகளும் கண்டும், கேட்டும், அறிந்தும் தன் தகப்பனுடைய தேவனைச் சேவிக்க அவர்கள் விரும்பவில்லை அல்லது ஏனோதானோ என்ற மனப்போக்கை உடையவர்களாயிருந்திருக்கலாம்; அப்படியே ஏசாவும் செய்தான்; காயீனும் செய்தான் என்பதனை நினைவுகூருவோமாக.

யோபுவினுடைய ஆசீர்வாதங்களை அவனுடைய குமாரர் களும் குமாரத்திகளும் அனுபவித்தார்கள்; அவர்கள் அனுபவித்த ஆசீர்வாதங்கள் அவர்களுடையதல்ல; அவர்களுடைய தகப்பனா கிய யோபுவினுடையதே என்பதனை அவர்கள் அறியமனதில்லா திருந்தார்கள் (**உபா.** 28:4). ஆபிரகாம் நிமித்தம் லோத்து ஆசீர் வதிக்கப்பட்டான்; ஈசாக்கு மூலம் ஏசா ஆசீர்வதிக்கப்பட்டான்.

தேவனுடைய கிருபை அன்று உதாசீனஞ்செய்யப்பட்டதுபோல இன்றும் அநேகமான கிறிஸ்தவர்களினால் உதாசீனஞ்செய்யப்படு கிறது. நீண்டகாலமாக யோபுவினுடைய புத்திரர்கள் தேவனை அறிய அல்லது அவரால் அறியப்பட விரும்பாமல் இருந்தபடி யினால், தேவன் அவர்களைச் சங்கரிக்கத் தீர்மானித்தார். அவர் கள் தேவனுடைய கிருபையையும் அவருடைய இரக்கத்தையும் நிராகரித்தார்கள். தன் புத்திரர்கள் தேவனைக் கிண்டல் செய்தி ருப்பார்கள், அவமதித்திருப்பார்கள், தங்களுடைய இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என யோபு நினைப்பதிலிருந்து அவர்களு டைய துன்மார்க்கம் (**யோபு** 1:5) தெளிவாகிறது.

ஆனால், தாங்கமுடியாத வேதனையின் மத்தியிலும் யோபு தேவனைத் தொழுதுகொள்வது அவனுடைய சன்மார்க்கத்தை உறுதிப்படுத்துகிறது. யோபு தன் புத்திரர்களுக்காகச் செய்த விண்ணப்பத்தைத் தேவன் ஏற்றுக்கொள்ளவில்லையோ என்று பலர் விசனப்படுகிறார்கள். பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (**எசேக்.** 18:4) எனக் கர்த்தராகிய ஆண்டவர் எசேக்கியேலில் மீண்டும் ஒரு முறை எச்சரித்திருக்கிறார்; ஏனெனில், இஸ்ர வேலியர்கள் தம்முடைய பிதாக்கள் பாவஞ்செய்ததின் நிமித்தமே தங்களுக்குச் சகல கஷ்டங்களும் வருகிறது என ஒரு பழமொழி யாகக் கூறிக்கொண்டு வந்தார்கள்; இதனால் எரிச்சலடைந்த தேவன் எவன் பாவஞ்செய்கிறானோ அவனே சாவான் என்பதைப் பற்றி **எசேக்கியேல்** 18:1-4ல் கூறியிருக்கிறார்; ஆகவே அவனவன் தன் தன் பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடவேண்டுமேதவிர இன் னொருவனல்ல என்பதனை நாம் இந்த வேதவாக்கியங்கள்மூலம் அறியக்கூடியதாயிருக்கிறது.

ஜான்

13

***ஒ**ருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான். கர்த்தர் சாத்தானை நோக்கிஎன் தாச : னாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தம னும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப் புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். (யோபு 1:6, 8).*

"கர்த்தருடைய சந்நிதியில் தேவபுத்திரர்களும் சாத்தானும் நின்றார்கள்"

இங்கு தேவபுத்திரர் என்பது நீதியான தேவதூதர்களையும் வீழ்ந்துபோன தேவதூதர்களையும் சேர்த்தே சொல்லப்பட்டிருக் கிறது. பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திலேயே இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது. எபிரெயமொழியில் **"அந்த சாத்தா னும்"** என்றே சொல்லப்பட்டிருக்கிறது; கேட்டின் தலைவன் எனப் பிரத்தியேகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதன்மூலம் நமக்குச் தெரிவிப்பது என்னவென்றால், இந்தத் தேவதூதர்கள் ஒரு குறிப்பிட்ட நாளிலே தேவனுக்கு முன்பாகச் சந்தித்து, தங்களுடைய ஊழியத்தின் கணக்கைத் தேவனுக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதுபோலத் தெரிகிறது. இங்கு முதல் முறையாக இந்தத் தேவதூதன் சாத்தான் என்று அழைக்கப்படு

கிறான். கடந்த காலத்தில் சாத்தான் தேவனுக்கெதிராக ஒரு புரட்சியை ஏறெடுத்தான்; அந்தப் புரட்சியின் நிமித்தம் மூன்றில் ஒரு பகுதித் தேவதூதர்கள் சாத்தானோடு இணைந்துள்ளனர் (**வெளி.** 12:4). அந்தப் புரட்சியின் காலத்திலிருந்து இன்றுவரை, கேட்டுக்கும், நீதிக்கும் இடையில் யுத்தம் நடந்த வண்ணமா யிருக்கிறது. நீதிக்கும் அநீதிக்குமிடையில் குமுறல் ஒழிந்தபாடு இல்லை; ஆயினும் யுத்தம் நீடியகாலத்திற்குத் தொடரப்போவ தில்லை (**வெளி.** 20:1, 7-10).

நாம் யோபு புஸ்தகத்தின் 2ம் 3ம் அதிகாரங்களைப் பார்க்கும் பொழுது, தேவன் கட்டளையிட்டால் மட்டுமே சாத்தான் ஒரு விசுவாசியை துன்புறுத்தமுடியும் என்பது புலனாகிறது; சாத்தான் தானாக நினைத்து செயற்படமுடியாது, அவன் முதலில் தேவ னிடம் அனுமதி பெறவேண்டும்; மற்றும் விசுவாசிக்கு நடக்கும் ஒவ்வொரு காரியமும் தேவன் அனுப்புகிறார் அல்லது அனு மதிக்கிறார் என்பதனை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். நாம் பாவஞ்செய்தால் அவர் கணடிப்பார்; நாம் தொடர்ந்து செய் தால், அதனை அனுமதிப்பார்; நிச்சயம் அதற்குத் தண்டனை உண்டு. இந்தப் புஸ்தகத்தின் மூலம் பரிசுத்தவானுக்கும் பரி சுத்தம் அவசியம் என்பது நிரூபிக்கப்படுகிறது.

ஜான்

14

***அ**தற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக் கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவ னுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலிய டைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெரு கிற்று. ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவ னுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப் பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான் (யோபு 1:9-11).*

"யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?"

சாத்தான் தேவனை நோக்கி: நீர் யார் என்பதற்காக யோபு பயப்படவில்லை, நீர் அவனுக்குச் செய்திருக்கும் ஆசீர்வாதங் களின் நிமித்தமே அவன் உம்மில் அன்புகூருகிறானேயன்றி வேறொன்றுமல்ல எனக் கூறினதுமட்டுமல்ல, நீர் இப்பொழுதும் அவனுடைய மாம்சத்தையும் தோலையும் தொடுவீரானால் அவன் உமது முகத்துக்கு எதிரே தூஷிக்கிறானோ இல்லையோ பாரும் எனத் தேவனிடம் உறுதியாகக் கூறியிருப்பதைக் காணக் கூடியதாயிருக்கிறது (**யோபு** 2:5); சாத்தான் கூறியிருப்பதில்

ஓரளவு உண்மையும் உண்டு என்பதனை நாம் ஏற்றேயாக வேண்டும். இது சாத்தானுடைய வழமையான பேச்சாயிருக்கிறது. ஏனெனில், அநேகமான கிறிஸ்தவர்கள் நோய்கள் குணமாவதற்கும், பதவி உயர்வுக்கும், புதுக்காருக்கும், புதுவீட்டுக்கும், பணத்தேவைகளுக்கும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்களேதவிர (**1கொரி. 15:19**), அவரை யார் என்று அறிந்து, அவரை விசுவாசிப்பதில்லை; அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பதுமில்லை; சபைகளில் அநேகமான கிறிஸ்தவர்களின் சாட்சி இந்த யதார்த்தமான நிலைமையைத் தெளிவாக உறுதிப்படுத்துகிறது. இவர்கள் கிறிஸ்துவின் ஐசுவரியத்தை எப்படியாயினும், எந்த வழிகளின் மூலமும் அனுபவிக்க முயற்சிக்கிறார்களேதவிர இந்த ஐசுவரியத்தைப் பெறுவதற்குத் தேவன் ஏற்படுத்திய வழியை (**யோவா. 14:6**) அறியவிரும்புவதில்லை. தேவன் இவர்களைக் கடுமையாக **வெளி. 3:17-19**ல் எச்சரிக்கிறார்.

சாத்தான் அன்றுமட்டுமல்ல, இன்றும் அதே சிந்தனையை உடையவனாகவேயிருக்கிறான்; அதெப்படியெனில், மனிதர் தேவனை விசுவாசிப்பது அவரிடமிருந்து ஏதாவது பொருள்களையும் மற்றும் சுகபோகங்களையும் அனுபவிப்பதற்காகவேயன்றி வேறொன்றுக்குமல்ல என அவன் நிஜமாகவே நம்புகிறான். ஆனால், உண்மையாகவே தேவனை விசுவாசிப்பவர்களும் தேவனில் அன்புகூருபவர்களும் உண்டு என்பதனை அவன் ஏற்றுக் கொள்வதில்லை; ஆனால், அநேகமான மறுபிறப்புப்பெற்ற விசுவாசிகள் அவர் யார் என்பதனை அறிந்து, அவரைச் சேவிக்கிறார்கள். வெறுமனே பொருட்களுக்காகமட்டுமல்ல என்பதனை **எபிரெயர் 11:7-40** உறுதிப்படுத்துகிறது.

இப்படியிருக்க, சபைகளின் நடைமுறையில் கொள்ளைநோய் போல் பரவியிருக்கும் ஐசுவரியத்தின் சுவிசேஷம், பணத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது; இந்த ஐசுவரியத்தின் சுவிசேஷத்தை உபதேசிப்பவர்கள், அப்படியல்ல என்று தர்க்கித்தாலும், சந்தேகத்திற்கிடமின்றி அவர்களின் முழு இலக்கும் பணத்துக்கே

என்பதனை நாம் அறிந்தேயாகவேண்டும்!! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனுஷகுலத்தை அந்தப் பாவத்திலிருந்தும் கட்டுக்களிலிருந்தும் விடுதலையாக்கியதை இவர்கள் வெறுமனே பொருள்களுக்கும் பணத்துக்கும் சமன்படுத்தியுள்ளனர். இவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்கள்; இவர்களுடைய தேவன் வயிறு, இவர்களுடைய மகிமை இவர்களுடைய இலச்சையே எனப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர்மூலம் எச்சரித்திருக்கிறார் (**பிலி.** 3:18-19).

பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவனில்லை எனக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எச்சரித்திருக்கிறார் (**லூக்.** 12:15). ஆண்டவர் தன் பிள்ளைகளை நிச்சயமாக ஆசீவதிப்பது உண்டு; ஆனால், அந்த ஆசீர்வாதம் மட்டுமே சுவிசேஷமாக இருக்கக்கூடாது; அப்படி இருந்தது மில்லை; ஐசுவரியத்தின் செய்தியைப் பிரதான செய்தியாக ஏறெடுப்பவர்கள் தங்களைமட்டுமல்ல, தங்களை அண்டியிருப்பவர்களையும் சேர்த்து நேரடியாகச் சாத்தானுடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள்; இவர்கள் ஜனங்களை இரட்சிப்புக்கு வழி நடத்துவதில்லை; அவர்கள் வேறொரு சுவிசேஷத்தை உபதேசிக்கிறபடியினால் வேறொரு இயேசுவைப் பிரகடனப்படுத்துகிறார்கள்; அது வேறொரு இயேசுவானபடியினால் அந்த வேறொரு இயேசுவைப் பின்தொடர்பவர்கள் வேறொரு ஆவியை உடையவர்களாயிருக்கிறார்கள் (**IIகொரி.** 11:4); இந்த ஆவிக்கும் பரிசுத்த ஆவிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதனைக் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக அறிவார்களாக. உண்மையான ஐசுவரியம் கிறிஸ்துவின் சிலுவையின் செய்தியிலேயே உண்டு (**மத்.** 6:33).

ஜான்

15

கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன்மேல்மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார்; அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டுப்போனான் (யோபு 1:12).

"அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது"

யோபுவைச் சோதிப்பதற்குச் சாத்தானுக்குக் கர்த்தராகிய ஆண்டவர் அனுமதியைக் கொடுத்திருக்கிறார்; ஆனால், அதற்கு ஒரு வரையறையையும் நியமித்திருக்கிறார்; அந்த வரைய றைக்கு அப்பால் சாத்தான் போகமுடியாது; இது சகல விசுவாசி களுக்கும் பொருந்தும். யோபு இரட்சிக்கப்பட்ட ஒரு மனுஷன்; தேவனுடைய புத்திரர்களில் ஒருவனை இத்தகைய சோதனைக் குத் தெரிவுசெய்வது அவசியமானது.

இங்கு முக்கியமாகக் குறிவைக்கப்பட்டிருக்கும் விஷயம் அவிசுவாசியின் இரட்சிப்பைப்பற்றி அல்ல, ஒரு பரிசுத்தவானின் பக்தி விருத்தியைப்பற்றியும்; சுருக்கமாகப் பரிசுத்தத்தைப்பற்றி யுமேயாகும்; இதிலிருந்து தெளிவாகிறது என்னவென்றால், மனந் திரும்பாத பாவி தன்னுடைய மாம்சத்தின் முடிவுக்கு வரவேண் டியது தவிர்க்கமுடியாததாயிருக்கிறது. தேவனுக்குப் பயப்படு கிற மனுஷனும், உத்தமனும், சன்மார்க்கனும், பொல்லாப்புக்கு விலகுகிறவனுக்கும்கூட இப்படியான சோதனை அவசியமாக

இருக்கிறது. யோபுவின் புஸ்தகத்தில் தேவன் சாத்தானைப் பாவித்து, பெருந்துன்பங்களையும், நோய்களையும் கருவிகளாக உபயோகித்து, மனுஷனைத் தன்னுடைய பரிசுத்தத்தில் பங்கு பற்றவைக்கிறார்; இவை யாவும் கருவிகளேயாகும்.

தேவனுடைய கரமே இதனைச் செய்தது. யோபுவின் புஸ்த கத்தில் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் உண்மை என்னவென்றால், யோபுவுக்கு அனுமதிக்கப்பட்டமாதிரிப் பெருந் துன்பங்கள், துக்கங்கள், வேதனைகள், நோய்கள் அனுமதிக்கப் பட்டவுடன் அவர்கள் தங்களுடைய நேர்மையையும், நாணயத் தையும் கையில் எடுத்து, அது எப்படித் தங்களுக்கு வரமுடியும் என அங்கலாய்க்கிறார்கள். தங்களுடைய நேர்மை, நாணயம், நீதி எல்லாம் தேவனுடைய பார்வைக்கு அழுக்கான கந்தையா யிருக்கிறது **(ஏசா. 64:6)** என்பதனை அவர்களால் கிரகித்துக் கொள்ள முடியாமலிருக்கிறது.

ஜான்

16

ஒரு மரத்தைக் குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்; அதின் வேர் தரை யிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும், தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும் (யோபு 14:7-9).

"இளமரம்போலக் கிளைவிடும்"

யோபு, ஒருவனுடைய மரணத்தையும் ஜீவனையும் குறித்துப் பேசுகிறான்; ஆனாலும், இப்பொழுது அவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வசனங்கள் மிகப்பெரிய ஒரு சத்தியத்தை நமக்குத் தெளிவாக்குகிறது. அவன் அந்த நேரம் தான் பேசினதின் தாற் பரியத்தை அறிந்தானா என்று சொல்வதற்கில்லை. ஒரு மனு ஷன் மரிக்கும்பொழுது அவனுடைய ஜீவனும் முடிவுபெறுகிறது என்பது அவனுடைய ஜீவனைப் பொறுத்தளவில் உண்மைதான்; ஆனாலும், யோபு தற்போதைய ஜீவனைப்பற்றியே குறிப்பிட்டி ருக்கிறான்; யோபு தான் மறுபடியும் புதுப்பிக்கப்படுவதில் நம்பிக் கையை இழந்துபோனான். அவனுடைய தற்போதைய நிலை மையை உற்றுநோக்குகையில், அது எப்படிச் சாத்தியமாகும் என்பதனைக் கற்பனைபண்ணிப் பார்க்கவும் அவனால் முடிய வில்லை; தான் மரிக்கப்போவதை உணர்ந்துகொண்டான். இப் படித் துன்பப்படவேண்டுமாயின் மரிப்பது உத்தமமே என்பது அவனுடைய கணிப்பாகும்.

ஆனாலும், கர்த்தராகிய ஆண்டவர் அவன்மூலம் எதனை உரைக்கிறார் என்பது யோபுவுக்கு விளங்கவில்லை; அதெப்படி யென்றால், ஒரு மரத்தை வெட்டும்பொழுது பார்ப்பதற்கு அது அற்றுப்போனதாகவே தென்படும்; ஆயினும் அது **"திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்"** எனக் கூறப் பட்டிருக்கிறது. வெட்டிப்போடப்பட்ட மரம் திரும்பத் தழைப்பது போல, யோபுவும் புதுப்பிக்கப்படுவான் என்பது தெளிவாகிறது; ஆயினும், அந்த நேரத்தில் அதற்குரிய அறிகுறியை அவன் காணவில்லை. இந்தப் பந்தி, அவன் எந்தமாதிரியான விசுவாசி யாயிருந்தாலும் அவனுக்கு ஒரு பாரிய உண்மையை வெளிப்ப டுத்துகிறது.

துரதிஷ்டவசமாக, நம்முடைய வாழ்க்கையில் சிலவேளை களில் நமக்கு எதிராக ஏற்படும் விரோதமான சூழ்நிலைகளி னால், பார்வைக்கு எல்லாம் இழந்துபோனதுபோலத் தென்படும்; ஆனால், பரிசுத்த ஆவியானவர் மூலம் இந்தக் கோத்திரத்தலை வன் சொல்வது என்னவெனில், வெட்டிப்போடப்பட்ட மரம் மறு படியும் தழைக்கும் என்பதேயாகும். வார்த்தையென்ற தண்ணீர் அடிமரத்துக்கு ஊற்றப்பட்டவுடன் அந்த வாசனையினால் **"அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும்"**; கர்த்தராகிய ஆண் டவராலேயே அதனைச் செய்யமுடியும்; நம்மால் முடியாது. மனுஷன் விசுவாசியாக இருந்தாலும், மறுபிறப்பைப்பெற்று இருந்தாலும் அவன் தானாக அந்த மாற்றத்தைத் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தமுடியாது; அந்த உண்மையைப் புரிந்து கொள்வது மனுஷனுக்கு அவ்வளவு இலகுவானதல்ல; ஆயினும், அதுவே உண்மையாயிருக்கிறது. மாற்றம் பரிசுத்த ஆவியான வராலேயே கொண்டுவரப்படுகிறது. அதனைச் செய்வதற்கு அவர் தயாராயிருக்கிறார்; நாம் அதனைப் பெறுவதற்குத் தயாரா? என்பதனைச் சிந்திப்போமாக.

ஜான்

17

***அ**ப்பொழுது கர்த்தர்: பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக: அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்? இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக் கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு. நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி (யோபு 38:1-4).*

"பரிணாமத்தின் கேலிக்கூத்து"

ஒருவித எச்சரிக்கையும் இல்லாமல் சடுதியாகக் கர்த்தர் தோன்றினார். வளிமண்டலத்தில் ஏதோ ஒருவித குழப்பத்தை அவர் ஏற்படுத்தியிருந்தார். அவருடைய பிரசன்னம் ஒரு பிரளயம் போலவும், எதிர்பாராத அதிர்ச்சியைத் தருவதாயும், முற்றிலும் திணறடிப்பதாகவும் இருந்தது. **"அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்?"** என்று யோபுவினுடைய சிநேகிதர்களையும் எலிகூவையும் குறிப்பிட்டாரேதவிர யோபுவைக் குறிப்பிடவில்லை; யோபுவைப்பற்றி **யோபு** 42:7ல் **"....என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை"** எனக் குறிப்பிடப்பட்டதிலிருந்து இந்த வசனத்தில் யோபுவைப்

பற்றிக் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது; இப்பொழுது **யோபு 38:3**ல் யோபுவைப்பற்றிக் கர்த்தர் பேசுகிறார்.

யோபு மிகவும் தாழ்மையான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தும், தான் பேசும்பொழுது **"இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு"** என அதிகாரத்துடன் கோருகிறார். இந்த அதிகார பூர்வமான கோரிக்கையுடன் யோபுவின் மறுசீரமைப்பு ஆரம்பிக்கிறது; தேவன் வீழ்ந்துபோன மனுஷனைத் தூக்குகிறார். அவர் மனுஷனைக் கீழேதள்ளி விழுத்துவதில்லை; அவனுக்கு எந்தவிதமான தெரிவும் இல்லாத இடத்திலேயே விழுவதற்கு அனுமதிக்கிறார். **"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்?"** என **யோபு 38:4**ல் கேட்கிறார்; இப்படிப் பல கேள்விகளைக் கேட்டு, இவைகளைச் சிருஷ்டித்த எனக்கு உனது பிரச்னையைத் தீர்ப்பது அற்பகாரியம் என்கிறார்; தேவனே எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் (**ஆதி. 1:31**). சிருஷ்டி இருந்தால், சிருஷ்டிகர் இருந்தேயாகவேண்டும்; ஆனபடியினால்த்தான் தர்க்கவாதத்திற்குட்பட்ட பரிணாமம் ஒரு கேலிக்கூத்தேயாகும்; பரிணாமத்தை ஒரு கொள்கை என்று சொல்லமுடியாது; ஏனென்றால், அது கொள்கையாயிருந்தால், அடிப்படையான அந்தக் கோரிக்கை நிரூபிக்கப்படவேண்டும். பரிணாமத்தில் எவ்வித உண்மையுமில்லை என்பது கர்த்தருடைய கேள்வியினால் நிரூபிக்கப்படுகின்றது.

ஜான்

18

பின்னும் கர்த்தர் யோபுக்கு உத்தரமாக: சர்வ வல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக் கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார். அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத் திக்கொள்ளுகிறேன். நான் இரண்டொருதரம் பேசி னேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாம லும் இருப்பேன் என்றான் (யோபு 40:1-5).

"சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்?

மனுஷகுலத்தின் அடிப்படைப் பாவம், சர்வவல்லவரோடே வழக்காடுகிறதும், அவருக்குப் புத்தி படிப்பிக்கிறதும், தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறதுமே முக்கியமானவைகளாக இருக் கிறது. மறுபிறப்பைப் பெறும்வரையும் சத்துருவான சாத்தானின் செல்வாக்கு மனுஷனில் பலமாகச் செயற்படுவதனால், தவிர்க்க முடியாமல் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைக்கு மனுஷன் இடங் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. யோபு தன்னுடைய அறிவீ னத்திற்கும், பலவீனத்திற்கும், பாவத்துக்கும் தேவ கண்டிப்பி னால், ஒரு படிப்பினையைப் பெற்றிருக்கிறான்.

நாம் ஒவ்வொருவரும் யோபு அனுபவித்த சோதனையைப் போல அனுபவிக்காவிட்டால், அத்தகைய ஒரு படிப்பினையைப் பெறமுடியாது. ஆதாமின் புத்திரனானபடியினால் யோபு முற்று முழுவதுமாக ஒழுக்கச் சிதைவுக்கு உட்பட்டிருந்தான்; இதனி மித்தம் அவன் தன்னையே அருவருத்ததுமட்டுமல்ல, தான் நீதி யானதும், பரிசுத்தமுமான வாழ்க்கையை வாழ்வதற்குத் தன் னால் இயன்ற யாவையும் செய்தான். இந்த அவமானத்தைக் கொடுக்கும் படிப்பினையை, மூன்று சிநேகிதர்களை நேருக்குநேர் சந்தித்தும் அவனால் பெறமுடியவில்லை; ஆனால், பாவமில் லாத ஒளியின் தேவ பிரசன்னத்தை நேரடியாகச் சந்திக்கும் பொழுது யோபு இந்தப் படிப்பினையைப் பெற்றான். அந்த ஒளி அவனுடைய உண்மையான ஒழுக்கக்கேட்டையும், அவனுடைய நீதியின் அழுக்கான கந்தையையும் சுட்டிக்காட்டியது; யோபு இப் பொழுது தன்னுடைய விதண்டாவாதத்தின் பிரயோஜனமின்மை யையும், புத்தியின்மையையும் உணர்ந்துள்ளான்.

ஜான்

19

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த போது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் (யோபு 42:10).

"கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினார்"

யோபு தன்னைச் சபித்து, நிந்தித்துத் துன்பப்படுத்திய தன்னுடைய மூன்று நண்பர்களையும் ஆசீர்வதிக்குமாறு தேவனிடத்தில் தன்னைத் தாழ்த்தி, பாரத்துடன் ஜெபம்பண்ணவேண்டிய தாயிருந்தது. யோபு தன்னுடைய சிறையிருப்பிலிருந்து விடுதலையடையவேண்டுமாயின் இதனைச் செய்தேயாகவேண்டும் (**லூக்.** 6:28). தேவன் இந்த நிபந்தனையை விதித்திருக்கிறார் (**யோபு** 42:8); அதுமட்டுமல்ல, மூன்று நண்பர்களும் தங்களுடைய மீறுதலை அறிக்கைபண்ணித் தாம் மரணத்திற்குப் பாத்திரர்களாக இருக்கிறோம் என்பதனைத் தேவனுக்குத் தெரிவித்து, தாம் செய்த மீறுதலுக்குத் தேவனிடத்தில் மன்னிப்புக்கோர வேண்டிய தாயிருந்தது.

அவர்கள் மூவரும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே தாங்கள் இரட்சிப்பையும் விடுதலையையும் பெறமுடியும் என்பதற்கு அடையாளமாக சர்வாங்க தகனபலிகளைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது (**யோபு** 42:8). இவர்கள் மூவரும் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்

(**யோபு** 42:9). யோபு தன் நண்பர்களுக்காக வேண்டுதல் செய்த வுடன் கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி, முன்பு இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய் அவனுக்குத் தந் தருளினார் (**யோபு** 42:10).

தேவனுடைய இத்தகைய செய்கையின்மூலம் தன்னுடைய பிள்ளைகளை உயர்ந்த கிறிஸ்தவ அனுபவத்திற்கு வழிநடத்து கிறார். யோபு என்ற இந்தச் சிறிய புஸ்தகத்தில் எப்படிப் பாவி யான ஒரு மனுஷன் நீதிமானாக்கப்படுகிறான் என்பதனைப் பற்றியதல்ல, ஒரு பரிசுத்தவானைத் தேவன் எப்படிப் பரிசுத்தப் படுத்துகிறார் என்பதனைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கிறது. இதனைச் செய்வதற்குத் தேவனால் நற்சாட்சியிடப்பட்ட (**யோபு** 1:8) ஒரு பரிசுத்தவானையே தேவன் தெரிந்துகொண்டது பல ருக்கு ஆச்சரியமாயிருக்கலாம்; ஆம், இதன்மூலம் அறிந்திருக்க வேண்டியது என்னவென்றால், பாவமில்லாத பரிபூரணத்துவம் இந்தப் பூவுலகத்தில் விசுவாசிகளுக்கு இல்லை. எக்காளச் சத்தம் ஊதும்வரையும் பரிசுத்தவானும் பாவஞ்செய்யக்கூடிய சாத்தியக்கூறு நிச்சயமாக உண்டு. ஆனபடியினால்த்தான், பரவ லாக உபதேசிக்கப்படுகிற **"நிபந்தனையற்ற நித்திய பாதுகாப்பு"** என்ற உபதேசம் ஒரு ஆபத்தான உபதேசம் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; இந்த உபதேசத்தை நம்பிய அநேகர் தற் பொழுது பாதாளத்தில் (நரகத்தில்) இருக்கிறார்கள்.

ஜான்

20

நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக் கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடி சூட்டினீர் (சங். 8:5).

"தேவனுக்கு அடுத்ததாக மனிதன்"

தேவனுடைய கிரியைகள் எல்லாவற்றின்மேலும் சாத்தா னுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனைச் சில சான்றுகள் தெளிவாக்கியிருக்கிறது. சாத்தான் தேவனுக்கு முன் பாக நீதியாகவும், பரிசுத்தமாகவும் வாழ்ந்த காலத்தில், அவ னுக்கு அந்த அதிகாரங்கொடுக்கப்பட்டது. அவன் தேவனுக்கெதி ராகக் கலகம் செய்தபொழுது, அந்த அதிகாரம் அவனிடத்தி லிருந்து பறிக்கப்பட்டது; இப்பொழுது அவருடைய மிக உயர்ந்த சிருஷ்டியாகிய மனுஷனுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது.

ஆதாமும் ஏவாளும் உருவாக்கப்பட்டபொழுது, தேவதூதர் களையும் சாத்தானையும்விட அதிஉயர்ந்த நிலைமையில் இருந் தார்கள் எனச் **சங்கீதம் 8:5** உறுதிப்படுத்துகிறது; ஆனால், மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட தவறின் நிமித்தம் உண்மை நிலைமை யைக் கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள். கிங்யேம்ஸ் ஆங்கில வேதாகமத்திலும், தமிழ் வேதாகமத்திலும் **தேவதூதரி லும்** என்று சொல்லப்பட்டது, எபிரெய மொழியில் **"எலோகீம்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது; **"எலோகீம்"** தேவனையே குறிப் பிடுகிறது; ஆனபடியினால், சரியான முறையில் மொழி

பெயர்க்கப்பட்டிருந்தால், **"நீர் அவனைத் தேவனிலும் சற்று சிறியவனாக்கினீர்....."** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

அதற்குப் பின்பு **சங்கீதம்** 8:6ல் **"உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் இப்பொழுது ஆதாமுக்கும் அவனுடைய தலைமுறைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சினங்கொண்ட சாத்தான் தேவனுடைய தலைசிறந்த சிருஷ்டியை நிர்மூலமாக்குவதில் திடசங்கற்பம் கொண்டிருக்கிறான். இதனிமித்தமே, ஏதேன் தோட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது (**ஆதி. அதி**:3). ஆயினும், இப்படி நடக்கும் என்பதனைத் தேவன் முன்கூட்டியே அறிந்திருந்த படியினால் மனுஷகுல மீட்பை முன்கூட்டியே கிறிஸ்துவின் சிலுவைமூலம் திட்டமிட்டிருந்தார் (**ஆதி. 3:15; Iபேது. 1:18-20**); தற்பொழுது அதனை நிறைவேற்றியுமிருக்கிறார் (**யோவா. 19:30**).

அல்லேலூயா! தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஆமென்!

ஜான்

21

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது (சங். 23:5).

"நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினீர்"

தாவீது தேவனை நோக்கி: **என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை** (மேசையை) **ஆயத்தப்படுத்தி**, என்று எழுதியிருக்கிறதைப் பார்க்கும்பொழுது, தாவீதின் ஒப்புவமை ஒரு போஜனமேசை நிரம்ப இறைச்சியும், மரக்கறியும், பழங்களும், பழரசங்களும் இருப்பதைப் படம்பிடித்துக்காட்டுகிறது. இதனை என்னுடைய சத்துருக்களுக்கு முன்பாகத் தேவன் எனக்கு ஒரு பந்தியைத் தயார்படுத்தினார் என்றும் சொல்லலாம்; தாவீது தேவன் தனக்கு அளவுக்கதிகமான ஆகாரப் பொருட்களைத் தந்திருக்கிறார் என்றும், தன்னுடைய சத்துருக்களினால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் குறிப்பிட்டிருக்கிறான்.

விசுவாசியே, கிறிஸ்து, சிலுவையில் உனக்காகத் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்ததன் நிமித்தம், தேவன் உனக்கு முன்பாகத் தேவகிருபையையும், வெற்றியின்மேல் வெற்றியையும், நீதியையும், அன்பையும், மேசையில் விரித்து வைத்திருக்கிறார்; அதெப்படியெனில், கல்வாரி சிலுவையில் கிறிஸ்து நிறைவேற்றிய நன்மைகள் யாவும் உனக்கு விருந்தாகப் படைக்கப்பட்டிருக்கிறது; தேவன் உனக்குத் தயார்படுத்திய மேசையில்

துண்டு துணிக்கைகளை வைத்திருக்கவில்லை; உனக்குத் தேவையான எல்லாவற்றையும் அளவுக்கதிகமாக வைத்திருக் கிறார். தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு எல்லாவற்றையும் செய்திருக்க, வறுமையில் நாம் வாழவேண்டியதில்லை; கிறிஸ்து மூலமாக யேகோவாவோடு உடன்படிக்கை செய்திருக்கிறாய்; அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவார்; ஆனபடியினால், உன்னைப் பார்க்காதபடிக்கும், உன் சத்துருக்களைப் பார்க்காதபடிக் கும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையே உற்று நோக்கிப் பார் (**Iகொரி.** 2:2); அவர் மேசையில் விரித்து வைத்திருக்கும் பரிபூரண வாழ்க்கையைப் பார் (**யோவா.** 10:10; **IIIயோவா.** 2).

ஜான்

22

***அ**நேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன்; எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது; என் பிராணனை வாங்கத்தேடுகிறார்கள் (சங். 31:13).*

"அவதூறு"

சாத்தானே அவதூறு செய்கிறவன்; "..... **இரவும் பகலும் நம் முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிற வன்** ...." சாத்தானே (**வெளி.** 12:10). நாம் வீண்பழியை மற்றவர் களின்மேல் சுமத்துவோமானால், சாத்தானுடைய உதட்டை நாம் பாவிக்கிறோம்; உதட்டைக் கர்த்தருடைய கரத்தில் ஒப்படைப் போமாக; செய்தியையே ஒவ்வொரு கிறிஸ்தவனும் நியாயந் தீர்க்கவேண்டும்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து வைத் தவிர்ந்த வேறெதுவும் அவதூறே. சுவிசேஷத்தைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்; அதனை எப்படிப் பேணிப் பாது காக்கவேண்டுமென்ற விபரம் **Iதெசலோனிக்கேயர்** 2:1-12ல் தெளி வாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாத்தான் யூதேயாவின் கிறிஸ்த வர்களை வல்லமையாகப் பாவித்து, பவுல் அப்போஸ்தலரின் கிருபையின் செய்தியை அவதூறு செய்தான்; உண்மையான கிறிஸ்தவன், தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின்போது அவ தூறு செய்யப்படுவான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பரந் தளவில் அவதூறு செய்யப்பட்டார்; அந்த முயற்சி சரிப்படா

விட்டால், அடுத்ததாக, ஒருவனுடைய குணத்தைச் சாத்தான் கொலைசெய்வான்; இப்பொழுது கிறிஸ்தவர்கள் தாராளமாக இத னைச் செய்கிறார்களே! அவதூறு நரகத்தின் குழியிலிருந்தே வரு கிறது; தூற்றிக்கொண்டு திரிகிறவனோடு கலவாதே என்று நீதி மொழிகள் சொல்கிறது (**நீதி. 20:19-20**).

ஜான்

23

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங். 51:5).

"பாவசுபாவத்துடனேயே மனுஷன் பிறக்கிறான்"

ஜென்மசுபாவமாகிய பாவசுபாவத்துடனேயே மனுஷன் பிறக்கிறான் என்ற வேதவார்த்தை அவிசுவாசிகளுக்குமட்டுமல்ல, விசுவாசிகளுக்கும் இடறலை ஏற்படுத்துகிறது; ஆனால், சந்தேகத்துக்கிடமின்றி **சங்கீதம்** 51:5 அதனை நிரூபிக்கிறது. பாவசுபாவத்துடனேயே மனுஷன் பிறக்கிறான் என்பதனை அவன் ஏற்றுக்கொண்டால், அவனுக்கு இரட்சகர் தவிர்க்கமுடியாத தேவையாக இருக்கிறது. மறுபிறப்பு அவசியமாகவும் அவசரமாகவும் தேவை (**யோவா.** 3:3, 5; **தீத்து** 3:5) என்பதனை மனுஷன் ஏற்றேயாக வேண்டும். மனுஷனுடைய மாம்சம், அவனுடைய சுயநீதி இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது; இது அவனுக்குப் பெரும் இடறலை ஏற்படுத்துகிறபடியினால், இத்தகைய உபதேசத்தை ஏறெடுப்பவர்கள் மீது அவன் தாக்குதலை மேற்கொள்கிறான். இந்தத் தாக்குதலுக்குப் பவுல் அப்போஸ்தலரும் விதிவிலக்கில்லை (**கலா.** 5:11); ஆபேலும் இதற்கு விதிவிலக்கில்லை என்பதனை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

சங்கீதம் 51:5ன்படி ஏதேன் தோட்டத்தில் ஏற்பட்ட ஆதாமின் வீழ்ச்சியினிமித்தம் எல்லா மனுஷரும் அந்தப் பாவத்துடனேயே

பிறக்கிறார்கள்; ஆதாம் தவறினான், முழுமனுஷகுலமும் தவறிப் போனது (**ரோம.** 5:12); இதனுடைய அர்த்தம் எல்லா மனுஷரும் காணமற்போனார்கள் என்பது தெளிவாகிறது; இதனிமித்தம், இரண்டாம் மனுஷனும், பிந்தின ஆதாமுமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வரவேண்டியதாயிற்று. உண்மையில் தேவனே மனுஷனாக வந்து, முந்தின ஆதாம் ஏற் படுத்திய தவறைப் பிந்தின ஆதாம் மூலம் செயலிழக்கப்பண்ணி னார் (நிவிர்த்தி செய்தார்). அவர் நம்முடைய பிரதிநிதியாக வந்து, நம்மால் செய்யமுடியாமற்போனதை நம் சார்பில் பரி பூரணமாக நிறைவேற்றி, நாம் ஒருவரும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றாதபடியினால் நமக்கு ஏற்பட்ட மரணம் என்ற சாபத் திலிருந்து நமக்கு விடுதலை கொடுப்பதற்காகக் கல்வாரி சிலு வையில் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து அதனை நிறை வேற்றினார் (**யோவா.** 3:16).

இப்படியிருக்க, ஜென்மசுபாவத்தினுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்புவதாயிருந்தால், மனுஷன் மறுபிறப்பைப் பெற்றேயாகவேண் டும் (**யோவா.** 3:3, 5). மறுபிறப்பைப் பெறுவதற்குப் பாவியான மனுஷன் கிறிஸ்துவிலும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதி லும் விசுவாசத்தை வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத் திருக்கவேண்டும் (**யோவா.** 3:3; **எபேசி.** 2:8-9; **கொலோ.** 2:6-7) என் பதே தேவனுடைய நிபந்தனையாகும்.

ஜூன்
24

***தே**வன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக் கொண்டாரோ? என்றேன் (சங். 77:9).*

"தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ?"

ஆசாப்பின் ஆவி ஆராய்ச்சியில் இறங்கியது; நித்திரை இல்லாமல் முற்றுமுழுவதுமாகத் தன்னைப்பற்றியும் தான் செய்த பாவத்தைப்பற்றியும் நினைத்து வேதனையடைந்து, தேவன் தனக்கு விடுதலை தரமாட்டாரோ என்று நினைத்துப் புலம்புகிறான்; அவ்வாறே இஸ்ரவேலிய புத்திரர்களும் வரப்போகிற உபவத்திரவகாலத்தில் மேற்கூறியவாறு தம்முடைய பாவத்தை நினைத்துப் புலம்புவார்கள். இஸ்ரவேலியர்கள்மட்டுமல்ல, கிறிஸ்தவர்களாகிய நாமும் இவ்வாறு வேதனைப்படுவதுண்டு. நம்முடைய பிரச்னைகளை நாம் ஜெபத்தின்மூலம் கூறியிருந்தும், தேவனிடத்திலிருந்து சிலவேளைகளில் பதில் சீக்கிரமாய்க் கிடைப்பதில்லை; ஏதோ ஒரு நல்ல காரணத்துக்காகவே அவர் நிச்சயமாகத் தாமதம் செய்கிறார் என்பதனை நாம் அறியாமல் புலம்புவதுண்டு.

தேவனுடைய இந்தத் தாமதத்தைச் சாத்தான் தனக்குச் சாதகமாக எடுத்துத் தேவன் உன்னைத் தள்ளிவிட்டார்; அவர் உனக்கு ஒருபோதும் தயைசெய்யமாட்டார்; அவருடைய கிருபை உனக்குத் தடைப்பட்டுவிட்டது; வாக்குத்தத்தம் ஒழிந்துபோயிற்று;

அவர் இனிமேல் உனக்கு இரங்கமாட்டார்; அவர் உன்மேல் கோப மாயிருக்கிறார்; உன் பாவத்தை ஒருபொழுதும் மன்னிக்கமாட் டார் ஏனென்றால், அது மன்னிக்கமுடியாத பாவம் என அடிக்கடி சொல்வதுண்டு. தேவன் தம்முடைய இரக்கங்களை உனக்கு அடைத்துக்கொண்டார்; உனக்கு ஏற்பட்டிருக்கும் பண நெருக்கடி யிலிருந்து தப்புவதற்கு என்ன வழி உன்னிடம் இருக்கிறது. உன் பிள்ளைகளுக்காகவும் உன்னுடைய இனத்தாருடைய இரட்சிப்புக் காகவும் ஜெபம்பண்ணுகிறாயே அது ஒன்றும் நடைபெறப்போவ தில்லை. உனக்கு ஏற்பட்டிருக்கும் நோயை உன் வைத்தியர்கள் கண்டுபிடித்து உன்னைக் குணமாக்கமுடியாமல் இருக்கிறபடி யினால், நீ சீக்கிரத்தில் மரித்துப்போவாய் எனவும் சாத்தான் சொல்வதுண்டு.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை மற்றவர்கள் பெற்றுக் கொள்வார்கள்; ஆனால், நீ அதைப் பெற்றுக்கொள்ளமாட்டாய் எனப் பல்வேறுவிதமாகத் தேவையேற்படின் வேதவாக்கியங் களையும் தனக்கேற்றமாதிரிப் புரட்டி, நம்முடைய மகா பரிசுத்த விசுவாசத்தைத் திசைதிருப்ப அல்லது பெலவீனப்படுத்த சாத் தான் முயற்சிப்பதுண்டு; இந்த முயற்சியில் அவன் வெற்றி பெற் றால், அவன் நம்மைத் தன்னுடைய பொறிக்குள் வீழ்த்தியுள் ளான்; இந்தப் பொறிக்குள் விழுந்தோர் அநேகர். முழு உலகத் தார்மட்டுமல்ல, எண்ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவர்களும் இதற்குள் அடங்குகின்றனர். இப்படியாகச் சாத்தானின் தந்திரத் திற்குள் ஆசாப்பும் சிக்குண்டிருப்பதை நாம் காண்கின்றோம். சாத்தானால் மேற்கூறிய எல்லாவற்றையும் செய்யமுடியுமா னால் அவன் இவ்வளவு காலமும் நம்மைத் தப்பவிட்டிருப் பானோ என்பதனை நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். அவன் முன்பு பலமுறை இவ்வாறாகக் கூறியிருந்தும் எதுவும் நடந்த தாக இல்லையே. ஆனபடியினால் தேவனுடைய அனுமதியில் லாமல் அவன் கூறிய எதுவும் அவனால் செய்யமுடியாது என்ப தனை அறிந்து (**புலம்.** 3:37), அவன் பொய்யன் என்பதனை

உணர்ந்து (**யோவா.** 8:44), அவனுடைய கூக்குரலுக்குச் செவி கொடுக்காமல் கிறிஸ்து சிலுவையில் நமக்காக நிறைவேற்றிய நீதியை நோக்கிப் பார்ப்போமாக.

ஆசாப்பின் பாவச்செயல் என்ன என்பது நமக்குத் தெரிய வில்லை; ஆயினும், பாவம் எதுவாயிருப்பினும் தான் தேவ னைக் கோபப்படுத்திப்போட்டேனோ, ஆகையால், அவருடைய இரக்கம் தனக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என அவன் வேதனையடைகிறான். இவ்வாறான அர்த்தமற்ற வேதத்துக்குப் புறம்பான சிந்தனைகள் நாம் சுயத்தை மையமாக வைத்துச் செயற்படும்பொழுது நமக்கு ஏற்படுகிறது. உண்மை நிலைமை என்னவெனில், சகலவிதமான சந்தேகங்களும் பிசாசினால் ஏற் படுத்தப்பட்ட பொய்யே; அவன் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் (**யோவா.** 8:44). அவன் பொய்யினாலே ஒரு ராஜ்யத்தைக் கட்டி யெழுப்பியிருக்கிறான்; நாம் இந்தப் பொய்க்கு செவிகொடுத்தால், நம்முடைய விசுவாசத்தைப் பெலவீனப்படுத்தி, தேவனுக்கெதி ராகப் பாவஞ்செய்து, அதன் பிரதிபலனைச் சந்திக்கவேண்டி வரும்.

தேவனுடைய இரக்கம் ஒருபொழுதும் குறைந்ததில்லை; அவருடைய கிருபை சதாகாலமும் நமக்குண்டு. காலைதோறும் அவருடைய கிருபை நமக்குப் புதிதாயிருக்கிறது; அவருடைய இரக்கம் என்றென்றைக்கும் நமக்குண்டு. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை; ஆனால், அவருடைய தயவைத் தங்கு தடையின்றி நாம் பெறுவதற்கு அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் செய்துமுடித்ததையும் விசுவாசித்து (**Iகொரி.** 2:2), அந்த விசுவா சத்திலே நிலைத்திருக்கவேண்டுமென்பதேயாகும். இதுவே தேவ னுடைய வழி; இதுவே நமக்குத் தேவனுடைய ஏற்பாடாகும்.

ஜான்

25

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும் (சங். 84:6).

"அழுகையின் பள்ளத்தாக்கு"

"**அழுகையின் பள்ளத்தாக்கு**" என்பதன் ஆவிக்குரிய பொருள் என்ன என்பதனைச் சற்று விபரமாகப் பரிசீலனை செய்வது பொருத்தமானதே. எருசலேமின் வாசலுக்கு வெளியே இந்த "**அழுகையின் பள்ளத்தாக்கு**" இருந்தது. இந்தப் பள்ளத்தாக்கில் எருசலேம் வாசிகள் தங்களுடைய குப்பைகளையும், தமக்கு வேண்டாத யாவற்றையும் கொட்டிவிடுவார்கள். இங்கு ஒரு முக்கியமான ஆவிக்குரிய கருத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

மனிதவீழ்ச்சியின் நிமித்தம் அந்தப் பாவம் உலகத்தில் நுழைந்தது (**ரோம.** 5:12); இதனிமித்தம், உலகம் குப்பைக் கிடங்காகவும், நோய்வாய்ப்பட்டதாகவும், சீரழிந்ததாகவும், கொடுமையானதும், கெட்டழிந்ததாகவும் இருக்கிறது. தேவனுடைய சிருஷ்டியை அந்தப் பாவம் குப்பைகளைக் கொட்டும் கிடங்காக மாற்றியது; வன்முறை, பேராசை, வெறுப்பு, இனவெறி, போன்ற தீயஒழுக்கங்கள் இந்த உலகத்தைக் கொடுமையானதாகவும், வர வேற்பற்ற இடமாகவும் மாற்றியது; சுருக்கமாக, உலகம் அழுகையின் பள்ளத்தாக்காயிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய

வாழ்க்கையிலும் அவன் ஒருமுறையோ, பலமுறையோ அழுகையின் பள்ளத்தாக்கைச் சந்திக்கவேண்டியிருக்கிறது; பெரும் வேதனையும், அழுகையும் நிறைந்த இடம் அது. இந்தக் கசப்பான கண்ணீர் துக்கத்தினாலும், சூழ்நிலைகளினாலும் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையை நாம் விலைக்கு வேண்டியிருக்கலாம் அல்லது நம்முடைய தவறினால் அது ஏற்பட்டிருக்கலாம் அல்லது நடந்த சம்பவத்திற்கும் நமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமலும் இருக்கலாம். காரணங்கள் முக்கியமல்ல, எப்படியோ நாம் அழுகையின் பள்ளத்தாக்கில் இருக்கிறோம்; இங்கு கண்ணீர் குளமாய் நிற்கிறது. விசுவாசி மாம்சத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால், இந்தப் பள்ளத்தாக்குக் கண்ணீரினால் நிறைந்திருக்கும். ஆவியினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால், இந்த **"அழுகையின் பள்ளத்தாக்கு"** புதியசுபாவமாக மாறி, இடைவிடாத பலத்தையும், புத்துணர்வையும் கொடுக்கும் **"சந்தோஷமான பள்ளத்தாக்காக"** மாறும்.

ஜான்

26

நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்பு வித்தீர் (சங். 86:13).

"என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்"

தாவீதின் பாவங்களைக் கர்த்தர் மன்னித்து, அவன்மீது கிருபையாயிருந்தார்; ஆனபடியினால், அவன் மரித்து, நித்திய நரகத்திற்குள் செல்லவில்லை; இன்னும் சற்று மேலாகப் பரிசீலனை செய்வோமாயின் இதே விண்ணப்பத்தைத் தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குத் தேவனுடைய குமாரன் மேற்கொண்டார். ஆயிரம் வருஷகாலத்திற்கு முன்பு மேற்கொண்ட விண்ணப்பம் கல்வாரி சிலுவையில் நிகழ்ந்தது. மூன்று பகலும் மூன்று இரவும் கிறிஸ்து பூமியின் இருதயத்தில் இருந்தார்; அங்கு சிறையிலிருந்த ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது; அந்த ஆவிகள் வீழ்ந்துபோன தேவதூதர்களாகும். அவர் பரதீசிலிருந்த ஒவ்வொரு நீதியான ஆத்துமாக்களையும் விடுதலைசெய்தார் (**எபேசி. 4:8-10; Iபேது. 3:19**).

பாதாளம் எல்லாம் நரகம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது; பரதீசும் அதற்குள் அடங்குகிறது. இயேசுகிறிஸ்து நரகத்தில் எரியும் பகுதிக்குச் சென்றார் என்பதற்கு எந்தவிதமான சான்றுகளும் வேதவார்த்தையில் இல்லை; சில போதகர்கள் தங்களுடைய

உபதேசங்களில் கிறிஸ்து நரகத்தின் எரியும் பகுதிக்குச் சென்றார் என்றும், அங்கு வேதவார்த்தையைப் பாவித்து, மறுபிறப்பைப் பெற்று உயிர்த்தெழுந்தார் என்றும் உபதேசிக்கிறார்கள்; இதற்கு எந்தவிதமான ஆதாரமும் வேதத்தில் இல்லை; இத்தகைய உப தேசமே "**இயேசு ஆவியில் மரித்தார்**" என்று சொல்லப்படுகிறது.

சர்வசாதாரணமாக, ஈஸ்டர் காலத்தில் "**விசுவாசவார்த்தை**" என்ற மார்க்கத்தினர் இந்த உபதேசத்தை ஏறெடுக்கிறார்கள்; இந்த உபதேசம் கிறிஸ்தவர்களை நரகத்துக்குள் அனுப்புகிற உபதேச மாகும்.

ஜான்

27

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடு வார் (சங். 91:11).

"சாத்தானின் வேதப்புரட்டல்"

இந்த வேதவார்த்தையைப் பரிசீலனை செய்வதன்மூலம் சாத் தான் எவ்வளவாய் வேதத்தை அறிந்து வைத்திருக்கிறான் என்ப தனை அறியக்கூடியதாயிருக்கிறது. அவன் தொடர்ந்து ஒரு நோக்கத்திற்காக வேதத்தைப் படித்தவண்ணமாயிருக்கிறான். கிறிஸ்தவர்களை ஏமாற்றுவதற்கு எப்படி வேதத்தைப் புரட்ட லாம் என்பதிலேயே அவன் முழுக்கவனத்தையும் செலுத்து கிறான்; இதனிமித்தமே, கிறிஸ்தவ புஸ்தகசாலைகளில் பல் வேறுவிதமான வேதப்புரட்டல்கள் நிறைந்த வேதாகமங்கள் விற் பனைக்குண்டு. இந்தப் பொறிக்குள் இரையான கிறிஸ்தவர்கள் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கிறார்கள். புரட்டப் பட்ட வேதத்தினால் மனுஷன் பிழைக்கமாட்டான் என்பது சாத் தானுக்கு நன்கு தெரியும் (**உபா. 8:3; மத். 4:4**); ஆனால், அவன் இன்னும் தன்னால் வேதவார்த்தையைப் புரட்டமுடியும் என்று நம்புகிறான்; தனக்குத் தேவனுடைய வார்த்தை பலிக்கப்போவ தில்லை என்றும் நம்புகிறான்; தேவன் அவனுக்குக் கொடிய வஞ் சகத்தை அனுப்பினதன்மூலம் அவன் தான் ஏமாற்றப்படுகிறேன் என்பதனை அறியாமலிருக்கிறான் (**IIதெச. 2:11-12**).

தேவதூதர்கள் கிறிஸ்துவுக்குத் தொடர்ச்சியாக உதவிசெய்தார் கள் **(மத். 4:11; லூக். 4:10-11)**; ஆயினும், கிறிஸ்துவை சோதனைக் குட்படுத்தும்போது சாத்தான் வேதவாக்கியத்தைக் களங்கப்படுத் தினான். **"உன் வழிகளெல்லாம்"** என்ற சொல்லைத் தவிர்த்து அந்த இடத்தில் **"எந்த நேரத்திலாவது"** என்ற வார்த்தையைச் சேர்த்து (தமிழ் வேதாகமத்தில் அதுவுமில்லை) வேதவார்த் தையை **(சங். 91:11-12)** அர்த்தம் இல்லாமல் பண்ணினான். மேசியா வனாந்தரப் பாதையில் போகும்பொழுது முற்றிலும் தேவனிலேயே தங்கியிருந்தார். சாத்தான் கிறிஸ்து தேவனில் தங்கியிருப்பதைத் தவிர்த்து, அவரைச் சுதந்தரமாகச் செயற்படு வதற்கு நகர்த்தினான். அந்த முயற்சியில் அவன் படுதோல்வி யடைந்தான். பரிபூரண பணிவடக்கமும், கீழ்ப்படிவும் **(பிலி. 2:8)**, ஆதரவை நோக்கிய நிலையும் அவர் நடக்கும் பாதையில், அவ ருடைய குறிக்கோளாக இருந்தது. அப்படியே அவரைப் பின் தொடர்ந்து நடப்பவர்கள் யாவரும் அவரை மாதிரியே தேவனு டைய ஆதரவை நோக்கிய நிலையோடும், விசுவாசத்தோடும் நடக்கும்பொழுது வெற்றி அவர்களுக்கு உறுதியளிக்கப்படுகிறது.

ஜூன்
28

***சி**ங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித் துப்போடுவாய் (சங். 91:13).*

"சாத்தானின் அழிவு"

இந்த வேதவாக்கியம் சாத்தானின் அழிவை முன்வைக்கிறது; ஆனால், அவனோ இதனை நம்புவதில்லை. அவன் சுயஏமாற் றில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான்; ஆனபடியினால், வஞ்சகம் அவனுடைய மிகப்பெரிய ஆயுதம். அவன் தானும் வஞ்சிக்கப் பட்டு, மற்றவர்களையும் வஞ்சிக்கிறான்; இதன்மூலம் முழு உலகத்தையும் தவறான வழியில் நடத்துகிறான். உலகத்தில் எவனும் அவனுடைய வஞ்சகத்திற்குத் தப்பமுடியாது.

வஞ்சகம் என்பது ஒருவனைப் பொய்யை நம்பவைக்கும் ஒரு தந்திரமாகும். இது பார்ப்பதற்கும் கேட்பதற்கும் இலகுவானது; ஆனால், இதனால் ஏற்படும் தாக்கத்தினால், தாங்கமுடியாத வேதனையை அனுபவிப்பதைத் தவிர்க்கமுடியாது. இந்த மோச மான கேடான உருவம் மீட்கப்படாத மனுஷருக்கு நரகம் என்று ஒன்றும் இல்லை எனச் சொல்லி, அவர்களை ஏமாற்றி வஞ்சிக் கிறது. அவர்களில் சிலர் நரகம் உண்டு என்பதனை அறிந்தால், அந்தப் பயங்கரத்திலிருந்து தப்புவதற்கு நற்கிரியைகளைச் செய் வதன்மூலம் தப்பித்துக்கொள்ளலாம் என வஞ்சிக்கிறது. எண் ணிக்கைக்கு அப்பாற்பட்டோர் இந்த வஞ்சனையில் அகப்பட்டு

இருக்கிறார்கள்; ஏராளமானோர் தம்முடைய ஆத்துமாவையே இழந்துபோனார்கள்.

மீட்கப்பட்டோரின் மிகப்பெரிய வஞ்சனை என்னவென்றால், கிறிஸ்துவின் சிலுவை இல்லாமல் வேறுவழிகளினால் ஜெயங் கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை சாத்தியப்படும் என்பதனை நம்ப வைப்பதில் மிகப்பெரும் வெற்றியை ஈட்டியுள்ளான். சிலுவை இல்லாமல் எந்த வழியைக் கிறிஸ்தவர்கள் பாவித்தாலும், அந்த வழி ஆவிக்குரிய வறுமைக்கும், அழிவுக்குமே இழுத்துச்செல் லும் என்பதனைச் சாத்தான் நன்கு அறிவான். ஆனபடியினால், வேறெதனையும்விட சிலுவைக்கு எதிராகப் பாரிய யுத்தத்தை அவன் நடத்துகிறான்.

மீட்கப்பட்டவர்களும் மீட்கப்படாதவர்களும் எந்தப் பொய்யை அவர்கள் விசுவாசிக்கிறார்கள் என்பதனைப்பற்றி அவன் பொருட் படுத்துவதில்லை. ஒருவன் மற்றவனைப்போல செய்வதிலேயே கவனஞ்செலுத்துகிறான்; ஆகையால், இலகுவாகப் பொய்யை விசுவாசிப்பதற்கு மனிதர்களை இழுத்துச்செல்கிறான். கிறிஸ்து வின் சிலுவையை அறியவேண்டிய பிரகாரம் அறியும்வரையும் மனுஷனுக்கு விடுதலை இல்லை (**யோவா.** 8:32).

ஜான்

29

***நா**ன் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார் (சங். 105-15).*

"நான் அபிஷேகம்பண்ணினவர்களைத் தொடாதிருங்கள்"

இந்த வேதவாக்கியம் சரீரத்திற்குத் தீங்கு விளைவிப்பதைப் பற்றிச் சொல்லப்படுகிறதேதவிர, பொய்யான உபதேசத்தைச் சுட்டிக்காட்டி அதனைத் திருத்துவதைப்பற்றியல்ல என்பதனை முதற்கண் நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். அப்போஸ்தலராயிருந்தாலென்ன, தீர்க்கதரிசிகளாயிருந்தாலென்ன ஒருவரும் வேதவாக்கியத்திற்கு மேம்பட்டவர்கள் அல்ல. பவுல் அப்போஸ்தலருக்கும் பேதுரு அப்போஸ்தலருக்குமிடையில் ஏற்பட்ட சர்ச்சையை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் (**கலா. 2:11-12**).

பவுல் அப்போஸ்தலர் பேதுரு அப்போஸ்தலரின் தவறைத் திருத்தாவிட்டால், உண்மையில் அவருக்குப் பெருந்தீங்கையே ஏற்படுத்தியிருப்பார். நாம் எல்லாரும் அறிந்திருக்கவேண்டியது என்னவென்றால், யாராயிருந்தாலென்ன, எதுவாயிருந்தாலென்ன சகலதும் வேதவார்த்தைக்குக் கீழ்ப்படிந்தேயிருக்கவேண்டும்; அதெப்படியென்றால், தேவனுடைய வார்த்தையே எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரபூர்வமான வார்த்தையாக இருக்கிறது

(**ரோம.** 4:3; **கலா.** 4:30). ஒருவனும் தன்னைத் திருத்தக்கூடாது என்ற சிந்தனை, சிலருக்குள் தாங்கள் அப்போஸ்தலராகவோ, தீர்க்கதரிசிகளாகவோ இருக்கிறோம் என்ற சிந்தனையால் ஏற்பட்டது; அப்படி வேதவார்த்தையில் சொல்லப்படவில்லை; அதற்கு எதிராகவே சொல்லப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, **Iசாமுவேல் அதி**:26ல் தாவீதைப்பற்றிச் சொல்லப்பட்ட சம்பவத்தைப் பார்ப்போம். சவுல் ராஜா ஒரு குறிக்கப்பட்ட இடத்தில் நித்திரையாயிருந்தான்; அப்பொழுது தாவீது சவுலினிடத்திற்கு வந்தான்; தாவீது இலகுவாக சவுலைக் கொன்றிருக்கலாம்; ஆயினும், அவன் அப்படிச் செய்யவில்லை. சவுல் அக்கிரமம் நிறைந்த ஒரு மனுஷனாயிருந்தும், தாவீது சவுலைக் கொல்லவில்லை; சவுலைக் கொல்லுவதற்குத் தேவையான வல்லமை தாவீதிடமிருந்தும், அவன் அப்படிச் செய்யவில்லை. இதுபற்றித் **தாவீது Iசாமுவேல்** 26:11ல் சொல்லியிருக்கிறான். தாவீது இங்கு சரீரத்திற்குத் தீங்கு விளைவிப்பதையே சொல்லுகிறான்; சற்று நேரத்திற்குப் பின்பு தாவீது சவுலை எல்லாருக்கும் முன்பாக மிகவும் கடுமையாகக் கண்டித்துப் பேசினான் (**Iசாமு.** 26:18-20).

ஒருவன் தன்னுடைய கையை உயர்த்தி, எவனுக்கும் தீங்கு விளைவிப்பது, அவன் கர்த்தருடைய அப்போஸ்தலனாயிருந்தாலென்ன, தீர்க்கதரிசியாயிருந்தாலென்ன, அத்தகைய செய்கை தவறே. ஒருவனுடைய குணாதிசயத்தைக் காயப்படுத்தி, அவனுடைய ஊழியத்தைத் தடைசெய்ய முயற்சிப்பது பொருத்தமான செயல் அல்ல (**IIதீமோ.** 4:14-15); ஆனால், அந்த மனுஷன் பிரசங்கிக்கும்பொழுது அல்லது உபதேசிக்கும்பொழுது, அவற்றில் தவறு இருந்தால், அதனைத் தட்டிக்கேட்பதில் எந்தத் தவறுமில்லை (**IIதீமோ.** 2:16-18); அப்படிச் செய்யாமலிருப்பதே தவறானது. யாராவது தேவனுடைய வார்த்தையைவிடத் தான் உயர்ந்தவன் என்று கருதினால் அவன் தேவதூஷணம் சொல்லுகிறான்.

மனிதர் தங்களுடைய உபதேசத்தை எதிர்க்கிறவர்களுக்குத் தேவன் சரீரத்தில் தீங்கை ஏற்படுத்துவார் என்று உரிமைகோருவதன்மூலம், அந்த மனுஷன் தவறான வழியில் போகிறான் என்பதற்கு அதுவே நிச்சயமான அடையாளமாயிருக்கிறது. மறுபடியும் நான் சொல்வது என்னவென்றால், எந்த மனுஷனும் திருந்துவதற்கு அப்பாற்பட்டவன் அல்ல; ஆனால், அந்தத் திருத்தம் சரியான முறையில் கையாளப்படவேண்டும். வேதவாக்கியத்திற்கு மேலாகத் தன்னை ஒருவன் உயர்த்துவானாயிருந்தால், அவன் சோதிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன் (**கலா. 6:1**).

ஜூன்

30

மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான் (நீதி. 18:22).

"மனைவியைக் கண்டடைகிறவன்"

ஆரம்பத்தில் தேவன் **ஆதியாகமம்** 2:18ல் **"பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"**. இந்த வார்த்தை எப்பொழுதும் பொருத்தமாயிருக்கிறது. ஒவ்வொரு மனுஷனும் ஊக்கமாகத் தேவனிடத்தில், தனக்குப் பொருத்தமான ஒரு மனைவியைத் தரவேண்டும் என்று ஜெபம்பண்ண வேண்டும் (**நீதி.** 18:22); அப்படியே ஒவ்வொரு ஸ்திரீயும் தனக்குப் பொருத்தமான புருஷனைத் தருமாறு ஜெபம்பண்ண வேண்டும். தேவன் ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒவ்வொரு மனைவியையும், ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒவ்வொரு புருஷனையும் வைத்தே இருக்கிறார்.

இந்த விஷயத்தில் ஒருவன் தேவனுடைய சித்தத்தைக் கண்டவுடன் அவன் கர்த்தரால் தயவையும் பெற்றுக்கொள்ளுகிறான். அதுமட்டுமல்ல, வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; **"புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு"** எனப் பரிசுத்த ஆவியானவர் **நீதிமொழிகள்** 19:14ல் சாலொமோன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார். ஒருவன் தேவசித்தத்தைக்

கண்டடையாவிட்டால், சீரழிந்த கிறிஸ்தவ வாழ்க்கையே அதன் பிரதிபலனாகும்; தற்பொழுது கிறிஸ்தவர்கள் மத்தியில் 65%க்கு மேலாக விவாகரத்து இருக்கிறதே!

இப்படியிருக்க, பிரமச்சாரியம் மனிதனுக்கு தேவையற்றது. திருமணம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது (**எபி.** 13:4). கத்தோலிக்க சபைகள் தங்களுடைய ஆசாரியர்களுக்குக் கட்டளையிட்டிருக்கும் பிரமச்சாரியம் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமானது; இதனிமித்தம், இந்த மதஸ்தாபனம் சொல்ல முடியாத கஷ்டத்தை அனுபவிக்கிறது. எந்தக் காலத்திலும் தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனுஷனால் ஏற்படுத்தப் பட்ட கட்டளைகளை அனுசரித்தால் அழிவே அதன் பிரதிபலனாகும்; வேதவார்த்தையின்படி திருமணம் செய்தவனே தேவனுடைய ஊழியத்திற்கு அழைக்கப்படுகிறான் (**1தீமோ.** 3:2).

ஜூலை

1

சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியி
ருப்பதைப்பார்க்கிலும், வீட்டின்மேல் ஒரு மூலையில்
தங்கியிருப்பதே நலம் (நீதி. 21:9).

"சண்டைக்காரி"

பரிசுத்த ஆவியானவர் இந்த வேதவாக்கியத்தைப் பல்வேறு விதமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார் (**நீதி. 19:13, 25:24, 27:15**). பரிசுத்த ஆவியானவர் ஒருமுறை சொன்னால் நாம் கவனமாயிருந்து அவர் சொல்வதைப் புரிந்துகொள்ளவேண்டும்; இரண்டு முறை சொல்வாரானால் அது மிகவும் முக்கியமானதாக நாம் கருதவேண்டும்; மூன்றுமுறை சொல்வாராயிருந்தால் அதன் முக்கியத்துவத்தை வார்த்தையினால் சொல்லமுடியாது; நான்கு முறை கூறுவாராயிருந்தால் எவன் அவருடைய வார்த்தையை உதாசீனஞ்செய்கிறானோ அவன் தன் ஆத்துமாவுக்கு அழிவைத் தேடுகிறான்.

இப்படியிருக்க, இஸ்ரவேலில் முன்பிருந்த அநேகமான வீடுகளின் கூரைப்பகுதி தட்டையாயிருப்பது வழக்கம்; தற்பொழுது இந்தியாவிலே இந்த மாதிரியான மொட்டைமாடிகள் அநேகம் உண்டு; இப்படியான வீடுகள் பல்வேறு தேசங்களிலும் உண்டு; அவ்வாறான கூரைப்பகுதியின்மேல் ஒரு அறை கட்டப்படுவது வழக்கம்; இதனையே **"வீட்டின்மேல் ஒரு மூலையில்"** எனக் கூறப்பட்டிருக்கிறது; வேதவாக்கியங்களில் **"சண்டைக்காரி",**

"மனைவியின் சண்டைகள்", "சண்டைக்காரியான ஸ்திரீ" எனக் கூறப்பட்டிருப்பதன் பொருள்கள் நமக்கு வெளிப்படையாகப் புரியக்கூடியவைகளாயிருக்கின்றன; ஆயினும், இந்தச் சொற்றொடர்கள் ஆழமான ஆவிக்குரிய கருத்தை உடையதாயிருக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர் தலையில் ஒழுகினால், அதனால் சேதம் எதுவும் ஏற்படப்போவதில்லை; ஆனால், ஒருவனுக்குத் தொடர்ச்சியாகத் தண்ணீர் தலையில் ஊற்றப்படுமாயின் அவன் பைத்தியமாகவும் போகலாம் என்பதனையே **நீதிமொழிகள்** 19:13 உறுதிப்படுத்துகிறது.

அதெப்படியெனில், பொய்யான உபதேசங்களை ஒரு விசுவாசி தொடர்ச்சியாகக் கேட்பானாயின் நரம்புத் தளர்ச்சியடைந்து முடிவில் பைத்தியமாகவும் போகலாம் என்பதனையே பரிசுத்த ஆவியானவர் வலியுறுத்தியிருக்கிறார். எத்தனையோ கிறிஸ்தவர்கள் நரம்புத்தளர்ச்சியடைந்து, மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொய்யான உபதேசங்களைத் தொடர்ச்சியாகக் கேட்டு, அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு, நரம்புத்தளர்ச்சியினால் பாதிப்படைந்திருக்கும் கிறிஸ்தவர்கள் ஏராளம்!! ஏராளம்!!! **நீதிமொழிகள்** 25:24ல் சண்டைக்காரியின் (பெரிய வீடாகிய பெரிய சபையின் கள்ளப்போதகர்களின்) பொய்யான உபதேசங்களைக் கேட்டு, விசுவாசிகள் தங்களை அழித்துக்கொள்வதிலும் பார்க்கச் சொற்பமான விசுவாசிகள் இருக்கிற சபைகளில் சேர்ந்து உண்மையான உபதேசத்தைப் பெற்றுக்கொள்வது சிறந்தது எனப் பரிசுத்த ஆவியானவர் வலியுறுத்துகிறார்.

எங்கு பொய் உண்டோ அங்கு சண்டைகள் தாராளமாக உண்டு. இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"** எனக் **கலாத்தியர்** 5:15ல் வலியுறுத்தியிருக்கிறார்; அதெப்படியெனில், விசுவாசிகள் நியாயப்பிரமாணங்கள், பாரம்பரியங்கள், மனுஷகற்பனைகள் **(மத்.** 15:6) மூலம் தேவனுக்கு

முன்பாகப் பரிசுத்தமாகவும் நீதியாகவும் நடக்கமுயற்சிசெய்தால், அங்கு தேவ அன்பில்லை, கிறிஸ்துவின் சிலுவைக்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை; ஆகையால், நியாயப்பிர மாணங்கள் சண்டைகளையும் வாக்குவாதங்களையும் நிச்சயமாக ஏற்படுத்தும். இதற்குக் காரணமாயிருப்பவர்கள் சண்டைக்காரி களாகிய பொய்யான போதகர்களே. இவர்கள் நியாயப்பிரமாணத் தின்மூலம் விசுவாசிகளைப் பரிசுத்தமாக்க முயற்சிக்கிறார்கள் (**1தீமோ.** 1:7); அதேநேரம் கிருபையை உதறித்தள்ளுகிறார்கள் (**கொலோ.** 2:8). கிருபை மூலம் நியாயப்பிரமாணங்களைச் செய்யமுடியும் என்பதனை இவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்; இதன்முடிவு ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்துக்கொள்வார் கள். கிருபையை விலக்கி, நியாயப்பிரமாணத்தைச் செய்ய முயற்சிசெய்தால் என்ன நடக்கும் என்பதனைப் பவுல் அப்போஸ் தலர் தன் சொந்த அனுபவத்தின்மூலம் **ரோமர்** 7:9-10ல் நமக்கு அறியத்தந்திருக்கிறார்.

சண்டைக்காரி மூலமாகப் பொய்யான வேறொரு உபதேசத் தைப் போதிப்பதன்மூலம் பிசாசு தன் கேடான திட்டத்தை நிறை வேற்றுகிறான். இங்கு பெரிய வீடு என்பது சண்டைக்காரியின் வீடாகிய பெரிய சபையைக் குறிப்பிடுகிறது. இந்தச் சபை பொய் யான உபதேசங்களினாலும் பொய்யான விசுவாசிகளினாலும் நிறைந்திருக்கிறது; ஆகையால், வேதத்தை நம்பாத சண்டைக் காரியின் பெரிய சபையில் விசுவாசி அமர்ந்திருப்பதைவிட, வேதவாக்கியங்களை முற்றுமுழுவதும் நம்புகிற சிறிய சபை யில் அமர்ந்திருப்பது மிகவும் உத்தமமானது எனப் பரிசுத்த ஆவி யானவர் மீண்டும் மீண்டும் ஆலோசனையாகக் கூறுகிறார்; இதற் குக் கீழ்ப்படிந்து கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட சபைக்குச் செல் வோமாக (**அப்.** 2:47).

ஜூலை

2

ராஜாவின் சமுகத்தில் மேன்மைபாராட்டாதே; பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே. உன் கண்கள் கண்ட பிரபுவின் சமுகத்தில் நீ தாழ்த்தப்படுவது நல்லதல்ல; அவன் உன்னைப் பார்த்து: மேலே வா என்று சொல்வதே உனக்கு மேன்மை (நீதி. 25:6-7).

"ராஜாவின் சமுகத்தில் மேன்மைபாராட்டாதே"

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்கார விரும்புகிறவர்களுக்கு **மாற்கு** 12:38-39ல் சொல்லியிருப்பது **நீதிமொழிகள்** 25:6-7ல் சொல்லியிருப்பதற்கு ஒத்ததாயிருக்கிறது.

நம்மைநாமே ஒருபொழுதும் உயர்த்தக்கூடாது என்பதே இதன் பொருளாகும்; அப்படிச் செய்வோமானால், முந்தியோ பிந்தியோ வேறுயாராவது நம்மைப் பின்னுக்குத் தள்ளிப்போடுவார்கள்; தேவன் நம்மை உயர்த்துவதே ஞானமான செயலாகும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன் சீஷர்கள் மத்தியில் இந்தப் பிரச்னை இருந்ததைக்கண்டு, அவர்களோடு இதுபற்றி **லூக்கா** 22:24-26ல் சொல்லியிருக்கிறார்; சுயஉயர்வு, பாவம் என்று உணர்த்தப்பட்டது. தன்னைப் பின்பற்றுகிறவர்களின் காலைக் கழுவுதல் அவ்வளவு இலகுவாகச் சாத்தியப்படும் விஷயமில்லை (**யோவா.** 13:3-12).

மத்தேயு 20:23ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்"**. கர்த்தருடைய ஊழியத்தின் போதும்கூட அநேகமானவர்கள் தங்களை முதன்மைப்படுத்துவதிலேயே முக்கியகவனம் செலுத்துகிறார்கள். தன்னுடைய தீர்மானத்திற்குத் தன்னுடைய திட்டத்திற்குத் தேவனுடைய சித்தம் என்ன என்பதனைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதேயில்லை; அத்தகைய முயற்சிகள் தாழ்த்தப்படும் என்று நீதியில் சொல்லப் பட்டிருக்கிறது. தான் தேடின பதவிக்கு அவர்கள் உயர்த்தப்படுவதில்லை; அதுமட்டுமல்ல, தான் வைத்திருக்கும் சிறு பதவியையும் இழந்துபோவார்கள்.

ஜூலை

3

உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர்கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார் (நீதி. 25:21-22).

"கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்"

பவுல் அப்போஸ்தலர் இந்த வேதவாக்கியத்தை **ரோமர்** 12:20ல் குறிப்பிட்டிருக்கிறார். அக்கினி கடினமான உலோகத்தை உருகப்பண்ணுவதுபோல, அன்பும் கடினமான இருதயத்தை உருகச்செய்யும்.

அக்கினித் தழல்கள், வெண்கலப்பலிபீடத்திலுள்ள அக்கினித் தழலைக் குறிப்பிடுகிறது. அக்கினித் தழலை வெண்கலப் பலி பீடத்திலிருந்து எடுத்து, அதனைப் பொன்தூபபீடத்தில் போட்டு, அதன்மேல் நியமிக்கப்பட்ட தூபவர்க்கங்களை எரிந்துகொண்டிருக்கும் அக்கினித் தழலில் தூவவேண்டும். பொன்தூபபீடம் இருக்கிற இடத்தில், பொன்குத்துவிளக்கும், சமூகஅப்பத்தின் பீடமும் வைக்கப்பட்டிருக்கிறது. பொன்தூபபீடம் தேவனுக்கு முன்பாக ஜெபத்தையும், தொழுதுகொள்ளுதலையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேவன் கிருபாசனத்திற்கும் கேரூபீன்கள் மத்தியிலும் வாசஞ்செய்தார்; கிருபாசனமும், பொன்தூபபீடமும் ஒரு திரையினால் பிரிக்கப்பட்டிருக்கிறது; இவை எல்லா

வற்றிற்கும் கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் (**எபேசி.** 1:22-23). அதெப்படியென்றால், நாமும் நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும், நம்மைத் துன்பப்படுத்துபவர்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும் என்று ஆண்டவர் **மத்தேயு** 5:44-45ல் **"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பரம பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்"** எனச் சொல்லியிருக்கிறார்; பொன்தூபபீடம் இதன் மாதிரியாக இருக்கிறது.

ஜூலை

4

***வே**தத்தைக் கேளாதபடி தன்செவியை விலக்கு கிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது (நீதி. 28:9).*

"வேதத்தைக் கேளாதவனுடைய ஜெபமும் அருவருப்பானது"

சத்தியத்திற்குக் கீழ்ப்படியாத இருதயத்தை உடையவனின் வெளிப்புறத் தொழுகை தேவனுக்கு அருவருப்பாயிருக்கிறது. ஏறத்தாழ அநேகமான விசுவாசிகள் இத்தகைய குணாதிசயத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் II**தெசலோனிக்கேயர்** 2:11-12ல் **"ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்"** எனக் கூறியிருக்கிறார். தேவன் அத்தகைய ஜெபத்தைக் கேட்க மறுப்பதுமட்டுமல்ல, அது அவருக்கு அருவருப்பாயுமிருக்கிறது.

தேவன் எதனையும் தன்னுடைய வார்த்தையின் அடிப்படையிலேயே அணுகுகிறார். அவருடைய வார்த்தையை உதாசீனஞ் செய்வோமாயின், அவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்பதுமில்லை, அத்தகைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பதுமில்லை; இதனிமித்தம் கோடிக்கணக்கானோரின் ஜெபங்கள் கூரைக்கு அப்பாற் செல்வதில்லை என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்;

அநேகமான கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப் படியாமல், தங்களுடைய மதநடவடிக்கையினால் தங்களுடைய கீழ்ப்படியாமையை மூடப்பார்க்கிறார்கள்; நியாயப்படுத்த முயற் சிக்கிறார்கள்; இப்படிப்பட்ட மனுஷரை நோக்கித் தேவன் பார்ப்ப தில்லை; அவர் தன் வார்த்தையையே கௌரவிக்கிறார். அந்த வார்த்தையே அந்தப் பாவத்துக்கும், நீதிக்கும், நியாயத்தீர்ப்புக்கும் அளவுகோலாயிருக்கிறது (**யோவா. 8:32**).

ஆயினும், பாவமன்னிப்பைக் கோரும் ஜெபத்தைத் தேவன் எப்பொழுதும் கேட்கிறார்; அதற்குப் பதிலையும் அளிக்கிறார் (**1யோவா. 1:9**) என்பதனை நாம் அறிந்திருப்போமாக.

ஜூலை
5

மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான் (நீதி. 29:25).

"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்"

ஒரு விசுவாசி ஒன்றில் மனுஷனுக்குப் பயப்படலாம் அல்லது தேவனுக்குப் பயப்படலாம்; இருவருக்கும் பயப்படமுடியாது. அநேகமான விசுவாசிகள் தேவனுக்குப் பயப்படுவதாகப் பாசாங்கு பண்ணி, மனுஷனுக்கே பயப்படுகிறார்கள். ஒரு விசுவாசி மனுஷனுக்குப் பயப்படுவதாயிருந்தால் அவன் அந்த மனுஷனுக்கு அடிமையாயிருக்கிறான். இதுபற்றிக் கர்த்தராகிய ஆண்டவர் **எரேமியா 2:14ல் "இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனோ? அவன் வீட்டில் பிறந்த அடிமையோ? ஏன் கொள்ளையானான்?"** எனச் சொல்லியிருப்பது அவிசுவாசத்தினாலும் மனுஷ பயத்தினாலும் உண்டான கண்ணியாகும். கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறவனுக்கே பாதுகாப்பு உத்தரவாதம் செய்யப்படுகிறது.

துரதிஷ்டவசமாக, அநேகமான விசுவாசிகள் மனோதத்துவ நிபுணரிலும், திருமண ஆலோசகரிலும், போதகர்களிலும், சபையிலும், கிறிஸ்தவ நண்பர்களிலும், போர்வையிலும் (Covering), மார்க்கங்களிலும், மனுஷ அமைப்புக்களிலும் தம்முடைய நம்பிக்கையைப் பலப்படுத்தி, தமக்கேற்பட்ட நிர்ப்பந்தத்திலிருந்து

அவைகள் விடுதலை கொடுக்கமுடியுமென நிஜமாகவே நம்பு கிறார்கள்; இது அவர்களுடைய கண்டுபிடிப்பேதவிர தேவனு டையதல்ல.

அவர்கள் **யோவான்** 8:32ல் சொல்லப்பட்டிருப்பதை ஏற்க மறுக்கிறார்கள்; அதுமட்டுமல்ல, மேற்கூறிய மனுஷரில் ஒருவ னாகுதல் அல்லது அமைப்புக்களில் எதுவும் தன்னுடைய அந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தனக்காகச் சிலு வைக்குச் செல்லவில்லை; தனக்காக இரத்தஞ்சிந்தவில்லை என் பதனை அறிந்திருக்கவேண்டும்; சிந்தினாலும் அந்தப் பலியைத் தேவன் கணக்குக்கு எடுப்பதுமில்லை. வேதவாக்கியத்திற்குப் புறம்பான எதனிலும் வெளிப்படுத்தும் நம்பிக்கை கண்ணி யிலேயே முடியும். அரிதாகச் சில மனிதர் தேவன்மேல் நம் பிக்கை வைத்திருக்கிறார்கள்; இவர்கள் இரட்சிக்கப்பட்டு, மறு பிறப்பைப் பெற்றவர்கள்; அவர்களே உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவார்கள்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு** 10:28ல் **"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவ ருக்கே பயப்படுங்கள்"** என்று சொல்லியிருக்கிற வேதவாக்கியத் தைத் தேவபயத்துடனும் நடுக்கத்துடனும் (**ஏசா.** 66:2) விசுவா சித்து, அதற்குக் கீழ்ப்படிவோமாக.

ஜூலை

6

அ*வருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய் (நீதி. 30:6).*

"தேவனுடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே"

கிறிஸ்தவ சபைகளினதும், கிறிஸ்தவர்களுடையதும் மிக முக்கியமான பாவம் தேவனுடைய வசனங்களோடு ஏதாவதைச் சேர்ப்பது அல்லது அதிலிருந்து ஏதாவதை விலக்குவதாகும். சாத்தான் இந்த வேலையில் நிபுணத்துவம் பெற்றிருக்கிறான்; சாத்தானுடைய ஊழியக்காரர் அடிக்கடி இந்த வேலையில் ஈடுபடுகிறார்கள்.

சபைகளில் அற்புதங்கள் மற்றும் ஆவிக்குரிய செயற்பாடுகள் அப்போஸ்தலரின் மரணத்தோடு முடிவடைந்தது என்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து சிலவற்றை எடுத்துப்போடுகிறார்கள்; மற்றவர்கள் அவருடைய வார்த்தையோடு சிலவற்றைச் சேர்த்துப் பாவத்தை மிகுதியாக்குகிறார்கள். "**சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்**" என **அப்போஸ்தலர் நடபடிகள்** 15:1ல் லூக்கா குறிப்பிட்டிருக்கிறான். இந்த மனிதர் தேவனுடைய வார்த்தையோடு

தங்களுடைய வார்த்தையையும் சேர்த்தார்கள்; இவர்கள் உபதேசிப்பது வேதத்தில் இல்லை.

கோடிக்கணக்கானோர் இதனையே சபைகளில் செய்கிறார்கள்; அதெப்படியென்றால், இரட்சிக்கப்படுவதற்குக் கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்; அதுமட்டுமல்ல, தண்ணீரில் ஞானஸ்நானத்தையும் சேர்த்து விசுவாசிக்கவேண்டும், கர்த்தருடைய இராப்போஜனத்தையும் விசுவாசிக்கவேண்டும், தங்களுடைய சபையில் அங்கத்தவர்களாக இருக்கவேண்டும் என இப்படி இன்னும் பல வற்றை இரட்சிப்பைப் பெறுவதற்கு நிபந்தனைகளாக முன்வைக்கின்றனர்.

ஆம் தண்ணீரில் ஞானஸ்நானம் இராப்போஜனம் ஆகியவைகள் முக்கியமானதுதான், ஆனால், இரட்சிப்பைப் பெறுவதற்கு அவைகள் அவசியமில்லை; ஒருவனுடைய இரட்சிப்புக்கு அவைகள் ஒன்றினாலும் ஒருவித பிரயோஜனமுமில்லை. அத்தகைய தவறுகளை உபதேசிப்பவர்கள், கிறிஸ்தவர்கள் விசுவாசத்தை விட்டு விலகி, கிருபையிலிருந்து வீழ்ந்துபோவதற்கு உதவிசெய்கிறார்கள் (**கலா.** 5:4, 1:6-9) எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியுள்ளார். சாலொமோன் அவர்கள் பொய்யர்கள் எனக் கூறியிருக்கிறார்; யோவான் அப்போஸ்தலர் **வெளி.** 22:18-19ல் **"இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவதுஒருவன் இவை : களோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்"** எனக் கூறியிருப்பதன்மூலம் இதன் தாற்பரியத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஜூலை

7

காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலிமரம் (ஆப்பிள் மரம்) எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்; அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன், அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது (உன்ன. 2:3).

"என் நேசர்"

பாவியான மனுஷன் இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடன் அவனுக்குப் பின்வருவன கொடுக்கப்படுகிறது.

<u>முதலாவதாக</u>: **"நான் உட்காருகிறேன்"**; இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடன், அவருடைய சரீரத்திற்குள்ளும், அவருடைய மரணத்துக்குள்ளும், அவருடைய அடக்கத்துக்குள்ளும், அவருடைய உயிர்த்தெழுதலிலும், அவரோடுகூட இணைந்திருக்கிறபடியினால் அவரில் ஆறுதலை அனுபவிக்கிறேன் (**ரோம.** 6:3-5).

<u>இரண்டாவதாக</u>: **"வாஞ்சையாய்"**, மிகுந்த சந்தோஷத்தை அடைந்திருக்கிறேன்.

<u>மூன்றாவதாக</u>: **"அவரின் நிழலில்"**, உன்னதத்தில் ஒதுக்கிடம் (பாதுகாப்பு) இருக்கிறது (**சங்.** 91:1; **கொலோ.** 3:3).

<u>நான்காவதாக</u>: **"அவரின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது"**; **"கிறிஸ்துவில்"** போதிய ஆகாரம் இருக்கிறது.

ஆனபடியினால்த்தான், பவுல் அப்போஸ்தலர் **IIகொரிந்தியர்** 5:17ல் **"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின"** எனக் கூறியிருக்கிறார்.

ஜூலை

8

உன் பற்கள், மயிர் கத்தரிக்கப்பட்டபின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிறவைகளும், ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக்குட்டியீன்றவைகளுமான ஆட்டுமந்தையைப்போலிருக்கிறது (உன்ன. 4:2).

"இஸ்ரவேல்"

இங்கு குறிப்பாக இஸ்ரவேலைப்பற்றியே சொல்லப்படுகிறது. ஆயிரம் வருஷகால ஆட்சியின் ஆரம்பத்தில், கிறிஸ்துவை அவர்தான் மேசியா என்று அடையாளம் கண்டபிறகு, இஸ்ரவேலியருடைய அக்கிரமங்களெல்லாம் கழுவப்பட்ட பின்பு (**சகரி.** 13:1) அவர்கள் எப்படியிருப்பார்கள் என்பதனைப்பற்றியே இங்கு சொல்லப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவர் **"ஆட்டு மந்தை" "உன் பற்கள்"** என்ற இந்தச் சொற்றொடர்களை சாலொமோன் மூலம் சொல்லியிருப்பது மிகுந்த கவனத்தை ஈர்க்கிறது. ஆடுகளுக்குக் கீழ்த்தாடையைத் தவிர வேறிடத்தில் பற்கள் இல்லை; ஆனபடியினாலே ஆடுகள் மாம்சத்தைக் கிழிக்கமுடியாது. பற்களும், அதேமாதிரியானவைகளை மட்டுமே சாப்பிடமுடியும்; ஆகையால், இஸ்ரவேல் நீடிய காலத்திற்குப் பணிவுள்ளதாகவும், அன்பானதாகவும், கிருபை நிறைந்ததாகவும் இருக்கும். யுத்தத்திற்குப் போகிற சாத்தானுடைய கலக ஆவி, இப்பொழுது அவர்களில் இல்லை; சதாகாலத்திற்குமாக அவர்களைவிட்டுச் சென்றுவிட்டது.

இவ்வளவு காலமும் எல்லாம் மலடாயிருந்தது; இப்பொழுது எல்லாம் கனி கொடுக்கத்தக்கதாகவும், ஒன்றிலும் மலட்டுத் தன்மையில்லாமலும், எல்லாம் இரட்டைக்குட்டியீன்றவைகளு மான ஆட்டுமந்தையைப் போலிருக்கிறது.

ஜூலை

9

***வா**னங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; கர்த்தர் பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆத ரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர் வில்லாமலும் இருக்கிறது என்கிறார் (ஏசா. 1:2-3).*

"இன்னும் ஏன் நீங்கள் அடிக்கப்படவேண்டும்"

வஞ்சனையின் வலைப்பின்னலினால் ஏதேன் தோட்டத்தில் ஏற்பட்ட மனுஷவீழ்ச்சி இந்த நிமிடத்திலும் தொடர்கிறது. இதன் பிரதிபலனைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி தெளிவாகக் கூறியிருக் கிறார். மனுஷன் வஞ்சிக்கப்பட்டான், இந்த நிமிடத்திலும் தொடர்ந்து வஞ்சகத்தில் அவன் வாழ்க்கையை நடத்துகிறான்; அவன் பொய்யை விசுவாசித்தான், இப்பொழுது பொய்யை நம்பு வது இலகுவாயிருக்கிறது; அவன் தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத் தான், இப்பொழுது தேவனுக்குக் கீழ்ப்படியாதிருப்பது இலகுவாயி ருக்கிறது.

அதெப்படியெனில், மனுஷன் அந்தப் பாவம் என்ற தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறான்; அதேமாதிரி இன்றும், அதே தொற்றுநோயாகிய அந்தப் பாவத்தினாலும், அதன் அகோர மான ஆக்கிரமிப்பினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதனை

ஏசாயா 1:4-6ல் **"ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்; கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப் போனார்கள். இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமே யில்லை; அது காயமும் வீக்கமும், நொதிக்கிற இரணமு முள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண் ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது"** எனத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரே தீர்வு **சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே** (**1கொரி.** 1:18. 2:2); ஆயினும், அந்தப் பாவம் என்ற தொற்றுநோயை மனுஷன் சுமந்துகொண்டு திரிகிறபடியினால், அவிசுவாசத்தின் நிமித்தம் அதற்குத் தீர்வா கிய **"இயேசு கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதையும்"** ஏற்றுக்கொள்வது அவனுக்கு முடியாமலிருக் கிறது.

ஜூலை

10

***அ**ப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனை களின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன் (ஏசா. 6:5).*

"நீ சொல்கிறாய் நீ அசுத்தம் என்று; ஆனால், தேவன் நீ சுத்தமாயிருக்கிறாய் என்று சொல்கிறார்"

ஏசாயா தீர்க்கதரிசி **ஏசாயா** 6ம் அதிகாரத்தில் தேவனுடைய பிரசன்னத்தைக் கண்டான்; ஆண்டவர் உயரமும் உன்னதமு மான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டான்; அவருடைய வஸ்திரத்தொங்கலினால் தேவாலயம் நிறைந்திருந்ததைத் தரிச னத்தில் கண்டான்; எதிரொலியாக **"ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், ... "** என **ஏசாயா** 6:5ல் கூறி னான். ஏசாயாவின் பிரதிபலிப்பு உண்மையான தாழ்மையைக் காண்பிக்கிறது, ஏனென்றால், அவன் தேவனுடைய பரிசுத்தம் என்ற வெளிச்சத்தில் தன்னைக் கண்டான்.

விசுவாசிகளாகிய நாமும் அப்படியே நம்மைக் காணவேண் டியது மிகமுக்கியமானதாயிருக்கிறது. நம்முடைய சொந்த நீதி யினால் அதமானோம், அசுத்தமானோம்; ஆனால், அதனோடு தரிசனம் நிற்கவில்லை; **"அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து,**

அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடு களைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்" (ஏசா. 6:6-7). அந்த எரிந்துகொண்டி ருக்கும் தணல் பலிபீடத்திலிருந்து கொண்டுவரப்பட்டது; அது இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றப் போகிற பாவநிவிர்த்தியையும் பிரதிபலிக்கும் மாதிரியாயிருக் கிறது. அந்த நெருப்புத்தழலால் அவனுடைய உதடுகளைத் தொட்டதன்மூலம் ஏசாயாவின் இருதயம் சுத்திகரிக்கப்பட்டு, சுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய பார்வையில் நியாயப்படுத்தப் பட்டான்.

நாமும் சுவிசேஷத்தை விசுவாசித்தவுடன் நமக்கும் அப் படியே நடைபெறுகிறது. தேவன் நம்மைச் சுத்திகரித்து, பரிசுத்த மாக்கி தன்னுடைய பார்வையில் நம்மை நியாயப்படுத்துகிறார். விசுவாசத்தின் மூலம் நம்மைச் சுத்திகரித்து, நமக்கு ஒரு நிலைப்பாட்டைக் (Position) கொடுக்கிறார் **(Iகொரி. 6:11)**. ஆனால், நம்முடைய நிலைமையோ முற்றிலும் மாறுபாடாயிருக்கிறது. இதற்கு நாம், கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய வேலை யைத் தொடர்ந்து விசுவாசிக்கும்பொழுது நம்முடைய நிலைமை யைப் (Condition) பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து சுத்தமாக்கி, நம்முடைய நிலைப்பாட்டுக்குக் (கிறிஸ்துவின் சாயலில்) கொண்டுவருவார் **(ரோம. 8:29; கொலோ. 310)**. தேவன் நம்மைப் பார்ப்பதுபோலவே நாமும் பார்க்கவேண்டும்; இயேசுகிறிஸ்து வினுடைய இரத்தத்தினால் நாம் தொடர்ந்து சுத்தமாகிறோம். நம்முடைய நிலைமையில் நாம் **"அசுத்தமாயிருக்கலாம்" (ஏசா. 64:6)**; ஆனால், தேவனுடைய பார்வைக்கு நம்முடைய நிலைப் பாட்டில் நாம் சுத்தமாயிருக்கிறோம். நீங்கள் உங்களுடைய பலத்தில், உங்களுடைய நீதியில் அசுத்தமாயிருக்கலாம், ஆனால், தேவன் **"நீ என்னுடைய குமாரனுடைய இரத்தத்தினால் சுத்த மாயிருக்கிறாய்"** என்கிறார்.

ஜூலை

11

***நீ**ங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா? ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா? பூமி அஸ்திபாரப்பட்டது முதல் உணராதிருக்கிறீர்களா? (ஏசா. 40:21).*

"ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்பட வில்லையா?"

தேவன் தன்னை மனிதனுக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். அவன் விக்கிரகங்களையும், மதங்களையும், தன் கைவேலைகளையும், தொழுதுகொள்வதும் அவற்றைப் பின்பற்றுவதும் அவனுடைய சுபாவமாகிவிட்டது; அறியாமையினிமித்தம் அப்படிச் செய்தேன் என்று சொல்லவும் அவனுக்கு இடமில்லை. சிருஷ்டி என ஒன்று இருந்தால், அதற்குச் சிருஷ்டிகர் என ஒருவர் இருக்கவேண்டும். தேவன் ஆதிமுதல் தான் உருவாக்கின எல்லாவற்றிலும் அது எதுவாயிருந்தாலென்ன தன்னுடைய கையொப்பத்தைத் தவறாமல் பதித்திருக்கிறார் (**ரோம.** 1:19-21).

தேவனுடைய வார்த்தைகளை இணைத்து, புஸ்தகமாக நமக்குத் தரப்பட்டிருக்கிறது. அதுபற்றி நமக்குத் தெரியாது என்று சொல்லுவதற்கு அவனுக்கு இடமில்லை. கிறிஸ்தவர்கள் எனச் சொல்லப்படும் அநேகர் வேத அறிவு அற்றவர்களாகவே இருக்கிறார்கள்; கிறிஸ்தவ சபைகளில் வேதாகமம் தற்பொழுது இரண்டாம் இடத்தைப் பெறுவதே அரிதாயிருக்கிறது. மனுஷருடைய

கற்பனைகளும், பாரம்பரியங்களும், நியாயப்பிரமாணங்களும் சுவிசேஷங்களாக உபதேசிக்கப்படுகிறது. வேதத்தைப் போதிக்கி றோம் எனக் கூறிக்கொண்டு, வேதவாக்கியம் அவமாக்கப்பட்டு, திரித்துப் புரட்டி, வேதத்தில் இல்லாததை உபதேசிக்கிறார்கள்; இதனிமித்தம் பொய்யான மதங்கள் தாராளமாக உருவாக்கப்பட்டு வருகிறது. வேத அறிவு அற்ற கிறிஸ்தவர்கள், மாம்சத்தில் இயங்குபவர்கள், பொய்யான இந்த உபதேசங்களினால் கவரப் பட்டு, தம்மைக் கெடுத்துக்கொள்கிறார்கள். சாத்தானின் இந்த ஊடுருவலுக்கு வேதத்தை அறியாததே முக்கியமான காரணமா யிருக்கிறது.

கள்ள அப்போஸ்தலர்கள் கபடமுள்ள வேலையாட்கள், சாத் தானுடைய ஊழியக்காரர் வேறொரு சுவிசேஷத்தைப் போதிக் கிறார்கள். இவர்கள் வேறொரு இயேசுவை அறிமுகம் செய் கிறார்கள்; இதனைக் கேட்பவர்கள் வேறொரு ஆவியினால் ஆக் கிரமிக்கப்பட்டு, தாறுமாறான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறார் கள்; பரிசுத்த ஆவியானவர் இவர்களில் செயற்படுவதில்லை (II**கொரி.** 11:3-4, 13:5). இந்த இக்கட்டான நிலைமைக்குக் கிறிஸ் தவர்களே பொறுப்பேற்கவேண்டும்; ஏனென்றால், நாம் போகும் சபை உம்முடையதா (**அப்.** 2:47)? நான் கேட்கும் உபதேசம் உம் முடையதா (I**கொரி.** 1:23)? எனத் தேவனிடம் அவர்கள் விசாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; தேவனோ எவன் நீதியின் மேல் பசிதாகமுள்ளவனாயிருக்கிறானோ அவன் திருப்தியடை வான் என்று உறுதியளித்திருக்கிறார் (**மத்.** 5:6); ஆங்கில வேதா கமத்தில் அவன் **திருப்தியடைவான்** என்பதற்குப் பதிலாக **நிரப் பப்படுவான்** என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜூலை

12

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன் (ஏசா. 41:13).

"தேவன் நம்முடைய வலதுகையைப் பிடிக்கிறார்"

எக்காலத்திலும் நம்முடைய வல்லமையினால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முயற்சிப்பது முடியாதகாரியமாகும். இஸ்ரவேலாக இருந்தாலென்ன, சபையாக இருந்தாலென்ன கூட்டாகவோ, தனித்தோ அவருடைய சித்தம் நமக்கு எந்தக் காலத்திலும் பெரிதாயிருக்கிறது; ஆயினும், தேவன் நல்லவராக இருக்கிறார். அவர் இஸ்ரவேலையும், நம்மையும் பார்த்து **"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து" (ஏசா. 41:13)** எனக் கூறியிருக்கிறார்.

நாம் அவரில் நம்பிக்கையாயிருக்கும்பொழுது, இந்த வாக்குத் தத்தத்தின் மூலமாக, வழிநடத்தி, இயக்கி, பாதுகாத்து நம்முடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். தேவனுடைய சித்தம் நம்முடைய பிரயாணத்தில் நிறைவேறிக்கொண்டிருக்கும்பொழுது, பரமபிதா நம்முடைய வலதுகையைத் தொடர்ச்சியாகப் பிடித்துக்கொண்டு, **"பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன்"** என்று சொல்லுவார். நாம் இதனை நமக்குரியதாக எடுத்துக்கொள்ளமுடியும்; யாக்கோபு போன்று நிலைமையை சூழ்ச்சியாகக் கையாண்டு தேவனுடைய

சித்தத்தை நடப்பிக்கவேண்டியதில்லை (**ஆதி.** 25:30-31, 27:8-10, 19). கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் முற்றுமுழுவதுமாக விசுவாசிக்கும்பொழுது, அவர் நம்மை வழி நடத்துவார் (**சங்.** 32:8; **எரேமி.** 33:3; **யோவா.** 16:13-15); நாம் பயப் படவேண்டிய அவசியம் இல்லை.

ஜூலை

13

***மெ**ய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம் (ஏசா. 53:4).*

"சிலுவையும் நியாயத்தீர்ப்பும்"

தேவன் பாவத்துக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறார்; அவர் ஏற்கனவே பாவத்துக்கு நியாயத்தீர்ப்புக் கொடுத்திருக்கிறார் (**ரோம.** 8:3). தன் ஒரேபேறான குமாரனைச் சிலுவையில் நொறுக்கி நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார் (**ஏசா.** 53:4). அதெப்படியென்றால், நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய தண்டனையை நம் சார்பில் அவர் சிலுவையில் பெற்றுக்கொண்டார். வித்தியாசம் என்னவென்றால், நாம் தண்டனையைப் பெற்றாலும், அது இரட்சிப்பைத் தரமாட்டாது. அவர்மேல் வந்த நியாயத்தீர்ப்பு நம்முடைய பாவத்தின் கடன்களைச் செலுத்தித்தீர்த்தது. கிறிஸ்துவிலும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுது, அது நமக்கு மீட்பை உத்தரவாதஞ்செய்வதுமட்டுமல்ல, நியாயத்தீர்ப்பிலிருந்தும் நம்மை விலக்குகிறது.

மனுஷகுலம் கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரிலும், அவர் சிலுவையில் நமக்காக நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுது, நியாயத்

தீர்ப்புக்குத் தப்புகிறது; ஏனென்றால், கிறிஸ்து மனுஷருக்காக நியாயத்தீர்ப்பை ஏற்கனவே பெற்றுக்கொண்டார்; அப்படியில்லா விட்டால், கிறிஸ்துவை நிராகரிப்பவன்மேல் நியாயத்தீர்ப்பு தவிர்க்கமுடியாமல் வரும்; எகிப்தியர்கள்மேல் எப்படி வந்ததோ அப்படியே வரும்.

அப்படியாயின் சர்வவல்லவருடைய நியாயத்தீர்ப்புக்கும் மனுஷகுலத்திற்கும் நடுவில் நிற்பது கிறிஸ்துவின் சிலுவை யேயாகும்; இந்த உண்மை நம்முடைய இருதயத்திற்குள் ஊடுரு விப் பாயவேண்டும்; அதனைப் பொருத்தமாக விளங்கிக்கொள்ள வேண்டும். சிலுவை நிராகரிக்கப்பட்டால், கிறிஸ்துவும் நிராகரிக் கப்படுகிறார்; இந்த அறிக்கை தெளிவாக விளங்கப்படவேண்டும். சிலுவையில் கிறிஸ்து தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து நிறைவேற்றியதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளமுடியாது; அவரை அறியவும் முடியாது; கிறிஸ்து வைச் சொந்தமாக்கிக்கொள்ள இயலாது; அவருடைய இரட்சிப் பைப் பெறமுடியாது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

அதேபோல, கிறிஸ்தவர்களுக்கும் பொய்யான உபதேசங்களுக் கும் நடுவில் நிற்பதும் சிலுவையே. கிறிஸ்தவர்கள் சிலு வையை நிராகரிப்பார்களாயின், அதற்குரிய நியாயத்தீர்ப்பை அடையவேண்டும்.

ஜூலை

14

***அ**வர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்* (ஏசா. 53:7).

"நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் அவர் வாயைத் திறக்கவில்லை"

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போர்ச்சேவகர்கள் அவருடைய சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைப் பரியாசம்பண்ணினார்கள். பிரதான ஆசாரியன் அவர் தேவ தூஷணம் சொல்வதாகக் கூறினான். அவருடைய முகத்தை மூடினார்கள்; அவரைக் குட்டினார்கள்; அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்; பிலாத்து நீர் யூதருடைய ராஜாவா? என்று சொல்லிக் கேலிபண்ணினான். அவரை வாரினால் அடித்தார்கள்; தாம் செய்ய நினைத்த எல்லாவற்றையும் செய்தார்கள்; இப்படியாக அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்.

இவ்வளவு அவமானத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அவர் எந்தவிதமான தீங்கும் யாருக்கும் செய்யவில்லை. தன்னுடைய

நியாயத்தை எடுத்து அவர்களுக்கு முன்பாகச் சமர்ப்பித்து இந்த அவமானத்திலிருந்து அவர் விலகியிருக்கலாம்; ஆனால், குற்ற உணர்வு உள்ளவராக இருப்பதுபோல் தம்முடைய வாயைத் துன்பத்தின் மத்தியிலும் அவர் திறக்காமலிருந்தார்; ஆனால், அந்தக் குற்றங்கள் அவருடையதல்ல (**IIகொரி.** 5:21; **Iபேது.** 2:24), முழு உலகத்தின் குற்றத்தையும், பாவத்தையும் அவர் சுமந்ததன் நிமித்தமே அவர் குற்ற உணர்வுள்ளவரானார்.

முறைப்படி குற்றவாளிக்கூண்டில் நாம் செய்த அக்கிரமத்திற் காகத் தலைகுனிந்து வாய்பேசாமல், வெட்கி, கூனி, குறுகி நிற்க வேண்டியவர்களாயிருக்கிறோம்; ஆனால், அவரோ நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் சுமந்து நாம் நிற்க வேண்டிய இடத்தில் அவர் நின்று நம்முடைய கேவலமான நிலைமையை அவர் பெற்றுக்கொண்டார். அவர் நம்முடைய பிரதிநிதியாகச் செயற்பட்டதின் நிமித்தம் அவரால் வாயைத் திறக்கமுடியவில்லை; அவருடைய இந்த வேதனைக்குரிய நிலைமையைப்பற்றிச் **சங்கீதம்** 38:12-14ல் வெளிப்படுத்தப்பட்டி ருக்கிறது; மேலும், இதுபற்றிச் **சங்கீதம்** 39:2, 9லும் கூறப்பட்டிருக் கிறது.

இந்த வேதவாக்கியங்களிலிருந்து நாம் கிரகித்துக்கொள்ளக் கூடியது என்னவென்றால், பரமபிதாவே அவரை வாய்திறக்க விடாமல் பண்ணினார் என்பதனைக் காணக்கூடியதாயிருக்கிறது. அவர் ஏன் அப்படிச் செய்தார்? கிறிஸ்து நம்முடைய பிரதி நிதியாக, நம்முடைய அக்கிரமங்களைச் சுமந்ததினால் தேவன் அவரைக் குற்றவாளியாகத் தீர்த்தார்; ஆகையால், நம்முடைய குற்றத்தை அவர் சுமந்ததனால், சட்டப்படி அவர் வாய்திறக்க இடமில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்மு டைய வாயைத் திறவாதிருந்தார்.

ஏசாயா பலமுறை ஆடுகள் பலியாகக் கொடுப்பதற்குக் கொண்டு போகப்படுவதைக் கண்டிருக்கிறார். அவைகள் வாய் திறவாமல், தம்மைத் தற்பாதுகாக்காமல் தனக்கு நடக்கப் போகிறது என்ன என்பதனை அறியாமல், அமைதியாகச் செல் வதைக் கண்டிருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நமக்காக அந்த நிலைமையை எடுத்தார். அவரே உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்த்த தேவ ஆட்டுக்குட்டி **(யோவா. 1:29)**. பலியாகக் கொடுக்கப்படும் ஆடுகள் யாவும் **ஆதி யாகமம்** 3:15ல் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீயின் வித்தையும் (இயேசு), அவர் பலிபீடத்தில் (சிலுவையில்) என்ன செய்வார் என் பதனையும் பிரதிபலித்தது.

கிறிஸ்து வரும்வரையும் கோடிக்கணக்கான ஆடுகள் பலி யாகக் கொடுக்கப்பட்டன. ஆனாலும், அந்த ஆடுகள் வரப் போகிற ஸ்திரீயின் வித்தைச் சுட்டிக்காட்டி, அந்த ஸ்திரீயின் வித்து என்ன செய்வார் என்பதனைப் பிரதிபலித்ததேயன்றி அந்தப் பாவத்தையும் பாவச்செயல்களையும் முற்றுமுழுவதுமாக அப்புறப்படுத்த முடியவில்லை **(எபி. 10:4)**.

கிறிஸ்துவே அந்த ஸ்திரீயின் வித்து, அந்த ஸ்திரீயின் வித்தே நம்முடைய **அந்தப் பாவத்தைச்** (பாவசுபாவத்தைச்) செயலிழக்கப்பண்ணி, **(ரோம. 6:6)** அந்த பாவத்தின் நிமித்தம் நாம் மேற்கொண்ட **சகல பாவச்செயல்களையும்** முற்றுமுழு வதுமாக அப்புறப்படுத்தினார் **(யோவா. 1:29; Iயோவா. 1:7)**.

ஜூலை

15

***பி**ள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்ப வேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்த சத்தமிடு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா. 54:1).*

"பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு"

இந்த வேதவாக்கியத்தில் சொல்லப்படுவது என்ன? சோர்வ டைந்து போகாதே தேவன் உனக்காக எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார் (**ஙசாமு.** 16:1). சத்தியத்தோடு ஒட்டிக்கொண் டிரு; தனிமையில் விடப்பட்டு, துணையற்றிருந்தாலும் சத்தியத் தோடு ஒட்டிக்கொண்டிரு. **கெனிசியரும், கத்மோனியரும், கேனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும்** (**ஆதி.** 15:19-21) ஆகிய எல்லா "....**ரியரும்**", கண்ணுக்கு எட்டாதபடிக்குத் துரத்திவிடப்படுவார்கள். நாம் நீதி கிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால், நம்பிக்கையோடு காத்திருப்போம் (**கலா.** 5:5). விசுவாசியே! விசுவாசிப்பதை நிறுத்திவிடாதே; சோர்ந்துபோகாதே; தளர்ந்துபோகாதே (**கலா.** 6:9) கோழையா யிராதே. **யோசுவா** 1:9ல் **"நான் உனக்குக் கட்டளையிட வில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய**

கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" எனச் சொல்லப்பட்டிருக் கிறது; நாம் தளர்ந்து போகாமலிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப் போம் (**கலா. 6:9**). ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம் உண்டு (**பிரச. 3:1**) அந்தக் காலம் வரும்பொழுது அறுவடையுண்டு.

தேவன் நமக்கொரு காலத்தை வைத்திருக்கிறார்; பல காலங் கள் அல்ல; நமக்கென்று ஒரு காலத்தைத் தயார்பண்ணுகிறார்; தேவனால் நியமிக்கப்பட்ட திட்டம் பொருத்தமான நேரத்தில் தயாராயிருக்கிறது; ஒருபொழுதும் சோர்ந்துபோகாதே; ஒரு பொழுதும் விட்டுவிடாதே. விசுவாசத்தில் நிலைத்திருப்பாயா னால், பொருத்தமான நேரத்தில் தேவன் நியமித்த திட்டத்தைக் காண்பாய். ஒரு பொருத்தமான காலம் வருகிறது; பலமான சோதனைகளினால் சோர்ந்து, களைத்துப்போகாதே; கர்த்தர் நிச்சயமாகக் கொண்டுவருவார் (**லூக். 18:1, 7-8**); நம்முடைய காலம் எப்பொழுது வருகிறது என்பதனை நாம் அறியோம்; அதனைத் தேவனே அறிவார்.

ஜூலை

16

ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர் களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள் (ஏசா. 55:1).

"சகலருக்கும் கர்த்தருடைய வாக்குத்தத்தம்"

ஏசாயா 53ம் அதிகாரம் கல்வாரியில் செலுத்தப்பட்ட பாரிய விலையைப் பிரகடனப்படுத்துகிறது. **ஏசாயா** 54ம் அதிகாரம் வரப்போகிற நேர்த்தியான ராஜ்யத்தின் காலத்தைப் பிரகடனப் படுத்துகிறது. இப்பொழுது **ஏசாயா** 55ம் அதிகாரத்தின்மூலம் உல கத்திலிருக்கிற சகல மனுஷருக்கும் அழைப்பு விடப்படுகிறது. அவர்கள் வந்து, அவரோடு பங்குபற்றவேண்டும்; அவரே அந்த ராஜ்யத்துக்குள் நுழைவதை உத்தரவாதம் செய்கிறார்.

இந்த ஒரே பந்தியில் மூன்றுதரம் **"வாருங்கள்"** என்ற மாதிரி யான சொற்கள் பாவிக்கப்பட்டிருக்கிறது; இது **வெளி.** 22:17ஐ ஒத்திருக்கிறது. அங்கும் மூன்றுதரம் **"வா"** என்ற மாதிரியான சொற்கள் பாவிக்கப்பட்டு இருக்கிறது; இந்த மூன்று அழைப்பும் திருத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. **திருத்துவம் "தேவனாகிய பிதாவையும்", குமாரனாகிய தேவனையும், பரிசுத்த ஆவியா கிய தேவனையும்"** உள்ளடக்குகிறது. இந்த மூவரும் இரட்சிப் பின் திட்டத்தில் பங்குபற்றுகிறார்கள்; ஆனபடியினால்த்தான்,

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் சீஷர்களுக்குத் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கட்டளையிட்டிருக்கிறார் (**மத்.** 28:19).

ஏசாயா 55:1-2ல் நான்கு பொருட்கள் வாங்கவேண்டும் என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது; அவையாவன: **தண்ணீர், அப்பம், திராட்சரசம், பால்** ஆகியவைகளே; இவை நான்கும் இரட்சகரிலிருக்கிற கிருபையின் முழுமையை வெளிப்படுத்துகிறது. இரட்சகரின் கிருபையின் முழுமை நான்கு சுவிசேஷத்திலும் வெளிப்படையாகக் காணக்கூடியதாயிருக்கிறது; **"கொள்ளுங்கள்"** என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும், கொள்ளும் விலை பணத்தினால் அல்ல; அப்படியிருந்தால், அநேகமானோர் ஒருபொழுதும் இந்தப் பொக்கிஷத்தை வாங்கியிருக்கமுடியாது; ஆகையால், கோரப்பட்ட விலை மனுஷனுடைய இருதயமே (**ரோம.** 10:9-10). **"சாப்பிடுங்கள்"** என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் ஒரு பகுதியாக இருப்பதற்கு முதல் மனுஷர் கிறிஸ்துவினுடையதில் பங்குபற்றவேண்டும். கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும் (**Iகொரி.** 2:2).

ஜூலை

17

சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தை யும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின (ஒடுக்குகிற) ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பி னார் ..... (ஏசா. 61:3).

"ஒடுக்குகிற ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடை"

2800 வருஷங்களுக்கு முன்பு தீர்க்கதரிசியாகிய ஏசாயா மேற் கூறிய வேதவார்த்தையை நமக்குத் தந்திருக்கிறார். பாவம் இருதயத்தில் ஆரம்பமாகி (**ரோம.** 5:12), வேகமாக மனதிற்குள் சென்று அங்கங்களினுடாகப் பாவச்செயல்களையும், சகலவித இச்சைகளையும் நடப்பிக்கின்றது.

இதனை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதுபற்றித் தீர்க்க தரிசியாகிய ஏசாயா "**துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத் தையும், ஒடுக்குகிற ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடை யையும் கொடுக்கவும் என்னை அனுப்பினார்**" என்று சொல்லி யிருக்கிறான். முதலாவதாக, "**ஒடுக்குகிற ஆவி**" என்பதனைப் பார்ப்போம்; அசுத்த ஆவிகளின் ஒடுக்குதலுக்குட்பட்டவர்கள் இழி வான பயத்தையும், தம்முடைய தோள்பட்டையில் பாரத்தைச் சுமப்பதுபோன்ற பிரமையையும் உடையவர்களாயிருப்பார்கள் (**மத்.** 11:28-30).

அவர்களுடைய பார்வைக்கு அந்தகாரம் அவர்களைச் சூழ்ந்தி ருப்பதுபோலவும், ஒரு பிரமை இருக்கும். தாம் சிறைப்பட்டு இருப்பதுபோன்ற ஒரு பிரமை அவர்களுக்கு ஏற்படும்; ஆனபடி யினால்த்தான் **"அந்த ஒடுக்குகிற ஆவி"** என ஏசாயா குறிப்பிட் டிருக்கிறார்; ஒடுக்குகிற ஆவியின் தாக்கத்தை ஒவ்வொரு விசு வாசியும் ஒருமுறையோ அல்லது பலமுறையோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அனுபவித்திருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் சிலுவையினாலேயே இதனிலிருந்து வெற் றியை அனுபவிக்கமுடியும் என்பதுபற்றிய விபரத்தைப் பார்ப் போம். முதலில் கேடான சிந்தனைகளை நம்மைவிட்டு அப் புறப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆரம்பத்தில் இந்தக் கேடான சிந்தனைகளை நம்முடைய மனதில் உறுதியாக சாத் தான் நாட்டியிருக்கிறான்; பின்பு அவைகள் நம்முடைய ஆவிக் குள்ளும், ஆத்துமாவுக்குள்ளும் உட்செல்கிறது; பின்பு சரீரத்தி னூடாக சகல மாம்சத்தின் கிரியைகளையும் நடைமுறைப்படுத்து கிறது (**கலா.** 5:19-21); ஆனபடியினால், முதலில் மனதைக் கேடான சிந்தனைகளுக்கு மூடவேண்டும். பூமிக்குரிய சிந்தனை களுக்கு மனதை மூடி, தேவனுக்குரிய சிந்தனைகளுக்கு மன தைத் திறந்து வைத்திருக்கவேண்டும் (**மத்.** 16:23; **கொலோ.** 3:2).

தீர்க்கதரிசியாகிய ஏசாயா இதனைத் **"துதியின் உடை"** என்று கூறியிருக்கிறார். இதன் பொருள் என்ன? உடை என்பது உடுத்தி யிருப்பதை உணர்த்துகிறது. பரிசுத்த ஆவியானவர் ஏசாயா மூலம் துதியின் உடையை நாம் உடுத்தியிருக்கவேண்டுமெனக் கூறுகிறார் (**எபேசி.** 6:13-18); இந்தத் துதியின் உடையை எப்படி உடுத்திக்கொள்வது என்பதனைப்பற்றி விபரமாகப் பார்ப்போம் **"துதியின் உடை"** எனப்படும்பொழுது ஒரு விசுவாசி நித்திரை யினால் எழும்பி, தன்னுடைய நாளாந்த நடையை ஆரம்பிக்கும் பொழுது, கர்த்தரைப்பற்றிய சிந்தனை வந்தவுடன் உடனடி யாகவே அவரை மகிமைப்படுத்த ஆரம்பிக்கவேண்டும்; நாம்

இதனை மனதினாலும், ஆவியினாலும் அமைதியாகச் செயற் படுத்தமுடியும்.

முதலாவதாக அவர் உங்களுக்குச் செய்தவைகளுக்காக நன்றி செலுத்தவும்; அவர் யாரென்பதனையும், அதன் பொருள் என்ன என்பதனையும் அறிந்து, அதனை மகிமைப்படுத்திக் கொண்டிருக் கும்பொழுது, கொஞ்ச நேரத்தில் மனம் வேறொரு இடத்தை நாடிச்செல்வதை உணர்ந்துகொள்ளமுடியும். கொஞ்ச நேரத்திற் குப்பின் கர்த்தருடைய நினைவு மறுபடியும் நுழைய ஆரம் பிக்கும்; திருப்பி மறுபடியும் துதியை ஆரம்பிக்கவேண்டும்; மறு படியும் வேறொரு இடத்தை மனம் நாடும்வரையும் தொடர்ந்து துதியை ஏறெடுக்கவும்; இதனை ஒவ்வொரு கட்டத்திலும் தொடர்ந்து செய்யவும்; கர்த்தருடைய சிந்தனைகள்மட்டும் மன தில் இருக்கத்தக்கதாகத் தொடர்ந்து செய்யவும்.

நான் உங்களுக்கு ஒரு உத்தரவாதத்தைத் தருகிறேன். இத னைச் செய்ய ஆரம்பித்தவுடன் பயம் விலகும், சோர்வு விலகும், கொடுமைப்படுத்தல் விலகும், பாவஞ்செய்யத்தூண்டுவது வில கும் (Temptation), கொடுமைப்படுத்தும் ஆவி விலகும்; ஏனென் றால், நம்முடைய மனதும் ஆவியும் கர்த்தருடைய பிரசன்னத் தினால் நிறைந்திருக்கிறதே. நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது, இந்தத் தொடர்ச்சியான துதி கர்த்தருக்கல்ல; அதன் மூலம் நமக்கே நாம் நன்மை செய்கிறோம். இதன்மூலம் சிலு வையில் உத்தரவாதம் செய்யப்பட்ட வெற்றியை நாம் நிச்சய மாக அனுபவிக்கமுடியும் (**கொலோ.** 2:14-15).

ஜூலை

18

இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனோ? அவன் வீட்டில் பிறந்த அடிமையோ? ஏன் கொள்ளையானான்? (எரேமி. 2:14).

"வீட்டில் பிறந்த அடிமையோ?"

இஸ்ரவேலைக்குறித்து எரேமியா **"வீட்டில் பிறந்த அடிமையோ?"** எனச் சொல்லியிருப்பதன் பொருள் என்ன? இதன் பொருள் அவர்கள் கேடான தீவிரமான உணர்ச்சிகளுக்கும், அவர்களுடைய பாவத்துக்கும், அவர்களுடைய கட்டுக்களுக்கும் அவர்கள் அடிமைகளாக இருந்தார்கள்; அவர்கள் அடிமைகளாயிருந்தும், அதனை அறியாதிருந்தார்கள்; இது வேதனைக்குரிய நிலைப்பாடாகும்.

ஒரு சிறுத்தையை உதாரணமாக எடுத்து **"வீட்டில் பிறந்த அடிமை"** என்ற சொற்றொடரை விளங்கப்படுத்துவது எனக்குப் பொருத்தமாயிருக்கிறது. அந்த சிறுத்தை மிருகக்காட்சிச்சாலையில் பிறந்து அங்கு வளர்க்கப்பட்டால், அந்த இடத்திற்குத் தன்னை அறியாமலே அது அடிமையாயிருக்கிறது. புல்லுள்ள இடங்கள் இருப்பதும், சுதந்தரமாக நடந்து திரிவதற்கு விஸ்தாரமான காடுகள் உண்டு என்பதும் அதற்குத் தெரியாது; ஒரு பொழுதும் தெரியவும்மாட்டாது; இதுவே இன்றைய அநேகமான கிறிஸ்தவர்களின் பரிதாபகரமான நிலைமையாகும்; ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையிலுள்ள சுதந்தரமும் சுயா

தீனமும் என்ன என்பதனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியா திருக்கிறார்கள்; அவர்கள் வீட்டில் பிறந்த அடிமைகளாக இருக் கிறார்கள். தாம் அப்படி இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். இந்தக் கட்டிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் உண்டு; அந்த வழி கிறிஸ்துவின் சிலுவையே (**ரோம.** 6:1-14, 8:1-2, 11). ஒருவன் சிலுவையின் செய்தியை அறியாவிட்டால், உண்மையான சுயா தீனம் என்ன என்று அவனுக்குத் தெரியாது; அவன் தன்னிடம் இல்லாதிருப்பது என்ன என்பதனை அறிய முடியாதிருக்கிறான்.

உலகத்திலுள்ள சகல மறுபிறப்புப்பெற்ற கிறிஸ்தவர்களுக் கும் பரிபூரணமான வாழ்க்கை உண்டு (**யோவா.** 10:10); ஆயினும், தன்னுடைய நாளாந்த வாழ்க்கைக்குச் சிலுவையின் செய்தியை விளங்கி, அதனைப் பிரயோஜனப்படுத்துபவனே பரிபூரணமான வாழ்க்கையை அனுபவிக்கிறான்; கிறிஸ்துவின் சிலுவையினால் ஏற்பட்ட பலாபலன்களை அனுபவியாதவன் **"வீட்டில் பிறந்த அடிமையாக"** இருக்கிறான்.

கிறிஸ்து கொடுத்த விலையைப் பார்க்கும்பொழுது, அதன் பலாபலன்களை அனுபவியாமலிருப்பது வேதனைக்குரிய விஷ யம்; தெரிவு நம்முடையதே. கிறிஸ்துவின் சிலுவையே வெற்றி யையும், சுயாதீனத்தையும் கொண்டுவருகிறது; கிரியைகளாயி ருந்தால் தோல்வியையும் அடிமைத்தனத்தையும் கொண்டு வரும்; அடிமைத்தனமே **"வீட்டில் பிறந்த அடிமையின் குணா திசயமாகும்"**.

ஜூலை

19

ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிட, அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போய் அந்நிய புருஷனுக்கு மனைவியானால், அவன் அவளிடத்தில் இனித் திரும்பப்போவானோ? அந்த தேசம் மிகவும் தீட்டுப்படுமல்லவோ என்று மனிதர் சொல்லுவார்கள்; நீயோவென்றால் அநேக நேசரோடே வேசித்தனம் பண்ணினாய்; ஆகிலும் என்னிடத்திற்குத் திரும்பி வா என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமி. 3:1).

"திரும்பிவா என்று கர்த்தர் சொல்லுகிறார்"

"அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போய் அந்நிய புருஷனுக்கு மனைவியானால், அவன் அவளிடத்தில் இனித் திரும்பப்போவானோ?" என்ற கேள்வி **உபாகமம்** 24:1-4ல் சொல்லப்பட்டிருக்கும் கட்டளையைப்பற்றிக் குறிப்பிடுகிறது. பரிசுத்த ஆவியானவர் யூதாவை வேசிக்கு ஒப்பிடுகிறார்; அவள் அநேக நேசர்களிடம் (விக்கிரகங்களிடம்) போனாள்; ஆனபடியினால், **உபாகமம்** 24:1-4ல் சொல்லப்பட்ட, தடைசெய்யப்பட்ட வகுப்புக்கள் அடையாளம் காணப்பட்டது; ஆகிலும், **"என்னிடத்தில் திரும்பி வா"** என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்படியானால் தேவன், தான் கொடுத்த தன்னுடைய பிரமாணத்தை மீறுகிறாரோ?

இதற்குப் பதில் **ரோமர்** 7:1-4ல் காணப்படுகிறது; இந்தப் பந்தியில் தேவனுடைய தெய்வீக பரிசுத்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால், நியாயப்பிரமாணத்தின் கட்டுக்குள் இருக்கும்பொழுது தெய்வீக பரிசுத்தம் முடியாத ஒரு விஷயம்; ஆனால், கிருபையின் சுயாதீனத்திற்குள் இருக்கும்பொழுது தெய்வீக பரிசுத்தம் நிச்சயமே.

தர்க்கவாதம் என்னவென்றால், இரட்சகரின் மரணமே அந்தப் பாவத்திலிருந்து விடுதலையைக் கொடுக்கும் வல்லமையான சக்தியாயிருக்கிறதுபோல, இரட்சகரின் மரணமே நியாயப்பிரமாணத்தின் கோரிக்கையிலிருந்து விடுதலைகொடுக்கிற வல்லமையான சக்தியுமாகும்.

பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 7:1-4ல் இரு புருஷர்களை உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார்; ஒன்று நியாயப்பிரமாணம் மற்றது கிறிஸ்து. நியாயப்பிரமாணத்தோடு இணையும்பொழுது அடிமைத்தனத்தைக் கொண்டுவருகிறது; இது மரணத்துக்கேதுவான கனியைக் கொடுக்கிறது; ஆனால், கிறிஸ்துவோடு இணையும்பொழுது சுயாதீனத்தையும், தேவனுக்கேற்ற கனியையும் கொண்டுவருகிறது. மரணத்துக்கேதுவான கனிகள் மாம்சத்தின் கிரியைகளும் (**கலா.** 5:19-21), தேவனுக்கேற்ற கனி ஆவிக்குரிய கனியுமாகும் (**கலா.** 5:22-23).

நியாயப்பிரமாணம் மரிப்பதில்லை, அதுமட்டுமல்ல, அதன் தெய்வீக அதிகாரம் பாதிக்கப்படுவதுமில்லை; அதற்கு எதிராக, அதன் நீதியான கோரிக்கையைத் தேவனுடைய கிருபையினால் கொண்டுவரப்பட்ட கனி திருப்திசெய்தது. அது நிறைவேறினது கிறிஸ்துவின் மரணத்தினால் என்பதனையும், கிறிஸ்துவின் மரணத்துக்குள் விசுவாசியின் இணைப்பினால் என்பதனையும் நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும் (**ரோம.** 6:3-5). பழைய இஸ்ரவேல் மரித்து, புதிய இஸ்ரவேல் உருவாக்கப்படவேண்டும்; அதேபோல, இந்த அதிகாரத்தின் கறைபடிந்த வேசி கரை திறையற்ற மணவாட்டியாக மாறமுடியும் (**வெளி.** 19:7-8).

இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கோரிக்கையைத் திருப்திப்படுத்தினார் (**ரோம.** 10:4); நம்முடைய மீறுதல்களுக்கான நியாயத்தீர்ப்பின் வேதனையை அவர் பெற்று நமக்காக மரித்தார்; இந்த விதமாக நியாயப்பிரமாணத்தின் சாபத்தை அவர் திருப்தி செய்தார் (**கலா.** 3:13). கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாம் இப் பொழுது நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையடைந்திருக் கிறோம்; அப்படியே இஸ்ரவேலும் விடுதலையடையமுடியும். கிறிஸ்து செலுத்திய விலையின் அடிப்படையில் ஆண்டவர் இப்பொழுது இஸ்ரவேலைப் பார்த்து, விசுவாசத்தின்மூலம் "**ஆகிலும் என்னிடத்தில் திரும்பி வா**" என்று அழைக்கிறார்; மேலும், திசைமாறி, அடிமைத்தனத்திலிருக்கும் தற்போதைய கிறிஸ்தவர்களையும் அப்படியே அழைக்கிறார்.

ஜூலை

20

***சொ**ப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமி. 23:28).*

"கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்?"

பொய்யான தீர்க்கதரிசிகளையும் பொய்யான தீர்க்கதரிசனங்களையும் பற்றி **உபாகமம்** 18:21ல் கூறப்பட்டிருப்பதுபோன்று கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் எனப் பல கிறிஸ்தவர்கள் தடுமாறுகிறார்கள். கிறிஸ்தவ சபைகளுக்குள் பிசாசின் ஊடுருவல் தற்போதைய காலங்களில் மிகவும் அதிகமாயிருப்பதனால் (**1தீமோ.** 4:1), கிறிஸ்தவர்கள் பிசாசினுடைய தீர்க்கதரிசனங்களால் திசைதிருப்பப்பட்டு, தாங்கொணா வேதனையைப் பெறுகிறார்கள். இந்த நிர்ப்பந்தமான நிலைமைக்கு அவர்களே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்; ஏனெனில், வேதவார்த்தையின் அறியாமையே இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைக்குக் காரணமாயிருக்கிறது; கிறிஸ்தவர்களின் அறியாமையைச் சாத்தான் நன்கு பயன்படுத்துகிறான் (**ஓசி.** 4:6; **ஏசா.** 5:13-14).

எல்லாத் தீர்க்கதரிசனங்களும் தேவனுடையதல்ல என்பதனையும் அவைகள் தேவனால் ஏவப்பட்டவைகள் அல்ல

என்பதனையும் முதற்கண் நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்; இதனிமித்தமே தீர்க்கதரிசனம் நிதானிக்கப்படவேண்டும் எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார் (I**கொரி.** 14:29). அநேகமாக அவருடைய நாமத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்க்கதரிசனங்கள் அவருடையதல்ல என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; தற்பொழுது அநேகமான கிறிஸ்தவ சபைகள் வேறொரு இயேசுவை விசுவாசிக்கிறார்கள் (II**கொரி.** 11:4); அது வேறொரு இயேசுவானபடியினால் வேறொரு ஆவியை (பரிசுத்த ஆவியல்ல) அவர்கள் பெற்றிருக்கிறார்கள்; அந்த வேறொரு ஆவியின் ஏவுதலினால் கூறப்படும் தீர்க்கதரிசனங்களுக்கு சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அவர்கள் உபயோகிக்கிறார்கள்.

இதுவே சாத்தானின் வஞ்சகம்; வஞ்சகத்தின் அடிப்படையில் ஒரு பெரும் ராஜ்யத்தை அவன் உருவாக்கி வைத்திருக்கிறான் என்பதனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள். தீர்க்கதரிசனத்திற்கு வெறுமனே இயேசுவின் நாமத்தைத் உபயோகிப்பது போதுமான ஆதாரமல்ல. தீர்க்கதரிசனம் நிறைவேறுமாயின் அது தேவனிடத்திலிருந்து வந்ததே. ஆயினும், தீர்க்கதரிசனம் நிறைவேறினாலும் அது தேவனிடத்திலிருந்து வந்தது என்று கூறமுடியாது!!! ஏனெனில், தேவன் **உபாகமம்** 13:1-3ல் தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனத்தின்படி அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தாலும், அது தேவனுடைய வார்த்தையோடு ஒத்துப்போகுதோ என்பதனை முதற்கண் நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

ஜூலை

21

***தி**கிலும் படுகுழியும் பாழ்க்கடிப்பும் சங்காரமும் எங்களுக்கு நேரிட்டது. என் ஜனமாகிய குமாரத்தி அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து நீர்க் கால்கள் பாய்கிறது. கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்குமட்டும், என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகிறது. என் நகரத்தினுடைய குமா ரத்திகள் அனைவரினிமித்தமும், என் கண் என் ஆத்து மாவுக்கு நோவுண்டாக்குகிறது (புலம். 3:47-51).*

"என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது"

திகிலும் படுகுழியும் பாழ்க்கடிப்பும், சங்காரமும் யூதேயாவின ருக்கும், எருசலேம் இனத்தினருக்கும் ஏற்பட்டதை நேரடியாகவே எரேமியா கண்டான்; அந்தப் பாவத்தின் நிமித்தமே இவை யாவும் சம்பவித்தன; ஆனால், அவர்களோ மனந்திரும்ப மறுத்தனர். எருசலேமுக்கும், யூதேயாவினருக்கும் நேரிட்டதைத் தனிப்பட்ட முறையில் அனுபவித்த எரேமியாவின் கண்களில் தாரை தாரை யாகக் கண்ணீர் ஓடியது. எரேமியா, **அழுகையின் தீர்க்கதரிசி** என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

நோவாபோன்று நாற்பது வருஷகாலமாக, இஸ்ரவேலுக்கு வரப்போகிற அழிவைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசனமாக உரைத் தான்; அதுமட்டுமல்ல, அழிவு அண்மித்து வருவதை நேரடியாகக்

கண்டான்; ஆனால், ஜனங்களோ மனந்திரும்புவதாயில்லை; அதற்குப் பதிலாகப் பிடிவாதமும், தேவனுக்கெதிரான கலகமும் கூடினதேதவிரக் குறையவில்லை. எரேமியா தான் தீர்க்கதரி சனம் உரைத்த மாதிரியே பேரழிவு சம்பவித்ததை நேரடியாகக் கண்டான்; இதனிமித்தம் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் மரித் துப்போனார்கள்.

என் கண்கள் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகிறது என்று எரேமியா சொல்வதன்மூலம் அவனுடைய இருதயம் உடைந்து, இருதயத்திலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தது. அந்தப் பாரம் அவன் ஜீவனை இழந்துபோகக்கூடிய அளவுக்கு அவனைப் பயப்படுத்தியது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவுக்கும் எருசலேமுக்குமாகத் திறப்பின் வாசலில் நின்று விண்ணப்பம் பண்ணினான்; ஆயினும், மனந்திரும்பாத ஜனங்களுக்குத் தேவ னால் உதவிசெய்யமுடியவில்லை. பபிலோன் ராஜா எந்தவித மான இரக்கமும் இல்லாமல், ஸ்திரீகள் என்றும் குழந்தைகள் என்றும் பாராமல் சங்காரஞ்செய்தான். சுவிசேஷ ஊழியத்தின் நிமித்தம் உலகின் பல்வேறு பாகங்களுக்குச் சென்று சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கக்கூடிய பாக்கியத்தை அடியேனுக்குத் தேவன் தந்தார். மகா உபத்திரவகாலம் வெகு அண்மையில் இருக்கிறது (**மத்.** 24:21); உயிர்த்தெழுதல் இன்றைக்கோ நாளைக்கோ என்று இருக்கிறது (**1தெச.** 4:14-18); ஆனால், ஜனங்களோ அவ்வளவாய்க் கர்த்தரை ஏற்றுக்கொள்வதாயில்லை; கிறிஸ்தவர்களோ அவ்வள வாய் மனந்திரும்புவதாயில்லை; எரேமியாவின் புலம்பலை நான் நினைவுகூருகிறேன்.

ஜூலை

22

மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன் (எசேக். 3:17-18).

"காவலாளன்"

சுவிசேஷத்தைப் போதிக்கும் ஒவ்வொரு போதகனையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து காவலாளனாக நியமித்திருக்கிறார். ஜனங்களுடைய ஆத்துமாவுக்கு நாம் காவல்காரர்களாக இருக்க வேண்டும். பொய்யான உபதேசங்கள் ஊசலாடாதபடிக்கு நாம் விழித்திருக்கவேண்டும்; அப்படியே கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் **(மத். 7:15-18)**.

ஒரு போதகர் தவறாகப் போதிப்பதைக் கண்டால், அந்தத் தவ றான போதனையைச் சுட்டிக்காட்டவேண்டும்; அவசியமாக இருந் தால், அந்தப் பொய்யான உபதேசத்தையும், அதனைப் போதிப்ப வர்களையும் சுட்டிக்காட்டவேண்டும்; தாராளமான வேதவாக்கி யங்கள் இந்த விஷயத்தில் தெளிவாயிருக்கிறது (**IIதீமோ. 2:16-18**).

தவறாகப் போதிப்பவனை அல்லது அதனைக் கேட்கும் ஜனங் களை எச்சரிக்கை செய்யாவிட்டால், அவர்கள் தங்களுடைய ஆத்துமாவை இழந்துபோவார்கள்; தேவையான நேரம் எச்ச ரிக்கை செய்யாமல் மௌனம் காத்த அந்தப் போதகனுடைய கை யில் மரித்தவனுடைய இரத்தப்பழி கேட்கப்படும் (**எசேக். 3:18-21**); இதுவே தற்போதைய ஊழியத்தின் பாவமாகும்; படகை மோதிப் போடாதே என்கிறார்கள்.

அதற்கு நான் சொல்லும் பதில் என்னவென்றால், சிலுவை யல்லாத எந்த உபதேசமும் பொய்யான உபதேசமாகும்; பவுல் அப்போஸ்தலர் **கலாத்தியர் 1:8-9**ல் **"நாங்கள் உங்களுக்குப் பிர சங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத் திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசே ஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை யல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்"** எனக் கூறியிருக்கிறார்.

ஜூலை

23

***நீ**ங்களோ, ஆண்டவருடைய வழி செம்மையாய் இருக்கவில்லை என்கிறீர்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கேளுங்கள்; என் வழி செம்மையாயிராதோ? உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது (எசேக். 18:25).*

"என் வழி செம்மையாயிராதோ?"

பெரும் தத்துவஞானிகளின் நியாயவாதம் என்னவெனில், இந்தப் பூவுலகத்தில் பிறக்கும் மனிதர் யாவரும் ஜென்மசுபாவத்தோடு பிறப்பதற்கு ஆதாமின் பாவம் காரணமாயிருந்தால், ஆதாமினுடைய மீறுதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வித அதிகாரமும் இல்லாதிருந்த அவனுடைய சந்ததியினர் ஆதாமினுடைய பாவத்தின் தண்டனையைச் சுமக்கவேண்டுமென்கிற தேவனுடைய தீர்ப்பு நியாயமற்றது என்கிறார்கள்; ஆகையால், தேவன் ஆதாமின் சந்ததியினரைத் தண்டிக்கமுடியாது; அவர்கள் ஆதாமின் பாவத்திற்குப் பொறுப்பல்ல எனக் கூறித் தேவனுடைய மீட்பின் வழியை அநேகர் நிராகரிக்கிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்ப்பின் இந்த நியாயவாதம் சரியென்றே தோன்றும்.

இந்த விஷயத்தில் ஆதாமினுடைய சந்ததியினருக்கு எவ்விதத் தெரிவும் இல்லாமற்போனபடியினால், தாம் செய்யாத, தாம் அறியாத ஒரு மனுஷன் செய்த தவறின் பலாபலன்களை நாம் சுமந்து நரகத்திற்குச் செல்லவேண்டுமென்கிற தீர்ப்பை

எப்படி நீதியென்று சொல்லமுடியும்? என்ற அவர்களுடைய நியாயவாதம் முற்றிலும் சரியென்றே பொதுவாக ஏற்றுக்கொள்ள இடமுண்டு. பாவத்தினால் வீழ்ந்துபோன மனுஷனுக்குத் தேவன் ஒன்றுமே செய்யாதிருந்தால் அல்லது அந்த மனுஷ வீழ்ச்சியை அப்படியே ஏனோதானோவென விட்டிருந்தால், மனுஷனுடைய நியாயவாதம் சரியே.

ஆனால், தேவனோ தன்னுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பூவுலகத்திற்கு மனுஷனாக இயேசு என்னும் நாமத்தோடு அனுப்பி, அவரைப் பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்து, அவருடைய பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, மனுஷனுடைய ஜென்மசுபாவத்தின் தண்டனையை முற்றுமுழுவதுமாகத் தேவனுக்குச் செலுத்தி, அவன் செய்த பாவச்செயல்களை இயேசுவின் குற்றமற்ற இரத்தத்தினால் கழுவி, முழு மனுஷகுலத்திற்கும் ஜென்மசுபாவத்திலிருந்து விடுதலை கொடுத்த பின்பு, அவர் தாம் செய்துமுடித்த இரட்சிப்பின் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மனுஷன் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் செய்துமுடித்ததையும் விசுவாசிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் (**யோவா. 3:16, 18**).

ஆகையால், மனுஷனுக்குத் தேவனுடைய தண்டனை, அவன் மீட்கப்படாதிருந்ததினால் அல்ல, அவன் மனுஷ மீட்புக்காகத் தேவன் ஏற்படுத்தின மீட்பின் திட்டத்தை நிராகரித்ததற்கே என்பதனை மனுஷன் முதற்கண் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்; ஆகையால், தேவன் நீதியற்றவர் என்ற மனுஷனுடைய நியாயவாதம் உண்மைக்குப் புறம்பானது; இவ்வாறான நியாயவாதங்களை இஸ்ரவேலியர்களும் தேவனுக்கெதிராகக் கூறினார்களென **எசேக்கியேல்** 18:25 வலியுறுத்துகிறது; அதற்குத் தேவன் "..... **உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது** (**எசேக்.** 18:25) எனப் பதிலளித்தார்.

கிறிஸ்துவின் சிலுவை மனுஷனுடைய சகல நியாயவாதங் களுக்கும் தெட்டத்தெளிவாகப் பதிலளிக்கிறது. மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான சகலதும் சிலுவையில் அவனுக் காகச் செய்துமுடிக்கப்பட்டிருப்பதனால், மனுஷன் தனக்கு மீட் பைத் தந்த அந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்வானானால், அவனுக்குத் தங்குதடையின்றிக் கிருபையும் சமாதானமும் பெருகும் (**IIபேது.** 1:2). ஆகவே, மனுஷன் நேர்மை உள்ளவனாயின், மனுஷன்மேல் தேவன் வெளிப்படுத்தின அவரு டைய அன்பை அவன் நிராகரிக்கமுடியாது; அவன் கிறிஸ்துவின் சிலுவையை ஏற்றுக்கொள்ளும்வரையும் அது சாத்தியப்படாது.

ஜூலை

24

***அ**வர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன் (எசேக். 37:3).*

"இந்த எலும்புகள் உயிரடையுமா"

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, ஆறுகோடி யூதர்கள் நாசி கசாப்புக்காரர்களால் கொல்லப்பட்டனர்; இந்தப் பழமையான ஜனங்களை அழிப்பதற்குச் சாத்தான் திட்டம் தீட்டியிருந்தான். அந்த மனுஷரை மறுபடியும் புனருத்தாரணம் செய்யும் காலம் வந்துவிட்டது என்பதனை அவன் அறிவான்; சாத்தான் கடும் முயற்சி எடுத்தும் பயனளிக்கவில்லை. 2500 வருஷங்களுக்கு முன்பு கர்த்தர், தீர்க்கதரிசி எசேக்கியேலைக் கேட்ட கேள்விக்குப் பதில் ஜேர்மனி போலந்தின் ஈமச்சிதையிலிருந்து வெளிப்பட்டது. அந்தக் கேள்வி **இந்த எலும்புகள் உயிரடையுமா?** என்பதே யாகும். 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி இஸ்ரவேல் பிறந் தது; அதன்மூலம் எசேக்கியேல் அதிகாரம் 37 நிறைவேறும் பணி ஆரம்பமானது. அவர்களால் அது சாத்தியமாகாது; மறுபடியும் வாழ அவர்களால் முடியாது; அவர்களிடத்தில் அந்த நம்பிக்கை யில்லை; அது வெளிப்படையான உண்மையாயிருக்கிறது; ஆயி னும் 2500 வருஷங்களுக்குமுன்பு கர்த்தர் எசேக்கியேல் தீர்க்க தரிசிக்குச் சொன்னதைச் சற்று விபமாகப் பார்ப்போம்.

எசேக்கியேல் 37:12ம் வசனத்தில் **".....கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது; அப்படியே கர்த்தர் செய்தார். மனுஷ அழிவிலிருந்து நாடோடிகளாக உலக மெங்குமிருந்த யூதர்களைக் கொண்டுவந்து, எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்திற்கு 500 ஆண்டுகளுக்குப் பின்பு பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 11:26-27ல், ஏசாயா தீர்க்கதரிசியினாலும் **(ஏசா.** 27:9), எரேமியா தீர்க்கதரிசியினாலும் **(எரேமி.** 31:31) தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டவைகளை மேற்கோள்காட்டியிருந்தார்.

இஸ்ரவேல் தேவனுடைய தீர்க்கதரிசன மணிக்கூடு. இஸ்ரவேலைப் பார்த்து, ஒருவன் உண்மையில் நேரம் எவ்வளவு தாமதமாயிருக்கிறது என்பதனைச் சொல்லமுடியும்; உண்மையில் நேரம் மிகவும் தாமதமாகிவிட்டது. இஸ்ரவேல் யாக்கோபின் இக்கட்டுக்காலத்திற்குள் **(எரேமி.** 30:7) நுழையும் காலம் அண்மித்துவிட்டது; அந்தக் காலமே மிகுந்த உபத்திரவகாலமாகும் **(மத்.** 24:21); சகரியாவின் தீர்க்கதரிசனத்தின்படி மூன்றில் இரண்டு பங்கு இஸ்ரவேலியர்கள் மாண்டுபோவார்கள் **(சகரி.** 13:8-9). நம் பிக்கையற்றுப்போன சூழ்நிலைமையிலேயே மிகுதியான இஸ்ரவேலியர்கள் (மூன்றில் ஒரு பங்கு) கர்த்தரை நோக்கிக் கூப்பிடத் தொடங்குவார்கள்; அவர்களுடைய அழுகையை அவர் கேட்டு, அவர்களை விடுவிக்க வருவார்; அதுவே இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையாகும்; அப்பொழுதே இஸ்ரவேலியர்கள் முற்றுமுழுவதும் அவரை ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த அவமானத்தை இஸ்ரவேலியர்கள் எதிர்கொள்வது வேதனைக் குரியது; அப்படியே கோடிக்கணக்கானோர் மிகுந்த துன்பத்தின் மத்தியிலேயே ஆண்டவரை ஏற்றுக்கொள்கிறார்கள்; இது பாவ சுபாவத்தின் மிகப்பெரிய வஞ்சனையாகும்.

ஜூலை

25

***இ**ப்போதும் மனுபுத்திரனே, நீ கோகுக்கு விரோத மாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக் கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வரு கிறேன். நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழும்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும்பண்ணி (எசேக். 39:1-2),*

"அர்மகெதோன் யுத்தம்"

எசேக்கியேல் 38ம், 39ம் அதிகாரங்களில், வரப்போகிற அர்மகெ தோன் யுத்தத்தின் விபரம் தரப்பட்டிருக்கிறது; இந்த யுத்தத்தில் அந்திக்கிறிஸ்து, சாத்தான் மற்றும் அந்தகார சக்திகளின் கூட்டத் திற்கு இறுதித் தண்டனை கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத் திலேயே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வரு கையும் நடைபெறுகிறது; கடைசியாக இஸ்ரவேலியர்களும் கிறிஸ்துவிடம் கொண்டுவரப்படுகிறார்கள்.

தற்பொழுது கிறிஸ்தவ சபைகள் வரப்போகிற உயிர்த்தெழு தலுக்காகக் காத்திருக்கின்றன (**1தெச. 4:13-18**); இந்த உயிர்த்தெழு தல், இழுத்துக்கொள்ளப்படுதல், என்றும் அழைக்கப்படுகிறது.

உயிர்த்தெழுதலுக்குப் பின்பு ஒரு காலகட்டத்தில் மிகுந்த உபத் திரவகாலம் ஆரம்பிக்கிறது; இதுவே யாக்கோபின் இக்கட்டுக் காலம் (**எரேமி.** 30:7) என்று சொல்லப்படுகிறது. உலகம் முழு வதும் இக்கட்டுக் காலமாயிருந்தாலும் இஸ்ரவேலுக்கே மிகுந்த இக்கட்டுக்காலம். இந்த இக்கட்டுக்காலத்தை ஒருபொழுதும் இஸ்ரவேல் கண்டிராது என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார் (**மத்.** 24:21).

இந்தக் காலத்திலேயே கோகு என்று அழைக்கப்படும் அந்திக் கிறிஸ்து உத்தியோகபூர்வமாக முதல்முறையாகத் தோற்றமளிக் கிறான். முழு உலகத்தையும் ஆட்சிசெய்வதே அவனுடைய நோக்கமாகும். ஆனாலும், அவனுடைய ஆவியில் இஸ்ர வேலை அழிப்பதே முழுநோக்கமாயிருக்கும். பலஸ்தீனியருக் கும் இஸ்ரவேலியர்களுக்கும் இடையிலிருக்கிற தற்போதைய சச்சரவு அர்மகெதோன் யுத்தத்திற்கு வழிநடத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் நிச்சயமாக உண்டு என்பதனை உணர்த்துகிறது. ஆரம்ப காலத்தில் அந்திக்கிறிஸ்து இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண் பவனைப்போலத் தோற்றமளிப்பான் (**வெளி.** 6:2); ஆயினும், சீக்கிரத்தில் தன்னுடைய நிறமென்ன என்பதனையும், தான் யார் என்பதனையும் அவன் நிச்சயமாகக் காண்பிப்பான். அவன் தேவனை வெறுப்பவனும், குறிப்பாக யூதர்களை இன்னும் அதிக மாக வெறுப்பவனாகவும் இருப்பான்.

இஸ்ரவேலுடன் ஏற்படுத்திய 7 வருஷ ஒப்பந்தத்தின் நடுப் பகுதியில், அவன் அந்த உடன்படிக்கையை முறித்து, இஸ்ர வேலைத் தாக்கத் தொடங்குவான். 1948ம் ஆண்டு ஒரு தேச மாக இஸ்ரவேல் உருவாகியபின்பு அது முதல்முறையாகத் தோல்வியைச் சந்திக்கும்; பின்பு இறுதித் தீர்வைக் கொடுக்கும் முகமாக புதிய திருப்பம் ஆரம்பமாகும். ஆமான், ஏரோது, கிட்லர் செய்யமுடியாமற்போனதை அந்திக்கிறிஸ்து நிறைவேற்ற முயற்சிப்பான்; அதில் அவன் மிகவும் அண்மித்தும் வருவான்.

ஆனால், அர்மகெதோன் யுத்தத்தின்போது, இஸ்ரவேல் கர்த்தரை நோக்கி, ஒருக்காலும் இல்லாதவாறு உதவிக்குக் கெஞ்சுவார்கள். அவர் உதவிசெய்யாவிட்டால் அவர்கள் முற்றுமுழுவதுமாக அழிந்துபோவார்கள்; பழமையான இந்த யூதஜனத்தின் வேண்டுகோளுக்கு அவரின் இரண்டாம் வருகையே தீர்வாக அமைகிறது; அப்பொழுது இஸ்ரவேலின் தோல்வி தாடையிலிருந்து பறித்தது போலிருக்கும். இவை கடைசிக்காலத்தில் நிகழப்போகும் சம்பவங்கள்; இவை யாவும் வேதவார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கிறது; இது சாத்தியமானது கிறிஸ்துவின் சிலுவையினாலேயே (**எபி.** 13:20) என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்.

ஜூலை

26

பின்பு அவர் என்னைக் கீழ்த்திசைக்கு எதிர் வாச லாகிய வாசலுக்கு அழைத்துக்கொண்டுபோனார். இதோ, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த் திசையிலிருந்து வந்தது; அவருடைய சத்தம் பெரு வெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது; அவரு டைய மகிமையினால் பூமி பிரகாசித்தது (எசேக்.43:1-2).

"அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது"

கிறிஸ்துவுக்கு 500 வருஷங்களுக்கு முன்பு எருசலேமிலுள்ள தேவாலயத்தைவிட்டுப் பரிசுத்த ஆவியானவர் விலகிப்போன தைத் தீர்க்கதரிசியான எசேக்கியேல் கண்டான்; அங்கு பரிசுத்த ஆவியானவர் இருக்கமுடியாமற்போய்விட்டது. ஜனங்களுடைய விக்கிரகாராதனை மிகவும் கடுமையாக இருந்தபடியினால், கர்த் தராகிய ஆண்டவருக்கு இடமில்லாமற்போய்விட்டது; ஆனபடி யினால், அவர் விலகுமாறு வற்புறுத்தப்பட்டார். கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும், அவரு டைய இரண்டாம் வருகையின்போது ஏற்றுக்கொண்ட பின்பே, பரிசுத்த ஆவியானவர் இறுதியாகத் திரும்பிவருவார். எசேக்கி யேல் தன்னுடைய கடைசி 8 அதிகாரங்களிலும் விபரிக்கும் ஆலயம், ஆயிரம்வருஷகாலத்தின்போது கட்டப்பட்ட புது ஆலய மாகும்; அந்த ஆலயத்தில் பரிசுத்த ஆவியானவர் தங்குவார்;

ஏனெனில், இஸ்ரவேலியர்கள் தேவனோடு தங்களை ஒப்புரவாக் கிக்கொள்வார்கள்.

இஸ்ரவேல் தேவனுடைய தீர்க்கதரிசன மணிக்கூடு; புதிதாக உருவாக்கப்பட்ட இந்தத் தேசத்தை ஒருவன் பார்த்து, தீர்க்க தரிசன நேரத்தின் தாமதத்தைச் சொல்லக்கூடியதாயிருக்கிறது. இதுபற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு** 24:32ல் **"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்"** எனக் கூறியிருக் கிறார். இஸ்ரவேல் அத்திமரத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. 2000 வருஷங்களுக்குப் பின்பு, அது கிளைவிடத் தொடங்கி யிருக்கிறது; இதன் பொருள், 1948ம் ஆண்டு இஸ்ரவேல் ஒரு தேசமாகி, செயற்பட்டுக்கொண்டிருக்கிறது; ஆகையால், இஸ்ர வேலை ஒரு தீர்க்கதரிசன மணிக்கூடாகப் பார்க்கும்பொழுது **".....அவர் சமீபமாக வாசலருகே வந்திருக்கிறார் என்று அறி யுங்கள்" (மத். 24:33)** என்ற வார்த்தை எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது; சபையின் காலம் முடிவுபெறுகிறது. இஸ்ரவேல் மறுபடியும் தன்னுடைய இடத்திற்குத் திரும்பி வருகிறது; ஆனாலும், மிகுந்த இக்கட்டின் மத்தியிலேயே அது சாத்திய மாகும் **(எரேமி. 30:7)**. தேவனுடைய ஆவியானவர், இஸ்ரவேல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பே, அவர்களோடு தங்குவார். அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள்; இதனை சகரியா தீர்க்கதரிசி, தீர்க்கதரி சனமாகக் கூறியிருக்கிறான் **(சகரி. 13:6)**.

ஜூலை

27

நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரை யிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வள ரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவை களின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடி யினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும், அவைகளின் கனிகள் புசிப்புக்கும் அவைகளின் இலைகள் அவிழ்த்தத்துக்குமானவைகள் *(எசேக். 47:12).*

"புசிப்புக்கான சகலவித விருட்சங்கள்"

இந்த வேதவாக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விருட்சங் கள் நதியின் இரு பக்கத்திலும் வளர்ந்து, தொடர்ச்சியாகக் கனி களைக் கொடுத்தவண்ணமாயிருக்கும் என்று அறியக்கூடியதா யிருக்கிறது. அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத் திலிருந்து பாய்கிறபடியினால், மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்.; அவைகளின் கனிகள் புசிப்பதற் கும், இலைகள் மருந்துக்கும் உபயோகிக்கப்படும்; ஜீவனுள்ள ஊழியத்தின் குணாதிசயம் அப்படியாயிருக்கும். எந்த ஊழியம் கல்வாரியின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதோ, அது பரி சுத்த ஆவியினால் சக்தியூட்டப்பட்டதாயிருக்கும். வரப்போகிற

ஆயிரம்வருஷகால ஆட்சியில் பூமியில் இருவகையான ஜனங்கள் வாசமாயிருப்பார்கள். நாங்கள் இப்பொழுது இருக்கிற தோற்றத்தின் மாதிரியாக இருக்கும் மனுஷரும், மகிமையான சரீரத்தையுடைய மனுஷரும் இருப்பார்கள்.

மகிமையான சரீரத்தை உடையவர்களுக்கு இந்தக் கனி தேவையில்லை; ஆயினும், வழமையான மனுஷருக்குப் போஜனத்திற்குக் கனியும், மருத்துவத்திற்கு இலையும் தேவையாயிருக்கிறது. **"கனிகள்"** மனுஷனுடைய சரீரத்திற்குத் தேவையான சத்துக்களைக் கொடுக்கும்; அதேநேரம் **"இலைகள்"** மனுஷனுடைய நோய்களைக் குணமாக்கும்.

"கனிகளும்" **"இலைகளும்"** சந்தேகத்திற்கிடமில்லாமல் தேவையான அளவு உலகம் முழுவதும் கப்பலில் ஏற்றி அனுப்பப்படும். ஆயிரம் வருஷகால ஆட்சியின்போது உலகம், முன்பு ஒருபொழுதும் காணாத அமைதியையும், ஐசுவரியத்தையும், தேவனுடைய வல்லமையையும் காணக்கூடியதாயிருக்கும். இந்த விருட்சங்கள் ஜீவவிருட்சத்தைப்போல இருக்கும். அந்த சந்தோஷநாளிலே ஆச்சரியப்படத்தக்க அநேக விஷயங்கள் எல்லாருக்கும் காத்திருக்கிறது.

ஜூலை
28

***எ**க்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, நீங்கள் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளக்கடவீர்கள் (தானி. 3:5).*

"நேபுகாத்நேச்சாரின் பொற்சிலை"

தீவிரவாத மதக்கொள்கையை உடையவர்கள் தம்முடைய வழியை ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொருவரையும் நோக்கி: தாழ விழுந்து, தாம் உருவாக்கியிருக்கும் வழியை அல்லது தாம் உற்பத்திசெய்திருக்கும் சொரூபத்தை வணங்குமாறு கேட்டுக் கொள்கிறார்கள். இந்த மதத்தினர் தாம் தேவனைச் சேவிப்பதாகப் பலத்த சத்தத்தோடு உரிமை கொண்டாடினாலும், இவர்கள் அசுத்த ஆவியையே சேவிக்கிறார்கள். இவர்களுடைய மதவழி அல்லது இவர்கள் உற்பத்திசெய்திருக்கும் சொரூபம் போன்றவைகள் சாத்தானிடத்திலிருந்து பிறந்தவைகளேயன்றித் தேவனிடத்திலிருந்து உற்பத்தியானவைகள் அல்ல; மதத்திற்கும் தேவனுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை; அநேகமான மதங்கள் அதை ஏற்றுக்கொண்டவர்களிடம் அடிமைத்தனமான கீழ்ப்படிவை எதிர்பார்க்கிறது. இஸ்லாமிய மதத்தில் ஒருவன் ஆண்டவராகிய

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வானாயின் அவன் கொலை செய்யப்படக்கடவன் என அச்சுறுத்தப்படுகிறான். அநேகமானோர் கொலைசெய்யப்பட்டு, தம்முடைய விசுவாசத்திற்கு இன்றும் சாட்சிபகர்கின்றனர். அப்படியே, களங்கப்பட்ட, வேதத்திற்கு ஒவ்வாத கிறிஸ்தவத்தை உருவாக்கினது சாத்தானே. இவ்வாறான கிறிஸ்தவத்திற்கும், வேற்று மதங்களுக்கும் எந்தவித வேறுபாடுமில்லை. சாத்தான் களங்கப்பட்ட கிறிஸ்தவத்திலும் அடிமைத்தனமான கீழ்ப்படிவைக் கட்டாயப்படுத்துகிறான்; சாத்தான் பல்வேறு வழியில் இந்த அடிமைத்தனமான கீழ்ப்படிவைப் போதகர்கள்மூலமும், கிறிஸ்தவ மார்க்கங்கள் மூலமும் உறுதிப்படுத்துகிறான்.

உதாரணமாக, அநேகமான கிறிஸ்தவ மார்க்கங்கள் தம்முடைய சபையிலுள்ள எவனாவது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதற்கு அடையாளமாகிய அந்நியபாஷையில் பேசுவானாகில், அவன் உடனடியாகத் தான் பெற்ற மகத்துவமான ஈவைக் கைவிட்டு, தான் ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விசுவாசமாயிருக்குமாறு வற்புறுத்தப்படுகிறான். தாழவிழுந்து, தம்மால் உருவாக்கப்பட்ட தம்முடைய மார்க்கங்களைப் (சொரூபத்தை) பணிந்துகொள் என்று போதகர்கள்மூலம் சாத்தான் இந்த மார்க்கத்திற்கு அறிந்தோ அறியாமலோ பலியானவர்களை நிர்ப்பந்திக்கிறான். இதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்களாயின் அவர்கள் புறம்பே தள்ளப்படுகிறார்கள். பலருக்கு இது கொடுமையாகத் தென்படுவதால், அவர்கள் தேவன் கொடுத்த ஈவைப் புறம்பேதள்ளி, மறுபடியும் தம்முடைய மார்க்கத்தில் பலிக்கடாவாக இணைந்துகொள்கிறார்கள். இவர்கள்போன்றே இஸ்ரவேலியர்கள் மீட்பரையும் அவருடைய பலியையும் புறக்கணித்து, அந்நியதேவர்களைப் பணிந்துகொண்டார்கள். தேவன் இவர்களை நோக்கி: **எரேமியா 2:13-14**ல் கூறியிருப்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கும் சேர்த்தே என்பதனைத் தெளிவாகப் புரிந்துகொள்வோமாக.

சாத்தான் தன்னுடைய செயற்பாடுகளில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை; ஏனெனில், அவனுடைய வஞ்சகம் எவ்விதத் தடையுமின்றி அவனுக்குப் பலிக் கடாவான வர்களினால் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அவன் ஏன் தன் யுக்திகளை மாற்றவேண்டும்!! நம்முடைய மரணத் துக்கு அதிகாரியான சாத்தான் மாற்றமேயில்லாமல் தன்னுடைய வஞ்சக யுக்திகளைச் செயற்படுத்தி, **"தாழவிழுந்து, என்னைப் பணிந்து கொள்ளுங்கள்"** என்ற தன்னுடைய கொள்கையை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறான் என்பதனைப் பார்ப்போம்.

* அநேகமான கிறிஸ்தவ மார்க்கங்கள் தம்மிடத்தில் அண் டிக்கொள்கிறவர்களை நோக்கி: நீங்கள் உங்களுடைய விசுவா சத்தை உங்களுடைய மார்க்கத்திற்கு உறுதிப்படுத்திக்கொள்ளுங் கள்; இல்லையேல் புறம்பே தள்ளப்படுவீர்களென எச்சரிக்கிறது. அப்படியே சாத்தானைப் பிரதிபலிக்கும், ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரும் எச்சரித்தான் (**தானி.** 3:6). அப்படியே சாத்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை **"உயர்ந்த மலையின்மேல் கொண்டு போய்: உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவை களின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஷ்டாங் கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளை யெல்லாம் உமக்குத் தருவேன்"** (**மத்.** 4:8-9) என வாக்குறுதி கொடுத்தானே.

* அப்படியே கிறிஸ்து இப்பூமியில் பிரசன்னமாயிருந்த நேரம் அவரை ஏற்று, அவரை விசுவாசித்த யூத ஜனங்கள் யூத மார்க் கங்களினால் புறம்பே தள்ளப்பட்டனர் (**யோவா.** 9:34) அவ்வாறே ஆதிசபையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அநேகமான யூதர் கள் புறம்பே தள்ளப்பட்டனர். அப்படியே அநேகமான பெந்தெ கொஸ்தே சபைகள் தம்முடைய மார்க்கங்களின் சட்டதிட்டங் களையும் பிரமாணங்களையும் விசுவாசிக்குமாறு விசுவாசிகளை நிர்ப்பந்திக்கிறார்கள்; இது வேதவாக்கியத்திற்கு எதிரான வன் முறை என்று கூறுவதே பொருத்தமானது. யாராவது போதகர்

வேதவாக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, மார்க்கங்களின் பிரமாணங்களை உதாசீனஞ்செய்தால், உடனடியாகவே அந்தப் போதகர் **"தாழ விழுந்து, மார்க்கத் தலைவர்கள் ஏற்படுத்திய பிரமாணங்கள் என்னும் சொரூபத்தை வணங்குமாறு வேண்டப்படுகின்றனர்"**. அடிபணிய மறுத்தால், அந்தப் போதகரை நிர்மூலமாக்குவதற்கு சகல முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது.

இப்படியே பரிசேயர்களும் சதுசேயர்களும் வேதபாரகர்களும் ஏரோதியர்களும் செய்தார்கள். நாட்டின் சட்டதிட்டம் இடம் கொடுக்குமாயின் இந்த மார்க்கத் தலைவர்கள் தம்முடைய கொள்கைகளுக்கு எதிரானவர்களுக்கு மரணதண்டனை விதித்து, கர்த்தருடைய நாமத்தில் அதனை நிறைவேற்றவும் தயங்கமாட்டார்கள். கிறிஸ்துவுக்கும் அப்படிச் செய்தார்களே; அப்போஸ்தலர்களுக்கும் அப்படிச் செய்தார்களே; இன்றும் அப்படியே செய்கிறார்கள். இவர்கள் என்னையும் பிதாவையும் அறியாதபடியினால் இப்படிச் செய்கிறார்கள் என ஆண்டவர் கூறியிருக்கிறார் (**யோவா.** 16:3). இவர்கள் (கிறிஸ்தவ மதம்) வேதாகமத்தை முற்றுமுழுவதுமாக உதறித்தள்ளி, மனுஷனுடைய வழிகளாகிய பாரம்பரியம், கலாச்சாரம், சமூகவியல், மனுஷ ஞானம், மனோதத்துவ சாஸ்திரம், புராணக்கதைகள் மற்றும் தம் முடைய பிரமாணங்களை சுவிசேஷங்களாகப் போதிக்கின்றனர். இவர்கள் வீணாய்த் தேவனுக்கு ஆராதனை செய்கிறார்கள் (**மத்.** 15:9). இதோ, தம்முடைய அந்தகார வழியைவிட்டு, இவர்கள் தேவனிடம் திரும்பாவிட்டால், தம்முடைய ஆத்துமாவையே இழந்துபோவார்கள். இவர்களை நான் அறியேன் என ஆண்டவர் கூறுகிறார் (**மத்.** 7:21-23; **லூக்.** 13:25-28); இவர்களைவிட்டு விலக வேண்டும் எனப் பவுல் அப்போஸ்தலரும் கூறியுள்ளார் (**IIகொரி.** 6:14-18).

ஜூலை

29

***அ**வருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார்; அவருடைய மகிமை அவரைவிட்டு அகன்றுபோயிற்று (தானி. 5:20).*

"மகிமை அவரைவிட்டு அகன்றுபோயிற்று"

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தற்பெருமையினால் மேட்டிமை கொண்டிருந்தான்; இதுவே அவனுடைய வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாயிருந்தது. தேவனுடைய ராஜ்யத்திற்கு எதிராக மனுஷன் கிளர்ச்சி செய்யும்போது, அவனுடைய பாவத்தின் நிமித்தம் அவனுக்குள் மேட்டிமை ஆட்கொள்கிறது; தேவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் யாவருடைய பிரச்னையும் இதுவே. அப்படியே கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த மேட்டிமையே மிகமுக்கியமான தடையாயிருக்கிறது. உலகத்தில் அன்பு கூருவதே இந்த மேட்டிமைக்கு ஆதாரமாயிருக்கிறது (**I யோவா. 2:15-16**).

அதெப்படி கிறிஸ்தவர்களாகிய நாம் மேட்டிமைக்குள் அகப்பட முடியும் எனப் பலர் ஆச்சரியப்படுவதுண்டு. உதாரணமாக, ஒரு விசுவாசி தன்னுடைய சுயபலத்தினால் ஒருபொழுதும் இந்தக் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தமுடியாதென்பதை அவ்வளவு இலகுவாக ஏற்றுக்கொள்வதில்லை; ஆயினும் தனக்குக் கிறிஸ்து

உதவுவதாகவும், வேதவசனங்களில் தான் பிரியமாயிருக்கிறேன் என்றும் தன்னைப்பற்றிப் பிரகடனப்படுத்துவதுண்டு; அவன் கிறிஸ்துவின் சிலுவையை அறியாவிட்டால், அவனை எப் படியோ மேட்டிமை ஆளத்தொடங்கும். கிறிஸ்துவின் சிலுவை ஒன்றே மேட்டிமையை அப்புறப்படுத்தமுடியும். ஆனபடியி னாலேயே ஆண்டவர் **லூக்கா** 9:23ல் **"ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலு வையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்"** எனக் கூறியிருக்கிறார்.

மேட்டிமையை அப்புறப்படுத்துவதற்குத் தேவனால் ஏற்படுத் தப்பட்ட வழி அநுதினமும் சிலுவையைச் சுமப்பதேயாகும். மேட்டிமை, எந்தக் கட்டத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் அவ லட்சணமானது; எல்லாவற்றிற்கும் மேலாக மத மேட்டிமை கொடியதும் சகல அவலட்சணத்துக்கும் தலையாயிருக்கிறது.

ஆபிரகாம் அவ்வளவு இலகுவாக இஸ்மவேலைக் கைவிட வில்லை. இஸ்மவேலையும் அவனுடைய தாயையும் புறம்பே தள்ளு என்று தன் மனைவியாகிய சாராள் கேட்டுக்கொண்டதை நிறைவேற்றமுடியாமல் போராடிக்கொண்டிருந்தான்; ஏனெனில், இஸ்மவேல் அவனுடைய மாம்சத்தினால் உருவாக்கப்பட்ட கனி; இது கெட்ட கனி; அப்படியே நாமும் நம்முடைய சுயதிட்டத் தினால் உருவாக்கிய கனியை அவ்வளவாய் இலகுவாகக் கை விடுவதில்லை; இதற்கு முக்கியகாரணம் மேட்டிமையே. ஒரு வன் கிறிஸ்துவையும், அவர் அவனுக்காகச் சிலுவையில் நிறை வேற்றியதையும் முற்றுமுழுவதுமாகத் தன் இருதயத்தில் விசு வாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பானாகில் (**யோவா.** 15:4-11) அவன் தன் சுயபலத்தினால் எதையும் செய்யமுடியாது என்பதனையும், தான் கிறிஸ்துவுக்கு முன்பாகத் தன் சுயபலத் தினால் ஒருபொழுதும் நீதியாகவும் பரிசுத்தமாகவும் வாழமுடி யாது என்பதனையும் தப்பாமல் அறிந்துகொள்ளுவான்; அதுமட்டு மல்ல, தேவன் கிறிஸ்துவின் சிலுவையைத்தவிர (**Iகொரி.** 2:2)

வேறொன்றையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதனை அவன் அப்பொழுது உணர்ந்துகொள்ளுவான்.

கிறிஸ்துவின் சிலுவை மனுஷனுடைய எந்தத் திட்டத்தையும் பெறுமதியற்றதாக்கி, செயலற்றுப் போகப்பண்ணுகிறது. ஒருவனும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதை மீண்டும் நிறைவேற்றவேண்டியதில்லை. அந்த வீணான முயற்சியைக் கைவிட்டு, கிறிஸ்துவையும், அவர் அவனுக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசித்து, மகிமையையும் கிருபையையும் சமாதானத்தையும் (**ரோம.** 2:10) பெறவேண்டியதே, தேவன் அவனுக்கு நியமித்திருக்கும் **ஒரேவழியாகும்** (**ரோம.** 5:1, 6:2-5, 11, 14, 8:1-2, 11).

ரோமர் 4ம் 5ம் அதிகாரங்கள் முற்றுமுழுவதுமாக விசுவாசமே தேவையானது என்பதனை உறுதிப்படுத்தி, கிரியைகளில் மனுஷருடைய நாட்டத்தைச் செயலற்றுப்போகப்பண்ணுகிறது. இந்தத் தேவப்பிரகடனத்தை அவ்வளவாய் மனுஷரோ கிறிஸ்தவர்களோ ரசிப்பதில்லை. எப்படி ஒரு அவிசுவாசி தன்னுடைய ஆத்துமாவைக் காப்பாற்றமுடியுமெனக் கடைசிவரையும் போராடுகிறானோ அப்படியே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களும் தம்மைத்தாம் பரிசுத்தப்படுத்தமுடியுமென்றும், தேவனுக்கு முன்பாக நீதியாக வாழமுடியுமென்றும், ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தம்முடைய பங்களிப்பும் உண்டு என்றும் நிச்சயமாக நம்புகிறார்கள். உலகத்தினர் இடைவிடாமல் பற்பல சொரூபங்களைத் தம்முடைய கைப்பலத்தால் உற்பத்திசெய்வதுபோல, கிறிஸ்தவர்களும் இடைவிடாமல் தேவனுக்குப் பற்பல பலிகளைத் தம்முடைய மாம்சத்தினால் காயீனைப்போல உற்பத்தி செய்து, தேவனுக்குப் படைக்கின்றனர். இவ்வாறான வீணான முயற்சிகளைத் தேவன் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்வதில்லை; ஆனால், அந்த உண்மையை ஏற்றுக்கொள்வதென்பது அநேகமான கிறிஸ்தவர்களால் முடியாமல் இருக்கிறது. இதுவே மேட்டிமையின் செயற்பாடு; இதுவே வஞ்சகத்தின் செயற்பாடு;

இதுவே சாத்தானின் செயற்பாடு. கிறிஸ்தவர்களின் இடறலுக்கு இந்த மேட்டிமையே முக்கியமான காரணமாயிருக்கிறது (**கலா.** 5:11). இந்த உண்மையை அறிந்து, புரிந்து, இருதயத்தில் உணர்ந்து கிறிஸ்துவின் சிலுவையை அநுதினமும் சுமப்போமாக (**லூக்.** 9:23).

ஜூலை

30

அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்பு களில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம் பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெரு மையானவகளைப் பேசும் வாயும் இருந்தது (தானி. 7:8).

"சின்ன கொம்பு"

தானியேலினால் முதலில் கொம்புகளைப்பற்றிய விபரத்தை விளங்கமுடியவில்லை. ரோமப் பேரரசு வந்தது; ஆயிரம் வரு ஷங்களுக்கு மேலாக வல்லமையாக ஆட்சிசெய்தது; அதன்பின் அது சென்றுவிட்டது; ஆயினும், பத்துக்கொம்புகள் இன்னும் வல்லமையாக எழும்பவில்லை. முன்பிருந்த சோவியப் பேரரசு உடைபட்டபின் இந்த வேதவார்த்தை நிறைவேற ஆரம்பித்தது. ஒருவன் சற்று நுணுக்கமாக இதனைப் பரிசீலனை செய்வானா யின், அந்தப் பத்துக்கொம்புகளும் விபரிக்கப்படாத மிருகத்தின் ஒரு பகுதி என்பதனையும், அது ரோமப் பேரரசின் கட்டுப்பாட் டின் கீழிருந்த பிரதேசம் என்பதனையும் அறிந்துகொள்ளமுடியும். "**இதோ, அவைகளுக்கிடையில் வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று**" என்ற சொற்றொடரின் பொருள், பத்துக்கொம்புகள் பூரணமாய் வளர்ந்த பின்பே, அந்தச் சின்ன கொம்பாகிய அந்திக் கிறிஸ்து எழும்பிற்று; "**அதற்கு முன்பாக முந்தின கொம்பு களில் மூன்று பிடுங்கப்பட்டது**" என்பதன் பொருள், யுத்தத்தில்

அந்த மூன்று தேசத்தையும் சின்ன கொம்பு தோற்கடித்ததன் நிமித்தம் மற்ற நாடுகள் சின்ன கொம்புக்குப் பணிந்து, தங்களைச் சின்ன கொம்போடு இணைத்துக்கொண்டன; இந்தச் சம்பவம் உபத்திரவகாலத்தின் முதல் மூன்றரை வருஷ காலத்தில் சம்ப விக்கும்.

ஜூலை

31

நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள் (தானி. 9:23).

"நீ மிகவும் பிரியமானவன்"

தீர்க்கதரிசியான தானியேல் இஸ்ரவேலுக்காக விண்ணப்பிக்கும்பொழுது மேற்கூறிய இந்த வார்த்தைகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இதே மாதிரியான வார்த்தைகள் **தானியேல் 10:11**லும் **10:19**லும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் இஸ்ரவேலின் ஆவிக்குரிய நிலைமையையும் அதன் இறப்பியல் மாற்றத்தையும் (Physical Condition) அவதானித்த தானியேல் துயரப்பட்டு இருதயம் நொருங்குண்டவனாயிருந்தான். சந்தேகத்திற்கிடமின்றித் தானியேல் அனுபவித்துக்கொண்டிருந்த அழுத்தம் சமாளிக்கமுடியாதவாறு அவனைத் திணறடித்துக்கொண்டிந்தது; இந்தச் சூழ்நிலையில் இஸ்ரவேலுக்கும் தனக்கும் இரக்கம் கிடைக்கவேண்டுமெனத் தேவனிடம் கெஞ்சிக்கொண்டிருந்தான். அவன் தீவிரமான ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிருந்தான்; ஆனால், தானியேலுக்கு ஞாபகப்படுத்தவேண்டியது என்ன என்பதனைத் தேவன் நன்கு அறிந்து **"பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக....."** (**தானி. 10:19**) எனக் கூறியிருந்தார். நாம் அனுபவிக்கும் ஆவிக்குரிய யுத்தங்

களையும், தீவிரமான அழுத்தங்களையும், நோய்களையும், நிதி நெருக்கடிகளையும் மற்றும் சகலத்தையும் தேவன் நன்கு அறி வார். தானியேலுக்கு அவர் கொடுத்த அதே வாக்குத்தத்தம் நமக்கும் உரியதே (**தானி.** 10:19).

ஆகஸ்ட்

1

உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் (தானி. 12:1).

"மிகுந்த உபத்திரவகாலம்"

மிகாவேல் பிரதான தேவதூதனாகும்; அவனை இங்கு பெரிய அதிபதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; அவனே இஸ்ரவேலைப் பாதுகாக்கும் கர்த்தருடைய தூதனாயிருக்கிறான். அவனையே **"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதி"** என்று தானியேலுக்குச் சொல்லப்பட்டது. மிகாவேல் இல்லாவிட்டால் இஸ்ரவேல் இந்த நேரத்தில் முற்றுமுழுவதும் அழிக்கப்பட்டிருக்கும். **"யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்"** என்பதனையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத். 24:21)** எனக் கூறியிருக்கிறார்.

அந்தக் காலம் உபத்திரவ காலத்தின் பிற்பகுதியான மூன்றரை வருஷமாகும்; **"அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படும் உன் ஜனங்கள் அனைவரும்**

விடுவிக்கப்படுவார்கள்" என்ற வசனம், உபத்திரவகாலத்தின் மத்தியில் இழுத்துக்கொள்ளப்பட்ட 1,44,000 யூதர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறது; இதனையே **வெளி. 7:4-8, 12:2, 4, 14:1**ல் காணக் கூடியதாயிருக்கிறது.

இந்த 1,44,000 யூதர்கள் எப்படிக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வைச் சொந்த இரட்சகராக உபத்திரவகாலத்தின் முதல் மூன்றை வருஷகாலத்தில், அதுவும் இஸ்ரவேலியர்கள் அந்திக் கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொண்ட காலத்தில், ஏற்றுக் கொண்டார்கள் என்பதனைத் தற்பொழுது அறியமுடியாமலிருக் கிறது; ஆயினும், வேதாகமத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது நிச் சயமாக நடந்தேதீரும்.

அடுத்ததாக, இங்கு சபையைப்பற்றித் **தானியேல் 12:3**ல் சொல் லப்பட்டிருப்பதைத்தவிர, வேறொரு இடமும் சபையைப்பற்றிச் சொல்லப்படவில்லை; அதற்குரிய காரணத்தை இலகுவாக அறி யக்கூடியதாயிருக்கிறது; ஏனென்றால், இங்கு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் **"உன் ஜனங்களுக்கு" (தானி. 10:14)** என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **தானியேல் 12:1**ல் சொல்லப் பட்டிருக்கிற **"புஸ்தகம்"**, ஜீவபுஸ்தகத்தைப்பற்றியே குறிப்பிடு கிறது என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

ஆகஸ்ட்

2

பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார் கள் (தானி. 12:2).

"நித்தியஜீவனுக்கும், நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்"

இந்த வேதவாக்கியத்தில் இரண்டு உயிர்த்தெழுதல் சுட்டிக் காட்டப்படுகிறது; இரண்டு உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலம் ஆயிரம் வருஷகாலமாகும் (**வெளி. 20:3, 5-6; யோவா. 5:28**). முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபற்றுபவர்கள் **"நித்திய ஜீவனுக்கு"** உயிர்ப்பிக்கப்படுவார்கள்; அந்த உயிர்த்தெழுதலில் பங்குபற்றுபவர்கள் ஆபேலிலிருந்து அந்த உயிர்த்தெழுதல் வரை பூமியில் வசித்த சகல மறுபிறப்புப்பெற்ற விசுவாசிகளையும் உள்ளடக்கும்; இதனைப்பற்றியே **1தெசலோனிக்கேயர் 4:15-18**ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உயிர்த்தெழுதல், **"நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும்"** எழுந்திருப்பவர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது; இது முதலாம் உயிர்த்தெழுதலுக்குப்பின் ஆயிரம் வருஷகாலம் சென்றபின்பு நிகழ்கிறது; உண்மையில் கிறிஸ்துவின் ஆயிரம் வருஷகால ஆட்சியின் முடிவில் இது நடைபெறும். ஆரம்பத்திலிருந்து மரித்துப்போன சகல அவிசுவாசிகளும் இதற்குள்

அடங்குவார்கள்; இந்தக் காலத்தையே **"வெள்ளைச் சிங்காசனத் தீர்ப்பு"** என வேதம் குறிப்பிடுகிறது (**வெளி.** 20:1-4, 11-15).

இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றிய தையும் விசுவாசிப்பவர்கள் **"நித்திய ஜீவனுக்கும்"**, இயேசு கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசியாதவர்கள் **"நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும்"** எழுந்திருப்பார்கள். இவர்கள் மரிக்கும்முன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தாராளமான சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகிறது; **"தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாத வைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலக முண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆத லால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை"** எனப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 1:19-20ல கூறியிருக்கிறார்; **எபிரெயர்** 2:4ல **"அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்"** எனக் கூறி யிருப்பதைச் சற்று நிதானிப்போமாக.

ஆகஸ்ட்

3

***அ**வர்கள் பொல்லாப்பையெல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்திக்கிறதில்லை; இப்போதும் அவர்களுடைய கிரியைகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டது; அவைகள் என் முகத்துக்கு முன் இருக்கிறது (ஓசி. 7:2).*

"அவர்கள் பொல்லாப்பையெல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன்"

கர்த்தராகிய ஆண்டவரைத் தற்போதைய சமூகம் **"மேல் வீட்டில் இருப்பவர்"** என்று அற்பமாய் எண்ணிக்கொள்கிறார்கள். அவர்களிடத்தில் தேவபயம் இல்லை; அவர்களுக்குத் தேவபய மிருந்தால், தாங்கள் செய்கிற துணிகரமான பாவங்களை அவர் கள் அடிக்கடி செய்யமாட்டார்கள். **எபிரெயர்** 8:12ல் **"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினை யாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** எனச் சொல் லப்பட்டிருக்கிறது; ஆனால், மனந்திரும்புதல் இல்லாவிட்டால், அவர் நம்முடைய பொல்லாப்பை எல்லாம் நினைவில் வைத் திருப்பார்; இது மெய்சிலிர்த்துப்போகிற சிந்தனை; ஆனபடியி னால், நியாயத்தீர்ப்பு வருகிறது என்று எதிர்பார்க்கவேண்டியதே; இந்த நியாயத்தீர்ப்பு அவர்களைச் சூழ்ந்துகொள்வதற்கு

அவர்களே காரணமாயிருக்கிறார்கள். **அவைகள் என் முகத்திற்கு முன் இருக்கிறது** என்ற சொற்றொடர் அறிக்கைபண்ணப்படாத பாவங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறது; எல்லா அறிக்கை பண்ணப்படாத பாவங்களும் அப்படியே இருக்கிறது. இது உண்மையில் உடன்படிக்கைப் பெட்டியின்மேலுள்ள கிருபாசனத்தைக் குறிப்பிடுகிறது; அது ஆலயத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்தது. கேரூபீன்கள் அந்த உடன்படிக்கைப்பெட்டியின் மேலுள்ள கிருபாசனத்தைத் தொடர்ச்சியாகப் பார்த்துக்கொண்டேயிருந்தது. கர்த்தர் அந்த நேரத்தில் ஆலயத்தில் கிருபாசனத்தின் மேல் வாசமாயிருந்தார். உடன்படிக்கைப்பெட்டிக்குள் 10 கட்டளைகள் இருந்தது; சகல 10 கட்டளைகளும் மனுஷனால் உடைத்தெறியப்பட்டிருக்கிறது; அதனைக் கர்த்தர் இடைவிடாமல் பார்த்தவண்ணமாயிருக்கிறார்; ஆயினும், ஒரு வருஷத்தில் ஒருமுறை வரும் பாவநிவிர்த்தி நாளன்று பிரதான ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வந்து, கிருபாசனத்தின்மேல் களங்கமில்லாத ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை 7 தரம் பூசுவார்; பூசியவுடன் கேரூபின்களின் பார்வைக்கும், கர்த்தருடைய பார்வைக்கும் ஒரு கேடயம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் போடப்படுகிறது.

இதேபோன்றே இஸ்ரவேலியர்கள் எகிப்தைவிட்டு, வெளியேறுவதற்கு முன்பு, அவர்களுடைய வீட்டுவாசல் இரத்தத்தால் பூசப்பட்டது; இதனிமித்தமே **"இரத்தத்தைக் கண்டவுடன் நான் கடந்துபோவேன்"** என்று **யாத்திராகமம்** 12:13ல் சொல்லப்பட்டது. நம்முடைய பாவங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படாவிட்டால், அவைகள் தேவனுக்கு முன்பாயிருக்கிறது. இஸ்ரவேலியர்களுடைய பாவத்தைத் தேவன் கழுவிப்போட விருப்பமாயிருந்தாலும், அவர்கள் அவரை அனுமதிப்பதில்லை; அப்படியே உலகமும், அநேகமான கிறிஸ்தவர்களும் தற்பொழுது தங்களுடைய பாவத்தைக் கழுவ அனுமதிப்பதில்லை.

ஆகஸ்ட்

4

***எ**ப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கி றான், அவனுக்குப் புத்தியில்லை; எகிப்தியனைக் கூப் பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள் (ஓசி. 7:11).*

"எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான்"

கர்த்தராகிய ஆண்டவர் தன்னைத் தேடாதவர்களையும், தன் னுடைய ஆலோசனையை நாடாதவர்களையும் **"பேதைகள்"** என்று அழைக்கிறார். புறா தனக்கு ஆகாரத்தைத் தேடி, பறவை பிடிக்கிறவனின் வலைக்குள் எவ்வித கவனமும் இல்லாமல், சந்தேகப்படாமல் மாட்டிக்கொள்கிறது. தீர்க்கதரிசி ஓசியா எப்பி ராயீமை புறாவுக்கு ஒப்பிட்டு, எவ்வித உணர்வுமில்லாமல் தானி யத்தைத் தேடி, தனக்கு விரிக்கப்பட்டிருக்கிற வலைக்குள் அகப் படுகிற புறாவைப்போலிருக்கிறான் எனக் கூறியிருக்கிறார். அதேபோல, எப்பிராயீம் அசீரியரிடத்திலும், எகிப்தியரிடமும் உதவியை நாடும்பொழுது தங்களுக்குத் தாங்களே துன்பத்தைத் தேடிக்கொள்கிறார்கள்; மேலும், புறாவிடம் கசப்பு இல்லை; அதே நேரம் புறா ஒரு புத்திசாதுரியமான பறவையுமில்லை. இதனை அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்; அப்படியே ஏராளமான கிறிஸ்தவ சபைகளும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் புறாவைப்போல, தேவனை விட்டு விலகி, திசைமாறி, பொய்யான உபதேசத்தின் ஆபத்தை

உணராமலிருக்கிறார்கள்; ஆகையினால், இலகுவாக சாத்தானின் வலைக்குள் மாட்டுப்பட்டுப் போகிறார்கள்; அதெப்படியெனில், ஐசு வரியத்தின் செய்தியின் தூண்டிலைப் பிடிக்கும்பொழுது கிறிஸ்த வர்கள் எந்தளவு ஆபத்திற்குள் இழுபட்டுப்போகிறார்கள் என்ப தனை அவர்களால் உணரமுடியாமலிருக்கிறது.

ஆகஸ்ட்

5

***எ**ப்பிராயீமின் அக்கிரமம் கட்டிவைத்திருக்கிறது; அவன் பாவம் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது (ஓசி. 13:12).*

"அக்கிரமம் கட்டிவைக்கப்படும்; பாவம் பத்திரப்படுத்தப்படும்"

இதன் பொருள், செய்த அக்கிரமங்கள் மன்னிக்கப்படவில்லை; ஆனபடியினால், அவைகள் சுத்திகரிக்கப்படவுமில்லை (**ரோம.** 2:5). பாவிக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் விரோதமாகவு மிருந்த கையெழுத்தைக் குலைப்பது, அதனை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையில் ஆணியடிப்பது (**கொலோ.** 2:14-15) ஆகியன, அக்கிரமத்தைக் கட்டிவைப்பதற்கும் பாவத்தைப் பத்தி ரப்படுத்துவதற்கும் எதிரான செயலாயிருக்கிறது. **ஓசியா** 13:12ல் சொல்லப்பட்ட வேதவாக்கியம் என்னவென்றால், கணிப்பு நாள் நிச்சயமாக எப்பிராயீமுக்கு வரும்; அவர்கள் மனந்திரும்பாதபடி யினால் (**iயோவா.** 1:9), அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படவு மில்லை கையெழுத்து குலைக்கப்படவுமில்லை. ஒரு லோபி தன்னுடைய பணத்தை ஒரு பையில்போட்டு, அது தொலைந்து போகாதபடிக்கு அதற்கு முத்திரையிடுகிறான்; அப்படியே சர்வ வல்லவர் எப்பிராயீமின் பாவத்தைக் குவித்து, அதை ஒரு பை யில்போட்டு, அதைக் கட்டிவைக்கிறார்.

இதேமாதிரி **யோபு** 14:17ல் **"என் மீறுதல் ஒரு கட்டாகக் கட்டப்பட்டு முத்திரைபோடப்பட்டிருக்கிறது, என் அக்கிரமத்தை ஒருமிக்கச் சேர்த்தீர்"** என யோபு தெரிவித்திருப்பது **ஓசியா**

13:12க்கு ஒத்திருக்கிறதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது. வழமையாக மனிதர் பையில் அல்லது பணப்பையில் அல்லது பொக்கிஷக் களஞ்சியத்தில் பணத்தைப் போடும்பொழுது அதனை எண்ணுவதுண்டு; அப்படியே எப்பிராயீமுடைய பல்வேறுவகையான அக்கிரமங்கள் எண்ணப்பட்டு, கோபாக்கினையின் களஞ்சியத்தில் போடப்பட்டிருக்கிறது. அப்படியே பாவியான மனுஷனும் கோபாக்கினையின் நாளுக்காகத் தன்னுடைய அக்கிரமங்களைக் குவித்துவைக்கிறான் (**ரோம. 2:5**).

இந்த வேதவார்த்தையை அநேகர் அறிந்திருக்கிறார்கள்; ஆனால், அதனில் பொதிந்திருக்கும் நியாயத்தீர்ப்பு மகா பயங்கரமானது என்பதனை அறியாமலிருக்கிறார்கள். நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், பழைய ஏற்பாட்டில் எப்பிராயீமுக்கு இப்படியாகச் சொல்லப்பட்டது; அப்படியே எண்ணிலடங்காத மனிதருக்கும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது; ஏனென்றால், அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் செல்வதில்லை; இதன் நிமித்தமே பவுல் அப்போஸ்தலர் **ரோமர் 4:8**ல் **"எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்"** எனச் சொல்லியிருக்கிறார்.

ஆகஸ்ட்

6

***இ**தோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமு மல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்ட வர் சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள் கர்த்தரு டைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசை மட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள் (ஆமோ. 8:11-12).*

"பஞ்சம்"

எலியாவின் காலத்தில் இஸ்ரவேலுக்கு 3½ வருஷகாலமாகப் பஞ்சம் அனுப்பப்பட்டது; தேசத்தில் ஏற்பட்ட வறட்சியின் தாக்கம் தேசத்தின் ஆவிக்குரிய நிலைமையைப் படம்பிடித்துக்காட்டியது. துரதிஷ்டவசமாக இன்றும் நம்முடைய தேசத்தில்மட்டுமல்ல, கிறிஸ்தவ சபைகளிலும் பஞ்சத்தைக் காணக்கூடியதாயிருக் கிறது; தேவனுடைய வார்த்தை கிறிஸ்தவ சபைகளில் பஞ்சமா யிருக்கிறது; பரிசுத்த ஆவியானவருடைய அசைவாட்டமும், செயற்பாடும் பஞ்சமாயிருக்கிறது. கிறிஸ்தவ சபைகளில் சிலு வையின் செய்தி கைவிடப்பட்டவுடன் பொய்யான உபதேசங்கள் சபைகளுக்குள் ஊடுருவ ஆரம்பிக்கிறது; சிலுவையின் செய்தி

பஞ்சமாயிருக்கிறது; வேறொரு இயேசு சிங்காசனத்தை ஆக்கிர மிக்கிறான் (**IIகொரி. 11:4**); வேறொரு சுவிசேஷம் பிரசங்கிக் கப்படுகிறது; வேறொரு ஆவி சபைகளில் பரவலாகப் பிரசன்ன மாயிருக்கிறது.

கிறிஸ்தவ சபைகள் தேவனுடைய வழியைவிட்டு விலகி, கிரியைகளிலும், சேவைகளிலும் தங்கியிருந்தால், ஒருவனும் தேவனுடைய வல்லமையினால் உருமாற்றமடையப் போவ தில்லை; தேவனுடைய வழி கிறிஸ்துவின் சிலுவையாகும். கிறிஸ்துவின் சிலுவை பிரசங்கிக்கப்படாத எந்த இடமும், அது ஒரு சமூக ஸ்தாபனமேதவிரக் கிறிஸ்தவ சபைகள் அல்ல. மேலும், சபை எந்தப் பக்கம் செல்கிறதோ அந்தப் பக்கமே சபை யினர் செல்கின்றனர். நம்முடைய தேசம் இப்பொழுது படுகுழி யில் இருக்கிறது; அங்கு கேடானதை நல்லது என்றும், நல்ல தைக் கேடு என்றும் அழைக்கிறார்கள். இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு அரசியல் தலைவர்களை மட்டும் குறைகூறாமல், போதகர்களிலேயே குற்றஞ்சுமத்தவேண்டும்.

ஆயினும், நாம் நம்பிக்கையை இழந்துபோகவேண்டிய தில்லை; ஏனென்றால், நம்முடைய கர்த்தராகிய ஆண்டவர் பெருந்திட்டத்தை நமக்காக வைத்திருப்பதை வாக்குத்தத்தமாக **அப்போஸ்தலர்** 2:17-18ல் சொல்லியிருக்கிறார். இங்கு வலியு றுத்திச் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், **தேவனுடைய பலத்த அசைவாட்டம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்** என் பதாகும் (**மத். 24:32-34**); ஆனபடியினால், **Iஇராஜாக்கள் 18:41**ல் **"...நீர் போம், போஜனபானம்பண்ணும்; பெருமழையின் இரைச் சல் கேட்கப்படுகிறது...."** எனச் சொல்லப்பட்டிருப்பதை ஞாபக மூட்டுவோமாக. தண்ணீர் பரிசுத்த ஆவியின் வருகையைப் பிர கடனஞ்செய்கிறது; அதற்கு முதல் எழுப்புதல் வரவேண்டியதாயி ருக்கிறது; தற்பொழுது உலகமெங்கும் வெள்ளம்போலப் புரண்டு வரும் "**சிலுவையின் செய்தி**" அதனை நிறைவேற்றுகிறது என நான் நம்புகிறேன்.

ஆகஸ்ட்

7

***நீ**ங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர் விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான் (ஆகா. 1:6).*

"பொத்தலான பையிலே போடுகிறவன்"

"கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்" என்ற சொற்றொடர் அநேகமான கிறிஸ்தவர்களின் பரிதாபகரமான நிலைமையை எடுத்துக்காட்டுகிறது; அதெப்படியென்றால், பணத்தொகை எவ்வளவாக இருந்தாலென்ன, ஒரு சம்பள நாளிலிருந்து அடுத்த சம்பள நாள்வரையும் பெற்றுக்கொண்ட பணம் நாளாந்த செலவுகளுக்குப் போதாமல் இருப்பதைப்பற்றியே இங்கு சொல்லப்படுகிறது; அதாவது, எவ்வளவு பணம் உழைத்தாலென்ன அவருடைய சித்தம் உதாசீனஞ்செய்யப்பட்டால், நாளாந்த செலவுகளைச் சந்திக்கமுடியாது என்றும், போதிய பணம் உழைக்காவிட்டாலும், நாளாந்தச் செலவுகளைச் சந்திக்கப்பண்ணுவேன் என்றும் கர்த்தர் சொல்கிறார்.

உதாரணமாக, சில கிறிஸ்தவர்கள் தசமபாகம் கொடுப்பதைப் பற்றிப் பாதகமான விமர்சனம் கொடுப்பதில் பிரியமாக இருக் கிறார்கள்; சிலர் தசமபாகம் நியாயப்பிரமாண காலத்தில்த்தான் கட்டளையிடப்பட்டதேதவிர, தற்பொழுது நம்மேல் அது சுமத்தப் படவில்லை என்கிறார்கள். நிச்சயமாகவே மோசேயின் நியாயப் பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டிருந்தாலும், மோசேயின் நியா யப்பிரமாண காலத்திற்கு முன்பாகப் பல 100 வருஷகாலத்திற்கு முன்னமே தசமபாகம் நடைமுறையிலிருந்தது. முதலாவதாகத் தசமபாகம் ஆபிரகாமினால் மெல்கிசேதேக்குக் கொடுக்கப்பட்டது என்று **ஆதியாகமம் 14:18-20**ல் சொல்லப்பட்டிருக்கிறது;

தேவனுடைய பிள்ளைகளின் மனப்பான்மை கர்த்தருடைய ஊழியத்திற்கு நான் எவ்வளவு கொடுக்கலாம்? என இருக்க வேண்டுமேதவிர, எவ்வளவு குறைவாகக் கொடுக்கலாம் என்ப தல்ல. தேவனுக்கு நாம் முதலிடம் கொடுப்போமாயிருந்தால், அவர் நமக்கு முதலிடம் கொடுப்பார்; அவருடைய வேலைக்கு முதலிடம் கொடுத்தால், நம்முடைய வேலைக்கு அவர் முதலி டம் கொடுப்பார். ஒருவன் தான் ஆதரிப்பது கர்த்தருடைய ஊழியத்தையோ அல்லது மனுஷருடைய ஊழியத்தையோ என்ப தனை இரட்டிப்பாய் நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும். 99 சத வீதமான கொடுப்பனவுகள் தசமபாகம் என்ற பேரில் கர்த்தரு டைய ஊழியத்திற்கல்ல, மனுஷருடைய ஊழியத்திற்கே கொடுக் கப்படுகிறது; அப்படிப்பட்ட கொடுப்பனவுகள் பொத்தலான பை யையே ஏற்படுத்தும்.

நாம் தாராளமாகத் தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பது நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அதேநேரம் தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுக்கும்பணம் எதற்கு உபயோ கிக்கப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தவேண்டியது நம்மு டைய கடமையாயிருக்கிறது (**பிலி. 4:18-19**); துரதிஷ்டவசமாக அநேகமான கொடுப்பனவுகள் சாத்தானுடைய ஊழியத்துக்கே உபயோகிக்கப்படுகிறது என்பதனை வேதனையுடன் சொல்ல

வேண்டியதாயிருக்கிறது. அநேகமான கிறிஸ்தவர்களின் பணத் திண்டாட்டத்திற்கு இதுவே காரணமாயிருக்கிறது; அவர்கள் தேவ னுக்கெதிராகப் பாவஞ்செய்கிறார்கள்; கர்த்தருடைய பணத்தை எடுத்துச் சாத்தானுக்குக் கொடுக்கிறார்கள் (**மல்கி.** 3:8). அதாவது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கொடுக்காமல், வேறொரு இயேசுவின் உபதேசத்திற்குக் கொடுக் கிறார்கள் (**IIகொரி.** 11:4).

ஆகஸ்ட்

8

***அ**திகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்தும், நான் அதை ஊதிப்போடுகிறேன்; எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்* (ஆகா. 1:9).

"அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது"

இங்கு தேவனுடைய ஊழியத்திற்காக நம்முடைய நிதிவளங்களைக் கொடுப்பதுபற்றிப் பிரதானமாக சொல்லப்பட்டிருந்தாலும், இதனுடைய ஆவிக்குரிய பொருள், பரந்த நோக்கத்தைக் கொண்டது. உண்மையில் இங்கு தேவனை எதற்கும் முன்வைப்பதைப்பற்றியே குறிப்பிடப்படுகிறது. அதெப்படியென்றால், "**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்**" என **மத்தேயு** 6:33ல் சொல்லப்பட்டதே முக்கியத்துவம் பெறுகிறது. அநேகமான கிறிஸ்தவர்கள் தாம் முதலாவதாக, தங்களுடைய வாழ்க்கையில் கர்த்தரை வைத்திருப்பதாகவும், இரண்டாவதாக, குடும்பத்தை வைத்திருப்பதாகவும் பெருமிதம் கொள்கிறார்கள்; அப்படியல்ல, முதலாவதாகக்

கர்த்தரையும், இரண்டாவதாகக் கர்த்தரையும், மூன்றாவதாகக் கர்த்தரையும், நான்காவதாகக் கர்த்தரையும், நம்முடைய வாழ்க் கையில் வைத்திருக்கவேண்டும்; சகலதும் பொருத்தமாகக் கிறிஸ்துவில் வைத்திருக்கவேண்டும் (**ரோம.** 6:3-5; **யோவா.** 14:20).

"இதோ" என்ற வார்த்தை பங்குபற்றுபவனின் ஆச்சரியத்தைப் பிரகடனப்படுத்துகிறது. அவர்களுடைய சிந்தனையின்படி தாம் அறுக்கவேண்டியது அதிகம், ஆனால், கிடைத்தது கொஞ்சம்; ஆனபடியினால்த்தான் கர்த்தர் "..... **உங்கள் வழிகளைச் சிந்தித் துப்பாருங்கள்"** (**ஆகா.** 1:5) என்று சொல்கிறார்; இதன் கருத்து என்னவென்றால், தேவன் ஆசீர்வதிக்கிற தேவன்; அவர் தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்; அவர் நமக்கு நல்லது செய்ய விரும்புகிறார். அவருடைய வேலையை நாம் உதாசீனஞ்செய் தால், எதுவும் நமக்கு நன்மையாக இருக்கப்போவதில்லை. இஸ்ரவேலியர்களுக்கு முன்பு சொன்னது நிச்சயமாக நமக்கும் சேர்த்தே சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொரு பிரச்னை இங்கு உண்டு; கர்த்தருடையது அல் லாத எதனையும் ஆதரிப்போமாயின் தேவனுடைய ஆசீர்வாதம் நமக்குக் கிடையாது. தேவனுடையதல்லாததற்கே 99 சதவீதம் ஆதரவு கொடுக்கப்படுகிறது; மனுஷருடைய ஊழியத்திற்கே கொடுக்கப்படுகிறது; அத்தகைய கொடுப்பனவில் ஒரு பிரயோ ஜனமும் இல்லை.

"ஊதிப்போடுகிறேன்" என்பதன் பொருள், ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபத்தையே தேவன் கட்டளையிடுகிறார்; கோடிக்கணக் கான கிறிஸ்தவர்களின் முயற்சியை ஆசீர்வதிக்காமல் சாபத்தி னால் கர்த்தர் ஊதிப்போடுகிறார். எந்த சொஸ்த புத்தியுள்ள மனுஷனும் அதனை விரும்பப்போவதில்லை. இது ஒருவனுக்கு ஏற்பட்டால், அவனுக்கு அவருடைய ஆலோசனை **"உங்கள் வழி களைச் சிந்தித்துப்பாருங்கள்"** என்பதேயாகும் (**ஆகாய்** 1:5, 7); கிறிஸ்தவர்கள் ஏன் என்று கேள்விகேட்டால், அதற்குப் பதில்

"எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"; அதெப்படியென்றால், தங்களுடைய முயற்சிக்கு முதலிடம் கொடுக்கிறார்களேதவிர, தேவனுடைய ஊழியத்திற்கல்ல; **என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே** என்று கர்த்தர் விசனப்படுகிறார்.

இஸ்ரவேலியர்கள் கட்டின வீடு தேவன் கொடுத்த காணி; வீடு கட்டுவதற்குத் தேவையான சகலதும் அவரால் கொடுக்கப்பட்டது; அவருக்கு அவர்கள் முற்றிலும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நாம் இஸ்ரவேலியரைவிட வித்தியாசமோ? அப்படியல்ல!

ஆகஸ்ட்

9

***க**ளஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ் செடியும் ஒலிவமரமும் கனிகொடுக்கவில்லையே, நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான் (ஆகா. 2:19).*

"இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"

பபிலோனின் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலிய புத்திரர் கள் தம்முடைய நாட்டுக்குத் திரும்பி வந்தபொழுது, அவர்கள் சந்திரமண்டலத்திற்கு வந்திருப்பதைப்போன்ற ஒரு பிரமை அவர் களுக்கு ஏற்பட்டது; ஏனென்றால், அப்பொழுது யூதாவும் எருசலே மும் முற்றுமுழுவதும் அழிக்கப்பட்டிருந்தது.

முதல்முதலாக, ஆலயத்திற்கு அஸ்திபாரத்தை அவர்கள் போட்டார்கள்; ஆனால், ஆலயத்தைக் கட்டுவதற்குப் பல வருஷ காலம் தடைப்பட்டது. இந்தக் காலத்தில் ஜனங்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டுவதிலும், தங்களுடைய விருப்பங்களை நிறை வேற்றுவதிலும் கூடுதலான கவனத்தைச் செலுத்தி, தேவனு டைய ஆலயத்தைக் கட்டுவதை உதாசீனஞ்செய்தார்கள். இதனி மித்தம் தேவன் இஸ்ரவேலியர்களுக்கு நியாயத்தீர்ப்பு வழங்க வேண்டியதாயிற்று; இதுபற்றி **ஆகாய்** 1:4-7ல் அவர்களுடைய தவறையும், அதனால் ஏற்பட்ட பிரதிபலன்களையும் சுருக்கமாக வும், தெளிவாகவும் எடுத்து உரைத்தார். ஆகாய் தீர்க்கதரிசி மூலமாகக் கர்த்தர் இஸ்ரவேலியர்களை நோக்கி: நயமாக,

கண்டிப்பாக நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்பாருங்கள் என நினைவூட்டினார் (**ஆகா. 2:15-17**). கர்த்தரே இதனைச் செய்தார் என்பதனை அவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதனையும், அதன்மூலம் தன்னுடைய அதிருப்தியையும் வெளிப்படுத்தினார்.

இஸ்ரவேலிய புத்திரர்களை ஆலயத்தைக் கட்டிமுடிக்குமாறு கரத்தர் கேட்டுக்கொண்டார். அவர்கள் வேலையைத் தொடங்குவார்களானால், வேறெந்த வாக்குத்தத்தத்தையும்விட ஒரு பிரத்தியேகமான வாக்குத்தத்தம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; அதே வாக்குத்தத்தம் நமக்கும் உண்டு. அவர்கள் கீழ்ப்படிவார்களாயின் "**இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்**" என்று கூறியிருந்தார். ஆசீர்வாதம் தொடங்கும் நாளாக "**ஒன்பதாம் மாதம் இருபத்து நாலாந்தேதி**" என்று குறிப்பிட்டிருந்தார். அவருடைய வேலைக்கு நாம் காட்டும் விடாமுயற்சி, அவரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஒரு காரணமாயிருக்கிறது; ஆனபடியினால்த்தான், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு 6:33**ல் "**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்**" எனக் கூறியிருந்தார். இஸ்ரவேல் இதனை உதாசீனஞ்செய்து வேதனையை அனுபவித்தது; அப்படியே, இஸ்ரவேலிய புத்திரர்கள்போன்று கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களும் கர்த்தருடைய வேலையைத் தாராளமாக உதாசீனஞ்செய்கிறார்கள். நம்முடைய நிலைமையை நாம் பரிசீலனை செய்வோமாக. "**சென்ற காலத்தில் நடந்ததை உங்கள் மனதில் சிந்தித்துப்பாருங்கள்**" என்பதே தேவனுடைய கட்டளையாக இருக்கிறது.

ஆகஸ்ட்

10

ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதி களுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து, இரதத் தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப் போடுவேன்; குதிரைகளோடே அவைகளின்மேல் ஏறி யிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதர னின் பட்டயத்தினாலே விழுவார்கள் (ஆகா. 2:22).

"அர்மகெதோன் யுத்தம் நிறைவேறுதல்"

வரப்போகிற உபத்திரவகாலத்தில் (**மத்.** 24:21) நிறைவேறப் போகிற காரியங்களைக் குறித்து, இந்த வேதவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக அர்மகெதோன் யுத்தத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது. உலகத்தின் ராஜ்யத்தை இரண்டாம் வருகையின்போது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாரமெடுத் துக்கொள்கிறார் (**ஏசா.** 63:1-3; **எசேக். அதி**:38, 39; **சகரி.** 14:1-21; **லூக்.** 1:32-33; **வெளி.** 11:15, 19:11-21). மனுஷன் என்ன நினைக் கிறானோ, என்ன செய்கிறானோ, எவ்வாறாயினும் இந்தச் சம்ப வங்கள் தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்டதுபோல, நிச்சயமாகச் சம்பவிக்கும்.

எசேக்கியேல் 38ம் 39ம் அதிகாரங்களில் அர்மகெதோன் யுத்தம் எப்படியிருக்கும் என்பதன் விபரத்தைத் தீர்க்கதரிசனமாக எசேக்கி யேல்மூலம் கொடுத்திருக்கிறார். அந்திக்கிறிஸ்து தான் முற் றாக யூதர்களை அழிக்கும் விளிம்பில் நிற்பதாகவும், அதன் மூலம் உலகத்தைத் தான் பாரமெடுக்கப்போவதாகவும் தனக்குள்

நினைப்பான்; ஆனால் பிரளயம்போல் வருகிற பயங்கரத்தால் விழிப்பூட்டப்படுவான்.

கர்த்தராகிய ஆண்டவர் மகிமையோடும், மகா வல்லமை யோடும் இந்தப் பூமிக்கு வருவார்; அந்த வருகையை எந்த விளக்கத்தினாலும் விபரிக்கமுடியாது. **எசேக்கியேல்** 38, 39ம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட யுத்தம், அர்மகெதோன் யுத்த மல்ல, வேறொரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்துகிறது என்று சிலர் சொல்கிறார்கள்; அது தவறான அனுமானம். எப்படி அது தவறு என்று சொல்லமுடியும்? **எசேக்கியேல்** 38, 39ம் அதிகாரங் களில் சொல்லப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றவுடன் ஆயிரம் வருஷகால ஆட்சி ஆரம்பமாகிறது. **எசேக்கியேல்** 40 லிருந்து 48 வரையும் எருசலேமிலுள்ள நம்முடைய ஆண்டவருடைய தலைமை அலுவலகத்தையும், முழுஉலகத்தின் தொழுகை எப் படியிருக்கும் என்பதனையும் படம்பிடித்துக்காட்டுகிறது. **எசேக் கியேல்** 38, 39ம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட சம்பவம் முடிந் தவுடன் இவை தொடருமாயின், அர்மகெதோன் யுத்தத்தையே இங்கு படம்பிடித்துக்காட்டப்படுகிறது.

ஆகஸ்ட்

11

***இ**தோ, நான் யோசுவாவுக்கு முன்பாக வைத்த கல்; இந்த ஒரே கல்லின்மேல் ஏழு கண்களும் வைக்கப் பட்டிருக்கிறது; இதோ, நான் அதின் சித்திர வேலையை நிறைவேற்றி, இந்த தேசத்தில் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரி. 3:9).*

"இந்த தேசத்தில் அக்கிரமத்தை ஒரேநாளிலே நீக்கிப்போடுவேன்"

"நான் யோசுவாவுக்கு முன்பாக வைத்த கல்" மேசியாவின் அடையாளமாக இருக்கிறது (**ஏசா. 28:16; சங். 118:22; மத். 21:42; அப். 4:11; எபேசி. 2:20-21; 1பேது. 2:4-7**); இதனை **"அந்தக் கிளை"** என்றும் சொல்லப்படுகிறது.

இந்தக் கல்லின்மேல் ஏழு கண்கள் வைக்கப்பட்டிருக்கிறது என்பது கிறிஸ்துவின்மேல் பரிசுத்த ஆவியின் ஊடுருவல் இருக் கிறது என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. இலக்கம் ஏழு கிறிஸ்து வோடு, பரிசுத்த ஆவியானவரின் பரிபூரண இணைப்பைக் காட்டு கிறது; விரிவாக்கப்பட்ட இதே தரிசனத்தை யோவான் கண்டான் (**வெளி. 5:6**); யோவான் மேலும் ஏழு கொம்புகளையும் கண்டான்; அதனை சகரியா காணவில்லை. அந்த ஏழு கொம்புகளும் பூரண ஆதிக்கத்தை உத்தரவாதம் செய்கிறது; ஏற்கனவே கிறிஸ்து சிலுவைக்குச் சென்றிருந்தபடியினாலேயே இப்படியாக

யோவான் காணமுடிந்தது; ஆனால், சகரியாவின் காலத்தில் கிறிஸ்து சிலுவைக்குச் செல்லவில்லை. ஏழு கண்கள் பரிபூரண வெளிச்சத்தைக் குறிப்பிடுகிறது; இது ஆவிக்குரிய விஷயங் களைப் புரிந்துகொள்வதில் பரிபூரண வெளிச்சம் உண்டு என்ப தனைப் பிரதிபலிக்கிறது (**ஏசா.** 11:2); அப்படியே எழு கொம்புகள் பரிபூரண ஆதிக்கத்தைக் குறிப்பிடுகிறது; இந்தக் கிருபை அவர் சிலுவைக்குச் சென்றதன் நிமித்தமே சாத்தியமானது.

"....**இதோ, நான் அதின் சித்திரவேலையை நிறைவேற்றி**" என்பதன் பொருள், அவர் மனுஷ உருவமடைவதைப்பற்றிக் குறிப்பிடுகிறது; கிறிஸ்து அந்தக் கிளையானபடியினால், தன் னுடைய ஜனங்களுக்கு ஜீவனுக்குத் தேவையான யாவற்றையும் கொடுக்கிறார். அவர்கள் அந்தக் கிளையின் நிழலின்கீழ் இளைப் பாறுதலைப் பெறுகிறார்கள்; அவர் கல்லாக இருப்பதனால், அழி யாத அஸ்திபாரமாயிருக்கிறார்.

"..... **இந்ததேசத்தில் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப் போடுவேன்**" என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது; இந்த வருகையை சகலரும் தெளிவாகக் காண் பார்கள்; அப்பொழுது இஸ்ரவேலியர்கள் எல்லாரும் இரட்சிக்கப் படுவார்கள்; யாக்கோபைவிட்டுத் தேவ அவபக்தி முற்றாக நீக்கப் படும் (**சகரி.** 12:10-14, 13:1; **ரோம.** 11:25-29). இஸ்ரவேலியர்கள் புலம்புவார்கள், இரண்டு நாட்களுக்குள் மனந்திரும்புவார்கள், மூன்றாம் நாள் அவர்கள் பிழைத்திருப்பார்கள் (**ஓசி.** 6:2).

ஆகஸ்ட்

12

***பெ**ரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார் (சகரி. 4:7).*

"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்?"

"**பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்?**....." என்ற கேள்வி, பெர்சிய ராஜாவாகிய அர்தசஷ்டாவைக் குறிப்பிடுகிறது. ஆலயத் தைக் கட்டக்கூடாது என்று கட்டளையிட்டவன் இவனே (**எஸ்றா அதி:4**). எஸ்தரின் மகனாகிய கோரேஸ் 16 வருஷங்களுக்கு முன்பு ஆலயம் கட்டப்படவேண்டும் எனக் கட்டளையிட்டான்; இது கிறிஸ்துவுக்கு முன் 536ம் ஆண்டு நிகழ்ந்தது (**எஸ்றா 1:1-2**). இவன் ஒன்பது வருஷகாலம் ஆட்சிசெய்தான்; அவனுடைய குமாரன் காம்பிகஸ் ஏழு வருஷங்கள் அரசாண்டான்; அதற்குப் பின்பு அர்தசஷ்டா ஆட்சிக்கு வந்தான். இவனே எருசலேமில் ஆலயம் கட்டக்கூடாது என்று கட்டளையிட்டவனாகும்; கோரே சின் கட்டளையைத் தடுத்துநிறுத்தி, இந்தக் கட்டளை கொடுக்கப் பட்டது.

"**பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்?** ....." என்ற கேள்வி பரிசுத்த ஆவியானவரினால் கேலியாகக் கேட்கப்படுகிறது. இதனை இன்னும் சற்றுத் தெளிவாக விபரிப்பதாயின் பரிசுத்த

ஆவியானவர் **"தேவனுடைய வேலையை நிற்பாட்டுவதற்கு நீ யார்"** என்று அர்தசஷ்டாவைக் கேட்கிறார்.

"செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்" என்பதன் பொருள், இந்த ராஜா அகற்றப்பட்டு, இந்த ராஜ்யம் பூமியில் இல்லாதபடி சிதைக்கப்படும். இந்தத் தீர்க்கதரிசனம் முற்றுமுழு வதுமாக நிறைவேறினது. தரியு 1 இன்மூலம் மரணதண்டனை இவன்மேல் நிறைவேற்றப்பட்டது. உண்மையில், தேவனுடைய ஆலயத்தைக் கட்டவிடாமல் தடைபோட்டதே அவன் ஆட்சியி லிருந்து அகற்றப்பட்டதற்கு முக்கியமான காரணமாகும்.

"தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிரு பையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப் பார்கள்" என்பது கிறிஸ்துவின் ஊழியத்தைக் குறிப்பிடுகிறது; அது கடைசியில் வந்தேதீரும்; இவை எல்லாம் அந்த வரு கைக்கு முக்கியமான பங்களிப்பைச் செலுத்துகிறது (**யோவா. 1:17**).

ஆகஸ்ட்

13

***அ**து திருடன் வீட்டிலும், என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறவன் வீட்டிலும் வந்து, அவன வன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்க ளோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும் படி அதைப் புறப்பட்டுப்போகப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார் (சகரி. 5:4).*

"மகா உபத்திரவ காலத்தைப்பற்றிய தீர்க்கதரிசனம்"

இந்த வேதவாக்கியத்தில் வரப்போகிற உபத்திரவ காலத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (**மத்.** 24:21). அந்த நேரத்தில் உல களாவிய ரீதியில் எண்ணிமுடியாத நாட்களாகத் தேவனை மறந்துபோன உலகத்தின்மீது தேவகோபம் ஊற்றப்படும் என்ப தனை உறுதிப்படுத்துகிறது. **"அது திருடன் வீட்டிலும்"** என்ற சொற்றொடர் முழுஉலகத்தையும் குறிப்பிடுகிறது; ஏனென்றால், முழுஉலகமும் கூட்டாகப் பதிலளிக்கவேண்டும்; அதேநேரம் தனிப்பட்ட முறையிலும் பதிலளிக்கவேண்டும்.

"என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறவன் வீட் டிலும் வந்து" என்ற சொற்றொடர் மூலம் உலகத்திலுள்ள சகல பொய்யான மதங்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது; முக்கியமாக சத்தியத்தைவிட்டு விலகிய கிறிஸ்தவத்தைப்பற்றிச் சொல்லப் படுகிறது. **"அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி"** என்ற

சொற்றொடர் அந்திக்கிறிஸ்துவையும் அவனுடைய கோட்டை யையும்பற்றிக் குறிப்பிடுகிறது; அதுமட்டுமல்ல, அர்மகதோன் யுத்தத்தின்பொழுது கர்த்தருடைய வருகையினால் அந்திக்கிறிஸ் துவுக்கும் அவனோடு சம்பந்தப்பட்ட கேடுகளுக்கும் பிரளயமாகச் சடுதியாக ஏற்படப்போகிற தோல்வியைப்பற்றியும் அவனுடைய முடிவைப்பற்றியும் குறிப்பிடுகிறது.

"அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்படி" என்ற சொற்றொடர் கிறிஸ்து சர்வ உலகத் தின்மேலும் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறார். புறஜாதி களின் காலத்தின்போது மனுஷனால் கட்டப்பட்ட சகலதும் பிர ளயம்போன்று சடுதியாக முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. இது எதனைப் படம்பிடித்துக்காட்டுகிறது என்றால், நேபுகாத்நேச் சார் கண்ட சொப்பனத்தின்படி **"நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண் ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக் கிப்போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங் குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று"** (தானி. 2:34-35) எனத் தானியேல் அந்த சொப்பனத்தை விமர்சித்தபடியே ஆகும்; அந்த ஒரு கல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே.

ஆகஸ்ட்

14

பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல் களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடு வார் (சகரி. 10:1).

"அந்த அறுவடை மழை"

தீர்க்கதரிசிகளான ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் சிறிய தீர்க்கதரிசிகள் வரையும் கடைசிநாட்களில் தான் ஆயத்தப் படுத்தியிருக்கிற ஜனங்களின்மேல் தேவன் ஆவியை ஊற்றுவார் என வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவே "**அறுவடை மழை**" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; பெந்தெகொஸ்தே நாளில் ஊற் றப்பட்ட, ஆவியின் "**முன்மாரி மழையைவிட**" அறுவடை மழை பெரிதாயிருக்குமென வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது.

இந்தப் "**பின்மாரி மழை**" என்ற தீர்க்கதரிசனம் இஸ்ரவேலில் வருஷத்தில் பெய்யும் இரண்டு மழையைக் குறிப்பிடுகிறது. அவர்களுடைய பருவகாலம் நம்முடையவைகளுக்கு எதிர்மா றாக இருக்கிறது. முன்மாரி மழை இலையுதிர்வு காலத்தின் போது வந்து, புதிதாக நாட்டப்பட்ட செடிக்குத் தண்ணீர் பாய்ச்சு கிறது. இது பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்ற மாதிரியைக் காட்டுகிறது; அப்பொழுது முன்மாரி மழை பரிசுத்த ஆவியான வரினாலே பெரும் ஊற்றுதலாக விழுகிறது. அந்த மழை வேத

வசனத்தின் வித்துக்கு நீர் பாய்ச்சுகிறது; அது வளர்ந்து, பரவி, நாம் இப்பொழுது காண்கிற உலகளாவிய சபையாக மாறுகிறது.

இஸ்ரவேலின் பின்மாரி வசந்தகாலத்தில் வந்து, செடியை அறுவடைக்கு முன்பு பழுக்கச் செய்கிறது. சகரியா இந்த மழை யைக் கடைசிக்காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஊற்றுதல் என்கிறார் (**சகரி.** 10:1).

இன்னொரு மழை இல்லாமல் அறுவடை இல்லை என்று மோசே சொல்லியிருக்கிறான்; அவன் மூலமாக இஸ்ரவேலுக்கு **உபாகமம்** 11:13-15ல் **"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரி டத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்து மாவோடும் அன்பு கூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தை யும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத் தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி**..... " எனச் சொல்லியிருக்கிறார்;

இறுதியாக, அறுவடை மழை வந்தபொழுது எப்படியிருக்கும் என்பதனை **யோவேல்** 2:21-27, நமக்கு உடல் சிலிர்க்கச் செய்யும் ஒரு படத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது. சபையே எழுந்திரு; உன்னைச் சுற்றிப் பார்; நீ பார்ப்பது தீர்க்கதரிசனமாகச் சொல்லப் பட்டிருக்கிறது; மழை ஆரம்பமாகிறது. கர்த்தர் மேகங்களைத் தண்ணீர் நிறைந்ததாகப் பிரகாசிப்பிக்கிறார்; ஆவியானவர் இவை யாவையும் தயார்செய்து கடைசிக்காலத்துப் பெரும் அறுவ டைக்குத் தயார்பண்ணுகிறார்.

ஆகஸ்ட்

15

கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவது போல் அந்த ஜாதிகளோடே போராடுவார் (சகரி. 14:3).

"கர்த்தருடைய போராட்டம்"

"பின்பு கர்த்தர் புறப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், **"பின்பு"** என்ற சொல் தவிர்க்கப்பட்டிருக் கிறது. **"பின்பு"** என்பதுதான் இந்த வேதவாக்கியத்தின் முக்கிய மான ஒரு சொல்; அது தவிர்க்கப்பட்டது ஆச்சரியமாயிருந்தா லும், இப்படியாக ஏராளமான முக்கியமான சொற்கள் தமிழ் வேதாகமத்தில் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதனை வேதனை யோடு சொல்லவேண்டியதாயிருக்கிறது.

இப்படியிருக்க, முதலாவது **"பின்பு"** என்பது அவர்தான் தங்க ளுடைய ஒரே நம்பிக்கை என்பதனை அறிந்து, தேவன்தான் தங்களுக்கு விடுதலை தரமுடியும் என்பதனை அறிந்து, அவரை நோக்கி அழுதார்கள். அடுத்த **"பின்பு"** என்பது எருசலேமின் அரைவாசிப் பகுதி விழுந்தது; மிகுதியான அரைவாசிப் பகுதியும் பார்ப்பதற்கு விழுந்துவிடும்போலத் தெரிந்தது; அடுத்த **"பின்பு"** என்பது மூன்றில் இரண்டு பகுதி யூதர்கள் கொல்லப்பட்டனர்; மிகுதியான மூன்றில் ஒன்றும் பார்ப்பதற்கு நிர்மூலமாக்கப்படும் போலிருக்கிறது.

அடுத்த **"பின்பு"** என்பது பார்ப்பதற்குக் கோத்திரத் தலைவர் களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட

வாக்குத்தத்தம் கீழே விழுந்து விடும்போலத் தெரிந்தது. அடுத்த **"பின்பு"** என்பது இந்த யுத்தத்தைப் பார்க்கும்பொழுது அந்திக் கிறிஸ்து வெற்றி பெறுவான் போலிருக்கிறது; அப்படி அவன் வெற்றிபெற்றால் சாத்தானே வானத்திற்கும் பூமிக்கும் கர்த்த ராவான். **"பின்பு கர்த்தர் புறப்பட்டு"** என்ற சொற்றொடர் **"இரண் டாம் வருகையைக்"** குறிப்பிடுகிறது; அந்த வருகை உலகம் ஒரு காலமும் கண்டிராத ஒரு பிரளயம் போலிருக்கும். **"அந்த ஜாதி களோடே போராடுவார்"** என்ற சொற்றொடர் சொல்வது என்ன வென்றால், அந்த ஜாதிகள் அந்திக்கிறிஸ்துவின் கொடியின்கீழ் சேவிப்பவர்களாகும்; இவர்கள் இஸ்ரவேலை நிர்மூலமாக்கு வதையே நோக்கமாக மனதில்கொண்டு இஸ்ரவேலை நோக்கிப் புறப்படுவார்கள்.

"யுத்தநாளிலே போராடுவதுபோல்" என்ற சொற்றொடர் அநேகமாகச் சிவந்த சமுத்திரத்தின் மூலமாகக் கர்த்தர் இஸ்ர வேலியப் புத்திரர்களை வழிநடத்தி, எகிப்தைவிட்டுப் புறப்பட்ட நாளைப்போன்றது (**யாத்.** 14:14, 15:3). இது யேகோவாவாகிய மேசியா புறப்பட்டுப்போய் அவர்களுக்காகப் போராடிய முதலா வது யுத்தமாகும். மலைபோன்ற தண்ணீருக்கு மத்தியில் உரு வான பள்ளத்தாக்கின் மூலமாக இஸ்ரவேலியர்கள் நடந்துசென் றனர். கடைசி யுத்தமாக மலைபோன்ற கன்மலையூடாக, அதன் மத்தியில் ஏற்பட்ட பள்ளத்தாக்கினூடாக அவர்கள் தப்பிச் செல் வார்கள்; இதனை **சகரியா** 14:4 உறுதிப்படுத்துகிறது.

ஆகஸ்ட்

16

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள் (மல்கி. 3:8-9).

"நீங்கள் எல்லாரும் என்னைக் கொள்ளையடித்தீர்கள்"

மனுஷன் தேவனைக் **கொள்ளையடிக்கலாமா?** என்ற கேள்வி கூர்மையானதும் கவனத்தை இழுக்கிறதுமாக இருக்கிறது. **"வஞ்சிக்கலாமா"** என்ற தமிழ் மொழிபெயர்ப்பு, KJV என்ற ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பில் **"கொள்ளையடிக்கலாமா"** என்று இருப்பதனால் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பாவிப்பது எனக்குப் பொருத்தமாயிருக்கிறது. இந்தக் கேள்வி இஸ்ரவேலியரின் தற்போதைய நிலைமையை அம்பலப்படுத்துகிறது. அதனைப் பரிசீலனை செய்கையில் அவர்கள் உண்மையாகவே தேவனைக் கொள்ளையடித்தார்கள். **"நீங்களோ என்னைக் கொள்ளையடித்தீர்கள்"** என்ற சொற்றொடர் சந்தேகத்துக்கிடமில்லாமல் இஸ்ரவேலியர்கள் தேவனைக் கொள்ளையடித்தார்கள் என்பதனைப் பிரகடனப்படுத்துகிறது; உண்மையில் இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டாகும்; அவர்கள் எதிலே உம்மைக்

கொள்ளையடித்தோம் என்கிறார்கள்? என்ற கேள்விக்கு விரை வான பதிலைப் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசி மூலமாகத் **"தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே"** என்று சொல்லப் பட்டிருக்கிறது. சிலர் தசமபாகம் மோசேயின் நியாயப்பிரமாணத் தில் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிரப் புதிய உடன்படிக்கையில் அல்ல என்கிறார்கள். அப்படியல்ல! தசமபாகம் உண்மையில் நியாயப்பிரமாணத்துக்கு முன்பே நடைமுறையில் இருந்தது (**ஆதி.** 14:20, 28:22). புதிய உடன்படிக்கையில் கிருபையின்கீழ் தசமபாகம் கட்டளையிடப்பட்டிருக்கிறது (**மத்.** 23:23, **Iகொரி.** 9:7, 14,16:2; **கலா.** 6:6; **எபி.** 7:1-10).

ஆபிரகாம் விசுவாசிகளைப் பிரதிபலிக்கிறான்; அவன் கிறிஸ் துவின் மாதிரியான மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுத் தான் (**ஆதி.** 14:20). அந்தக் கொடுப்பனவிலிருந்து திட்ட அளவு நியமிக்கப்பட்டது. நாம் ஆபிரகாமின் பிள்ளைகளாக (**கலா.** 3:7) இருப்பதனால் தேவனுடைய ஊழியத்துக்குத் தசமபாகம் கொடுக்கவேண்டும்; அதன் பொருள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்தியைப் பிரசங்கிப்பதற்கே யாகும் (**கலா.** 3:6-7; **Iகொரி.** 1:23).

மல்கியா 3:9ல் **"நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்"** என்ற வேத வார்த்தை **"நீங்கள் ஒரு சாபத்தினால் சபிக்கப்பட்டவர்கள்"** என்றே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் இது மிகவும் பயங்கரமாயிருக்கிறது. இந்தச் சாபத்தின் பிரதிபலனைப்பற்றி **மல்கியா** 3:10-12 வரையுமுள்ள வேதவாக்கியங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது; பற்றாக்குறையும் மலட்டுத்தன்மையுமே அந்தச் சாபமாகும். **தசமபாகத்திலும் காணிக்கைகளிலும்** கொள்ளையடித்தல் சாபத்தைக் கொண்டுவரும். மனுஷனோடு தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையின் நிமித்தம் தசமபாகமும் காணிக்கையும் தேவனுக்குரியது. அவருக்கு உரியதைத் தன் சொந்தலாபத்திற்கு ஒருவன் பாவிப்பது கொள்ளையடித்தலாகும். **"ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னைக் கொள்ளை**

யடித்தீர்கள்” என்ற சொற்றொடர் உலகத்திலுள்ள தேசத்தார் எல்லாருடைய வறுமைக்கும் மற்றக் காரணங்களோடு, இந்தக் கொள்ளையே முக்கியகாரணமாக இருக்கிறது என்பதனை வெளிப்படுத்துகிறது. தேவனைக் கொள்ளையடித்தவன் ஆசீர் வாதத்தைப் பெறமுடியுமோ? குற்றவாளி ஆசீர்வதிக்கப்படு வானோ? இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **IIகொரிந்தியர்** 9:6ல் தெளிவான பதிலைப் கொடுத்திருக்கிறார். இந்த வேதவாக்கியம் சந்தேகத்துக்கிடமின்றி மனுஷனுடைய சலனத்தைத் தெளிவு படுத்துகிறது; நாம் கர்த்தருக்கு சிறுக விதைத்தால் சிறுக அறுப் போம்; பெருக விதைத்தால் பெருக அறுப்போம்.

ஆகஸ்ட்

17

***என்** ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகு மட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட் டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார் (மல்கி. 3:10).*

"தேவனின் ஆசீர்வாதம் இடங்கொள்ளாமற்போகும்"

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங் கள்" என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் ஆலயத்தையும் லேவியர்களுடைய பட்டணத்தையும் குறிப்பிடுகிறது. புதிய ஏற் பாட்டின்படி எந்த இடத்தில் (அது எங்கிருந்தாலென்ன) ஒரு ஆத்துமாவுக்கு ஆவிக்குரிய உணவு அளிக்கப்படுகிறதோ அந்த இடத்தையே குறிப்பிடப்படுகிறது. சிலர் உள்ளூர் சபையையே குறிப்பிடுகிறதென்று உரிமைகோரி எல்லாக் கொடுப்பனவுகளும் அங்கேயே கொண்டுவரப்படவேண்டும் என்கிறார்கள்; அத்தகைய அனுமானம் தவறே; அத்தகைய பிரகடனத்தை மேற்கொள்ப வர்கள் உண்மையில் **"ஆலயம்"** என்றால் என்ன என்பதனை

அறியாமல் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங் களாகிய மறுபிறப்புப்பெற்ற கிறிஸ்தவர்கள் அவர்கள் யாராயிருந் தாலென்ன, அவர்கள் எங்கிருந்தாலென்ன, அவர்களால் ஆக்கப் பட்டதே ஆலயமாகும். கட்டடங்கள் மதஅமைப்புக்கள் மற்றும் பல்வேறு ஸ்தாபனங்களுக்கும் ஆலயத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை; செய்திக்கே ஆதரவு அளிக்கப்படவேண்டுமே தவிர அமைப்புக்கல்ல.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி" என்ற சொற்றொடர் பழைய ஆலயத்திலுள்ள ஆசாரியத்துவத்துக்கு ஆதரவு அளிப்பதைப்பற்றியே குறிப்பிடுகிறது. கர்த்தராகிய ஆண் டவர் அப்படிப்பட்ட எந்த ஆலயத்தையும் தற்பொழுது வைத்தி ருக்கவில்லை. பழைய ஆலயம் பிரதிநிதித்துவம்பண்ணிய சகலதும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நிறைவேற்றியுள்ளார். அவரோடுகூட அவரைப் பிரதிநிதித்துவம்பண்ணும் பரிசுத்த ஆவி யானவருமே ஒரு விசுவாசியின் இருதயத்தில் வாசஞ்செய் கின்றனர் (I**கொரி.** 3:16).

"அதனால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார்" என்ற சொற்றொடர்மூலம் மனு ஷருக்குத் தசமபாகத்தினால் வெகுமதி உண்டோ இல்லையோ என்ற அறை கூவலை அவர்கள் முன்வைக்கிறார். **"அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டே னோவென்று அதினால்"** என்ற சொற்றொடர் மிதமிஞ்சின பரி பூரணமான தொகையைக் குறிப்பிடுகிறது. **"வானத்தின் பல கணிகளை"** என்ற அதே சொற்றொடர் **ஆதியாகமம்** 7:11ல் பெரு வெள்ளத்துக்கும் உபயோகிக்கப்பட்டது; ஆனபடியினால் நாங்கள் ஈடுஇணையற்ற ஆசீர்வாதங்களைப்பற்றியே இங்கு குறிப்பிடு கிறோம்.

ஆகஸ்ட்

18

***பூ**மியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என் பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கி. 3:11-12).*

"பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்"

பரிசுத்த ஆவியானவர் முதலில் **"பட்சித்துப் போடுகிறவை களை"** என்று கூறியிருப்பதன் மூலம் எதனைப்பற்றிச் சொல் கிறார் என்ற ஒரு குழப்பநிலை ஏற்படுகிறது. அடுத்த சொற் றொடரில் **"அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்ப தில்லை"** எனக் கூறப்பட்டிருப்பதைப் பரிசீலனை செய்யும் பொழுது மேலும் குழப்பம் ஏற்படுகிறது; ஆனால் KJVல் **"அவை கள்"** என்பதற்குப் பதிலாக **"அவன்"** என்று சொல்லப்பட்டிருக் கிறது; **"அவன்"** என்பது ஒரு ஆளையே குறிப்பிடுகிறது. அந்த ஆள் பட்சிக்கிறதொழிலை உடையவனாக இருக்கிறான்; அவன் வேறுயாருமல்ல, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால்

சொல்லப்பட்ட திருடனே; **"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்....."** என்று **யோவான்** 10:10ல் சாத்தானையே குறிப்பிட்டிருக்கிறார். அவனே பட்சிக்கிறவன்; அந்த சாத்தானையே **"திரும்பிப் போ" "எடுத்ததை வை"** என்று நான் கண்டிப்பேன் எனக் கர்த்தர் எச்சரித்திருக்கிறார்.

ஆகையால் நாம் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய கொடுப் பனவில் தவறினால், ஆண்டவர் சாத்தானை **"திரும்பிப் போ"** என்றும் **"எடுத்ததை வை"** என்றும் கண்டிக்கமாட்டார் என்பது தெளிவாகிறது; இதன் பிரதிபலன் நம்முடைய முயற்சியின் கனி அழிக்கப்படும். தேவனுடைய கொடுப்பனவு ஒழுங்காக நடந் தால், இதற்கு எதிர்மாறானது நடக்கும்; நிலத்தின் பலன்பெருகும். முடிவோ ஐசுவரியம்; கடைசி வாக்கியத்தில் அறுவடை எதுவும் இழந்துபோகாமல் பரிபூரணம் உறுதிப்படுத்தப்படும் எனச் சொல் லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆசீர்வாதம் அதிகமாக இருப்பதனால் எல்லா ஜாதிகளும் தேசத்தினரும் வந்து இந்த ஆசீர்வாதத்தின் இரக சியம் என்ன என்று கேட்பார்கள். அந்த இரகசியம் தேவனுக் குக் கொடுப்பது என்று சொல்லி விசுவாசி கர்த்தரின் சிலுவை யைக் குறித்துப் பெருமிதங்கொள்வான் (**கலா. 6:14**).

ஆகஸ்ட்

19

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத். 7:15).

"கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்"

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் **சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும்** ஏற்படுத்தியிருக்கிறார் என **எபேசியர்** 4:12-13ல் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால், வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், கிறிஸ்துவுக்கு முன்பும் பின்பும் இஸ்ரவேலும், முழுஉலகமும் கள்ள அப்போஸ்தலர்களால் நிறைந்துபோயிருந்தது.

தற்பொழுது ஏறத்தாழ முழுஉலகமும் கள்ளப்போதகர்களால் நிறைந்துபோயிருக்கின்றது; இவர்களே ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்ட ஓநாய்கள் (**மத்.** 7:15); இவர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கியாமல் (I**கொரி.** 1:23), வேறொரு இயேசுவைப் பிரசங்கிக்கிறார்கள் (II**கொரி.** 11:4); ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்ட இந்த ஓநாய்கள் சாத்தானுடைய பலம் பொருந்திய ஆயுதங்களாகச் செயற்படுகிறார்கள்; கிறிஸ்துவின்

காலத்தில் ஆடுகள் சிதறுண்டு போயிருந்ததை அவதானித்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தபடியினால், அவர்கள்மேல் மனதுருகி அநேகங் காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங் கினார் எனக் காண்கிறோம் (**மாற்.** 6:34).

அப்படியாயின் கிறிஸ்துவின் காலத்தில் ஜெபஆலயங்கள் இல்லையோ? பரிசேயர்கள் இல்லையோ? வேதபாரகர்கள் இல் லையோ? ஏரோதியர்கள் இல்லையோ? சதுசேயர்கள் இல்லை யோ? என நாம் எழுப்பும் சந்தேகங்கள் நியாயமானதே. ஆம், அவர்கள் மிகவும் அதிகமாகவே இருந்தார்கள்; அளவுக்கு அதிக மாக இப்பொழுதும் இருக்கிறார்கள்; ஆனால் இவர்கள் வேதத்தை உபதேசிக்காமல் மனுஷருடைய கற்பனைகளையும் (**மத்.** 15:9) மனுஷருடைய பிரமாணங்களையும் மனுஷருடைய பாரம்பரி யங்களையும் சுவிசேஷங்களாகப் போதித்தார்கள். இதன் பிரதி பலன் இஸ்ரவேலிய ஜனங்கள் சிதறுண்டு மேய்ப்பர்கள் இல் லாதேபோனார்கள்; அதுமட்டுமல்ல, மேய்ப்பர்கள் கூலியாட் களாக இருந்தார்கள்.

ஓநாய்கள் வருகிறதைக் கண்டு கள்ளப்போதகர்கள் ஆடுகளை விட்டு ஓடிப்போனார்கள் (**யோவா.** 10:12); ஓநாய்கள் ஆடுகளை சிதறடித்தது; இப்பொழுதும் அதேமாதிரியான சபைகள் இயங்கு கின்றன என்பதனை வேதனையோடு நாம் ஏற்றேயாகவேண்டும். பட்டணத்தில் ஆபத்தான இடம் கிறிஸ்தவ சபைகளாயிருக்கிறது எனக் கிறிஸ்தவர்கள் சொல்வது பொருத்தமானதே; அங்கு ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்ட ஓநாய்கள் ஜனங்களைச் சிதறடிக்கின்றன. இலைமறைகாயாக ஓரிரு கர்த்தருடைய சபை களும் உண்டு; ஆனாலும் இவர்கள் வெகு சொற்பமாக இருக் கிறபடியினால், இச்சபைகளின் செயற்பாடு பெரியதொரு சீர்திருத் தத்தை ஏற்படுத்துவதாயில்லை. அநேகமான கிறிஸ்தவ சபை கள் கள்ளப்போதகர்களால் நிறைந்து போயிருக்கிறபடியினால், அந்தச் சபைகளில் பிரசன்னமாக இருப்போரில் அநேகர்

இரட்சிக்கப்படவில்லை; அந்தச் சபைகளில் மதம் செயற்படுகிற தேதவிர உறவு செயற்படவில்லை. சகல மதமும் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகளே; சுருக்கமாக அவைகள் சாத்தனால் ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

இப்படியிருக்க, போதகர்கள் தாம் ஒரு வழியை ஏற்படுத்தி, கச்சிதமாகச் சபையினரை வழிநடத்துவதாக நம்புகிறார்கள்; ஆனால், அது தேவனுடைய வழியல்ல என்பதனையும் அது மதவழிபாடு என்பதனையும் அறியமுடியாமல் வஞ்சக ஆவி யினால் ஏமாற்றப்பட்டுப் போயிருக்கிறார்கள் (**IIதெச. 2:11-12**). உண்மையான இரட்சிப்பு தேவனுடையது; அதில் மனிதனுடைய பங்களிப்பென்று ஒன்றுமில்லை. வேதவார்த்தைக்கு இசைவான கிறிஸ்தவம் (Bibilical Christianity) மதமல்ல, அதுவே உறவு, அந்த உறவு மனிதனோடல்ல, தேவனோடு ஏற்படுத்தும் உறவாகும் (**ஏசா. 55:1-2**; **வெளி. 22:17; மத். 11:28-30**); ஆகையால் நாம் எச்சரிக்கையாயிருப்போமாக (**மத். 7:15; IIபேது. 2:1**).

ஆகஸ்ட்

20

***அ**வர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள் (மத். 9:28).*

"இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?"

தேவனுடைய பிள்ளைகளின் விசுவாசம் இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் மையமிட்டிருக்கவேண்டும்; அந்த விசுவாசம் சுறுசுறுப்பாகத் தேவனை நம்புவதையும், அவரில் தங்கியிருப்பதையும் பிரதிபலிக்கிறது.

உண்மையான விசுவாசம் எந்தக்காலத்திலும் தொடர்ந்து சோதிக்கப்படும் (**லூக்.** 12:48); வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்களின் மூலமாகவும், வழமையில் நடைபெறாதவைகள் மூலமாகவும், ஆவிக்குரிய போராட்டங்களின் மூலமாகவும், தன்னுடைய சொந்த மாம்சத்தின் மூலமாகவும், ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையின் மூலமாகவும் சோதிக்கப்படலாம். நாம் தேவனையும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தொடர்ந்து விசுவாசிக்கிறோமா? என்பதே சோதனையின் நோக்கமாகும் (**லூக்.** 22:31-32).

மத்தேயு 9:27-29 நமக்குச் சொல்வது என்னவென்றால், இரண்டு குருடர் இயேசுவைப் பின்தொடர்ந்து வந்து, "…. **தாவீ தின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்…**" என்று கூப்பிட்டார் கள். இயேசு அவர்களை நோக்கி: "….**இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா…**" என்று கேட் டார். நீண்ட சம்பாஷணை ஒன்றும் அவர்களோடு பேசவில்லை; எளிமையான ஒரு கேள்வியைமட்டுமே கேட்டார். அவர்களும் எளிமையான பதிலாக, "**ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்**"; பின்பு "….**அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்**"; உடனே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. எளிமை யான கேள்வியும், எளிமையான பதிலும் மிகவும் வல்லமை யான குணமாக்குதலைக் கொண்டுவந்தது. விசுவாசியே! இன்று நீர் குழப்பமான, மாற்றமுடியாத, திருப்பமுடியாத ஒரு சூழ்நிலை மையைச் சந்தித்திருக்கலாம்; இயேசு உமக்கு எளிமையான ஒரு கேள்வியை வைத்திருக்கிறார். "….**இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீரா**… " என்பதே அந்தக் கேள்வியாகும்.

விசுவாசியே அவர் உம்மில் அன்பாயிருக்கிறார்; அவர் மாற்ற முடியாத நிலைமையை மாற்றும் எண்ணத்தோடு உம்மைக் கேட்கிறார். வேறு சில விஷயத்தில் இயேசுகிறிஸ்துவினுடைய வல்லமையை நீர் கண்டிருக்கிறீர்; இந்த விஷயத்திலும் அவரால் மாற்றத்தைக் கொண்டுவரமுடியும் என்பதனை நீர் நம்புகிறீரா? விசுவாசத்தைத் தொடக்கிய தேவனால் அதனை முடித்துவைக்க வும் முடியும் என்றும் நீர் நம்புகிறீரா? அப்படியானால், ஆம், நான் விசுவாசிக்கிறேன் என்று இயேசுவுக்கு இப்பொழுதே அறிக்கைபண்ணும்பொழுது, மாற்றும் அனுபவத்தையும், சமாதா னத்தையும், வெற்றியையும், குணமாக்குதலையும், சகல தேவை களையும் இன்றே அவரால் கொண்டுவரமுடியும் என்பதனை நீர் காண்பீர்.

ஆகஸ்ட்

21

***அ**வர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப் படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசி யமும் இல்லை. நான் உங்களுக்கு இருளிலே சொல் லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித் தம்பண்ணுங்கள். ஆத்துமாவைக் கொல்ல வல்லவர் களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர் களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத். 10:26-28).*

"அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்"

எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், தேவசெய்தியை விட்டுக் கொடுக்காதீர்கள் என்ற எச்சரிக்கையை, இந்த வேதவாக்கியத் தின் ஆவிக்குரிய பொருள் நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவ செய்தியைப் "**பலவீனப்படுத்தக்கூடாது**", "**மினுக்கக்கூடாது**", "**விட்டுக்கொடுக்கக்கூடாது**", "**சுருக்கக்கூடாது**". பயம் ஒன்றே சுவிசேஷத்தைத் தண்ணீரைப்போல பலவீனப்படுத்துகிறதற்கு முக்கியமான காரணமாயிருக்கிறது. "**பயம்**" சாத்தானுடைய பல மான ஆயுதமாயிருக்கிறது. அநேகமான போதகர்கள் மற்றவர் கள் என்ன சொல்லுவார்களோ, என்ன நினைப்பார்களோ எனப் பயப்படுகிறார்கள். சத்தியத்தைப் பிரசங்கித்தால் சபையினர்

தசமபாகத்தைக் கொடுக்காமல் நிற்பாட்டுவார்களே என்று அநேக மான போதகர்கள் பயப்படுகிறார்கள்; இன்னும் பலர் தங்களு டைய அந்தஸ்தும், ஸ்தானமும் பறிபோய்விடுமோ என்று அஞ்சு கிறபடியினால் செய்தியைச் சுருக்கிவிடுகிறார்கள். கிறிஸ்து வைப்பற்றிச் சாட்சிபகர்பவர்கள் தங்களுடைய இருதயத்தில் பயத்தை அனுமதித்தால், அதிக அளவில் அந்தப் பயம் அவர் களைச் சூழ்ந்திருக்கும்; அதேநேரம் துணிவுக்குப் போதகர் இடங் கொடுத்தால், அதிக அளவு துணிவு கொடுக்கப்படும்.

"வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப் படாத இரகசியமும் இல்லை" என்ற சொற்றொடர் பல விஷ யங்களை வெளிப்படுத்துகிறது. அதென்னவென்றால், **முதலா வதாக**: சகலரும் ஒருநாள் தேவனுக்கு முன்பாக நின்று தங்க ளுடைய ஊழியத்திற்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். அப் பொழுது இருதயத்தின் உள்நோக்கம் வெளிப்படுத்தப்படும். **இரண்டாவதாக**: பொய்யான உபதேசம் நியாயத்தீர்ப்பின்போது வெளிப்படுத்தப்படப்போகிறபடியினால், அதனை இப்பொழுதே வெளிப்படுத்தி, ஜனங்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவது நல்லதல்லவோ. **மூன்றாவதாக**: பண்டைய மதங்கள் இரகசியத் தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டபடியினால், அந்த இரகசி யங்கள் பொதுஜனங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அப்படி எந்தவித இரகசியமும் சுவிசேஷத்திற்கு இல்லை; சகல சத்திய மும் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டியதே!

ஆகஸ்ட்

22

ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (மத். 10:36).

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே"

வீட்டார் என்பது நெருங்கிய குடும்பத்தவர்களை மட்டுமல்ல, சபைக் குடும்பத்தவர்களையும் உள்ளடக்குகிறது. கோடிக்கணக் கானோர் நித்திய காலத்திற்கும் காணாமற்போயுள்ளார்கள்; ஏனென்றால், அவர்கள் தங்களுக்கும் தேவனுக்குமிடையில் வீட் டாரை அனுமதித்தனர்; அப்படியே கிறிஸ்தவர்களும் தங்க ளுடைய சபைக் குடும்பத்தினரைத் தங்களுக்கும் கிறிஸ்துவுக்கு மிடையில் அனுமதித்து, அவர்களும் காணாமற்போயுள்ளார்கள். வீட்டாரே மோசமான குற்றவாளிகளாகத் தற்பொழுது இருக் கிறார்கள்; ஏனென்றால், சபைக் குடும்பத்தினர் மிகுந்த மதச்சார் புள்ளவர்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்கு முதல், சபை முக்கியத்துவம் பெறுமாயின் சபை விக்கிரகமாக மாறியுள்ளது; நிச்சயமாக அவிசுவாசிகளின் விக்கிரகங்களைப்போலவே இதுவும் இருக்கிறது. விக்கிரகமும், ஆவிக்குரிய வேசித்தனமும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக் கிறது; ஒரு குறிப்பிட்ட இடத்தில்த்தான் இப்படி நடக்கிறதென்று சொல்வதற்கில்லை; பரவலாக இது ஒரு பிரமாணமாக்கப்பட் டுள்ளது.

நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியது தேவனுக்கேதவிர, மனு ஷனுக்கல்ல; ஏனென்றால், சிலுவையில் மரித்தது மனுஷன்

அல்ல, கிறிஸ்துவே நமக்காக மரித்தார்; கிறிஸ்துவின் இரத்தமே நமக்கு விடுதலை தந்தது; ஆகவே நாம் அவருக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (**கலா.** 1:10; **ரோம.** 14:12; **எபி.** 4:13); அப்படியாயின், அவசியம் ஏற்படும்பட்சத்தில் வீட்டாரைவிட்டு விலகுவதற்கும் நாம் தயாராயிருக்கவேண்டும் என்பது வெளிப் படையாயிருக்கிறது; இதனையே **மத்தேயு** 10:37; **மாற்கு** 10:29-30; **லூக்கா** 14:26 உறுதிப்படுத்துகிறது.

ஆகஸ்ட்

23

பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள் (மத். 12:24).

"பரிசுத்த ஆவிக்கெதிரான தூஷணம்"

தேவனுடைய வல்லமையை அசுத்த ஆவிகளின் வல்லமையோடு சமன்படுத்துவது பரிசுத்த ஆவிக்கெதிரான தூஷணமாகும்; எல்லாத் தூஷணங்களிலும் மோசமான தூஷணம் இதுவாகும். பரிசுத்த ஆவிக்கெதிரான இந்தத் தூஷணத்திற்கு மன்னிப்புக் கிடையாது **(மத். 12:32)**.

பரிசேயர்கள் இயேசுவின் காலத்தில் இஸ்ரவேலின் மதத் தலைவர்களாக இருந்தார்கள். கிறிஸ்துவின் குணமாக்குதலையும், அவரால் செய்யப்பட்ட அற்புதங்களையும், அவருடைய செய்திகளையும் அவர்களினால் நிராகரிக்கமுடியவில்லை; ஆனால், அவரால் வெளிப்படுத்தப்பட்ட வல்லமையை அது பரிசுத்த ஆவியினுடையதல்ல, அது பிசாசினுடையது என்று வலியுறுத்தினார்கள்; இதனிமித்தம் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையைப் பிசாசினுடைய வல்லமைக்குச் சமன்படுத்தினார்கள். இது பரிசுத்த ஆவிக்கெதிரான தூஷணமும், மிகமோசமான பாவமுமாகும் **(மத். 12:24-32)**.

இரண்டு விதமான ஜனங்கள் பரிசுத்த ஆவியைத் தூஷிக்க முடியும் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; முதல்

வர்க்கத்தினர் முன்பு கர்த்தரை அறிந்தவர்கள், சொற்பகாலத் திற்குப் பின்பு அவருக்கு முதுகைக் காட்டினவர்கள்; இரண்டாவது வர்க்கத்தினர் பரிசேயர்கள்போன்று மதப்பற்றுள்ளவர்களாகும். கர்த்தரை அறியாத அல்லது மதப்பற்று இல்லாத ஒருவன் பரி சுத்த ஆவிக்கெதிராகத் தூஷணம் சொல்லமுடியாது; ஏனென் றால், அப்படிச் செய்வதற்கு அவனுக்கு அதனைப்பற்றிய போதிய அறிவு இல்லை.

ஒருவன் பரிசேயனைப்போல உண்மையாகவே பரிசுத்த ஆவிக்கெதிரான தூஷணத்தில் ஈடுபட்டால், கிறிஸ்துவிடம் திரும்பி வருவதற்கும், வேதவசனத்திற்கேற்ப நடப்பதற்கும் அவனுக்கு விருப்பமிருக்காது; அதேநேரம் கிறிஸ்துவினிடத்திற்கு ஒருவன் வரவிரும்புகிறான் ஆனால், தான் முன்பு பரிசுத்த ஆவி யைத் தூஷித்தபடியினால் தன்னால் வரமுடியாமலிருக்கிறது என்ற சிந்தனை பலருக்கு உண்டு; இது வேதவார்த்தைக்கு இசை வானதல்ல. கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு இருக்கும் விருப்பம் பரிசுத்த ஆவியினாலேயே உருவாக்கப்பட்டது; நம் பிக்கை இல்லாவிட்டால், பரிசுத்த ஆவியானவர் அப்படியான எண்ணத்தை உருவாக்கமாட்டார்.

இப்படியிருக்க, அந்நியபாஷையைப் பிசாசின் பாஷை எனச் சொல்வதும், பரிசுத்த ஆவியானவரின் செயற்பாட்டைக் கேலி பண்ணுவதும், பரிசுத்த ஆவிக்கெதிரான தூஷணம் என்று சொல் லலாம் என்று நான் பயப்படுகிறேன். **மத்தேயு** 12:31ல் ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்து "..... **எந்தப் பாவமும் எந்தத் தூஷண மும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோ தமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை**" என்று சொல்லியிருப்பது இதனைத் தெளிவாக்குகிறதே.

ஆகஸ்ட்

24

***சா**த்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? (மத். 12:26).*

"சாத்தானைச் சாத்தான் துரத்துவானோ?"

பொய்யான மதத்தைப் பரப்புவதற்கு ஆதரவாக, அசுத்த ஆவிகளினால் கொடுக்கப்பட்ட நோயை, நோயாளியிடமிருந்து சாத்தான் தற்காலிகமாகச் சிலவேளைகளில் விலக்குவதுண்டு. இப்படியாக அவன் அடிக்கடி செய்கிறான் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; ஆனால், அவனால் அப்படிச் செய்யமுடியும் என்பதனைக் கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

பொய்யான மதம் அநேகமான ஆத்துமாக்களைப் பாதாளத்திற்குள் தள்ளுகிறது. பொய்யான மதத்திற்குள் இழுத்து, அதனைப் பலப்படுத்துவதற்காக முன்பு அவன் போட்டுவைத்ததை அவனால் இலகுவாக விலக்கமுடியும்; இவ்விதமாக வஞ்சகம் தொடர்கிறது. அப்படி அவன் செய்யும்பொழுது அவன் தன்னைத்தான் துரத்தவில்லை; அவனுடைய ராஜ்யம் பிரிக்கப்படவுமில்லை. இவ்விதமாக அவனுடைய வஞ்சக வலைப்பின்னல் இன்னும் இறுக்கமாக்கப்பட்டு, ஜனங்களைப் பொய்யை விசுவாசிக்கத் தூண்டி, அவர்களைப் பாதாளத்திற்கு அனுப்புகிறான் (**IIதெச. 2:9-12**).

கத்தோலிக்க மதத்தைப் பலப்படுத்துவதற்காக ஏராளமான குணமாக்குதல்களும் அற்புதங்களும் தாராளமாக நடைபெறுகிறது; இந்து மதத்திலும் இத்தகைய அக்கிரமங்கள் நடைபெறுகிறது. மதத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாகச் சாத்தானால் இந்த அக்கிரமம் மதிநுட்பமாய் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சில குணமாக்குதல்கள் உண்மையாக இருந்தாலும், அவைகள் ஒன்றையும் நிரூபிக்கப்போவதில்லை; கத்தோலிக்கம் வேதத்திற்கு இசைவானதல்ல. பரிசுத்த ஆவியானவர் அத்தகைய சூழ்நிலையில் செயற்படுவதில்லை; அவரே சத்தியமாயிருக்கிறார்; ஆனபடியினால், அவர் தவறை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை (**I யோவா. 5:6**); அவர் எந்தக் காலமும் சத்தியத்திற்கு வழிநடத்துவாரேதவிர தவறுக்கு ஒருபொழுதும் வழிநடத்துவதில்லை (**யோவா. 16:13**).

கத்தோலிக்க மதத்தினரின் கூட்டங்களில் காணப்படும் அற்புதங்களைப் பரிசீலனை செய்தால், அந்த அற்புதங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை விசுவாசித்ததினால் ஏற்பட்டதல்ல; மரியாளை விசுவாசித்ததனாலேயே ஏற்பட்டது. இந்த நிலைப்பாடு **I கொரிந்தியர் 2:2**க்கு முற்றிலும் எதிரானது. அத்தகைய முயற்சிகள் பரிசுத்த ஆவியானவரினால் கௌரவிக்கப்படமாட்டாது. அவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறாரே தவிர (**யோவா. 16:14**), மரியாளையோ, வேறெவரையுமோ அல்ல; ஆனால், விசுவாசிகள் தேவனால் சோதிக்கப்படலாம் என்று **உபாகமம் 13**ம் அதிகாரம் வலியுறுத்துகிறது; ஆனபடியினால், **I யோவான் 4:1**ல் சொல்லியிருப்பதைக் கிறிஸ்தவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

ஆகஸ்ட்

25

***வே**றொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் என்றார் (மத். 13:33).*

"கடைசிக்காலத்து சபைகளின் புளிப்பு"

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கிறிஸ்தவ சபைகளைப்பற்றியும், கடைசி நாட்களில் அது எப்படி இருக்கும் என்பதுபற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

வேதவார்த்தையில் இந்த மாதிரி ஒரு ஸ்திரீயைக் குறிப்பிட்டிருந்தால், அது தீங்கை வெளிப்படுத்தவே அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். **"மாவு"** தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்கிறது; **"மூன்றுபடி மா"** மூன்று நேர போஜனத்தைப் பிரதிபலிக்கிறது; **"புளிப்பு"** பாவத்தைப் பிரதிபலிக்கிறது.

அதெப்படியென்றால், கடைசி நாட்களில் கிறிஸ்தவ சபைகள் யாவும் முற்றுமுழுவதுமாகப் புளித்துப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதன் பொருள், தேவனுடைய வார்த்தை முற்றுமுழுவதும் களங்கப்படுத்தப்பட்டு, இனிமேல் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லாமற்போகும் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. துரதிஷ்டவசமாக தற்போதைய கிறிஸ்தவ சபைகள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட மோசமான

நிலைமையிலேயே காட்சியளிக்கின்றன. சீர்திருத்தத்திற்குப் பின்பு கிறிஸ்தவம் இவ்வளவு பாதகமான நிலைமையில் ஒரு பொழுதும் இருந்ததில்லை; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வினால் **வெளி.** 3ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட இறுதிச் சபை யாகிய லவோதிக்கேயா சபைகளே தற்பொழுதுள்ள கிறிஸ்தவ சபைகளாகும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தக் கடைசிக்கால சபை களின் அமைப்பும் அதன் குணாதிசயங்களும் எப்படியிருக்கும் என்பதுபற்றி **வெளி. 3:17-18**ல் **"நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரி தபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியு மாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒருகுறைவுமில்லையென் றும் சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாண மாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள் வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்"** எனக் கூறியிருக்கிறார்.

சத்துரு ஏற்படுத்திய காயங்கள் வேதனையளிக்கிறது; உங்க ளுடைய சகோதர்களுக்கு நீங்கள் ஏற்படுத்திய காயங்கள் இன் னும் அதிகமாய் வேதனையளிக்கிறது; இது கடைசிக்காலத்தைக் குறிக்கிறது **(மத். 24:32-33)**; ஆகையால், உயிர்த்தெழுதலுக்கு **(1தெச. 4:14-18)** நாம் தயார்பண்ணவேண்டிய காலம் இப்பொழுது மிகவும் அண்மையில் இருக்கிறது என்பதனை நாம் புரிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாதது.

ஆகஸ்ட்

26

***அ**ப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள் (மத். 14:19-20).*

"கர்த்தருடைய ஒழுங்குமுறை"

கர்த்தரை உண்மையாகப் பின்தொடர விரும்பும் ஒவ்வொரு வனுடைய வாழ்க்கையிலும் ஒரு ஒழுங்குமுறை கடைப்பிடிக் கப்பட்டிருக்கிறதை நாம் காணமுடியும்; அந்த ஒழுங்குமுறை யின் அமைப்பு பின்வருமாறு அமைகிறது.

முதலாவதாக: **"எடுத்து"** என்பதன் பொருள், நாம் மறுபிறப் புப்பெற்றபோது அவர் நம்மை எடுக்கிறார். ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பெருக்கி, போஜனம்பண்ணக் கொடுத்ததுபோல, நம்மையும் பெருக்க அவர் விரும்புகிறார்; அவரை உண்மையாகப் பின் தொடர்ந்து, இங்கு நியமித்திருக்கிற ஒழுங்குமுறையை கடைப் பிடிப்போமானால், ஆயிரக்கணக்கானோர் ஆவிக்குரிய போஜனத் தினால் நிரப்பப்பட்டு, இரட்சிக்கப்படுவார்கள். பரிசுத்த ஆவிக்குள்

ஞானஸ்நானம் செய்யப்படுவார்கள், கட்டுக்களில் இருந்து விடு விக்கப்படுவார்கள்; குணமாக்கப்படுவார்கள்; அந்தகார சக்திகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

இரண்டாவதாக: **"அவர் ஆசீர்வதித்தார்"** என்பதன் பொருள், இரட்சிக்கப்பட்டவுடனேயே கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் ஆரம்ப மாகிறது. புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவன் சகல வழிகளினாலும் ஆசீர்வதிக்கப்பட்டு, அவன் உற்சாகப்படுத் தப்படுகிறான். இந்தக்காலம் ஆசீர்வாதக்காலம்; இதனையும் பலர் கைநழுவவிட்டுவிடுகிறார்கள்; ஆனால் இந்த நிலைமை யில் நாம் தொடர்ந்திருக்கமுடியாது; ஏனென்றால், அதைவிடப் பெரிய ஆசீர்வாதத்தைத் தேவன் நமக்கு வைத்திருக்கிறார். அநேகமான கிறிஸ்தவர்கள் **"ஆசீர்வாதக்காலத்தின்போது"** பிற ருக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்க முந்திவிடுகிறார்கள்; இதனால் அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்துவதைவிடத் தங்களைத் தாங் களே மகிமைப்படுத்துகிறார்கள்; இதன் முடிவு சாதகமான பிரதி பலனைக் கொடுக்கப்போவதில்லை.

மூன்றாவதாக: **"அப்பங்களைப் பிட்டு"** என்பதன் பொருள், ஆசீர்வாதத்திற்குப் பின்பு பிட்கிறகாலம் ஆரம்பமாகிறது; இந்தக் காலத்தை நாம் அதிகமாக விரும்புவதில்லை. நாம் கர்த்த ருக்குள் பிழைத்திருப்பதற்கு இந்தப் பிட்கிற அனுபவம் இன்றிய மையாதது. பிட்கிற அனுபவம் வேதனையையும், துன்பத்தை யும் தருகிறது (**எபி.** 12:7-11); ஆனால், அது மிகவும் அவசிய மானது. இயேசுவைப்பற்றி யோவான்ஸ்நானன் பிரஸ்தாபிக்கை யில்: **"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ் சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்"** (**மத்.** 3:12) என்று இதனைப்பற்றியே சொல்லி யிருக்கிறான்.

நான்காவதாக: **"கொடுத்தார்"** என்பதன் பொருள், பொருத்த மாகப் பிட்கப்பட்டபின்பே நாம் வெற்றிகரமாகக் கொடுக்கப்பட

முடியும்; இப்பொழுது பாரிய வித்தியாசம் தென்படுகிறது. சுயம் மகிமைப்படுவதற்குப் பதிலாகக் கர்த்தர் மகிமைப்படுகிறார். நாம் பெருக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட பின்பு நம்பிக்கையற்றிருக்கும், பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஆவிக்குரிய போஜனத்தை ஊட்டமுடியும். துரதிஷ்டவசமாக அநேகமான கிறிஸ்தவர்கள் பிட்கும் காலத்தில் தப்பிப்பிழைப்பதில்லை; அவர்கள் சோர் வடைந்து, விசுவாசத்தை இழந்து, கிறிஸ்துவைவிட்டு விலகி, பாரிய ஆசீர்வாதத்தை இழந்துபோகிறார்கள்; விதைக்கிறவனின் உவமானம் இதனை வலியுறுத்துகிறது. மூன்றுதரம் விதைக்கிற வனின் உவமானம் சொல்லப்பட்டிருப்பதன்மூலம் இதன் முக்கி யத்துவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது **(மத்.** 13:3-23; **மாற்.** 4:2-20; **லூக்.** 8:4-18).

ஆகஸ்ட்

27

***பி**ன்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லு கிறார்கள் என்று கேட்டார் (மத். 16:13).*

"என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்"

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீஷர்களை நோக்கி: **மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார் கள்** என்று கேட்டார்; அதற்கு அவர்கள் ஒவ்வொருவிதமாகக் கூறினார்கள் **(மத். 16:14)**; அவர்களுடைய மாம்சமும் இரத்தமுமே அப்படிக் கூறியது. இப்படியிருக்க, அவர் சீஷர்களை நோக்கி: **"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட் டார்"**; சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்து **(மத். 16:16)** எனக் கூறினான். ஆண்டவர் பேதுருவை நோக்கி: நான் யாரென்பதை என் பிதா உனக்கு வெளிப்படுத்தினார் எனக் கூறியிருந்தார் **(மத். 16:17)**. அவர் தான் யார் என்பதனை முதற்கண் அறிந்துகொண்ட பின்பே தன்னைப் பின்பற்றவேண்டுமென்பதைத் தம்முடைய சீஷர் களுக்கு வெளிப்படுத்தினார்; அதுவும் மாம்சத்தினால் அல்ல இரத்தத்தினால் அல்ல பரிசுத்த ஆவியினாலேயே தான் யார் என்பது அறியப்படவேண்டும் என வெளிப்படுத்தியிருந்தார்.

எகிப்தை மோசேயிலிருந்து எடுப்பதற்குத் தேவனுக்கு நாற்பது வருஷம் சென்றது; முதலில் பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னம் பின்பு கர்த்தருடைய குரல்; இதன் முடிவு பரிசுத்தம். முட்செடியில் அக்கினி ஜுவாலித்து எரியாமல் பரிசுத்தம் கிடையாது. பரிசுத்தம் சுயஞானத்தினாலேயோ அல்லது ஒரு வாய்ப்பாட்டின் மூலமோ அல்ல என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், நாம் அப்படியாக நினைக்கிறோம், நம்புகிறோம், செயற்படுகிறோம். மாம்சமும் இரத்தமும் இப்பொழுது பல கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது; இந்தக் கிறிஸ்து வேறொரு இயேசுவே (**IIகொரி. 11:4**). பலர் தமக்கு அப்படி வெளிப்படுகிறது சரியென்று நம்புகிறார்கள்; அப்படியான நம்பிக்கை அவர்களை அகல பாதாளத்தில் கொண்டுபோய்விடும் (**மத். 7:13**).

ஆகஸ்ட்

28

***அ**வன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று (மத். 17:5).*

"இவருக்குச் செவிகொடுங்கள்"

உருமாற்றம் கிறிஸ்துவினுடைய மகிமையைப் படம்பிடித் துக் காட்டுகிறது; மகிமை இயேசுவின்மேல் பிரகாசிக்கவில்லை, அவரிலிருந்து அவருடைய வஸ்திரத்தினூடாகப் பிரகாசித்தது. அவரோடு மோசேயும் எலியாவும் மலையில் தோன்றினபோது, மோசே நியாயப்பிரமாணத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறவனாக வும், எலியா கிருபையைப் படம்பிடித்துக் காட்டுகிறவனாகவும் தோன்றினார்கள். அந்த இருவரில் மோசே கிறிஸ்துவுக்கு முன் 1500 வருஷங்களுக்கு முன் மரித்தவன்; எலியாவோ மரணத் தைக் காணாதபடி பரலோகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டவன். இந்த இருவரும் அவரோடு அவருடைய பாவநிவிர்த்தியின் மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள் (**லூக்.** 9:31); பர லோகத்தில் பாவநிவிர்த்தியே மிகப்பெரிய உபதேசம் என்பது இதன்மூலம் தெளிவாகிறது (**வெளி.** 1:5, 5:6, 9, 7:14).

இந்தச் சமயத்தில் கிறிஸ்துவின் சீஷனாகிய பேதுரு அப் போஸ்தலன் முட்டாள்த்தனமாக ".....**இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச்**

சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்" என்றான் (**மத்.** 17:4). இப்படிக் கூறியதன் நிமித்தம் அறிந்தோ, அறியாமலோ கிறிஸ்துவை, மோசேக்கும் எலியாவுக்கும் சமனாக்கினான்.

அதற்குப் பதில் பிதாவிடமிருந்து உடனடியாகக் கிடைத்தது; தேவன் மிகப்பெரிய பரிசுத்தவான்களைக்கூட கிறிஸ்துவோடு இணைத்துத் தொழுதுகொள்வதை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பது வலியுறுத்தப்பட்டது. உடனடியாகவே மோசேயும் எலியாவும் அந்த இடத்தைவிட்டு விலகினார்கள். தேவனுடைய குரல் **"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்"** என்று சொன்னது.

அநேகர் பல பரிசுத்தவான்களை நோக்கி ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள் அதில் ஒரு பிரயோஜனமுமில்லை என்பது இங்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது; மரியாளை நோக்கி ஏறெடுக்கப்படும் ஜெபத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை; இப்படியிருக்கப் பரம பிதாவினிடத்திலிருந்து வந்த கட்டளை உறுதியானதும், வலிமையானதும் கூர்மையானதுமாக இருந்தது; அந்தக் கட்டளை நீங்கள் **"இவருக்குச் செவிகொடுங்கள்"** என்பதாகும்.

ஆகஸ்ட்

29

***அ**ப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத். 24:30).*

"இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை"

இந்த வேதவாக்கியத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷ வரலாற்றில், இந்த இரண்டாம் வருகை ஒரு பிரளயம் போலிருக்கும் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். பழமையான மனுஷராகிய யூத ஜனங்களை மனுஷகுமாரன் விடுதலை செய்வது இரகசியமாக இருக்கமாட்டாது; அது உலகளாவியதாகவே இருக்கும். உண்மையில் உபத்திரவகாலத்தின்போது பல்வேறுவிதமான பொய்யான மேசியாக்கள் யூதர்கள் மத்தியில் எழும்பி, தாங்கள் தான் இஸ்ரவேல் அவசரமாகத் தேடிக்கொண்டிருக்கும் மேசியா என்று உரிமை கோருவார்கள் (**மத்.** 24:5).

இப்படியிருக்க, உபத்திரவ காலத்தின் ஆரம்பத்தில், அந்திக் கிறிஸ்து, இவர்கள் எல்லாரிலும் மிகப்பெரிய ஏமாற்றுக்காரனாக உட்புகுவான். இஸ்ரவேலோ அவன்தான் தங்களுடைய மேசியா என்று சொல்லி, உலகம் முழுவதற்கும் பிரச்சாரம் செய்யும்; இதனைப்பற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 5:43ல் கூறியிருப்பதை நாம் அவதானமாகக் கவனிக்கவேண்டும்.

அவனோ 7 வருஷகால உடன்படிக்கையை இஸ்ரவேலோடு செய்து, அதன் பாதுகாப்பையும் தற்காலிகமாக உத்தரவாதம் செய்வான்; இஸ்ரவேல் மறுபடியும் ஆலயத்தைக் கட்டுவதற்கும் உதவிசெய்வான்.

ஆனால் உபத்திரவகாலத்தின் நடுப்பகுதியில் அவன் தன்னுடைய உண்மையான தோற்றத்தைக் காட்டி, இஸ்ரவேலைத் தாக்கத் தொடங்குவான். இஸ்ரவேல் 1948ம் ஆண்டு மறுபடியும் ஒரு நாடாக எழும்பினபின்பு முதலாவது தோல்வியைச் சந்திக்கும். இதனையே பவுல் அப்போஸ்தலர் **Iதெசலோனிக்கேயர்** 5:3ல் **"சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை"** என்று சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் அழிக்கப்படும்; ஆனால் சடுதியாக கிழக்கிலும் வடக்கிலும் இருந்து வரும் செய்திகளினால், அந்திக்கிறிஸ்துவின் கவனம் வேறு திசைக்கு இழுத்துச்செல்லப்படும் **(தானி. 11:44)**; இப்படியாகத் தாவீதைக் கொல்ல வந்த சவுலுக்கும் **(Iசாமு. 23:27-28)**; எசேக்கியாவைக் கொல்ல வந்த அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பினால் அனுப்பப்பட்ட ரப்சாக்கேக்கும் **(IIஇராஜா. 19:7-9)** கர்த்தராலே இப்படி ஏற்பட்டது என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும். அவன் இன்னொரு நாளில் இஸ்ரவேலைச் சந்திப்பதற்குத் தீர்மானிப்பான்; அப்படியே அந்திக்கிறிஸ்துவும் தீர்மானிப்பான்; அந்த நாளிலேயே அர்மகெதோன் யுத்தம் நடைபெறும்.

அந்த நேரத்தில் **"..... இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்" (மத். 24:23)** என ஆண்டவர் அறிவுறுத்தியிருக்கிறார்; அவர் தன்னுடைய வருகை **"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" (மத். 24:27)** எனக்

கூறியிருக்கிறார். அவருடைய வருகை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்தப்படும். ஒரு காலமும் காணாதமுறையில் அவ ருடைய வருகை வானத்தில் கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்; ஏனென்றால், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து பூமியைப் பாரமெடுப்பதற்கு வருகிறாரே! அவர் கிறிஸ்துதான் என்பதில் ஒருவனுக்கும் சந்தேகம் வரவேண்டிய தில்லை; இதுவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சாராம் சமாகும். ஆமென்.

ஆகஸ்ட்

30

***அ**ப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது (மத். 27:51).*

"அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது"

இயேசு காடியை வாங்கிய பின்பு **"முடிந்தது"** என்று சொல்லித் தலையைச் சாய்த்து ஒப்புக்கொடுத்தவுடன் (**யோவா.** 19:30) **".....தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது....."** (**மத்.** 27:51-53). மகா பரிசுத்தஸ்தலத்தை மூடியிருந்த திரைச்சீலையைத் தேவன் தன் கையினால் தூக்கி, மேலிருந்து கீழ்வரை கிழித்து, மனுஷகுலத்துக்கு அறிவித்தது என்னவென்றால், என் குமாரனுடைய மரணத்தின் மூலம் மனுஷகுலம் என் கிருபாசனத்திற்கு முன்பாகத் துணிவாக வர முடியும். மனுஷனால் இது கூடாதபடியினால் என் குமாரனைக் கொண்டு இதனை நிறைவேற்றினேன்; ஆனபடியினால், விசுவாசத்தினால் நிறைந்த நம்பிக்கையோடு, தைரியமாக அவர் முன்பாகப் பிரசன்னமாகமுடியும் (**எபி.** 4:16).

திரைச்சீலையின் கிழிப்பு ஒரு வெளிப்படையான அடையாளம்; அந்த அடையாளம் இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம்

சிலுவையில் கிழிக்கப்பட்டதைப் பிரதிபலிக்கிறது. இதுபற்றி **எரேமியா** 10:19-21ல் **"ஐயோ! நான் நொறுக்கப்பட்டேன்; என் காயம் கொடிதாயிருக்கிறது; ஆனாலும் இது நான் சகிக்க வேண்டிய என் நோய் என்று நான் சொல்லுவேன். என் கூடாரம் அழிந்துபோயிற்று, என் கயிறுகளெல்லாம் அறுப் புண்டு போயின; என் பிள்ளைகள் என்னைவிட்டுப் போய் விட்டார்கள்; அவர்களில் ஒருவனுமில்லை; இனி என் கூடா ரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக்கட்டுவாரில்லை. மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடா மற் போனார்கள்; ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற் போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது"** எனக் கூறப்பட்டிருக்கிறது.

எவ்வித சடங்குமுறையும் இல்லை; எவ்வித பாரம்பரியமும் இல்லை; எவ்வித மரபுமுறையும் இல்லை; வெளிப்படையான பரிபூரணத்துவம் ஒன்றும் தேவையில்லை; விசுவாசம் ஒன்றே தேவையாயிருக்கிறது (**யோவா.** 6:28-29); நாம் இருப்பதுபோலவே அவரிடத்தில் வந்து, கிருபையையும் இரக்கத்தையும் தேவை யானபொழுது பெற்றுக்கொள்ளமுடியும்; இதுபற்றி **எபிரெயர்** 4:15-16ல் **"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்"** எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஆகஸ்ட்

31

***வெ**குநேரம் சென்றபின்பு, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், வெகு நேரமுமாயிற்று (மாற். 6:35).*

"இது வனாந்தரமான இடம்"

"**வெகுநேரமுமாயிற்று**" என்பதன் பொருள், மாலை நேரமா யிற்று எனச் சீஷர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அவரு டைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து சொன்னார்கள் என்பது மனுஷ சிந்தையைப் பிரதிபலிக்கிறது; "**இது வனாந்தரமான இடம், வெகுநேரமுமாயிற்று**" என்பதன் பொருள், இங்கு அண் மையில் தங்குமிடம் ஒன்றும் இல்லை, அப்படித் தங்குமிடத் தைக் கிராமத்துக்குள்போய், தேடிப்பிடிக்க நேரமும் கடந்து விட்டது என்றார்கள்; ஆனால், ஆண்டவராகிய இயேசு அவர்களு டைய சிந்தனைக்கு உடன்படவில்லை.

இப்படியிருக்க, வனாந்தரம் என்பது மிகவும் கிட்டிய இடம் என்பதற்கு அப்பாற்பட்ட உட்பொருளைக் கொண்டிருக்கிறது. அதென்னவென்றால், முழு உலகத்தையும் வனாந்தரமான இடம் என்று சொல்லப்படுகிறது; ஏனெனில், உலகம் தேவனை அறியா ததன் நிமித்தம் ஆவிக்குரிய ஆகாரம் இல்லாமல் தவிக்கிறது; கிறிஸ்து மூலமே அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும். உலகம் பல்வேறுவிதமான மதக்கிரியைகளினால் நிறைந்திருந்தாலும், இந்த மதங்களினால் வனாந்தரமான இடத்தில் பரவலாயிருக்கும்

துன்பத்தைத் தணிக்கமுடியவில்லை; இன்னும் நிலைமையை அவைகள் மோசமாக்குகிறது.

உலகம் முழுவதும் பரவலாக இருக்கிற இஸ்லாமிய மதத்தை விமர்சிப்பது பொருத்தமாயிருக்கிறது. இந்த மதத்தை அனுசரிப்போர் பின்தங்கிய வகுப்பினராகவும், படிப்பறிவு இல்லாதவர்களாகவும், குருட்டு நம்பிக்கை உள்ளவர்களாகவும், உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையும்விட வறுமையினால் வாதிக்கப்பட்டும் இருக்கிறார்கள். அதேநேரம் ஐப்பான் நாட்டைப் பொறுத்தளவில் அந்த நாடு பொருட்செல்வத்தினால் நிறைந்திருந்தும், புத்த மதத்தினாலும், ஐப்பானிய தொல்மரபுச் சமயக் கோட்பாட்டினாலும், ஆத்துமா இல்லாத ஒரு நாட்டைப்போலிருக்கிறது. பாவத்தினால் நிறைந்த உலகம் என்று அழைக்கப்படுகிற இந்த வனாந்தர இடத்தில் உண்மையான வழி, வேதத்திற்கு இசைவான கிறிஸ்தவமே; சுருக்கமாகச் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவேயாகும். பொருள்வளம் நிறைந்தாலென்ன, ஆன்மீகவளம் நிறைந்தாலென்ன அல்லது இரண்டும் நிறைந்திருந்தாலென்ன உலகத்தில் வனாந்தரமான இடமே மீதியாயிருக்கிறது.

செப்டம்பர்

1

***பு**சிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள் (மாற். 6:36).*

"இவர்களை அனுப்பிவிடவேண்டும்"

ஒருவன் கிறிஸ்துவில் தங்கியிராவிட்டால், அவனை அப்பால் அனுப்பிவிடுவதே பொதுவான நியதியாயிருக்கிறது; அதிலிருக்கும் அவலம் என்னவென்றால், மனுஷகுலத்திற்கு உலகம் உதவுவதாக உரிமைகோரினாலும், பெரும் பணத்தொகையைக் கட்டணமாக அறவிட்டாலும், இருக்கிற எல்லாப் பிரச்னையோடும்கூட, எவ்வித உதவியும் இல்லாமல் இறுதியில் அவர்களை அனுப்பிவிடுகிறார்கள்.

வேதனையும் அவலமும் என்னவென்றால், கிறிஸ்தவர்களும் தேவநம்பிக்கையற்ற மனோதத்துவக் கோட்பாட்டை விலை கொடுத்து வாங்குகின்றனர். கிறிஸ்து இல்லாவிட்டால், அங்கு எந்த விடுதலையும் இல்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்; தற்போதைய கிறிஸ்தவம் மனக்கிளர்ச்சிக்கும், மனுஷனுடைய ஆன்மீகத் தேவைகளுக்கும் முற்றுமுழுவதுமாக மனோதத்துவத்தையே தழுவி நிற்கின்றது. மனோதத்துவத்தின் வேர் நாஸ்திகம், பரிணாமம், மனுஷ இனநலக்கோட்பாடு ஆகிய வற்றினால் நிறைந்திருந்தும், அவர்கள் அதனைப் பொருட்படுத்

தாமல் கிறிஸ்தவத்துக்குள் உட்புகுத்தியிருக்கிறார்கள்; மனோதத்துவத்தைப்பற்றி யாக்கோபு **"இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது"** எனக் கூறியிருக்கிறான் (**யாக்.** 3:15). கிறிஸ்தவ சபைகள் இந்த நிலைப்பாட்டுக்கு வந்ததன் காரணம், அவர்கள் இனியும் வேதாகமத்தை நம்புவதாயில்லை; வேதமும் மனோதத்துவமும் ஒன்றோடு ஒன்று இணைவதில்லை; **"புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்"** (**கலா.** 5:9); ஆனபடியினால், வெகுசில போதகர்களே மனுஷகுலத்தின் பிரச்னைக்குக் கிறிஸ்துவின் சிலுவையே ஒரே வழி எனப் பிரகடனப்படுத்துகிறார்கள்; அநேகமான போதகர்கள் மனோதத்துவத்தையே பிரகடனப்படுத்துகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் சரியான நிலைப்பாட்டுக்குத் திரும்பவேண்டும்; அதெப்படியெனில், மனுஷன் ஒரு **"குழப்பமான ஆத்துமாவே"** தவிர **"சேதப்படுத்தப்பட்ட சுயம் அல்ல"** என்பதனை ஒத்துக்கொள்ளவேண்டும். மனோதத்துவம் **"சுயத்தையும்" "மனதையும்"** கையாளுகிறது; வேதவசனமோ **"ஆவியையும்" "ஆத்துமாவையும்"** கையாளுகிறது; ஆவியினாலும் ஆத்துமாவினாலுமே மனுஷன் உருவாக்கப்பட்டான்; இதுவே பொருத்தமான சொல்லியலாகும்.

செப்டம்பர்

2

***எ**ப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும் (மாற். 7:21-22).*

"மனுஷனுடைய இருதயம்"

ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான் என்று பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் **1கொரிந்தியர் 2:14**ல் கூறியிருக்கிறார்.

ஜென்மசுபாவமான மனுஷன் மீட்கப்படாத மனுஷன்; அவன் இரட்சிப்பைப் பெறாதவன்; அவனுடைய இருதயத்திலும், மனதிலுமிருந்து பொல்லாத சிந்தனைகள், அவைகள் எப்படித் தோற்றமளித்தாலும், தீங்கானவைகளாகவே இருக்கின்றது. ஆண்டவரே **மாற்கு 7:21-22**ல் ஜென்மசுபாவமுள்ள மனுஷன் வேறுவிதமான சிந்தனைகளை உடையவனாயிருக்கமுடியாது எனக் கூறியிருக்கிறார். மனுஷனுடைய சிந்தனைகள் நல்லதாகத் தோன்றினாலென்ன, தீங்கானதாகத் தோன்றினாலென்ன

அவைகள் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்தே புறப் பட்டவைகளாகும் (**ஆதி.** 2:17).

அந்த விருட்சத்தின் நன்மையான பகுதியே மனுஷனை அதிக மாக வஞ்சிக்கிறது; ஏனென்றால், அவைகள் தீமையான பகுதிக்கு எதிராக இருக்கிறபடியினால் இலகுவாக அடையாளம் காணமுடி யும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்; ஆனால், ஒரே மரத்தி லிருந்தே நன்மையும் தீமையும் வருகின்றது என்பதனையும், இரண்டையும் பிரிக்கமுடியாது என்பதனையும் அவர்கள் உணரத் தவறிவிடுகிறார்கள். நன்மை என்று நினைத்தது, அவர்களைத் தீமைக்குள் இழுத்துச்செல்கின்றது (**ரோம.** 7:18). பிரதானமாக மதம் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் நன்மையான பகுதியிலிருந்து வருகிறது; இதன் நிமித்தம் பாதாளம் நிரம்பி வழிகின்றது. கிறிஸ்தவம் உறவேதவிர மதம் அல்ல என்ப தனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கிறார்கள். ஏவாள், சாத்தானுடைய இந்தக் கொடிய வஞ்சனைக்குப் பலி யாகி, ஆதாமும் ஏவாளும் தேவனுக்கெதிராகப் பாவஞ்செய்து வீழ்ந்துபோனார்கள்; பிறப்பின் மூலம் அவர்களிலிருந்து தோன் றிய முழுமனிதகுலமும் வீழ்ந்துபோனது (**ரோம.** 5:12).

செப்டம்பர்

3

***பி**ன்பு, அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்குமுன்பாக முழங்கால் படியிட்டு: நல்ல போதகரே நித்தியஜீவனைச் சுதந் தரித்துக்கொள்ளும்படி நான் என்னசெய்யவேண்டும் என்று கேட்டான் (மாற். 10:17);*

"நான் என்னசெய்யவேண்டும்"

இந்த வாலிபனின் விண்ணப்பத்திற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, எதற்காக நீ என் கற்பனைகளைக் கைக்கொள் எனக் கூறியிருந்தார்? அதுமட்டுமல்ல, அவனால் அதனைச் செய்யமுடி யாது என்று அவர் அறிந்திருந்தும் ஏன் அப்படிச் சொன்னார் என்று கிறிஸ்தவர்களே கேள்விகேட்பதுண்டு. வேதத்தில் இவ னைப்பற்றி (**மத்.** 19:16-22; **மாற்.** 10:17; **லூக்.** 18:18-23) சொல்லி யிருப்பதை ஒன்றிணைத்துப் பார்த்தால், இவன் வாலிபனும், தலைவனும், மேன்மையானவனும், ஐசுவரியவானும், படித்த வனும், கண்ணியவானும், வல்லமையுள்ளவனும், மதப்பற்று நிறைந்தவனுமாக இருந்தான் என்று அறியக்கூடியதாயிருக்கிறது; அநேகமானவர்கள் அவனே பரிபூரண சந்தோஷமுள்ளவன் என்று உடனடியாகவே அவன்மேல் முத்திரை குத்துவார்கள். அவன் தான் நியாயப்பிரமாணத்தைச் செய்பவன் என்று உரிமைகோரினா லும், தன்னிடத்தில் ஜீவனில்லை என்பதனை உணர்ந்திருக் கிறான்; அவன் அந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறான்;

ஆனபடியால்த்தான், தான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்? என்று ஆண்டவரைக் கேட்கிறான்.

அவன் கேட்டமாதிரியே கிறிஸ்து அவனுக்குப் பதிலளித்த தற்கு இரண்டு காரணங்கள் உண்டு. **முதலாவதாக**: விருத்தசே தனம் செய்தவர்களுக்கும், முதலாவது உடன்படிக்கையின் கீழுள்ளவர்களுக்கும்மட்டுமே கிறிஸ்து அந்த நேரத்தில் ஊழியஞ் செய்தபடியினால், நியாயப்பிரமாணத்திற்குப் பரிபூரணமாகக் கீழ்ப் படிந்தால்மட்டுமே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனப் பதிலளித்தார்.

இரண்டாவதாக: அவனை வெளியே இழுப்பதற்காக, அவனு டைய முட்டாள்த்தனத்தை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஆனால், அந்த வாலிபன் தான் பரிபூரணமாக நியாயப்பிரமாணத் திற்குக் கீழ்ப்படிந்திருப்பதாக உறுதிப்படுத்துகிறான்; ஆகிலும், அவனில் ஏதோ ஒன்று குறைவாயிருக்கிறது. அவனுடைய ஆவிக்குரிய கண்கள் மூடப்பட்டிருக்கிறது. கற்பனைகளைச் செய் என்ற இயேசுவின் கட்டளைக்கு அவனுடைய கேலிக்குரிய பதில் **"எதனை"** என்று கேட்டான். ஆண்டவர் அவன்மீது பொறு மையாயிருந்து, கற்பனைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி னார். கற்பனைகளின் வழியாக ஜீவனைப் பெறமுயற்சித்தால், சகல கற்பனைகளையும் சதாகாலத்திற்கும் நிறைவேற்றவேண் டும் **(யாக். 2:10-11)**; அது ஒருபொழுதும் சாத்தியப்படாது.

இப்படியிருக்க, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அந்த வாலி பனின் இருதயத்திலிருக்கும் பிரச்னையைச் சுட்டிக்காட்டினார். பணமே அவனுடைய பிரச்னை; அதற்குத் தீர்வு "..... **நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக் குக்கொடு" (மாற். 10:21)** என்றார்; ஆனால் **"அவன் மிகுந்த ஆஸ் தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்" (மாற். 10:22)** என்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்பொழுது இயேசு **"ஐசுவரியமுள்ள வர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு**

அரிதாயிருக்கிறது என்றார்" (**மாற்.** 10:23); அவருடைய சீஷர்கள் **"அதைக்கேட்டபொழுது மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள்"** (**மாற்.** 10:26). மனுஷனில் நன்மையானதென்று ஒன்றுமில்லை (**ரோம.** 7:18) என்பதனை இன்னும் சீஷர்கள் அறியவில்லை. **சங்கீதம்** 14:2-3லும் **ரோமர்** 3:10-18லும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பிரகடனத்தை அவர்கள் மறந்துபோனார்கள்.

மனுஷன், அவன் எவ்வளவாய்ப் பண்பட்டவனாக இருந்தாலும், எவ்வளவாய் ஒழுக்கவாதியாக இருந்தாலும் தானாக தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழையமுடியாது என ஒருபொழுதும் தவறிழைக்காத நீதிபதி கூறியிருக்கிறார். **"எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப்பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்"** (**எரேமி.** 13:23) என்றார்; அது அவனுடைய சுபாவமாயிற்றே; ஆனால் தேவனால் அந்தச் சுபாவத்தை மாற்றக்கூடும்; தேவனால் எல்லாம் கூடும் (**எரேமி.** 32:27); ஆகையால், தகுதியால் பெறமுடியாததை வரமாகப் பெறமுடியும். **"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்"** (**ரோம.** 6:23) என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனபடியினால், எவ்வளவு ஒழுக்கவாதியான மனுஷனாயிருந்தாலும், அவனுக்கும் கிறிஸ்துவின் சிலுவை அவசியமாயிருக்கிறது!

செப்டம்பர்

4

***அ**வன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக்கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான் (மாற். 10:22).*

"ஒருவன் ஆஸ்தியையும் நித்தியஜீவனையும் பெற்றுக்கொள்ளமுடியுமா?"

உண்மையில் ஆஸ்தி பிரச்னையல்ல; ஆனால், எந்தச் சந்தர்ப் பத்தில் ஆஸ்தி முக்கியமாக இருக்கிறதோ அதுவே பிரச்னையா யிருக்கிறது; மனுஷனுடைய இருதயமே பிரச்னைக்குரியதாயி ருக்கிறது. ஆஸ்தியோடு; அவனுடைய இருதயம் கட்டப்பட்டி ருந்தால், அவன் கிறிஸ்துவைப் பின்தொடர இயலாது; அருமை யான உதாரணம் லோத்தின் மனைவி (**லூக்.** 17:32).

இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாகப் பதில் சொல்லமுடி யும்; **முதலாவது**: ஆஸ்தி இருதயத்தைப் பிடித்திருந்தால், கிறிஸ்துவைப் பின்தொடர்வதற்கு, முதலில் அவரிடம் போக வேண்டும்; **இரண்டாவது**: ஆஸ்தி இருதயத்தைக் கைப்பற்றாம லிருந்தால், ஒரு விளைவும் ஏற்படப்போவதில்லை; கிறிஸ்து வைத் தாராளமாகப் பின்தொடரமுடியும்; ஒருவன் இரண்டையும் பின்பற்றமுடியாது; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இதுபற்றி **மத்தேயு** 6:24ல் **"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒரு வனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து ஒருவனைச் சிநேகிப் பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும்**

ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" எனக் கூறியிருக்கிறார். சகேயு ஐசுவரியவானாயிருந்தான்; அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி: **லூக்கா** 19:8ல் **".....ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண் டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்"** எனக் கூறியிருந்தான்; இயேசு அவனுக்கு மிகுதியான பாதியைக்கொடு என்று சொல்லாமல், **"....இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது...."** எனச் சொல்லியிருந்தார் (**லூக்.** 19:9).

அதென்னவென்றால், எல்லாவற்றையும் கொடுப்பதல்ல, பாதி யைக் கொடுப்பதல்ல, இருதயமே முக்கியமாயிருக்கிறது. பவுல் அப்போஸ்தலர் இதுபற்றிப் **பிலிப்பியர்** 3:7-8ல் **"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்து வுக்கு நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன் மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண் டிருக்கிறேன்"** எனக் கூறியிருக்கிறார். மனுஷகுலத்திற்குத் தேவையான ஆஸ்தி நித்தியஜீவனே; அதனை இயேசுவினிடத்தி லிருந்துமட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும். வேறேதாவது நமக் கும் அவருக்கும் இடையில் வரவிட்டால், அது எதுவாயிருந்தா லும், அதனை அப்புறப்படுத்தியேயாகவேண்டும்.

இந்தச் செய்தி ஐசுவரியவானுக்குமட்டுமே உரியது என்று எடுத்துக்கொள்ளவேண்டாம்; சகலருக்கும் இது உரியது.

செப்டம்பர்

5

பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன் (லூக். 9:23).

"சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்"

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவன் தன்னைப் பின்பற்று வதாயிருந்தால், மூன்று நிபந்தனைகளை அவன் கைக்கொள்ள வேண்டும் என்று கட்டளையாகக் கொடுத்திருக்கிறார். இந்தக் கட்டளைகளை ஒருவன் செய்யமுடியாவிட்டால், அவன் தனக் குச் சீஷனாக இருக்கமுடியாது என **லூக்கா** 14:27ல் வலியுறுத்தி யிருப்பதிலிருந்து **லூக்கா** 9:23இன் முக்கியத்துவம் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. அவர் கொடுத்த அந்த மூன்று நிபந்தனைகளை யும் அதன் தாற்பரியத்தையும் சற்று விபரமாகப் பார்ப்போம்.

முதலாவதாக: **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின் பற்றுகிறவன் தன்னைத்தான் வெறுக்கவேண்டும்** என்று சொல் லப்பட்டிருக்கிறது; பலர் நினைப்பதுபோலத் தன்னைத்தான் வெறுப்பதற்குத் துறவறத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும் என்று இங்கு சொல்லப்படவில்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்தி ருக்கவேண்டும்; துறவறம் என்பதன் பொருள், சந்தோஷத்தையும் ஆறுதலையும் தரக்கூடிய சகலத்தையும் நிராகரிப்பதாகும். சிலர்

தமக்கு சிலவற்றைக் கடுமையாக்குவதன்மூலம் தாம் ஒருவிதப் பரிசுத்தத்தை அடைவதாக நம்புகிறார்கள்; அப்படி எதுவும் சம்ப விப்பதில்லை; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவன் தன்னு டைய சுயபலத்தையும், மாம்சபலத்தையும் நிராகரிப்பதைப் பற்றியே இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவன் மாம்சபலத்தில் தங்கியிருக்கவேண்டியதில்லை; ஏனென்றால், **"அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2:10)** என்றே சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்கு மாம்சமே மிகப்பெரிய தடையாயிருக்கிறது; ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட ஒருவன், அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதனால், தன்னுடைய மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறான் **(கலா. 5:24)**. கிறிஸ்து சிலு வையில் நிறைவேற்றிய பலாபலன்களைப் பெற்றுக்கொள்வ தற்கு நாம் அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் செய்யப் பட்டதை விசுவாசிக்கவேண்டியது தவிர்க்கமுடியாததாக இருக் கிறது; ஆனபடியினால்த்தான் விசுவாசத்தின் குறிக்கோள் எப் பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையில் இருக்கவேண்டும் என்ப தனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

இரண்டாவதாக: **சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு,** என்ற இந்த நிபந்தனை, **"தன்னைத்தான் வெறுக்க வேண்டும்"** என்ற நிபந்தனை எப்படித் தவறாக அர்த்தங்கொள் ளப்பட்டதோ அப்படியே இதுவும் தவறாக அர்த்தங்கொள்ளப் படுகிறது; பலர் தம்முடைய துன்பத்தைச் சிலுவை பிரதிபலிக் கிறது என்று நினைக்கிறார்கள்; ஆனால் கிறிஸ்துவின் துன்பத் தைப்பற்றியும், அவர் சிலுவையில் மரித்ததனால் ஏற்பட்ட பலா பலன்களைப்பற்றியுமே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பலாபலன்கள் யாவும் மனுஷ வீழ்ச்சியின்போது ஆதாமினால் சாத்தானிடம் கையளிக்கப்பட்டவைகளாகும் **(லூக். 4:6)**;

இதனையே நம்முடைய ஆண்டவர் **"தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு"** எனச் சொல்லியிருக்கிறார். அநேகர் நினைப்பதற்கு இது எதிர்மாறாயிருக்கிறது. **"சிலுவையை எடுத்துக்கொண்டு"** என்ற சொற்றொடர், நாம் கர்த்தரிடத்திலிருந்து பெறும் யாவும் சிலுவை மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது என்பதனைத் தெளிவாக உணத்துகிறது.

மூன்றாவதாக: **அநுதினமும்** என்ற சொற்றொடர்மூலம் நம் முடைய விசுவாசம் அநுதினமும் புதுப்பிக்கப்படவேண்டும் என் பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் சொல்லப் பட்ட மன்னாவை இங்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் வனாந்தரத்தில் புதிது புதிதாக இஸ்ரவேலி யர்களுக்கு மன்னா கொடுக்கப்பட்டது; அந்தந்த நாளுக்குக் கொடுக்கப்பட்ட மன்னாவையே இஸ்ரவேலியர்கள் புசிக்கவேண் டும்; நாளைய மன்னாவுக்குக் கர்த்தரை நம்பியிருக்கவேண்டும். இப்படியிருக்க, நம்முடைய விசுவாசம் அநுதினமும் நினைவு கூரப்பட்டு, புதுப்பிக்கப்படவேண்டிய காரணம் நம்முடைய சத்து ருக்களான மாம்சம், உலகம், பிசாசு ஆகியன மறுபடியும் தலை தூக்காதபடிக்குப் பரிசுத்த ஆவியானவர் இவைகளுக்கு எதிராக வல்லமையாகச் செயற்பட்டு, நம்மை வழிநடத்துவதற்கு உதவி யாயிருக்கும்.

இப்படியிருக்க, நாம் ஒவ்வொருநாளும் எடுக்கும் சகல தீர் மானங்களும் கிறிஸ்துவை நோக்கியே எடுக்கப்படவேண்டும். இதன் பொருள் இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தொடர்ச்சியாக விசுவாசிக்கவேண்டும்; நம்முடைய **ஒருமித்த நோக்கு**: எந்தக் காலத்திலும் இயேசு கிறிஸ்துவிலும், **விசுவாசத்தின் குறிக்கோள்**: அவர் சிலுவை யில் நிறைவேற்றியதிலும் நங்கூரமிடப்பட்டிருக்கவேண்டும்.

செப்டம்பர்

6

***இ**ப்படி அவன் பேசுகையில், ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். அப்பொழுது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்த முண்டாயிற்று (லூக். 9:34-35).*

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்"

லூக்கா 9:33ல் பேதுருவின் பேச்சுக்குப் பதில், இந்த மேக மாகும். இஸ்ரவேலிய புத்திரர்களை வனாந்தரத்தில் வழிகாட்டிய மேகமே (**யாத்.** 40:34-38) அவர்கள்மேல் இப்பொழுது நிழலிட்ட மேகமாகும். பேதுருவினால் ஆலோசனையாகச் சொல்லப்பட்ட கூடாரத்தைவிட இந்த மேகம் வித்தியாசமாயிருந்தது. சீஷர்கள் பயப்பட்டனர்; ஆனால், இயேசு பயப்படவில்லை என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் மறுரூபம் அவருடைய மகிமையைப் பிரகாசித்தது; மகிமை அவர்மேல் அல்ல, அவருக்குள்ளிருந்து அவருடைய வஸ்திரத்தினூடாகப் பிரகாசித்தது. மோசேயும் எலியாவும் அவருக்கு முன்பாகத் தோன்றும்போது, மோசே நியாயப்பிரமாணத்தையும் எலியா கிருபையையும் பிரதிபலித்தார்கள். அவர்கள் இருவரும் இயேசுவுடன் சம்பாஷித்தார்கள் என்பது

ஆச்சரியத்தைக் கொடுக்கும் செய்தியல்லவா? மோசே 1500 வருடங்களுக்கு முன்பு இறந்தான்; எலியாவோ மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். இவர்கள் இருவரும் அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது (**லூக்.** 9:31); ஆம், பரலோகத்தின் பேச்சு அவருடைய மரணத்தைப் பற்றியதாக இருந்தபடியினால், மனுஷகுலத்தின் பேச்சும் அவருடைய மரணத்தைப்பற்றியதாகவே இருக்கவேண்டும்.

மறுரூபத்தையும் அவர்களுடைய சம்பாஷனைகளையும் அவதானித்த பேதுரு "**.....மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்**" (**மத்.** 17:4). அவன், தான் பேசுகிறது இன்னதென்று தெரியாமல் பேசினான்; உடனடியாக அவனுக்குக் கிடைத்த பதில், நம்மெல்லோருக்கும் எச்சரிக்கையாக அமைகிறது.

அதெப்படியெனில், நம்மில் தலைசிறந்த பரிசுத்தவான் எவனையும் அவரோடு சமன்படுத்தமுடியாது என்பது தெளிவாகிறது; ஆனால், பூமியில் அவரை மற்ற மனிதர்களுடன் தாராளமாகச் சமன்படுத்துகிறார்கள். இத்தகைய சமன்பாடு அவர்களுடைய இரட்சிப்பைக் கேள்விக்குறியாக்குகிறது. "**இவருக்குச் செவிகொடுங்கள்**" என்பதே தேவ கட்டளை; அப்படியானால் பரிசுத்தவான்களிடத்தில் செய்யும் ஜெபம், மரியாளுக்குச் செய்யும் ஜெபம் ஆகியவற்றில் ஏதாவது பிரயோசனமுண்டோ என்பதனைக் கத்தோலிக்கக் நண்பர்கள் தீவிரமாக ஆலோசனை செய்யவேண்டியது தவிர்க்கமுடியாததாக இருக்கிறது; இவருக்குச் செவிகொடுங்கள் என்பதே அந்தக் கட்டளையாகும்; மரியாளுக்கு அல்ல என்பதனைக் கத்தோலிக்கர்கள் புரிந்துகொள்வது நல்லது. பரமபிதாவின் சுருக்கமான கட்டளை "**இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்**" (**மத்.** 17:5) என்பதே; வேறெதற்கும் செவிகொடுப்பவன் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறான்!

செப்டம்பர்

7

***அ**ப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ என்று கேட்டான்; அதற்கு அவர்: இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக். 13:23-24).*

"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்"

கர்த்தராகிய ஆண்டவர் பல்வேறு விதமான உவமைகளையும் உதாரணங்களையும் எடுத்து, இப்பொழுதுதான் கூறியிருந்தார். இந்த உவமைகள் உதாரணங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிலரே இரட்சிக்கப்படுவார்களென்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையில் **லூக்கா** 13:23ல் ஒருவன் "**ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ**" என்று அவன் கேட்ட மிகமுக்கியமான கேள்வியைப் புறக்கணித்த ஆண்டவர், அந்தக் கேள்வியைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஊக்கமான ஒரு வேண்டுகோளைத் தன்னைச் சுற்றியிருக்கும் யாவருக்கும் அறிவித்திருந்தார்.

அதென்னவென்றால், "**இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்**"; அந்த வாசல் வழியாகவே

தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழையமுடியும் என்றார்; ஆனால், அந்த வழியைத் தேவன் இடுக்கமாக்கவில்லை; மனுஷனே இடுக்கமாக்கினான்; தேவனுடைய வழியை மனுஷன் பின்பற் றாதபடியினால் அந்த வழி இடுக்கமானது; இதுபற்றி ஆண்டவர் **லூக்கா** 13:25-28ல் **"வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். அப் பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணி னீரே என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர்: நீங்கள் எவ் விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்க ளெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல் வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் ஆபிரகா மையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளை யும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்க ளையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக் கும்"** என்று கூறியிருந்தார். கதவு பூட்டப்பட்ட பின்பு ஜனங்கள் தாமதமாய் மனந்திரும்புகிறார்கள், தாமதமாய் விசுவாசிக்கிறார் கள், தங்களுடைய பாவத்துக்குத் தாமதமாய் மனம் வருந்து கிறார்கள், தாமதமாய்த் தேவனிடம் மன்னிப்புக்கோருகிறார்கள், தாமதமாய் ஜெபம்பண்ணுகிறார்கள்; என்ன பிரயோஜனம்? இதே மாதிரி மலைப்பிரசங்கத்தின்போது **மத்தேயு** 7:22-23லும் சொல்லப் பட்டிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டியைப் பொறுத்தளவில், பூமியே அவி சுவாசத்தினால் நிறைந்துபோயிருக்கிறது; அவிசுவாசம் நரகத்தில் இல்லை. **லூக்கா** 13:24-28ல் சொல்லப்பட்டிருக்கும் வேதவாக்கி யங்கள், மரணத்துக்குப் பின்பு இரட்சிப்பு உண்டு, மனந்திரும்புதல்

உண்டு என்ற சிந்தனையைத் தவிடுபொடியாக்குகிறது. அநேகர் மதத்தோடு சம்பந்தப்பட்ட கேள்விகளைக்கேட்டு, தாங்கள் மதப் பற்றுள்ளவர்கள் என்று தங்களைப் பெருமைப்படுத்திக்கொள் கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவோடு ஏதோ ஒரு தொடர்புள்ளவர் களாகவும் இருக்கிறார்கள் (**லூக்.** 13:26); ஆயினும், அவர்களுக் கும் பரலோகம் பூட்டப்படுகிறது. பரலோகத்தின் கதவு பூட்டப் பட்டால், நரகத்தின் கதவு விரிவாகத் திறக்கப்படுகிறது. அங்கு பற்கடிப்பும் நம்பிக்கையற்ற அழுகையும், தவறுக்காக மன வருந்துதலும், மனக்கசப்பும் வேதனையும் உண்டாயிருக்கும்; ஆயினும் எல்லா இடத்திலும் கிறிஸ்துவின் சிலுவையின் உப தேசம் தற்போதைய சிந்தனைக்கு முரணாயிருக்கிறது.

ஒரே ஒரு வழியின்மூலம்தான் இரட்சிப்பைப் பெறமுடியும்; இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதி லும் விசுவாசத்தை வெளிப்படுத்துவதன் மூலமே அது சாத்திய மாகும் (**யோவா.** 8:32, 14:6).

லூக்கா 13ம் அதிகாரத்தைப் பார்க்கும்பொழுது, **முதலாவ தாகக்** கலிலேயருடைய இரத்தம் பலிகளோடே சேர்க்கப்பட்ட தையும், **இரண்டாவதாகச்** சீலோவாமிலே கோபுரம் விழுந்து 18 பேரைக் கொன்றதையும், **மூன்றாவதாகத்** தோட்டத்தில் நாட்டப் பட்ட அத்திமரத்தைப்பற்றிய உவமையையும், **நான்காவதாகத்** தேவனுடைய ராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது என்ற உவமையையும், **ஐந்தாவதாகத்** தேவனுடைய ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்ற உவமையையும் நாம் கவனத் திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

செப்டம்பர்

8

***அ**ப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என் றார் (லூக். 14:14).*

"நீதிமான்களின் உயிர்த்தெழுதல்"

வெகுசீக்கிரத்தில் அடுத்த யாத்திரை ஒன்று வரப்போகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இதனை **"நீதிமான்களின் உயிர்த்தெழுதல்" (லூக்.** 14:14) என்றும், பவுல் அப்போஸ்தலர் இதனை **"மேன்மையான உயிர்த்தெழுதல்" (எபி.** 11:35) என்றும், யோவான் இதனை **"முதலாம் உயிர்த்தெழுதல்" (வெளி.** 20:5) என்றும், பரிசுத்த ஆவியானவர் இதனை **"ஆனந்த பாக்கியம்" (தீத்து** 2:13) என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஆனந்தபாக்கியம் எந்த நிமிஷத்திலும் ஏற்படலாம்; இதற்கு எவ்விதமான தீர்க்கதரிசனமும் நிறைவேறவேண்டிய தில்லை; அப்பொழுது இந்தப் பூமியில் மரித்துப்போன பரிசுத்த வான்கள் ஒவ்வொருவனையும் தேவனாகிய கர்த்தர் மண்ணி லிருந்து எழுப்புவார்; இதுபற்றி **யோவான்** 5:28-29ல் **"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரே தக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட் குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்**

புறப்படுவார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் **தானி யேல்** 12:2ல் **"பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களா கிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்"** என வும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வேதவாக்கியத்தின் ஆவிக்குரிய பொருளைக் கிறிஸ்த வர்கள் அறிந்திருப்பது நல்லது; அதெப்படியென்றால், **யோவான்** 5:28ஐக் கேட்டுக்கொண்டிருந்த மதத்தலைவர்கள் வாயடைத்துப் போனார்கள்; ஆம், இன்றும் இதனைக் கேட்டவுடன் அநேகமான மதத்தலைவர்கள் வாயடைத்துப் போவார்கள். **"பிரேதக்குழிகளி லுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்"** என்பதன் ஆவிக்குரிய பொருள், **நித்திய ஜீவனுக்கு** உயிர்த்தெழுவதையும் **நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும்** உயிர்த்தெழுதலைப்பற்றியும் ஆண்டவர் குறிப்பிடுகிறார்; ஆம், கிறிஸ்துவே ஜீவனுக்கும் மரணத்திற்கும் ஆண்டவர் என்பதனை இந்த வேதவாக்கியம் வலியுறுத்துகிறது.

ஜீவனுக்கு உயிர்த்தெழுபவர்களின் ஒவ்வொரு சிறு துணுக்கு களும் எங்கிருக்கிறது என்பதனையும் தேவன் அறிவார்; அவை எல்லாவற்றையும் இணைத்து, மகிமையான சரீரத்தைத் தேவன் உருவாக்குவார்; அந்தச் சரீரத்திற்குள் தற்பொழுது கிறிஸ்து வோடு இருக்கிற ஆவியும் ஆத்துமாவும் இணைந்துகொள்ளும். பவுல் அப்போஸ்தலர் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கையில்: **"அதற் குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக் கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்"** (**1கொரி.** 15:38) எனச் சொல்லி யிருக்கிறார்.

முதலாவது உயிர்த்தெழுதலில் தேவனுடைய ஒவ்வொரு பரி சுத்தவான்களும் பங்குபற்றுவார்கள்; இயேசுகிறிஸ்து தன்னு டைய உயிர்த்தெழுதல் மூலம் இதனை உத்தரவாதம் செய்திருக் கிறார். இப்படியிருக்க, பூமியில் கிறிஸ்துவுக்குள் உயிரோடு

இருக்கும் ஒவ்வொரு பரிசுத்தவான்களும் இந்த மகிமையான உயிர்த்தெழுதலில் பங்குபற்றுவார்கள்; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **I தெசலோனிக்கேயர்** 4:15-17ல் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இழுத்துக்கொள்ளுதலும் (Rapture), **உயிர்த்தெழுதலும்** (Resurrection) ஒரே சம்பவத்தைப்பற்றியே சொல்கிறது. பரிசுத்தவான்கள் இழுத்துக்கொள்ளப்படும்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் பூமிக்கு வரமாட்டார்; அது இரண்டாம் வருகையின்போதே சம்பவிக்கும். முதல் வருகையின்போது இஸ்ரவேலிய **பரிசுத்தவான்களுக்காக** வந்தார்; இழுத்துக்கொள்ளும்போது பரிசுத்தவான்களுக்காக வருவார்; இரண்டாம் வருகையின்போது சகல **பரிசுத்தவான்களோடு** வருவார் (**அப்.** 1:11).

இப்படியிருக்க, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுடைய மகிமை வேறுபட்டிருக்கும்; ஆம், சில பரிசுத்தவான்கள் மற்றவர்களைவிட அதிகமாகத் தேவனுக்காக வாழ்ந்தவர்கள்; அநேகர் கிறிஸ்துவுக்காகத் தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பெற்றுக்கொண்ட இந்த மகிமை எப்பொழுதும் அவர்களுடனேகூட இருக்கும்; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **I கொரிந்தியர்** 15:41-43ல் தெளிவாகக் கூறியிருக்கிறார். இங்கு அவர் வெளிப்படையாகச் சிலருடைய மகிமை மற்றவர்களுடைய மகிமையைவிட அதிகமாயிருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்; இதற்குக் காரணம் அவர்கள் தேவனுக்கு உண்மையாயிருந்தார்கள். இதனையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "**அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி**" (**மத்.** 25:23) எனக் கூறியிருக்கிறார்.

செப்டம்பர்

9

பின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண் டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள் ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும் (லூக். 17:1-2).

"இடறல்கள் வராமற்போவது கூடாத காரியம்"

இந்த உபதேசம் ஐசுவரியவான் எரிநரகத்தில் உழலுவதைச் சுட்டிக்காட்டிய பின்பு (**லூக்.** 16:19-31), உடனடியாகவே கொடுக் கப்பட்டிருக்கிறதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது. தேவனு டைய பிள்ளைகளுக்கு எதிராக எழும்பும் எதிர்ப்பு, அநேகமாகக் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகிறவர்களிடமிருந்தே வருகிறது; கிறிஸ்துவின் சிலுவையே இந்த இடறலுக்கு முக்கியகாரணமா கும்; கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிப்பவர்களில் பெரும்பான் மையானோர், கிறிஸ்துவின் சிலுவையை ஏற்றுக்கொள்பவர் களை எதிர்க்கிறார்கள்; ஆபேல் காயீனோடு இந்த இடறல் ஆரம்ப மானது; இன்றும் தொடர்கிறது. கிறிஸ்துவின் சிலுவையை நிரா கரிக்கிறவன் கிறிஸ்துவை நிராகரிக்கிறான்; எவன் அத்தகைய செயல்களில் ஈடுபடுகிறானோ, அவனுக்கு நியாயத்தீர்ப்பு உத்தர

வாதம் செய்யப்பட்டிருக்கிறது; கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிப்பவர்கள் யாவருக்கும் நியாயத்தீர்ப்பு தயாராயிருக்கிறது.

"இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்" என்று தேவனுடைய வார்த்தை உறுதிப்படுத்துகிறது. **"சிறுவரில்"** என்பது சிறு குழந்தைகளைப்பற்றி அல்ல, விசுவாசிகளைப்பற்றியே சொல்லப்படுகிறது. அவர்கள் மனத்தாழ்மையை தரித்திருக்கிறபடியினால், கர்த்தர் தங்களைப் பாதுகாப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள்; அவர்கள் தங்களுடைய பார்வைக்குச் சிறியவர்களாக இருக்கிறார்கள்; அப்படியே இடறல்களை ஏற்படுத்துபவர்களுக்கும் அவர்கள் சிறியவர்களாகவும், அற்பர்களாகவும் தோற்றமளிக்கிறார்கள்; ஆனால், கர்த்தருடைய பார்வைக்கோ அவர்கள் மிகவும் அருமையாகவும், அவருடைய கண்மணி போலவும் (**சகரி. 2:8**) இருக்கிறபடியினால், அவர்கள் நிமிடந்தோறும் அவரால் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறார்கள் (**யோபு 7:17-18; சங். 8:4; எபி. 2:6**).

செப்டம்பர்

10

பின்னும் கர்த்தர் சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் (லூக். 22:31-32).

"உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு"

இந்த வேதவாக்கியத்தை உற்றுநோக்குகையில் ஒரு கணப் பொழுதில் ஆவிக்குரிய உலகத்தைக் காணக்கூடியதாயிருக்கிறது. யோபுவுக்கும் இதே மாதிரியான விண்ணப்பத்தை சாத்தான் மேற் கொண்டதை நாம் நினைவுகூரவேண்டியதாயிருக்கிறது. சாத்தானின் சோதனை நம்முடைய இருதயத்திலுள்ள மோசமானதை வெளிக்கொண்டு வருகிறது; ஆனால், தேவனுடைய சோதனையோ எப்பொழுதும் நல்லதையே கொண்டுவருகிறது; ஆனால், தேவன் சாத்தானையே சோதனையின் கருவியாக அடிக்கடி பாவிக்கிறார். அந்தச் சோதனையிலிருந்து வெற்றி பெறப் பரிசுத்தவான்கள் தங்களுடைய பரிசுத்தத்தையல்ல, தேவனுடைய பரிசுத்தத்தை நாடவேண்டும் என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது. சாத்தானுடைய தாக்குதல் எந்தக் கோணத்தில் வந்தாலும் அது விசுவாசத்திற்கெதிராகவே

நடத்தப்படுகிறது; ஏனெனில், விசுவாசம் வீழ்ந்தால் எல்லாம் விழுந்தது.

ஆயினும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவுக்காக வேண்டிக்கொள்கையில் **"நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து"** எனக் கூறியிருப்பதைப் பார்க்கும்பொழுது, பேதுரு மறுபடியும் இரட்சிப்பை நாடவேண்டும் என்பதுபோலத் தென்படுகிறது: அப்படியல்ல, அவன் சரியான பாதையை அறிந்து அதனை நம்பி, சுயத்தை நாடாமல் ஆண்டவரில் முற்றுமுழுவதுமாகத் தங்கியிருக்கவேண்டும் என்பதையும், அதற்குப் பிறகே சகோதரரை ஸ்திரப்படுத்தமுடியும் என்பதும் இங்கு உறுதிப்படுத்தப்படுகிறது.

இப்படியிருக்க, பேதுரு ஆண்டவரை நிராகரிக்கும்போது விசுவாசத்தில் வீழ்ந்துபோனானா? என்ற கேள்வி இயற்கையாகவே எழும்புகிறது; அப்படியல்ல, ஆம், அவன் நிராகரிக்குமாறு கடுமையாகச் சோதிக்கப்பட்டான்; ஆயினும் அவன் விசுவாசத்தில் தவறியிருந்தானானால் மீண்டும் ஆண்டவரிடம் திரும்பி வந்திருக்கமாட்டான். அவன் இயேசுவிடம் திரும்பி வந்தான்; வந்ததும் முற்றுமுழுவதுமாக மன்னிக்கப்பட்டான். அவன் மோசமான பாவத்தைச் செய்தான்; ஆனால் அவரைவிட்டு விலகும் எண்ணத்திற்கு அவன் இடங்கொடுக்கவில்லை. ஆண்டவருடைய ஜெபம் கேட்கப்பட்டது; அவர் அவனுக்காக அவனுடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடி வேண்டிக்கொண்டாரே. விசுவாசம் ஒரு மகா வல்லமையுள்ள சக்தியாயிருக்கிறது. நம்முடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் ஏற்றிவைத்த அந்த உன்னதமான தீபத்தை அவ்வளவு இலகுவாக அணைக்கமுடியாது; நாம் வேண்டுமானால் அதனை அணைக்கலாம்; ஆனால், அது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

செப்டம்பர்

11

***அ**வர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார் (லூக். 24:44).*

"என்னைக் குறித்தே எல்லாம் எழுதியிருக்கிறது"

கிலேயோப்பாவும் லூக்காவும் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த அன்று (வாரத்தின் முதலாம் நாளன்று) மாலை எருசலேமுக்கு எட்டுமைல் தூரமான எம்மா என்னும் கிராமத்திற்குப் போனார்கள். இயேசுவும் அவர்களோடுபோய், அவர்களுடைய சம்பாஷணையில் பங்குபற்றியிருந்தார்; ஆனால், அவர்கள் அவரை இயேசு என்று அறியவில்லை. அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்ட ஆண்டவர் "**.....அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விபரித்துக் காண்பித்தார்**" (**லூக்.** 24:25-27); மேலும், இருவரையும் நோக்கி: "**மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்க**

தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது" என்றார் (**லூக்.** 24:44-46).

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட யாவும் ஏதோ ஒரு வழியில் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவர் சிலுவையில் நிறைவேற்றப்போவதைப்பற்றியும் சொல்லப்பட்டிருந்தது (**எபி.** 6:1). இந்த உண்மையை நாம் அறியாதிருந்தால், தேவனுடைய வார்த்தைகளை அறியவேண்டிய பிரகாரம் அறியமுடியாது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே எல்லா விளக்கத்திற்கும் புரிந்துணர்வுக்கும் திறப்பாயிருக்கிறார்.

செப்டம்பர்

12

***ஆ**தியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந் தது (யோவா. 1:1).*

"வார்த்தை தேவனாயிருந்தது"

யோவான் முதலாம் அதிகாரத்தில், தேவனுடைய முழுவேத வார்த்தைகளின் சுருக்கத்தொகுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. முதலாவதாக, இங்கு சொல்லப்பட்டிருக்கும் வேதவாக்கி யம் இயேசு ஒரு ஜீவவார்த்தையென்றும், எழுதப்பட்ட வார்த்தை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; இதன் மூலம், வேதாகமம் முழுவதும் ஏதோ ஒரு வழியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப்பற்றிய கதையையே சொல்கிறது என்ப தனை நாம் அறிந்திருக்கவேண்டும்; ஆம், சந்தேகத்திற்கிடமின்றி அதனைப்பற்றியே சொல்லுகிறது.

மேலும், **யோவான் 1:14**ல் **"அந்த வார்த்தை மாம்சமாகி, கிரு பையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்..."** எனச் சொல்லப்பட்டிருக்கிறது; இதன் பொருள், அந்த வார்த்தை மாம்சமாகி, இயேசு என்ற நாமத்துடன் இந்த உலகத்திற்குள் ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்திற்காகவே வந்தார் என்பது அறிவிக்கப்படுகிறது; இதுபற்றித் தேவதூதன் காபிரியேல் மரியாளுக்குப் பிரஸ்தாபிக்கையில்: **".....அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங் களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்"**

(**மத்.** 1:21); தாம் செய்யவேண்டியது எதுவோ அதனைச் செய்வதற்காகவே தேவன் மனுஷனாக வந்தார்; இதற்காகவே மனுஷ உருவத்தைப் பெற்றார்; சிருஷ்டிகர் சிருஷ்டியாக வந்தார்; இது கற்பனைக்கு அப்பாற்பட்டது; ஆனால், அது நடந்தது. **யோவான்** 1:29ல் "**...இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி**" எனச் சொல்லப்பட்டிருக்கிறது; யோவான் "**தேவ ஆட்டுக்குட்டி**" எனக் கூறாமல் "**யூதா கோத்திரத்துச் சிங்கம்**" எனச் சொல்லியிருக்கலாமே? எனப் பலர் நினைப்பதுண்டு; ஆனால், பரிசுத்த ஆவியானவர் இயேசுவை "**தேவ ஆட்டுக்குட்டி**" எனக் குறிப்பிடுமாறு ஒரு காரணத்திற்காகவும், ஒரு நோக்கத்திற்காகவுமே அப்படிச் சொல்லியிருந்தார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலியாகக் கொடுக்கப்பட்ட கோடிக்கணக்கான ஆடுகள் கிறிஸ்துவைப் பிரதிபலித்ததுமட்டுமல்ல, அவரே பரிபூரணமான பலியாகவும் இருக்கிறார் என்பதனைப் பிரதிபலித்தது. அந்தக் காரணத்திற்காகவே அவர் வந்தார்; தேவனுடைய குமாரனின் பயண இலக்கு எந்தக் காலத்திலும் சிலுவையாயிருந்தது; இதுபற்றி ஏசாயா தீர்க்கதரிசி "**அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால், நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்**" என **ஏசாயா** 50:6-7ல் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வாரி எப்பொழுதும் அவருக்கு முன்பாகவே இருந்தது (**மத்.** 1:21, 16:21; **மாற்.** 8:31; **லூக்.** 9:22; **யோவா.** 1:29); ஏனென்றால், அவருடைய தூதுப்பணி எப்பொழுதும் வீழ்ந்துபோன ஆதாமின் புத்திரர்களை அந்தப் பாவத்திலிருந்து விடுதலை செய்வதேயாகும்; அதனையே அவர் சிலுவையில் நிறைவேற்றினார் (**யோவா.** 19:30).

செப்டம்பர்

13

நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்று எனக்குச் சொல்லியிருந்தார் (யோவா. 1:33).

"பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம்"

பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவினாலேயே கொடுக்கப்படும் என்று யோவான்ஸ்நானன் சொல்லியிருந்தும், இயேசுகிறிஸ்துவின் 33½ வருஷகால ஊழியத்தின்போது, அவர் ஒருவரையும் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானத்துக்கு வழிநடத்தவில்லை என்பது வெளிப்படையாயிருக்கிறது. பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம், கிறிஸ்து, சிலுவையில் நிறைவேற்றியதன் நேரடிப் பலாபலனாகும். அப்படியாயின் அவர் எதற்காக அவருடைய ஊழியத்தின்போது ஒருவருக்கும் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்ற கேள்வி, கிறிஸ்தவர்களால் எழுப்பப்படுகிறது. ஆம், அதற்குக் காரணம், அவர் சிலுவைக்குப் போகும்வரையும் மனுஷனுடைய பாவத்தின் கடன்கள் செலுத்தப்படவில்லை; இதனிமித்தமே நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 14:20ல் **"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே** (இதன் பொருள் அவர் சிலுவைக்குச்

சென்றபின்பே) **நீங்கள் அறிவீர்கள்"** எனக் கூறியிருந்தார். பரி சுத்த ஆவிக்குள் ஞானஸ்நானத்தைப்பற்றியே **யோவான்** 14:20ல் இயேசுகிறிஸ்து சொல்லியிருந்தார். **அப்போஸ்தலர்** 1:4ல் **"அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ் நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்"** எனக் கூறப்பட்டி ருக்கிறது. **அவர்களுடனேகூடி வந்திருக்கும்போது** என்பதன் பொருள், அவர் பிதாவினிடத்திற்கு ஏறிப்போன காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது; இந்தக் காலம் அநேகமாக அந்த 500க்கு மேற்பட்டோர் கூடின காலமாகும் (**Iகொரி.** 15:6). மேலும் ஆண்ட வர் **அப்போஸ்தலர்** 1:5ல் **"ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளை யிட்டார்"** எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனபடியினால், நாம் கவனமாயிருந்து ஒளி வரும்பொழுது அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; பெற்றுக்கொள்ளாதிருந் தால், அந்த ஒளி திருப்பி எடுத்துக்கொள்ளப்படும். **"என்னிடத் தில்** (பரிசுத்த ஆவியைப்பற்றிக்) **கேள்விப்பட்டது"** என்ன என்ப தனைப்பற்றி **யோவான்** 7:37-39, 14:12-17, 26, 15:26, 16:7-15 ஆகிய வேதவாக்கியங்களில் அறியக்கூடியதாயிருக்கிறது. **"பிதாவின் வாக்குத்தத்தத்தை" லூக்கா.** 24:49லும், **அப்போஸ்தலர் நடபடி கள்** 1:5லும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாவிக்கு இரட்சிப்பு எவ் வளவு வல்லமையுள்ளதாயிருக்கிறதோ, அப்படியே ஒரு விசுவா சிக்கும் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் வல்லமையுள்ளதா யிருக்கிறது என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

செப்டம்பர்

14

***அ**ப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக் கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசு வாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என் றார் (யோவா. 6:28-29).*

"மனுஷகுலமும் நற்கிரியைகளும்"

இரட்சிக்கபட்டாலென்ன, இரட்சிக்கப்படாவிட்டாலென்ன இயற் கையாகவே தம்முடைய இரட்சிப்புக்கு தாம் ஏதாவது செய்ய வேண்டுமென்கிற விருப்பம் மனுஷகுலத்திற்கு உண்டு. இந்த நிலைப்பாடு சுயாதீனத்தின் அடிப்படையில் உருவானது; மனுஷ னுடைய வீழ்ச்சிக்குப்பின்பு (ஆவியில் மரித்தபின்பு), அவன் தேவனை நம்பியிருப்பதைத் தவிர்த்து, தன்னைத்தான் நம்பி யிருப்பதைத் தெரிந்துகொண்டான். ஆவியில் மரணம் சம்ப வித்த காலந்தொட்டு (தேவனைவிட்டு விலகிய காலந்தொட்டு), தேவநீதி அவனுக்குக் கிடைக்காமற்போனதன் நிமித்தம் சுய நீதியை நாடுவதைத் தவிர, வேறெந்த வழியும் அவனுக்கு இருக்கவில்லை; சுயமே அவனுடைய வல்லமையின் ஆதாரமா யிருந்தது; ஆனபடியினால், அவன் சுயபலத்தை விரும்புகிறானே யன்றித் தேவபலத்தை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை.

சுயநீதி அவனை நியாயப்பிரமாணத்திற்குள் இழுத்துச்சென்ற தன் நிமித்தம் கிரியைகளைச் செய்வதற்கு அவன் பிரியமாக

இருக்கிறான். சுயநீதியை அகற்றிப் பிரமாணங்களைத் தவிர்த்து, கிரியைகளை நம்பியிராமல் தேவனைமட்டும் விசுவாசிப்பது என் பது மனுஷபலத்தினால் முடியாத காரியமாகும். அவனுடைய சுயநீதியில் இரண்டுவிதமான சாபக்கேடுகள் உண்டு. சுயநீதி யில் தங்கியிருப்போர் தாம் நீதிமான்களென நினைத்துக்கொள் கிறார்கள்; அதுமட்டுமல்ல, அவர்கள் மற்றவர்களை அற்பமாக வும் எண்ணுகிறார்கள் (**லூக்.** 18:9); ஆனால், கிறிஸ்து "....**என்னை யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது**" (**யோவா.** 15:5) எனவும், "**மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப் படுகிறதென்ன?**" (**லூக்.** 12:26) எனவும் கூறியிருக்கிறார்.

இப்படியிருக்க, இஸ்ரவேலிய புத்திரர்கள் தாம் ஏதாவது செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாயிருந்தார்கள்; ஆனால், கிறிஸ்துவோ அவர்கள் கிருபையைத் தவிர்த்துக் கிரியைகளின் மூலம் தேவனிடத்தில் வரமுடியாது என்பதனை அவர்களுக்குப் பிரதியுத்தரமாக "....**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப் பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது**" என வலியுறுத் தினார் (**யோவா.** 6:29); தேவனுக்கேற்ற விசுவாசம் இருக்குமா யின் நிச்சயமாகக் கிரியைகள் பெருகும் (**எபேசி.** 2:10). அப்படியா யின், கிரியைகள் தேவையில்லை எனக் கூறுகிறோமோ? இல்ல வேயில்லை, அவைகள் இரட்சிக்கப்பட்டோருக்காக ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரினால் நியமிக்கப்பட்டிருக்கிறது (**எபேசி.** 2:10; **பிலி.** 1:5, 2:13). பொருத்தமான விசுவாசம், பொருத்தமான கிரியைகளை அதிகரிக்கச் செய்யும். கிரியைகள் இல்லாத விசு வாசம் செத்ததாயிருக்குமெனப் (**யாக்.** 2:20) பரிசுத்த ஆவியா னவர் யாக்கோபுமூலம் கூறியிருக்கிறார். ஆகையால், நாம் விசு வாசத்தின்மூலம் பெற்ற நீதியைப் பாதுகாப்பதற்குத் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுவோமாக; இதுவே தேவனு டைய வழியாகும் (**லூக்.** 9:23).

செப்டம்பர்

15

உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள் (யோவா. 6:49).

"மன்னாவும் யூதர்களும்"

யூதர்கள் மன்னாவில் இரட்சிப்பு உண்டு எனப் பொருள்படப் பேசினார்கள் (**யோவா.** 6:31). யூதர்கள் சொன்ன அதே வார்த்தையை ஆண்டவர் எடுத்து, மன்னா யாரைப் பிரதிபலிக்கிறது என்பதனை **யோவான்** 6:32ல் **"வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என எடுத்துரைத்தார். **"வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்"** (**யோவா.** 6:33). வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னா கிறிஸ்துவின் மாதிரியைப் பிரதிபலித்தது; கிறிஸ்துவையே மன்னா படம்பிடித்துக்காட்டியது. மாதிரிகளில் **"ஜீவன் இல்லை"**; ஆனபடியினால் அவைகளால் இரட்சிப்பைக் கொடுக்கமுடியாது என்பதனை நாம் அறிந்து வைத்திருக்கவேண்டும்; **எபிரெயர்** 10:4 இதனையே உறுதிப்படுத்துகிறது.

அப்படியாயின் வெண்கலப் பலிபீடத்திலும் இரட்சிப்பில்லை; அதேபோல, பரிசுத்த ஸ்தலத்தில் உபயோகிக்கப்படும் எந்த

உபகரணங்களிலும் இரட்சிப்பு இல்லை; அவைகள் மாதிரியைப் பிரதிபலிக்கிறதேதவிர, அவைகளில் இரட்சிப்பு இல்லை.

மன்னா யாரைப் பிரதிபலிக்கிறது என்பதனை அறிந்து, தான் அறிந்ததை விசுவாசிக்கும்பொழுது இரட்சிப்பு ஏற்படுகிறது. ஆண்டவர் யூதர்களுக்கு இதோ மன்னா யாரைப் பிரதிபலிக்கிறதோ அவர் உங்களுக்கு முன்பாக நிற்கிறார் என்று தன்னைச் சுட்டிக்காட்டி **".....அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்" (யோவா. 6:29)**.

மேலும் மன்னாவைப்பற்றிப் பிரஸ்தாபிக்கையில், அடையாளத்தில் பங்குபற்றினவர்கள், அது தேவனுடையதாயிருந்தும், அவர்கள் மரித்துப்போனார்களே என்பதனைச் சுட்டிக்காட்டினார் **(யோவா. 6:49)**; ஏனென்றால், அடையாளத்தில் ஜீவன் இல்லை. ஆனால் அந்த அடையாளங்கள் சுட்டிக்காட்டுவது இரட்சிப்புக்கு வழிநடத்துகிறது என்பதனை நிரூபித்திருந்தார்.

யூதர்களோ அடையாளங்களோடு ஒட்டிக்கொண்டு, அதன் மூலம் இரட்சிப்பைப்பெற அன்றும் முயற்சித்தார்கள்; இன்றும் அதே முயற்சியில் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்; அதேநேரம் நிஜத்தை மறுக்கிறார்கள்; அப்படியே தற்பொழுது அநேகமான கிறிஸ்தவர்களும் செயற்படுகிறார்கள் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. இன்று கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் தாங்கள் போகும் சபை தங்களை இரட்சிப்பதாக நினைக்கிறார்கள்; தண்ணீரில் ஞானஸ்நானம், இராப்போஜனம் ஆகிய சபைக்கட்டளைகள் தங்களை இரட்சிப்பதாக நம்புகிறார்கள்; அப்படியல்ல; அவைகள் அடையாளங்களேதவிர, நிஜமில்லை; அவைகள் இயேசுகிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறதே தவிர, அவைகள் இயேசுகிறிஸ்து அல்ல.

செப்டம்பர்

16

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (யோவா. 8:32).

"சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 14:6ல் கூறியிருக்கிறார். யார் இந்த இயேசுகிறிஸ்து? அவர் தனக்குச் செய்தது என்ன என்பதனை ஒருவன் அறிவானாகில் அவன் இயேசுகிறிஸ்து வினூடாகப் பிதாவினிடத்திற்குச் சேர்வதற்கேற்ற பாத்திரமாக இருக்கிறான். சத்தியம் எனப்படுவது கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் பற்றியதேயாகும். இந்த சத்தியம் ஒரு விசுவாசி இரட்சிக்கப்படுவதற்கு மட்டுமல்ல, வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் நிரந்தர ஆதாரமாக இருக்கிறது. அவனுடைய நாளாந்த கிறிஸ்தவ வாழ்க்கையில் அவனுக்கு விரோதியாயிருக்கிற மாம்சம், உலகம், பிசாசு ஆகிய மூன்றையும் ஜெயங்கொள்வதற்கு சத்தியம் ஒன்றே தேவையாயிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவன் பூரணப்படுவதற்கும் விடுதலையைப் பெறுவதற்கும் சத்தியத்தை அறிந்தாகவேண்டும்; பலர் சத்தியத்தை அறியாமல் அல்லது அறியவிருப்பமில்லாமல் இருக்கிறார்கள்; சத்தியத்தை ஒருவன் அறியவேண்டுமாயின், அவன் சுயநீதியை நிராகரித்து, தேவநீதியை நாடவேண்டும். இயேசு

கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் அறிவதற்குத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியைப்பற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "..... **ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்**" (**லூக்.** 9:23) எனக் கூறியிருக்கிறார். இதுவே சத்தியத்தை அறிவதற்குத் தேவனுடைய ஏற்பாடாயிருக்கிறது. அதே சமயம் "**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல; தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்**" (**மத்.** 10:38-39) என்றும் ஆண்டவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஒரு விசுவாசி சத்தியத்தை அறிந்தால் அதை அவன் விசுவாசிக்கவேண்டும்;

அந்தச் சத்தியம் ஒரு விசுவாசி இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதனால், அவன் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டு, அவர் மரிக்கும்போது தானும் அவரோடுகூட மரித்து, அவர் அடக்கம்பண்ணப்படும்போது தானும் அவரோடு கூட அடக்கம்பண்ணப்பட்டு, அவர் உயிர்ப்பிக்கப்பட்டபோது அவரோடுகூடத் தானும் உயிர்த்தெழுந்து, புதிதான ஜீவனுள்ளவனாக அவரில் பிழைத்திருக்கிறேனென விசுவாசிக்கவேண்டும் (**ரோம.** 6:3-5; **கலா.** 2:20); அதுமட்டுமல்ல, அவரோடுகூடப் பிதாவினுடைய வலதுபாரிசத்தில் தானும் (ஆவியில்) உட்கார்ந்திருப்பதாக விசுவாசிக்கவேண்டும் (**எபி.** 1:3; **எபேசி.** 2:7).

மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, சாத்தானையும் அவனுடைய கூட்டத்தையும் சிலுவையில் நம் சார்பில் முற்றுமுழுவதுமாகத் தோற்கடித்திருக்கிறபடியினால் (**கொலோ.** 2:14-15), அதனை விசுவாசிக்கும் கிறிஸ்தவனும், தானும் சாத்தானையும் அவனுடைய கூட்டத்தையும் தோற்கடித்ததாகவே விசுவாசிக்க வேண்டும்; ஒரு விசுவாசி தன்னுடைய கடந்தகால நிகழ்கால

வருங்காலப் பாவங்கள் யாவற்றிற்கும் கிறிஸ்துவினால் சிலுவையில் பிராயச்சித்தம் காணப்பட்டிருக்கிறபடியினால் (I**யோவா.** 1:7), எந்தப் பாவச்செயலையும் (மன்னிப்புக் கேட்டிருந்தால் [I**யோவா.** 1:9]) அவனுக்கு எதிராக யாரும் சுமத்தமுடியாது; தேவன் அவனை நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினவனாகப் பார்ப்பதுமட்டுமல்ல, ஒருபொழுதும் நியாயப்பிரமாணத்தை மீறாதவனாகவே பார்க்கிறார். அந்த விசுவாசி **"கிறிஸ்துவுக்குள்"** இருப்பதனால் ஏற்படும் இந்தப் பாக்கியத்தை யார் உதறித்தள்ளுவான். அவன் கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தொடர்ச்சியாக விசுவாசிப்பானாகில் அவன் **"கிறிஸ்துவுக்குள்"** இருக்கிறான்.

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை முற்றுமுழுவதுமாக நிறைவேற்றியிருக்கிறபடியினால் அவருக்குள் இருக்கும் விசுவாசியும் நியாயப்பிரமாணத்தை முற்றுமுழுவதுமாக நிறைவேற்றியிருக்கிறான் (**கலா.** 3:13-14); இயேசுவை விசுவாசிக்கிறவன் உலகத்தை ஜெயிக்கிறான் (I**யோவா.** 5:5; **கலா.** 6:14); கிறிஸ்துவினுடையவன் தன் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறான் (**கலா.** 5:24); இவற்றை விளங்கி, அதனை விசுவாசித்து அப்படியே அநுதினமும் செயற்படவேண்டும் என்பதனையே **லூக்கா** 9:23 உறுதிப்படுத்துகிறது. இதுவே சத்தியம்; இப்படியிருக்க, நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதனால், பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு நம்மில் செயற்பட்டு, கிருபையையும் சமாதானத்தையும் பெருகப்பண்ணுவார் (II**பேது.** 1:2); அதேநேரம் நமக்கு எதிராயிருக்கும் சகலத்திலிருந்தும் விடுதலை பெறமுடியும் என **யோவான்** 8:32 உறுதிப்படுத்துகிறது.

செப்டம்பர்

17

***நா**ன் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது (யோவா. 10:28-29).*

"அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை"

ஒரு குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் நடந்த ஒரு சம்பவத்தை உதாரணமாக எடுத்து, இந்த வேதவாக்கியத்தைத் தெளிவுபடுத்துவது எனக்குப் பொருத்தமாயிருக்கிறது.

ஒரு குழந்தை நாள் முழுவதும் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்தது. அந்த நாள் முடிவில் அந்தக் குழந்தையின் தகப்பன் பிள்ளையைக் கொண்டுபோக வந்திருந்தான். அந்தக் குழந்தை இவ்வளவு நேரமும் விளையாடிக்கொண்டிருந்த விளையாட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் தன் தகப்பனிடம் ஓடினாள். அந்தக் குழந்தையின் பராமரிப்பு நிலையத்தின் ஆசிரியை விளையாட்டுப் பொருட்களை அவைகள் ஆரம்பத்திலிருந்த மாதிரி அவற்றை ஒழுங்குபடுத்தி வைக்கவேண்டும் என்று அந்தக் குழந்தைக்குக் கட்டளையிட்டாள். அந்தக் குழந்தை சத்தமிட்டு அப்பா, நான் வருகிறேன்,

நீங்கள் என்னை விட்டுட்டுப் போகவேண்டாம் என்று சொன்னாள்; அவளின் தகப்பன் மகளை நோக்கி: உன்னை விட்டுட்டுப் போக நான் இங்கு வரவில்லை என்று கரிசனையோடு சொன்னான்.

அதேபோலவே, பரமபிதா நமக்கு இரட்சிப்பைத் தந்தார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மை விட்டுட்டுப்போக வரவில்லை (**எபி.** 13:5; **மத்.** 28:20). அவர் தன்னுடைய அலுவலைச் செய்துமுடிப்பார்; அவர் நம்மைத் தயார்பண்ணுவார்; நாம் செய்ய வேண்டியது, நாம் ஏற்படுத்திய குப்பையைச் சுத்தம் செய்ய வேண்டியதே. இதுபற்றி ⁞**நாளாகமம்** 7:14ல் "**என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்**" (குணமாக்குவேன்)" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே ஆவிக்குரிய நோய்களுக்குத் தேவனுடைய மருந்துச் சீட்டாகும். பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தூக்கிக்கொண்டு செல்வதற்குத் தயாராயிருக்கிறார்.

அவர் நம்மைச் சிட்சித்துக் (**நீதி.** 3:11-12; **எபி.** 12:7-11) குப்பையை அகற்றுமாறு வேண்டிக்கொள்வார்; நாம் குப்பையை அகற்றமுடியாது என்று அடம்பிடித்தால், அவருடைய இரக்கம் சிட்சிப்பைத் தொடர்ந்து செய்யும்; அதற்கும் செவிகொடாவிட்டால், நாமே அவருடைய கையைவிட்டு விலகும் முடிவை எடுக்கிறோம் (**நீதி.** 29:1).

செப்டம்பர்

18

***நா**ன் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார் (யோவா. 12:32).*

"ஜனங்களைக் கிறிஸ்துவிடம் இழுத்துக்கொள்வது எப்படி?"

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 8:32ல் **"சத்தியத்தையும்** (அந்த சத்தியத்தை என்றே கிரேக்கமொழியில் சொல்லப்பட்டிருக்கிறது) **அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"** எனக் கூறியிருந்தார். அவிசுவாசியினுடைய பொதுவான பிரச்னை அவன் பொய்யை விசுவாசிக்கிறான். அப்படியே அநேகமான கிறிஸ்தவர்கள் தாராளமாகப் பொய்யை விசுவாசிக்கிறார்கள்; இதுவே தற்போதைய பெரும் பிரச்னையாயிருக்கிறது; அப்படியாயின் சத்தியம் என்றால் என்ன? சுருக்கமாக, இயேசு கிறிஸ்துவும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதுமே சத்தியம் எனப்படும். இதனையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"** என்று **யோவான்** 14:6ல் தெளிவாக, எந்தவித சந்தேகத்திற்கிடமுமின்றி சொல்லியிருக்கிறார். அவர் பின்பு **யோவான்** 12:32ல் **"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்....."** எனக் கூறியிருப்பதில் நாம் மிகுந்த

கவனஞ்செலுத்தவேண்டும்; **"உயர்த்தப்பட்டிருக்கும்போது"** என் பது அவருடைய மரணத்தைக் குறிப்பிடுகிறது. அவர் சிலுவை யில் மனுஷகுலத்தின் பாவத்துக்காக மரித்தார்; ஒரு மனுஷனை அந்த ஒரு வழியின்மூலமே கிறிஸ்துவிடத்திற்கும், அவர் சிலு வையில் நிறைவேற்றியதற்கும் இழுத்து, அதன் மூலமாக வெற்றியைப் பெறுவதற்கு வழிநடத்தமுடியும்.

சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தவிர்த்து, வேறெந்த வழிமூலமும் மனுஷனை இழுக்க முயற்சிப்போமா னால், நாம் கர்த்தரிடத்தில் அல்ல, அந்த மனுஷனை வேறொன் றுக்கே இழுக்கிறோம்; அதற்கு இயேசு என்று பெயர் சூட்டப்பட் டிருந்தாலும், அதற்கும் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்கும் ஒரு தொடர்பும் இல்லை (**Iகொரி. 1:23, 2:2**); அது வேறொரு இயேசுவே (**IIகொரி. 11:4**); இதனையே அநேகமான கிறிஸ்தவ சபைகள் பின்பற்றுகின்றன. தற்போதைய கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ மார்க்கங்களுக்கும், மனுஷரைப் போதகர் களிடத்திற்கும், ஐசுவரியத்திற்கும், இன்னும் அநேக மனுஷ திட்டங்களுக்குமே இழுத்துச்செல்கின்றன; ஆனால், மனுஷரைக் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவிடம் இழுத்துச்செல்வ தில்லை; இதற்கு அறியாமை அல்லது அவிசுவாசமே முக்கிய காரணமாயிருக்கிறது. நாம் எப்பொழுதும் சிலுவையில் அறை யப்பட்ட கிறிஸ்துவையே தேடவேண்டும் (**மத். 28:5; மாற் 16:6; லூக். 9:23**);

செப்டம்பர்

19

தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறா ரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார் (யோவா. 12:33).

"கிறிஸ்துவின் சிலுவை"

யோவான் 12:32ல் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலு வையில் தான் நிறைவேற்றப்போகிறதையே குறிப்பாகப் பேசு கிறார்; மேலும், தொடர்ந்து **யோவான்** 12:33ல் **"தாம் இன்னவித மான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்"** என்று சொல்லப்பட்டிருப்பதும் சிலுவை மரணத்தைப்பற்றியே என்பது தெளிவாகிறது.

இதன் பொருள், தான் குறிப்பாக சிலுவையில் மரிக்கப்போ கிறபடியினால், முழுஉலகமும், முழுக்கிறிஸ்தவர்களும் தன்னி டத்தில் திரளாகச் சேருவார்கள் என்று அவரால் ஊகிக்கப்பட வில்லை; உண்மையில் அநேகர் அவரிடம் சேரமாட்டார்கள்.

அவர் சொன்னது என்னவென்றால், மனுஷகுலத்தை கட்டி யிருக்கும் அடிமைத்தனத்தை சிலுவை ஒன்றினாலேயே உடைத் தெறியமுடியும் என்றும், தான் சிலுவைக்குப் போவதன்மூலமே அது சாத்தியமாகும் எனவும் கூறியிருந்தார்; மற்றும், ஆவிக் குரிய மரணத்தைப் பெற்றுக்கொண்ட மனுஷனுக்கு ஆவிக்குரிய ஜீவனை **"நான் சிலுவையில் நிறைவேற்றப்போவதன்மூலம் கொண்டுவருவேன்"** எனக் கூறியிருந்தார்.

சிலுவைக்குப் போவதன்மூலம் அந்தகாரத்திலும் மரண இரு ளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தைச் கொண்டு

வருவேன் என்று கூறினார். சிலுவை இல்லாமல் மனுஷகுலம் சுயாதீனத்தை ஒருபொழுதும் பெறமுடியாது.

முற்றுமுழுவதும் பாவத்திலிருக்கிற இரட்சிக்கப்படாத மனுஷர்களையும் விசுவாசிகளையும் இந்த வார்த்தை இழுக்கின்றது; ஏனென்றால், பாவியான மனுஷனுக்கு இரட்சிப்பு சிலுவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறபடியினால் (**யோவா.** 19:30), அவன் இரட்சிப்பைப் பெறுவதற்குச் சிலுவைக்குப் போகவேண்டும்; அப்படியே கிறிஸ்து சிலுவையிலேயே சாத்தானை முற்றுமுழுவதும் தோற்கடித்து, வெற்றிசிறந்திருக்கிறபடியினால் (**கொலோ.** 2:14-15), ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையைப் பெறுவதற்கும், அதனை அனுபவிப்பதற்கும் விசுவாசி சிலுவைக்கே செல்லவேண்டும் (**கொலோ.** 2:6-7; **எபி.** 3:14); இதன் பொருள், கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்பதேயாகும் (**லூக்.** 9:23; **யோவா.** 15:5).

செப்டம்பர்

20

பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா. 13:5).

"சீஷருடைய கால்களைக் கழுவவும், துடைக்கவும் தொடங்கினார்"

ஆசாரியர்கள் எண்ணையால் குத்துவிளக்கை நிரப்பவும், பொன்தூபபீடத்தில் தூபமிடவும், திரியினுடைய எரிந்துபோயி ருக்கும் சுடர்களை வெட்டிச் சுத்தம்பண்ணவும் மற்றும் ஆசாரிய கடமைகளை நிறைவேற்றவும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் உட் செல்வது வழக்கமாயிருந்தது. ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத் திற்குள் உட்செல்வதற்கு முன்பு தங்களுடைய கைகளையும் கால்களையும் கழுவவேண்டும். இதனையே சீஷர்களுடைய கால்களைக் கழுவுவதன்மூலம் ஆண்டவர் செய்தார். முன்பு ஆசாரியர்கள் நியாயப்பிரமாணத்தைச் செய்தபடியினால், தங்களு டைய கைகளைக் கழுவவேண்டியதாயிற்று.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவர்களுக் காகச் சிலுவையில் எல்லாவற்றையும் செய்துமுடித்ததன் நிமித் தம் (**யோவா. 19:30**) இப்பொழுது சீஷர்கள் கைகளைக் கழுவ வேண்டியதில்லை; ஆனால், தேவனுக்கு முன்பாக நாம் நடக்க வேண்டியிருக்கிறது; பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் செய்யும் பொழுதும், நடக்கும்பொழுதும், கைகளையும், கால்களையும்

தீட்டுப்படுத்தினார்கள்; ஆனபடியினால் இரண்டையும் கழுவ வேண்டியதாயிற்று. இப்பொழுது சீஷர்களாகிய நாம் உலகத்தில் நடக்கிறோம்; நடக்கும்பொழுது கால்கள் தீட்டுப்படுகிறது; இதனி மித்தம் கர்த்தராகிய ஆண்டவர் நம்முடைய கால்களைக் கழுவு கிறார். கால்கள் இந்தப் பொல்லாத பிரபஞ்சத்தில் தீட்டுப்படாத படிக்கு பரிசுத்த ஆவியானவர் நடக்கும் முறையைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலர்மூலம் **IIகொரிந்தியர்** 6:14-18ல் வெளிப்படுத்தியி ருக்கிறார். அந்த விசுவாசத்தில் (**Iகொரி**. 2:2) உறுதியாயிருப் போமாகில், பரிசுத்த ஆவியானவர் நம்மில் வல்லமையாகச் செயற்பட்டு, நம்முடைய நடையைத் தேவனுக்கேற்ற நடையாக மாற்றுவார் (**ரோம**. 8:1-2, 11).

செப்டம்பர்

21

***அ**தற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவ னுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவா. 14:6).*

"சத்தியம்"

நாம் முதற்கண் சத்தியம் என்றால் என்ன என்பதனை உறு திப்படுத்திக்கொள்ளவேண்டும்; சத்தியம் என்பது ஒரு தத்துவ மல்ல; உலகம் சிந்திக்கிற மாதிரி அது ஒரு நம்புகிற முறையும் அல்ல. வேதாகமம் சத்தியத்தை நான்கு வித்தியாசமான முறை யில் கணிப்பிடுகிறது; இதன் பொருள், சத்தியம் என்பது ஒரு தனி மனிதனைப்பற்றியதேயாகும்.

வேதவாக்கியத்தின்படி **முதலாவதாக**: இயேசுவே சத்தியம் (**யோவா.** 14:6); இதன் பொருள், இயேசு சத்தியத்தை உடையவ ராக இருக்கிறார் என்பதல்ல, அவரே சத்தியமாயிருக்கிறார். சத்தியத்தை உடையவராக இருக்கிறார் என்பதற்கும், அவரே சத்தியம் என்பதற்கும் இடையில் பாரிய வித்தியாசம் உண்டு. **இரண்டாவதாக**: தேவனுடைய வார்த்தையே சத்தியம் (**யோவா.** 17:17); ஆம், நிச்சயமாக இயேசுவே வார்த்தை எனப்படும் (**யோவா.** 1:1, 14). **மூன்றாவதாக**: பரிசுத்த ஆவியானவரே சத்தி யம் (**யோவா.** 14:17, 15:26, 16:13; **I யோவா.** 5:6). **நான்காவதாக**: அபிஷேகமே சத்தியம்; இதன் பொருள், தேவன் சத்தியத்தையே அபிஷேகம் செய்கிறார்; அந்த அபிஷேகம் பரிசுத்த ஆவியான வரிடமிருந்தே வருகிறது (**I யோவா.** 2:27).

இப்படியிருக்க, பிதாவினிடத்தில் செல்வதற்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒரே ஒரு வழியையே ஏற்படுத்தியிருக்கிறார். அவர் தன்னையே பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்து, அந்த வழியை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். அந்த வழி சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவாகும் (**Iகொரி.** 1:23, 2:2). அவர் பூமியிலிருக்கும்பொழுது ஒருவன் அந்த வழியைப் பெற்றுக்கொள்வதற்கு **லூக்கா** 9:23ஐக் கெட்டியாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறியிருந்தார்; இதனைச் செய்யாவிட்டால், அவன் தன்னுடைய சீஷனாக இருக்கமுடியாது என்று **லூக்கா** 14:27ல் கூறியிருக்கிறார்.

என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்பதன் பொருள் பிதாவினிடத்திற்குச் செல்வதற்கு இயேசுகிறிஸ்துவே ஒரே வழி என்பது அழுத்தப்பட்டிருக்கிறது; மேலும், அந்த அழுத்தத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது **இஸ்லாமிய மதம்** முகமது மூலம் தேவனை அடையலாம் என்று உரிமை கோருகிறது; அப்படியே **யூதர்கள்** நியாயப்பிரமாணத்தைச் செய்வதனால் தேவனை அடையலாம் என்று உரிமைகோருகிறார்கள்; இதனிமித்தம் அவர்கள் இயேசுவையும் தேவனையும் நிராகரிக்கிறார்கள்; **புதிய தலைமுறை** தம்முடைய சுயபலத்தினால் தேவனை அடையலாம் என்று உரிமைகோருகிறது; இவையாவும் அந்தகார சக்திகளின் மதிநுட்பவேலை என்பது தெளிவாகிறது; அவர் 2000 வருஷங்களுக்குமுன் மனிதமீட்புக்குத் தேவையான விலையைக் கொடுத்துச் சிலுவையில் மரித்து, மனிதகுலத்தை **அந்தப் பாவத்திலிருந்து** மீட்டுக்கொண்டார் (**மத்.** 1:21).

ஜீவனுமாயிருக்கிறேன் என்பதுபற்றி **யோவான்** 10:10ல் **"..... நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்"** எனக் கூறியிருப்பதிலிருந்து அவரே ஜீவனாயிருக்கிறார் என்பது புலனாகிறது; ஜீவன் இரத்தத்திலேயே உண்டு (**லேவி.** 17:11; **எபி.** 9:22); அவர் தன் இரத்தத்தைச் சிலுவையில் சிந்தி மனுஷகுலத்திற்கு ஜீவனைக் கொடுத்தார்.

செப்டம்பர்

617

22

***மெ**ய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவை களைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய் வான் (யோவா. 14:12).*

"இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று முக்கிய மான அம்சங்களை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதலாவதாக: இந்த வேதவாக்கியம் சகலதும் விசுவாசத் தின் மூலமே நடைபெறுகிறது என்பதனை வலியுறுத்திக் கூறு கிறது; அதெப்படியென்றால், இங்கு சொல்லப்பட்டிருக்கும் விசு வாசம், எந்தக் காலத்திலும் பொருத்தமான விசுவாசத்தின் குறிக் கோளை உள்ளடக்குகிறது; அது கிறிஸ்துவின் சிலுவையே யாகும். இதன் பொருள், சகல ஆசீர்வாதங்களுக்கும் கிறிஸ் துவே ஆதாரம் என்றும், அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஒரேவழி கிறிஸ்துவின் சிலுவையே என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் எதுவும், அது எவ்வளவு பெரிதாயிருந்தாலென்ன, எவ்வளவு சிறிதாயிருந்தாலென்ன அதற்குக் **"கிறிஸ்துவே ஆதாரம்; சிலு வையே வழி"** என்ற அடிப்படையிலேயே நமக்குக் தரப்படு கிறது.

இரண்டாவதாக: **"நான் செய்கிற கிரியைகள்"** என்பது கிறிஸ்துவின் அற்புதங்களையும், குணமாக்குதல்களையும், அதிசயங்களையும், அடையாளங்களையும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையான கிரியைகளையும் உள்ளடக்குகிறது

மூன்றாவதாக: **"பெரிய கிரியைகள்"** எனக் கிறிஸ்து குறிப்பிடுவது முழு உலகத்திலும் செய்யப்படும் கிரியைகளைப்பற்றியதேயாகும். கிறிஸ்துவினுடைய பொதுஜன ஊழியத்தின்பொழுது அவரால் நடத்தப்பட்ட அற்புதங்கள், அதிசயங்கள் இஸ்ரவேலுக்குள்ளேயே இருந்தது. இதன் பொருள், பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் செய்யப்பட்ட விசுவாசி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான்; நோயாளிகளைக் குணமாக்குவதற்கு ஜெபம்பண்ணுகிறான்; அற்புதங்களைச் செய்கிறான்; பிசாசுகளைத் துரத்துகிறான் (**மாற்.** 16:17-18). உலகளாவிய ரீதியில் இதனை அவனால் செய்யமுடியும்; இங்கு தரத்தைப்பற்றியல்ல அளவைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டம்பர்

23

***இ**யேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச்சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத் தார் (யோவா. 19:30).*

"முடிந்தது"

கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளில் மிக வும் முக்கியத்துவம் நிறைந்த வார்த்தை இதுவாகும். கல்வாரி சிலுவையில் கிறிஸ்து தன்னுடைய தூதுப்பணியை நிறைவேற் றிய பின்பு இவ்விதமாகச் சொல்லியிருந்தார். ஆங்கில வேதாக மத்தில் **"இது முடிந்தது" (It is finished)** என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆம், **"என் பிதாவுக்கடுத்தவைகள்" (லூக். 2:49)** செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்று கூறியிருக்கிறார்.

"இது முடிந்தது" என்று சொல்வதன் மூலம் அப்பாவியான ஆட்டுக்குட்டிகள் இனிமேலும் பலியாகக் கொடுக்கப்படவேண் டியதில்லை என்பது வலியுறுத்தப்படுகிறது. பலி கொடுப்பதற் கென்று எருசலேமுக்குப் போகவேண்டியதில்லை; **"அது முடிந் தது"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியைப் பலி யாகப் பலிபீடத்தில் கொடுப்பதற்கு ஆசாரியன் இனித் தேவை யில்லை; மகா பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து **"அது முடிந்தது"** என்று சொல்லியிருக்கிறார். விசுவாசி, தன்னால் இயலாத நியாயப்பிரமாணத்தைப் பராமரிப்பதற்கு இனிப் போராட வேண்டியதில்லை; ஏனென்றால், பிரமாணத்தை நம் சார்பில் செய்துமுடித்தவர் **"அது முடிந்தது"** என்று சொல்லியிருக்கிறார்.

இப்படியிருக்க, **"இது முடிந்தது"** என்பதன் ஆவிக்குரிய பொருளை மேலும் சற்று விபரமாகப் பார்ப்போம்.

* கிறிஸ்துவின் வேதனையைப்பற்றி தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட சகல வேதவாக்கியங்களும் நிறைவேறியது (**ஏசா. அதி**:53) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* சாத்தான் முற்றுமுழுவதுமாகச் சிலுவையில் தோற்கடிக்கப் பட்டான் (**கொலோ**. 2:15; **யோவா**. 12:31) என்று உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது;

* யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் பகையாக நின்ற பிரி வினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டது (**எபேசி**. 2:14-18; **ரோம**. 10:11-12) என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது;

* தேவனுடைய கிருபாசனத்திற்குத் துணிவோடு போகக்கூடிய பாக்கியம் கிடைத்தது (**எபி**. 4:16, 10:19-20) என்று சொல்லப்பட்டி ருக்கிறது;

* மரணத்தின் ஆளுகை ஒழிக்கப்பட்டது (**ரோம**. 5:12-21) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* அந்தப் பாவத்தின் வல்லமை உடைக்கப்பட்டது (**ரோம. அதி**:6; **கொலோ**. 2:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* அந்தப் பாவத்திலிருந்தும் (பாவசுபாவத்திலிருந்தும்) (**ரோம**. 6:6) சகல பாவச்செயல்களிலிருந்தும் இரட்சிப்பு (**1யோவா**. 1:7) கிடைத்தது; இதன் பொருள், இனி ஒரு பலி தேவையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* மனுஷனுக்கும் தேவனுக்குமிடையில் சமாதானம் செய்யப் பட்டது (**ரோம**. 5:1-11) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* தேவனுடைய பூரண நீதி ஏற்படுத்தப்பட்டது (**ரோம**. 3:21-26) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

* ஆவி ஆத்துமா மனதின் நோய்கள் குணமாக்கப்பட்டது (**யாத்**. 15:26; **ஏசா**. 53:4-5; **யாக்**. 5:14-16; **1பேது**. 2:24) என்று சொல் லப்பட்டிருக்கிறது;

• பாவியான மனுஷன் விசுவாசத்தின்மூலம் இரட்சிப்பைப் பெறமுடிந்தது (**யோவா**. 3:16) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

- விசுவாசி விசுவாசத்தின்மூலம் பரிசுத்தத்தைப் பெற முடிந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது (**எபி. 10:14**).
- விசுவாசி பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறமுடிந் தது (**அப். 2:4; லூக். 11:13**) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

* தேவ மனிதர்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியான வர் வாசஞ்செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்தது (**யோவா. 14:15-17; அப். 1:4-8, 2:33; Iகொரி. 3:16-17, 6:19**) என்று சொல்லப்பட்டி ருக்கிறது;

* நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோத மாகவும் இருந்த கையெழுத்துக் குலைக்கப்பட்டது (**கொலோ. 2:14**) என்று சொல்லப்பட்டிருக்கிறது;

"**இது முடிந்தது**" ஒருபொழுதும் இனிமேல் கிறிஸ்து வந்து கல்வாரி சிலுவையில் மரிக்கவேண்டிய அவசியமில்லை (**ரோம. 6:9**); கிறிஸ்துவின் தூதுப்பணியின் வேலை முடிந்தது என்பத னை "**இது முடிந்தது**" பிரகடனப்படுத்துகிறது.

24

***இ**யேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் (யோவா. 20:21-22);*

"பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்"

உயிர்தெழுதலின்பின் தன்னுடைய பிரசன்னத்தைக் கண்ட சீஷர்களுக்கெல்லாம் முதலாவதாக, **சமாதானம்** உண்டாவதாக என்று கிறிஸ்து வாழ்த்தினார். தானே அவர்கள் முன்பு அறிந்த இயேசு என்பதனை அவர்களுக்கு உணர்த்தி, தன்னுடைய மரணத்தின்மூலம் தான் மனுஷகுலத்திற்கு ஏற்படுத்தின சமாதானத்தின் அடையாளங்களாக தன்னுடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். இரண்டாவதாகத் தான் ஏற்படுத்தின அந்தச் சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதாயிருந்தால், அந்தச் சமாதானம் சுவிசேஷமாக உபதேசிக்கப்படப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இன்றியமையாதது.

சீஷர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் ஆவியினால் பிறந்திருந்தார்கள், ஆனால், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வில்லை. ஆவியினால் பிறப்பதும் (**யோவா.** 3:5; **Iகொரி.** 6:11) ஆவியினால் நிரப்பப்படுவதும் (**அப்.** 2:4) ஒன்றல்ல என்பதனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்; இந்த நிலைப்பாடு வேதவாக்கியத்துக்கு விரோதமான வன்முறை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருப்போமாக. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாமல் தேவனுடைய ஊழியத்திற்குரிய எதையும் நாம்

செய்யக்கூடாதெனக் கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது (**அப்.** 1:5).

அநேகர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதற்கு அடையாளமே (**அப்.** 2:4) இல்லாமல் ஊழியஞ்செய்கிறார்கள்; இவர்கள் மாம்சத்தினால் மாம்சத்துக்கு ஊழியஞ்செய்கிறார்களே தவிரத் தேவனுக்கு ஊழியஞ்செய்யவில்லை. இதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை ஏனெனில், அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமானோருக்கு ஒரேவேளையில் தரிசனமாகி (I**கொரி.** 15:6) பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள் (**அப்.** 1:5) என்று கட்டளையிட்டிருந்தும், நூற்றிருபதுபேர்மட்டுமே (**அப்.** 1:15) காத்திருந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (**அப்.** 2:4) என்பது தெளிவாகிறது.

இப்படியிருக்க, பிதா தன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பிரத்தியேகமான கட்டளையைக் கொடுத்துப் பூமிக்கு அனுப்பியிருந்தார். நியாயப்பிரமாணத்தின் ஒரு எழுத்தின் உறுப்புக்கூடத் தவறாமல் கிறிஸ்து சிலுவையில் எல்லாவற்றையும் நமக்காக நிறைவேற்றியிருந்தார் (**யோவா.** 19:30). இப்பொழுது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பிரத்தியேகமான கட்டளையைக் கொடுத்து, "..... **நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று சொல்லி சீஷர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்"** எனக் கூறியிருந்தார்; அதே கட்டளை விசுவாசிகளாகிய நமக்கும் சேர்த்தே கொடுக்கப்பட்டது என்பதனை நாம் தெளிவாக அறிந்து, அதனை நிறைவேற்றவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆதியில் மனுஷனை உருவாக்கும்பொழுதும் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமாவானான் (**ஆதி.** 2:7); ஆனால், இப்பொழுது தேவபலம் அற்றிருப்பவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுப்பதற்கு சீஷர்கள்மேல் கிறிஸ்து ஊதுகிறார். ஆதாமுக்கு ஜீவனைக் கொடுப்பதற்காக அவனுடைய நாசியில் ஊதினார்; ஆதாமுடைய

புத்திரர்களுக்குப் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கேது வாகச் சீஷர்கள்மேல் ஊதுகிறார். தாம் கட்டளையிட்டிருக்கும் ஊழியத்தைச் செய்யப்போகும் (**மாற்.** 16:15) தம்முடைய சீஷர் களுக்கு "**பெற்றுக்கொள்ளுங்கள்**" எனக் கூறியிருப்பது, அவர்கள் பெறப்போகும் பரிசுத்த ஆவி அவர்களுக்குத் தேற்றரவாளனாக வும் இருப்பார் என்பதனை (**யோவா.** 14:16) உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவும் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன் (**மத்.** 3:16) பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தனக்குப் பரிசுத்த ஆவியைத் தேவன் அளவில் லாமல் கொடுத்தார் என்பதனையும் (**யோவா.** 3:34), அதனைக் கொடுத்ததன் நோக்கத்தையும் உறுதிப்படுத்தியிருந்தார் (**லூக்.** 4:18-19).

உண்மையில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீஷர்கள்மேல் ஊதும்போது அவர்கள் பரிசுத்த ஆவியை நிரந்தரமாகப் பெற வில்லை; பெந்தெகொஸ்தே நாளின்போதே நிரந்தரமாகப் பெற்றுக்கொண்டார்கள். இந்தக் கிருபை, அவர் கல்வாரி சிலு வையில் பாவத்தை நிவிர்த்தி செய்ததன் மூலமே சாத்திய மானது என்பதனை அறிந்தே, "**பெற்றுக்கொள்ளுங்கள்**" எனக் கூறியிருந்தார் (**அப்.** 2:4); சீஷர்கள் கிறிஸ்துவையும் அவருடைய வேதவாக்கியங்களையும் விசுவாசித்து, அவருடைய கட்டளைக் குக் கீழ்ப்பட்டிருந்தார்கள்; அதனிமித்தம் அவர்கள் பரிசுத்த ஆவி யைப் பெற்றுக்கொண்டனர். அவர்களுடைய ஊழியத்தின் வெற் றிக்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் சான்றுபகர்கிறது.

செப்டம்பர்

25

***வ**ணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள் (அப். 7:51).*

"பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்பவர்கள் யார்?"

பல்வேறுவிதமான துர்க்குணங்களில் அல்லது கெட்ட நடத்தைகளில் கிறிஸ்தவர்கள் ஈடுபடுவதை மிகப்பெரிய பாவங்களாக நாம் கருதுவதுண்டு. அவைகள் மோசமான பாவச்செயல்களாக இருப்பினும் அவற்றை மிகப்பெரிய பாவமாகக் கருதமுடியாது. **அப்போஸ்தலர்** 7:51ல் சொல்லப்பட்டிருக்கும் வேதவாக்கியத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது, பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்பதே மிகப்பெரிய பாவமென அறியக்கூடியதாயிருக்கிறது; ஏனெனில், ஒருவன் பரிசுத்த ஆவிக்கு எதிராகத் தூஷணஞ் சொல்வானாகில் அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பானென நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உறுதிப்படுத்தியிருக்கிறார் **(மாற்.** 3:29).

விசுவாசத்தில் பின்வாங்கிப்போன அல்லது மதத்தைத் தழுவின வேதபாரகர்கள், பரிசேயர்கள்போன்ற கிறிஸ்தவத் தலைவர்களே பரிசுத்த ஆவிக்கு எதிராகத் தூஷணஞ் சொல்லுவார்கள். இவர்கள் ஒருமுறை கிறிஸ்துவை அறிந்து அல்லது கிறிஸ்துவினால் அறியப்பட்டு, அதன்பின் அவரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள். இவர்கள் உறவை மதமாக்கித் தாம் ஏற்படுத்தின வழியைப் பின்தொடர்வதனால், பரிசுத்த ஆவிக்கு எதிராகத்

தூஷணஞ் சொல்லுகிறார்கள்; ஆனால், அவர்கள் எப்படித் தூஷணஞ் சொல்லுகிறார்கள் என்பதனைக் கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் கிறிஸ்துவிடமும், குறிப்பாகக் கிறிஸ்துவின் சிலுவைக்கும் வழி நடத்திக் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவார் என்று சொல்லப் பட்டிருக்கிறது (**யோவா.** 16:13-14). **உலகம் கிறிஸ்துவை மூர்க்கமாக எதிர்க்கிறது; ஏனெனில். அவர்கள் சாத்தானால் வழிநடத்தப்படுகிறார்கள்; பாவசுபாவம் அவர்களை நிர்மூலமாக்குகிறது; சுயநீதி அவர்களை ருசிபார்க்கிறது; பிரமாணங்கள் அவர்களுடைய பக்கபலமாயிருக்கிறது; ஐம்புலன்கள் அவர்களை அரசாளுகிறது; அவர்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவுக்கு எதிரான பகை முன்கூட்டியே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது** (**ஆதி.** 3:15).

ஆகவே கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவினுடைய சிலுவைக்கும் எதிரான உலகத்தின் போக்கை இலகுவாக நாம் புரிந்துகொள்ள முடியும்; ஆனால், புரிந்துகொள்ளமுடியாத புதிர் என்னவெனில், கிறிஸ்தவர்களெனச் சொல்லப்படுபவர்கள் கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் சிலுவையையும் நிராகரித்து, மனுஷருடைய வழிகளைப் பின்தொடர்வதன்மூலம் இவர்கள் மிகப்பெரிய பாவத்தைச் செய்கிறார்கள்; இவர்கள் பரிசுத்த ஆவிக்கு எதிராகச் செயற்படுகிறார்கள். கிறிஸ்தவ சபைகளிலேயே சாத்தான் தன்னுடைய மிகப்பெரிய வஞ்சக யுக்தியைப் பிரயோகிக்கிறான். இதற்குச் செவிகொடுத்து, தேவனுடைய வழியைவிட்டு, விலகினோர் எண்ணிலடங்காதவர்களாக இருக்கிறார்கள். எவன் சிலுவையைச் சுமந்துகொண்டு கிறிஸ்துவைப் பின்தொடருகிறானோ அவன் துன்புறுத்தப்படுகிறான் (**கலா.** 5:11); அன்றும் அப்படியே, இன்றும் அப்படியே!

செப்டம்பர்

26

***வா**னம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு விதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டி ருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகல விதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிற தாகவும், கண்டான். அல்லாமலும் பேதுருவே, எழுந் திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று (அப். 10:11-13).*

"பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி"

மனுஷ வரலாற்றில் சீமோன் பேதுருவுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய தரிசனம் இதுவாகும். இந்தத் தரிசனத்தில் காட்டப்பட்ட வெவ்வேறுவிதமான மிருகங்கள் ஏறக்குறைய சக லதும் தீட்டான மிருகங்களாகும். சிலுவை மூலமாகக் கொடுக் கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் உலகத்திலுள்ள சகல தேசத்திற்கும் சகல ஜனங்களுக்கும் உரியது என்ற உண்மை இதன்மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அதென்னவென்றால், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபொழுது அவர் யூதர் களுக்கு மட்டுமல்ல, முழுமனுஷகுலத்திற்காகவுமே மரித்தார் (**யோவா.** 3:16) என்பது தெளிவாகிறது.

ஒரு மந்தையே இருக்கவேண்டும் என்பதுபற்றி ஆண்டவரா கிய இயேசுகிறிஸ்து "**இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லா மல்** (புறஜாதிகளைப்பற்றிச் சொல்லப்படுகிறது) **வேறே ஆடு**

களும் (உலகத்திலுள்ள வேறே தேசத்தாராகிய புறஜாதிகளும்) **எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்** (சபை). **அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா. 10:16)** எனச் சொல்லியிருக்கிறார்; இந்தப் பெரும் படிப்பினை பேதுருவுக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும் கடுமையானதாயிருந்தது; ஆனால், கிறிஸ்து **"எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிறார்"**; சுவிசேஷம் **"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ" (அப். 10:43)** அவனுக்கு உரியது.

இப்படியிருக்க, இரட்சிப்புக்குப் புறஜாதிகளும்கூட தெரிவு செய்யப்பட்டதைப் பேதுரு பிரகடனப்படுத்தினான் **(அப். 2:21, 39)**. இந்த உண்மையைப் புரிந்துகொள்ளமுடியாதபடி தப்பான அபிப்பிராயங்களை உடையவனாகவும், மந்தமான இருதயத்தை உடையவனாகவும் பேதுரு இருந்தபடியினால், மூன்றுதரம் இந்தத் தரிசனம் கொடுபடவேண்டியதாயிருந்தது **(அப். 10:16)**. இந்தத் தரிசனம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததும், புரிந்துணர்வுக்கு அப்பாற்பட்டதுமாயிருந்ததற்குங் காரணம், முழுமனுஷகுலத்தின் இரட்சிப்பும் இதற்குள் அடங்கியிருந்தது. கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசிப்பவன் ஒவ்வொருவனுக்கும் இந்தப் பாக்கியம் உண்டு; தேவனுடைய மிகப்பெரும் கொள்கை **"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்" (யோவா. 7:37; வெளி. 22:17)** என்பதேயாகும். இந்தப் புது ஒழுங்குமுறைக்குள் முதலாவதாக வந்தவர்கள் கொர்நேலியுவும் அவன் வீட்டாருமேயாகும். இந்தத் தரிசனத்தில் நானும் வாசகரும் அடங்கியிருக்கிறோமே. தேவனுக்கு ஸ்தோத்திரம்! இந்தத் தரிசனத்திற்குள் நாங்கள் இருக்கிறோம் என்பதனை நினைக்கும்பொழுது நாம் தாழ்மையடைகிறோம்; ஆம், நாம் தாழ்மையடைந்தேயாகவேண்டும்.

செப்டம்பர்

27

***நீ**யும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற் கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லு வான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான் (அப். 11:14).*

"இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகள்"

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (**அப்.** 16:31) என்று அப் போஸ்தலர் பவுலினாலும், சீலாவினாலும் பிலிப்பிய சிறைச் சாலைக்காரனுக்குச் சொல்லப்பட்ட அதே வார்த்தை, தேவதூத னால் கொர்நேலியுவுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. புறஜாதியா கிய கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் ஏற்பட்ட மனமாற்றத்தின் மூலமாகப் புறஜாதிகளின் உலகத்திற்குச் சுவி சேஷம் திறக்கப்பட்டது; சிலுவையின் மூலமாகவே இந்தக் கிருபை சாத்தியமானது. தனிப்பட்ட முறையில் நாம் ஒவ் வொருவரும் சுவிசேஷம் எப்படி நமக்குத் தரப்பட்டது என்ப தனை அடிக்கடி நினைவுகூருவது பொருத்தமானதே. கொர் நேலியு பெரும் ஆச்சரியப்படத்தக்க கிறிஸ்தவ ஒழுக்க முறை களைப் (Christian deciplines) பின்பற்றியிருந்தாலும், அவன் இன் னும் இரட்சிக்கப்படவில்லை என்று வேதவாக்கியம் உறுதிப் படுத்தியிருக்கிறது; இதுபற்றிய வேதவாக்கியங்களைச் சற்று விபரமாகப் பரிசீலனை செய்வோம்.

- **அவன் தேவபக்தியுள்ள மனுஷன்**
- **அவன் தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான்**

- **அவன் ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களைச் செய்தான்**
- **எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்**
- **அவன் தரிசனத்தில் ஒரு தேவதூதனைக் கண்டான்;**

அந்தத் தேவதூதன் கொர்நேலியுவை நோக்கி: **உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டு தலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது (அப். 10:4)** என்றான்.

இவ்வளவு நற்சாட்சிகள் இருந்தும் அவன் இன்னும் இரட்சிக்கப்படவில்லை.

முழுஉலகமும், அநேகமான கிறிஸ்தவர்களும் இயற்கையாகவே கொர்நேலியு இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்ற முடிவுக்கே வருவார்கள்; இந்த ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் நடைபெற்றிருந்தும், அவன் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஏன் அவைகள் அவனை இரட்சிக்கவில்லை? இரட்சிப்பு ஒரே ஒரு வழியாகவே வரமுடியும். ஒருவன் தான் காணாமற்போன நிலைமையை உணர்ந்து, தன்னால் தன்னை இரட்சிக்கமுடியாது என்பதனை அறிந்து, இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவையும் அவர் அவனுக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசிப்பதன்மூலமே இரட்சிப்பு சாத்தியமாகும்.

பேதுரு இதுபற்றி **அப்போஸ்தலர் 4:12ல் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"** எனச் சொல்லியிருக்கிறார். பேதுருவும் அவனோடுகூட இருந்தவர்களும், கொர்நேலியு வீட்டில் கூடியிருந்தவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். **"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்**

லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்" (அப். 10:43) என்ற வார்த்தையைப் பேதுரு சொன்னபொழுது கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் அதனை விசுவாசித்தார்கள்; அவர்கள் இரட்சிப்பைப் பெற்றபடியினால் உடனடியாகவே **".....வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்" (அப். 10:43-44)** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைக் கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளாமல் வேறு எந்த வழியினாலும் இரட்சிக்கப்படமுடியாது என்பது **யோவான் 3:16**லும்; **மாற்கு 16:16**லும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. முதலாவதாக இரட்சிப்பும், அதன்பின்பு பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானமும் கிடைத்திருக்கிறது; எந்தக் காலத்திலும் இயேசுகிறிஸ்துவே நமக்காகச் சிலுவையில் மரித்தார் என்பதனையும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தின்மூலமே நம் முடைய பாவத்தின் கடன்கள் செலுத்தப்பட்டது என்பதனையும், அதன் மூலமே திருத்துவ தேவனின் கோரிக்கையைக் கிறிஸ்து திருப்தி செய்தார் என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும்; ஆனபடியினால், அவரையே விசுவாசிக்கவேண்டும்; வேறெந்த வழியினாலும் ஒருவனும் இரட்சிக்கப்படமுடியாது. நாம் சொல்வதை உலகம் நம்பாது; அதனை கேட்கவும் விரும்பாது; அவர்கள் காயீனைப்போலத் தங்களுடைய சொந்த இரட்சிப்பைத் தாங்களே நிறைவேற்ற விரும்புகின்றனர்; தேவன் தங்களுடைய வழிகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்; தேவன் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார். இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு (இரட்சிப்பு) இல்லை **(எபி. 9:22)**; கிறிஸ்துவே இரட்சிப்பு; அவர் மூலமாகவே இரட்சிப்பு **(அப் 4:12)**; அவரே **"வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்" (யோவா. 14:6)**.

28

***ஏ**ரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு. இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டி ருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச் சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள் (அப். 12:6).*

"பேதுருவின் அமைதியான நித்திரை"

யோவானின் சகோதரனாகிய யாக்கோபு ஏரோதின் பட்டயத் தினால் கொலை செய்யப்பட்டான். ஏரோது பேதுருவுக்கும் அப் படிச் செய்வதற்கு விருப்பங்கொண்டு (**அப். 12:3**), அவனையும் சிறைப்பிடித்து "**.....அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்" (அப். 12:4)**.

ரோமர்கள் ஒரு இரவை நான்கு வகுப்பாக்கி, ஒவ்வொரு வகுப்புக்கும் நான்கு போர்ச்சேவகர்களை ஏற்படுத்தி, நான்கு வகுப்புகளின் வசமாக 16 போர்ச்சேவகரிடம் பேதுரு ஒப்படைக் கப்பட்டான். இரண்டு பேர் ஒவ்வொரு கதவிலும், இரண்டு பேர் கைதியோடு இருபக்கங்களிலும் சங்கிலியினால் பிணைக்கப்பட் டிருந்தனர்; ஒவ்வொரு வகுப்பு முடியும்போது நான்கு போர்ச் சேவகர்களுடைய கண்காணிப்பு முடிந்து, அடுத்த வகுப்பிடம் ஒப்படைக்கப்படும்; கடைசி வகுப்பின்போதே பேதுரு விடுவிக்கப் பட்டிருக்கவேண்டும். 3 மணிக்கும் 6 மணிக்கும் **(அப். 12:18)** (விடியற்காலை) உட்பட்ட வகுப்பின்போதே (Watch) இந்தச் சம்ப வம் நடைபெற்றிருக்கவேண்டும். யாக்கோபைப் பட்டயத்தினால்

வெட்டிக்கொன்றதுபோலவே ஏரோது பேதுருவையும் கடைசி இரவு முடிந்தவுடன் காலையில் கொலைசெய்யத் திட்டமிட்டிருந் தான் (**அப்.** 12:6).

வேதவாக்கியத்தின்படி **"பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாராவது காலைப்பொழுதில் தான் கொல்லப்படுவேன் என்பதனை அறிந்தி ருந்தால், நித்திரைபண்ணமுடியுமோ? ஆனால், பேதுரு நித்திரை பண்ணினான்; பேதுருவும் நம்மைபோல ஒரு மனிதன்தான்; அப்படியிருக்க, இந்தச் சூழ்நிலையில் எப்படி அவன் ஆழ்ந்த நித்திரைகொண்டான்? ஆம், ஆண்டவராகிய இயேசு உன்னதத் திற்கு ஏறுவதற்கு முன்பு பேதுரு முதிர்வயதுள்ளவனாவான் எனச் சொல்லியிருந்தார் (**யோவா.** 21:18); அவன் அந்த வார்த் தையை நம்பி, அதனை விசுவாசித்தான். ஏரோது சிறைப்பிடிக் கும்பொழுது பேதுரு 25 அல்லது 30 வயதாக இருந்திருக்கலாம்; அவன் அப்பொழுது முதிர்வயதை அடையவில்லை. ஆண்டவர் தான் முதிர்வயதை அடைவேன் எனக் கூறியிருந்ததை பேதுரு அறிவான்; முதிர்வயது இன்னும் தனக்கு நிறைவேறாதபடி யினால், எப்படியும் கர்த்தர் தன்னை விடுதலைசெய்வார் என்ப தனை அவன் அறிந்திருந்தபடியினால், ஆழ்ந்த நித்திரைபண்ணி னான்.

இப்படியிருக்க, பேதுரு இந்த மாதிரி தான் விடுதலை செய் யப்படுவேன் என்று ஒருபொழுதும் நினைத்திரான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சிலவேளைகளில் அந்த இரவு பகல் நேரத்தைவிட அதிகமாயிருந்திருக்கலாம்; இதனிமித்தமே அந்தத் தேவதூதன் அங்கே வந்ததும். **"....அறையிலே வெளிச்சம் பிரகா சித்தது" (அப்.** 12:7) என அறியக்கூடியதாயிருக்கிறது; காவல்காரர் களும் நித்திரையில் இருந்திருக்கவேண்டும்; ஆனபடியினால்த் தான், சங்கிலி விழுந்ததை அவர்கள் உணரவில்லை. தேவ தூதன் பேதுருவை வெளியே அழைத்துச்சென்றான்; வெளிக்கதவு

திறந்தது; காவற்காரன் நின்றுகொண்டிருந்தான் ஆனால், அவன் ஒன்றையும் அறியவில்லை; சிறைச்சாலையின் இரும்புக் கத வுக்கு வந்தவுடன் கதவுதிறந்தது; அங்கும் காவற்காரன் நின்று கொண்டிருந்தான், ஆனால், அவனும் ஒன்றையும் காணவில்லை.

காலைப்பொழுது வந்தபோது பேதுரு வெளியேறிவிட்டான்; போர்வீரர்கள் எதனையும் அறியாதிருந்தார்கள். போர்வீரர்களு டன் சங்கிலியினால் இணைக்கப்பட்ட இந்த மனுஷன் எப்படித் தப்பிக்கமுடியும்? என்று சந்தேகப்பட்டு, கொலைகாரனாகிய ஏரோது போர் வீரர்களை ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுத்தினான். அவர்களோ இந்த நிலைமைக்கு எந்த விளக்கத்தையும் கொடுக்க முடியாதிருந்தார்கள்.

கர்த்தர் தன்னுடைய வார்த்தைக்கு எவ்வளவு உண்மையுள்ள வராக இருக்கிறார் என்பதனை இதிலிருந்து அறியக்கூடியதா யிருக்கிறது. அடுத்த கேள்வி என்னவென்றால், ஏன் யாக் கோபை அவர் விடுதலை செய்யவில்லை? இந்தக் கேள்விக்குப் பரிசுத்த ஆவியானவர் பதில் கொடுக்கவில்லை; தற்கொலை செய்த யூதாசைத் தவிர்த்தால், யாக்கோபு 12 அப்போஸ்தலர் களிலும் முதலாவதாக இறந்தான்; ஆம், ஆண்டவர் யாக்கோபை இலகுவாக விடுதலை செய்திருக்கலாம், ஒரு காரணத்திற்காக அவர் அப்படிச் செய்யவில்லை; அவர் செய்வது எப்பொழுதும் சரி என்று விசுவாசிப்போமாக **(ஏசா. 57:1)**.

செப்டம்பர்

29

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (ரோம. 1:18).

"தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது"

பாவத்துக்கு எதிராக வெளிப்படும் தேவனுடைய சொந்தத் தீவிர உணர்வே தேவகோபம் எனப்படும். தேவகோபத்தைப் பற்றிக் கிறிஸ்தவ சபைகளில் தற்பொழுது அதிகமாகப் பிரசங்கிக்கப்படுவதில்லை. அதிகமான சபைகளில் தேவன் அன்பு நிறைந்தவர்; அவர் நல்லவர்; மனுஷருடைய பாவச்செயல்களை அவர் கண்டுகொள்வதில்லை; ஒருவரையும் அவர் சிட்சிப்பதில்லை; பாவத்தை வேறுவிதமாக அழைப்போமானால் பாவம் நமக்கு ஒரு இடறலாக இருக்காதென உபதேசிக்கப்படுகிறது. உதாரணமாக, வேசித்தனம் என்பதற்குப் பதிலாக மாம்ச வியாபாரம் எனப் பெயர்சூட்டி அழைக்கப்படுகிறது; இப்படியாக மனுஷன் தன்னைத் தானே வஞ்சிக்கிறது மட்டுமல்ல, மற்றவர்களையும் சேர்த்து வஞ்சிக்கிறான் (**IIதீமோ. 3:13**); ஆனால், தேவன் மாறுவதில்லை (**மல்கி. 3:6**) என்பதனையும், அவர் அன்றும் இன்றும் என்றும் மாறாதவர் (**எபி. 13:8**) என்பதனையும் மனுஷன் அறிந்திருக்க வேண்டும்.

மனுஷனுக்குப் பொய் தற்செயலாக ஏற்பட்டதில்லை; மனுஷன் பிறக்கும்போதே அந்தப் பாவத்தினிமித்தம் (ஜென்ம சுபாவத்தினிமித்தம்) பொய்யனாகவும் திருடனாகவும் பிறக்கி

றான். அவனுடைய தகப்பனாகிய சாத்தான் பொய்யனும், திருட னும் கொலைகாரனுமாயிருக்கிறான் (**யோவா. 8:44, 10:10**). மீட் கப்படாத சகல மனுஷரும், தேவனுடைய வழியைத் தவறவிட்ட கிறிஸ்தவர்களும் அப்படியே இருக்கிறார்கள்; ஏதேன் தோட்டத் தில் ஏற்பட்ட மனுஷவீழ்ச்சியின் பிரதிபலன் இதுவாகும்.

அநேகமான கிறிஸ்தவ சபைகள் தேவனுடைய அன்பைப் பற்றிப் (அதனையும் முற்றிலும் தவறாக) போதிக்கிறார்களேதவிர தேவகோபத்தைப்பற்றியும் அவர் பாவத்திற்கு எதிராக எடுத்த தீவிர நடவடிக்கைகள்பற்றியும் தாராளமாக வேதாகமத்தில் கூறப்பட்டிருந்தும் அதுபற்றிப் போதகர்கள் உபதேசிக்க விரும் பாதது ஏன்? இது வஞ்சனையின் செயலேயன்றி வேறொன்று மில்லை.

வீழ்ந்துபோன மனுஷகுலத்தைக் காப்பாற்றுவதற்குத் தேவன் நம்முடைய கற்பனைக்கெட்டாத மாபெரும் விடுதலையை அழி வுள்ள வஸ்துக்களாகிய பொன்னினாலும் வெள்ளியினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் (**1பேது. 1:18-20**) மனுஷகுலம் மீட்கப்பட்டிருக்க, அவர் கொடுத்த அந்தப் பாரிய விலையை உதாசீனஞ்செய்பவன் தேவகோபத்திற்கு எப்படித் தப் பித்துக்கொள்ளுவான்? சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத் துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (**ரோம. 1:18**).

கிறிஸ்துவின் சிலுவை பரிசுத்த ஆவியானவருக்குச் சகல வழிகளையும் திறந்து வைத்திருக்கிறது. உலகம் விசுவாசியாத படியினாலே பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் நீதியைக் குறித்தும், உலகத்தின் அதிபதியாகிய சாத்தான் நியாயந்தீர்க்கப் பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தை அவர் கண் டித்து உணர்த்துகிறார் (**யோவா. 16:8-11**). எந்த மனுஷனாகுதல் சாத்தானைப் பின்பற்றிச் சத்தியத்தை உதாசீனஞ் செய்வானாகில்

சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்புக்குள் (அக்கினிக் கடலுக்குள்) அவனும் இறுதியில் தள்ளப்படுவான் (**வெளி.** 20:11-15). கிறிஸ்து யார் என்பதை அறிந்து, அவர் நமக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதை விசுவாசிக்க மறுப்பவன் ஏற்கனவே நியாயத்தீர்ப்புக்குள் தன்னை உட்படுத்தியிருக்கிறான் (**யோவா.** 3:18). சுருக்கமாகக் கூறுவதாயின் கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிப்பவனுக்கு நியாயத்தீர்ப்பு ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது;

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணதவர்போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (**அப்.** 17:30). கிறிஸ்து சிலுவைக்குச் சென்று மனிதகுலத்தின் வீழ்ச்சியிலிருந்து விடுதலைபெறத் தேவையான யாவற்றையும் செய்து முடித்திருக்கிறபடியினால் இனிமேலும் மனுஷன் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை; ஆகையால், சொற்ப வெளிச்சத்தைப் பெற்ற உலகத்திற்குப் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பைவிட (சோதோம் கொமரா அழிவு, நினிவே அழிவு) மிகவும் கடுமையான தீர்ப்பையே தேவன் சத்தியத்தை உதாசீனஞ்செய்பவனுக்குத் தற்பொழுது வைத்திருக்கிறார்; ஏனெனில் தற்பொழுது போதிய வெளிச்சம் கொடுக்கப்படுகிறது (**அப்.** 17:31). அப்படியாயின் மோசமான காலநிலைகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், யுத்த அழிவுகளும், எயிட்ஸ் வியாதியுங்கூட மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமான தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று சொன்னால் மிகையாகாது.

செப்டம்பர்

30

***இ**வ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோம. 5:1).*

"விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்"

"நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறோம்" எனப் பவுல் அப்போஸ்தலர் கூறுவதன் பொருள் என்ன? முதலாவதாக, நாம் **"விசுவாசம்"** என்ற சொல்லைப் பரிசீலனை செய்வோம். விசுவாசம் என்பது, பொதுவாக ஏதா வது நமக்குப் பிடித்ததை நம்புவதாகும்; ஆனால், இங்கு கூறப் பட்டிருக்கும் விசுவாசம் கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் நம்புவதாகும். பவுல் அப்போஸ்தலர் விசுவாசம் எனக் குறிப்பிடும்பொழுது இதனையே குறிப்பிடு கிறார். **கிறிஸ்துவே ஆதாரம்; சிலுவையே வழி** என்பதனை நாம் எப்பொழுதும் அறிந்திருக்கவேண்டும். ஆனபடியினால், விசுவாசத்தின் முக்கிய அம்சமான கிறிஸ்துவையும், சிலுவை யையும் எந்தக்காலத்திலும் பிரிக்கக்கூடாது; அதேபோலச் சிலு வையையும், கிறிஸ்துவையும் ஒருபொழுதும் பிரிக்கக்கூடாது.

இதனிமித்தமே பவுல் அப்போஸ்தலர் **"நாங்களோ சிலுவை யில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்....."** என **1கொரிந்தியர்** 1:23ல் கூறியிருக்கிறார். கிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார் என்று சொல்லவில்லை; மீட்பின் திட்டம் அவரால் சிலுவையில் நிறைவேற்றப்பட்டபடியினால்,

அவர் இப்பொழுது பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந் திருக்கிறார். அப்படியாயின், அவர் **Iகொரிந்தியர்** 1:23ல் சொல் வது என்ன? அவர் சொல்வது என்னவென்றால், சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தினால் நிறைவேற்றப்பட்ட நன்மைகளைப் பற்றியே சொல்கிறார்; அந்த நன்மைகள் ஒருபொழுதும் குறை யப்போவதில்லை; அதற்கு முடிவுமில்லை; இதனிமித்தமே பரி சுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சிலுவையை நித்திய உடன் படிக்கை என்று **எபிரெயர்** 13:20ல் சொல்லியிருக்கிறார்.

விசுவாசி அறிந்திருக்கவேண்டிய உண்மை என்னவென்றால், நாம் கர்த்தரிடத்திலிருந்து பெறும் சகலதும் சிலுவைமூலமாகவே சாத்தியமானது என்பதனை ஒருபொழுதும் மறக்கக்கூடாது. அதுவே சுவிசேஷம்; வேதாகமத்தின் கதை இயேசுகிறிஸ்துவும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதைப்பற்றியதுமேயாகும்; விசு வாசம் என்றால் என்ன என்பதனைப் பொருத்தமாக விளங்கின பின் நாம் நீதிமான்களாக்கப்படுவதைப்பற்றிப் பரிசீலனை செய் வோம். இதன் பொருள், **முதலாவதாக**: ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்பட்டுவிட்டது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். சுருக்கமாக, நாம் விசுவாசத்தின்மூலம் நீதிமான்களாக்கப்பட்டால், கடந்தகால, நிகழ்கால, வருங்காலத்துப் பாவங்கள் யாவும் மன் னிக்கப்பட்டுவிட்டது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். **இரண்டாவதாக**: இரட்சிக்கப்பட்ட மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகவே தேவன் அவனைப் பார்க்கிறார்; அது மட்டுமல்ல, ஒருபொழுதும் அவன் பாவஞ்செய்யாதவனாகவே பார்க்கிறார். **மூன்றாவதாக**: அந்த மனுஷன் அப்பாவியாகப் பிர கடனப்படுத்தப்பட்டு, சகல குற்றச் சாட்டுக்களிலிருந்தும் விடு தலையாக்கப்பட்டிருக்கிறான் என்றே தேவன் பார்க்கிறார். நம்மு டைய விசுவாசத்தைக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தினபொழுதே இவை யாவும் சாத்தியமானது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

நீதிமானாக்கப்படுவதை ஒருவன் தன் உழைப்பினாலேயோ அல்லது விலைகொடுத்தோ வாங்கமுடியாது; கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசித்தபடியினால், நீதிமான் என்ற நிலைப்பாடு (Position) இலவசமாகத் தேவனிடத்திலிருந்து கிருபையாகத் தரப்பட்டது.

அக்டோபர்

641

1

***ஆ**கையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோம. 6:1-2).*

"அந்தப் பாவம்"

பாவம் என்ற சொல் **ரோமர்** 6ம் அதிகாரத்தில் 17 தரம் சொல்லப்பட்டிருக்கிறது; இதில் 15 தரம் **அந்தப் பாவத்தைப்பற்றியே** பவுல் அப்போஸ்தலர் குறிப்பிட்டிருக்கிறாரேதவிர பாவச்செயல்களை அல்ல என்பதனை நாம் முதற்கண் அறிந்திருக்கவேண்டும். இங்கு பாவசுபாவத்தைப்பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கிறது; இரட்சிக்கப்பட்டபடியினால் பாவசுபாவம் இனிமேலும் நமக்கில்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பது புரியாத புதிராயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலரை ஏவி, **ரோமர்** 6ம் அதிகாரத்திலேயே 15 தரம் பாவசுபாவத்தைப்பற்றிக் குறிப்பிடுவதாயிருந்தால், இல்லாத ஒன்றைப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுகிறாரோ? என்பதனை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். அப்படியல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் பாவசுபாவத்தையுடையவனாகவே இருக்கிறான் (**1யோவா. 1:8**); அப்படியில்லாதிருந்தால், அவன் பரலோகத்திற்குப் போயிருக்கவேண்டும்; ஆனால், நாம் எல்லாரும் பாவசுபாவத்துக்கு மரித்திருக்கவேண்டும் என்பதே தேவனுடைய ஏற்பாடாகும் (**ரோம. 6:11**). அதேநேரம், விசுவாசிகளாகிய நாம் பாவசுபாவத்துக்கு மரித்திருக்கிறோமே தவிர, பாவசுபாவம்

மரிக்கவில்லை என்ற உண்மையை நாம் அறிந்திருக்கவேண்டும் (**ரோம.** 6:2).

ஆனால், பாவசுபாவம் விசுவாசியில் செயலற்று, உறங்கிய நிலைமையிலேயே இருக்கவேண்டும். இரட்சிப்பின்போது பாவ சுபாவம் செயலற்றுப்போகிறது (**ரோம.** 6:6); ஆனால், விசுவாசி, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதற்குப் பாவ சுபாவத்தைச் (அந்தப் பாவத்தை) செயற்படவிடாமல் கட்டுப் படுத்தும் முறையை அறியாவிட்டால், அவன் பாவச்செயல்களில் தவிர்க்கமுடியாமல் ஈடுபடவேண்டிவரும்; அதேநேரம் வேறொரு விசுவாசத்திற்கும் திரும்பவேண்டிவரும்; அப்பொழுது செயற்படா மல், நம்மில் உறங்கியிருந்த பாவசுபாவம் மறுபடியும் உயிர்பெற் றெழுந்து வல்லமையாகச் செயற்படத்தொடங்கும்.

இதனிமித்தமே பவுல் அப்போஸ்தலர் "..... **சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக**" (**ரோம.** 6:12) எனச் சொல்லியிருக்கிறார். பாவசுபாவம் உயிர்த்தெழுதல்வரைக்கும் நம்மில் வாசமாயிருக்கும் (**Iகொரி.** 15:53-54); ஆனால், பாவ சுபாவம் நம்மை ஆளுவதற்கு அனுமதிக்கக்கூடாது. பாவ சுபாவம் விசுவாசியை மேற்கொள்ளாமல், பாவசுபாவத்தை விசுவாசி தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு, கிறிஸ்துவின் சிலுவை எப்பொழுதும் நமது விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அப்படியாக விசுவாசத்தில் நிலைத்திருக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நாம் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியாக நம்மை மாற்றுவார்; அதுமட்டுமல்ல, ஆவியின் கனியை (**கலா.** 5:22-23) விருத்திசெய்வது மட்டுமல்ல, கிறிஸ்து வின் சாயலையும் நம்மில் உருவாக்குவார் (**IIகொரி.** 3:18); இந்த விதமாகவே விசுவாசி பாவசுபாவத்தைக் கீழ்ப்படுத்தி, அதனைத் தொடர்ச்சியாக ஆட்சிசெய்யமுடியும் என்பதனைக் கிறிஸ்தவர் கள் அறிந்திருக்கவேண்டும்.

அந்தப் பாவமே மனுஷகுலத்தின் பிரச்னை என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது; பலர் அப்படியில்லை என்று பல்வேறு

விதமாக உரிமை கோரலாம்; ஆயினும், அதுவே நம்முடைய பிரச்னை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். ஒரே ஒரு வழிமூலமே அதனை வெற்றிகொள்ளமுடியும். நம்முடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுதே வெற்றி சாத்தியமாகும். அநேகர் பல் வேறு வழிகளை உருவாக்கி, அதன்மூலம் வெற்றிபெறமுடியும் என்கிறார்கள்; ஆனால், தேவன் ஒரே ஒரு வழியையே வைத்திருக்கிறார். அந்த ஒரே வழி சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவாகும் (I**கொரி.** 2:2). **ரோமர்** 5:20ல் கிறிஸ்தவர்கள் பவுல் அப்போஸ்தலர் சொன்னதைப் புரிந்துகொள்ளாமற்போன படியால் **ரோமர்** 6:1-2ஐப் பவுல் அப்போஸ்தலர் திரும்பவும் சொல்லவேண்டியதாயிருந்தது. கிருபை பாவத்தைவிடப் பெரிதாயிருந்தாலும், பாவச்செயல்களைச் செய்வதற்கு அதனை அனுமதிப்பத்திரமாகப் பாவிக்கமுடியாது. கிறிஸ்துவுடனே விசுவாசத்தின் மூலம் பாவசுபாவத்துக்கு மரித்து, இப்பொழுது கிறிஸ்துவிலிருக்கும்பொழுது, அதெப்படி மறுபடியும் பாவச்செயல்களில் ஈடுபடமுடியும் என்று தாறுமாறான சிந்தனையையுடையவர்களைப் பவுல் அப்போஸ்தலர் கேட்கிறார்; அந்த விதமான சிந்தனை நமக்கு இருக்கக்கூடாது என்றே பவுல் அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார்.

அக்டோபர்

2

***ஆ**தலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோம. 6:5).*

"அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டால், அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்"

இந்த வேதவாக்கியத்தில் வரப்போகிற உயிர்த்தெழுதலைப் பற்றிப் (Rapture) பேசப்படவில்லை; கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றியே இங்கு பேசப்படுகிறது; அவருடைய உயிர்த்தெழுதலில் இணைந்து, மறுபிறப்பைப்பெற்றுப் புதிதான ஜீவனைப் பெற்றுக்கொள்ளுதலைப்பற்றியே இங்கு சொல்லப்படுகிறது; கிறிஸ்துவை விசுவாசிப்பதென்பது அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் நெருங்கிய பிணைப்பு ஏற்படுவதைக் குறிப்பிடுகிறது. ஏறத்தாழ சகல கிறிஸ்தவர்களும் உயிர்த்தெழுந்த வாழ்க்கையைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்; அதனைச் சிலர் அனுபவித்தும் இருக்கிறார்கள்; அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக்கொண்டபடியினால், தொடர்ச்சியான ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையே உயிர்த்தெழுந்த வாழ்க்கை எனக் குறிப்பிடுகிறது என்பதனை அறியாமலிருக்கிறார்கள். நம்மில் சிலர் உயிர்த்தெழுந்த வாழ்க்கை என்ற சொற்றொடரை உபயோகிக்கிறோம்; ஆனால், அந்த உயிர்த்தெழுந்த வாழ்க்கை, **அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டால்மட்டுமே** சாத்தியமாகும் என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்.

உயிர்த்தெழுந்த வாழ்க்கை கிறிஸ்துவின் சிலுவையிலேயே தங்கியிருக்கிறது; கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதிலும் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி, அதனில் நிலைத்திருப்பதே உயிர்த்தெழுந்த வாழ்க்கையைப் பெறுவதற்குத் தேவனால் நியமிக்கப்பட்ட வழியாகும். நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் எப்பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையில் இருக்கவேண்டும்; ஆனால், அநேகமான கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தின் குறிக்கோள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இருக்கிறது; அதனைத் தேவன் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்;

கிறிஸ்துவின் சிலுவை நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கும்பொழுது, உயிர்த்தெழுந்த வாழ்க்கை நிறைவுள்ளதாக இருக்கிறது; வேதவார்த்தையில் தங்கியிருந்தால், அதன் பலாபலன்களைப் பெறமுடியும். அநேகர் தவறாக உபதேசிக்கப்படுகிறார்கள்; அநேக நன்மைகளை அவர்கள் உரிமை கோரினாலும், அவர்கள் அனுபவிப்பது சொற்பமே; இதற்குக் காரணம் தவறான விசுவாசத்தின் குறிக்கோளாகும். தேவன் நம்மிடத்தில் அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்கவில்லை; ஆனால், நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் எப்பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையிலேயே இருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறார்; ஏனென்றால், அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் செயற்படுகிறார்; அதுவே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணமாகும்;

இதுபற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 7:37-39ல் **"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படா**

திருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்பட வில்லை" எனச் சொல்லியிருக்கிறார். உயிர்த்தெழுந்த வாழ்க் கைக்குக் கிறிஸ்துவே ஆதாரமாயிருக்கிறார்; கிறிஸ்துவின் சிலு வையே அதனைப் பெறும் வழியாகும். பரிசுத்த ஆவியானவர் அதனை நமக்குக் கொண்டுவந்து தருகிறார்; அதனை நாம் அனுபவிப்பதற்கு நம்முடைய ஆண்டவர் பயங்கரமான விலை யைச் செலுத்தியிருக்கிறார் என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்.

அக்டோபர்

647

3

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூட பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம் (ரோம. 6:8).

"கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால்"

கிறிஸ்து மரித்தவுடன் தேவனுடைய மனதில், விசுவாசிகளாகிய நாமும் அவருடனேகூட மரித்தோம் என்றே அவர் நம்மை அடையாளங் காண்கிறார். இந்தப் பாக்கியம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுதே சாத்தியமாகிறது. இது சம்பவித்தவுடனே பழைய மனுஷனிடத்திலிருந்து (அந்தப் பாவத்திலிருந்து) விடுதலையடைகிறோம்.

கிறிஸ்துவிலிருக்கிற புதிய மனுஷனில் சாத்தானுக்குச் சட்டபூர்வமான உரிமை எதுவும் கிடையாது; ஆனால் கிறிஸ்துவில் இல்லாத பழைய மனுஷனில் சாத்தானுக்குச் சட்டபூர்வமான உரிமை உண்டு; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால்** (விசுவாசத்தின் மூலம் நாம் அவரோடுகூடச் சிலுவையிலறையப்பட்டு, அவரோடுகூட மரித்தோமானால்), **அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (ரோம. 6:8)** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் ஏற்கனவே நடந்தபடியினால் **"அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" (ரோம. 6:11)** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"எண்ணிக்கொள்ளுங்கள்" என்ற சொல்லின் பொருள் (மதிப்பிடு, முடிவெடு, கவனி), நடந்தது என்ன என்பதனை அடிக்கடி **"எண்ணிக்கொள்ளுங்கள்"** என்பதாகும்.

கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் மரித்ததன்மூலமும், அவருடைய உயிர்த்தெழுதலின் மூலமும், நம்முடைய விசுவாசத்தினாலுமே இவை யாவும் சம்பவித்தது; ஆனபடியினால்த்தான், நம்முடைய விசுவாசம் எப்பொழுதும் கிறிஸ்துவின் சிலுவையில் நிலைத்திருக்கவேண்டும். சிலுவைமூலமே மனுஷன் கிறிஸ்தவ வாழ்க்கையில் விடுதலையடையமுடியும் என்பது மட்டுமல்ல, சிலுவை மூலமே தொடர்ச்சியான விடுதலையையும் பெறமுடியும்; இதனிமித்தமே இரட்சிக்கப்பட்டபின்பு சிலுவையை நிறுத்துவது முட்டாள்த்தனமான வேலையாகும்; அதுவே நித்தியத்தைப்பற்றிய அறிவாற்றலாகும். ஒருவன் இரட்சிக்கப்பட்டபின்பு சிலுவையைக் கைவிடுவது படுதோல்வியான வாழ்க்கையையும், பாவஞ்செய்வதையும், பின்பு மன்னிப்புக் கோருவதையும் உத்தரவாதம் செய்யும்.

உயிர்த்தெழுதலின் சாயலில் நாம் செயற்படவேண்டுமானால், **"நாம் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்" (ரோம.** 6:5) என்பதனை நாம் எப்பொழுதும் தொடர்ச்சியாக விளங்கிக்கொள்ளவேண்டும். சகல இரட்சிப்பின் இரகசியமும் கிறிஸ்துவின் சிலுவையிலேயே காணப்படுகிறது; அப்படியே ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையும் கிறிஸ்துவின் சிலுவையிலேயே காணப்படுகிறது.

கிறிஸ்துவின் சிலுவை என்று நாம் சொல்லும்பொழுது நாம் அவருடைய மரணத்தையும், அவருடைய அடக்கத்தையும், அவருடைய உயிர்த்தெழுதலையும், உன்னதத்தில் மகிமைப்படுதலையும், இரண்டாம் வருகையில் கிறிஸ்துவுடனேகூட மறுபடியும் திரும்பிவருவதையும் **(வெளி. அதி:**19), அவரோடுகூட அரசாளுவதையும் குறிப்பிடுகிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

ஆகையால், நாம் அவரோடுகூட மரிப்பதும் (**ரோம**. 6:3), அவ ரோடுகூட அடக்கம்பண்ணப்படுவதும் (**ரோம**. 6:4), அவரோடுகூட உயிர்த்தெழுதலும் (**ரோம**. 6:5), அவரோடுகூட உன்னதத்தில் மகி மைப்படுதலும் (**எபேசி**. 2:6-7), அவரோடுகூடத் திரும்பிவருவதும் (**வெளி**. **அதி**:19), அவரோடுகூட ஆளுவதும் நமக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது (**வெளி**. 1:6, 5:10).

அக்டோபர்

4

***நீ**ங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது (ரோம. 6:14).*

"பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது"

பாவம் இல்லாத பரிபூரணத்துவத்தை வேதம் உபதேசிக்கவில்லை; ஆயினும் நிச்சயமாக ஒரு விசுவாசியைப் பாவசுபாவம் மேற்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்றே வேதம் உபதேசிக்கிறது; அதெப்படியெனில், மேற்கொள்ளுதல் அல்லது ஆதிக்கம் செலுத்துதல் என்பதன் பொருள், பாவம் ஒரு மனுஷனை மேற்கொள்ளும்பொழுது, அவன் அதனைத் தடுத்து நிறுத்தமுடியாமலும், அதனைத் தூக்கி எறியமுடியாமலும், அதனைக் கைவிடமுடியாமலும் இருந்தால், அந்த மனுஷன் பாவசுபாவத்தினால் மேற்கொள்ளப்படுகிறான்.

பிரத்தியேகமாக ஒரு விசுவாசி கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் தொடர்ச்சியாக நிலைத்திராவிட்டால், இந்த அவலம் ஏற்படுகிறது. ஒரு விசுவாசி தன்னுடைய வெற்றி எந்தக் காலத்திலும் கிறிஸ்துவிலும், சிலுவையிலேயுமே இருக்கிறது என்பதனை மறந்துவிடக்கூடாது.

அப்படியாயின், ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தைப் பிரத்தியேகமாகக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி அதனில் நிலைத்திராவிட்டால், பாவசுபாவம் ஏதோ ஒரு வழியில் அந்த மனுஷனை மேற்கொள்ளும் என்று நாம் சொல்லுகிறோமோ என்று சிலர் கேட்க

லாம். ஆம், அப்படியே சொல்லுகிறோம்! இந்த நிமிடத்தில் உலகம் முழுக்க இருக்கிற பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர் கள் உண்மையாகவே கர்த்தராகிய ஆண்டவரை நேசிப்பவர்கள்; ஆனால், தங்களை ஆக்கிரமித்திருக்கிற ஏதோ ஒரு தீயஒழுக்கத் துக்கு எதிராக ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு தீய ஒழுக்கத்தோடு தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடு பட்டிருக்கிறார்கள் அல்லது ஏதோ ஒரு பாவத்தினால் கட்டுண்டு போயிருக்கிறார்கள் அல்லது ஏதோ ஒரு பாவத்தினால் சிறைப் பட்டுப் போயிருக்கிறார்கள் எனச் சொல்வதே பொருத்தமாயிருக் கிறது.

இவர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் அந்த ஆவிக்குரிய யுத் தத்தில் வெற்றிபெறமுடியாமல் தத்தளிக்கிறார்கள். உண்மை என்னவென்றால், இந்தப் பிரச்னை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறதேதவிரக் குறைந்தபாடில்லை; கிறிஸ்தவ சபை கள் துரதிஷ்டவசமாக இந்தப் பிரச்னைக்கு எந்தவிதமான தீர்வும் அற்றவர்களாயிருக்கிறார்கள்; ஏனென்றால், கிறிஸ்தவ சபைகள் பரிசுத்தத்துக்குக் கிறிஸ்துவின் சிலுவை என்ற கோட்பாட்டை அறியவேண்டிய பிரகாரமாக அறியாதிருக்கிறார்கள். சுருக்க மாகத் தேவனுக்கு முன்பாக எப்படி நடப்பது என்பதனை அறியா திருக்கிறார்கள்; இதற்கு ஒரே தீர்வு **"நீங்கள் நியாயப்பிரமாணத் திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடி யால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது"** (**ரோம.** 6:14) என்பதாகும்.

அக்டோபர்

5

மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக் கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படி யும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர் களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர் களென்று அறியீர்களா? (ரோம. 6:16).

"எதற்குக் கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே அடிமைகளாயிருக்கிறீர்கள்"

நீங்கள் அறியீர்களா? என்ற கேள்வியுடன் பரிசுத்த ஆவியான வர் இந்த வசனத்தை முடித்திருக்கிறார்; இதன் பொருள், அநேக மான கிறிஸ்தவர்கள் இதன் தாற்பரியத்தை அறியாமலிருக்கிற படியினால், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை நோக்கி: எப்படி இந்தக் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார். இதன் பொருளை அறியாவிட்டால், வெற்றியும் தோல்வியுமாக வாழ்ந்து முடிவில் நிரந்தரமான தோல்வியைத் தழுவவேண்டியதாயிருக்கும்; அறியாமலிருப்பது மரணத்தை ஏற் படுத்தும் என்பதனை **"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்....."** என **ஓசியா** 4:6ல் சொல்லியிருக்கிறார்; மேலும் ஏசாயா தீர்க்கதரிசி மிகவும் கடுமையாகக் கர்த்தருடைய வார்த்தையை **ஏசாயா.** 5:13-14ல் கூறியிருக்கிறான்.

மேலும், **"எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமை களாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?"** என்பதன் பொருள்,

விசுவாசி ஒன்றில் கிறிஸ்துவுக்கு அடிமையாயிருக்கவேண்டும், இல்லையேல் அந்தப் பாவத்துக்கு அடிமையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவிலும், சிலுவையிலும் அந்த விசுவாசத்தை வெளிப் படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திராவிட்டால், தவிர்க்கமுடி யாமல் அந்தப் பாவத்துக்கு அடிமையாயிருப்பதைத்தவிர வேறு வழி ஒன்றுமில்லை. அப்பொழுது வேலைக்காரனை எஜமான் நடத்துவதுபோல, விசுவாசி அந்தப் பாவத்தினால் நடத்தப்படு வான். எஜமான் சொல்வதைத்தவிர வேறொன்றும் அவன் செய் வதற்கில்லை (**ரோம.** 7:14).

"மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும்" என்பதன் ஆவிக்குரிய பொருள், கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி, அதனில் நிலைத்திராமல் வேறொரு வழியினால் தேவனுக்கு முன்பாக நடக்கமுயற்சிசெய்தால், அந்த விசுவாசி எவ்வளவு கடுமையாய் முயற்சிசெய்தாலும், நிச்சயமாகத் தோல்வியடை வான். **"நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும்"** என்பதன் ஆவிக்குரிய பொருள், விசுவாசி கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதாகும். தன்னுடைய சொந்த பலத்தி னால் இதனை அவன் செய்யமுடியாது; ஆனால், தனக்குக் கிடைக்கிற சகலதும் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதன் மூலமாகவே கிடைக்கிறதென்பதனை விளங்கி, அதனைத் தொடர்ச்சியாக அறுதினமும் விசுவாசிப்பதன்மூலமே, அவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியமுடியும் (**லூக்.** 9:23). அப்படி விசுவாசிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நாம் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியாக நம்மை உருவாக்கி, தன் னுடைய வேலையை நம்மில் நிறைவேற்றுவார்.

6

***நா**ம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத் தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது (ரோம. 7:5).*

"பாவ இச்சைகளும் மரணத்திற்கு ஏதுவான கனிகளும்"

"நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில்" என்பதன் பொருள், நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பிருந்த காலத்தை அல்லது விசுவாசி அந்தப் பாவத்தின் வல்லமையைத் தன்னுடைய சொந்த முயற்சியினால் (மாம்சத்தின் பலத்தினால்) முறியடித்து வெற்றியடைய முயற்சிக்கும் அந்தக் காலத்தைப் பற்றியே குறிப்பிடுகிறது.

இப்படியிருக்க, **"நியாயப்பிரமாணத்தினாலே"** என்பதன் ஆவிக்குரிய பொருளைப் பார்ப்போம்; நியாயப்பிரமாணத்தின் நோக்கம் பாவத்தை வெளிப்படுத்துவதேயாகும். அந்த நியாயப்பிரமாணம் தேவனுடைய நியாயப்பிரமாணமாக இருந்தாலென்ன, அல்லது நாம் ஏற்படுத்தும் பிரமாணங்களாக இருந்தாலென்ன, அவைகள் தீங்கானவைகள் அல்ல; ஆனால் நியாயப்பிரமாணத்தில் வெற்றி இல்லை என்பதனை நாம் முதலில் அறிந்திருக்க வேண்டும்; நியாயப்பிரமாணத்தின் முக்கியமான நோக்கம் பாவத்தையும், அதன் தண்டனையையும் வெளிப்படுத்துவதேயாகும்; அதனைத் தப்பாமல் நியாயப்பிரமாணம் வெற்றிகரமாகச் செய்கிறது.

"தோன்றிய பாவ இச்சைகள்" என்பது பாவசுபாவத்தின் வல்லமையைப்பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதேநேரம் பாவசுபாவத்தினால் உருவாக்கப்படும் மாம்சத்தின் இச்சைகளை யும், அதன் துல்லியமான நகர்வுகளையும்பற்றியும் இங்கு குறிப் பிடப்பட்டிருக்கிறது.

"மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது" என்பதன் பொருள், விசுவாசி நியாயப்பிரமாணத்தின் மூலமாகத் தேவனுக் கேற்ற முறையில் வாழ்வதற்கு முயற்சிப்பதைப்பற்றியே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. தற்போதைய அநேக சபைகள் இதனில் ஈடுபட்டிருப்பது வேதனைக்குரியது; இதன் முடிவு பாவமும், தோல்வியுமாகும்; வேறெந்த வழியுமில்லை.

பரிசுத்தமும், சிலுவை மூலமாகவே கிடைக்கிறது என்ற உண் மையை அறியாவிட்டால் (**தீத்து 2:14**), விசுவாசி தேவனுக்கேற்ற முறையில் வாழ்வதற்கு நியாயப்பிரமாணத்தை நாடுவதைத் தவிர வேறெந்த வழியுமில்லை. மிகவும் வேதனையான ஒரு செய்தி என்னவென்றால், அநேகமான கிறிஸ்தவர்கள் தாம் அப்படிச் செய்யும்பொழுது தாங்கள் கிருபையின்கீழ் நடப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள்; ஆனால், அவர்கள் உண்மையில் நியா யப்பிரமாணத்திலேயே வாழ்கிறார்கள்; இது கிறிஸ்துவின் சிலு வையைப்பற்றிய அறியாமையினாலேயே ஏற்படுகிறது. அறி யாமை கொல்லுகிறது என்பதனை ஆண்டவர் **ஓசியா 4:6**லும் **ஏசாயா 5:13-14**லும் **"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்....."** எனச் சொல்லியிருக்கிறார். பவுல் அப் போஸ்தலர் **கலாத்தியர் 5:19-21**ல சொல்லியிருப்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்; ஏனென் றால், மாம்சத்தின் கனிகள் மாம்சத்தின் கிரியைகளிலேயே முடிகிறது.

அக்டோபர்

7

***பா**வமானது கற்பனையினாலே சமயம்பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததா யிருக்குமே (ரோம. 7:8).*

"கேடான இச்சைகள்"

சகலவித இச்சைகள் என்பது உணர்ச்சிக்கு உட்பட்ட கேடான விருப்பங்களைக் குறிப்பிடுகிறது; கேடு விளைவிக்கக்கூடிய எது வும் இதற்குள் அடங்கும். வேதனைக்குரிய நிலைமை என்ன வென்றால், கிறிஸ்துவின் சிலுவையை அறியவேண்டிய பிர காரம் அறியாமல், ஏராளமான கிறிஸ்தவர்கள் பவுல் அப்போஸ் தலருக்குக் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய வெளிப்பாடு கிடைப்பதற்கு முன்பு எப்படிக் கேடான இச்சைகளினால் அவர் அவஸ்தைப்பட்டாரோ, அப்படியே அவர்களும் அனுபவிக்கிறார் கள்; துரதிஷ்டவசமாக தற்பொழுது கோடிக்கணக்கான கிறிஸ்த வர்கள் கேடான இச்சைகளுக்குள் அகப்பட்டு, அதிலிருந்து தப்புவ தற்காகத் தங்களுடைய முழுப்பலத்தோடு போராடியும் தவிர்க்க முடியாமல் தோல்வி அடைந்தவண்ணமாயிருக்கிறார்கள்.

தாம் ஏன் தோல்வி அடைகிறோம் என்பதனை அவர்கள் அறி யாமல் இருக்கிறார்கள். தங்களுடைய முழுப்பலத்தை உபயோ கித்தும், தங்களை ஆக்கிரமித்திருக்கும் இச்சைகளுக்கு எதிராகப் போராடியும் முடிவில் பெரும் தோல்வியையே தழுவிக்கொள் கிறார்கள் (**ரோம.** 7:13). இத்தகைய கேடான இச்சைகள்

தொடர்ந்து பெருகிக்கொண்டிருப்பதனால், தாங்கள் அசுத்த ஆவி களினால் பிடிபட்டிருக்கக்கூடுமோ என்று சந்தேகித்து, பிசாசு கலைக்கும் போதகர்களை அவர்கள் நாடியும் எவ்வித பிரயோ ஜனமும் இல்லை.

மறுபிறப்புப்பெற்ற கிறிஸ்தவன் பிசாசினால் உரிமைகொண் டாடமுடியாது (**IIகொரி.** 5:17); பிசாசினால் கொடுமைப்படுத்தப் படலாமே தவிர, பிசாசினால் உரிமைகொண்டாடமுடியாது. என்ற உண்மையைக் கிறிஸ்தவர்கள் முதற்கண் தம்முடைய இருத யத்தில் பதித்துவைத்திருக்கவேண்டும்; அதேநேரம் இத்தகைய அவலத்தினால் சில கிறிஸ்தவர்கள் அல்ல, பல்லாயிரக்கணக் கான கிறிஸ்தவர்கள் வேதனைப்படுகிறார்கள்.

இதற்குத் தீர்வு கிறிஸ்துவின் சிலுவையே; அநேகமான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை இரட்சிப்பு வரைக் கும் அறிந்திருக்கிறார்கள்; ஆனால், பரிசுத்தத்திற்கும் (**தீத்து** 2:14), நாளாந்தக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் (**லூக்.** 9:23) கிறிஸ்துவின் சிலுவை என்ற கோட்பாட்டை அறவே அறியாதிருக்கிறார்கள்; கிறிஸ்தவர்கள் இதனை விளங்கினார்களோ இல்லையோ, இங்கு பரிசுத்தத்தைப்பற்றியே நாம் பேசுகிறோம்.

அக்டோபர்

8

***பா**வமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது (ரோம. 7:11).*

"பாவம் என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது"

பவுல் அப்போஸ்தலர் எப்படி வஞ்சிக்கப்பட்டார்? கிறிஸ்து வுக்குள் புதிய அந்தஸ்தை பெற்றிருக்கிறபடியினால் (**IIகொரி.** 5:17) நியாயப்பிரமாணத்தைச் செய்வதற்குப்போதிய பெலனைத் தான் பெற்றிருப்பதாக அவர் நினைத்தார்; ஆனால் அவருடைய சொந்த பலத்தினால் நியாயப்பிரமாணத்தைச் செய்யவேண்டும் எனத் தேவன் ஒருபொழுதும் எதிர்பார்க்கவில்லை என்பதனை அவர் அறியவேண்டியதாயிருந்தது. தேவனுடைய மீட்பின் திட் டத்தில் அத்தகைய சிந்தனை ஒருபொழுதும் இருந்ததில்லை; அதற்குப் பதிலாக நம்மில் வாசமாயிருக்கிற இயேசுகிறிஸ்து (**கலா.** 2:20), பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் நியாயப்பிரமாணத்தைச் செய்யவேண்டும் என்றே எதிர்பார்க் கிறார்.

இப்படியிருக்க, வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், இந்த வஞ்சகம் தொடர்ந்த வண்ணமாயிருக்கிறது; பவுல் அப் போஸ்தலர் மட்டுமல்ல, கோடிக்கணக்கானோர் இந்த வஞ்ச னையின் வலைப்பின்னலில் அகப்பட்டு, செய்வதறியாமல் வேதனைப்படுகிறார்கள்; அதெப்படியெனில், இப்பொழுது தாம்

கிறிஸ்துவுக்குள் இருப்பதனால், நியாயப்பிரமாணத்தைச் செய்வ தற்குத் தேவையான பலம் நிச்சயமாகத் தம்மிடத்திலிருக்கிறது என அவர்கள் நம்புகிறார்கள். தேவன் அவர்களிடத்தில், அவர் களுடைய பெலனையல்ல, அவர்களுடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் எதிர்பார்க்கிறார் என்பதனை அவர்கள் உணரா மல் அல்லது உணரவிரும்பாமலிருக்கிறார்கள்.

தேவன் நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலு வையில், நமக்குச் செய்தது என்ன என்பதனையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் அறிந்து, அதனை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்றே எதிர்பார்க் கிறார். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக நம் மில் அசைவாடி, நம்முடைய வாழ்க்கையில் அந்தப் பாவத்தின் ஊடுருவல் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வது மட்டுமல்ல, நியா யப்பிரமாணத்தைச் செய்யக்கூடிய பலத்தையும் நமக்குத் தந் தருளுவார்; கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதன் அடிப் படையிலேயே இது சாத்தியமாகிறது.

அக்டோபர்

9

***ஆ**தலால் நான் விரும்புகிற நன்மையைச் செய் யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் (ரோம. 7:19).*

"சாத்தான் விசுவாசிகளுடைய விருப்பத்தைத் திசைதிருப்பலாமா?"

ஆம், நிச்சயமாக; அது எப்பொழுது சாத்தியமாகும் என்றால், விசுவாசி, தன்னுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவின் சிலுவை யைவிட்டு விலக்கி வேறொன்றிற்குத் திசைதிருப்பும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்கு உதவிசெய்ய முடியாதபடி தடை செய்யப்படுகிறார்; இதற்கு முக்கியமான காரணம் சட்ட பூர்வமில்லாத எந்தச் செய்கைக்கும் பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்வதில்லை. விசுவாசி ஆவிக்குரிய வேசித்தனத்தில் ஈடுப்பட்டிருக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவருடைய உதவி தடைப்படும். இதனையே பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 7:19ல் **"ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும் பாத தீமையையே செய்கிறேன்"** எனக் கூறியிருக்கிறார்.

இங்கு சாத்தான் ஒரு விசுவாசியினுடைய விருப்பத்தை வேறொன்றிற்குப் பலவந்தமாகத் திசைதிருப்பமுடியும் என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; நம்முடைய விருப்பத்தை விட சாத்தான் பலவானாக இருக்கிறான் **(மத்.** 12:29) என்பது வெளிப்படையாயிருக்கிறது.

சில விசுவாசிகள் தப்பான எண்ணங்கொண்டிருக்கிறார்கள்; அதென்னவெனில், ஒரு விசுவாசிக்கு, அவன் இரட்சிக்கப்பட்ட பொழுது மனுஷசக்திக்கு அப்பாற்பட்ட விருப்பமும் பலமும் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறார்கள்; அதில் எந்தவித உண்மையும் இல்லை. நம்முடைய விருப்பமும் சுய பலமும் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு எப்படியிருந்ததோ அப் படியே இரட்சிக்கப்பட்ட பின்பும் இருக்கும் என்பதனை ஒவ் வொரு கிறிஸ்தவனும் அறிந்திருப்பானாக; விருப்பம் முக்கிய மானதுதான், ஆனால், விருப்பத்தினால் நம்முடைய வாழ்க்கை யில் வெற்றியைக் கொண்டுவருவது தேவனுடைய வழியல்ல.

தேவனுடைய வழி, கிறிஸ்துவும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதுமேயன்றி வேறொன்றுமல்ல. நம்முடைய விசுவாசம் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதில் நிலைத்திருக்கும் பொழுதே வெற்றி நமக்கு உத்தரவாதம் செய்யப்படுகிறது; அப் பொழுதே நம்முடைய சரீர அங்கங்களை நீதிக்கு ஒப்புக்கொடுக்க முடியும் என்பதனை விசுவாசி விளங்கிக்கொள்ளவேண்டும்.

அக்டோபர்

10

***கி**றிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோம. 8:2).*

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்"

தேவபிரமாணங்களில் தலைசிறந்த பிரமாணமாக **"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்"** கருதப் படுகிறது; வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் மிகமுக்கியமான ஒரு வேதவாக்கியமாக **ரோமர் 8:2**, வேத அறிஞர்களினால் அடையாளங்காணப்பட்டிருக்கிறது. பவுல் அப்போஸ்தலரின் சகல உபதேசங்களும் இந்த வேதவாக்கியத்தில் அடங்குகிறது. பரிசுத்த ஆவியானவர் எந்த அடிப்படையில் செயற்படுகிறார் என்ற விபரம் இந்தப் பிரமாணத்தில் சுருக்கமாகவும் காத்திர மாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது; இதனைவிட முக்கியமானது என ஒன்றும் இருக்கமுடியாது.

ஆயினும் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், அநேகமான கிறிஸ்தவர்கள் தங்களுடைய சிந்தனைக்கேற்பப் பரிசுத்த ஆவியானவர் செயற்படுகிறார் என நிஜமாகவே நம்பு கிறார்கள்; ஆனால் துரதிஷ்டவசமாக யார் இந்தப் பரிசுத்த ஆவியானவர்? அவர் என்ன செய்கிறார்? எந்த அடிப்படையில் செயற்படுகிறார்? அவர் எப்படிச் செயற்படுகிறார்? என்பதுபற்றி

எந்தவிதமான அறிவும் இல்லாமல், பரிசுத்த ஆவியானவர் **"மணி அடித்தவுடன் ஓடிவருகிற ஒரு சிப்பந்தியாக"** (Bell Boy) அவரை அடையாளங்கண்டு, அப்படியே செயற்படுகிறார்கள். ஆம், பரிசுத்த ஆவியானவர் சகல உதவிகளையும் ஒரு விசுவாசிக்குக் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார்; ஆனால், தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறையை அறிந்து, அந்த எல்லைக்குள் செயற்படும்பொழுதே பரிசுத்த ஆவியானவருடைய உதவி சாத்தியமாகிறது.

இப்படியிருக்க, **"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்"** தேவனால் உலகத்தோற்றத்திற்கு முன்னமே ஸ்தாபிக்கப்பட்டது என்பதனை (**1பேது. 1:18-20**) முதற்கண் நாம் அறிந்திருக்கவேண்டும். இது ஒரு தேவபிரமாணமாக இருக்கிறபடியினால், பரிசுத்த ஆவியானவர் அந்தப் பிரமாணத்தின் எல்லைக்குள்ளேயே செயற்படுகிறார். அதற்கு அப்பால் அவர் செயற்படுவதில்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரே நம்முடைய இருதயத்தில் செயற்பட்டு, நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கிறார். இந்தப் பிரமாணத்திற்கு அப்பால் நாம் செயற்பட்டு, ஆவிக்குரிய கனியையும், கிறிஸ்துவின் சாயலையும், பரிசுத்தத்தையும், ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையையும் விருத்திசெய்ய முயற்சித்தால், நிச்சயமாகத் தோல்வியைச் சந்திக்கவேண்டிவரும். பரிசுத்த ஆவியானவர் ஒரு பொழுதும் தேவனால் நியமிக்கப்பட்ட வழியைவிட்டு விலகமாட்டார் என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். அவரை ஜீவனுடைய ஆவி என்றும் அழைக்கப்படுகிறது; ஏனென்றால், கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதை அவரே மேற்பார்வை செய்து, அந்த ஜீவனை நமக்குக் கொடுக்கிறார் (**யோவா. 16:13-14**); வேறெந்த வழியினாலும் அதனைப் பெறமுடியாது.

ஜீவன் என்பதன் பொருள், கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய சகலத்தையும் குறிப்பிடுகிறது; அதெப்படியெனில்,

மனுஷ வீழ்ச்சியின்போது மனிதன் இழந்த சகலத்தையும் பற்றியே இங்கு சொல்லப்படுகிறது; அவை யாவும் சிலுவையில் பொருத்தமான முறையில் கிறிஸ்துவினால் கையாளப்பட்டது (**கொலோ.** 2:14-15); இதனையே ஜீவன் என்று சொல்லப்படுகிறது; ஆயினும் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிப் பெற்றுக் கொண்ட சகலத்தையும் நாம் இப்பொழுது அனுபவிக்கமுடியா மல் இருக்கிறோம். கிறிஸ்து பெரும் விலையை நமக்காகக் கொடுத்திருக்கிறார்; ஆயினும், தற்பொழுது நாம் முதற்கனி யையே அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது (**ரோம.** 8:23); மிகுதி யானது உயிர்த்தெழுதலின் பின்பே நமக்குக் தரப்படும் (**1கொரி.** 15:51-54). முதற்கனி தாராளமாகத் தற்போதைய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமானதாயிருக்கிறது; ஆவியானவர் சிலுவை மூலமாகவே ஜீவனை நமக்குத் தருகிறர் (**யோவா.** 7:37-39).

"கிறிஸ்து இயேசுவில்" "கிறிஸ்து இயேசுவினாலே" "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்ற சொற்றொடர்கள் ஒரே காரி யத்தையே பேசுகிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். இந்தப் பிரமாணம் பரிசுத்த ஆவியானவர் எப்படிச் செயற்படு கிறார் என்பதனை விபரமாகச் சொல்லுகிறது. பவுல் அப்போஸ் தலர் தான் எழுதின 14 நிருபங்களிலும் இதுபற்றிப் பல்வேறு விதமாகக் **"கிறிஸ்துவுக்குள்" "அவரில்" "கிறிஸ்து இயேசுவில்" "அவருக்குள்"** என 170 தரம் குறிப்பிட்டிருக்கிறார். இவை யாவும் நம் சார்பில் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதைப் பிரகடனப்படுத்துகிறது; கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய நன்மைகளைப் பெறவேண்டுமாயின், நம்முடைய விசுவாசம் எப் பொழுதும் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றிய திலும் வெளிப்படுத்தவேண்டுமென்பதே பரிசுத்த ஆவியானவரு டைய வேண்டுகோளாயிருக்கிறது; அந்த அடிப்படையிலேயே பரி சுத்த ஆவியானவர் நம்மில் செயற்படுகிறார்; இதனைத் தவிர்க்க முடியாது; அந்த அடிப்படையில் நாம் செய்றபடுவோமாயின்,

கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய யாவும் நம்முடையதா கிறது; பரிசுத்த ஆவியானவர் அதனை உத்தரவாதம் செய்கிறார்.

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" ஒன்றே **"பாவம் மரணம்"** என்ற பிரமாணத்தைத் தோற் கடிக்கிறது; வேறெந்த வழியினாலும் **"பாவம் மரணம்"** என்ற பிரமாணத்தைத் தோற்கடிக்கமுடியாது. பவுல் அப்போஸ்தலர் மூலம் பரிசுத்த ஆவியானவர் சொல்வதைப் பொருத்தமான முறையில் நாம் பின்பற்றுவோமாயின், பாவம் நம்மை மேற் கொள்ளமாட்டாது என்று வாக்குத்தத்தமாக **ரோமர்** 6:14ல் உறுதி யளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் **மாம்சத்தின் கிரியைகள்** பரவலாக இருந்தால், அதுவொன்றே அவன் **கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தைப்** பின்பற்றாமல், **பாவம் மரணம் என்ற பிரமாணத்தைப்** பின்பற்றுகிறான் என்பதற்கு அடையாளமாக இருக் கிறது.

அக்டோபர்

11

***அ**ந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோம. 8:26-27).*

"ஆவியானவர் பலவீனங்களில் உதவிசெய்கிறார்"

பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்வதும், கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்வதும் ஒன்றல்ல. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக வேண்டுதல் செய்கிறார் (**எபி.** 7:25); கிறிஸ்துவின் வேண்டுதல் இல்லாவிட்டால், ஒரு நாளுக்காகுதல் நாம் நிலைத்திருக்கமுடியாது என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரினால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல், நாம் பரிசுத்தமான வாழ்க்கையை வாழவேண்டும் என்பதனையே நோக்கமாகக் கொண்டது; மேலும் இதற்குள் பரிசுத்த ஆவியானவர் செயற்படும் முறையும் அடங்கியிருக்கிறது. நாம் தவறைச் செய்து தோல்வியடைந்தால், கிறிஸ்து நமக்காக வேண்டுதல்

செய்கிறார்; அதேநேரம் பரிசுத்த ஆவியானவர் நாம் ஏன் தவறி னோம் என்பதனைச் சுட்டிக்காட்ட விருப்பமாக இருக்கிறார். அந்தத் தவறு எந்தக் காலத்திலும் தவறான இடத்தில் விசுவா சத்தை வைத்ததனால் ஏற்பட்டதேயாகும். அடிக்கடி நம்முடைய ஆண்டவர் தன்னுடைய சீஷர்களை நோக்கி: **"அற்ப விசுவாசி களே"** என்று சொல்வதன்மூலம் இது நிரூபிக்கப்படுகிறது; சிலு வையைப்பற்றிய தவறான வியாக்கியானம் அற்ப விசுவாசத்தில் முடிவடைகிறது.

"வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு" என்ற சொற்றொ டர்மூலம் பரிசுத்த ஆவியை அல்ல, விசுவாசியைப்பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதெப்படியெனில், இருதயத்திலிருப் பதைத் தகுந்த சொற்களால் விசுவாசி ஒப்புவிக்க முடியாமலி ருப்பதைப்பற்றியே சொல்லப்படுகிறது. ஆவியினுடைய நோக் கம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதேதவிர, நம்மு டைய சித்தத்தையல்ல. சிலர் பரிசுத்த ஆவியானவர் மணி யடித்தவுடன் நம்மிடம் வருவார் என்ற சிந்தனையை உடைய வர்களாயிருக்கிறார்கள்; அத்தகைய அனுமானம் பாரிய தவறா யிருக்கிறது. பரிசுத்த ஆவியானவருடைய உதவியைப் பெறுவ தென்பது தேவனுடைய உதவியைப் பெறுவதாகும்; ஏனென் றால், பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. இதன் அர்த்தம் நாம் பெறும் உதவி பரிபூரண மானதும், தாராளமாகப் போதுமானதுமாயிருக்கிறது. நமக்கு எது தேவை என்பதனையும், அது ஏன் நமக்குத் தேவை என்பதனை யும், எவ்வளவு தேவை என்பதனையும் பரிசுத்த ஆவியானவரே அறிவார்.

"நமது பெலவீனங்களில்" என்பதன் பொருள், சரீர பெல வீனத்தையும், மனதின் பெலவீனத்தையும், அதின் குறைபாடு களையும், நோய்களையும், வருத்தங்களையும்பற்றிக் குறிப்பிடு கிறது; விசுவாசி அடிக்கடி இதனைச் சந்திக்கவேண்டியதாக இருக் கிறது; இதற்காக நாம் ஜெபம்பண்ணவேண்டியதாயிருக்கிறது.

ஆனால், எப்படி ஜெபம்பண்ணுவது என்பதனை நாம் அறியாம லிருக்கிறோம். நம்முடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்படுகிறது, அப்பொழுது அவர் வல்லமையாக நம்மில் செயற்பட்டு நம்முடைய பெலவீனங்களை அவர் சரிப்படுத்துவார்.

நாம் தொடர்ந்து ஞாபகமூட்டுவது என்னவென்றால், பரிசுத்த ஆவியானவருடைய உதவி மிகவும் குறைவாகக் கிடைப்பதற் குக் காரணம், நம்முடைய விசுவாசம் பொருத்தமான இடத்தில் வைக்காததே என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; இதுவே முக்கியமான காரணமாகும். வேறொன்றுக்கும் அவர் நம்மைத் தண்டிப்பதில்லை; நம்முடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்து விலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நங்கூரமிடும் பொழுது, அவருடைய வேண்டுதலையும், பூரண உதவியையும் நாம் பெறமுடியும்; அப்பொழுது நம்முடைய வாழ்க்கை 100 வீதம் தேவபலத்தில் செயற்படும்; இல்லையேல் மாம்சத்தில் செயற்படுவதைத்தவிர, வேறுவழியில்லை (**ரோம. 8:7-8**).

அக்டோபர்

12

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் (ரோம. 8:29).

"முதற்பேறானவர்"

இயேசுகிறிஸ்து எரிநரகத்தில் மறுபிறப்பைப் பெற்றார் என்ற விஷமத்தனமான உபதேசத்திற்கு **ரோமர் 8:29**ஐ விசுவாச மார்க்கத்தினர் உபயோகிக்கின்றனர். முதற்பேறானவர் என்ற சொற்றொடர் கிரேக்கபாஷையில் **"Prototokos"** என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள், **"அந்த முதன்மையான" "அந்த ஆரம்பம்" "அந்தப் பிரதான" "அந்த மிகச் சிறந்த"** என்று மொழிபெயர்க்கலாம்; அப்படியானால், இதன் பொருள், இயேசு மறுபிறப்புப் பெற்றார் என்பதல்ல, எல்லாப் பாவிகளுக்கும் மறுபிறப்புப் பெறுவது அவராலே சாத்தியமானது என்பதே நிஜமானது.

பவுல் அப்போஸ்தலர் இதுபற்றி **கொலோசெயர் 1:15**ல் **"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்"** எனச் சொல்லியிருக்கிறார். இதன் பொருள், மகிமையான கர்த்தர் ஒரு சிருஷ்டி அல்ல, எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் அவரே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மறுபடியும் பவுல் அப்போஸ்தலர் **கொலோசெயர் 1:18**ல் **பிரஸ்தாபிக்கையில்: "அவரே சபையாகிய சரீரத்துக்குத்**

தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமான வர்" எனக் கூறியிருப்பதை நாம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதன்பொருள் இயேசு பாவியாயிருந்து மறுபிறப்புப் பெற்றவர் அல்ல, அது அவருக்குத் தேவையுமில்லை; அப்படிச் சிலர் உபதேசிக்கிறார்கள்; இப்படியிருக்க, அவர் மூலமாகவே உயிர்த்தெழுதல் சாத்தியமானது; அவரே இரட்சிப்பின் திட்டத் திற்குத் தகப்பனாயிருக்கிறார். அதற்குத் தேவையான விலை யைச் சிலுவையில் முற்றுமுழுவதும் அவரே செலுத்தினார்; இதனிமித்தமே இரட்சிப்பு சாத்தியமானது. ஒருபொழுதும் மனிதர் முன்குறிக்கப்படுவதில்லை; அவருடைய இரட்சிப்பின் திட்டமே முன்குறிக்கப்பட்டிருக்கிறது. தாகமாய் இருக்கிறவன் எவனோ, அவன் இரட்சிப்பின் திட்டத்தை விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் (**யோவா. 3:16**).

"Prototokos" என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆகக் கிட்டிய ஆங் கிலச் சொல் **"First Born"** என்றே வேத அறிஞர்கள் கருதுகின் றனர்; அப்படியானால், முதற்பேறு என்ற சொல் போதிய விளக் கத்தைக் கொடுப்பதாயில்லை.

அக்டோபர்

13

***தே**வன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான் களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக் கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே (ரோம. 8:33-34).*

"தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?"

தேவன் நீதிமான் என்று ஒருவனை அதிகாரபூர்வமாக அறி வித்தபின், அவனை இன்னொருவன் குற்றவாளி என்று தீர்ப்புச் சொல்வதானால், அத்தகைய தீர்ப்பு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இயேசுகிறிஸ்து அவனுக்காகச் சிலுவையில் நிறை வேற்றியதையும், அவர் கொடுத்த விலையையும் குறிப்பாகக் கவனத்திற்கு எடுக்கும்பொழுது, அத்தகைய துணிகரமான ஆக்கி னைத்தீர்ப்பைச் சாத்தானும் அவனைப் பின்பற்றுவோருமே மேற் கொள்ளமுடியும். **வெளி.** 12:10ல் சாத்தானே "....**சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்**...." என முத்திரையிடப்பட்டிருக்கிறது.

ஆனபடியினால், ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசியை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தால் அல்லது அவன்மேல் குற்றஞ் சாட்டினால், அவன் சாத்தானோடு கூட்டுச்சேர்ந்திருப்பது

மட்டுமல்ல, பில்லிசூனியத்திலும் ஈடுபட்டிருக்கிறான். சாமுவேல் தீர்க்கதரிசி சவுல் ராஜாவின் செய்கைகளை (**1சாமு.** 15:23) பில்லிசூனியத்திற்கும் இரண்டகம்பண்ணுதலுக்கும் ஒப்பிட்டிருப்பதை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். **"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்"** (**1சாமு.** 15:22) எனச் சாமுவேல் சவுல் ராஜாவை நோக்கிக் கூறியிருப்பதே தேவையானதும் கர்த்தருக்குப் பிரியமானதுமாயிருக்கிறது.

அக்டோபர்

14

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோம. 8:37).

"முற்றும் ஜெயங்கொள்ளுகிறவன்"

பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலருக்குக் கொடுத்த வெளிப்பாட்டைப் பின்பற்றி நம்முடைய நாளாந்த வாழ்க்கையைக் கட்டளையிடுவோமாகில், நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மட்டுமல்லாமல் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருப்போம் என வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பெற்றுக்கொள்வதற்கு நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்க வேண்டும் (**1கொரி. 1:17-18, 23, 2:2; கலா. 6:14**) என்பதே தேவ நிபந்தனையாகும் (**லூக். 9:23**); ஆனாலும், நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியது என்னவென்றால், **"அவர் மூலமாக நம்மில் அன்புகூருகிறவராலேயே"** இவை யாவும் சாத்தியப்படுமேதவிர, வேறெந்த வழியினாலும் அல்ல.

"அவர் மூலம்" என்பது பிரத்தியேகமாக அவர் சிலுவையில் நிறைவேற்றிய பாவநிவிர்த்தியினாலேயே சாத்தானும் அவனுடைய கூட்டமும் மொத்தமாகவும், பரிபூரணமாகவும் தோற்கடிக்கப்பட்டு, சகல பாவங்களும் நிவிர்த்திசெய்யப்பட்டது (**கொலோ. 2:14-15**) எனப் பொருள்படுகிறது. **"முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்"** என்பதன் பொருள், கர்த்தர் தன்னுடைய ஜனங்கள்

அப்படியிருக்கவேண்டும் என்றே விரும்புகிறார் (**யோவா.** 10:10); ஆனால், சீர்திருத்தத்திற்குப் பின்பு, தற்போதைய கிறிஸ்தவர்கள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாகவே இருக்கிறார்கள்; ஏன்? பலநூற்றாண்டுகாலமாக விசுவாசத்தைப்பற்றி அநேகமான புஸ்தகங்கள் எழுதப்பட்டிருந்தாலும், அவற்றினால் ஒரு பிரயோஜனமுமில்லை; அவை யாவும் விசுவாசியைக் கிறிஸ்துவின் சிலுவையைவிட்டு (**Iகொரி.** 2:2) விலக்கி, வேறொன்றுக்குக் கொண்டுசெல்கிறது (**IIகொரி.** 11:4); இதனிமித்தம் விசுவாசிகள் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிராமல் முற்றும் (சாத்தானால்) தோற்கடிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். தற்போதைய கிறிஸ்தவ சந்ததியைச் சாத்தான் முற்றிலும் ஜெயங்கொண்டு, அவர்களைப் பரிதாபகரமான அடிமைகளாக மாற்றியிருக்கிறான். பார்வோனுக்கு இஸ்ரவேலியர்கள் அடிமைகளாக இருந்ததுபோல, கிறிஸ்தவர்கள் சாத்தானுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைப் பாவசுபாவம் கட்டுப்பாடின்றி அரசாளுகிறது.

ஒரு விசுவாசி அவன் போதகராயிருந்தாலென்ன, பாரிய கூட்டத்தைக் கவருகிற சுவிசேஷகனாயிருந்தாலென்ன, உலகத்தின்மேலும் மாம்சத்தின்மேலும், பிசாசின்மேலும் ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை வாழவிரும்பினால், தேவனால் நியமிக்கப்பட்ட வழியை அவன் அறிந்திருக்கவேண்டும்; தேவனால் நியமிக்கப்பட்ட வழி என்ன என்பதனைச் சற்றுச் சுருக்கமாகப் பார்ப்போம்.

(1) **கிறிஸ்துவின் சிலுவை**: கர்த்தரிடத்திலிருந்து நாம் பெறுவது எதுவாயிருந்தாலும், கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது என்பதனில் நாம் உறுதியாயிருக்கவேண்டும்; கிறிஸ்துவே சகலத்திற்கும் ஆதாரம்; சிலுவையே அதனைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியுமாகும்.

(2) **நம்முடைய விசுவாசம்**: ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் பிரத்தியேகமாக வைத்திருக்கவேண்டும்; கிறிஸ்துவையும் சிலுவையையும் ஒருபொழுதும் நாம் பிரிக்கக் கூடாது; சிலுவையைப்பற்றி நாம் பேசும்பொழுது, மரப்பல கையை அல்ல, அவர் சிலுவையில் நிறைவேற்றிய சகல நன்மைகளைப்பற்றியே பேசுகிறோம் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; அது முடிவில்லாதது (**எபி. 13:20**).

(3) **பரிசுத்த ஆவி**: நம்முடைய விசுவாசத்தைப் பொருத்தமான இடத்தில் வைத்தால், அவர் நம்மை முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாற்றுவார்; பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய வேலையின் எல்லைக்குள்ளேயே செயற்படுகிறபடியினால், அந்த எல்லைக்கு அப்பாற் போனால், அவர் செயற்படமாட்டார் என்பதனை நாம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

இதுவே தேவனுடைய வழியாகும்; வேறெந்த வழியும் நமக்குத் தேவையில்லை (**ஆதி. 3:15; லூக். 9:23; ரோம. 6:3-14; கலா. 6:14; Iகொரி. 1:17-18, 23, 2:2**).

அக்டோபர்

15

***ஒ**ருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோம. 14:23).*

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே"

பவுல் அப்போஸ்தலர் விசுவாசத்தைப்பற்றிப் பேசும்பொழுது எந்தக் காலத்திலும் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதிலுமுள்ள விசுவாசத்தைப்பற்றியே பேசுகிறார். அந்த விசுவாசத்தைக் கைவிட்டு, வேறு எதனிலும் விசுவாசத்தை வெளிப்படுத்துவோமாயின் நாம் பாவம் செய்கிறோம். சாத்தான் வேறொன்றில், (அது எவ்வளவு ஆவிக்குரிய கனம் நிறைந்திருந் தாலும்) நாம் விசுவாசத்தை வைப்பதையே அவன் விரும்பு கிறான். இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **1கொரிந்தியர் 1:17**ல் **"ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பி னார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்"** எனச் சொல்லியிருப்பதை நாம் தீவிரமாகக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், வேறெதனிலும் நாம் விசுவா சத்தை வெளிப்படுத்துவோமாயின் அதனால் ஒரு பிரயோஜனமு மில்லை என்பதனைச் சாத்தான் நன்கு அறிவான்; ஆனால், விசு வாசிகளோ அதனை அறியாதிருக்கும்படி வஞ்சிக்கப்பட்டு

இருக்கிறார்கள். இவ்வாறு சுட்டிக்காட்டும்பொழுது அதனைக் கேட்பது கொஞ்சம் கடுமையானதுதான், ஆனால் முற்றிலும் அது உண்மையாயிருக்கிறது. விசுவாசிகள் **"வேறொரு விசுவாசத்தை"** அனுசரிக்கும்பொழுது அது தாங்கமுடியாத பிரச்னைகளைக் கொண்டுவரும்; வேறொரு விசுவாசம், வேறொரு சுவிசேஷமாகும்; அந்த சுவிசேஷத்திலிருந்து உற்பத்தியாவது வேறொரு இயேசுவாகும்; வேறொரு இயேசுவை விசுவாசிக்கும் பொழுது, வேறொரு ஆவி நம்மை ஆக்கிரமிக்கிறது. அது பரிசுத்த ஆவியல்ல, அது பிசாசு என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும் (**IIகொரி. 11:4**).

வேறொன்றை விசுவாசிப்பதன் மூலம் நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பை கைவிடவேண்டிவரும் (**வெளி. 2:4**) என்பதனை விசுவாசி அறிந்திருப்பானாக. சகலத்துக்கும் அந்த விசுவாசமே திட்டமான அளவையாக இருக்கிறது; ஆகையால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த விசுவாசம் **"சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே"** (**Iகொரி. 1:23, 2:2**) என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; **வேறெந்த விசுவாசமும் பாவமே**! பிரபல்யமான போதகர்கள் அந்த விசுவாசத்தையல்ல, அதற்குப் பதிலாகத் தாறுமாறான விசுவாசத்தையே உபதேசித்து, கிறிஸ்துவின் சரீரத்தைச் சின்னாபின்னமாக்குகிறார்கள். இந்த உண்மையை இன்னும் அவர்கள் புரியாமலிருப்பது ஏன்? **"அவிசுவாசமே"** முக்கிய காரணமாயிருக்கிறது.

அக்டோபர்

16

***ஞா**னஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங் கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார் (1கொரி. 1:17).*

"கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு"

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த வேதவார்த்தை அளப் பரிய தகவல்களை உள்ளடக்கியதாயிருக்கிறது; அவற்றைச் சற்று விபரமாக அறிந்துகொள்வது பொருத்தமானதே.

"ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை" என்பதன் பொருள், தண்ணீரில் ஞானஸ் நானமோ அல்லது வேறெந்த சபைக் கட்டளைகளோ சுவிசேஷத் தின்போது முக்கியத்துவம் பெறக்கூடாது என்பது உறுதிப்படுத் தப்பட்டிருக்கிறது; அதுவே நாம் இந்த வேதவாக்கியத்தில் அறிந்துகொண்ட படிப்பினையாகும். கிறிஸ்துவின் சிலுவையே எப்பொழுதும் முக்கியத்துவம் பெறவேண்டும். பவுல் அப்போஸ் தலர் தண்ணீரில் ஞானஸ்நானத்தை உதாசீனஞ்செய்யவில்லை, அதனைக் குறைத்து மதிப்பிடவுமில்லை; அதற்குப் பதிலாகப் பொருத்தமான தோற்றத்தை அதற்குக் கொடுக்குமாறே அவர் கேட்டுக்கொள்கிறார்; தண்ணீரில் ஞானஸ்நானம் கிறிஸ்துவி னால் வேதத்தில் கட்டளையிடப்பட்டிருந்தும் **(மத். 28:19)**, அது

இரட்சிக்கப்படுவதற்கு அவசியமில்லை என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். தண்ணீரில் ஞானஸ்நானம் முக்கியமானதாயிருந்தால், பவுல் அப்போஸ்தலர் மிகவும் சொற்பமானவர்கள் இரட்சிக்கப்பட்டதற்குத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறாரோ?. மற்றவர்கள் இந்த விஷயத்தில் உரிமைகோருவதுபோல, வெகு சிலரைக் கீழ்ப்படியப்பண்ணினதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறாரோ? இல்லவே இல்லை (**1கொரி. 1:14-16**) என்பதனை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

"சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்ற இந்த சொற்றொடரில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் என்ன என்பது அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மிகவும் சுருக்கமாகக் கிறிஸ்துவின் சிலுவையே சுவிசேஷம் எனப்படும். அதெப்படியெனில், நாம் விசுவாசிப்பதற்கும், உபதேசிப்பதற்கும், செயற்படுவதற்கும் கிறிஸ்துவின் சிலுவை அஸ்திபாரமாக இருக்கவேண்டும்; அப்படி இல்லையாயிருந்தால், நாம் பிரகடனப்படுத்துவது சுவிசேஷம் அல்ல.

நம்முடைய செய்தி சரியாயிருந்தால், சரியான செய்தியைக் கொடுக்கிறதன் பிரதிபலனை நாம் பெற்றுக்கொள்ளுவோம். செய்தி தவறாயிருந்தால், அநுகூலமான பிரதிபலனை நாம் பெறப்போவதில்லை. கிறிஸ்தவ விசுவாசம் முற்றுமுழுவதும் சரியான செய்தியில் தங்கியிருக்கிறது. செய்தி களங்கப்படுத்தப்பட்டு, தண்ணீர்மயமாக்கி, வார்த்தையை ஏதாவது ஒரு வழியில் புரட்டினால், அது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் அல்ல; அது வேறொரு சுவிசேஷமாகும். செய்தி எந்தக் காலத்திலும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவேயாகும் (**1கொரி. 2:2**); இங்கு தான் ஒவ்வொரு வழியிலும் அழுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

"கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு" என்ற சொற்றொடர், கிறிஸ்துவின் சிலுவையின் செய்தி அழுத்தமாக இருக்கவேண்டும் என்பதனையே பவுல் அப்போஸ்தலர்

சந்தேகத்திற்கிடமின்றிப் பிரகடனப்படுத்துகிறார்; அப்படியில்லா விட்டால், கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் நிறைவேற்றியதில் ஒரு பிரயோஜனமுமில்லை. இந்த ஞாயிற்றுக்கிழமை எத்தனை போதகர்கள் கிறிஸ்துவின் சிலுவையில் ஒரு பிரயோஜன மில்லை என்று பிரகடனப்படுத்தப்போகிறார்கள்? ஏனென்றால், அவர்கள் பொய்யான செய்தியைப் பிரசங்கிக்கிறார்கள்.

நிச்சயமாக அதற்குரிய பதிலைக் கர்த்தரே அறிவார்; ஆயி னும், அதிகமானோர் இந்த வரையறைக்குள் உட்பட்டிருக்கிறார் கள்; இதன் பிரதிபலன் வெகுசிலரே இரட்சிக்கப்பட்டிருக்கிறார் கள்; வெகுசிலரே பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் செய்யப் பட்டிருக்கிறார்கள்; வெகுசிலரே (யாராவது இருந்தால்) விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; ஆனபடியினால் நாம் மிகவும் அவ தானமாயிருந்து **"கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாத படிக்கு"** பார்த்துக்கொள்வோமாக.

"சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்பதன் பொருள், பவுல் அப்போஸ்தலர் இங்கு தெளிவாகக் கெட்டித்தனம் சுவிசேஷம் அல்ல என திருஷ்டாந்தமாகச் சொல்லியிருக்கிறார் (**1கொரி.** 2:1-5). இதன் பொருள், மனோதத் துவம் சுவிசேஷம் அல்ல; மறுபடியும் சுவிசேஷம் என்பது கிறிஸ்துவின் சிலுவையாகும்; சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவன் **"கிறிஸ்துவின் சிலுவையைப்"** பிரசங்கிப்பானாக.

அக்டோபர்

17

***சி**லுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிற வர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படு கிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1கொரி. 1:18).*

"சிலுவையைப்பற்றிய உபதேசமே தேவபெலன்"

அதெப்படி, சிலுவையைப்பற்றிய உபதேசம் தேவபெலனாக இருக்கமுடியும் என்பது பொதுவான கேள்வியாயிருக்கிறது; ஆனால், இந்த வேதவார்த்தையில் சிலுவையைப்பற்றிய உப தேசத்திற்கு அப்பால் தேவனுடைய வல்லமை செயற்படுவ தில்லை என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பாவம் ஒரு பயங்கரமான வியாபாரம்; பாவத்தின் கட்டு மிகவும் கொடூரமானதாக இருக்கிறபடியினால், மனுஷனுடைய கெட்டித்தனத்தினாலோ, திறமையினாலோ அல்லது மனுஷனி டத்தில் இருக்கிற எதனாலேயோ பாவத்தின் கட்டுக்கு விடுத லையில்லை. அந்தப் பாவம் மகா வல்லமையானதும், பேர ழிவை ஏற்படுத்தக்கூடியதுமாக இருந்தபடியினால், தேவன் மனுஷனாக வந்து, சிலுவைக்குப்போய் இந்த நடுக்கத்தை ஏற் படுத்தக்கூடிய வியாதியை வெற்றிகரமாகக் கையாண்டார்; இல் லையேல் மனுஷகுலம் முற்றுமுழுவதும் பாதாளத்திற்குள் தள் ளப்பட்டு அழிந்துபோயிருக்கும்; ஆனபடியினால், ஆரம்பத்தி லிருந்து இந்தப் பிரச்னை எவ்வளவு பாரதூரமானது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். துரதிஷ்டவசமாக அந்தப் பாவம்

எவ்வளவு மோசமானது என்பதனை மனுஷகுலம் ஏற்றுக் கொள்வதாயில்லை. கிறிஸ்தவர்கள் தங்களுடைய செய்கை யின்மூலம் பாவத்தின் ஆற்றலைப்பற்றி வெகு சொற்பமாகவே அறிந்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது; அறிந்திருந்தார் களானால், இந்த அந்தகார சக்தியைக் கையாளுவதற்கு வங்கு ரோத்தடைந்த வழிமுறைகளைப் பின்பற்றமாட்டார்கள்.

ஜனங்கள் விடுதலை செய்யப்படவேண்டுமானால், வல்லமை பரிபூரணமுள்ளதாயிருக்கவேண்டும். மரப்பலகையினால் செய் யப்பட்ட சிலுவையில் வல்லமை இல்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்; அப்படியே கிறிஸ்துவின் மரணத்திலும் எந்த விதமான வல்லமையும் இல்லை என்ப தனையும் புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து சிலுவையில் பலவீனத்தினால் அறையப்பட்டிருந்தார் என்று சொல்லப்பட்டி ருக்கிறது (II**கொரி.** 13:4). இதன் பொருள், கிறிஸ்து சிலுவையி லிருந்து தன்னை விடுவிப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்காமல் வேண்டுமென்றே தன்னுடைய வல்லமையை உபயோகிக்கா திருந்தார் என்பது தெளிவாகிறது; அப்படிச் செய்திருந்தால் மனு ஷனை அவர் மீட்டுக்கொள்ளமுடியாது;

அப்படியாயின், சிலுவையைப்பற்றிய உபதேசம் எப்படித் தேவ னுடைய வல்லமையாக இருக்கமுடியும் என்ற கேள்வி நியாய மானதே. சிலுவையில் என்ன நடந்தது என்பது வல்லமை யைக் கொடுக்கவில்லை; ஆனால், கிறிஸ்துவின் மரணமே வல்லமையைச் சாத்தியமாக்கியது. அவர் மரித்தபொழுது, சகல பாவங்களுக்கும் சதாகாலத்திற்கும் பாவநிவிர்த்தி செய்யப்பட்டது; அதனை விசுவாசிப்பவனே அதன் பலாபலனை அனுபவிக்க முடியும் (**யோவா.** 3:16). பாவமே, சாத்தானுக்கு மனுஷகுலத் தின்மேல் அதிகாரத்தைக் கொடுக்கிறது (I**கொரி.** 15:55-56); எல் லாப் பாவத்துக்கும் பாவநிவிர்த்தி செய்யப்பட்டதனால், சாத்தான் மனுஷனைச் சிறைக்குள் வைத்திருக்கும் அதிகாரத்தை இழந் தான்; ஆயினும், இன்னும் கோடிக்கணக்கான மனிதர்களைச்

சாத்தான் பொறிக்குள் வைத்திருக்கிறான் என்பது வெளிப்படை யான உண்மையாகும்.

அப்படியானால், இந்த முரண்பாட்டை எப்படிச் செப்பனிட முடியும்? என்ற கேள்வி இயற்கையாக எழும்புகிறது; ஆம், அது இலகுவானது. இரட்சிக்கப்படாதவர்கள் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதை ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனபடியினால், அவர்களைச் சாத்தான் கட்டுக்குள் வைத்திருக்கிறான்; அப்படியே கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களும் பரிசுத்தத்திற்குச் சிலுவை யின் செய்தியை ஏற்றுக்கொள்வதில்லை; ஆனபடியினால், அவர் களையும் சாத்தான் கட்டுக்குள் வைத்திருக்கிறான்.

இதனிமித்தமே, பவுல் அப்போஸ்தலர் **கலாத்தியர்** 5:1ல் **"ஆன படியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக் குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலை மையிலே நிலைகொண்டிருங்கள்"** எனச் சொல்லியிருக்கிறார். கிறிஸ்தவர்களுக்கே பரிசுத்த ஆவியானவர் இதனைச் சொல்லி யிருக்கிறார். இயேசு சகல பாவங்களையும் நிவிர்த்தி செய்த படியினால், விசுவாசிப்பவனுக்குப் பாவத்தின் கடன்கள் செலுத் தப்பட்டுவிட்டது; அத்தகைய விசுவாசம் பரிசுத்த ஆவியானவர் சட்டபூர்வமாக நம்மில் செயற்படுவதற்கு வழிவகுக்கிறது. தேவபெலன் எந்தக் காலத்திலும் பரிசுத்த ஆவியிலேயே இருக் கிறது. கிறிஸ்துவிலும் சிலுவையிலும் விசுவாசத்தை வெளிப் படுத்தும்பொழுது அவர் நம் சார்பில் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துகிறார்; கிறிஸ்துவின் சிலுவையே இதனை நமக் குப் பெற்றுக்கொடுத்தது.

அக்டோபர்

18

***நா**ங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார் (1கொரி. 1:23).*

"கிறிஸ்தவர்களுக்கு எதிரான போராட்டம்"

கிறிஸ்துவின் சிலுவையை அறியவேண்டிய பிரகாரம் ஒரு கிறிஸ்தவன் அறிந்தவுடன், அவனுக்கெதிராகப் போராட்டம் ஆரம்பமாகிறது. பிசாசானவன் சாத்தியமான ஒவ்வொரு வழியினாலும் போராட்டத்தைத் துரிதப்படுத்துகிறான் (**எபேசி.** 6:12). தான் சிலுவையில் கிறிஸ்துவினால் முற்றுமுழுவதும் தோற்கடிக்கப்பட்ட விபரத்தை (**கொலோ.** 2:14-15), விசுவாசி அறிய முடியாதபடிக்குப் பிசாசானவன் தன்னுடைய முழுப்பலத்தையும் பிரயோகித்துப் போராட்டத்தை நடத்துகிறான்.

நம்முடைய நெருங்கிய உறவினர்கள் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும், கிறிஸ்தவர்கள் மூலமாகவும், கள்ளப்போதகர்கள் மூலமாகவும், கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாகவும், சூழ் நிலைகள் மூலமாகவும், மாம்சத்தின் மூலமாகவும், உலகத்தின் மூலமாகவும் இந்தப் போராட்டத்தை நடைமுறைப்படுத்துகிறான். இந்தப் போராட்டத்தின் இறுதி நோக்கம் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை வேறொன்றுக்குத் திசைதிருப்புவதேயாகும்; அந்த முயற்சியில்

சாத்தான் வெற்றிபெற்றால், விசுவாசி தோல்வியைத் தழுவிக் கொள்வான்.

எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தைத் திசைதிருப்பி ஆத்துமாவையே இழந்துபோனார் கள் (**மத்.** 7:22-23); ஆனால், பரிசுத்த ஆவியானவர் இன்றும் அந்த **விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு** (**1தீமோ.** 6:12) என எச்சரிக்கை கொடுத்தவண்ணமாயிருக்கிறார்; இந்தப் பாரிய போராட்டத்தின் மத்தியிலும் அந்த விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டவன் ஈடிணையற்ற கிறிஸ்துவின் வெற்றியைத் தனதாக்கி, அதன் பலாபலன்களை அனுபவிக்கிறான்; ஆவியான வர் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்!!

அக்டோபர்

19

***நா*ன் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (1கொரி. 11:1).**

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல"

தேவனுடைய தீர்க்கதரிசனம் (**ஆதி.** 3:15) நிறைவேறவிடாமல் ஸ்திரீயின் வித்தைப் பூவுலகத்திற்கு வரவிடாமல், பிசாசானவன் ஆதிமுதல் தடைசெய்தான். காயீனை வஞ்சித்து, ஆபேலைக் கொன்றான் (**ஆதி.** 4:8); பெண் மூலமாக ஸ்திரீயின் வித்து வரவிடாமல் விழுந்துபோன தேவதூதர்களை மனுஷகுமாரத்திகளோடு கூடப்பண்ணி (**ஆதி.** 6:4) அதனைத் தடைசெய்தான்; ஆபிரகாமை வஞ்சித்து ஆகாரோடு தொடர்பை ஏற்படுத்தி ஸ்திரீயின் வித்தைப்பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்தை அர்த்தமற்றதாக்கினான் (**ஆதி.** 16:1-3); ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை அபிமெலேக்கோடு கூடப்பண்ணி அதன் மூலமாக ஸ்திரீயின் வித்தைத் தடைசெய்வதற்கு சாத்தான் எடுத்த முயற்சி தேவனுடைய தலையீட்டினால் நிறுத்தப்பட்டது (**ஆதி.** 20:3-7); ஆபிரகாம்போன்று ஈசாக்கும் வஞ்சிக்கப்பட்டிருந்தும் தேவனுடைய தலையீட்டினால் சாத்தானுடைய முயற்சி கைகூடாமற்போயிற்று (**ஆதி.** 26:8-10); சீகேம் என்பவனைச் சாத்தான் எழுப்பி யாக்கோபினுடைய குமாரத்தியாகிய தீனாளைத் தீட்டுப்படுத்தினான் (**ஆதி.** 34:1-2).

இப்படியாகப் பல்வேறுவிதமாகச் சாத்தானுடைய வஞ்சனைக் குட்பட்டுத் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்று

வதற்குத் தேவனுடைய ஜனங்கள் இடறலாக இருந்தார்கள்; ஆயினும், தேவனுடைய வாக்குத்தத்தம் தொடர்ச்சியாக ஏறெடுக்கப்பட்டு, அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டது. ஸ்திரீயின் வித்து பூமியில் பிறந்த பின்பும் அதைக் கொலை செய்வதற்குச் சாத்தான் ஏரோது ராஜாவை வஞ்சித்து அவன் மூலம் எடுத்த முயற்சி தேவனுடைய தலையீட்டினால் தடை செய்யப்பட்டது **(மத்.** 2:13). அப்படியாயின் சாத்தான் வேதாக மத்தை வாசிக்கிறானா? வேதவாக்கியங்களின் ஆவிக்குரிய பொருளை அறிந்திருக்கிறானா? என்று கிறிஸ்தவர்கள் விசனப் படுகிறார்கள்; ஆம், நிச்சயமாக அறிந்திருக்கிறான்; ஆனால், அவன் அவற்றை நம்புவதில்லை; இதற்கு உதாரணமாக மனுஷ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை வனாந்திரத்தில் சோதிப்பதற்கு **சங்கீதம்** 91:11-12ஐ அவன் உபயோகித்ததை நாம் காண்கிறோம்.

சாத்தான் வஞ்சிக்கப்பட்டிருக்கிறான், அவன் மற்றவர்களையும் வஞ்சிக்கிறான்; இந்த வஞ்சனையின் வலைப்பின்னலிலிருந்து கொரிந்தியர்களைப் பாதுகாப்பதற்காகவே பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 11:1ல் வேண்டிக்கொண்டார். புறஜாதிகளாயிருந்து விக்கிரகாராதனையினாலும், மனுஷருடைய கற்பனைகளினாலும், தத்துவங்களினாலும் தங்களை இழிவுபடுத்திக் கொண்டிருந்த கொரிந்தியர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்திய பவுல் அப்போஸ்தலர் அவர்கள் இப்பொழுது சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, மகா பரிசுத்த விசுவாசத்தைவிட்டு விலகி, வேறு பலவற்றில் விசுவாசத்தைத் திசைதிருப்பியிருக்கிறதைக் கண்ட பின்பே **"நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்"** எனப் பவுல் அப்போஸ்தலர் வேண்டிக்கொண்டார். எருசலேமிலிருந்து வந்த யூதர்கள்மூலம் இந்தக் கொரிந்தியர்கள் தவறான உபதேசங்களை அறிந்து, அந்தப் பொய்யான உபதேசங்களை ஏற்றுக்கொண்டதே அவர்கள் வஞ்சிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தது; எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் வேறொரு சுவிசேஷத்தைக் (**IIகொரி.** 11:3-4) கொரிந்தியருக்கு உபதேசித்தார்கள்; அந்த யூதர்களைச்

சாத்தான் பாவித்துக் கொரிந்தியர்களை வஞ்சித்தான். யூதர்களுடைய உபதேசம் கொரிந்தியர்களுடைய இயற்கையான விருப்பங்களைக் கிளறி அவர்களுடைய மாம்ச இச்சையைப் பலமாக எழுப்பி, அவர்களுடைய விசுவாசத்தைத் திசைதிருப்பியது.

கலப்படமில்லாத வேதவசனம் உபதேசிக்கப்படும்பொழுது அதற்குப் பின்னால் பரிசுத்த ஆவியும், மனுஷரால் களங்கப்படுத்தப்பட்ட வேதவசனம் உபதேசிக்கப்படும்பொழுது அதற்குப் பின்னால் அசுத்த ஆவிகளும் செயற்படும் என்பதனைக் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக அறிந்துகொள்ளவேண்டும். பொய்யான உபதேசங்களைக் கேட்போரும், தவறான தாறுமாறான கோட்பாடுகளை உடையவர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளுக்குப் செல்வோரும் அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்படுகிறார்கள் (**1தீமோ.** 4:1). விசுவாசிகளாகிய நாம் பொய்யான உபதேசங்களை ஏற்றுக் கொள்வோமாயின், அசுத்த ஆவிகளின் தாக்குதலிலிருந்து அவ்வளவு இலகுவாகத் தப்பமுடியாது என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும். அசுத்த ஆவிகள் வஞ்சித்து மனதைப் பிளவுபடுத்தி, இருதயத்தைச் சிதறப்பண்ணி, கண்களைக் குருடாக்கி, காதுகளைச் செவிடாக்கி, மந்த இருதயத்தை ஏற்படுத்தும் (**மத்.** 13:14-15). கோடிக்கணக்கானோர் இன்று நரகத்திலிருப்பதற்குக் காரணம் சாத்தானின் வஞ்சனையேயாகும்; சாத்தான் பொய்யை உண்மையாகத் திரித்து, உண்மையைப் பொய்யாகத் திரித்து, அந்த உபதேசத்தைக் கவர்ச்சிகரமாக்கி, அதற்கு வல்லமையைக் கொடுத்து, மனுஷகுலத்தை அன்றுதொடக்கம் இன்றுவரையும் தொடர்ந்து வஞ்சித்தவண்ணமாயிருக்கிறான்; நாம் இதற்கு எச்சரிக்கையாயிருப்போமாக (**மாற்.** 8:15).

அக்டோபர்

20

அன்றியும், சகோதரரே, ஆவிக்குரியவரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை (1கொரி. 12:1).

"ஆவிக்குரியவரங்களை அறியாதிருக்க எனக்கு மனதில்லை"

பவுல் அப்போஸ்தலர் ஒன்பது ஆவிக்குரிய வரங்களை இங்கு பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு விசுவாசி ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவன் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெற்று, தான் அதனைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அந்நியபாஷையைப் பேசுகிறவனாக இருக்க வேண்டும் (**அப்.** 2:4). பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட சகல விசுவாசிகளும் "**முக்கியமான வரங்களை நாடுங்கள்**" என்று **1கொரிந்தியர்** 12:31ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கில வேதாகமத்தில் "**மேன்மையான அந்த வரங்களை ஊக்கத்தோடு இச்சியுங்கள்**" என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆவியினால் நிரப்பப்பட்ட ஒவ்வொருவனும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட ஆவிக்குரிய வரங்களை உடையவனாக இருக்கிறான் (**அப்.** 19:6); ஆனால், ஆவிக்குரிய வரங்கள் என்றால் என்ன? அதனை எப்படி விருத்திசெய்வது என்பதனைப்பற்றிய விதிமுறைகளை அவன் அறியவேண்டியவனாக இருக்கிறான்; சுருக்கமாக அவற்றைப் பரிசீலனை செய்வோம்.

1. **ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனம்** (The word of wisdom): வருங்காலத்தில் ஜனங்களைப்பற்றி, இடங்களைப்பற்றி அல்லது பொருட்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது; பரிசுத்த ஆவியானவர் அந்த விஷயத்தைப்பற்றிப் பூரண தகவலைக் கொடுக்காமல் ஒரு **"சொல்லையே"** கொடுக்கிறார்.

2. **ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனம்** (The word of knowledge): இங்கு ஜனங்களைப்பற்றியும், இடங்களைப்பற்றியும், பொருட்களைப்பற்றியும் சொல்லப்படுகிறது; இது தற்போதைய காலத்தைப்பற்றியதும், கடந்தகாலத்தைப்பற்றியதுமாகும்; இதற்கும் பூரண விளக்கம் கொடுக்கப்படாமல்; ஒரு சொல் மட்டுமே கொடுக்கப்படுகிறது.

3. **விசுவாசம்** (பிரத்தியேகமான விசுவாசம்): இது மற்ற ஆவிக்குரிய வரங்களோடு ஒன்றன்பின் ஒன்றாக இணைந்து செயற்படுகிறது. கர்த்தருக்கு என்று எதனைச் செய்வதற்கும் விசுவாசம் தேவையாயிருக்கிறது. அநேகமான வரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இணைந்திருக்கிறது; இதன் பொருள், ஒருவன் ஒரு வரத்தை உடையவனாயிருந்தால், அவன் மற்ற வரத்தையும் உடையவனாயிருக்கிறான்.

4. **குணமாக்கும் வரங்கள்**: எந்த விசுவாசியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நோயாளிக்கு ஜெபம்பண்ணமுடியும் **(மாற். 16:17-18)**; ஆயினும், சிலருக்குப் பிரத்தியேகமாக இந்த வரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநேகமான குணமாக்குதல்கள் ஆவியின் வல்லமையினால் அவர்களால் வெளிப்படையாக நடத்தப்படுகிறது.

5. **அற்புதங்களைச்செய்யும் சக்தி:** இந்த வரத்தை உடையவர்கள் இயற்கையான பிரமாணங்களை ஏதோ ஒரு வழியில் தடைசெய்து குறிப்பிட்ட அற்புதத்தை நடத்துவதற்கும் பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.

6. **தீர்க்கதரிசனம் உரைத்தல்:** இது முன்னறிவிக்கிறதல்ல; முன் குறித்ததை அறிவிக்கிறதாகும். **"இது அதிகமாக"** பக்தி

விருத்தியையும், புத்தியையும், ஆறுதலையும் (**1கொரி. 12:31**) உண்டாக்குகிறது.

7. **ஆவிகளைப் பகுத்தறிதல்:** இது ஆவிகளைப் பகுத்தறியும் வரம். அந்த ஆவிகள் அசுத்த ஆவிகளாயிருக்கலாம், தேவ தூதர்களாயிருக்கலாம், மனுஷ ஆவிகளாயிருக்கலாம், பரிசுத்த ஆவியாகவும் இருக்கலாம். அத்தகைய வரத்தை உடையவன் என்ன ஆவி ஒருவனில் செயற்படுகிறது என்பதனையும், அதனுடைய நோக்கத்தையும் உடனடியாக அறிந்துகொள்ளுவான். அடிக்கடி இந்த வரம் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறபடியினால், ஞானத்தைப்பற்றிய அந்தச் சொல்லின் வரத்தோடு அல்லது குணமாக்கும் வரத்தோடு இணைந்து செயற்படுகிறது.

8. **பற்பல பாஷைகளைப்பேசுதல்:** இந்த வரம் தொழுகையின்பொழுது உபயோகிக்கப்படும் ஜெபபாஷையைப்பற்றியதல்ல அதற்குப் பதிலாகப் பொதுஜனக்கூட்டத்தின்போது கொடுக்கப்படும் பாஷையாகும். இது வியாக்கியானஞ் செய்யப்படவேண்டும்; ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசியின் தொழுகையின்போதும், ஜெபத்தின்போதும் பேசும் பாஷையும், பற்பல பாஷைகளைப் பேசும் வரமும் ஒன்றல்ல; ஜெபபாஷைக்கு வியாக்கியானம் தேவையில்லை.

9. **வியாக்கியானம்பண்ணுதல்:** பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தையுடையவன் வியாக்கியானம்பண்ணும் வரத்தையும் உடையவனாயிருப்பான். சிலவேளைகளில் ஒருவன் பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தை நடைமுறைப்படுத்துவான்; இன்னொருவன் வியாக்கியானம்பண்ணுவான்.

ஒவ்வொரு கிறிஸ்தவ சபைகளிலும் யாராவது ஒரு விசுவாசி இந்த வரங்களை உடையவனாயிருப்பான்; அந்த வரங்கள் ஒழுங்கு முறையாக செயற்படுவதற்கு உற்சாகப்படுத்தப்பட வேண்டும் (**1கொரி. 14:39-40**).

அக்டோபர்

21

உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷை களைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத் திரிக்கிறேன் (1கொரி. 14:18).

"அந்நியபாஷை பேசுவதனால் நன்மை எதுவுமுண்டா?"

அந்நியபாஷை பேசுவதைப்பற்றிப் பல்வேறுவிதமான முரண் பாடான கருத்துக்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவலாக இருக் கிறது. அந்நியபாஷை பேசுவதனால் யாருக்கு என்ன பிரயோ ஜனம் என்ற கேள்வி, முரண்பாடான கருத்துக்களின் மத்தியில் முதன்மை பெறுகிறது. அந்தக் கேள்விக்கு வேதத்துக்கு இசை வான பதில்கள், ஒரு வேளை அந்த முதன்மையான கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

(1) அந்நியபாஷை பேசுதல் விசுவாசியின் ஒரு அனுபவமா யிருக்கும் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லியிருக்கிறார். அந்நியபாஷை நடைமுறைக்கு வருவதற்கு 750 வருஷங்களுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசி இதுபற்றிச் சொல்லியிருந்தான் **(ஏசா. 28:11)**.

(2) பவுல் அப்போஸ்தலர் **1கொரிந்தியர்** 14:22ல் **"அப்படியி ருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயி ராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்க தரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசு வாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது"** எனக் கூறியிருந்தார்;

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வரப்போகிறார்; இனியும் காலந் தாழ்த்தாதே என்பதே அந்த அடையாளமாகும்.

(3) அந்நியபாஷையைப் பேசும்பொழுது நாம் **தேவனோடு பேசுகிறோம்** (**Iகொரி. 14:2**) எனச் சொல்லப்பட்டிருக்கிறது; பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில் தேவனோடு பேசுவது எது வாயிருந்தாலும் அது நன்மையையே நமக்குத் தரும்.

(4) பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 14:2ல் **"ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங் களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியா திருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவ னிடத்தில் பேசுகிறான்"**; இது உறவின் இரகசியமல்லவா?

(5) அந்நியபாஷையில் பேசும்பொழுது இரகசியங்களையும், தேவனுடைய மகத்துவங்களையும் பேசுகிறோம் (**அப். 2:11-13**).

(6) அந்நியபாஷையில் பேசுவதனால் விசுவாசிக்குப் பக்தி விருத்தி ஏற்படுகிறது (**Iகொரி. 14:4**).

(7) பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 14:13ல் அந்நிய பாஷையும் அதன் வியாக்கியானமும் கர்த்தரிடத்திலிருந்து அவருடைய செய்தியைக் கொண்டுவருகிறது எனச் சொல்லி யிருக்கிறார்; கர்த்தரிடத்திலிருந்து வருவது எதுவாயிருந்தாலும் பெரும் ஆசீர்வாதத்தைத் தருகிறது.

(8) **யூதா** 20ல் **"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி"** எனச் சொல்லி யிருக்கிறார்; அந்நியபாஷை விசுவாசியை அந்த விசுவாசத்தில் பலப்படுத்துகிறது என்பது தெளிவாகிறது.

(9) விசுவாசிகள் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் செய் யப்பட்டு, அதற்கு அடையாளமாக அந்நியபாஷையைப் பேசுவார் கள் என்பது தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; அந்நிய பாஷை ஆறுதலையும் இளைப்பாறுதலையும் கொடுக்கிறது (**ஏசா. 28:11-12**).

(10) அந்நியபாஷை பேசும்பொழுது நாம் தேவனைப் புகழ் கிறோம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது (**அப்.** 10:45).

(12) பெந்தெகொஸ்தே நாளன்று அந்நியபாஷையைப் பேசு தல் (**அப்.** 2:4); பரிசுத்த ஆவியானவரிடமிருந்து ஆரம்பமானது; பரிசுத்த ஆவியானவரினால் ஆரம்பிக்கப்பட்டது எதுவோ அது நன்மையையே நமக்குத் தருகிறது.

(13) அந்நியபாஷை பேசுதல் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்று கிறது (**அப்.** 2:16-17);

(14) ஆவியில் ஜெபம்பண்ணுவது உயர்ந்த ஜெபமும், தொழு கையுமாகும் (I**கொரி.** 14:14; **யோவா.** 4:24)

அக்டோபர்

22

பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (1கொரி. 15:26).

"பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்"

மரணம் பாவத்தின் பிரதிபலன்; இதுபற்றி **ரோமர்** 6:23ல் **"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சிலுவை சகல பாவத்திற்கும் தீர்வாக அமைகிறது. உயிர்த்தெழுதலின்போது சகல பரிசுத்தவான்களுக்கும் மகிமையான சரீரம் கொடுக்கப்படுகிறது; மகிமையான சரீரத்தைப் பெற்றுக் கொண்டவன் இனிமேல் ஒருபொழுதும் பாவத்தைச் செய்ய முடியாது.

ஆயிரவருஷகால ஆட்சியின்பொழுதும் பாவம் உலகத்திலிருக்கும். சாத்தானையும், விழுந்துபோன தேவதூதர்களையும், அசுத்த ஆவிகளையும், இவைகளைப் பின்தொடர்பவர்களையும் சதாகாலத்திற்கும் அக்கினிக்கடலில் தள்ளியபின்பு (**வெளி. அதி**:20) பாவம் வேரோடு அறுத்து எறியப்பட்டதனால், மரணம் இனிமேல் இருக்கப்போவதில்லை; அது அகற்றப்பட்டது.

இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **1கொரிந்தியர்** 15:55ல் **"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?"** எனக் கூறியிருக்கிறார்; அதெப்படியெனில், வரப்போகிற வெற்றியை முன்கூட்டியே அடையாளங் கண்டுகொண்ட பவுல்

அப்போஸ்தலர் பாவம் சதாகாலத்திற்குமாக சிலுவையில் பாவ நிவிர்த்தி செய்யப்பட்டிருக்கிறபடியினால், மரணத்தின் கூர் முற்றுமுழுவதுமாக அகற்றப்பட்டிருக்கிறது எனச் சொல்லப்பட்டிருக்கிறது; அதுமட்டுமல்ல, மரணம் வெற்றி கொள்ளப்பட்டபடியினால், **"பாதாளம்"** இனிமேல் இல்லை; இவை எல்லாம் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதன் நிமித்தமே என்பதனை **(கொலோ. 2:14-15)** நாம் சதாகாலத்திலும் அறிந்திருக்கவேண்டும்.

அக்டோபர்

23

மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1கொரி. 15:33).

"மோசம்போகாதிருங்கள்"

இரட்சிக்கப்படாத, மறுபிறப்புப்பெறாத மனிதர்களோடு ஏற்ப டுத்தும் தொடர்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் எனப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் எச்சரித்திருக்கிறார். இந்த உறவின் பிரதிபலன் இரட்சிக்கப்படாத அந்த மனுஷன் கிறிஸ்தவனைத் தன்னுடைய வழிக்கு இழுத்துச்செல்வது சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது; ஆனால், அந்தக் கிறிஸ்தவன் இரட்சிக்கப்படாத அந்தக் கூட்டாளியைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வது முடியாதகாரியமாயிருக்கிறது. அசுத்த ஆவி சம்பந் தப்பட்டு இருப்பதனாலேயே கிறிஸ்தவனால் அது முடியாமற் போகிறது; அதற்குப் பதிலாக அசுத்த ஆவிக்கு கிறிஸ்தவன் இரையாகிப் போகிறான்.

மிகப்பெரிய ஞானியாகிய சாலொமோன் இப்படியாகத் தன் னைச் கெடுத்துக்கொண்டான் என்பதனை **1இராஜாக்கள்.** 11:4ல் **"சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவ னாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை"** எனச்

சொல்லப்பட்டிருக்கிறது; கர்த்தர் இதனை முன்கூட்டியே எச்சரித் திருந்தார் (**இராஜா. 11:2**).

மேலும் இதுபற்றி **॥கொரிந்தியர் 6:14:18ல் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசு வாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத் துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக் குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவை களைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்தி களுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"** என எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது; அது மட்டுமல்ல, தான் எரிச்சலுள்ள தேவன் எனவும் எச்சரித்திருக் கிறார் (**யாத். 34:14-16**). தேவனுடைய எச்சரிக்கையைப் பொருட் படுத்தாத அநேகர் பாதாளத்தில் தற்பொழுது உழலுகிறார்கள்!!

அக்டோபர்

24

நாம் தரிசித்து *(பார்த்து)* ***நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்*** ***(2கொரி. 5:6).***

"தரிசித்து நடக்கலாமா?"

லோத்தினுடைய வாழ்க்கை வரலாறு தரிசித்து நடப்பதற்குப் பொருத்தமான உதாரணமாயிருக்கிறது. ஆபிரகாமோடு தன்னுடைய இணைப்பே தனக்குக் கிடைத்த சகல ஆசீர்வாதத்திற்கும் காரணம் என்பதனை லோத்தினால் விளங்கிக்கொள்ளமுடிய வில்லை. அவன் தன்னிலிருக்கிற சுயத்தின் பெலனே தான் பெறும் ஆசீர்வாதங்களுக்கு முக்கியகாரணமென நினைத்தான். தனக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தில் தேவனுக்குரிய பங்கை அவன் கொடுக்கவில்லை.

அவன் யோர்தானுக்கு அருகான சமபூமியைத் தெரிந்து கொண்டு, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான் (**ஆதி.** 13:11-12). ஆபிரகாமினுடைய கூடாரம் அவனுக்குக் கவர்ச்சியாக இருக்கவில்லை. தான் எங்கே போகவேண்டும் என்பதனை ஆபிரகாமிடம் கேட்டிருக்கலாம்; தனக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள் எல்லாம் ஆபிரகாமினால்த்தான் என்பதனை அவன் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும்; அப்படிச் செய்யாமல் சோதோமை நோக்கித் தன்னுடைய கூடாரத்தைப்போட்டான்; பின்பு சோதோமுக்குள் சென்றுவிட்டான், ஏனென்றால், கூடார மல்ல, சோதோமே அவனுக்குக் கவர்ச்சியாக இருந்தது; லோத்து

சோதோமுக்குள் நிரந்தரமாகக் குடியேறிவிட்டான். இப்படி யிருக்க, பெலிஸ்திய ராஜாவாகிய அபிமெலேக்கைச் சற்று விபர மாகப் பார்ப்போம். அவன் ஒரு புறஜாதியும், புற மதத்தை அனு சரிப்பவனுமாகும். ஆபிரகாமிடத்தில் தேவனுடைய ஆசீர்வாத முண்டு என்பதனை அவன் அறிந்து, நான் அவனோடு ஒரு உடன்படிக்கைசெய்து, அவனோடு இணைந்தால் நான் ஆசீர்வதிக் கப்படுவேன் என நினைத்து, உடன்படிக்கை செய்தான் (**ஆதி.** 21:22-27); துரதிஷ்டவசமாக அபிமெலேக்குக்கு விளங்கியது லோத் துக்கு விளங்கவில்லை.

வெகு சொற்பமான கிறிஸ்தவர்களே சோதோமுக்குள் நேரடி யாக நுழைகிறார்கள்; ஆனால், அநேகமானோர் முதலில் கூடா ரத்தைப் போடுகிறார்கள்; பின்பு கொஞ்சங்கொஞ்சமாக சோதோ முக்குள் நுழைகிறார்கள்; இதன் பிரதிபலன் லோத்து கொள்ளை யடிக்கப்பட்டான் (**யோவா.** 10:10), பின்பு ஆபிரகாமே அவனை மீட்டுக்கொண்டுவரவேண்டியதாயிற்று (**ஆதி.** 14:16); தவறான தீர்மானத்தினால் அவமானம் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தி லாகுதல் தன்னுடைய தவறான அணுகுமுறையை அவன் சிந் திக்கவில்லை; திரும்பவும் சோதோமுக்குள் சென்றான். இறுதி யில் சோதோம் அழிக்கப்பட்டது (**ஆதி.** 19:24-25). லோத்தின் மனைவி தப்பிப்போகச் சந்தர்ப்பம் கிடைத்தும், தன் பொருட் களையும், தன் வீட்டையும் திரும்பிப்பார்த்து உப்புத் தூண் ஆனாள் (**ஆதி.** 19:26). சோதோமின் நிலைமை மோசமாயி ருந்தும், 10 நீதிமான்களின் நிமித்தம் தான் சோதோமை அழிக்க மாட்டேன் என்று கர்த்தர் சொன்னார் (**ஆதி.** 18:32); லோத்தின் புத்திரிகள் தங்கள் தகப்பனாகிய லோத்தோடு உடலுறவு கொண் டார்கள் (**ஆதி.** 19:32-38); இதன் பிரதிபலன் மோவாபியரும், அம்மோனியரும் உருவானார்கள்; விசுவாசத்தில் நடவாமல் தரி சித்து நடந்ததன் பிரதிபலன் இதுவேயாகும்.

அக்டோபர்

25

ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (II கொரி. 5:10).

"கிறிஸ்துவின் நியாயாசனம்"

பவுல் அப்போஸ்தலர் விசுவாசிகளுக்கே இதுபற்றிப் பேசுகிறார். சகல விசுவாசிகளும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும்; அங்கே நம்முடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்; நம்முடைய பாவச்செயல்களுக்கல்ல, அது சதாகாலத்திற்குமாகச் சிலுவையில் அகற்றப்பட்டது (**யோவா.** 1:29). கிரியைகள் அழிவில்லாததாயிருந்தால், அது நல்லது எனப் பிரகடனப்படுத்தப்படும். உதாரணமாக, அவைகள் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் என்று எடுத்துக்கொள்ளப்படும்; அதே நேரம், கிரியைகள் அழிவுள்ளதாக, பெறுமதியற்றதாக இருந்தால், அவைகள் மரம், புல், வைக்கோல் என்று எடுத்துக்கொள்ளப்படும்.

பூமியில் வாழ்ந்த ஒவ்வொரு விசுவாசியின் கிரியைகளுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நியாயந்தீர்ப்பார்; அவருடைய நியாயத்தீர்ப்பு பரிபூரணமானது. நம்முடைய கிரியைகளை மட்டுமல்ல, அதனுடைய நோக்கங்களையும் நியாயந்தீர்ப்பார். ஒவ்வொரு விசுவாசிக்கும் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின்போது

வெகுமதி கொடுக்கப்படும் அல்லது வெகுமதி நிறுத்தி வைக்கப் படும்.

எல்லாவற்றையும்விட இரட்சகரின் நியாயத்தீர்ப்பு சுவிசே ஷத்தின் அஸ்திபாரத்திலேயே தங்கியிருக்கும். பவுல் அப் போஸ்தலர் அதற்குப் புத்தியுள்ள சிற்பாசாரியராகப் பரிசுத்த ஆவியினால் நியமிக்கப்பட்டார் (I**கொரி.** 3:10). அந்த அஸ்தி பாரம் கிறிஸ்துவின் சிலுவையாகும். அது உலகத்தோற்றத் திற்கு முன்னமே தேவனுடைய மனதில் தீர்மானிக்கப்பட்டது (I**பேது.** 1:18-20); ஆகையால் ஏதாவது சிலுவையின் அஸ்திபா ரத்தில் ஸ்தாபிக்கப்பட்டால், அது சிலுவைக்கு ஒத்ததாயிருக்க வேண்டும் இல்லையேல், அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இந்த அடிப்படையிலேயே அநேகமான தீர்ப்புக்கள் அமையும்; கிறிஸ்துவின் சிலுவையே விசுவாசத்தின் அளவுகோலாகும்.

அக்டோபர்

26

***இ**ப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (IIகொரி. 5:17).*

"புதுச்சிருஷ்டி"

அநேகமான போதகர்கள் விசுவாசியில் பாவசுபாவம் இல்லை யென நம்புகிறார்கள். பழையவைகள் ஒழிந்தனவாயின் நாம் ஒருபொழுதும் பாவம் செய்யமுடியாது என்றும், எல்லாம் புதிதா யினவாயின் நாம் பரிபூரணமாயிருக்கிறோமென்றும் பவுல் அப் போஸ்தலர் கூறுகிறாரோ? ஆம் பவுல் அப்போஸ்தலர் கூறியது சரியே; இதனை மேலும் **Iகொரிந்தியர்** 6:11 நிரூபிக்கிறது. விசு வாசி கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட் டிருந்தும் இன்னும் மகிமை அடையவில்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். உயிர்த்தெழுதலின்போதே நாம் மகிமைப்படுவோம் (**Iதெச.** 4:16-18); ஆகையால் அந்த உயிர்த் தெழுதல் வரும்வரையும் பாவம் நம்மைவிட்டு அகற்றப்படாது என்பதனை விசுவாசிகளாகிய நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்; ஆயினும், கடைசி எக்காளச் சத்தம் கேட்டவுடன் நாம் இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவோம்; அப்பொழுது பாவசுபாவம் நம்மைவிட்டு அகற்றப்படும் என்பதனைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 15:52-53ல் கூறியிருக்கிறார்.

அதெப்படியெனில், நம்முடைய சரீரம் அழிவுள்ளதாயிருப்ப தற்குக் காரணம் நம்மில் வாசமாயிருக்கும் பாவசுபாவமேயாகும்.

ஆனபடியால் நம்முடைய சரீரம் பாவசுபாவமில்லாத அழிவில் லாத சரீரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும்; இது உயிர்த்தெழு தலின்போதே சாத்தியமாகும். சாவுக்கேதுவான இது சாவாமை யைத் தரித்துக்கொள்ளும்போது மரணம் ஜெயமாக விழுங்கப் படுமெனப் பரிசுத்த ஆவியானவர் **1கொரிந்தியர்** 15:53-54ல் பவுல் அப்போஸ்தலர் மூலமாகக் கூறியிருக்கிறார்; ஆகையால், இரட் சிக்கப்பட்டாலும் அந்தப் பாவம் உயிர்த்தெழுதல்வரையும் விசு வாசியிலேயே வாசஞ்செய்யும்; சரீரத்தில் மரித்தவுடன் அல்லது உயிர்த்தெழுந்தபின் அந்தப் பாவம் விசுவாசியை விட்டு முற்று முழுவதுமாக அகற்றப்படும். அப்போஸ்தலராகிய யோவான் தன்னையும் சேர்த்து **"நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்....."** (**1யோவா.** 1:8) எனக் கூறியிருப்பதிலிருந்து விசுவாசிகளாகிய நம்மிடத்தில் அந்தப் பாவம் உண்டென்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வோ மாக. நம்மில் அநேகருக்குத் தேவன் வெளிப்படுத்தினதை நிரா கரிப்பது அல்லது தேவன் சொல்லாததை அதிகமாகப் பிரகடனப் படுத்துவது அன்றாட வேலையாயிருக்கிறது.

நாம் இரட்சிக்கப்பட்டோம், இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக் கிறோம் இரட்சிக்கப்படுவோம் என்பதே உண்மையாயிருக்கிறது. ஆதாமின் வீழ்ச்சியினால் மனுஷகுலம் இழந்துபோன சகலத் தையும் கிறிஸ்து சிலுவைக்குச் சென்று மீட்டுத் தந்திருக்கிறார். கிறிஸ்து நமக்குத் தேவையான சகலத்திற்கும் சிலுவையில் பரிகாரம் கண்டிருந்தும் (**கொலோ.** 2:14-15), அவர் சிலுவையில் நிறைவேற்றிய சகல பலாபலன்களும் உயிர்த்தெழுதல் வரைக் கும் நமக்குக் கிடையாது என்பது வெளிப்படையாயிருக்கிறது (**ரோம.** 8:23); ஆயினும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெயங் கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை இந்தப் பூமியில் வாழ் வதற்குத் தேவையான சகலத்தையும் தேவன் தந்திருக்கிறார் என்பதனை நாம் நிச்சயமாக அறிந்துகொள்வோமாக; இதுபற்றிப் பேதுரு அப்போஸ்தலர் **2பேதுரு** 1:3-4ல் கூறியிருக்கிறார்.

இப்படியிருக்க, இரட்சிக்கப்பட்டிருந்தும் பாவசுபாவம் நம்மில் உண்டு என்பதனையும், அதனைத் தேவன் ஏற்படுத்தின வழி யின்மூலம் கையாளாவிட்டால், கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பாவசுபாவம் மறுபடியும் ஆளும் என்பதனையும் நாம் அறிந்தி ருக்கவேண்டும். இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 6:12ல் கூறியிருக்கிறார். பாவம் நம்மில் இல்லாவிட்டால், அதெப்படி அந்தப் பாவம் நம்மை மறுபடியும் ஆளமுடியும்? அப்படியாயின் இரட்சிக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பாவம் நம்மில் உண்டு என்பத னையும் அந்தப் பாவம் நம்மை ஆளாதிருக்கவேண்டுமாயின் நாம் அந்தப் பாவத்துக்கு விசுவாசத்தின்மூலம் மரித்திருக்க வேண்டும் என்பதுமே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது (**ரோம.** 6:2, 11). விசுவாசத்தின்மூலம் அந்தப் பாவத்துக்கு நாம் மரிக்கவில்லையாயின் பாவம் நிச்சயமாக நம்மை ஆளும். நாம் இரட்சிக்கப்பட்டவுடன் சந்தேகத்திற்கிடமின்றிப் புதுச்சிருஷ்டியா யிருக்கிறோம்; புதுச்சிருஷ்டியாயிருப்பின் அந்தப் பாவத்தின் வல்லமை அகற்றப்பட்டிருக்கிறது (**ரோம.** 6:6). பாவசுபாவத் துக்குப் பதிலாகத் தெய்வீகசுபாவம் விசுவாசியில் நாட்டப்பட்டு, புதிதான வழி நமக்குக் காட்டப்படுகிறது. ஆயினும் பாவசுபாவம் நம்மில் உண்டு; ஆனால், அது அந்த விசுவாசத்தின்மூலம் செய லிழந்திருக்கிறது; இதுவே பவுல் அப்போஸ்தலரினுடைய உபதே சம் (**ரோம. அதி**:6). தேவன் ஏற்படுத்திய வழியை உறுதியாகப் பின்பற்றுவோமாயின் பாவசுபாவத்தைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதையும் விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் இறுதிவரை நிலைத்திருப்பதே தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது (**யோவா.** 15:4-6).

அக்டோபர்

27

***ஆ**னபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார் (II கொரி. 6:17-18).*

"பிரிந்திருத்தல்"

இங்கு ஆண்டவர் தெளிவாக விசுவாசிகள் உலகத்தைவிட்டு பிரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (**யாத்.** 12:43-48; **லேவி.** 20:24, 26; **வெளி.** 18:4). உலகத்திலிருக்கிற சகலத்தையும் நாம் பராமரிக்காமல்விட்டால், அது பழைய நிலைமைக்குத் திரும்புவது அதன் நியதியாயிருக்கிறது. அழகான ரோஜாப்பூக்களைப் பெறவேண்டுமாயின், அந்த ரோஜாச் செடி தனிமைப்படுத்தப்பட்டு, தரமான ரோஜாவோடு ஒட்டப்பட்டு, வளர்க்கப்படவேண்டும். அந்தச் செடியைத் தாமாகவே வளர அனுமதித்தால், அவை சீக்கிரத்தில் பழைய நிலைமைக்குத் திரும்பி விரும்பத்தகாத பூக்களைத் தரும்.

இரட்சிக்கப்பட்டவுடன் புதிதான ஜீவன் நம்மில் நாட்டப்பட்டிருக்கிறது; அப்படியே, புதிதான சூழ்நிலையில் இரட்சிக்கப்பட்ட அந்த ஜீவன் வளரவேண்டும். பழைய வாழ்க்கையிலிருந்து

அதற்குப் போஜனம் ஊட்டப்பட்டால், வெகுசீக்கிரமாக அது பட்டினியடைந்து, பயனற்றுப் பழைய நிலைமைக்குத் திரும்பிப் பழைய வாழ்க்கையைக் கைக்கொள்வது அதன் நியதியாயிருக்கிறது.

தேவன் நிபந்தனையில்லாமல் நம்மோடு தங்கியிருப்பதில்லை; பழைய ஏற்பாட்டை உற்றுப்பார்த்தால், இஸ்ரவேலியர்களைவிட்டுத் தேவன் விலகியதையும், அதற்குரிய காரணத்தையும் அறிவித்திருக்கிறார். அப்படியே புதிய ஏற்பாட்டிலும் அவர் விலகியிருக்கிறார் (**மத்.** 23:38-39). இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால்மட்டுமே தேவன் நம்மில் தங்கியிருக்கிறார். புதிய உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாயிருக்கிறதே (**எபி.** 13:20). நாம் அந்த விசுவாசத்தைவிட்டு விலகினால், பரிசுத்த ஆவியானவரும் நம்மைவிட்டு விலகுவார்; யூதாஸ்காரியோத்துக்கும் சவுல் ராஜாவுக்கும் நடந்ததை நாம் நினைவுகூருவோமாக.

அக்டோபர்

28

***ஆ**கிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே (IIகொரி. 11:3-4).*

"கிறிஸ்துவைப்பற்றிய உண்மை"

சிலுவையின் செய்தி விளங்கிக்கொள்வதற்கு மிகவும் இலகுவானது; உண்மையில் ஒரு சிறு குழந்தைப்பிள்ளைகூட விளங்கிக்கொள்ளமுடியும். அந்தச் செய்தி **"சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவாகும்"**. நம்முடைய விசுவாசம் எந்தக் காலத்திலும் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதில் நிலைத்திருக்கவேண்டும்; ஆனால், சாத்தானோ தன்னுடைய குப்பைகளைக் கொண்டுவந்து, சுவிசேஷத்தைத் தாறுமாறாக்குகிறான்; அதனையும் கிறிஸ்தவர்கள் மூலமாகவே செய்கிறான். அதென்னவென்றால், மதப்பற்றுள்ள மனிதர்கள் கவர்ச்சிகரமான திட்டங்களைக்கொண்டு வருகிறார்கள்; அது மாம்ச சிந்தையை

உடையவர்களுக்குப் போதுமானதாயிருக்கிறது. அது முற்றிலும் தவறே; அது ஏன் தவறு என்றால், அவர்களுடைய விசுவாச அமைப்பில் கிறிஸ்துவின் சிலுவை மையக் கருத்தாக இருக்க வில்லை.

பவுல் அப்போஸ்தலருடைய காலத்தில் சாத்தானுடைய யுக்தி வேறாக இருந்தது; அதெப்படியென்றால், எருசலேமிலுள்ள போதகர்களும், யூதேயாவிலுள்ள போதகர்களும் கிறிஸ்துவை மேசியா என்று உரிமை கோரினார்கள்; ஆனால், புறஜாதிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, மோசேயின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினால்மட்டுமே, அவர்கள் இரட்சிக்கப்பட முடியும் என்பதனில் உறுதியாயிருந்தார்கள் (**அப்.** 15:1). அவர்களுடைய சுவிசேஷத்தில் இரட்சிப்பு இல்லை; ஆனபடியினால் அவர்கள் பவுல் அப்போஸ்தலரினால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளைத் தாறுமாறாக்குவதில் கவனஞ்செலுத்தினார்கள். கலாத்திய, கொரிந்திய, எபேசிய, கொலோசெய சபைகளிலிருந்து மனந்திரும்பினவர்களைத் தங்களுடைய பாதைக்குத் திருப்புவதில் கவனஞ்செலுத்தினார்கள்; கிருபையிலிருந்து நியாயப்பிரமாணத்திற்குத் திசைதிருப்ப முயற்சித்தார்கள்.

பவுல் அப்போஸ்தலர் விசுவாசிகளை இந்தக் குளறுபடியிலிருந்து விடுவிப்பதற்கேதுவாக ஒருவன் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கிக்காவிட்டால், அவன் பிரசங்கிப்பது வேறொரு இயேசுவே எனக் கூறியிருந்தார் (**II கொரி.** 11:4). இது வேறொரு சுவிசேஷமாக இருக்கிறபடியினால், இங்கு பிரசன்னமாயிருப்பது வேறொரு ஆவியாகும்; அத்தகைய சுவிசேஷத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை; அது பெரும் இடைஞ்சலாகவும், தீங்கை உண்டு பண்ணுவதாகவும் இருக்கிறது. வேதனையோடு சொல்லவேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், ஏறத்தாழ முழுக் கிறிஸ்தவ உலகத்திலும் வேறொரு சுவிசேஷமே பிரசங்கிக்கப்படுகிறது; அத்தகைய சபைகளில் கிறிஸ்து

வின் சிலுவையைப் பிரசங்கிப்பார் இல்லை ஆனபடியினால், அங்கு கிறிஸ்துவின் பிரசன்னமும் இல்லை (**வெளி.** 3:20).

அதெப்படியெனில்,; சில வேளைகளில் சில சபைகளில் இரட்சிப்புக்குச் சிலுவை பிரசங்கிக்கப்படுவதுண்டு; சிலர் இரட்சிப்பின் கொள்கையாக **"இயேசு எனக்காக மரித்தார்"** எனப் பலமாகச் சொல்லுகிறார்கள்; ஆனால், ஏறத்தாழ சகல போதகர்களும் பரிசுத்தத்திற்குச் சிலுவையின் செய்தியைப் பிரசங்கிப்பதேயில்லை; இரட்சிக்கப்பட்டபின் தேவனுக்கு முன்பாக எப்படி வாழ்வது என்பதனைப்பற்றி அவர்கள் சொல்லுவது முற்றிலும் வேதவார்த்தைக்கு முரணாயிருக்கிறது; அதாவது, பரிசுத்தத்திற்குக் கிரியைகளைச் செய்யுமாறு உபதேசிக்கிறார்கள் (**கலா.** 3:2-4); அவர்கள் வேறொரு இயேசுவையே பிரசங்கிக்கிறார்கள் (**IIகொரி.** 11:4); இதனிமித்தமே **IIகொரிந்தியர்** 13:5ல் **"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்"** எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார்.

அக்டோபர்

29

***கி**றிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப் பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவா சத்தினாலே பிழைத்திருக்கிறேன் (கலா. 2:20).*

"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டு, அவரோடுகூடப் பிழைத்திருக்கிறேன்"

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டு, அவரோடு கூடப் பிழைத்திருக்கிறோம் என்பதே தேவனுடைய பிள்ளை களின் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். துரதிஷ்டவசமாக அநேக மான விசுவாசிகளுக்கு மாற்றத்தை ஏற்படுத்தும் இந்தச் சத்தி யம் ஒருகாலமும் உபதேசிக்கப்படவில்லை. பவுல் அப்போஸ் தலர் **ரோமர்** 6:3-11ல் இதுபற்றி விபரமாகச் சொல்லியிருக்கிறார்.

நாம் கிறிஸ்துவை விசுவாசித்தவுடன் ஆவிக்குரிய உலகத் தில் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவின் மரணத்துக் குள்ளும், அவருடைய அடக்கத்துக்குள்ளும், அவருடைய உயிர்த் தெழுதலுக்குள்ளும் இணைத்து விடுகிறார். பவுல் அப்போஸ் தலர் நம்முடைய பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட் டான் என்று எழுதியிருக்கிறார். இரட்சிக்கப்பட முன்பிருந்த

பழைய மனுஷனிலேயே பாவசுபாவம் ஆதிக்கம் செலுத்தியது; ஆனால், இப்பொழுது அவன் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டான்; அதற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம். இப் பொழுது நான் பழைய மனுஷன் அல்ல, புது மனுஷனாக மாற் றப்பட்டு, கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டியாக இருக்கிறேன் (**IIகொரி. 5:17**).

இன்னும் நாம் பரிபூரணமற்றவர்களாக இருக்கிறபடியினால், பழைய மனுஷன்போலப் பாவத்தைச் செய்யகூடிய சாத்தியக் கூறு நம்மிடத்தில் உண்டு; ஆனால், நாம் அறிந்திருக்கவேண்டி யது நம்முடைய பழைய மனுஷன் இனி ஒருபொழுதும் எழும் பாதபடிக்குக் கிறிஸ்துவைப்போல அவனும் சிலுவையில் அறை யப்பட்டான் என்பதனை உறுதியாக நாம் விசுவாசிக்கவேண்டும்; அதுமட்டுமல்ல, கிறிஸ்துவோடுகூட நாமும் உயிர்த்தெழுந்திருக் கிறோம். நாம் உலகத்திற்கும், மாம்சத்திற்கும், பிசாசுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும் மரித்திருக்கிறோம்; அதேநேரம் ஜீவ னுக்கும், வெற்றிக்கும், நீதிக்கும், சமாதானத்திற்கும், அன்புக்கும் உயிர்த்தெழுந்திருக்கிறோம்; இயேசுகிறிஸ்து நம் சார்பில் எல்லா வற்றையும் சிலுவையில் நிறைவேற்றினார்.

"அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர் களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" (ரோம. 6:11).

அக்டோபர்

30

***நி**யாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவ ரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய் யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே (கலா. 3:10).*

"நியாயப்பிரமாணத்தைச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்"

அநேகமான கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியை களைச் செய்வதனால் தாம் **ஆசீர்வதிக்கப்படுவதாக** நிஜமாகவே நம்புகிறார்கள்; ஆனால், வேதமோ, இவர்கள் **சபிக்கப்பட்டவர் களென** உறுதிப்படுத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் அறிவைப் பெற்றிருப்பதன்முலமே ஆபிரகாமினுடைய ஆசீவாதங்களைப் பெறமுடியுமெனக் கலாத்தியருக்கு யூதேயாவினர் வலியுறுத்தி யிருந்தனர்; ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதர் களை நோக்கி: **"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண் ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவை களும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை"** (**யோவா.** 5:39-40) எனக் கூறியிருந்தார்; இதுவே இஸ்ர

வேலியர்களின் பாவச்செயலாக இருந்தது. அவர்கள் தேவ நீதியை உதறித்தள்ளி, தம்முடைய நீதியை நிலைநிறுத்த முயற் சித்தனர்; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"சகோதரரே, இஸ்ர வேல் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்ப முமாயிருக்கிறது. தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக் கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சி சொல்லு கிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடி வாயிருக்கிறார்" (ரோம. 10:1-4)** எனக் கூறியிருந்தார்.

அப்படியாயின், ஒரு விசுவாசி ஒன்றில் கிருபையின் அடிப் படையில் அல்லது பிரமாணத்தின் அடிப்படையில்மட்டுமே செயற்படமுடியும்; சிலுவையின்மூலமே கிருபையைப் பெற்றுக் கொள்ளமுடியும். இப்படியிருக்க, ஒருவன் பிரமாணத்தில் நம்பிக்கை கொண்டிருப்பானாகில் அவன் சபிக்கப்பட்டவனாயிருக் கிறான் **(உபா. 27:26; கலா. 3:10)** என வேதம் வலியுறுத்துகிறது; அதெப்படியெனில், ஒரு மனுஷனுமே தேவனுடைய நியாயப்பிர மாணத்தை அல்லது நீதிக்குரிய பிரமாணங்களைச் செய்யமுடி யாமல் இருக்கிறபடியினால் **(யோவா. 7:19)**, அவன் கிறிஸ்துவின் சிலுவைமூலம் இரட்சிப்பைப் பெறமுயற்சிப்பதைத் தவிர வேறெந்த வழியும் அவனுக்கு இல்லை; அப்படியாயின் நியாயப் பிரமாணத்தின் பங்கு என்ன? என்பதனைப் பார்க்கும்பொழுது, நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிர மாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தி யாயிருக்கிறது என்பது புலனாகிறது; அதுமட்டுமல்ல, விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே **(கலா. 3:24-25)** என்பதும் தெளிவாகிறது.

ஆனால், யூதர்களோ நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வதன்மூலம் இரட்சிப்பைப் பெறமுயற்சித்தார்கள். நியாயப் பிரமாணத்தைத் தேவன் கொடுத்த நோக்கம் என்னவெனில், மனுஷன் தன்னுடைய இயலாமையை உணர்ந்து **(யாக். 2:10-11)**, கிறிஸ்துவின் கிருபையை நாடுவதற்கேயன்றி, நியாயப்பிரமாணத்தின்மூலம் இரட்சிப்பைப் பெறுவதற்கல்ல; ஆகையால், ஒருவன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச்செய்து அதன் மூலம் இரட்சிப்பைப் பெறமுயற்சிப்பானாகில் அவன் தேவன் ஏற்படுத்திய வழிக்கு எதிராகக் கலகம் செய்வதனால், அவன் உடனடியாகவே தேவனால் சபிக்கப்படுகிறான்; அப்படியாயின் முழு உலகமும் தேவனால் சபிக்கப்பட்டிருக்கிறது!!

அக்டோபர்

31

***அ**ப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்க மென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமள வும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்ட ளையிடப்பட்டது (கலா. 3:19).*

"நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன?"

எதற்காக நியாயப்பிரமாணம் தேவனால் கொடுக்கப்பட்டது? நியாயப்பிரமாணம் சாதித்தது என்ன? நியாயப்பிரமாணத்தினால் மனுஷன் இரட்சிக்கப்படவில்லையே. நியாயப்பிரமாணத்தைச் செய்வதனால் அவனுடைய நிலைமையில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லையே. நியாயப்பிரமாணம் அவனைத் தண்டிக் கின்றதேயன்றி அதனைச் செய்வதற்கு அவனுக்குத் தேவனு டைய வல்லமையையோ அல்லது ஆவிக்குரிய பலத்தையோ கொடுக்கவுமில்லை; அப்படியாயின், ஏன் தேவன் அதைக் கொடுத்தாரென மனுஷன் அங்கலாய்பதுண்டு. முதற்கண் நாம் அறியவேண்டியது தேவன் நியாயப்பிரமாணத்தை மனுஷனுக்குக் கொடுக்கவில்லை.

மனுஷனோ தன்னுடைய இயலாமையை ஏற்கமறுத்துத் தேவனுடைய கட்டளைகளைத் தாம் செய்யமுடியுமெனத் தெரி வித்ததின் நிமித்தமே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது **(யாத்.** 19:7-8); அப்படியாயின், மீறுதல்களின் நிமித்தமே நியா யப்பிரமாணம் கொடுக்கப்பட்டது; பாவம் என்றால் என்ன

என்பதனை வெளிப்படுத்தவே நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்டது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே உல கத்தில் பாவமிருந்தது; ஆனால், மீறுதல்கள் இல்லை; ஏனெனில் மீறுவதை அடையாளங்காண்பதற்குப் பிரமாணங்கள் முன்பு கொடுக்கப்படவில்லை.

ஆகவே, பிரமாணங்களை மீறுவது பாவம் என்பதனை அறி விப்பதே நியாயப்பிரமாணத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது; நியாயப் பிரமாணம் இல்லாவிட்டால் மீறுதலும் இல்லை (**ரோம.** 4:15). முன்பு நியாயப்பிரமாணங்கள் இல்லாதிருந்தபடியினால், நியாயப் பிரமாணத்திற்கு முந்தின ஜனங்கள் குற்றமற்றவர்களென நாம் கருதக்கூடாது. நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு, அதை மீறின வர்கள் பாவிகளெனத் தீர்ப்புக்கொடுக்கப்பட்டதுபோல நியாயப்பிர மாணத்திற்கு முன்பும் மீறினவர்கள் பாவிகளெனத் தீர்ப்பளிக்கப் பட்டு, அவர்களும் தம்முடைய ஆத்துமாவை இழந்துள்ளனர்; ஆயினும், மனுஷனுக்குப் பாவம் என்றால் என்ன என்பதனை யும், நீதியென்றால் என்ன என்பதனையும் வெளிப்படுத்துவதற்கு நியாயப்பிரமாணம் மிகமுக்கியமானதாகத் தேவன் கருதுகிறார்.

நவம்பர்

1

***அ**தைக்குறித்து வேதம் என்னசொல்லுகிறது: அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது (கலா. 4:30).*

"அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு"

அடிமையானவள் என்பது மாம்சத்தைப் பிரதிபலிக்கிறது; சொந்த முயற்சிகளை மாம்சம் என்று அழைக்கப்படுகிறது. ஆபிரகாமின் முயற்சி அடிமைப்பெண்ணோடு உறவில் முடிந்தது. வேதம் **அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு** என்றே சொல்கிறது. மாம்சம் கிரியைகளில் பிரியமாயிருக்கிறது; அதனாலேயே, நாம் அடிக்கடி நம்முடைய பழைய முயற்சிகளுக்குத் திரும்பிப்போவது வழமையாயிருக்கிறது; ஏனென்றால், மாம்சத்திற்கு அது பிரியமாயிருக்கிறதே. ஆனால், தேவனோ அதனைப் புறம்பே தள்ளு என்கிறார். ஆவிக்கேற்றபடி நடக்கவிருப்பமாயிருந்தால் (**கலா.** 5:16), சொந்த முயற்சிகளைத் தள்ளிப்போடவேண்டும்; நெருப்போடு விளையாடாதே.

ஆகையால், பொய்யான உபதேசங்களைப் புறம்பே தள்ளு; பேராசை சுவிசேஷத்தைப் (ஐசுவரிய சுவிசேஷத்தை) புறம்பே

தள்ளு; இவை மாம்சத்தினால் உருவாக்கப்பட்டவைகள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் போதகர் பிர சங்கியாவிட்டால், அந்தப் போதகரைப் புறம்பே தள்ளு; அந்த இடத்தில் இராதபடிக்கு ஓடு; ஏனென்றால், அந்த உபதேசம் மாம் சத்தினால் உருவாக்கப்பட்டது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத்தவிர, வேறொன்றைப் போதகர் பிரசங்கிப் பாராயின், அவர் வேறொரு இயேசுவையே பிரசங்கிக்கிறார் (**IIகொரி. 11:4**); ஏனென்றால், அந்த உபதேசம் மாம்சத்தினால் உரு வானது; நீ அதனைச் செய்யாவிட்டால் தேவனுடைய பிரமா ணத்தை மீறுகிறாய் (**ரோம. 8:2**); அதன் பிரதிபலன் வேதனையே (**கலா. 5:19-21**).

நவம்பர்

2

***இ**தோ, நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண் டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜன முமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (கலா. 5:2).*

"நியாயப்பிரமாணத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லை"

விருத்தசேனத்தைப்பற்றி இந்த வேதவாக்கியத்தில் வலியு றுத்தாமல், நியாயப்பிரமாணத்தைப்பற்றியே இங்கு சொல்லப்பட் டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தை ஒருவன் விசுவாசிப்பானா கில், அதனால் அவனுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை என்றே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. பெரும் ஆபத்து என்னவெனில், விருத்தசேதனம் செய்பவனைப்பற்றிக் **கலாத்தியர்** 5:3ல் **"மேலும், விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியா யப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியா யிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சி யாகச் சொல்லுகிறேன்"** எனப் பவுல் அப்போஸ்தலரினால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தின் நிமித்தமே அப் போஸ்தலர் பவுல் **Iகொரிந்தியர்** 1:17ல் **"ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவி சேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்"** எனச் சொல்லியிருக்கிறார்.

விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் முக்கிய மில்லை; தேவையானது அந்த விசுவாசமே (**கலா.** 5:6); இதுபற்றி மேலும், **கலாத்தியர்** 3:6ல் **"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. நூற்றுக்குநூறு வீதம் கிறிஸ்துவி லும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் அந்த விசுவாசம் தங்கியிருக்கவேண்டும். அப்பொழுது சட்டபூர்வமான அதிகாரம் பரிசுத்த ஆவிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் விசு வாசியில் வல்லமையாகச் செயற்பட்டு, பரிசுத்தத்தை நடப்பிப் பார்; இதனையே **"ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" (ரோம.** 8:2) வலியுறுத்துகிறது; பரிசுத்த ஆவியானவர் வேறெந்த வழி யினாலும் செயற்படுவதில்லை.

சர்ச் ஒப் கோட் (Church of God) என்ற கிறிஸ்தவ மார்க்கம் **"தண்ணீரில் ஞானஸ்நானத்திற்கே"** முக்கியத்துவம் கொடுக் கிறது; அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. பெந்தெ கொஸ்தே சபைகள் **"அந்நியபாஷைக்கு"** முக்கியத்துவம் கொடுக்கிறது; அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. பப்டிஸ் கிறிஸ்தவ சபைகள் **"நிபந்தனையற்ற நித்திய பாதுகாப்பு"** என்ற உபதேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது; அதனால் ஒரு பிர யோஜனமுமில்லை. **"நிபந்தனையற்ற நித்திய பாதுகாப்பு"** என் பதன் பொருள், ஒருவன் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால், சதா காலமும் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் எனப் பொருள்படுகிறது; இது வேதத்திற்கு விரோதமான கொள்கையாகும். மேற்கூறிய நிலைப்பாடுகள் கிருபையிலிருந்து விழுவதற்கே உதவும் என்ப தனை **கலாத்தியர்** 5:4ல் **"நியாயப்பிரமாணத்தினால் நீதிமான் களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்"** எனச் சொல்லப்பட்டி ருக்கிறது.

ஆகையால், நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்துவின் சிலு வையையும் ஒரே கூடையில் போடாதீர்கள் (**லூக்.** 5:36-39),

போட்டீர்களானால் ஆவிக்குரிய வேசித்தனத்தில் அந்த விசுவாசி ஈடுபடுகிறான் (**ரோம.** 7:1-4). ஒருவன் வேதவாக்கியத்தை அறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியின் வழிகாட்டல் மூலம் தேவனைப் பின்பற்றுவானாக. இதனை விசுவாசியா விட்டால், பெரும் பிரச்னையை விலைகொடுத்து வாங்கவேண்டி வரும். தேவனால் நியமிக்கப்பட்ட வழி ஒன்று உண்டு; அதனை மாற்றினால் அல்லது அதனோடு வேறொன்றை இணைத்தால், அல்லது அதிலிருந்து ஒன்றை விலக்கினால், பிரச்னைகளைக் குவிப்பதிலேயே முடியும் (**வெளி.** 22:18-19) என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

நவம்பர்

3

***நா**ங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம் (கலா. 5:5).*

"நீதிகிடைக்குமென்று நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்"

நாம் எப்படி ஆவிக்குரிய வளர்ச்சியடைகிறோம் என்பதனை அறிவதற்கு, விதையை விதைத்தவுடன் அதற்கு என்ன நடக்கிறது என்பதனை முதலில் அறிந்திருக்கவேண்டும். இதுபற்றி **யோவான்** 12:24ல் **"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்"** என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார். விதையை விதைத்தவுடன் அதற்கு என்ன நடக்கிறது என்பதனை நாம் அறியோம். ஒரு நாள் சடுதியாக அது மேலெழும்பி வருகிறது;

மேலும், இதுபற்றி **யோவான்** 3:8ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்"** எனக் கூறியிருக்கிறார். விதை எப்படி வளர்கிறது? என்று நமக்குத் தெரியாது.

அதன் வளர்ச்சிக்கு நாம்தான் காரணம் என்று பெருமை பாராட்ட வும் முடியாது. சிலர் 5 படி, 4 படி, 2 படி என்று கூறுகிறார்கள்; அது சரிப்பட்டுவராது; ஏனென்றால், அதெப்படி வளர்கிறது என்ப தனை ஒருவரும் அறியமாட்டார்கள்; நாம் அதற்குப் பெருமை பாராட்டாமல், கர்த்தர் மகிமைப்படுவாராக (**யோவா. 3:16**) என்று சொல்லுவோமாக; தேவையானது விசுவாசிக்கவேண்டியதே. இதுபற்றி ஆண்டவர் **மாற்கு 9:23-24**ல் **"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன் விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன் னான்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

சிலர் கடுமையாக விசுவாசிக்கவேண்டும் என்கிறார்கள். சீஷர்களும் அப்படியே ஆண்டவரிடம் கேட்டார்கள்; அதற்குக் கர்த்தர் **"கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டா யிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்" (லூக். 17:5-6)** என்றார். சிலர் பிசாசைச் சத்தம்போட்டுக் கலையுங்கள் என்கிறார்கள்; அந்த மாம்ச முயற்சிக்குப் பிசாசு போகாது; அதற்குப் பதிலாக **".....தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில் லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்"** என்று **யாக்கோபு 4:7**ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் ஆவிக் குரிய பொருள், அவருடைய வழியை அறிந்து, அதனைப் பின் பற்றுங்கள்; அந்த வழி சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து வாகும்; அதென்னவென்றால், இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப் படுத்தி, அதனில் நிலைத்திருங்கள் (**யோவா. 15:4-6**); அப்பொழுது பிசாசானவன் ஓடுவான் (**யாக். 4:7**).

நவம்பர்

4

***நீ**ங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப் படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண் டானதல்ல. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும் (கலா. 5:7-9).*

"ஓட்டப்பந்தயம்"

ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றும் வீரர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பாதை வழியாகவே ஓடி வெற்றிபெற வேண்டிய வர்களாயிருக்கிறார்கள். அந்த ஓட்டத்துக்குத் தேவையான சகல வசதிகளும், அறிவுரைகளும், உபகரணங்களும் தவறாமல் கொடுக்கப்படுகிறது. எவனாவது ஓடும் பாதையைத் தவறவிட்டு, இன்னொரு வீரனுடைய பாதைக்குள் ஓடுவானாகில், நடுவரின் தீர்ப்புப்படி அந்த வழியால் ஓடவேண்டியவனும் அந்த வழிக்குள் அத்துமீறினவனும் போட்டியில் தொடர்ந்து பங்குபற்றவிடாமல் விலக்கப்படுகிறார்கள்; அதேபோன்று நாமும் நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடன் நம்முடைய ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான சகலதும் திவ்விய வல்லமையினால் கொடுக்கப்படு கிறது (II**பேது.** 1:4); ஆனால் வழிதவறிய சிலர் நம்முடைய விசு வாசத்தைத் தடைசெய்ய முயற்சிப்பதுண்டு.

அப்படியே எருசலேம் நகரிலிருந்து வந்த யூதர்கள் கலாத்திய சபைக்குள் நுழைந்து, கலாத்தியரை நோக்கி: வாருங்கள் நாங்கள்

கிருபையையும் பிரமாணத்தையும் அனுசரிப்போம் என்றார்கள். நாம் விருத்தசேதனம் செய்வோம்; ஓய்வுநாளைக் கடைப்பிடிப் போம் என்றார்கள்; இவைகளைச் செய்தால்த்தான் நீங்கள் ஆபிர காமின் புத்திரர்களாவது மட்டுமல்ல, உண்மையான கிறிஸ்தவர் களுமாகக் கருதப்படுவீர்களெனக் கூறிக் கலாத்தியரின் விசுவா சத்தைப் புரட்டி, வேறு பாதைக்குத் திசைதிருப்பினார்கள். அவர் கள் வேறொரு சுவிசேஷத்தைக் கலாத்தியருக்கு உபதேசித்தார் கள்; அது வேறொரு சுவிசேஷமானபடியினால், அது வேறொரு இயேசுவைப்பற்றியதே; அது வேறொரு இயேசுவானபடியினால், அது வேறொரு ஆவியை உடையதாயிருக்கிறது (**கலா.** 1:6-7; **IIகொரி.** 11:4).

இந்தச் சுவிசேஷம் மனுஷரால் ஏற்படுத்தப்பட்டபடியினால் அதற்குள் புளிப்பு உண்டு. இந்த வேறொரு சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவுடன் அது வளரத்தொடங்கி, நம்மை ஆளத் தொடங்குகிறது. அதன் முடிவோ அந்த விசுவாசம் திசைதிருப் பப்பட்டு, இருதயம் கடினமாக்கப்படுகிறது. இந்த வஞ்சிக்கப் பட்ட நிலைமையிலிருந்து பரிசுத்த ஆவியானவரால்மட்டுமே நமக்கு விடுதலை கொடுக்கமுடியும். அவர் நமக்குத் தம்மை வெளிப்படுத்தி, நம்மை இழுத்துக்கொள்ளும்வரையும் நாம் நம் முடைய பாவத்தையும், பலவீனத்தையும் அறியோம் (**யோவா.** 6:44). இதோ யூதேயாவினர் கலாத்தியரை இழுத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள்; தேவன்மட்டுமே நம்மை இழுத்துக்கொள்ளமுடி யும். அவர் அப்படி நம்மை இழுத்துக்கொள்வதற்கு நம்மிடம் எதிர்பார்ப்பது **அந்த விசுவாசமே** (**ரோம.** 8:1-2; **Iகொரி.** 2:2).

நவம்பர்
5

சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப்பற்றி வரும் இடறல் ஒழிந்திருக்குமே (கலா. 5:11).

"சிலுவையைப்பற்றி வரும் இடறல்"

சிலுவை மனுஷனுடைய சகல தீர்மானங்களையும், யுக்திகளையும், கற்பனைகளையும், திட்டங்களையும், அவனுடைய தீர்வுகளையும், மற்றும் அவனுடைய சகல மாம்சத்தின் செயற்பாடுகளையும் முற்றுமுழுவதுமாக அம்பலப்படுத்துவதுமட்டுமல்ல, அவற்றினால் ஒரு பிரயோசனமுமில்லை என்பதனை வெளிப்படுத்தும்போது, அதுவே மனுஷனுக்கு இடறலை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. இஸ்மவேல் மாம்சத்தின் கிரியையாயிருந்தும், அவனைக் கைவிடுவது ஆபிரகாமுக்கு அவ்வளவு சந்தோஷத்தை ஏற்படுத்தவில்லை (**ஆதி. 21:11-12**).

அப்படியே கிறிஸ்தவர்களும் தம்முடைய சிந்தனையில் கர்ப்பந்தரித்த மாம்சத்தின் கனிகளை அவ்வளவு இலகுவாகக் கைவிடமாட்டார்கள். ஆபிரகாம் தேவனுடைய சொற்படி கேட்டுத் தன்னுடைய மாம்சத்தின் கிரியையைக் கைவிட்டான் (**ஆதி. 21:14**); அநேகமான கிறிஸ்தவர்கள் தம்முடைய மாம்சத்தின் கிரியைகளுடன் ஒட்டிக்கொண்டிருந்து, பரிசுத்த ஆவியைப்

புறக்கணித்து அதன் பிரதிபலனாக வேதனைகளையும் துன்பங் களையும் தம்முடையதாக்கிக்கொள்கிறார்கள். கிறிஸ்துவின் சிலுவை அறவே மனுஷனை நிர்வாணியாக்கி, அவனுடைய முயற்சி பிரயோஜனமற்றது என்பதனை அவனுக்கு அம்பலப் படுத்துகிறது. கிறிஸ்துவைத்தவிர மற்ற எல்லாவற்றையும் சிலுவை வெளியேற்றுகிறது; அப்படியாயின், நம்முடைய யுக்தி களிலும், திட்டங்களிலுமுள்ள விசுவாசம் வெளியே தள்ளப்பட வேண்டும். மனுஷனிலிருக்கும் சகலதும் (மாம்சமும்) அவனை விட்டு அகற்றப்படவேண்டும்; இதனையே யோவான்ஸ்நானன் **மத்தேயு** 3:12ல் கூறியிருக்கிறான்.

இதனை மனுஷன் அவ்வளவாக விரும்பப்போவதில்லை; இதனிமித்தமே பவுல் அப்போஸ்தலர் தனக்குச் **சிலுவையின் செய்தியினால் ஏற்பட்ட இடறலைப்பற்றிக் கலாத்தியர்** 5:11லும் **iகொரிந்தியர்** 11:22-28லும் கூறியிருக்கிறார். ஆதி சபையிலிருந்த யூதக்கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைவிடமுடியாம லிருந்தனர். விருத்தசேதனத்தையும் ஒய்வு நாளையும் சேர்த்துக் கடைப்பிடித்தனர். அப்படியே கலாத்தியக் கிறிஸ்தவர்களும் யூதர்களால் ஏவப்பட்டு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் அக்கறை செலுத்தினர். பவுல் அப்போஸ்தலர் காரசாரமாகக் கலாத்தியக் கிறிஸ்தவர்களைக் **கலாத்தியர்** 5:2-4ல் எச்சரித்திருக் கிறார். ஆதி சபையினர் தாங்கள் நியாயப்பிரமாணத்தின் கிரி யைகளைச் செய்ததுமல்லாமல், புறஜாதிகளான கலாத்தியக் கிறிஸ்தவர்களைத் தூண்டித் தம்மைப் பின்பற்றுமாறு வேண்டிக் கொண்டனர்; ஆனால், பவுல் அப்போஸ்தலர் அதனை நிரா கரித்துச் சிலுவைக்கு முன்பாக எந்தவிதமான கிரியைகளும் செல்லுபடியாகாது என்பதனை வலியுறுத்தி, அவை யாவும் கை விடப்படவேண்டுமென வற்புறுத்தினார். கிறிஸ்துவின் சிலுவை அதனைச் செய்கிறது; ஆனபடியினால், சிலுவை மனுஷனுக்குப் பெரும் இடறலாயிருக்கிறது. பாவியான மனுஷனுக்கு மட்டு

மல்ல, இரட்சிப்பைப் பெற்றுப் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் சிலுவை பெரும் இடறலாயிருக்கிறது.

அநேகமான போதகர்கள் மனுஷனுடைய சகல பிரச்னை களுக்கும் சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்துவே தீர்வு என்பதனை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை (**Iகொரி. 1:23, 2:2**); ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் மனுஷருடைய சுவிசேஷத்தை (மனோதத்துவ சாஸ்திரத்தை) நாடுகிறார்கள். இந்த நாசகார முயற்சியினால் கிறிஸ்தவர்களும் கவரப்பட்டு, நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் செலுத்திய அவ ருடைய இரத்தத்தின் விலை மனுஷனுடைய சகல பாடுகளுக் கும் போதாது எனவும் அதனுடன் மனுஷருடைய யுக்திகளும் இணைக்கப்பட்டால்மட்டுமே தீர்வு பூரணப்படுகிறதெனவும் நிஜ மாகவே நம்பி வீணாய்ப்போகிறார்கள். தீர்க்கதரிசிகளாகிய ஓசி யாவும் ஏசாயாவும் **"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்....." (ஓசி. 4:6; ஏசா. 5:13-14)** எனக் கூறியி ருக்கிறார்கள். அறியாமை அன்று இஸ்ரவேலை கொள்ளை யாடியது, இன்று கிறிஸ்தவர்களைக் கொள்ளையாடுகிறது. அவர்களுடைய அறியாமை வேண்டுமென்கிற அறியாமையாகும் (Wilful Ignorance); அதெப்படியெனில், ஆண்டவர் அவர்கள் எதை அறியவேண்டுமென்று விரும்பினாரோ அதனை அறிய அவர் களுக்கு விருப்பமில்லை; அவர்கள் வேண்டுமென்றே அவரை நிராகரித்தார்கள்; அவர்கள் அதை அறியவில்லை, அறிய அவர் களுக்கு விருப்பமுமில்லை; இப்படியே ஏறத்தாழ சகல கிறிஸ்தவ சபைகளும் தற்போது இயங்குகிறது; அதுவே சிலுவை யைப்பற்றிய இடறல்!!

நவம்பர்

6

***மா**ம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே ..... (கலா. 5:19-21).*

"மாம்சத்தின் கிரியைகள்"

அவிசுவாசிகள் இயற்கையாகவே மாம்சத்தில் செயற்படுவதனால் மாம்சத்தின் கிரியைகள் தாறுமாறாக இவர்களில் வெளிப்படுகிறது; அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை; ஆனால் பவுல் அப்போஸ்தலர் கலாத்தியக் கிறிஸ்தவர்களுக்கே மாம்சத்தின் கிரியைகள்பற்றித் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறபடியினால், கிறிஸ்தவர்களும் மாம்சத்தின் கிரியைகளினால் வேதனைப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது. அநேகமான கிறிஸ்தவர்கள் மாம்சத்தின் கிரியைகள் எனப்படும்பொழுது, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம் என்பவைகளையே மாம்சத்தின் கிரியைகள் என அனுமானிக்கிறார்கள். பல கிறிஸ்தவர்கள் விக்கிரகாராதனையை மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாகக் கருதுவதில்லை; இதனிமித்தம் அவர்கள்

கழுத்துமுட்ட விக்கிரகாராதனையினால் நிரம்பியிருக்கிறார்கள் என்பதனை அவர்களே அறியாமலிருக்கிறார்கள்.

கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களெனத் தம்மைப் பறைசாற்று பவர்களுக்குத் தம்முடைய கிறிஸ்தவ மார்க்கம் தம்முடைய பாதிரியார் அல்லது சபைப் போதகர், தம்முடைய ஆலயம் அல்லது தம்முடைய சபை போன்றவைகள் அவர்களுக்கு விக் கிரகங்களாயிருக்கிறது என்பதனை அவர்கள் அறியாதிருக்கிறார் கள். அப்படியே பில்லிசூனியம் என்ற மாம்சத்தின் கிரியை எண் ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவர்களை ஆட்கொண்டிருக்கிறது; அதெப்படியெனில், கிறிஸ்துவின் சிலுவையில் முற்றுமுழுவதும் விசுவாசம் (**Iகொரி.** 2:2) இல்லாத எந்தச் சபையும் வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறபடியினால் அவர்கள் வேறொரு ஆவியைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள்; இதனிமித்தம் இவர் கள் பில்லிசூனியம் என்ற மாம்சத்தின் கிரியைக்கு வேறொரு ஆவியினால் ஏவப்பட்டுச் செயற்படுகின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு அப்பாற்சென்று, ஆவிக்குரிய உலகத் தைக் கையாளுவதனால் அசுத்த ஆவிகளோடும் சாத்தானோடும் தொடர்பு ஏற்படுத்தி, தம்மை நாசமாக்குகின்றனர்.

அடுத்ததாக, மார்க்கபேதங்கள் என்ற மாம்சத்தின் கிரியை யைப்பற்றி அநேக கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறபடியால், ஏரா ளமான கிறிஸ்தவர்கள் இந்த மாம்சத்தின் கிரியைக்குப் பலி யாக்கியிருக்கிறார்கள்; **கிறிஸ்துவின் சிலுவையில் அஸ்திபார மிடப்படாத வேறெந்த உபதேசமும் மார்க்கபேதம் எனப்படும்**. அவ்வாறான உபதேசத்திற்குப் பரிசுத்த ஆவியானவர் அனுமதி கொடுப்பதில்லை; பரிசுத்த ஆவியானவரிடமிருந்து அது பிறக்கவு மில்லை; அவ்வாறான உபதேசம் மாம்சத்தினால் உருவாக்கப் பட்டது. அசுத்த ஆவிகளினால் ஏவப்பட்டு, சாத்தானுடைய ஊழி யக்காரரால் சபைகளில் உபதேசிக்கப்படுகிறபடியினால், அவை மாம்சத்தில் செயற்படும் கிறிஸ்தவர்களுக்குக் கவர்ச்சிகரமாக

இருக்கிறது (**1தீமோ.** 4:1); நாசமும் மோசமும் இவ்வாறான உபதேசத்தைக் கேட்பவர்களைத் தப்பவிடுவதில்லை.

மாம்சத்தின் கிரியைகள் நிச்சயமாகத் தவிர்க்கப்படவேண்டும்; அதற்குத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழியென்னவெனில், கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் நமக்காகத் தன்னைப் பலியாக ஒப்புக் கொடுத்து சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்போமானால் பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு செயற்பட்டு, மாம்சத்தின் கிரியைகளிலிருந்து நாம் விடுபடவும், அதற்குள் அகப்படாமலுமிருக்கவும் நமக்கு உதவிசெய்வார் (**ரோம.** 8:1-2, 11, 13).

தேவனால் நியமிக்கப்பட்ட மேற்கூறிய வழியைத்தவிர வேறெந்த வழியும், தோல்வியையும் துன்பத்தையும் வேதனையையும் தருவதுமட்டுமல்லாமல் மாம்சத்தின் கிரியைகளுக்கு அவர்கள் அடிமைகளாகி தம்முடைய ஆத்துமாக்களை இழந்து போகக்கூடிய சாத்தியக்கூறும் நிச்சயமாய் உண்டு. இதுபற்றிக் **கலாத்தியர்** 5:21ல் "....**இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்**" எனப் பவுல் அப்போஸ்தலர் உறுதிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர்ந்த வேறெந்த வழியும் பிரயோஜனமற்ற வீணான வழிகள்; அவைகள் தேவனால் ஏற்படுத்தப்படாத வழிகள். தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரேவழி சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவாகும் (**1கொரி.** 2:2); அதுவே ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் வழியாகும்.

நவம்பர்

7

***ஆ**வியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலா. 5:22-23).*

"ஆவியின் கனி"

கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றித் தேவனுக்கேற்ற முறையில் அறியாவிட்டால், மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்வது முடியாதகாரியம்; அப்படியே, கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய அறிவு இல்லாவிட்டால், ஆவிக்குரிய கனியை விருத்திசெய்வது முடியாத காரியமாயிருக்கிறது.

இன்னும் சற்று நிதானமாகக் கவனித்துப்பார்த்தால், இங்கு ஆவியினுடைய கனியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதேதவிர நம்முடைய முயற்சிகளின் கனியைப்பற்றி அல்ல என்பது தெளிவாகிறது. பரிசுத்த ஆவியானவரே ஆவியின் கனியை விருத்தி செய்யமுடியும் என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவர் எப்படி அதனைச் செய்கிறார்? நாம் முதற்கண் அறிந்திருக்கவேண்டியது என்னவென்றால், நம்முடைய வாழ்க்கையில் கர்த்தரால் செய்யப்படும் யாவும் விசுவாசத்தின் அடிப்படையிலேயே செய்யப்படுகிறது; **கலாத்தியர்** 5:5-6ல் **"நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும்**

ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்" எனப் பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார். அப்படியாயின் மேற்கூறிய வேதவாக்கியத்தில் விசுவாசம் என்று சொல்லப்பட்டிருப்பதன் பொருள் என்ன என்பதனைச் சற்று விபரமாகப் பார்ப்போம்.

எந்தக் காலத்திலும் விதிவிலக்கின்றிப் பவுல் அப்போஸ்தலர் **"விசுவாசம்"** என்ற சொல்லை அல்லது **"கிறிஸ்துவில்" "கிறிஸ்துவுக்குள்"** என்ற சொற்களை அல்லது அதன் கிளைச் சொற்களைக் கூறும்பொழுது சிலுவையில் கிறிஸ்து நிறைவேற்றிய வேலையைப்பற்றியே சொல்லுகிறார்; ஆனபடியினால், நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும். அந்த விசுவாசத்தையே தேவன் கவனத்திற்கு எடுத்துக்கொள்வார் (I**கொரி.** 1:23, 2:2); அந்த விசுவாசமே உலகத்தை மேற்கொள்ளும் (I**யோவா.** 5:4) விசுவாசமாகும்.

நவம்பர்

8

***நா**னோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன் றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவ ரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக் கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டி ருக்கிறேன் (கலா. 6:14).*

"சிலுவையைக் குறித்தே மேன்மைபாராட்டுவோமாக"

தேவன் மனுஷனாக வந்ததைக் குறித்தோ, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்தோ, கிறிஸ்துவினால் நிறைவேற்றப் பட்ட அற்புதங்களைக் குறித்தோ, கிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமையைக் குறித்தோ அல்லது நாம் தேவனுடைய பிள்ளை களாயிருப்பதைக் குறித்தோ அல்லாமல், கிறிஸ்துவின் சிலுவை யைக் குறித்தே நாம் மேன்மைபாராட்டவேண்டும் என்று இந்த வேதவாக்கியம் வலியுறுத்துகிறது. கிறிஸ்துவின் சிலுவை ஒன்றே நாம் விடுதலையடைவதற்குத் தேவனால் நியமிக்கப் பட்ட வழியாகும்.

அநேகமான கிறிஸ்தவர்கள் கட்டுக்களிலும் பாவத்திலு மிருந்து விடுதலை பெறுவதற்குக் கிரியைகளில் ஈடுபட்டிருக் கிறார்கள்; அப்படியாக அவர்கள் உபதேசிக்கப்பட்டும் இருக்கிறார் கள். உதாரணமாக அநேகமான கிறிஸ்தவர்கள் ஜெபத்திலும்,

உபவாசத்திலும், வேதாகமத்தைப் படிப்பதிலும், சாட்சி கூறுவ திலும், தசமபாகத்தைச் செலுத்துவதிலும் அல்லது சபைக்குழுக் களில் அங்கத்தவர்களாக இருப்பதன்மூலமும், தம்முடைய மார்க்கங்களைப் பின்தொடர்வதிலும், ஜலத்தினால் ஞானஸ் நானத்தையும் இராப்போஜனம் மற்றும் சபைக்கட்டளைகளைப் பராமரிப்பதிலும் என இப்படியாக முடிவற்ற பல்வேறுவிதமான நற்கிரியைகளைச்செய்து, அவற்றை விசுவாசிக்கிறார்கள். மேற் கூறியவைகள் முக்கியமானவைகளாயிருந்தாலும் இவை ஒன் றும் கட்டுக்களிலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுதலைபெற உதவப்போவதில்லை. பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் மிகமுக்கியமான ஒரு சம்பவத்தை நாம் நினைவுகூருவது இந்த நேரத்தில் பொருத்தமானதே.

பஸ்கா ஆடு அடிக்கப்பட்டு (**யாத்.** 12:13), வரப்போகிற இரட்ச கரையும் (இயேசுவையும்) அவர் சிலுவையில் தன்னைப் பலி யாக ஒப்புக்கொடுத்து, தம்முடைய பாவத்திலிருந்து தமக்கு விடுதலை தருவாரென இஸ்ரவேலியர்கள் விசுவாசிக்கும்வரை யும் பார்வோன் அவர்களை விடுதலைசெய்யவில்லை. தேவன் மோசேயின் மூலமாகக் கற்பனைக்கு அப்பாற்பட்ட பெரும் அற் புதங்களைச் செய்தும், பார்வோன் இஸ்ரவேலியர்களைப் போவ தற்கு அனுமதிக்கவில்லை.

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தம்முடைய வீட்டுவாசலில் பூசி இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவையும் அவர் சிலுவையில் செய்துமுடிக்கப்போகிறதையும் விசுவாசிக்கும்வரை யும் இஸ்ரவேலியர்களுக்கு அவர்களுடைய அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை கிடைக்காததுபோல, இரட்சிக்கப்பட்டும் அடி மைத்தனத்திலிருக்கிற பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள், தம்முடைய அடிமைத்தனங்களிலும் கட்டுக்களிலும் பாவங்களி லிருந்தும் விடுதலைபெறச் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பதே (**யோவா.** 15:4-7) தேவனுடைய நியதியாக

இருக்கிறது. **"சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"** என்றே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 8:32ல் கூறியிருக்கிறார்.

சத்தியமானது இயேசுவையும், அவர் சிலுவையில் நிறை வேற்றியதையும் பிரதிபலிக்கிறது; இதினிமித்தமே பவுல் அப் போஸ்தலர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட் டாதிருப்பேனாக எனக் கூறியிருக்கிறார்.

நவம்பர்

9

காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத் தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்தி லிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக் குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர் மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரக சியத்தை எங்களுக்கு அறிவித்தார் (எபேசி. 1:9-10).

"சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்"

கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷம் மிகவும் எளிமையானது (II**கொரி.** 11:3); இந்தச் சுவிசேஷம் இயற்கைக்கு அப்பாற்பட்டது; எல்லாரும் இந்த எளிமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக் கிறது (**யோவா.** 3:16). கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய செய் தியை நாம் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் கேட்கிறோமே என்று விசனப்படுவோமாயின், நாம் இன்னும் சரியான முறை யில் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய உபதேசத்தைப் (I**கொரி.** 2:2) புரிந்துகொள்ளவில்லை என்பதே அதன் பொருளாகும். கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய செய்தியே வெளிப்படுத்தப் பட்ட இரகசியம்; இச்செய்தியையே தொடர்ச்சியாகப் போதகர்கள் சபையில் உபதேசிக்கவேண்டும். இச்செய்தியைப் பெறுவதற்குத் தேவன் நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறக்கும்போது, அதனை நாம் நிராகரித்தால், அதன் முடிவு ஆபத்தானது

என்பதுபற்றிக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விபரமாக **லூக்கா** 19:42-44ல் கூறியிருக்கிறார்.

அநேகமான யூதர்கள் கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் செய்துமுடிக்கப்போகிற மகா பெரிய இரட்சிப்பையும் வேண்டு மென்றே அறிய விருப்பமில்லாமல் இருந்ததுமட்டுமல்ல, அவ ரைக் கொலையும் செய்தார்கள்; இதனிமித்தமாக கிறிஸ்து சொன்னபடியே கி.பி. 70ம் ஆண்டில் ரோமர்களினால் யூதர்கள் ஏறத்தாழ முற்றுமுழுவதுமாகச் சின்னாபின்னமாக்கப்பட்டார்கள். அவ்வாறே இன்றும் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய செய் தியை மீறுவோர் தப்பாமல் சின்னாபின்னமாக்கப்படுகிறார்கள். அதேநேரம் சிலுவையைப்பற்றிய செய்தி நமக்கு வெளிப்படுத் தப்பட்டிருப்பின், தேவன் நம்மிடத்தில் அதிகமாக எதிர்பார்ப்பார் (**லூக்.** 12:48); ஆயினும், அநேகமான கிறிஸ்தவர்கள் மாம்சத்தில் பக்திவைராக்கியமாக இருக்கிறார்கள்; பலர் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாக இருக்கிறார்கள் (**IIதீமோ.** 3:5). இப்படியானோர் கிறிஸ்துவின் சிலுவையை முற்றுமுழுவதுமாக நிராகரித்துத் தம்முடைய கிரி யைகளை விசுவாசிக்கிறார்கள். பிரமாணங்களைத் தம்முடைய சொந்த பலத்தினால் செய்ய முயற்சிக்கிறார்கள்.

பசியும் தாகமுமாக இருப்பவனே சுவிசேஷத்தின் இரகசியத் தால் நிரப்பப்படுவான் (**மத்.** 5:6). மத நம்பிக்கையுள்ளவர்கள் இந்த இரகசியத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஏனெனில், அவர்கள் தம்முடைய சுயத்தை நம்பியிருக்கிறார்கள்; ஆனால், இரகசியத்தைப் பூரணமாக அறிந்தால், அதன்படி நாம் செய்கிற வர்களாகவும் இருக்கவேண்டுமென யாக்கோபு கூறியிருக்கிறார் (**யாக்.** 1:22); ஆயினும், எளிமையான இந்தக் கிறிஸ்துவின் சுவி சேஷம் பிரிவினையை ஏற்படுத்தும் (**கலா.** 5:11); உண்மையான ஆலயத்தையும் பொய்யான ஆலயத்தையும் இந்தச் சுவிசேஷம் இனங்கண்டுகொள்ளும். காயீனைப் பின்பற்றுகிறவர்களையும் ஆபேலைப் பின்பற்றுகிறவர்களையும் இந்த சுவிசேஷம்

அடையாளங்கண்டுகொள்ளும். பொய் எது உண்மை எது என்பது சுட்டிக்காட்டப்படும்; கிறிஸ்து சிலுவையில் நமக்காகச் நிறை வேற்றியதையும், நம்முடைய சுய ரூபத்தையும் இந்தச் சுவிசே ஷம் வெளிப்படுத்தும். கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றி உபதே சிக்கப்படும்போது அநேகர் இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்கிறார்கள் (**யோவா.** 6:60); அத்தோடு நில்லாமல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நட வாமல் பின்வாங்கிப்போனார்கள் (**யோவா.** 6:66). பிரியமான பேதுருவும் ஆண்டவரே, நீர் சொல்லுவதுசரி என்று கூறாமல் "**ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்**" என்றே கூறினான்.

நம்மிடத்தில் தேவனுக்கேற்ற விசுவாசமிருப்பின் (**Iகொரி.** 2:2) பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு நம்மில் செயற்பட்டுக் (**ரோம.** 8:2) கிரியைகளை நம்மில் உருவாக்குவார் (**எபேசி.** 2:10). அந்த இரகசியத்தை அறியும்வரையும் அந்தக் கிரியைகளைச் செய்யும் விருப்பம் நம்மிடத்தில் இல்லை (**எபேசி.** 1:10; **பிலி.** 2:13); கிறிஸ்துவின் சிலுவையே அதனைத் தீர்மானிக்கும். உலகம் செய்வதுபோன்று நாம் சுயபலத்தினால் கிறிஸ்துவின் சாயலில் வரமுயற்சிசெய்தால் தவிர்க்கமுடியாமல் மாம்சத்திற்கு இரையாகவேண்டிவரும் (**கலா.** 5:18-20). தேவனுடைய வழியை விட்டு நம்முடைய வழியை நாடவேண்டிவரும்; அதற்குப் பதி லாகக் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வதே புத்திசாலித்தனமானது (**எபேசி.** 4:20-24). கிறிஸ்துவோடு சரீரரீதியாக விசுவாசத்தின் மூலம் இணைந்தவர்கள் (கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற வர்கள் [**ரோம.** 6:3-5]) எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டார்கள் என்று **கலாத்தியர்** 3:27 உறுதிப்படுத்துகிறது.

நவம்பர்

10

***நா**ம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிற தற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய் கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவரா கிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூல மாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களி லும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபேசி. 3:20-21).*

"வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய் கிரியைசெய்கிறவர்"

தேவன் நம்முடைய தேவைகளுக்கு அதிகமாகக் கொடுப்ப வர் என்பதுபற்றி **எபேசியர்** 3:20ல் **"நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல் லவராகிய அவருக்கு"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனு டைய இருதயம் ஜனங்கள்மேல் எப்படியிருக்கும் என்று ஒருவன் ஆச்சரியப்படுவானாகில் அவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வின் பொதுஜன ஊழியத்தைச் சற்று அலசிப்பார்ப்பானாக.

ஒவ்வொரு முறையும் மனுஷனுடைய எதிர்பார்ப்புக்கு அதிக மாகவே கொடுக்கப்பட்டதை நாம் காணமுடியும். சாலொமோன் ஞானத்தைக் கேட்டான்; ஆனால் கர்த்தரோ அவன் கேட்டதையும் கொடுத்து, அவனுக்கு ஐசுவரியத்தையும் மகிமையையும் சேர்த் துக்கொடுத்தார் (**1இராஜா. 3:10-14**). ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தின்போது 5000 புருஷர்களுக்குப் போஜனம் கொடுத்தார்; ஏறத்தாழ ஸ்திரீகளையும் குழந்தைகளையும் கணக்கிடும்பொழுது 15,000க்கு மேற்பட்டோருக்கே போஜனம் கொடுத்தார்; 5 அப்பங்களையும் 2 மீன்களையும் உபயோகித்தே 15,000க்கு மேற்பட்டோருக்கு போஜனம் கொடுத்தார்; எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; **"மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்"** என **மத்தேயு 14:20**ல் காண்கிறோம். அந்தப் பன்னிரண்டு கூடையில் நிரம்பியிருந்த மிகுதித் துணிக்கைகளும், மீன்களும் சீஷர்களின் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றே நான் கருதுகிறேன்; அவர்களுடைய தேவைக்கு அதிகமாகவே கொடுக்கப்பட்டது.

ஆம், பிரியமானவர்களே, இன்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்படிச் செய்ய வல்லவராயிருக்கிறார். இது அவருடைய இருதயத்திலுள்ள அன்பைத் தெரிவிக்கிறது. சிலுவையில் அவர் நிறைவேற்றியதன் நிமித்தம் நாம் கேட்பதற்கு அதிகமாக நம்முடைய தேவைகளைச் சந்திக்க அவர் வல்லவராயிருக்கிறார்; ஆனபடியினால், இயேசுவையே நோக்கிப் பார்ப்போமாக; கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசித்து, சகல தேவைகளையும் அவரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்வோமாக **(மாற். 11:24)**.

நவம்பர்

11

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் (எபேசி. 4:3).

"ஒற்றுமை"

"ஒற்றுமை" என்பது என்ன? எல்லாவிதமான விசுவாசங் களும் ஒன்றுகூடுவது அல்லது பொய்யான உபதேசங்களிலுள்ள தவறுகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, ஒரு வார்த்தை யையும் அதற்கு எதிராகச் சொல்லாமலிருப்பது ஒற்றுமையைக் காப்பதாகக் கருதமுடியமா? அது **"ஒற்றுமை"** அல்ல, அது அமைதிகாக்கும் **"கூட்டுச்சதி"** என்று சொல்வதே பொருத் மாயி ருக்கிறது.

உண்மையான ஒற்றுமை விசுவாசத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படவேண்டும்; ஒரேவிதமான விசுவாசத்தின் அடிப் படையில் காணப்படும் ஒற்றுமையே, விசுவாச ஒற்றுமை எனப்படும் (**Iகொரி. 1:10**); ஆனபடியினால், யாராவது வித்தியாச மான விசுவாசத்தின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணுப வனாயிருந்தால், அவன் பிரிவினையை உண்டாக்குகிறான்; அது கர்த்தாதி கர்த்தருடைய பிரமாணத்திற்கு எதிராகச் செய்யப்படு கிறது; இதுபற்றி **ரோமர் 16:17**ல் **"அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினை களையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களைவிட்டு விலகவேண்டு**

மென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" எனப் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பவுல் அப்போஸ்தலர் சொல்லியிருக் கிறார்.

அப்படியாயின், ஒற்றுமை என்றால் என்ன? இதுபற்றி **ிகொரிந்தியர் 1:10ல் "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரி யத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்"** எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனை எப்படி நிறைவேற்றமுடியும்? கிறிஸ்தவ வாழ்க்கை யில் ஒற்றுமையை நிறைவேற்றுவதற்கு நம்முடைய **ஒரு மித்த நோக்கு**: **இயேசுகிறிஸ்துவிலும் (யோவா. 14:6)**, நம்முடைய **விசுவாசத்தின் குறிக்கோள்**: **கிறிஸ்துவின் சிலுவையிலும் (லூக். 9:23)** நிலைத்திருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியான வருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறபடி யினால், அவர் வல்லமையாகச் செயற்பட்டு, நமக்குத் தேவை யானதைத் தந்தருளுவார் **(ரோம. 8:2)**. நம்முடைய சுயபலத்தி னால் அதனைச் செய்யமுயற்சித்தால், அதற்குப் பெயர் மாம்ச மாகும்; அப்பொழுது ஒற்றுமையல்ல, பிரிவினையே கொண்டு வரப்படும்.

நவம்பர்

12

***உ**ங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபேசி. 4:4-6).*

"கிறிஸ்தவர்களுடைய நாளாந்த நடை"

அப்போஸ்தலர் பவுல் எபேசியர் நிருபத்தை எழுதும்பொழுது ரோமச் சிறைச்சாலையிலிருந்தார். தான் சிறையாக்கப்பட்டது, கர்த்தருடைய சித்தம் என்பதனை அறிந்து, அதனில் அவர் மேன்மைபாராட்டுகிறார் (**எபேசி.** 3:1). விசுவாசிகளாகிய நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளவேண்டும் என அவர் நம்மைக் கெஞ்சிக்கேட்டுக்கொள்கிறார்; அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றமாட்டோம் என்று **கலாத்தியர்** 5:16ல் சொல்லப்பட்டிருக்கிறது; அதனைச் செய்வதற்கு நமக்குத் தேவையான பெலனும், உதவியும் கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது என்ற விளக்கம் நமக்கு இருக்கவேண்டும்; அப்படியாயின், **கிறிஸ்துவின் சிலுவையே** எந்தக் காலத்திலும் நம்முடைய **விசுவாசத்தின் குறிக்கோளாக** இருக்கவேண்டும்.

ஆவிக்கேற்றபடி நடப்பதற்கு மிகுந்த மனத்தாழ்மை, சாந்தம், நீடியபொறுமை உடையவர்களாயிருந்து, அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கவேண்டும் என்று **எபேசியர்** 4:2ல் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர்மூலம் சொல்லியிருக்கிறார். இவை யாவும் ஆவியின் வேலையேயன்றி, நம்முடைய சுயபலத்தினால் இவற்றை நாளாந்தக் கிறிஸ்தவ வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தமுடியாது. பரிசுத்த ஆவியின் உதவி, நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும்பொழுதே சாத்தியமாகும் (**1கொரி. 1:17-18, 23, 2:2**). ஆவிக்கேற்ற நடையை உறுதிப்படுத்துவதற்கு ஆவியின் ஒருமைப்பாட்டை நாம் பேணிக்கொள்ளவேண்டும். அந்த ஒருமைப்பாடு, விசுவாசத்தின் அடிப்படையிலேயே இருக்கவேண்டும்; அந்த விசுவாசம் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவேயாகும்; சமாதானக்கட்டு அந்த விசுவாசத்தினாலேயே சாத்தியமாகும். கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர்ந்த வேறொரு விசுவாசம் சமாதானத்தை அழிக்கிறது; சுயநீதி தோன்றுவதற்கு இது காரணமாயிருக்கிறது.

இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாயிருப்பதற்கு நாம் அறிந்திருக்கவேண்டியது என்னவென்றால், விசுவாசிகளாகிய நாம் ஒரே சரீரமாயிருக்கிறோம் என்பதனையும், ஒரே ஆவி நமக்குண்டு என்பதனையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். அந்த ஆவி பரிசுத்த ஆவியேயாகும்; அவர் எந்தக் காலமும் கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே நம்மில் அசைவாடுகிறார் (**யோவா. 16:13-14**); இதன் பொருள், நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர்ந்த வேறெதனிலும் இருந்தால், அது பரிசுத்த ஆவியினுடையதல்ல; அது அசுத்த ஆவிகளுடையது; ஆனபடியினால், நம்முடைய முழு நம்பிக்கை கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கவேண்டும்; இதுவே நம்முடைய ஒரே நம்பிக்கையாகும் (**எபேசி. 4:4**).

நம்முடைய நாளாந்த நடை பெலப்படுவதற்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஒரே ஒரு ஆதாரம் என்பதனையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதே ஒரே ஒரு வழி என்பதனையும், நாம் எந்தக் காலத்திலும் அறிந்திருக்கவேண்டும்; அதுமட்டு மல்ல, விசுவாசிகளுடைய இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் ஞான ஸ்நானம் பெற்றதனாலேயே (**ரோம.** 6:3-5; **எபேசி.** 4:5) கிடைக் கிறது என்பதனையும், அது சிலுவையிலேயே நிறைவேற்றப் பட்டது என்பதனையும், இதற்கும் தண்ணீரில் ஞானஸ்நானத் திற்கும் ஒரு தொடர்புமில்லை என்பதனையும் நாம் அறிந்தி ருக்கவேண்டும்; மேலும், அசைக்கமுடியாத நம்பிக்கை நம்மு டைய நாளாந்த நடைக்கு அவசியமாயிருக்கிறது. நடை தளம் பாமல் இருப்பதற்கு, ஒரே தேவனும் பிதாவும் நமக்குண்டு என் பதனை அறிந்திருக்கவேண்டும். **எபேசியர்** 4:6ல் மீட்கப்பட்டவர் களைப்பற்றியே பேசப்படுகிறது; இரட்சிக்கப்படாதவர்களுக்குத் தேவன் பிதா அல்ல; அவர்கள் தேவனுடைய சிருஷ்டியாகும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இரட்சிக்கப்படாத வர்கள் பிசாசின் பிள்ளைகள் என்று **யோவான்** 8:44ல் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர் எல்லார்மேலும் ஆதிக்கம் செலுத்து கிறார்; அவருடைய சிருஷ்டிப்பின் திறமையினால் நம் எல்லா ருக்குள்ளும் இருக்கிறார்; இது சாத்தியமானது அவர் சிலு வையில் நிறைவேற்றியதினாலும், அதன் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தினாலுமேயாகும்.

நவம்பர்

13

***மே**லும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் (எபேசி. 4:11-13).*

"தேவனுடைய ஊழியக்காரர்"

இந்த அழைப்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மேற்கொள்ளப்படுகிறது. அவர் சிலரை "**அப்போஸ்தலராக**" அழைத்திருக்கிறார்; "**சிலர்**" என்பதன்மூலம் தேவனுடைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட சகலரும் அப்போஸ்தலராக அழைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அப்போஸ்தலருக்கு மட்டுமல்ல, சகல மற்ற ஊழியக்காரருக்கும் இது பொருந்தும். அப்போஸ்தலரே சபையின் மெய்யான தலைவராகக் கணிக்கப்படுகிறார்; சகல சபைகளுக்கும் ஒரு குறிக்கப்பட்ட செய்தி அப்போஸ்தலர் மூலமாகக் கொடுக்கப்படுகிறது; இதுபற்றிப் பவுல்

அப்போஸ்தலர் **"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்....."** (I**கொரி.** 1:23) எனச் சொல்லியிருப்பதிலிருந்து, அவருக்குக் கர்த்தரால் கொடுக்கப் பட்ட செய்தி சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பற்றியதேயாகும்; இந்தச் செய்தி தனக்கு வெளிப்படுத்தப்பட்டது எனக் **கலாத்தியர்** 1:11-12ல் கூறியிருக்கிறார்.

"தீர்க்கதரிசிகள்" இவர்களும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வின் தீர்க்கதரிசன ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டவர்கள்; இவர்கள் தீர்க்கதரிசன காரியாலயத்தில் நின்று, வரப்போகிற சம்பவங்களையும், முன்கூட்டியே சொல்லப்பட்டவைகளையும் எடுத்துக் கூறுவார்கள். **"சுவிசேஷகர்களாகிய"** இவர்களும் கர்த் தராகிய இயேசுகிறிஸ்துவினால் சுவிசேஷகர்களாக அழைக்கப் பட்டவர்கள்; இவர்கள் ஆத்தும அறுவடையைச் சேகரிக்கிறவர் கள். **"மேய்ப்பர்கள்"** இவர்களும் இயேசுகிறிஸ்துவினால் மேய்ப் பர்களாக அழைக்கப்பட்டவர்கள்; இவர்கள் தங்களுக்குக் கொடுக் கப்பட்ட மந்தையை மேய்ப்பவர்கள். அப்படியே **"போதகர்களுக் கும்"** தனிப்பட்ட ஊழியம் கர்த்தரால் கொடுக்கப்படுகிறது. இவர் கள் தேவனுடைய வார்த்தையைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குப் போதிப்பதற்குத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

ஆனால், அப்போஸ்தலர்கள் ஐந்து ஊழியத்திலும் செயற்பட வல்லவர்களாயிருக்கிறார்கள். துரதிஷ்டவசமாக சாத்தானும் பூமியில் தொடர்ந்து இதேவிதமாகத் தன்னுடைய போலி ஊழி யக்காரரை விதைத்தவண்ணமாகவே இருக்கிறான். அவர்கள் சாத்தானுடைய ஊழியக்காரராகும் (II**கொரி.** 11:13); இவர்கள் ஒளியின் தூதர்களாயிருந்து (II**கொரி.** 11:14) வேறொரு இயே சுவை ஏறெடுத்த வண்ணமாயிருக்கிறார்கள். இவர்களை அவர் களுடைய கனிகளினால் அறிவீர்கள் (**மத்.** 7:16) என ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார்.

நவம்பர்

14

***ஆ**கையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபேசி. 6:13).*

"தேவனுடைய சர்வாயுதவர்க்கம்"

தேவனுடைய சர்வாயுதவர்க்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால், இது மனுஷனுடைய ஆயுதவர்க்கம் இல்லை என்பதனை நாம் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். எபேசியர் நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் இந்த ஆயுதவர்க்கங்களை என்னவென்று தெளிவாகக் கூறியிருக்கிறார். அவையாவன முறையே: சத்தியமென்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாத ரட்சை, விசுவாசமென்னும் கேடகம், இரட்சணியமென்னும் தலைச்சீரா, தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் எனப்படும் **(எபேசி. 6:13-17)**.

ஒவ்வொரு விசுவாசியினிடமும் இந்த ஆயுதங்கள் இருக்கின்றனவா? ஒருவன் சற்றுக் கவனமாக இந்த சர்வாயுதவர்க்கங்களைப் பரிசீலனை செய்வானாயின், ஆவியின் பட்டயத்தைத்தவிர மற்றவைகள் தற்பாதுகாப்புக்குரிய (Defensive) ஆயுதங்களாகும்; ஆனால், ஆவியின் பட்டயம் ஒன்றே வலிந்து தாக்குகிற (Offensive) ஆற்றல் உடையது. இந்த ஆயுதங்கள் எல்லா

வற்றையும் நடைமுறைப்படுத்துவதற்குச் செய்யவேண்டியது என்னவென்றால், ஒருவன் தன்னுடைய விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வெளிப்படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுது சர்வாயுதவர்க்கங்களும் தானாக இயங்கத்தொடங்கிவிடும்; இதனி மித்தமே பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர் 1:18**ல் **"சிலுவை யைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்திய மாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெல னாயிருக்கிறது"** எனக் கூறியிருக்கிறார்.

இந்த வேதவார்த்தையைப் பரிசீலனை செய்யும்பொழுது முதலாவதாக, நாம் இங்கு குறிப்பிட்டிருக்கிற சிலுவை என்ற மரப்பலகையில், எவ்வித வல்லமையும் இல்லை என்பதனை யும்; இரண்டாவதாக, கிறிஸ்துவின் மரணத்தில் ஒரு வல்லமை யும் இல்லை என்பதனையும் நாம் அறிந்திருக்கவேண்டும். உண்மையில் வேதவாக்கியம் **IIகொரிந்தியர் 13:4**ல் **"அவர் பல வீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும்"** என்று சொல் லப்பட்டிருக்கிறது. இந்தப் பலவீனம் ஒரு நோக்கத்திற்காகவே என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். அப்படியானால், வல் லமை எங்கே இருக்கிறது? அந்த வல்லமை பரிசுத்த ஆவி யிலேயே தங்கியிருக்கிறது; அவரை நமக்காகச் செயற்பட வைப்பதே தேவையானது; அதெப்படிச் சாத்தியமாகும்? என்ப தனைப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர் 8:10-11**ல் தெளிவாகக் கூறியிருக்கிறார். அந்த வழியின்மூலம் உயிர்த்தெழுதலின் வல்லமையைப்பெற்று, நம்முடைய சத்துருவுக்கு எதிராகத் தற் பாதுகாப்புத் தாக்குதலையும் (Defensive), வலிந்து தாக்குதலையும் (Offensive) நடைமுறைப்படுத்தி, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையை உறுதிப்படுத்தமுடியும்.

நவம்பர்

15

***ஆ**கிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவை களோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக் காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன் (பிலி. 3:7-8).*

"லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்"

பவுல் அப்போஸ்தலர் தன் பாவத்தை மட்டும் ஒப்புவிக்க வில்லை, தன் நீதியையும் ஒப்புவித்தார்; அந்த நீதி அவருடைய சுயநீதியே. அவருக்கு லாபமாயிருந்த மாம்சத்தின்மேல் **(பிலி.** 3:5-7) அவர் நம்பிக்கை வைக்கவில்லை. கிறிஸ்து மரித்தது நம் முடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறுவதற்குமட்டுமல்ல, நம்முடைய சுயநீதியிலிருந்தும் விடுதலை பெறுவதற்கே என்ப தனை நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். சுயத்தி லிருந்து விடுதலை பெறுவது அவ்வளவு இலகுவானதல்ல. சுய பலங்களில் சிலவற்றை ஒரு கிறிஸ்தவன் தொடரவேண்டும்; அதில் தவறில்லை; ஆனால், அதனைச் செய்வதனால் தேவனி டத்திலிருந்து எதனையும் சம்பாதிக்கமுடியாது என்ற தெளிவான அறிவுடன் அவைகளைத் தொடரவேண்டும்.

பவுல் அப்போஸ்தலர்போன்றே கோத்திரத்தலைவனாகிய யோபு சுயத்தின் பிரயோசனமின்மையை அறிந்தபின்பே கிறிஸ்துவின் பிரயோசனத்தைக் கண்டுபிடித்தான்; கிறிஸ்துவின் பிரயோசனத்தை அறியவேண்டுமாயின் சுயத்தின் பிரயோசனமின்மை முதலில் உணரப்படவேண்டும்.

கிறிஸ்துவை ஆதாயப்படுத்துவதற்கு ஒருவன் தனக்கு லாபமாயிருந்த யாவையும் இழக்கவேண்டும் என **பிலிப்பியர்** 3:7ல் சொல்லப்பட்டிருக்கிறது; அதெப்படியெனில், சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தவிர்த்து வேறெதனிலும் ஒருவன் நீதியை ஸ்தாபிப்பதைப்பற்றியே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது; இதனையே சுயபலம் என்றும் மாம்சபலம் என்றும் சொல்லப்படுகின்றது. ஒருவன் தன்னுடைய சுயத்தைப் பலப்படுத்தத் தன்னுடைய மாம்சத்தை உபயோகித்துச் சேகரித்த சுயபலங்களே அதிகமான கிறிஸ்தவர்களுக்கு ஜீவனாகவும் நீதியாகவும் தென்படுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் சுயமாயிருக்கிறோம், எப்பொழுதும் சுயமாகவே இருப்போம். பரிசுத்த ஆவியானவரே சுயத்தைப் பரிசுத்தப்படுத்துகிறார். ஒருவன் கிறிஸ்துவிடம் வரும்போது அவனுடைய சுயம் **"கிறிஸ்துவுக்குள்"** முறையாக மறைந்திருக்கிறது **(யோவா. 14:20)**. மனுஷன் பொய்யான சுவிசேஷங்களாகிய **சுய கௌரவம்** (Self esteam) **சுய உறுதிப்பாடு** (Self actualization) **சுய உதவி** (Self help) **சுய நன்மை** (Self betterment) **தன்னிறைவு** (Self sufficiency) ஆகிய இவைகள்மூலம் சுயத்தை விருத்திசெய்கிறான்; இவை யாவும் மனோதத்துவத்தின் (Phycology) கண்டு பிடிப்புக்களாகும். மனுஷன் அறியவேண்டியது, கிறிஸ்துவுக்கு அப்பால் இதனை நிறைவேற்றமுடியாது; சுயம் புதுபிக்கப்படவேண்டியதே; ஆனால், கிறிஸ்துவுக்குள் ஒருவன் இல்லாமல் அதனை ஒருபொழுதும் புதுப்பிக்கமுடியாது; மனுஷன் காலாதி காலமாகக் கிறிஸ்துவைத் தவிர்த்து இதனைப் புதுப்பிக்க முயற்சிக்கிறான்.

இவை யாவும் ஆதாமின் அத்தியிலைகளே; இதே அத்தி யிலைகளைப் பரிசேயர்களும் உடுத்தியிருந்தார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு** 21:31-32ல் அவர்களு டைய நிலைமையைக் கூறியிருந்தார்; அதுமட்டுமல்ல, நம் முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தவர்களும் இவர்களே. மாம்சபலம், சுயபலம், சுயநீதி அன்று ஆபேலைக் கொலைசெய்தது, மேசியாவையையும் அதுவே கொலைசெய்தது என்பதன் தாற்பரியத்தை அறிந்து, அதற்குத் தேவனுடைய தீர்வை (**லூக்.** 9:23; **கலா.** 5:24) நாடுவதே நமக்குத் தேவனுடைய அறிவுறுத்தலாயிருக்கிறது.

மேலும் மனுஷருக்குள் நல்லவன் ஒருவனும் இல்லையே என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார் (**மத்.** 19:17). அவனுக் குள் இருப்பது யாவும் பொல்லாததே (**மாற்.** 7:20-23) என்று ஆண்டவர் உறுதிப்படுத்தியிருக்கிறார். இரட்சிக்கப்படாத மனு ஷன் இந்த உண்மையைப் புரிந்துகொள்வது கடினமானது. அப் படியே இரட்சிக்கப்பட்ட மனுஷனும் கிறிஸ்துவுக்குள் நிலைத் திராமல், இந்த உண்மையைப் புரிந்துகொள்வது கடினமானதே. மனுஷன் இடைவிடாமல் சுயத்தைப் பண்படுத்த முயற்சிக் கிறான்; அது அவனால் முடியாது. மாம்சத்தினுடைய ஆசை களும் இச்சைகளும் சிலுவையில் அறையப்படவேண்டும்; இது பற்றிப் பரிசுத்த ஆவியானவரினால் ஏவப்பட்டுப் பவுல் அப் போஸ்தலர், **"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தை யும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தி ருக்கிறார்கள்"** (**கலா.** 5:24) எனக் கூறியிருக்கிறார். அதனை விசுவாசியின் சொந்த பலத்தினால் ஒருபொழுதும் நிறைவேற்ற முடியாது; பொருத்தமான விசுவாசத்தினாலேயே அது சாத்திய மாகும்; அந்த விசுவாசம் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவேயாகும் (**1கொரி.** 2:2).

இப்படியிருக்க, இச்சைகள் என்பது கட்டுப்படுத்தமுடியாத உணர்ச்சியினால் ஏற்படும் பாவங்களைக் குறிக்கும்; ஆசைகள்

என்பது தற்பெருமையினால் ஏற்படும் பாவச்செயல்களாகும்; இச்சைகளைப்பற்றிய உபதேசங்கள் சபைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், ஆசைகளைப்பற்றிய உபதேசமில்லை. இதனையே நல்ல சுயம் என்று சொல்லப்படுகிறது; நல்ல சுயம் என்று ஒன்று உண்டு என்பதனை அறிந்துகொள்வது அவ்வளவு இலகுவானதல்ல. யோபு அதனை அடையாளங்கண்டவுடன் அதனை அருவருத்தான் என நாம் காண்கிறோம் (**யோபு** 42:6); நாமும் அதனையே செய்யவேண்டும். துரதிஷ்டவசமாக நாம் அதனைச் செய்யமுடியாமல் இருப்பதற்கு நம்முடைய சுயம் கிறிஸ்துவுக்குள் மறைக்கப்படாததே முக்கியமான காரணமாகும் (**கொலோ.** 3:3; **சங்.** 91:1).

இதனிமித்தமே நம்முடைய ஆண்டவர் "**.....ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்**" (**லூக்.** 9:23) எனக் கூறியிருக்கிறார்; இதுவே சகல இடறல்களுக்கும் தீர்வாயிருக்கிறது. அதனை ஒருவன் நடைமுறைப்படுத்தாவிட்டால் அவன் கிறிஸ்துவுக்குச் சீஷனாயிருக்கமுடியாது என்பதனையும் (**லூக்.** 14:27) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தப்பாமல் கூறியிருக்கிறார். மாம்சம் தன்னை நியாயப்படுத்திப் பரிசுத்த ஆவிக்கெதிராக யுத்தம் செய்ததன் மாதிரியாக அமெலேக்கியர் இஸ்ரவேலியர்களுக்கெதிராக யுத்தம் செய்ததையும், அமெலேக்கியரை வெற்றிகொள்ள என்ன மாதிரியான யுத்தத்தை இஸ்ரவேலியர்கள் செய்யவேண்டுமென்பதையும் **யாத்திராகமம்** 17ம் அதிகாரத்தில் அறியக்கூடியதாயிருக்கிறது; நமக்கும் அதே யுத்தமே நியமிக்கப்பட்டிருக்கிறது; அது விசுவாசத்தின் நல்ல போராட்டமாகும் (**1தீமோ.** 6:12).

நவம்பர்

16

சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலி. 3:13-14).

"பரம அழைப்பின் பந்தயப்பொருள்"

கர்த்தாவே! நான் உம்மை அறியவிரும்புகிறேன் என்று இருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் எந்தக் குரலையும் தேவன் உதாசீனஞ்செய்யமாட்டார். தேவனுடைய பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவை அறியப் பசியும் தாகமுமாயிருந்து மேற்கொள்ளும் எந்த விண்ணப்பத்தையும் அவர் ஒருபொழுதும் புறக்கணிக்கவும் மாட்டார்; பவுல் அப்போஸ்தலரின் இருதயம் அப்படியிருந்தது **(பிலி. 3:8-14)**.

நியாயப்பிரமாணமோ, பாரம்பரியமோ, பண்பாடோ, என்னுடைய சுயநீதியோ எனக்கு வேண்டாம்; கர்த்தாவே நீரே எனக்கு வேண்டும்; நான் விசுவாசத்தின் மூலமாக உம்முடைய மரணத்துக்குள்ளும், உயிர்த்தெழுதலுக்குள்ளும் என்னை அடையாளங் காணவிரும்புகிறேன்; உம்மை அறிய விரும்புகிறேன்; சிலுவையில் கிறிஸ்து நிறைவேற்றிய வல்லமையை அனுபவரீதியாக விசுவாசத்தின்மூலம் அறியவிரும்புகிறேன் எனப் பவுல் அப்போஸ்தலர் **பிலிப்பியர்** 3:8:14ல் தெரிவித்திருக்கிறார். ஒரு

குழந்தையைப்போலத் தனக்குத் தேவன் கொடுத்த விசுவாசத்தை வெளிப்படுத்தி, தொடர்ச்சியாக இயேசுவை அறியவேண்டுமென எவன் விரும்புகிறானோ, அவனுடைய விண்ணப்பம் நிராகரிக்கப் படமாட்டாது.

இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்"** (பிலி. 3:10-11) என்றும், **"சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்"** (பிலி. 3:13-14) என்றும் சொல்லியிருப்பதன் மூலம் அப்போஸ்தலருடைய உறுதியான வாஞ்சை வெளிப்படுத்தப்படுகிறது.

நவம்பர்

17

ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் (பிலி. 3:18).

"அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்"

சில பெந்தெகொஸ்தே மார்க்கத்தினர் வேறுவிதமாய் நடக்க விரும்புகின்றனர். சீருடையை அணிவதனால் தாம் பரிசுத்தமா யிருப்பதாக எண்ணுகின்றனர். அநேகமானோர் நகை அணியாம லிருந்து தங்களைத் தாங்களே பரிசுத்தப்படுத்த முயற்சிக் கின்றனர்; பரிசுத்தப்படுத்துதல் பரிசுத்த ஆவியானவருடைய அலுவல் என்பதனை அறியாமல் அல்லது அறியவிரும்பாமல், மனுஷகற்பனைகளால் தம்மைச் சோடிக்கின்றனர் (**மத்.** 7:6-8).

அநேகமான பெந்தெகொஸ்தே மார்க்கத்தினருடைய விசுவா சத்தின் குறிக்கோள் கிறிஸ்துவின் சிலுவையில் இல்லாமல், பரி சுத்த ஆவியிலேயே உண்டு. கிறிஸ்துவின் சிலுவையில் விசு வாசத்தின் குறிக்கோள் இல்லாவிட்டால், பரிசுத்த ஆவியானவர் செயற்படமாட்டார் என்பதனை அவர்கள் அறியாதிருக்கிறார்கள் (**ரோம.** 8:2); அப்படியாயின், அவர்களை ஏமாற்றுகிற ஆவி யார்? (**IIகொரி.** 11:4) அதுவே வேறொரு ஆவி; அந்த வேறொரு ஆவி அசுத்த ஆவியே.

மேலும், அநேகமான பெந்தெகொஸ்தே மார்க்கத்தினர் உயிர்த் தெழுதலை விசுவாசிக்கிறோம் என்கிறார்கள்; அதுமட்டுமல்ல,

தாம் உயிர்த்தெழுதலின் பிள்ளைகள் என்கிறார்கள். சிலுவை மரணம் இல்லாவிட்டால், உயிர்த்தெழுதல் இல்லை என்பதனை அறிய மறுக்கிறார்கள் (**ரோம.** 6:5). ஒரு கிறிஸ்தவன் சிலுவையில் அறையப்பட்ட மனுஷனாக இருக்காவிட்டால், அவன் உயிர்த்தெழுதலின் மனுஷனாக இருக்கமுடியாதே (**கலா.** 2:20); எவ்வளவாய் மனுஷனுடைய இருதயம் திருக்குள்ளதாயிருக்கிறது (**எரேமி.** 17:9).

நவம்பர்

18

***உ**பகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக் குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக் கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியு மாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன் (பிலி. 4:17-18).*

"சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியும்"

வேதத்தில் புதிய ஏற்பாட்டில் கர்த்தருக்குக் கொடுப்பதுபற்றி யும், அதன் தாற்பரியத்தைப்பற்றியும் தெளிவாக இந்த வேத வாக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வேதவாக்கியம் நிச்சயமாக 99 சதவீதத்திற்கு மேற்பட்ட கிறிஸ்தவர்களால் உதா சீனஞ் செய்யப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை; ஏனெனில், பூமியில் பொய்யைப் பிரகடனப்படுத்துகிற ஏராளமான சாத்தா னின் ஊழியக்காரர் பெருகியிருப்பதற்கு இது ஒன்றே உறுதியான நிரூபணமாயிருக்கிறது.

இப்படியிருக்கப் பவுல் அப்போஸ்தலர் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறபொழுது, பிலிப்பியர்கள் எப் பாபிரோதீத்துவின்மூலம் கணிசமான பணத்தொகையைப் பவுல்

அப்போஸ்தலருக்கு அனுப்பினார்கள்; பரிசுத்த ஆவியானவர் அந்தக் காணிக்கையைப் பவுல் அப்போஸ்தலர்மூலம் **"சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக"** எனக் குறிப்பிட்டிருக்கிறார். பிலிப்பியச் சபை பவுல் அப்போஸ் தலரினால் ஸ்தாபிக்கப்பட்டது; புதுவிதமாகப் பரிசுத்த ஆவி யானவர் பிலிப்பியர் அனுப்பின அந்தக் காணிக்கையைப் பழைய ஏற்பாட்டில் லேவியராகமத்தில் குறிப்பிடப்பட்ட பலிகளோடு ஒப்பிடுவதை நாம் இங்கு காணக்கூடியதாயிருக்கிறது. லேவி யராகமத்தில் சர்வாங்க தகனபலியை எடுத்து அதனைப் பலி பீடத்தில் தகனபலியாகக் கொடுக்கும்பொழுது அதிலிருந்து எழும்பும் அந்த எண்ணெய்க் கலப்புள்ள புகையைத் தேவன் சுகந்தவாசனையாக முகர்ந்தாரென அறியப்படுகிறது (**லேவி.** 1:9). அதெப்படி அந்தப் புகை அவருக்கு சுகந்தவாசனையாக இருக்க முடியும் என்பது அதிகமான கிறிஸ்தவர்களுடைய சந்தேகமா யிருக்கிறது.

ஆம், அந்தப் புகை அவருக்கு சுகந்த வாசனையாயிருப்பதற் குக் காரணம் என்னவெனில், சர்வாங்க தகனபலியாகக் கொடுக் கப்பட்ட அந்த மிருகம் அவருடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது. காலம் நிறைவேறும் பொழுது (**கலா.** 4:5) அந்த ஸ்திரீயின் வித்து (**ஆதி.** 3:15) இந்த உலகத்திற்குப் பாவமனுஷனுடைய சாயலாக வந்து, சிலுவை யில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, வீழ்ந்துபோன ஆதாமு டைய புத்திரர்களுக்கு அந்தப் பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கப்போவதினால், அவரைப் பிரதிபலிக்கும் அந்த சர்வாங்க தகனபலியும் அதிலிருந்து எழும்பும் புகையும் அவருக்கு சுகந்த வாசனையாயிருப்பது முற்றிலும் பொருத்தமானதே.

அதேபோன்று, கிறிஸ்துவின் சிலுவையே சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்தபலியுமாகப் பிரகடனப்படுத்திய பின், அனுப்பப்பட்ட காணிக்கையை அதற்குச் சமன்படுத்துகிறார். இதனில் பொதிந்திருக்கும் பாரிய உண்மை என்னவெனில்,

பிலிப்பியர்போன்று, நாம் கொடுக்கும் காணிக்கையைப் பரிசுத்த ஆவியானவர் சிலுவையின் செய்திக்கு சமன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதை ஒருவன் அறியாதிருந்தால் அவருடைய மரணத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. நாம் கொடுக்கும் காணிக்கைமூலம் இந்தச் சிலுவையின் செய்தி எடுத்துச்செல்லப்பட்டு, நாளாந்தம் அழிந்துகொண்டிருக்கிற மனுஷகுலத்திற்கு இரட்சிப்பைப் பெறுவது இலகுவாக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கையில் சிலுவையின் செய்தியைப் பிரகடனப்படுத்தாத எந்த ஊழியக்காரருக்கும் நாம் கொடுக்கும் காணிக்கை தேவனுக்குப் பிரியமான உகந்தபலியாக இருக்கப்போவதில்லை. சுகந்த வாசனைக்குப் பதிலாக அது துர்நாற்றத்தைத் தேவனுக்கு ஏற்படுத்துகிறபடியினால் காணிக்கையைக் கொடுக்கிறவர்களும், காணிக்கையைப் பெறுகிறவர்களும் சபிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் (**கலா.** 1:7-9); அப்படியாகக் கொடுக்கப்படும் காணிக்கையினால் ஒரு பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை.

அடுத்ததாக, சிலுவையின் செய்தியைப் பிரகடனப்படுத்தும் ஊழியத்துக்கு நாம் காணிக்கை கொடுத்தால் **"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்"** (**பிலி.** 4:19) எனப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் கூறியிருக்கிறார்; அதனைச் செய்யாதவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில்லை என்பது வெளிப்படையாயிருக்கிறது.

நவம்பர்

19

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து (கொலோ. 2:14);

"நமக்கு எதிரிடையான கட்டளைகள்"

கட்டளைகள் என்று பவுல் அப்போஸ்தலர் இந்த வேதவாக்கியத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பற்றியே சொல்லியிருக்கிறார். நியாயப்பிரமாணம் நமக்கு எதிரிடையாகவும், விரோதமாகவும் இருப்பதற்குக் காரணம் மனுஷ வீழ்ச்சியின் நிமித்தம் தேவனுடைய கற்பனைகளை நிறைவேற்ற மனுஷனால் முடியாமலிருக்கிறது. நியாயப்பிரமாணம் மனுஷன் யார் என்பதனை அவனுக்குக் காண்பிக்கிறது; அது அவனுடைய இயலாமையை அவனுக்குக் காண்பிக்கிறதுமட்டுமல்ல, அவனுடைய இயலாமையை மாற்றுவதற்குத் தேவையான வல்லமையையும் அது கொடுக்கவில்லை. அதெப்படியெனில், கண்ணாடியில் முகத்தைப் பார்க்கமுடிகிறதேதவிர, கண்ணாடி நம்முடைய முகத்தின் தோற்றத்தை மாற்றுவதில்லை, மாற்றவும் முடியாது; அதுபோலவே நியாயப்பிரமாணமும் இருக்கிறது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தவுடன், அவரால் நியாயப்பிரமாணத்தின் மீறுதலின் கோரிக்கைகள் யாவும் திருப்தி செய்யப்பட்டது. ஒவ்வொரு மனுஷனும் குற்றவாளியாக இருக்கிறான்; மனுஷனால் அந்தக் கடன்பளுவைச் செலுத்தமுடியாமற்போன

படியினால், கிறிஸ்து நம் சார்பில் தம்மைப் பலியாகச் சிலுவை யில் ஒப்புக்கொடுத்து, மனுஷன் தேவனுக்குச் செலுத்தவேண்டிய பாவத்தின் கடன்களைச் செலுத்தினார்.

"சிலுவையில் ஆணியடித்து" என்ற சொற்றொடர், சிலுவை யில் நிகழ்ந்த சம்பவத்தின்மூலமே அந்தக் கணக்கு முற்றுமுழு வதுமாகச் செலுத்தப்பட்டது என்பதனைப் பிரதிபலிக்கிறது. கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் விசுவாசிக்கிற ஒவ்வொருவனும் நியாயப்பிரமாணத்தின் சாபத் திலிருந்து மீட்கப்பட்டு (**கலா. 3:13**), நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறான் (**யோவா. 3:16**).

யூதர்களுடைய வழமை ஒன்றிற்குப் பெயர் **"இரட்டிப்பான சுதந்திரம்"**; இந்த வேதவாக்கியத்தை எழுதும்பொழுது பவுல் அப்போஸ்தலர் அந்த வழமையை நினைவில் வைத்தே எழுதி யிருக்கவேண்டும்; அந்த வழக்கம், வங்குரோத்தடைந்த ஒருவ னைப்பற்றியது. வழமையின்படி வங்குரோத்தடைந்த ஒருவன் ஒரு காய்ந்த மிருகத்தோலை எடுத்துத் தான் யார் யாருக்குக் கடன்கொடுக்கவேண்டும் என்பதனையும், கொடுக்கவேண்டிய தொகையையும் விபரமாக எழுதி, அதன்பின் எல்லாரும் பார்க் கத்தக்கதாக, அந்தத் தோலை ஒலிமுகவாசலில் அல்லது பொது மக்கள் கூடுகிற ஒரு இடத்தில் அதனை ஆணியினால் அறை வான். அவனுடைய அவமானத்தை ஒருவன் இலகுவாகக் கற் பனை பண்ணிப்பார்க்கமுடியும்.

இப்படியிருக்க, அந்த வழியால் வந்த ஒரு பிரமுகர் ஆணி யடித்திருக்கிற அந்தத் தோலைக் கவனிப்பான்; அவன் அந்தத் தோலைப் பிடுங்கி, எடுத்து, அதனை இரண்டாக மடித்துத் தன் பெயரை மறுபுறத்தில் எழுதி, அந்தத் தோலை திரும்பவும் ஆணி யடித்து விட்டுப்போவான். இதன் பொருள் என்னவென்றால், தோலில் எழுதப்பட்டிருக்கும் கடன்கொடுத்தவர்கள், அந்தத் தோலில் கையெழுத்துப் போட்டிருக்கிற அந்தப் பிரமுகரிடம் போய், தங்களுடைய கடன்களைப் பெற்றுக்கொள்வார்கள். சகல

கடன் கொடுத்தவர்களுக்கும் முற்றுமுழுவதுமாக அவர்களு டைய கடன்கள் செலுத்தப்படும்; இதனையே **"இரட்டிப்பான சுதந்திரம்"** என்று அழைக்கப்படுகிறது. வங்குரோத்து நிலை மைக்குத் தள்ளப்பட்ட அந்த மனுஷனின் சந்தோஷத்தை நாம் கற்பனை பண்ணிப்பார்க்கமுடியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, சிலுவையில் ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்தின் கடன்களைச் செலுத்தி, ஆவிக்குரிய வங்குரோத்திலிருந்து நமக்கு விடுதலை தந்தார். அவர் சிலுவையில் அறையப்பட்டதன்மூலம் நமக்கேற் பட்ட அவமானத்தை மூடி மறைத்து, ஒருகாலமும் ஒருவரும் காணாதபடிக்குத் தமது பெயரைத் தனது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எழுதினார்; அதன் பொருள், நம்முடைய கடன் கள் முற்றுமுழுவதுமாகச் செலுத்தப்பட்டது. ஆனபடியினால்த் தான், சிலுவை மிகவும் முக்கியமானது; அங்கு தான் பாவத்தின் கடன்கள் முற்றுமுழுவதுமாகச் செலுத்தப்பட்டது. எந்தக் காலத் திலும் அந்த விலை காணாது என்று எவனும் சொல்லமுடியாது; ஏனெனில், கொடுத்த விலை அவருடைய விலையேறப்பெற்ற இரத்தமே; அது ஒருபொழுதும் மாறாது; அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் **(மல்கி. 3:6; எபி. 13:8)**;

நவம்பர்

20

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலோ. 2:15).

"சாத்தான் முற்றுமுழுவதும் தோற்கடிக்கப்பட்டான்"

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிலுவையில் சிந்தினதன் நிமித்தம் நம்முடைய சகல பாவத்தையும் நிவிர்த்திசெய்தார். அவருடைய பலி பரிபூரணமான பலியாக இருந்தபடியினால், தேவன் அந்தப் பலியை ஏற்றுக்கொண்டார். இந்த விதமாகவே சகல பாவத்தின் கடன்களும் செலுத்தப்பட்டது. இந்த விதமாகவே சாத்தானும், அவனுடைய சகல அந்தகார சக்திகளும் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டன. பாவத்தின் கடன்கள் செலுத்தப்பட்டபடியினால், அதனை விசுவாசிப்பவனுக்குச் சகல பாவங்களும் (பாவச்செயல்களும்) விலக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறின தனால் ஏற்பட்ட சாபமும் தண்டனையும் சிலுவையில் திருப்தி செய்யபபட்டது (**கலா. 3:13, கொலோ. 2:14**). நியாயப்பிரமாணத்தை மீறின தண்டனை திருப்தி செய்யப்பட்டபடியினால், நியாயப்பிரமாணமும் விலக்கப்பட்டது; சாத்தானுடைய சட்டபூர்வமான உரிமை இப்பொழுது அவனைவிட்டு அகற்றப்பட்டது; மனுஷகுலத்தின்மேல் அவனுக்கு இனிமேலும் பிடியில்லை. இதன் பொருள், சிலுவையில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட

தீர்வை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவனுக்கும் சாத்தான் முற்று முழுவதுமாகத் தோற்கடிக்கப்பட்டவனாகவே இருக்கிறான்; ஆன படியினால்த்தான், பூமியின் இருதயமாகிய பரதீசுக்குச் சென்று, சிறைப்பட்டிருந்த நீதியான ஆத்துமாக்களைத் தன்னுடைய சிறை யாக்கி, சாத்தானின் பிடியிலிருந்து அவர்களை விடுதலைசெய் தார் (**எபேசி. 4:8-10**).

சிலுவைக்கு முன்பு நீதிமான்களாக மரித்த ஒருவரும் பர லோகத்திற்குச் செல்லமுடியவில்லை; அவர்கள் பூமியிலுள்ள பரதீசுக்கே சென்றார்கள். அது எரிநரகத்தின் ஒரு பகுதியாக இல்லாமலிருந்தும், இந்த இரண்டு பகுதியும் ஒரு பெரும் பிள வினால்மட்டுமே பிரிக்கப்பட்டிருந்தது (**லூக். 16:26**); ஆனால், சாத்தானோ இந்த இரண்டு பகுதியையும் ஒன்றாக்கிப்போடுவதில் மிகுந்த கவனம் செலுத்தினான். சாத்தானுக்கு, பரதீசிலிருந்த நீதிமான்களை நரகத்தின் எரிபகுதிக்குக் கொண்டு செல்வதற்கு உரிமை இருந்தது; ஏனென்றால், அவர்களுடைய பாவத்தின் கடன்கள் சிலுவைக்கு முன்பு செலுத்தப்படாதிருந்தபடியினால், அவைகள் செலுத்தப்படாத கடன்பளுக்களாயிருந்தன. மிருக பலி சிலுவைக்கு முன்பு ஒரு தற்காலிக ஏற்பாடாகும்; அவர் களுடைய பாவம் மூடப்பட்டதேதவிர, எடுத்துக்கொள்ளப்பட வில்லை (**எபி. 10:4**); ஆனாலும், அதனை விசுவாசித்தவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள்; அவர்களுடைய இரட்சிப்பு சிலு வைக்குப் பின்பே உறுதிப்படுத்தப்பட்டது. சிலுவைக்குப் பின்பு சாத்தானுடைய சகல கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. ஆவியும், ஆத்துமாவும் உடனடியாகவே பரலோகத்திற்குச்சென்று கர்த்தரோடு இணைந்துகொள்கிறது (**பிலி. 1:23 ⅠⅠகொரி. 5:8**).

சிலுவையின் மூலமாகவே அந்தகார ராஜ்யம் நம்முடைய கர்த்தரால் பூரணமாகக் கொள்ளையடிக்கப்பட்டது; அவர் **எபிரெ யர்** 10:13ல் சொல்லப்பட்டபடியே செய்வார்.

நவம்பர்

21

***அ**ன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினி மித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர் களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்தி ருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசு வுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவ ரோடேகூடக் கொண்டுவருவார் (1தெச. 4:13-14).*

"நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலக் கிறிஸ்தவர்கள் துக்கப்படவேண்டியதில்லை"

இந்த வேதவாக்கியங்களில் மரித்துப்போன விசுவாசிக்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது; அதேநேரம் கர்த்தரை அறியாத வர்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தரை அறியாத வர்கள் முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபற்றப்போவ தில்லை; ஆனபடியினால் பரலோகத்திற்குச் செல்லும் பாக்கியம் அவர்களுக்கு இல்லை.

தெசலோனிக்கேயா சபையினர் கிறிஸ்துவுக்குள் மரித்தவர் களைப்பற்றிய அறிவு அற்றவர்களாக இருந்து, விசனப்பட்டுக் கொண்டிருந்தனர்; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் பிரஸ்தா பிக்கையில்: **முதலாவதாக**: கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் கிறிஸ்துவோடு இருக்கிறார்கள்; அவர்கள் மரித்துப்போனாலும், அவர்கள் ஒன்றையும் இழந்துபோவதில்லை என்பதனை

உறுதிப்படுத்தியிருக்கிறார். மரித்தவனின் ஆவியும் ஆத்துமாவும் தற்பொழுது பரலோகத்தில் இயேசுவோடுகூட இருக்கிறது (**பிலி.** 1:23; **IIகொரி.** 5:8) என்பதனைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆண்டவர் வரும்பொழுது எல்லா ஜனங்களையும் தன்னோடு கூடக்கொண்டு வருவார்; அவர்களுக்கு மகிமையான சரீரம் கொடுக்கப்படும் (**Iகொரி.** 15ம **அதி**). கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எக்காளச் சத்தம் கேட்டவுடன் உடனடியாக எழும்புவார்கள். உயிரோடு கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள், மரித்தவர்கள் உயிர்த்தெழுந்த பின்பு, உடனடியாக அவர்களைப் பின் தொடருவார்கள்.

கிறிஸ்தவத்தின் பிரதான அஸ்திபாரம், கிறிஸ்துவின் மரணமும், அவருடைய உயிர்த்தெழுதலுமாகும்; அதொன்றே மரணத்திற்குப் பின்பு ஜீவன் உண்டு என்பதனை நிரூபிக்கிறது. அந்த உயிர்த்தெழுந்த வாழ்க்கையில் எல்லாப் பரிசுத்தவான்களும் மகிமையான சரீரத்தைத் தரித்திருப்பதுமட்டுமல்ல, முடிவில்லாத வாழ்க்கையையும் பரலோகத்தில் பெற்றிருக்கிறார்கள்.

உயிர்த்தெழுதலின்போது தேவன் நம்முடைய சரீரத்தை மகிமையான சரீரமாக மாற்றுகிறார். கர்த்தர் வரும்பொழுது ஆவியும் ஆத்துமாவும் அவரோடுகூடப் பூமிக்கு வெகுஅண்மையில் வந்து, மகிமையான சரீரத்தோடு இணைந்துகொள்ளுகிறது; அப்பொழுது விசுவாசி முழுமையடைகிறான்.

நவம்பர்

22

***ஏ**னெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிர தான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத் தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப் பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர் களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப் போம். (Iதெச. 4:16-17).*

"உயிர்த்தெழுதல்"

இந்த வேதவாக்கியம் மறுபிறப்புப்பெற்ற கிறிஸ்தவர்களின் உயிர்த்தெழுதலைப் படம்பிடித்துக்காட்டுகிறது; இதனையே சபை யின் **இழுத்துக்கொள்ளுதல்** என்றும், விசுவாசிகளின் **உயிர்த் தெழுதல்** என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு முக்கியமான ஆவிக்குரிய நிகழ்ச்சிகளும் ஒரே விஷயத்தைப் பற்றியே கூறுகிறது; இதனையே பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந் தியர்** 15ம் அதிகாரத்தில் விபரமாகக் கூறியிருக்கிறார். மரணத் தின்போது தேவனுடைய பிள்ளைகளின் ஆவியும் ஆத்துமாவும் உடனடியாக இயேசுவிடம் சேருகிறது (**பிலி.** 1:23; **IIகொரி.** 5:8); அதேநேரம் சரீரம் மறுபடியும் மண்ணோடு மண்ணாகிறது.

வேதவாக்கியத்தின்படி **"....கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்"** (**1தெச. 4:16**) என்று சொல் லப்பட்டிருக்கிறது; இது ஒரு வெற்றிச் சத்தம்; அதுவே **உயிர்த் தெழுலு**க்கு அடையாளம்; ஆவிக்குரிய உலகம் ஒருபொழுதும் கேட்டிராத மிகப்பெரிய சத்தம்; அந்த **"சத்தத்தோடு"** பிரதான தூதனாகிய மிகாவேலின் சத்தமும் பின்தொடரும்; ஆண்டவரே **"சத்தம்"** போடுவார்; ஆனால், பிரதான தூதனுடைய சத்தம் எப்படியிருக்கும் என்பதனைப்பற்றித் தெளிவாகச் சொல்லப்பட வில்லை; இந்த நேரத்தில் பிரதான தூதன் ஏன் வருகிறான்? என்று கிறிஸ்தவர்கள் கேட்கிறார்கள்.

வேதவாக்கியத்தின்படி மிகாவேலே பிரதான தூதனாகும்; அவனே மிகஉயர்ந்த நிலையிலுள்ள தேவதூதனாகும்; காபிரி யேல் சற்று விதிவிலக்காயிருக்கிறான். மிகாவேல் இஸ்ர வேலுக்குத் தற்பொழுது பாதுகாப்பாயிருக்கிறான் (**தானி. 10:21**). அவன் வருவதற்கு காரணம் சபையின் காலம் முடிவடைகிறது, இஸ்ரவேல் கிறிஸ்துவுக்குள் வரப்போகிறது; அடுத்ததாக: **"எக் காளச் சத்தம்"** என்று சொல்லப்பட்டிருப்பதைப் பரிசீலனை செய்யும்பொழுது பரமபிதாவே **"எக்காளத்தை"** ஊதுகிறார்போலத் தெரிகிறது. இஸ்ரவேலில் எக்காளச்சத்தம் கொண்டாட்டத் திற்கும், யுத்தத்துக்கும், வேறு பலவற்றிற்காகவும் ஊதப்படும். சபை கிறிஸ்துவிடம்போய் அவரோடு ஒன்றாயிருக்கப்போகிற படியினால் **"கொண்டாட்டத்தையும்"**, அந்திக்கிறிஸ்துவுக்கு எதி ராக **"யுத்தம்"** ஆரம்பிக்கப் போகிறதையும் எக்காளச் சத்தம் பிரதி பலிக்கிறது.

பவுல் அப்போஸ்தலர் **"பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த் தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு...."** எனச் சொல்லியி ருக்கிறார் (**1தெச. 4:17**). இது வானத்திலுள்ள மேகங்களைப்பற்றி யல்ல, இங்கு **"பரிசுத்தவான்களின் மேகத்தைப்பற்றியே"** சொல்

லப்பட்டிருக்கிறது; எல்லாரும் ஒன்றாக இணைந்து **"கர்த்தருக்கு எதிர்கொண்டுபோய்"** அவரை வானத்தில் சந்திப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகாயம் என்பது கிரேக்க மொழியில் 6000 அடிக்குட்பட்ட பகுதியைக் குறிப்பிடுகிறது; அதுவே ஒலிவமலையின் உயர மாகும். 6000 அடிக்கு மேற்பட்ட உயரத்தைக் கிரேக்கமொழியில், சபையை அப்பால் கொண்டுசெல்வதற்கு பூமியிலிருந்து 1மைல் தூரத்தில் கர்த்தர் வந்து நிற்பார் என்றே சொல்லப்படுகிறது; சபை என்று சொல்லப்படுவது கிறிஸ்துவுக்குள் மரித்தோரையும், கிறிஸ்துவுக்குள் உயிரோடிருப்பவர்களையும் குறிப்பிடுகிறது. இத்தருணத்தில் அவர் பூமியில் கால் மிதிக்கப்போவதில்லை; இழுத்துக்கொள்ளுதல் (Rapture) இல்லையென்பவர்கள் உயிர்த் தெழுதலை ஏற்றுக்கொள்வார்கள்; இரண்டும் ஒரே சம்பவத் தையே குறிப்பிடுகிறது; இதுபற்றி **1கொரிந்தியர்** 15ம் அதிகாரத் தில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; ஒருவன் **"உயிர்த்தெழு தலை"** நம்புவானாயின் அவன் **"இழுத்துக்கொள்ளுதலையும்"** அறிந்தோ அறியாமலோ நம்புகிறான்; உயிர்த்தெழுதலை நம்பா விட்டால் அவன் இரட்சிக்கப்படமுடியாதே!

நவம்பர்

23

***அ**ன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது (IIதெச. 2:1-3).*

"சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்"

இந்த வேதவாக்கியங்களில் பவுல் அப்போஸ்தலர் உயிர்த்தெழுதலையும் (Rapture) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் குறிப்பிட்டிருக்கிறார். **"நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து"** என்ற சொற்றொடர் குறிப்பாக உயிர்த்தெழுதலைப்பற்றியே (Rapture) சொல்கிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்.

"சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்" என்ற சொற் றொடரின் ஆவிக்குரிய பொருள், இந்த இரண்டு அவலத்தையும் ஏற்படுத்துவது பொய்யான உபதேசமேயாகும். சாத்தான் தன்னு டைய ஊழியக்காரர்மூலம் இதனைக் கச்சிதமாக நிறைவேற்றிக் கிறிஸ்தவர்களை சின்னாபின்னமாக்குகிறான். **"ஒரு ஆவியினா லாவது"** என்பதன் பொருள், பற்பலபாஷைகளைப் பேசி, அதனை வியாக்கியானம் பண்ணுதலின்மூலம் தேவ செய்தி தங்களிடம் வருவதாகக் கிறிஸ்தவர்கள் நினைப்பார்கள்; ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்; ஆனால், அது தேவ செய்தி அல்ல; சாத்தானு டைய ஊழியக்காரர் இதனைக் கச்சிதமாகச் செய்துமுடிக்கிறார் கள். **"வார்த்தையினாலாவது"** என்பதன் பொருள், சிலர் தாம் கர்த்தரிடத்திலிருந்து ஒரு வார்த்தை தமக்குக் கிடைத்திருக்கிறது என்று உரிமை கோருவதுண்டு. அந்த வார்த்தையைப் பரி சீலனை செய்யாமல் ஏற்றுக்கொள்வது கிறிஸ்தவ சபைகளின் பொதுவான நியதியாயிருக்கிறது; இதன் பிரதிபலன் வஞ்சகமும், ஏமாற்றமுமேயாகும்; அதுமட்டுமல்ல, **"எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது"** என்ற சொற்றொடரின் மூலம் சில தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிட்டு, அதற்கு ஆதாரமாகப் பவுல் அப்போஸ்தலரின் கையெழுத்தைத் தாங்களே போட்டு, போலிப்பத்திரத்தைப் பவுல் அப்போஸ்தலரி டத்திலிருந்து வந்த உண்மையான நிருபம் எனக் கிறிஸ்தவர்கள் அப்பொழுது ஏமாற்றப்பட்டார்கள்.

"கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது" என்பதனைத் தெரிவிப்பதே அவர்களுடைய நோக்கமாகும்; கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறது என்பது தவறான மொழிபெயர்ப்பு. மூலப்பிரதியில் **"கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது"** என்றே சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாள் என்பது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நடக்கிற சகல சம்பவங்களையும் உள்ளடக்கும் நாட்களைக் குறிப்பிடுகிறது. பவுல் அப்போஸ் தலரின் காலத்திலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்ப

விக்கப்போகிறது எனச் சிலர் விஷமத்தனமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள்; இத்தகைய பிரச்சாரத்திற்கு வேதத்தில் ஆதாரம் எதுவுமில்லை. இன்றும் அநேகமான போதகர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிப் போதிக்கிறார்களே தவிர, அதற்கு முதல் சம்பவிக்கப்போகிற உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுபவர்கள் வெகுசிலரே (I**தெச.** 4:13-18). இவர்கள் விசுவாசிகளை உயிர்த்தெழுதலைத் தவிர்க்கச்சொல்லி ஆலோசனை சொல்லுகிறார்களோ? கர்த்தாவே இந்தப் பொய்யர்களிடமிருந்து விசுவாசிகளைக் காப்பற்றும்; சாத்தான் கிறிஸ்தவர்களை என்னென்ன விதமாக நிர்மூலமாக்குகிறான் என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமோ? **"எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"** என்பதன் பொருள், கிறிஸ்தவர்களே, வேதத்தோடு இசைவில்லாத எதனையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்று பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர்மூலம் கோரிக்கை விடுகிறார். தமிழ் வேதாகமத்தின்படி **"விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு"** என்று சொல்லப்பட்டிருப்பது முற்றிலும் தவறான மொழிபெயர்ப்பாகும். **"முதல் புறப்படுதல் ஏற்பட்டாலொழிய, அந்த நாள் வராது"** என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும். கிங்ஜேம்ஸ் மொழி பெயர்ப்பில் **"அப்பால் விழாமல் அந்த நாள் வராது"** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. **"முதல் புறப்படுதல் ஏற்பட்டாலொழிய, அந்த நாள் வராது"** (II**தெச.** 2:3) என்பதே பொருத்தமான மொழிபெயர்ப்பாகும். இங்கு இழுத்துக்கொண்டுபோகுதலைப்பற்றியே (உயிர்த்தெழுதலைப்பற்றியே [I**தெச.** 4:13-18]) சொல்லப்பட்டிருக்கிறது. சில சம்பவங்கள் நிகழ்ந்தாலல்லாமல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறாது என்பது இங்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

"கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" எனச் சொல்லப்பட்டிருப்பது அந்திக்கிறிஸ்துவைப்பற்றியேயாகும்; அவன் இந்த உலகத்தில் முதலில்

வெளிப்பட்டாலொழிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவியாது; அப்படியானால், முதலில் உயிர்த்தெழுதல் நடந்து, பின்பு அந்திக்கிறிஸ்து வெளிப்பட்டு, பெரும் உபத்திரவகாலம் நடைமுறைக்கு வரும்; அதன்பின்பு சம்பவிக்கும் அர்மகேதோன் யுத்தத்தின்பொழுதே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவிக்கும். கேட்டின் மகனின் அழிவு அக்கினிக்கடலில் முடிவடைகிறது (**வெளி.** 19:20).

நவம்பர்

24

***ஆ**கிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள் (1தீமோ. 4:1).*

"வஞ்சிக்கிற ஆவிகளும் பிசாசுகளின் உபதேசங்களும்"

பரிசுத்த ஆவியானவரே பவுல் அப்போஸ்தலரை ஏவி **"வஞ்சிக்கிற ஆவிகள்"** என்ற சொல்லைப் பாவிக்குமாறு வழி நடத்தியிருக்கிறார். வஞ்சிக்கிற என்ற சொல்லைக் கிரேக்க மொழியில் **"பிளேனோன்"** என்று சொல்லப்படுகிறது; இதன் பொருள், **"வஞ்சகன்"**, **"தவறான வழி காட்டுபவன்"**, **"ஏமாற்றுபவன்"** எனப்படும்; அந்த வார்த்தை மதிமயக்கமுள்ளவன் என்றும் பொருள்படும். வஞ்சிக்கப்பட்டவன் போதை மருந்தை உட்கொண்டவன் போலத் தோற்றமளிப்பான்; அவனால் தன்னைச் சுற்றியிருக்கிற ஆபத்தைப் பார்க்கவும், உணரவும் முடியாது.

இந்தப் பயத்திலிருந்து விடுதலைபெற சத்தியம் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையோடும், அவருடைய அபிஷேகத்தோடும் அவனுக்குப் பிரசங்கிக்கப்படவேண்டும் (**யோவா.** 8:32; 17:17; **IIதீமோ.** 2:26). பரிசுத்த ஆவியானவர் சத்தியமாயிருக்கிற

படியினால் (**1யோவா. 5:6**), இந்த ஒரே ஒரு வழியினாலேயே அத்தகைய கிறிஸ்தவனை மந்த நிலைமையிலிருந்து சுய நினைவுக்குக் கொண்டுவரமுடியும்; அநேகமான கிறிஸ்தவர்கள் பொய்யான உபதேசங்களைச் சுட்டிக்காட்டியவுடன் கோபமடைகிறார்கள்; ஏனென்றால், **"ஆவிக்குரிய மந்த நிலைமையில்"** ஒருவன் இருக்கும்பொழுது சத்தியத்தை அவனால் புரிந்துகொள்ளமுடியாது; ஆயினும், எந்தவிதமான தப்பான அபிப்பிராயத்திற்கும் இடங்கொடுக்காமல் தெளிவாகச் சத்தியம் பிரசங்கிக்கப்படவேண்டும்; அப்படியாகத் தவறு சுட்டிக்காட்டப்படாவிட்டால், தவறை நாம் கண்டுபிடிக்கமுடியாது. நாம் பவுல் அப்போஸ்தலரின் மாதிரியைக் கடைப்பிடிக்கவேண்டும் (**1தீமோ. 2:17-18**).

"பிற்காலங்கள்" என்பது நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்களாகும்; இதுவே கடைசியின் கடைசி நாட்களாகும்; இந்த நாட்களே இறுதிக்காலத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் நாட்களாகும். இந்த நாட்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதன் பொருள், கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர்த்து இரட்சிப்புக்கும், பரிசுத்தத்திற்கும், நாளாந்தக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் வேறொரு வழியை அவர்கள் பின்பற்றுவார்கள். வஞ்சிக்கிற ஆவிகள் இதனைக் கச்சிதமாகச் செய்துமுடிக்கிறது; இந்த ஆவிகள் அசுத்த ஆவிகளேயாகும்; மத ஆவிகளினால் இல்லாததை உள்ளதுபோலக் காண்பிக்கமுடியும். இவை விசுவாசிகளை வஞ்சித்து, அந்த விசுவாசத்தைவிட்டு விலகப்பண்ணி, பிசாசுகளின் உபதேசங்களை ஏற்றுக்கொள்ளப்பண்ணும்; கடைசி நாட்களில் இத்தகைய செயற்பாடுகள் தாராளமாக நடைபெறும் என்பதனைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

நவம்பர்

25

***வி**சுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய் (1தீமோ. 6:12);*

"நல்ல போராட்டம்"

கிறிஸ்துவின் சிலுவையை அறியவேண்டிய பிரகாரம் ஒரு கிறிஸ்தவன் அறிந்தவுடன், அவனுக்கெதிராகப் போராட்டம் ஆரம்பமாகிறது. பிசாசானவன் சாத்தியமான ஒவ்வொரு வழி யினாலும் போராட்டத்தைத் துரிதப்படுத்துவான் (**எபேசி.** 6:12). கிறிஸ்துவினால் தான் சிலுவையில் முற்றுமுழுவதுமாகத் தோற்கடிக்கப்பட்ட விபரத்தை (**கொலோ.** 2:14-15) விசுவாசி அறிய முடியாதபடிக்குப் பிசாசானவன் தன்னுடைய முழுப்பலத்தையும் பிரயோகிக்கிறான்.

நம்முடைய நெருங்கிய உறவினர்கள் மூலமாகவும், நண்பர் கள் மூலமாகவும், கிறிஸ்தவர்கள் மூலமாகவும், கள்ளப்போதகர் கள் மூலமாகவும், கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாகவும், சூழ்நிலை கள் மூலமாகவும், மாம்சத்தின் மூலமாகவும், உலகத்தின் மூல மாகவும் இந்தப் போராட்டத்தை நடைமுறைப்படுத்துகிறான். ஒரு விசுவாசி, சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை வேறொன்றிற்குத் திசைதிருப்புவதே

இந்தப் போராட்டத்தின் இறுதி நோக்கமாகும். அந்த முயற்சியில் சாத்தான் வெற்றிபெற்றால், விசுவாசி தோல்வியைத் தழுவிக் கொள்வான்; எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவர்கள் இதற்குள் அடங்குகிறார்கள் (**மத்.** 7:22-23); ஆனால், பரிசுத்த ஆவியானவர் இன்றும் (அந்த) **விசுவாசத்தின்** (அந்த) **நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்** (I**தீமோ.** 6:12) என எச்சரிக்கை கொடுத்த வண்ணமாயிருக்கிறார். இந்தப் பாரிய போராட்டத்தின் மத்தியிலும் அந்த விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டவன் ஈடிணையற்ற கிறிஸ்துவின் வெற்றியைத் தனதாக்கி, அநுதினமும் அதன் பலாபலன்களை அனுபவிக்கமுடி யும் (**லூக்.** 9:23); இதற்கு நாம் ஏதாவது செய்து இந்தப் போராட் டத்தைப் போராடவேண்டுமென அவர் சொல்லவில்லை; இயேசு கிறிஸ்து நம் சார்பில் நிறைவேற்றியதை அறிந்து, அதனை விசு வாசிப்பதையே அவர் எதிர்பார்க்கிறார் (**ரோம.** 6:3-5; 11, 8:1-2, I**கொரி.** 1:23, 2:2). ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

நவம்பர்

26

***தே**வபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு (II தீமோ. 3:5).*

"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள்"

கடைசி நாட்களில் உலகத்தின் நிலைமை எப்படியிருக்கும் என்பதுபற்றிப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தக் கடைசிக்காலம் நாம் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் காலமாகும். வெகுசீக்கிரத்தில் ஆண்டவரின் வகுப்பீடு (Dispensation) முடிவுக்கு வருகிறது; நீதிமான்கள் சீக்கிரத்தில் இழுத்துக்கொள்ளப்படுவார்கள் (**I தெச. 4:14-18**). அதற்குப் பின்பு அந்திக்கிறிஸ்துவின் வருகையைத் தொடர்ந்து பிரளயம்போல் ஒருபொழுதும் கண்டிராத நியாயத் தீர்ப்புக்குள் உலகம் தள்ளப்படும்; அப்படி நடக்கும் என்று ஆண்டவர் இயேசுகிறிஸ்துவே சொல்லியிருக்கிறார் (**மத். 24:21**). அதற்குப் பின்பு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், தேவனுடைய ராஜ்யம் வருவதையும், இஸ்ரவேலின் மீட்பையும் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்துகிறது; ஆகையால், நாம் இப்பொழுது சபையின் கடைசிக்காலத்தில் இருக்கிறோம் என்பதனை முதற்கண் அறிந்திருக்கவேண்டும்.

சிலரின் வேதத்திற்கு ஒவ்வாத தர்க்கவாதத்தின்படி, உலகம் நாளுக்கு நாள் நன்றாயிருக்கிறது என்று சொல்கிறார்கள்;

இதனைப் பவுல் அப்போஸ்தலரின் கூற்று, முற்றுமுழுவதும் நிராகரிக்கிறது. கிறிஸ்தவம் மற்ற மதங்களோடு கைகோர்த்து, தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழைவதாகக் கூறுகிறார்கள். அதற்குப் பின்பு இயேசு வருவார் என்கிறார்கள். இந்த மாதிரியான போதனை மிகுந்த உபத்திரவ காலம் இல்லையெனவும், அந்திக்கிறிஸ்துவின் எழுச்சி இல்லையெனவும், அர்மகெதோன் யுத்தம் இல்லையெனவும் கூறுகிறது; இவை யாவும் வேதவாக்கியத்திற்கு விரோதமானவைகளாகும். உண்மையில், வேதாகமம் நாளுக்கு நாள் உலகம் நன்றாயிருக்கிறது என்று உபதேசிக்கவில்லை; உலகம் நாளுக்குநாள் மோசமடைகிறது என்றே சொல்லப்பட்டிருக்கிறது; அதுமட்டுமல்ல, **1தீமோத்தேயு 4:1**ல் சபைகள் விசுவாசத்தைவிட்டு, முற்றுமுழுவதுமாக விலகுகிறது என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

சபைகள் தற்பொழுது **"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்"** என்றே சொல்லப்பட்டிருக்கிறது; அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் என்பதன் பொருள் என்ன? பவுல் அப்போஸ்தலர் **"சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது"** (**1கொரி. 1:18**) எனச் சொல்லியிருக்கிறார். சிலுவையைப்பற்றிய உபதேசம் எப்படித் தேவபெலனாயிருக்கிறது? உண்மையில் வெறுமனே சிலுவையில் ஒரு வல்லமையும் இல்லை; மரணத்திலும் நிச்சயமாக ஒரு வல்லமையும் இல்லை; வல்லமை பரிசுத்த ஆவியிலேயே உண்டு. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய எல்லைக்குள்ளேயே செயற்படுகிறாரேயன்றி வேறெந்த வழியினாலும் செயற்படுவதில்லை (**ரோம. 8:2**).

விசுவாசி கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் தன் வல்லமையை வெளிப்படுத்துவார்.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் சார்பில் செயற்படும் வல்லமையைப்பற்றியே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது; ஆயினும், தற்போதைய சபைகள் ஒட்டுமொத்தமாகக் கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிக்கிறது; சிலுவை நிராகரிக்கப்பட்டு, உதாசீனஞ்செய்யப்பட்டு, கேலிசெய்யப்பட்டு, ஒதுக்கப்படுகிறது; அத்தகைய சூழ்நிலைகளில் பரிசுத்த ஆவியானவர் செயற்படுவதில்லை; ஆகவே, அவருடைய வல்லமையும் நிராகரிக்கப்படுகிறது.

எத்தனை கிறிஸ்தவ சபைகள் கிறிஸ்துவின் சிலுவையை உபதேசிக்கிறது? மிகவும் சொற்பமானதே! ஏன்? அதற்குப் பல காரணங்கள் உண்டு; ஆயினும் அவிசுவாசமே முக்கியமான காரணமாயிருக்கிறது. சபைகளின் போக்கு மோசமாயிருந்தாலும், கடைசிநாட்களில் தேவன் பெரிய காரியங்களைச் செய்வார். அது கடந்தகாலத்தில் செய்ததைவிடப் பிரமிக்கத்தக்கதாக இருக்கும். அநேகமான சபைகள் அதிகமாய்ச் சத்தியத்தைவிட்டு விலகினாலும், தானியேல் தீர்க்கதரிசனமாக **"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள். துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான். ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்"** (**தானி.** 12:3, 10) என்று சொல்லியிருக்கிறான்.

நவம்பர்

27

***நி**த்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தகிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபி. 9:14).*

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்"

கிறிஸ்துவின் இரத்ததைப் பிரதிபலிக்கும் மிருகங்களின் இரத்தம் தீட்டுப்பட்டவர்களைப் பரிசுத்தப்படுத்துமானால் (**எபி.** 9:13); இயேசுகிறிஸ்துவின் உண்மையான இரத்தம் எவ்வளவாகப் பாவத்தைச் சுத்திகரிக்கமுடியும்; அப்படியானால், கிறிஸ்துவின் சிலுவையைத்தவிர, மனிதர் முன்மொழியும், எந்தத் தீர்வும் தூக்கி எறியப்படுகிறது.

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த" என்ற சொற்றொடரிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் சொல்லும்வரையும் கிறிஸ்து மரிக்கவில்லை என்பது தெளிவாகிறது. **யோவான்** 10:18ல் **"ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்**

கொண்டேன்" எனத் தெளிவாகக் கூறியிருக்கிறார். **"பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்"** என்ற சொற்றொட ரைப் பரிசீலனை செய்யும்பொழுது **"இயேசு ஆவியில் மரித்தார்"** என்ற வேதத்திற்கு ஒவ்வாத உபதேசம் தூக்கியெறியப்படுகிறது; கிறிஸ்து சிலுவையில் ஆவியில் மரித்தார் என்ற உபதேசத்தை ஏற்றுக்கொள்வோமாயின், அவர் சிலுவையில் பாவியாக மரித் தார் என்றே பொருள்படும்; அப்படியாயின், கிறிஸ்து பழுதான பலியாகத் தன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் அதனை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது வெளிப்படையாயிருக் கிறது (**லேவி.** 22:20-25); தேவன் பரிபூரணமான பலியையே ஏற்றுக்கொள்வார் (**லேவி.** 1:3, 4:32).

கிறிஸ்து சிலுவையில் மரித்தபொழுது மனுஷகுலத்தின் பாவத்தின் தண்டனையைத் தான் ஏற்றுக்கொண்டதனால், சிலு வையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, சரீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். அவருடைய பலி பரிபூரணமாக இருந்தபடி யினால், தேவன் சதாகாலத்திற்கும், சகல பாவங்களுக்கும் அத னைக் கொடுப்பனவாக ஏற்றுக்கொண்டார். எவன் கிறிஸ்துவை விசுவாசிக்கிறானோ, அவனுடைய கடந்தகால, நிகழ்கால, வருங் காலப் பாவத்துக்கும் கொடுப்பனவாகக் கிறிஸ்துவின் பலி தேவ னால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனச் சொல்லப்பட்டிருக்கிறது (**யோவா.** 3:16).

"தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சி யைச் செத்தகிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" என்ற சொற்றொடரின் பொருள், கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிய எளிமையான விசுவாசம் அல்லாத எதுவும் செத்த கிரியைகளாகும்;

நவம்பர்

28

***அ**ந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும் (எபி. 10:20),*

"திரைச்சீலை கிழிக்கப்பட்டிருக்கிறபடியால் துணிவாக வாருங்கள்"

"முடிந்தது", பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று மகா சத்தமாக இயேசுகிறிஸ்து சொல்லி தன் ஜீவனைவிட்டவுடன் ஆலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது **(மத். 27:51)**.

மகா பரிசுத்த ஸ்தலத்தை மூடியிருந்த தடிப்பான அந்தத் திரைச்சீலையை மேலிருந்து கீழாகத் தேவன் தம்முடைய கரத்தினால் கிழித்தார்; அதன்மூலம் மனுஷகுலத்திற்கு அவர் அறிவித்தது என்னவென்றால், **"எனது குமாரன் தன்னுடைய மரணத்தினால் ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார்; இதனை விசுவாசிப்பவர்கள் துணிவாக எனக்கு முன்பாக வரமுடியும்; மனுஷனால் முடியவில்லை; ஆனபடியினால் என் குமாரன் மூலமாக அதனைச் செய்தேன்"** என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய இருதயம் நம்மிடத்தில் இரக்கமாயிருந்து நம்மெல்லோரையும் துணிவாக விசுவாசத்தினால் நிரம்பின நம்பிக்கையோடு, தனக்கு முன்பாக வரவேண்டுமென்று தேவன் அழைக்கிறார். ஆலயத்தில் கிழிக்கப்பட்ட திரைச்சீலை ஒரு

வெளிப்படையான அடையாளமாக இருக்கிறது; அதென்னவென் றால், உண்மையான திரை இயேசுகிறிஸ்துவினுடைய சரீர மாகும்; அந்தச் சரீரமே நமக்காகச் சிலுவையில் கிழிக்கப் பட்டது; **"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரை யின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிர வேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரி யம் உண்டாயிருக்கிறது"** (**எபி.** 10:19-20);

சடங்குகள் இல்லை; சரீரக்கிரியைகள் இல்லை; பாரம்பரியம் இல்லை; வெளிப்படையான பரிபூரணத்துவம் தேவையில்லை; நீ இருப்பதுபோலவே விசுவாசித்து வா; வந்து அவருடைய கிருபை யையும் இரக்கத்தையும் தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்; அவர் உன்னில் அன்பாயிருக்கிறார்; தைரியமாய் அவரது கிருபா சனத்தண்டையில் சேரக்கடவோம் (**எபி.** 4:15-16) என உறுதிப் படுத்தியிருக்கிறார்;

நவம்பர்

29

***வி**சுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள் (எபி. 11:11).*

"வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர்"

நீங்கள் தேவனை எப்படி எண்ணுகிறீர்கள்? இந்த அறிக்கையை உணருகிறீர்களோ இல்லையோ நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனை நியாயந்தீர்க்கிறீர்கள் என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

இந்தக் கிறிஸ்தவ அனுபவத்தைக் கிறிஸ்துவின் சிலுவை அல்லாமல், வேறேதாவது வழியினால் வாழமுயற்சித்தால், தேவன் தான் தந்த வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவரல்ல என்று நாம் நியாயந்தீர்க்கிறோம். அது என்ன அந்த வாக்குத்தத்தம்? உண்மையில் அந்த வாக்குத்தத்தத்தைத் தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்திருந்தார். கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமுக்குக் கொடுத்த அந்த வாக்குத்தத்தம் எனக்கும் உங்களுக்கும் பொருத்தமானதே (**கலா.** 3:7). அந்த வாக்குத்தத்தம் **"யேகோவாயீரே"** எனப்படும்; இதன் பொருள், கர்த்தர் கொடுப்பார் எனப்படும் (**ஆதி.** 22:13-14); என்னத்தைக் கொடுப்பார்? அவர் மனுஷகுலத்திற்கு ஒரு மீட்பரைக் கொடுப்பார்; ஆம், அவர் சொன்ன மாதிரியே, காலம் நிறைவேறியபொழுது (**கலா.** 4:5) ஒரு இரட்சகரைக் கொடுத்துத் தன்னுடைய வாக்குத்தத்தத்தை

நிறைவேற்றியுள்ளார். அவர் மனுஷகுலத்தை மீட்டுக்கொள்வது மட்டுமல்ல, மனுஷனுக்கு நித்திய ஜீவனையும் கொடுப்பார்; அது மட்டுமல்ல, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையையும் கொடுப்பார்; சுருக்கமாக, நமக்குத் தேவையான சகலத்தையும் கொடுப்பார்; இவை யாவும் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்துக்குள் அடங்குகிறது; இது அந்த விசுவாசத்தினாலேயே சாத்தியமாகிறது (**Iகொரி.** 2:2).

கர்த்தர் இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்று எண்ணுகிறீர்களா? எண்ணுவீர்களாயின் நீங்கள் அவரையும், அவர் தன்னைப் பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததையும் உங்களுக்குள்ளே நம்புவீர்கள், இல்லாவிட்டால் வேறொன்றை நம்புவீர்கள். துரதிஷ்டவசமாக எண்ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவர்கள் வேறொன்றைப் பார்த்து, தேவனை நியாயந்தீர்க்கிறார்கள்.

ஆபிரகாம் மூலம் தேவன் உலகத்திற்கு நான் ஒரு மீட்பரைத் தருவேன், அவர் பாவத்திலிருந்து மனுஷனை இரட்சிப்பார் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (**மத்.** 1:21). இந்த மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பரிசுத்த ஆவியையும் தருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (**கலா.** 3:14). ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையைத் தருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (**யோவா.** 10:10; **IIIயோவா.** 2); இதன் பொருள், எந்த வழியினாலும், எந்தத் தோற்றத்தினாலும் அந்தப் பாவம் நம்மை மேற்கொள்ளாது (**ரோம.** 6:14) என உறுதிப்படுத்தியிருக்கிறார். மேலும் தொடர்ச்சியாகக் கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசிப்போமானால் (**லூக்.** 9:23; **ரோம.** 6:3-5, 8:1-2, 11), சகல நன்மைகளையும் தொடர்ச்சியாக அனுபவிக்க முடியும். அதற்காகவே மிகப்பெரிய விலையை நமக்காகக் கொடுத்திருக்கிறார்; உண்மையில் இவற்றை நம்புவோமாயிருந்தால், சகலதும் கிறிஸ்துவின் சிலுவை மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது என்பதனை விளங்கிக்கொள்ளமுடியும்; விளங்கிக்

கொண்டபடியே நம்முடைய விசுவாசத்தைச் சிலுவையில் நங்கூரமிடுவோமாக. அப்படியே தேவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியுள்ளார் என்றும் எண்ணுவோமாக.

அப்படி இல்லையாயின், வேறொன்றில் நாம் நாட்டங் கொள்ளுவோம்; அப்பொழுது **"தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை" (எரேமி. 2:13)** நமக்கு வெட்டுகிறோம்; இதன் முடிவோ **II கொரிந்தியர் 11:4**ல் சொல்லப்பட்ட **வேறொரு இயேசு, வேறொரு சுவிசேஷம், வேறொரு ஆவி** அவர்களை ஆட்கொள்கிறது; அதுமட்டுமல்ல, **ஏசாயாவின் தீர்க்கதரிசனமும் (மத். 13:14-15)** அவர்களில் நிறைவேறுகிறது.

நவம்பர்

30

***வி**சுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான் (எபி. 11:21).*

"தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்"

ஆதியாகமம் 48ம் 49ம் அதிகாரங்களில் யாக்கோபு கோலின் முனையில் சாய்ந்ததாகக் குறிப்பிடப்படவில்லை; அதில் குறிப்பிடப்படவில்லையென்ற ஒரே காரணத்துக்காக யாக்கோபு தன் இறுதிநேரத்தில் கோலின் முனையில் சாய்ந்து தொழுதுகொள்ளவில்லை என்றும், அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் நாம் ஊகிக்கமுடியாது (**யோவா. 20:30, 21:25**).

இந்தத் தகவலைப் பவுல் அப்போஸ்தலர் யூதர்களுடைய பழைய ஏற்பாட்டின் வேதவியாக்கியானத்திலிருந்து எடுத்து எபிரெயர் நிருபத்தில் புகுத்தியிருக்கிறார். பவுல் அப்போஸ்தலரின் நிருபத்தில் உள்ளடக்கப்பட்ட சகல வேதவசனங்களும் பரிசுத்த ஆவியானவரால் அனுமதிக்கப்பட்டபடியினால், யாக்கோபைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலர் கூறிய இந்தச் செய்தி சரியானதே. முன்பு ஜனங்கள் உபயோகிக்கும் கைக்கோல் வெறுமனே நடப்பதற்கு உதவும் ஒரு கருவி மாத்திரமல்ல, அதில் வேறு சில உபயோகமும் இருந்தது.

பலர் அந்தக் கைத்தடியில், தம்முடைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை வெகு சுருக்கமாகச் செதுக்கி, அவற்றை அதனில் பதித்து, அதனை நினைவுகூருவதுமுண்டு. அப்படியே யாக்கோபுவும், ஆதாமின் காலத்திலிருந்து தன்னுடைய வாழ்நாள்வரையும் தேவன் தனக்குக் கொடுத்த வெளிப்பாடுகளையும், ஒவ்வொரு மிகமுக்கியமான தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் மற்றும் அதிமுக்கியமான சம்பவங்களையும், அவைகள் நிகழ்ந்த காலக்கிரமத்தின்படி ஒழுங்காகத் தன் கைத்தடியில் செதுக்கிப் பதித்து வைத்திருந்தான் என்பது தெளிவாகிறது; இதுவே யாக்கோபினதும், அப்போதைய விசுவாசிகளின் வேதாகமுமாகும்.

யாக்கோபு தன் கைக்கோலின் முனையில் சாய்ந்தான் என்பது அவன் தேவனுடைய வசனத்தில் சாய்ந்தான் என்பதே அதன் பொருளாகும். அப்படியாயின் யாக்கோபு உறுதிப்படுத்துவது யாதெனில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும் நிஜமானது என்பதிலும் அவைகள் தேவனுடைய காலக்கிரமத்தின்படி பொருத்தமான நேரத்தில் நிறைவேறும் என்பதிலும் அவன் நம்பிக்கை கொண்டிருந்தான்; இதுவே விசுவாசத்தின் எதிர்பார்ப்பாகும். யோசேப்பின் இரு குமாரர்களையும் ஆசீர்வதித்த பின்பு, அவன் உறுதியாகத் தேவனுடைய வார்த்தையில் சாய்ந்து, அதை நினைவுகூர்ந்து தேவனைத் தொழுதுகொண்டான். இதனையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்கு **லூக்கா** 9:23-24ல் அறிவுறுத்தியிருக்கிறார்.

அன்றும் இன்றும் தேவனுடைய எதிர்பார்ப்பில் ஒரு வித்தியாசமும் இல்லை; நாமோ வந்தவரை விசுவாசிக்கிறோம்; பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் வரப்போகிறவரை விசுவாசித்தார்கள். விசுவாசம் எப்பொழுதும் ஒன்றே. விசுவாசத்தோடு மனுஷருடைய கற்பனைகளும் மனுஷ நீதிகளும் சேர்க்கப்படுமாயின், அது மதமாக மாறும், அப்பொழுது தேவனோடு உறவு தடைப்படும்; தேவனுடைய சமாதானம் கிடையாது.

டிசம்பர்

1

கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக் கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திர னுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்க ளுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே (எபி. 12:6-8).

"கர்த்தரின் சிட்சை"

இந்த வேதவாக்கியங்கள் சிட்சிப்பின் ஆவிக்குரிய உண்மை களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது; அந்த ஆவிக்குரிய உண் மைகள் சிலவற்றைப் பரிசீலனை செய்வது எனக்குப் பொருத்த மாயிருக்கிறது.

- சிட்சிப்பு தண்டனை அல்ல, அவைகள் திருத்தும் நட வடிக்கைகளாகும்; மீறுதல்களைச் செய்தவன் கர்த்தரிடம் செல்லுமாறு வழிநடத்தப்படுகிறான். பரிசுத்த ஆவியான வர் அவனைத் திருத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவார்; அவர் ஒருவராலேயே அதனைச் செய்யமுடியும்.

- பிரச்னை அந்தப் பாவமே; எந்தக் காலமும் பிரச்னை அந்தப் பாவமே (**எபி.** 12:4); அந்தப் பிரச்னை தீரும்வரை யும் பரிசுத்த ஆவியானவர் ஓயமாட்டார்; எவ்வளவு காலம் சென்றாலும், சிட்சை எவ்வளவு கடுமையாயிருந் தாலும், அந்தப் பாவத்தை அகற்றும்வரையும் ஆவியான வர் ஓயமாட்டார் (**யோவா.** 16:8).
- விசுவாசி கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணா திருப்பானாக (**எபி.** 12:5); அதற்குப் பதிலாக, அதன் அவசி யத்தைப் புரிந்துகொள்வானாக.
- ஒவ்வொரு உண்மையான விசுவாசியும் கர்த்தரால் நேசிக்கப்படுகிறான்; அதன் பொருள், ஒவ்வொரு உண் மையான விசுவாசியும் கர்த்தருடைய சிட்சையை அனு பவிக்கிறான்; சிட்சிப்பைப் பெறாதவன் ஒருவனுமில்லை; சிட்சிப்பைப் பெறாமல் இருக்கப்போகிறவன் ஒருவனு மில்லை.
- சிட்சிப்பு ஒருபொழுதும் நிற்பாட்டப்படப்போவதில்லை; நாம் மரிக்கும்வரையும் அல்லது கர்த்தர் வரும்வரை யும் சிட்சிப்பு முடியப்போவதில்லை; சிட்சிக்கும்பொழுது நம்மைப் பாவிகளாக அல்ல, புத்திரர்களாகவே பார்க் கிறார்; அப்படியானால், சிட்சிப்பு அன்பினால் நடை முறைப்படுத்தப்படுகிறது.
- ஒருவன் கர்த்தரில் உரிமை கோரிக்கொண்டு, தனக்கு எந்தவிதச் சிட்சிப்பும் ஒருபொழுதும் நடப்பதில்லை என்று பெருமைப்படுவானாயின், அவன் இரட்சிக்கப்பட வில்லை என்பதற்கு அதுவே பிரதானமான அடையாள மாகும்; பரிசுத்த ஆவியானவருடைய கணிப்பீடு கூர்மை யாயிருக்கிறது; அப்படிப்பட்டவர்களைப் பரிசுத்த ஆவியா னவர் புத்திரர்கள் என்று அழைக்காமல், வேசிப்பிள்ளை கள் என்றே அழைக்கிறார்.

- இவை யாவும் "**.....தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்**" (**எபி.** 12:10) எனப் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்.
- "**எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்**" (**எபி.** 12:11) என வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது..

டிசம்பர்

2

***உ**ங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக் களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித் திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர் களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத் தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோ ஜனமாயிருக்கமாட்டாதே (எபி. 13:17).*

"உங்களை நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்"

துரதிஷ்டவசமாக அநேகமான போதகர்கள் இந்த வேதவாக் கியத்தை (**எபி.** 13:17) உபயோகித்து, சபையினரைக் கட்டுப்படுத்து கின்றனர்; ஆனால் கர்த்தரோ **வெளி.** 2:15ல் "**அப்படியே நிக்கொ லாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர் களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்**" எனச் சொல்லியிருக்கிறார். நிக்கொலாய் மதம் என்பது வேதத்திற்கு இசைவில்லாத சபையின் அரசாங்கம். இந்த அரசு சபையி னரைச் சுரண்டுகிறது; இதனைக் கர்த்தர் வெறுக்கிறார் (**வெளி.** 2:6) எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

எபிரெயர் 13:17ஐத் தவறாக வியாக்கியானம் செய்ததிலிருந்து தொடங்கியதுதான் இந்த "**மூடி**" என்ற உபதேசம். பரவலாக அநேகமான கிறிஸ்தவர்கள் மத்தியில் "**மூடி**" என்ற இந்த

உபதேசம் தற்பொழுது நடைமுறையிலிருக்கிறது. கீழ்ப்படிவு உண்மையான சுவிசேஷத்திற்கேதவிர, போதகருக்கு அல்ல; தவ றான கீழ்ப்படிவின் மூலம் கோடிக்கணக்கானோர் காணாமற் போயிருக்கிறார்கள்; கோடிக்கணக்கானோர் காணாமற்போய்க் கொண்டிருக்கிறார்கள்; ஏனென்றால், அவர்கள் வேதவார்த்தைக்கு அல்ல, மனிதர்களுக்கே கீழ்ப்படிகிறார்கள்.

இப்பொழுது நடைபெறுவது என்னவென்றால், **"நான் சொல் கிறதைச் செய்"** என்ற அதிகார போதனையாகும். கத்தோலிக்க மதத்தின் இருண்ட காலத்தில் இப்படி நடைபெற்றது; பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்; அது இப்பொழுதும் தொடர் கிறது. இந்த மதக்கட்டளையை இடுபவர்கள் தாங்களும் சிலு வையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்கிறார்கள்; ஆம், அவர்கள் வேறொரு இயேசுவையே விசுவா சிக்கிறார்கள் (**IIகொரி. 11:4**) என்பதனை அறியாமலிருக்கிறார்கள். அது வேறொரு சுவிசேஷம்; அந்தச் சுவிசேஷம் வேறொரு ஆவி யினால் கட்டுப்படுத்தப்பட்டு, தற்போதைய கிறிஸ்தவ சபை களில் சர்வசாதாரணமாக நடைமுறைபடுத்தப்படுகிறது.

டிசம்பர்

3

உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக். 1:3).

"சோதனை பொறுமையை உண்டாக்கும்"

இங்கு பரீட்சையைப்பற்றித் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது; பரீட்சையினால் ஏற்படும் அனுபவம் மிகமுக்கியமானது. அந்த அனுபவமே கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிசுத்தமடைய உதவியாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பல்வேறுவிதமாக, பல்வேறு வழிகளினூடாக நாம் முற்றிலும் எதிர்பார்க்காத முறையில் சோதிக்கப்படுகிறோம். சகல சோதனைகளும் நம்முடைய விசுவாசத்தைப் பரீட்சிக்கிறது என்பதனைத் தெளிவாக அறிந்திருப்போமானால் (**லூக்.** 22:31-32), சோதனை நம்மை அணுகும்பொழுது மாம்சத்தின் பலத்தினால் அதை அணுகாமல், விசுவாசத்தின் பலத்தினால் அணுகி நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது (**IIதீமோ** 4:7). மகா பரிசுத்தமான விசுவாசம் எக்காலத்திலும் சோதிக்கப்படவேண்டியதே; பலமான விசுவாசம் பலமாகச் சோதிக்கப்படவேண்டுமென வேதாகமம் வலியுறுத்துகிறது (**லூக்.** 12:47-48).

கோத்திரத்தலைவர்களும் நியாயாதிபதிகளும், இராஜாக்களும், தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், எல்லாவற்றிற்குமேலாக

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்கூடப் பலமாகச் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியாயின் சோதனை மூல மாகவா தேவன் நம்முடைய விசுவாசத்தைக் கணித்துக்கொள் கிறார்? இல்லவே இல்லை; அவர் நம்முடைய விசுவாசத்தின் பலத்தை சோதிப்பதற்கு முன்பே நம்மைப்பற்றி அறிந்திருக்கிறார். நாம் நம்முடைய விசுவாசத்தின் பலத்தை அல்லது நம்முடைய விசுவாசத்தின் பலவீனத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற் காகவே தேவன் பரீட்சையை அனுப்புகிறார். நாம் நினைப்பது போல நம்முடைய விசுவாசம் பலமாக இருப்பதில்லை; ஆனால் அந்த விசுவாசப் பரீட்சை நமக்குப் பொறுமையை உண்டாக்கு கிறது. அந்தப் பொறுமை தேவனுக்கேற்ற விசுவாசத்தில் (**iகொரி.** 2:2) பலப்படவும் வளர்ச்சியடையவும் உதவுமானபடி யால், நாம் அதனை மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வோ மாக.

அதெப்படியெனில், நம்மை எதிர்நோக்கும் சூழ்நிலைகள் முற் றிலும் நமக்கு எதிராக இருந்தாலும், நாம் தொடர்ச்சியாக அநு தினமும் விசுவாசிக்கவேண்டும் என்பதே தேவனுடைய நிலைப் பாடாகும் (**லூக்.** 9:23). அப்படிச் செய்வது நமக்கு இஷ்டமில்லை யானால் நாம் அவருடைய சீஷர்களாக இருக்கமுடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (**லூக்.** 14:27). தேவன் நமக்கு ஒரு வாக்குத்தத்தத்தைத் தந்திருப்பாராயின் அதை நாம் காணமுடியா திருந்தும் தொடர்ந்து விசுவாசிக்கவேண்டும். ஆபிரகாம் அப்படி விசுவாசித்தானென நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே உறுதிப்படுத்தியிருக்கிறார் (**யோவா.** 8:56).

டிசம்பர்

4

விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக். 4:4).

"உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை"

ஓசியாவில் (பழைய ஏற்பாட்டில்) ஆவிக்குரிய வேசித்தனத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளை யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுகிறார் (**ஓசி.** 2:2-5, 3:1-5); அது மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்கள், அவருடைய மனைவியாகக் கருதப்பட்டார்கள் (**எரேமி.** 31:32). அப்படியே புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய ஜனங்கள், அவருடைய மணவாட்டிகளாக இருக்கிறார்கள் (**எபேசி.** 5:22-32; **மத்.** 25:1, 5, 6, 10); ஆனபடியினால் **"விபசாரரே, விபசாரிகளே"** என்ற சொற்றொடர் ஆவிக்குரிய சோரத்தன்மையைப் பிரகடனப்படுத்துகிறது.

விசுவாசிகள் இத்தகைய சொற்களால் தங்கள் ஆவிக்குரிய நிலைமையை மறுபரிசீலனை செய்வதற்கு உயிரூட்டப்படுகிறார்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் **மாற்கு** 8:38ல் இந்த வார்த்தையை சீஷர்களுக்கும் ஜனங்களுக்கும் நினைவூட்டுவதைக் காணக்கூடியதாயிருக்கிறது; கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பு ஒரு மணவாளனுக்கும் மணவாட்டிக்குமிடையேயுள்ள அன்பைப் பிரதிபலிக்கிறது (**எபேசி.** 5:25). கிறிஸ்து

என்னும் ஒரே புருஷனுக்கு நியமிக்கபட்ட கற்புள்ள கன்னிகை களாகப் பவுல் அப்போஸ்தலர் கிறிஸ்தவர்களைக் கருதுகிறார் (**IIகொரி.** 11:2); அவருடைய மனைவி கலியாணத்திற்காகத் தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று **வெளி.** 19:7ல் சொல்லப் பட்டிருக்கிறது.

கிறிஸ்துவும், உலகமும் மனுஷனுடைய இருதயத்திற்குப் போட்டிபோடுகிறபடியினால், பரிசுத்த ஆவியானவர் யாக்கோபு மூலம் கிறிஸ்தவர்களை **"உலக சிநேகம் தேவனுக்கு விரோத மான பகையென்று அறியீர்களா?"** என எச்சரித்திருக்கிறார். உலகத்திடம் விசுவாசம் திசைதிருப்பப்பட்டு, உலக ஆவியின் மேல் அல்லது மகா வேசியின்மேல் (மதத்தின்மேல்) கிறிஸ்தவர் களின் கவனம் திரும்புகிறது (**வெளி.** 17:1) எனச் சொல்லப்பட்டி ருக்கிறது. உலகத்தைத் தேவன் விரும்புகிறார் (**யோவா.** 3:16); அப்படியாயின் அவர் சொல்லுவது என்ன? அவர் உலக அன்பைப் பற்றியே சொல்லுகிறார்; அதுதான் பொல்லாத பிரபஞ்சம் (**கலா.** 1:4; **ரோம.** 12:2); அதற்குச் சாத்தானே தலைமை தாங்குகிறான் (**IIகொரி.** 4:4). உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக் கிறது (**Iயோவா.** 5:19); உலகம் கிறிஸ்துவைப் பின்தொடர்பவர் களைப் பகைக்கிறது (**யோவா.** 15:18-19); அந்த அமைப்பு கிறிஸ்து வையும், கல்வாரி சிலுவையில் அவர் நிறைவேற்றியதையும் எதிர்க்கிறபடியினால், அது கிறிஸ்தவனுக்குத் தூரமாயிருப்பதாக; அந்த அமைப்பை விட்டு வெளியே வா என்று **IIகொரிந்தியர்** 6:14-18 எச்சரிக்கிறது; உலகத்தோடும் தேவனோடும் ஐக்கியம் வைத்திருக்கமுடியாது எனக் கூறப்பட்டிருக்கிறது (**மத்.** 6:24; **ஆமோ.** 3:3).

திருமணத்தின்போது சகலதும் கைவிடப்பட்டு, ஒருவரிலேயே உறவு ஒருமுகப்படுத்தப்படுகிறது (**ரூத்.** 1:15-17); மணவாளன், மணவாட்டி என்ற சொற்கள் பவுல் அப்போஸ்தலராலும், யோவான்ஸ்நானனாலும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. நாம் நம் முடைய வாழ்க்கையில் எதற்கு முதலிடம் கொடுக்கிறோமோ

அதனிலேயே நாம் அன்பு செலுத்துகிறோம்; இதன் நிமித்தமே கர்த்தர் **யாத்திராகமம்** 20:5ல் **"எரிச்சலுள்ள தேவனாயிருந்து"** என்று சொல்லியிருக்கிறார். உலக அமைப்பில் பிரியமாயிருக் கிறவனோ உலகத்திற்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறான். **"பிரிந்திருத்தல்"** கிறிஸ்தவத்தின் மிகமுக்கியமான அம்சமாயி ருக்கிறது; **"ஒதுங்கியிருத்தல்"** அல்ல. கிறிஸ்துவை அண்டியி ருப்பதொன்றே உலகத்தைவிட்டுப் பிரிந்திருக்க உதவிசெய்யும். இதற்கு ஒரே பதில் **Iகொரிந்தியர்** 2:2 ஆகும்; அது ஒன்றே உல கத்தின் ஆசைகளைத் துரத்தும்; ஆனபடியினால்த்தான் பவுல் அப்போஸ்தலர் **Iகொரிந்தியர்** 1:23ல் **"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்....."** எனக் கூறியிருக்கிறார். கிறிஸ்துவின் சிலுவை நம்முடைய விசுவா சத்தின் குறிக்கோளாக இருக்காவிட்டால், நம்முடைய மத முயற்சிகள் எவ்வளவு ஆவிக்குரிய கனம் நிறைந்திருந்தாலும், அதனைக் கர்த்தர் உலக சிநேகிதம் என்றே பார்க்கிறார். அதன் ஆவிக்குரிய பொருள், அந்த விசுவாசி உண்மையில் தேவனுக் குப் பகைஞனாக இருக்கிறான் என்பதனை வெளிப்படுத்துகிறது.

டிசம்பர்
5

***தே**வனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள் (யாக். 4:8).*

"தேவனிடத்தில் சேருங்கள்"

தேவனிடத்தில் எப்படிச் சேருவது என்ற கேள்விக்குக் கிறிஸ்தவர்களே பதிலைத் தேடி அலைகிறார்கள்! அநேகமான கிறிஸ்தவர்கள் வேதாகம புஸ்தகத்தைத் தொடர்ச்சியாக வாசிப் பதனாலும், ஜெபம்பண்ணுவதனாலும், உபவாசிப்பதனாலும், ஆத்துமாக்களுக்குச் சாட்சிபகர்வதினாலும், தசமபாகத்தைச் சபைக்குச் செலுத்துவதனாலும், சபையின் ஊழியங்களில் பங்கு பற்றுவதனாலும் என இப்படியாக நூற்றுக்கணக்கான மனுஷ கற்பனைகளைச் செய்வதனால் தாம் தேவனிடத்தில் சேரமுடியும் என்று நினைக்கிறார்கள்.

அப்படியாயின், அவர்களுக்கும் இந்துக்களுக்கும் என்ன வித்தி யாசம்? இந்துக்களும் பெரும் கிரியைகளைத் தங்கள் தேவர்கள் பேரில் செய்கிறார்களே; அப்படியே வேற்றுமதத்தினரும் செய் கிறார்களே. அவ்வளவு இலகுவாகத் தேவனிடத்தில் சேரமுடியு மானால், இயேசுகிறிஸ்து வீணாகச் சிலுவைக்குச் சென்றாரோ? **(கலா. 2:21)** என்பதனைச் சற்று சிந்திப்பது பிரயோஜனமா யிருக்கும்.

உண்மை என்னவென்றால், நம்முடைய செய்கைகளினாலும், நம்முடைய நற்கிரியைகளினாலும் தேவனை ஒருபொழுதும் சேரமுடியாது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும் (**கலா.** 2:21); அத்தகைய முயற்சிகள் தேவனுக்கு அருவருப்பாயிருக்கும். அந்த விசுவாசத்தினால்மட்டுமே தேவனைச் சேரமுடியும்; **"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்...."** என்று **எபிரெயர்** 11:6ல் சொல்லப்பட்டிருக்கிறது; வேறெந்த வழியினாலும் தேவனைச் சேரமுடியாது.

அதென்ன அந்த விசுவாசம் என வாசகர் அறியவிரும்புவது இயற்கையானதே; அதன் பொருள், ஒருவன் இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அவனுக்காக நிறைவேற்றியதையும் முற்றுமுழுவதுமாக விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பதேயாகும் (**யோவா.** 15:4); அதென்னவென்றால், சுருக்கமாகத் தேவனுடைய மீட்பின் திட்டத்தை மொத்தமாகவும், பரிபூரணமாகவும் தன்னுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்வதேயாகும்.

அநேகமானோர் இத்தகைய விசுவாசத்தை ஏற்றுக்கொள்வதில்லை; ஏனென்றால், இது பார்ப்பதற்கும், கேட்பதற்கும் மிகவும் இலகுவாக இருப்பதனால், இரட்சிப்பில் தங்களுடைய பங்களிப்பு இல்லாமற்போய்விடுமே என்று பயப்படுகிறார்கள். பவுல் அப்போஸ்தலர் இதுபற்றி **IIகொரிந்தியர்** 11:3ல் சொல்லியிருப்பதை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்; சாத்தானே கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று ஏவாளை விலக்கினான் என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும். பல கிறிஸ்தவர்கள் தாங்களும் கிறிஸ்துவுக்குள் இருப்பதாகவும், தாங்களும் கிறிஸ்துவின் சிலுவையை விசுவாசிப்பதாகவும் சொல்கிறார்கள். அத்தகைய அறிக்கையை ஆழமாகப் பரிசீலனை செய்யும்பொழுது, அவர்கள் எதனை விசுவாசிக்கிறார்கள் என்ற உண்மை மேலெழும்புகிறது; அப்படியே யூதக்கிறிஸ்தவர்களும் சொன்னார்கள்;

ஆனால், அவர்கள் விசுவாசம் என்ற பெயரில் நியாயப்பிரமாணத்தைச் செய்வதிலேயே அக்கறை செலுத்தினார்கள்.

இப்படியிருக்க, நாமாக நம்முடைய கைகளைச் சுத்திகரிக்கவும், நாமாக இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தவும் முடியாது; அது பரிசுத்த ஆவியானவருடைய செயற்பாடாகும். நம்முடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் நிலைத்திருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தைப் பரிசுத்தமாக்குவார் (**ரோம.** 8:2). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எதனை விசுவாசிக்கவேண்டும் என்பதனை **யோவான்** 6:28-29ல் தெளிவாகச் சொல்லியிருப்பதை நாம் மிகுந்த கவனத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

டிசம்பர்
6

***நீ**ங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தை களைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (**1 பேது.** 2:3).*

"ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்"

சாத்தானே திருவசனத்தைக் களங்கப்படுத்துகிறவன்; திருவச னத்தோடு மனுஷருடைய கற்பனைகளையும், பாரம்பரியங்களை யும், பிரமாணங்களையும் இணைத்தவுடன் அல்லது திருவசனத் திலிருந்து சிலபகுதியை விலக்கியவுடன், திருவசனம் ஞானப் பாலாக அமையாமல், புளித்தமாவாகத் திரைந்துபோகிறது; அப் பொழுது அது வேறொரு சுவிசேஷமாகவும், வேறொரு இயேசு வாகவும் வேறொரு ஆவியாகவும் இருக்கும் (**2கொரி.** 11:4). வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பவன் சாத்தானுக்கு ஊழியஞ் செய்வதனால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என வேதவாக்கியம் உறுதிப்படுத்துகிறது (**கலா.** 1:8-9). உண்மையில் **"வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப் படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயி ருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல"** (**கலா.** 1:7) எனப் பவுல் அப்போஸ்தலர் எச்சரித்திருக்கிறார்.

இஸ்ரவேலிய மதத்தலைவர்கள் தம்முடைய கற்பனைகளை வேதவசனத்தோடு இணைத்து, வேதத்தைப் புளிக்கப்பண்ணி, இஸ்ரவேலிய புத்திரரின் மனதைக் கலங்கப்பண்ணி, அவர்களு டைய ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டு, ஆவிக்குரிய

செவிகள் அடைக்கப்பட்டு, இருதயம் மந்தமாகி, அவர்கள் தேவ னைவிட்டுப் பிரிந்தனர் (**மத்.** 13:13-15). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் புளிப்பின் தாக்கத்தைக் குறித்து எச்சரிக்கை செய்திருப்பதை நாம் வேதாகமத்தில் காண் கிறோம் (**மத்.** 16:6, 11; **மாற்.** 8:15; **லூக்.** 12:1; **Iகொரி.** 5:6-8; **கலா.** 5:9).

இந்த இக்கட்டிலிருந்து விசுவாசிகளாகிய நாம் தப்பிப்பிழைக்க வேண்டுமாயின் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் எனப் பரிசுத்த ஆவியானவர் அறிவு றுத்தியிருக்கிறார். களங்கமில்லாத திருவசனத்தை நாம் அறிந்து அதனுடைய பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிய அறிவு மிகமுக்கியமானதா யிருக்கிறது; ஏனெனில், வேதவசனம் கிறிஸ்துவின் சிலுவை யைப்பற்றியே கூறுகிறது. ஒருவன் கிறிஸ்துவின் சிலுவை யைப்பற்றி அறியவேண்டிய பிரகாரம் அறியாவிட்டால், அவன் வேதவசனத்தையும் அறியவேண்டிய பிரகாரம் அறியமாட்டான்.

எப்படியெனில், சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு எனத் தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறியிருக்கும் பவுல் அப்போஸ் தலர் **"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்** ....." (**Iகொரி.** 1:23) எனக் கூறியிருக்கிறார்; அப்படியானால், பவுல் அப்போஸ்தலர் சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தபொழுது அவர் திருவசனத் தையே பிரசங்கித்தார் என்பது தெளிவாகிறது. மேலும் ஒருபடி கூடச்சென்று அப்போஸ்தலர் யோவான் இதுபற்றிக் கூறியிருப் பதைப் பார்ப்போம். யோவான் இயேசுவைப்பற்றிப் பிரஸ்தாபிக் கையில் வார்த்தையும் தேவனும் ஒன்று என்றும், அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார் என்றும் (**யோவா.** 1:1, 14) கூறியிருக்கிறார்; அப்படியாயின், அந்த மாம் சமான வார்த்தை இயேசுகிறிஸ்துவே என்பதும், தேவனாகிய

கர்த்தரே மாம்சத்தில் மனுஷனாக வந்திருந்தார் என்பதும் தெளிவாகிறது. இப்படியிருக்க, யோவான்ஸ்நானன் அவரை நோக்கி: "…. **இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி**" (**யோவா.** 1:29) என மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்திருக்கிறான்; அப்படியாயின் உலகத்தின் பாவங்களுக்காகச் சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்துத் தன் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, மனுஷ குலத்தை அந்தப் பாவத்திலிருந்து விடுதலை செய்த உலக இரட்சகர் இயேசுகிறிஸ்துவே என்பது தெளிவாகிறது.

ஆகவே, மேற்கூறியவற்றிலிருந்து நான்கு முக்கிய அம்சங்களைக் காண்கிறோம். அவையாவன: 1. திருவசனமே தேவன்; 2. திருவசனமே இயேசு 3. திருவசனமாகிய இயேசுவே மாம்சத்தில் இந்த உலகத்திற்கு வந்தார்; 4. திருவசனமாகிய இயேசுவே சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, மரித்துப் போயிருந்த மனுஷகுலத்தைப் பாவத்திலிருந்து விடுதலை செய்த தேவ ஆட்டுக்குட்டியாகும். அந்த ஆட்டுக்குட்டி பரலோகத்தில் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியில் நிற்பதை அப்போஸ்தலர் யோவான் காண்கிறார் (**வெளி.** 5:6); ஆகவே ஒருவன் அந்தத் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவையும், அவர் சிலுவையில் அடிக்கப்பட்டதையும் அறியாவிட்டால், அவன் அவருடைய உயிர்த்தெழுதலில் இணைக்கப்படமாட்டானெனப் பவுல் அப்போஸ்தலர் (**ரோம.** 6:5) கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, ஒருவன் அவரை யூதா கோத்திரத்துச் சிங்கமாகவும் ராஜாதி ராஜாவாகவும் அறியவேண்டுமானால், அவன் முதற்கண் அவரை அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக அறியக் கடவன்; அதுவே திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்.

டிசம்பர்

7

***நி**யாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (1பேது. 4:17-18).*

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய சபையிலேயே முதலில் ஆரம்பமாகிறது"

என்ன காரணத்திற்காகப் பூமி அதிர்ச்சி, சுனாமி, பயங்கர வாதம், எயிட்ஸ், பஞ்சம், வெள்ளம், மனுஷனுக்கு எதிராக மனுஷனின் வன்முறை என இப்படியாகப் பல்வேறுவிதமான அனர்த்தங்கள் பூமியில் ஏற்படுகிறது என்ற கேள்வியைக் கிறிஸ்தவர்களிடம் கேட்டால், அநேகமான கிறிஸ்தவர்களும், போதகர்களும் ஓரினச்சேர்க்கை, கருச்சிதைவு போன்றவைகளே அதற்குக் காரணமெனப் பல்வேறுவிதமான பாவச்செயல்களை அடுக்குகிறார்கள். அருவருக்கத்தக்க இந்தப் பாவச்செயல்கள் தான் தேசத்தின் பிரச்னை அல்ல; வேதவாக்கியத்தின்படி **"தேவனுடைய வீடே"** முக்கியமான காரணம் என்று சொல்லப்படுகிறது. தேசத்திலுள்ள கிறிஸ்தவ சபைகள் பரிதாபகரமாகத் தம்முடைய கடமையிலிருந்து தவறியுள்ளது; ஏனெனில், விநோதமான பிரசங்கமேடையின் பின்னால் நின்று மிகவும் சொற்பமாகவே சுவிசேஷம்

பிரசங்கிக்கப்படுகிறது; கிறிஸ்தவத்தின் இருதயத்துடிப்பு, கிறிஸ்துவின் சிலுவையே; இந்த நவீன யுகத்தில் கிறிஸ்துவின் சிலுவை காலங்கடந்த உபதேசமெனக் கருதி, அது குப்பைத்தொட்டிக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **மத்தேயு** 21:31ல் கூறியிருப்பதன் மூலம், வேசித்தனத்தையும் களவையும் ஆதரிக்கிறார் என்று பொருள்படாது; அவர் சொல்லுவது என்ன வென்றால், ஆயக்காரரிலும், வேசிகளிலும் சிலர் மனந்திரும்புவார்கள்; ஆனால் மதத்தலைவர்களோ இலகுவாக மனந்திரும்ப மாட்டார்கள் (**மத்.** 21:32) என்பதனையே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

விசுவாசிகளிடத்திலேயே நியாயத்தீர்ப்பு முதலில் ஏற்படுகிறது. அவர்களுடைய விசுவாசம் சிலுவையிலோ அல்லது வேறெதனிலோ இருக்கிறது என்பது நிர்ணயிக்கப்பட்டு, அதற்கேற்றபடி நியாயத்தீர்ப்புக் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவின் சிலுவை ஒன்றே நியாயத்தீர்ப்பை விலக்குகிறது; ஏனென்றால், கிறிஸ்து நியாயத்தீர்ப்பை நமக்காகச் சிலுவையிலேயே பெற்றிருக்கிறார். தன்னுடையவர்களையே தேவன் நியாயந்தீர்ப்பாரானால், மீட்கப்படாதவர்களை எவ்வளவாக நியாயந்தீர்ப்பார்? கிறிஸ்துவின் சிலுவை ஒன்றே தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறுத்திவைக்கிறது என்பதனை நாம் எந்தக் காலத்திலும் புரிந்து வைத்திருக்கவேண்டும். தற்போதைய சபைகளில் சுவிசேஷம் அறவே போதிக்கப்படுவதில்லை; சிலுவை போதிக்கப்பட்டால், நியாயத்தீர்ப்பு நிறுத்திவைக்கப்படும்; சிலுவை அதிகமாகப் பிரசங்கிக்கப்பட்டால், நியாயத்தீர்ப்புத் தவிர்க்கப்படும். சிலுவை கொஞ்சமாகப் பிரசங்கிக்கப்பட்டால், தேசம் நியாயத்தீர்ப்புக்குத் திறந்து விடப்படும்; அது தற்பொழுது நடைபெறுகிறது; மனுஷனுக்கும் நித்திய நரகத்திற்குமிடையில் சிலுவை நிற்கிறது. நாம் சிலுவைக்கு அப்பால் போனால், நம்மை நரகம் வரவேற்கிறது; அதனை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது.

டிசம்பர்

8

நா*ய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல் லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக் குச் சம்பவித்தது (*II*பேது. 2:22).*

"நாய் தான் கக்கினதைத் தின்றது; பன்றி சேற்றிலே புரண்டது"

பேதுரு அப்போஸ்தலர் ஒரு உவமானத்தின்மூலம் நடை முறையிலிருக்கிற உண்மைச் சம்பவத்தைத் தெளிவுபடுத்து கிறார்; அதனைப் பரிசுத்த ஆவியானவரும் அனுமதித்திருக் கிறார். அப்படியே நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வும் நாளாந்த வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களை எடுத் துக்காட்டி, அளப்பரிய ஆவிக்குரிய உண்மைகளை நமக்குத் தந்தி ருக்கிறார். **"நாய் தான் கக்கினதைத் தின்னவும்"** என்ற சொற் றொடர் **நீதிமொழிகள்** 26:11ல் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

சாலொமோன் **நீதிமொழிகள்** 26:11ல் **"நாயானது தான் கக்கி னதைத் தின்னும்படி திரும்புவதுபோல, மூடனும் தன் மூடத் தனத்துக்குத் திரும்புகிறான்"** எனக் கூறியிருக்கிறான். **"நிபந்த னையற்ற நித்திய பாதுகாப்பு"** என்ற பொய்யான உபதேசத்தை ஏறெடுப்போர், இங்கு சொல்லப்பட்ட **"நாய்" "பன்றி"** என்ற சொற் கள் **இரட்சிக்கப்படாதவர்களைக்** குறிப்பிடுகிறது எனச் சொல்லி, தங்களது பொய்யான உபதேசத்தை ஏறெடுப்பதற்கு இந்த வேத

வசனத்தின்மூலம் ஆதரவு தேடுகிறார்கள்; ஆனால், பரிசுத்த ஆவியானவர் பேதுரு அப்போஸ்தலர்மூலம் ஒரு முக்கியமான ஆவிக்குரிய கருத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் சொல்கிறது என்னவென்றால், கர்த்தருடைய வழியைவிட்டு விலகி, பாவத்துக்கும், அவிசுவாசத்துக்கும் திரும்பும் விசுவாசிகளையே **"நாய் தான் கக்கினதைத் தின்னவும்"** என்று சொல்கிறார். இது அருவருக்கத்தக்கதொன்றாய் இருக்கிறது; அப்படியே கர்த்தரைவிட்டு விலகுவதும் அருவருக்கத்தக்கதாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தை மீண்டும் மீண்டும் கேட்டும் கர்த்தரை ஏற்றுக்கொள்ளாதவர்களைப்பற்றி இங்கு கூறவில்லை; அவர் விசுவாசிகளைப் பற்றியே சொல்லியிருக்கிறார்.

உண்மையாகக் கர்த்தரிடத்தில் வந்து, இரட்சிக்கப்பட்டு, கர்த்தருக்காகச் சில வருஷகாலம் வாழ்ந்து, அதன்பின் கள்ளப்போதகர்களின் தவறான உபதேசங்களைக்கேட்டு, திசைமாறிப்போனவர்கள் மனந்திரும்பாவிட்டால், அழிவையே சந்திப்பார்கள்; அதன் பிரதிபலன் என்ன என்பதனையே **"நாய் தான் கக்கினதைத் தின்னவும்; பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது"** எனக் கூறியிருக்கிறார்.

கழுவப்பட்ட பன்றி, சேற்றில் புரளவும் திரும்பினது என்பதன் ஆவிக்குரிய பொருள், கிறிஸ்தவர்கள் பொய்யான உபதேசங்களுக்குள் மாட்டுப்பட்டு, **IIபேதுரு 2:1**ல் சொல்லப்பட்ட கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளுக்குள் தங்களை உட்படுத்தி, வழி தவறிப்போகிறார்கள் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கேட்டுக்கேதுவான வேதப்புரட்டின் உட்கருத்து **"கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிப்பதேயாகும்"**; அதாவது கல்வாரி சிலுவைதான் மனுஷகுலத்தின் பிரச்னைக்குத் தீர்வு என்பதனை நிராகரிப்பதாகும். கள்ளப்போதகர்கள் கெட்டித்தனமாகச் சிலுவையை நிராகரித்து, அதனைக் கேலிசெய்து, கேட்பவர்களை ஏமாற்றி, தாங்களும் ஏமார்ந்துபோகிறார்கள் (**IIதீமோ. 3:13; IIபேது. 2:12**).

கிறிஸ்துவின் சிலுவையே இரட்சிப்புக்கும், பரிசுத்தத்திற்கும், நாளாந்தக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் ஒரே தீர்வாக இருக்கிறது; அதனைத் தவிர்த்தால் முடிவு II**பேதுரு** 2:22ல் சொல்லப்பட்டதுபோல ஆகும்.

தற்போதைய போதகர்கள் **எபிரெயர்** 6:1ல் சொல்லப்பட்டிருப்பதைத் திரித்து, இரட்சிக்கப்பட்ட பின்பு, சிலுவைக்கு அப்பால் நாம் செல்லவேண்டும் என்று சொல்லி, வேறொன்றிற்கு விசுவாசிகளைத் திசைதிருப்புகிறார்கள். சிலுவைக்கு அப்பால் சென்றால், நாய் கக்கினதைத் தின்னவும், பன்றி சேற்றில் புரளவும் திரும்புவதேயன்றி வேறொன்றுமல்ல; சிலுவையைக் கைவிட்டால் அதுவே முடிவாகும்; சிலுவைக்கு அப்பால் நரகமே வரவேற்கிறது.

டிசம்பர்

9

முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்ன வெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வரு வார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப் பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள் (II பேது. 3:3-4).

"கடைசிநாட்களின் பரியாசக்காரர்"

பேதுரு அப்போஸ்தலர் கடைசிநாட்களைப்பற்றிப் பேசுகிறார். தற்பொழுது நடைமுறையிலிருக்கும் நாட்கள் அந்தக் கடைசி யின் கடைசி நாட்களாகும் (**மத்.** 24:32-33); இந்த நாட்கள் முற்று முழுவதும் பரியாசக்காரர்கள் நிறைந்திருக்கிற காலமாகும். இந்தப் பரியாசக்காரர்கள் தேவனுடைய வார்த்தையின்படி நட வாமல், தங்களுடைய சுய இச்சையின்படி நடப்பவர்களாகும்.

"**முதலாவதாக நீங்கள் அறியவேண்டியது என்னவெனில், கடைசிநாட்களில் பரியாசக்காரர்கள் வந்து**" என்ற சொற்றொட ரில், நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்களைப் பற்றியே சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலர் மூலம் தான் சொல்லுவதை நாம் அவதானமாகக் கவனிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அடுத்ததாக, இந்த வேதவாக்கியம் உயிர்த்தெழுதலுக்கும் இரண்டாம் வருகைக்கும்

முதலிருக்கும் நாட்களைப்பற்றியே இங்கு குறிப்பிடுகிறது என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும் (**IIபேது.** 3:4).

வரப்போகிற மிகமுக்கியமான சம்பவங்கள் இந்தக் கடைசி நாட்களில் நிறைவேறும்; அந்த மிகமுக்கியமான சம்பவங்கள் என்னவென்றால், (1) சபையின் உயிர்த்தெழுதல்; (2) அந்திக் கிறிஸ்துவின் வருகை; (3) இஸ்ரவேல் அந்திக்கிறிஸ்துவை மேசியா என்று நம்பி ஏற்றுக்கொள்ளுதல் (**யோவா.** 5:43); (4) **வெளி.** 6ம் அதிகாரத்திலிருந்து 19ம் அதிகாரம் வரைக்கும் சொல்லப்பட்ட 7 வருஷத்தை உள்ளடக்கும் மிகுந்த உபத்திரவகாலம்; (5) அர்மகேதோன் யுத்தம்; (6) கர்த்தரின் இரண்டாம் வருகை; (7) 1000 வருஷகால ஆட்சி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது; இந்த ஆட்சியின்பொழுது ஆண்டவர் இயேசுகிறிஸ்து நேரடியாக எருசலேமிலிருந்து ஆட்சிசெய்வார். அப்பொழுது மகிமைப்படுத்தப்பட்ட பரிசுத்தவான்கள் அவருக்கு ஊழியஞ்செய்வார்கள்; (8) தீர்க்கதரிசிகள் சொன்னபடி இஸ்ரவேல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களுக்கு நியமித்த இடத்தைப் பெற்றுக்கொள்ளும். இப்படியிருக்க, இந்தப் பரியாசக்காரர்கள் யார்? சபைகளிலுள்ள கிறிஸ்தவர்களே; இவர்கள் மதத்தலைவர்களும், தாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று பறைசாற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள் (**வெளி.** 3:16-18; **IIதீமோ.** 3:1-5).

"தங்கள் சுயஇச்சைகளின்படி நடந்து" என்ற சொற்றொடர், இவர்கள் ஆவிக்கேற்றபடி நடப்பதில்லை (**ரோம.** 8:1, **கலா.** 5:16) என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு விசுவாசியும், ஒன்றில் ஆவியில் அல்லது மாம்சத்தில் நடக்கலாம்; மாம்சத்தில் நடப்பதாயின், அவர்கள் தங்கள் சுயஇச்சைகளின்படி நடக்கிறார்கள். இந்தப் பரியாசக்காரர்கள் கிறிஸ்துவின் சிலுவையில் நம்பிக்கை இல்லாதவர்கள்; வேறு வழிகளைப் பின்பற்றி, கிறிஸ்துவுக்காக வாழமுயற்சிக்கிறார்கள். இதுவே தங்களுடைய சுய இச்சையின்படி நடப்பதற்கு முக்கியமான காரணமாயிருக்கிறது. ஒரே ஒரு வழிமூலம்தான் வெற்றியைப் பெற்றுக்கொள்ள

முடியும்; அந்த வழி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப் படுத்தி, அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பதேயாகும். கிறிஸ்து வின் சிலுவையிலேயே எல்லாவற்றிற்கும் பதில் உண்டு; அந்தப் பதில் **"முடிந்தது" (It is finished) (யோவா. 19:30)** என்று பிரகடனப் படுத்துகிறது.

டிசம்பர்

10

***அ**வருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமா யிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகு மென்று காத்திருக்கிறோம் (II**பேது**. 3:13).*

"புதிய வானம் புதிய பூமி"

கிறிஸ்தவ சபைகள் இப்பொழுது கடைசி நாட்களில் சஞ்சரிக் கிறது; இதனையே லவோதிக்கேயாவின் காலம் எனச் சொல்லப் படுகிறது (**வெளி.** 3:14-19). அடுத்து நடக்கப்போகிற தீர்க்கதரிசன சம்பவம் இயேசுகிறிஸ்துவின் நாளாகும் (**பிலி.** 1:5); அதனையே **"உயிர்த்தெழுதல்"** என்றும் **"இழுத்துக்கொள்ளுதல்"** என்றும் சொல்லப்படுகிறது; அதனைத் தொடர்ந்து 7 வருஷகாலத்திற்கு மிகுந்த உபத்திரவகாலம் தொடர்கிறது; இதனையே **"தானியே லின் ஏழாம் வாரம்"** என்று சொல்லப்படுகிறது. அதனைத் தொடர்ந்து 1000 வருஷகால ஆட்சி ஆரம்பமாகிறது; அப்பொழுது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப் படும் (**வெளி.** 20:1-7); இதன் முடிவின்போது வெள்ளைச் சிங்கா சனத்தின் நியாயத்தீர்ப்பு நடைபெறும் (**வெளி.** 20:11-15). அப் பொழுது தேவபக்தியில்லாத மரித்த அக்கிரமக்காரர்கள் நியாயந் தீர்க்கப்படுவார்கள்; இதனையே பேதுரு அப்போஸ்தலர் **".....தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது"** என்று II**பேதுரு** 3:7ல் சொல்லியிருக்கிறார்.

உடனடியாக இதற்குப் பின்பு பூமி புதுப்பிக்கப்படும்; அது கர்த்தருடைய நாள் (II**பேது.** 3:10); **"…..அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்"** (II**பேது.** 3:12); கர்த்தருடைய நாள் மிகுந்த உபத்திரவகாலத்தையும் 1000 வருஷ காலத்தையும் உள்ளடக்குகிறது. 1000 வருஷகால ஆட்சி, நித்தியத்தோடு இணையும் **"தேவனுடைய நாள்"** எனப்படும் (II**பேது.** 3:12). பேதுரு அப்போஸ்தலர் II**பேதுரு** 3:13ல் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சொல்லியிருக்கிறார். பரலோகமும் பூமியும் பாவத்தினால் களங்கப்பட்டுப்போயிருக்கின்றது; பரலோகம் சாத்தானின் புரட்சியினால் களங்கப்பட்டுப்போனது; பூமியோ ஆதாமின் வீழ்ச்சியினால் களங்கப்படுத்தப்பட்டது.

பேதுரு அப்போஸ்தலர் **"…..அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்"** (II**பேது.** 3:12) எனச் சொல்லியிருப்பதைப் பார்க்கும்பொழுது, சகலதும் பூண்டோடு அழிக்கப்படும் என்று சொல்லப்படவில்லை; அதற்குப் பதிலாக ஒரு நிலைமையிலிருந்து இன்னொரு நிலைமைக்கு மாறுகிறது என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் வருஷகால ஆட்சியின் முடிவின்போதே இது சம்பவிக்கிறது. இதனை எப்படிச் செய்வார் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை; ஆனால், இந்தப் பிரபஞ்சத்தையும், அதிலுள்ள எல்லாவற்றையும் உருவாக்கின கர்த்தர், "**இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5)** எனச் சொல்லியிருப்பதை விசுவாசிப்போமாக.

வெளி. 21ம் 22ம் அதிகாரங்களில் இந்தப் புதிய வானமும் புதிய பூமியும் எப்படி இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு **"நீதி வாசமாயிருக்கும்"** என்று பேதுரு அப்போஸ்தலர் II**பேதுரு** 3:13ல் சொல்லியிருக்கிறார்; அதேநேரம் வேதனையையும், துக்கத்தையும் கொடுக்கிற எதுவும் புதிய பூமியில் இருக்காது (**வெளி. 21:27, 22:15**) என்பது தெளிவாகிறது.

டிசம்பர்

11

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1யோவா. 2:15).

"உலகத்தில் அன்புகூர்ந்தால் பிதாவின் அன்பில்லை"

வேதவாக்கியத்தின்படி ஒரு கிறிஸ்தவன் தவிர்க்கமுடியாமல் ஒரு தீர்மானம் எடுக்கவேண்டியதாயிருக்கிறது. அவன் தனக்கு உலகம் வேண்டுமா? அல்லது பிதா வேண்டுமா? என்பதனைத் தீர்மானிக்கவேண்டும். உலகம் வேண்டுமென்றால் அவனுக்குப் பிதா இல்லை; பிதா வேண்டுமென்றால் அவனுக்கு உலகம் இல்லை; ஏதாவதொன்று அவனைவிட்டு வெளியே செல்லவேண்டும்; இரண்டோடும் அவன் இருக்கமுடியாது. சாத்தானுடைய தந்திரம் என்னவெனில், கிறிஸ்தவன் உலகத்தையும், அதிலுள்ள எல்லாவற்றையும் அனுபவிக்கலாம்; அதேநேரம் கிறிஸ்துவையும் வைத்துக்கொள்ளலாம் எனத் தூண்டிய வண்ணமாயிருக்கிறான்.

இந்தத் தூண்டிலைக் கிறிஸ்தவர்கள் விழுங்கி, அது மிகவும் நல்லது நாம் உலகத்தோடும் கிறிஸ்துவோடும் இருக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததே என்று தங்களை மெச்சிக்கொள்கிறார்கள். இது இன்று நேற்று சாத்தானால் உருவாக்கப்பட்ட தந்திரமல்ல. இந்த மோசமான உபதேசத்துக்குப் புது மெருகூட்டச் சாத்தான் தன்னுடைய ஊழியக்காரர்மூலம் காலாதிகாலமாக ஏறெடுக்கிறான். இந்தத் தந்திரத்தை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள்

தாம் செய்கிற பாவச்செயல்களைவிடப் (அவர்களால் நிதானிக்கப் பட்ட பாவங்களை) பயங்கரமான பாவச்செயல்களைச் செய்வ தற்குத் துணிவுகொண்டு, சீக்கிரமாய்ச் சாத்தானுடைய பொறிக் குள் இறுக்கமாகச் சிக்குண்டு இழுப்புண்டு தம்மைச் கெடுத்துக் கொள்கிறார்கள்; இதுபற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யோவான்** 10:10ல் ஜீவனும் பரிபூரணமும் வேண்டுமா? அல்லது அழிவு வேண்டுமா? என்பதனைக் கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என எச்சரிக்கை செய்திருக்கிறார்.

போதகர்களோ, உலகத்தையும் கிறிஸ்தவனையும் ஒரே நேரத் தில் தம்முடைய சபைகளில் சேர்த்துக்கொள்ளப் பிரியமாயிருக் கிறார்கள்; ஏனெனில், அவர்கள் உலகத்திற்கெதிராகச் சத்தி யத்தை (சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை [**1கொரி.** 2:2]) உபதேசிக்கப் பயப்படுகிறார்கள். தம்முடைய சபைக்கு (அது அவர்களுடைய சபை, கிறிஸ்துவின் சபையல்ல) உலகத்தினர் வரமாட்டார்கள்; இருக்கின்ற கிறிஸ்தவர்கள் என அவர்களால் சொல்லப்படுபவர்களும் சபையைவிட்டுப் போய்விடுவார்களெனப் பயங்கொண்டு, உலகத்திற்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஏற்றமாதிரி யாகச் சுவிசேஷத்தை விட்டுக்கொடுத்துத் தண்ணீராக்குகிறார்கள்.

இதனிமித்தம் அந்தச் சபையிலிருக்கும் போதகர்கள் ஜென்ம சுபாவத்தைப்பற்றியோ, கிறிஸ்துவின் இரத்தத்தைப்பற்றியோ, நரகத்தைப்பற்றியோ, அந்தப் பாவத்தைப்பற்றியோ, கிறிஸ்து வின் சிலுவையைப்பற்றியோ தங்களுடைய சபைகளில் பேசுவ தில்லை; ஏனெனில், சபையினருக்கு அது இடறலாகப் போய் விடும் என்று அவர்கள் விசனப்பட்டு, அவதானமாக இரட்சிப்புக் கும் பரிசுத்தத்திற்கும் எது தேவையோ அதனை அகற்றி விடு கிறார்கள். அவர்கள் அறியாதிருப்பது அல்லது அறிய மறுப்பது என்னவெனில், போதகருடைய கடமை தேவன் என்ன கட்டளை யிடுகிறாரோ அதனைப் போதிப்பதேதவிர மனுஷருடைய எதிர் பார்ப்புக்கு ஏற்றமாதிரி போதிப்பதல்ல; இதுபற்றிக் **கலாத்தியர்** 1:10-11ல் கூறியிருப்பதை இந்தக் கள்ளப்போதகர்கள் உதாசீனஞ்

செய்கிறார்கள். எத்தனை பேர் வருவார்கள் எத்தனை பேர் போவார்கள் என்று கணக்கெடுப்பதல்ல போதகருடைய வேலை; தேவனுக்கு உண்மையாயிருப்பதே தேவையானது (**மத்.** 25:23). போதகர்கள் தேவனுக்கு உண்மையாயிருப்பார்களாயின் உலகம் தேவனை ஏற்று இரட்சிக்கப்படும் அல்லது உலகம் சபையை விட்டு ஓடும்; கிறிஸ்தவர்களோ பாவத்துக்கு மரித்து, தேவனுக் கென்று பிழைத்திருப்பார்கள் (**ரோம.** 6:11).

டிசம்பர்

12

***பி**ரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். (1யோவா. 4:1).*

"எல்லா ஆவிகளையும் நம்பாதீர்கள்"

ஒவ்வொரு உபதேசத்திற்குப் பின்னாலும் ஒவ்வொரு ஆவி உண்டு என்பதனை நாம் அறிந்திருக்கவேண்டும்; உண்மையான உபதேசமாயிருந்தால் பரிசுத்த ஆவியும், பொய்யான உபதேச மாயிருந்தால் அசுத்த ஆவியும் நிச்சயமாக உண்டு என்பதனை அநேகமான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்; இதனிமித்தம் அநேகமான சபைகளில் கிறிஸ்தவர்கள், அசுத்த ஆவிகளினால் கொடுமைப்படுத்தப்படுவதை சர்வசாதாரணமாக காணக்கூடியதா யிருக்கிறது.

கிறிஸ்தவர்களின் கவலையீனத்தினால் அவர்கள் தங்கள் ஆத்துமாவையே இழந்துபோகக்கூடிய சாத்தியக்கூறு நிச்சய மாகவே உண்டு (**ஓசி. 4:6; ஏசா. 5:13-14**); ஆனபடியினால், போத கரின் உபதேசத்தைக் கேட்கும்பொழுது அது வேதவார்த்தைக்கு இசைவாக இருக்கிறதா என்பதனைப் பரிசீலனை செய்யவேண் டியது ஒரு கிறிஸ்தவனின் பிரதான கடமையாகும்; ஏனென்றால், ஏராளமான பொய்யான போதகர்கள் நம் மத்தியிலிருக்கிறார்கள்.

யோவானின் காலத்திலேயே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருந்தார்களானால், லவோதிக்கேயா சபையின் கால மாகிய தற்போதைய காலத்தில் எவ்வளவாய்க் கள்ளத்தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பார்கள் என்பதனைக் கிறிஸ்தவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியான வர் எதனை அனுமதிக்கிறார் என்பதனை அறிந்திருக்கவேண் டும்; கிறிஸ்து மனுஷனாக இந்தப் பூமிக்கு வருகை தந்தது, சிலுவைக்குப் போவதற்கே என்பதனை முதற்கண் நாம் தெளி வாக அறிந்திருக்கவேண்டும் (**யோவா.** 1:29). அப்படியானால், இதன் பொருள், தேவ ஆவியானவர் கிறிஸ்துவின் சிலுவைக்கே அனுமதியளிக்கிறார் என்பதனையும், கிறிஸ்துவின் சிலுவையல் லாத வேறெதுவும் (**Iகொரி.** 2:2) தேவனுடையதல்ல என்பதனை யும் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

மாம்சத்தில் கிறிஸ்து வந்தது, சிலுவைக்குப் போவதற்கே என்பதில் ஒரு குழப்பமும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கக் கூடாது (**எபி.** 2:14). இந்த அறிவு **"உயர்ந்த ஞானம்"** என்ற உப தேசத்தை நிராகரிக்கிறது; **"உயர்ந்த ஞானம்"** (Gnosticism) கிறிஸ்துவின் சரீரம் கேடான சரீரம் என்று உரிமைகோருகிறது. உண்மை நிலைமை என்னவென்றால், ஒருவன் கிறிஸ்துவின் சிலுவையை அவமதித்தால் அல்லது அதனைக் குறைவாக மதித் தால், அவன் தேவனுடையவன் அல்ல. சிலுவையை நிராகரிக் கிற ஆவி அந்திக்கிறிஸ்துவின் ஆவியாகும். சிலுவையைப் பற்றிய உபதேசம் கிறிஸ்தவத்தின் மிகமுக்கியமான ஆதாரமா யிருக்கிறது; இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாதவன் கிறிஸ்த வன் அல்ல, அதனை அடையாளங்காணாதவன் கிறிஸ்தவப் போதகனும் அல்ல.

டிசம்பர்

13

***நி**யாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம் (1யோவா. 4:17).*

"அவர் இருக்கிறபிரகாரமாக நாமும்
இவ்வுலகத்தில் இருக்கிறோம்"

தேவன் நம்முடைய கிரியைகளின் நிமித்தம் அல்ல, கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றியதன் நிமித்தமே நியாயந்தீர்க்கிறார் என்பதனை அறியும்பொழுது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. அதுமட்டுமல்ல, அவர் மற்றவர்களோடு நம்மை அளப்பதில்லை; ஒப்பிட்டுப் பார்ப்பதுமில்லை; அதற்குப் பதிலாக அவர் இயேசுவையே பார்க்கிறார். இயேசு இருக்கிற பிரகாரமாகவே பார்க்கிறார்; அந்த விதமாகவே பார்க்கிறார்; அவருடைய வசனம் "**அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்**" என அறிவிக்கிறது.

இயேசு **இருந்தபிரகாரம்** நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம் என்று யோவான் சொல்லவில்லை என்பதனை நாம் அவதானித்துப் பார்க்கவேண்டும்; அப்படியிருந்தால் அது சந்தோஷமானதே; ஏனென்றால், பூமியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின்பொழுது ஆசீர்வாதங்கள், அற்புதங்கள், குணமாக்குதல்கள், மரித்தோரை எழுப்புதல் அவர் போகுமிடம்

எல்லாம் அவரைப் பின்தொடர்ந்தது; ஆயினும் வார்த்தை அப்படிச் சொல்லவில்லை; வார்த்தை **"அவர் இருக்கிறபிரகாரமாக"** என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இது நிகழ்காலத்தையே குறிப்பிடுகிறது; அப்படியாயின் அவர் இப்பொழுது இருக்கிற பிரகாரமாக நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம்.

இயேசு இப்பொழுது எங்கே இருக்கிறார்? பவுல் அப்போஸ்தலர் இயேசு உன்னதங்களில் பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் **(எபேசி. 1:21)** எனக் கூறியிருக்கிறார். அப்படியாயின் தேவனுடைய பார்வைக்கு நாம் தற்பொழுது எங்கு இருக்கிறோம்? பவுல் அப்போஸ்தலர் **எபேசியர் 2:7**ல் **"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்"** எனக் கூறியிருக்கிறார்; ஆகையால் நாம் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்தில் (ஆவியில்) உட்கார்ந்திருக்கிறோம். சிலுவையின்மூலம் அவருடைய வெற்றியினாலும், நீதியினாலும், அன்பு, சந்தோஷம் ஆகியவற்றோடு அவரோடுகூட நாம் உட்கார்ந்திருக்கிறோம்.

தேவன் நம்மைப் பார்ப்பதுபோல, நாமும் நம்மைப் பார்க்க வேண்டியது மிகமுக்கியமானது. நாம் பலவீனமானவர்களாகவும், பாவமுள்ளவர்களாகவும் இந்தப் பூமியில் இருக்கிறோம். ஆனால், தேவனோ நம்மைக் கிறிஸ்துவோடு உன்னதத்தில் உட்கார்ந்திருப்பதாகவே பார்க்கிறார்; ஆனபடியினால், பிரியமானவர்களே! உங்களுடைய நிலைமையை நிலைப்பாட்டோடு எடைபோட்டுப் பார்க்காதீர்கள். **"அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்"**. அவருடைய பாவநிவிர்த்தியில் இலகுவான **விசுவாசத்தின்மூலம்** தன்னைப்போலவே நம்மையும் ஏற்படுத்தியுள்ளார். அவரைப்போலவே நம்மையும் ஜெயங்கொண்டவர்களாகவும், நீதியாகவும், பரிபூரணமுள்ளவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும் நம்மைப் பூரணப்படுத்தியுள்ளார்.

டிசம்பர்

14

அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம் *(**1யோவா. 4:19**).*

"அவருடைய அன்பைப்பற்றிய ஒரு வெளிப்பாடு"

கிறிஸ்தவ வாழ்க்கையின் முதிர்ச்சியின் உச்சக்கட்டம் அவரை அறிவதும், விசுவாசிப்பதும், கிறிஸ்துவின் அன்போடு நடத்தலுமேயாகும். இயேசுவை சிலுவைக்கு அனுப்பியதும் இதுவே; அந்த அன்பே இயேசுவையும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதையும் தொடர்ந்து விசுவாசிப்பதற்கு நம்மை ஏவுகிறது.

அவருடைய அன்பு நம்முடைய மரணத்துக்கும் (சுய நிராகரிப்பு), அடக்கத்திற்கும், கிறிஸ்துவில் உயிர்த்தெழுந்த வாழ்க்கையை நடத்துவதற்கும் வழிநடத்துகிறது. அவர் முதலில் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியினால், நாம் அவரில் அன்புகூருகிறோம் (**1யோவா. 4:10**), அவருடைய அன்பு நம்மைத் தூண்டாமல் நாம் ஒன்றுமில்லை. அவருடைய அன்பு நம்மைக் குணமாக்குகிறது, நம்மைப் புதுப்பிக்கிறது; அவருடைய அன்பு தேவனுக்கு முன்பாகவும், மனுஷனுக்கு முன்பாகவும் துணிவைத் தருகிறது; ஆயினும், அன்பு தேவனுக்கு முன்பாகவும், மனுஷனுக்கு முன்பாகவும் தாழ்மையை விருத்திசெய்கிறது. அவருடைய அன்பு அரண்களைக் கிழித்தெறிந்து, நம்மில் அந்த விசுவாசத்தைக் கட்டி எழுப்புகிறது; அவருடைய அன்பு மிருதுவாகவும், உறுதியாகவும் இருக்கிறது; அன்பினால் அவர் நம்மைச்

சிட்சிக்கிறார்; அன்பினால் நம்மைத் தூக்குகிறார்; தேவன் தனது அன்பினால் நம்மைச் சிருஷ்டித்தார்; அதே அன்பினால் நம்மை மீட்டுக்கொண்டார்.

அவருடைய அன்பு பயத்தைப் புறம்பே தள்ளுகிறது (**1யோவா. 4:18**); நம்மிலிருக்கிற அவருடைய அன்பு கிறிஸ்துவே சத்தியம் என்பதனையும், நாம் அவருடைய சீஷர்கள் என்பதனையும் உலகத்திற்கு வெளிப்படுத்தும் மிகப்பெரிய அடையாளமாகும் (**யோவா. 13:34-35**). நாம் அவருடைய அன்பை ஏற்கனவே அறிந் திருக்கிறோம் என நினைப்பதே, நாம் அவருடைய அன்பை அறியவேண்டிய பிரகாரம் அறியவில்லை என்பதற்கு அடை யாளமாகும். அதேபோல, ஒரு விசுவாசி தனக்கு ஏற்கனவே சிலுவையைப்பற்றித் தெரியும் என நினைத்துக்கொண்டு, சிலு வையின் செய்தியைக் கேட்காமலிருப்பதற்குச் சமனாயிருக் கிறது.

பவுல் அப்போஸ்தலர் எபேசு சபைக்கு ஜெபம்பண்ணினது போல, அவருடைய அன்பின் அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும் உயரத்தையும் அறிவதற்கு நமக்குத் தேவனிடத்தி லிருந்து ஒரு வெளிப்பாடு தேவையாயிருக்கிறது (**எபேசி. 3:17-19**).

டிசம்பர்

15

***இ**வர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள் (யூதா 1:11).*

"காயீனின் வழி, பிலேயாமின் வஞ்சகம், கோராவின் எதிர்ப்பு"

பொய்யான உபதேசத்தை ஏறெடுப்பவர்களையும், பொய்யான உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, சத்தியத்தைவிட்டு விலகிப்போனவர்களையும் நோக்கி: அவர்களுக்கு **"ஐயோ"** எனப் பரிசுத்த ஆவியானவர் யூதாமூலம் திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறார். வேதத்தில் பலமுறை இப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டிருக்கிறார்கள் (**அப்.** 8:20; **ரோம.** 3:8; **Iகொரி.** 16:22; **கலா.** 1:8; **வெளி.** 6:10, 8:13, 9:5-6, 16:5-7, 18:19-20, 19:1-5, 22:11). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேதபாரகர்களையும், பரிசேயர்களையும் நோக்கி: இந்த மாதிரிச் சபித்திருக்கிறார் (**மத்.** 23:13-15, 16, 23, 25, 27-29).

ஆதாமின் புத்திரர்களான காயீனுக்கும் ஆபேலுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன? இரு சகோதரர்களுக்கும் இடையில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. இவர்கள் இருவரும் அழுகிப்போன மரத்திலிருந்து உண்டான களங்கப்பட்ட கிளைகள்; இருவரும் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே பிறந்தவர்கள்; இருவரும் குற்றவாளிகளாக இருந்தார்கள்; இருவரும் பாவிகளாக இருந்தார்கள்; இவர்கள் இருவருக்கும் மரணத்தீர்ப்பு

வழங்கப்பட்டிருந்தது; இருவருடைய ஒழுக்கத்திலும் ஒரு வித்தியாசமும் இல்லை; ஆனால், அவர்கள் கொடுத்த பலிகளிலோ நித்திய வித்தியாசம் உண்டு.

ஆபேல் கொடுத்த பலியைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டார்; அந்தப் பலி கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறைவேற்றப் போவதையும் பிரதிபலித்தது. அதனைக் கடைப்பிடித்த ஆபேல் இந்த நேரமும் பரலோகத்திலிருந்து பேசுகிறான் (**எபி.** 11:4). காயீனுடைய பலி, அவிசுவாசத்தையும், தற்பெருமையையும், சுய நீதியையும் பிரதிபலித்தது; கர்த்தர் அதனை நிராகரித்தார்; இதன் பலனாக இந்த நேரத்திலும் அவன் எரிநரகத்தில் உழலுகிறான் (**யூதா** 1:11). ஒருபக்கம் நன்மைதீமை அறியத்தக்க விருட்சம் மனுஷனுக்கு முன்பாகச் சுழல்கிறது; இன்னொரு பக்கம் கர்த்தரோ, நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ என்கிறார் (**ஆதி.** 4:7). தெரிவு மனுஷனுடையது; அவனுடைய தெரிவு பரலோகத்தையும், நரகத்தையும் தீர்மானிக்கிறது.

இப்படியிருக்க, **"பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி"** என்பதன் பொருளை அறிவதற்கு, அவனுடைய **"வழியையும்"** அவனுடைய **"உபதேசத்தையும்"** பரிசீலனை செய்வது அவசியமானது. பாலாக்கின் அநீதியான கூலியை இச்சித்ததே (**எண்.** 22:7, 17, 24:11; ॥**பேது.** 2:15) பிலேயாமின் வழியாகும். அவன் பாலாக்கினிடத்திலிருக்கிற அழகிய பெண்களை இஸ்ரவேலிய மனிதர்களுக்குக் கொடுத்து, அவர்களை விக்கிரகாராதனையிலும், வேசித்தனத்திலும் ஈடுபடப் பண்ணினால், நாம் இஸ்ரவேலியர்களைச் சபிக்கவேண்டிய தில்லை; தேவனே அவர்களைச் சபிப்பார் எனப் பாலாக்கிற்கு உபதேசம் பண்ணியிருந்தான் (**எண்.** 25:1-9; **வெளி.** 2:14).

இன்றும் இவ்வாறே கள்ளப்போதகர்கள் செய்கிறார்கள்; தங்களுக்குக் கிடைத்த தீர்க்கதரிசன வரங்களை உபயோகித்து, பிலேயாமின் வழியையும், அவனுடைய வஞ்சகத்தையும் கைக்கொள்கிறார்கள்; அருமையான உதாரணம் நடைமுறையிலிருக்கிற

"பேராசை சுவிசேஷம்" (Greedy Gospel); இத்தகைய உபதேசங்களை ஏறெடுப்பவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் **"ஐயோ"** என்கிறார். பிலேயாமின் தவறு என்னவென்றால், அவன் சிலுவையின் உயர்ந்த ஒழுக்கத்திற்குக் (Morality) குருடனாயிருந்தான்; ஆனால், தேவன் அதன்மூலமே தன்னுடைய அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி, அதனைப் பராமரித்து, நியாயப்பிரமாணத்தின் மோசமான நிலைப்பாட்டிலிருந்து மனுஷனுக்கு விடுதலை கொடுக்கிறார்; அதனை நடைமுறைப்படுத்துவதன்மூலம் அவர் விசுவாசிக்கிற பாவிக்கு நீதியாகவும், நியாயாதிபதியாகவும் (Just & Justifier) இருக்கிறார்.

"கோரா எதிர்த்துப்பேசின பாவம்" என்பதன் பொருள், கோரா என்ற மனுஷன் ஆரோனுக்கெதிராகக் கலகஞ்செய்து தேவனால் நியமிக்கப்பட்ட ஆசாரியனுக்கு எதிர்த்துப் பேசினான். இத்தகைய எதிர்ப்பு பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவின் நியமனத்தை எதிர்ப்பதாகும் (**எண். அதி:16**). கள்ளப்போதகர்கள் கிறிஸ்துவை நிராகரிக்கிறார்கள்; இவர்களுக்கும் பரிசுத்த ஆவியானவர் **"ஐயோ"** என்கிறார்.

டிசம்பர்

16

***எ**பேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன்குத்து விளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது (வெளி. 2:1).*

"எபேசு சபை"

புதிய ஏற்பாட்டில் மார்க்கங்களென ஒன்றும் இல்லை; சகல மார்க்கங்களும் மனுஷரால் ஏற்படுத்தப்பட்டவைகளேதவிரத் தேவனால் ஏற்படுத்தப்பட்டவைகளல்ல. அப்படியாயின், கிறிஸ்தவ மார்க்கங்களில் பங்குபற்றுவதோ அல்லது அதில் அங்கத்தவர்களாக இருப்பதோ தவறல்ல; மார்க்கங்கள் மனுஷரால் உருவாக்கப்பட்டது என்ற உண்மையை அறிந்துகொள்ளவேண்டியதே அவசியமானது. கிறிஸ்தவ மார்க்கங்களில் எந்தவிதமான தெய்வீகத்தன்மையும் இல்லை; அவைகள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஒரு சாதனங்களாக இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரிப்பது வேதவசனத்திற்கு ஏற்புடையதல்ல; மார்க்கங்கள் தாமாக ஆரம்பமாகவில்லை; இவ்வாறான பிரிவினைகளை உருவாக்கினது சாத்தானேயன்றி வேறொருவருமல்ல; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் கொரிந்தியர்களுக்கு **Iகொரிந்தியர்** 1:12-13ல் தெளிவு படுத்தியிருக்கிறார்.

ஆதியில், சகோதரர்களுக்குள் வாக்குவாதங்களை ஏற்படுத்தி, கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினையை ஏற்படுத்தினது சாத்தானே (**1கொரி. 1:11**). அப்போஸ்தலர்களின் பலமான வழிகாட்டுதலின் நிமித்தம் பிரிவினை ஓரிரு நூற்றாண்டுகாலமாக செயற்படாமலிருந்தும் அதற்குப் பின்பு பிரிவினை உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்தப் பிரிவினை முயற்சியில் சாத்தான் பெரும் வெற்றி அடைந்துள்ளான் என்பது வெளிப்படையாயிருக்கிறது. பிரிவினையை ஏற்படுத்தினது மட்டுமல்ல, பிரிவினைக்கேற்பப் பல்வேறுவிதமான உபதேசங்களையும் வழிபாடுகளையும் சாத்தான் ஏற்படுத்தியிருக்கிறான். இது பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்பட்டதல்ல (**கலா. 5:8**). இந்த மார்க்கபேதங்கள் மனுஷ குலத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு என்று சொல்வதே மிகவும் பொருத்தமானது; ஏனெனில், வேதத்திற்கு விரோதமான உபதேசங்களைப் பின்தொடர்பவர்கள் அந்தந்த மார்க்கங்களின் பிரமாணங்களை விசுவாசித்து, தேவனைவிட்டு விலகி, தமக்குச் சாபக்கேட்டை நியமித்திருக்கின்றனர் (**உபா. 28:15**).

உண்மையில் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு இந்த மார்க்கங்கள் உதவவேண்டுமேதவிரத் தமக்கென ஒரு வழிமுறையை ஏற்படுத்துவது, இனவெறியாகும். இனவெறி ஆவியே இந்த இடறலை நடைமுறைப்படுத்துகிறது. வேதவசனத்தில் முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்கள் இதற்கு இலகுவாக இரையாகிப்போகிறார்கள். எண்ணிலடங்காதோர் இதற்கு இரையாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். **நீ என்னுடைய ஜாதியாக இல்லாதபடியினாலும், என்னுடைய கூட்டத்தில் அங்கத்தவனாயிராதபடியினாலும், நீ என்னைவிடக் குறைவானவன்** என இனவெறி கூறுகிறது. இனவெறியும் மார்க்கபேதங்களும் வேத வசனத்திற்கு விரோதமானவைகளாகும்; ஆம், அநேகமான கிறிஸ்தவ மார்க்கங்கள் தேவனுக்கு விரோதமாகவே செயற்படுகின்றன.

ஒரு கிறிஸ்தவ மார்க்கம் தேவ ஊழியத்தைச் செய்வதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படாவிட்டால், அந்த மார்க்கம் வெறுமனே ஒரு சமூக ஸ்தாபனமாக செயற்படுகிறது; அதே நேரம் அவைகள் வியாபார ஸ்தாபனங்களின் அமைப்பைக் கொண்டிருக்கிறது. அப்படியான ஏற்பாடுகள் ஒன்றும் புதிய ஏற் பாட்டில் கிடையாது. என்ன பிரசங்கம் செய்யவேண்டுமென் பதைப் பரிசுத்த ஆவியல்ல மனுஷனே தீர்மானிக்கிறான்; இந்த நிலைமை இப்பொழுது ஆகக் கீழ்த்தரமான நிலைமைக்குத் தள்ளப்பட்டு, போதகர்களுக்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக் கப்படுகிறது.

இவ்வாறான சபைகளில் கிறிஸ்துவின் பிரசன்னம் கிடை யாது. போதகர்கள் தேவனால் அழைக்கப்படாமல் மனிதர் களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கத்தோலிக்க சபை தெளி வான உதாரணமாயிருக்கிறது. போப்பின் (Pope) வார்த்தை சட்ட மாகி, காடினல் (Cardinal) மூலமாகவும், பிஷப் (Bishop) மூலமாக வும் ஆசாரியர்களைச் (Priest) சென்றடைகிறது. இவ்வாறான முறைகள் யாவும் தேவனுக்கு விரோதமானவைகளே. புரட் டெஸ்டன் (Protestants) மார்க்கத்தினரின் செயற்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவ்வளவாகப் பெரிய மாற்றங்கள் ஒன்றும் இல்லை. எவனாகுதல் வேதவசனத்தைச் சுட்டிக்காட்டி, அதன் படி நடக்க முயற்சித்தால், அவன் தண்டிக்கப்பட்டுப் புறம்பாக்கப் படுகிறான். பரிசேயரும் அப்படிச் செய்தார்களே!!! ஆகவே இந்தக் கேடு நிறைந்த, வேதத்திற்குப் புறம்பான அமைப்பைவிட்டு, ஒரு வன் விலகாவிட்டால், அவன் கிறிஸ்துவினிடத்திலிருந்து எதை யும் பெறமாட்டான் (**கலா.** 5:2).

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்க ளைக் காத்துக்கொள்வீர்களா. ஆமென்" (1யோவா. 5:21).

டிசம்பர்

17

***ஆ**னாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு (வெளி. 2:4).*

"ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்"

எபேசு சபை ஒரு அருமையான உதாரணமாக இருக்கிறது. அதெப்படியென்றால், சபையோ ஒரு தனிப்பட்ட விசுவாசியோ உபதேசத்தில் பலமாக இருந்தும், அன்பில் குறைவாக இருக்க லாம்; பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமல் இருக்கிறதையும், அப்போஸ்தலர் அல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லுகிறதைச் சோதித்து, அவர்களைப் பொய்யர்கள் என்று கண்டறிந்ததையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து புகழ்ந் திருக்கிறார்.

எபேசு சபை மற்றவர்களைப் பகுத்தறிவதில் வல்லுநர்களாக இருந்தும், தங்களைப் பகுத்தறிவதில் பலவீனர்களாக இருக்கிறார் கள்; இதன்மூலம் எபேசு சபை நமக்கு ஒரு வல்லமையான படிப்பினையைத் தருகிறது. அதென்னவென்றால், ஒருவன் சரி யான செய்தியை மனதினால் அறிந்திருக்கலாம்; ஆனால், இருத யத்தினால் அல்ல; இந்தச் சபையைப்பற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு"** என்று கண்டித்திருப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது. **"ஆதி**

அன்பு" என்பது இயேசுகிறிஸ்துவையும், எவ்வித தகுதியுமில் லாத நமக்கு அவர் சிலுவையில் நமக்காக நிறைவேற்றியதை யும் குறிப்பிடுகிறது; ஆதி அன்புக்கு எப்படித் திரும்புவது என்று நமக்கும் அவர்களுக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **"ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென் பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியை களைச் செய்வாயாக**....." என்று சொல்லியிருக்கிறார் (**வெளி.** 2:5); இதன் பொருள், நீ அந்த விசுவாசத்திற்குத் திரும்பு; அந்த விசுவாசம் என்பது சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ் துவேயாகும்; ஒருவன் தன்னுடைய அறிவில் நம்பியிருந்ததற் காக மனம்வருந்தி, அந்த சத்தியத்திற்கு மனந்திரும்புவதே தேவ னுடைய எதிர்பார்ப்பாகும். அவன் ஆதியில் செய்த கிரியைக்குச் செல்லவேண்டும்; அந்தக் கிரியை எல்லாவற்றிற்கும் இயேசு கிறிஸ்துவில் பரிபூரணமாக நம்பியிருப்பதேயாகும்.

".....**இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனி டத்தினின்று நீக்கிவிடுவேன்"** (**வெளி.** 2:5) என எச்சரித்திருக் கிறார். எபேசு சபைக்கு இயேசுகிறிஸ்துவின் இந்த நிருபம் 2000 வருஷங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது; அவைகள் இன்றும் பொருத்தமாயிருக்கிறது.

டிசம்பர்

18

***ஆ**வியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிற வனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தி யிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது (வெளி. 2:7).*

"ஜெயங்கொள்ளுகிறவன்"

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் ஏழு செய்திகள் விலாசமிடப்பட்டிருக்கிறது (**வெளி. அதி**:2-3). ஒவ்வொரு செய்தியிலும் விசுவாசிகள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும் என்று வலியுறுத் தப்பட்டிருக்கிறது. சபைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தாலும், நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டு மென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்புக்களை வாச கர் வாசிக்கும்பொழுது உம்முடைய நிலைமை எப்படி இருக் கிறது? நீர் ஜெயங்கொள்ளுகிறவனாக இருக்கிறீரா? அல்லது உம் முடைய மனதில் இது வேறொன்றைப்பற்றிச் சொல்லப்பட்டி ருக்கிறதுபோலத் தெரிகிறதா? அல்லது அப்படி வருவதற்கு நான் முயற்சிக்கிறேன் என்று சொல்லுகிறீரா?

ஒரு விசுவாசியாக நீர் இருந்தால், எப்படி ஒருவன் ஜெயங் கொள்ளமுடியும் என்று நான் ஒரு கேள்வியை உம்மிடம் கேட் டால் உம்முடைய பதில் என்ன? வேதவாக்கியம் **வெளி.** 12:11ல்

"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அநேகமான விசுவாசிகள் தாம் ஏதாவதைச் செய்வதனால் அல்லது எதனையாவது செய்யாமல் விடுவதனால் ஜெயங் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி அல்ல, வேத வாக்கியம் **"ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலேயே"** நாம் ஜெயங்கொள்ளமுடியும் என்று சொல்கிறது. இதன் பொருள், அந்த விசுவாசத்தைப்பற்றியே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. பவுல் அப்போஸ்தலர் இதுபற்றிக் **கலாத்தியர்** 5:6ல் **"கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்"** எனச் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவிலும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் வைத்திருக்கும்பொழுது நாம் இலகுவாக ஜெயங்கொள்ளுகிறோம்; அதெப்படியெனில், அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்பொழுது, அவர் தன்னுடைய ஜீவனை இரத்தமாக நமக்கு ஊற்றினார் என்றும், அந்தப் பாவத்தை அந்த இரத்தத்தின் மூலம் பாவநிவிர்த்தி செய்தார் என்றும், சாத்தானையும் அவனுடைய கூட்டத்தையும் தோற்கடித்தார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். விசுவாசத்தைக் கிறிஸ்துவின் சிலுவையில் பொருத்தமாகப் பதிவுசெய்யும்பொழுது, பரிசுத்த ஆவியானவருடைய உதவியைப்பெற்று, வெற்றியை (**ரோம.** 8:1-11) சுவீகரித்துக்கொள்ளமுடியும்; விசுவாசத்தைக் கிறிஸ்துவில் பதிவுசெய்யும்பொழுது, அவரிலும் அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் பதிவுசெய்யவேண்டும்.

நாம் ஏதாவது செய்கிறதினால் ஜெயங்கொள்ளமுடியாது; கிறிஸ்து நிறைவேற்றியதில் விசுவாசத்தை வெளிப்படுத்துவதினால்மட்டுமே ஜெயங்கொள்ளமுடியும்; அந்தக் காரணத்தின்

நிமித்தம் பரலோகத்திலிருந்து பலமான குரல் ஒன்று நாம் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் ஜெயித்தோம் என்று பலத்த சத்தமாகச் சொல்கிறது; ஆகையால், நம்முடைய தவறின்மேலிருக்கும் நம்முடைய கண்ணை விலக்கி, மனந் திரும்பி (**1யோவா.** 1:9), அவருடைய பரிபூரணத்தின்மேல் நமது கண்களை நிலையாக வைத்திருப்போமாக. ஆமென்.

டிசம்பர்

19

***இ**ப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப் பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் (வெளி. 3:16).*

"வெதுவெதுப்பான சபைகள்"

லவோதிக்கேயா சபையை **வெளி.** 3:14-22ல் வெதுவெதுப்பான சபையென்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிரகடனப்படுத்தி யிருக்கிறார். ஆண்டவர் அந்தச் சபையைப்பற்றி மேலும் குறிப் பிடும்பொழுது, அந்தச் சபை குளிராயாவது அனலாயாவது இருந் தால் நலமாயிருக்கும் (**வெளி.** 3:15) என விரும்பியிருக்கிறார்.

இப்படி அவர் லவோதிக்கேயா சபையை வெறுத்ததற்குக் காரணம் என்ன என்பதனை ஆராய்ந்து பார்க்கும்பொழுது விசு வாசிகள் தாம் பெற்ற ஆசீர்வாதத்திற்கு (**வெளி.** 3:17) காரண மாயிருந்த இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் நிறை வேற்றியிருப்பதையும் தொடர்ந்து விசுவாசிப்பதற்குப் பதிலாகத் தம்முடைய விசுவாசத்தை வேறொன்றிற்குத் திசைதிருப்பினதே முக்கிய காரணமாகும் என்பது தெளிவாகிறது. சிலுவையில் சகலத்திற்கும் போதுமான அவரது மரணத்தை விசுவாசிப்பதை விலக்கி, **"தாம் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென் றும், எனக்கு ஒருகுறைவுமில்லையென்றும்...."** (**வெளி.** 3:17) பெருமிதமாகக்கூறி, தம்முடைய வெகுதூரத்திலுள்ள விசுவாசத் தையும் அன்பையும் வெளிப்படுத்தினர்.

அதென்ன அந்த வெகுதூரத்திலுள்ள விசுவாசம்? இதற்குப் பதில் லவோதிக்கேயாவின் பட்டணத்திற்கு அருகில் ஆறுகளும் நீர் வீழ்ச்சிகளும் இல்லை. லவோதிக்கேயா பட்டணம் உண்மையில் வெதுவெதுப்பான தண்ணீருக்குப் பேர்போன இடம். பட்டணத்திற்கு அப்பாலிருந்து கொதி தண்ணீரையோ குளிர்தண்ணீரையோ பழையகால செயற்கை வாய்க்கால் குழாய் மூலம் கொண்டுவந்து சேர்க்கும்பொழுது தண்ணீர் குளிராகவோ அனலாகவோ இல்லாமல் வெதுவெதுப்பு அடைந்துபோகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெதுவெதுப்பு என்று அழைத்த காரணம் அவர்கள் தங்களிடத்திலுள்ள ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய இயேசுகிறிஸ்துவைவிட்டு, தூரமாகப் போய்விட்டார்கள் என்பதேயாகும். வல்லமையான இந்த ஆவிக்குரிய உண்மையைத் தெளிவுபடுத்துவதற்குப் பொதுவாக எல்லாருக்கும் தெரிந்த அந்தப் பட்டணத்தினர் அறிந்த உண்மையை ஆதாரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஆண்டவர் இவர்கள் குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்குமென விரும்புகிறார் (**வெளி.** 3:15). அவர்கள் குளிராயாவது அனலாயாவது இருந்தால், நீரூற்றாகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கிட்டவாயிருக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்பிக் கிறிஸ்துவின் சிலுவைக்குத் திரும்பி, தங்களுடைய விசுவாசத்தையும் திருப்பவேண்டும்.

இப்படியிருக்க, தற்போதைய கிறிஸ்தவ சபைகள் முற்றுமுழுவதுமாகப் பழைய லவோத்திக்கேயா சபை மாதிரி சுயத்திலும், உலக ஐசுவரியத்திலும் தங்கியிருப்பதுமட்டுமல்ல, அதனை முற்றுமுழுவதும் விரும்புகிறது; இத்தகைய விசுவாசிகள் கிறிஸ்துவினுடைய வார்த்தைக்குத் திரும்புவதற்கு இதுவே பொருத்தமான நேரமாயிருக்கிறது (**வெளி.** 3:19-20).

டிசம்பர்

20

***நா**ன்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (வெளி. 3:18).*

"உனக்கு என்னுடைய ஆலோசனை"

"எனக்கு ஒருகுறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்" என்ற சொற்றொடரைப் பரிசீலனை செய்வோமாயின், கடைசிச் சபையாகிய லவோதிக்கேயா சபையினர் பொருள்களின் அதிகரிப்பை ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன் சமன்படுத்துகிறார்கள்; லவோதிக்கேயா சபையினரைப்பற்றியே பவுல் அப்போஸ்தலர் I**தீமோத்தேயு** 4:1லும் II**தீமோத்தேயு** 3:1-5லும் பிரஸ்தாபித்திருக்கிறார். இந்தச் சபை இப்பொழுது நடைமுறையில் பரந்தளவில் செயற்படுகிறது என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும்; நாம் இப்பொழுது கடைசியின் கடைசிக் காலத்திலிருக்கிறோம் என்பதனைப் பல கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கிறது வேதனையைத் தருகிறது. இந்தச் சபையினர் பொருட்களின் செல்வத்தினால் சந்தோஷப்படுகிற அதேநேரம், தமது ஆவிக்குரிய நிலைமையை அறியாமல் மதிமயங்கிப்போய்

இருப்பது வேதனைக்குரியது; இதுவே தற்போதைய கிறிஸ்தவ சபைகளின் ஆவிக்குரிய நிலைமையாகும்.

"என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும்" என்று சொல்லப்பட்டிருப்பதன் ஆவிக்குரிய பொருள் என்னவென்றால், அவர்கள் வாங்கவேண்டியதைப் பணங்கொடுத்து எங்கும் வாங்கமுடியாது என்பதனை முதற்கண் நாம் அறிந்திருக்கவேண்டும். அதனைக் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலேயே வாங்க முடியும்; அந்த விலை கிறிஸ்துவினால் சிலுவையில் 2000 வருஷங்களுக்கு முன்பே செலுத்தப்பட்டுவிட்டது; ஆனால், தற் போதைய கிறிஸ்தவர்களுக்கு அதனில் அக்கறையில்லை. அதனை இலவசமாக அந்த விசுவாசத்தின்மூலம் எந்த மனுஷனும் உடனடியாகவே பெற்றுக்கொள்ளமுடியும்.

"உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு" என்பதன் ஆவிக்குரிய பொருள், கிறிஸ்துவின் நீதியைப்பற்றிச் சொல்கிறது; அந்த நீதியைக் கிறிஸ்துவிலும், அவர் சிலுவையில் நிறைவேற்றியதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும்; வேறெந்தவிதத்தினாலும் பெறமுடியாது. லவோதிக்கேயா சபையினர் சுயநீதியினால் முற்றுமுழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனையே இது வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் நீதி இல்லாததனால், நியாயத்தீர்ப் புக்கு அவர்கள் நிர்வாணமாயிருக்கிறார்கள்; அதுமட்டுமல்ல, லவோதிக்கேயா சபையினரில் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறை வேறியிருக்கிறது தெளிவாகிறது **(மத். 13:14-15)**. இவர்கள் வேண்டுமென்றே ஆவிக்குரிய குருட்டுத்தனத்தினாலும், ஆவிக் குரிய செவிட்டுத்தனத்தினாலும், ஆவிக்குரிய மந்த இருதயத்தி னாலும் நிறைந்துபோயிருக்கிறார்கள்.

டிசம்பர்
21

***ஆ**வியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார் (வெளி. 3:22).*

"காதுள்ளவன் கேட்கக்கடவன்"

இந்த வேதவாக்கியம் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு தரம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் ஒரு தரம் சொல்வதாயிருந்தால், அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது; அதனையே ஏழு தரம் சொன்னால், அதுவே முக்கியமானது என்பது வெளிப்படையாயிருக்கிறது.

அப்படியாயின் அந்த முக்கியமான செய்தி, சிலுவையின் செய்தியே என்பதனை நான் நம்புகிறேன். எல்லாச் சபைகளுக்கும் அதுவே செய்தியாக இருக்கிறது. இங்கு நாம் அறிந்திருக்க வேண்டியது என்னவென்றால், கிறிஸ்துவின் சிலுவை என நாம் கூறும்பொழுது ஒரு மரப்பலகையைப்பற்றி நாம் கூறவில்லை; ஒருவேளை அந்த மரப்பலகையில் கிறிஸ்து மரித்திருந்தாலும், அந்த மரப்பலகையினால் ஒரு பிரயோஜனமும் இல்லை; சிலுவையில் அவர் நிறைவேற்றிய நன்மைகளைப்பற்றியே நாம் இங்கு சொல்கிறோம்; அதுவே மிகமுக்கியமானது:

* சிலுவையில் தான் இயேசுகிறிஸ்து எல்லாப் பாவத்தையும் நிவிர்த்திசெய்தார்; கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள் யாவையும் நிவிர்த்திசெய்தார்; இதனை எவன்

விசுவாசிக்கிறானோ அவன் அதன் பலாபலனைப் பெற்றுக் கொள்ளுவான் (**கொலோ. 2:10-14**).

* சிலுவையிலேயே சாத்தானையும், அவனுடைய அந்தகார சக்திகளையும் முற்றுமுழுவதுமாகக் கிறிஸ்து நம் சார்பில் தோற்கடித்தார் (**கொலோ. 2:15**); இதனை எவன் விசுவாசிக் கிறானோ அவன் அதன் பலாபலனைப் பெற்றுக்கொள்ளுவான்.

இன்னும் அநேக பலாபலன்கள் சிலுவைமூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. சிலுவையின் செய்தியையே பவுல் அப் போஸ்தலர் பிரசங்கித்தார்; ஆனபடியால்த்தான் பவுல் அப்போஸ் தலர் "**நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்க ருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்**" (**1கொரி. 1:23**) எனக் கூறி யிருக்கிறார்; நாமும் அதே செய்தியையே பிரசங்கிக்கிறோம்;

பவுல் அப்போஸ்தலர் மேலும் ஒருபடி கூடச்சென்று, சிலு வையின் செய்தியை நிராகரிப்போருக்கு "**ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவி சேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்**" (**1கொரி. 1:17**) என்று சொல்லி யிருக்கிறார்.

சிலுவையின் செய்தியே அந்த விசுவாசம் எனப்படும்; இத னையே "**இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறி யாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்**" (**1கொரி. 2:2**) எனப் பவுல் அப் போஸ்தலர் கூறியிருக்கிறார்.

டிசம்பர்
22

***அ**ப்பொழுது, இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக் கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண் களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமி யெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவி களேயாம் (வெளி. 5:6).*

"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி"

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என்பது **"ஆட்டுக்குட்டி யானவர்"** என்ற சொற்றொடர்மூலம் இங்கு பிரதிநிதித்துவப்படுத் தப்படுகிறது. மனுஷன் கிறிஸ்துமூலமாகவே மீட்கப்பட்டான் என்ற உண்மை இங்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது; சிலுவை யில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து ஒருவரே சகலதையும் மீட்டுக்கொண்டார்.

"ஏழு கொம்புகள்" என்பதன் பொருள், **"கொம்புகள்"** ஆதிக்கத் தைக் குறிப்பிடுகிறது; **"ஏழு"** என்பது பரிபூரணத்தைக் குறிப்பிடு கிறது; **"ஏழு கொம்புகள்"** பரிபூரண ஆதிக்கத்தைக் குறிப்பிடு கிறது; இவை யாவும் நமக்காகவே செய்யப்பட்டிருக்கிறது. இதன் பொருள், அந்தகார சக்திகள்மீது பரிபூரண ஆதிக்கத்தை ஒவ்வொரு வழியினாலும் விசுவாசி செலுத்தமுடியுமானபடி யினால், வெற்றியில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை.

"ஏழு கண்கள்" என்பது சகல ஆவிக்குரிய விஷயத்திலும் தெளிவான, பரிபூரண வெளிச்சத்தைக் கொடுப்பதைப்பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கிறது; இது சிலுவையினாலேயே சாத்திய மானது. ஒரு விசுவாசியினுடைய **விசுவாசத்தின் குறிக்கோள்** கிறிஸ்துவின் சிலுவையில் இருக்குமாயின், அவன் ஒருபொழு தும் பொய்யான உபதேசத்தினால் இழுத்துக்கொள்ளப்படமாட் டான்.

பூமியெங்கும் அனுப்பப்படும் ஆவிகள் என்பது பரிசுத்த ஆவி யைப்பற்றிக் குறிப்பிடுகிறது (**ஏசா.** 11:2). அவர் பரிபூரணமும், பூமியெங்கும் வியாபித்திருந்தாலும், கிறிஸ்துவினால் செய்து முடிக்கப்பட்ட எல்லைக்குள்ளேயே செயற்படுகிறார் (**ரோம.** 8:2). அதெப்படியென்றால், நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் தொடர்ந்து சிலுவையில் இருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியான வருக்குச் சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது; அப்பொழுது **"ஆதிக்கமும்" "வெளிச்சமும்"** நமக்கு உத்தரவாதம் செய்யப்படுகிறது.

டிசம்பர்
23

பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள் (வெளி. 6:16);

"மலைகளே எங்கள்மேல் விழுங்கள்"

இது ஒன்றும் புதிதல்ல; மனுஷகுல வீழ்ச்சியின் பின்பு உண்மையான தேவனை மனுஷன் அறியாமற்போனதன் நிமித்தம் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது; ஆனால், மனுஷனுடைய ஆத்துமாவோ உண்மையான தேவனைத் தேடிய வண்ணமேயிருக்கிறது. அவனுக்குள் ஜென்மசுபாவம் இருக்கிற படியினால், தேவன் அவனை அணுகமுடியாது. பழைய ஏற்பாட்டில் **ஆதியாகமம்** 3:9ல் "..... **தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய்?....**" என்று தேவன் மனுஷனைத் தேடினார். புதிய ஏற்பாட்டில் **மத்தேயு** 2:2ல் "..... **யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?....**" என்று மனுஷன் தேவனைத் தேடுகிறான். **ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி ஒன்றாக இணைந்தது கல்வாரி சிலுவையிலேயே** என்பதனை அறியும்வரையும் தேடுவது தொடர்கிறது.

அவரைக் காணாதபடியினாலும், ஜென்மசுபாவத்தின் வஞ்சகத்தினாலும், சாத்தானின் சூழ்ச்சியினாலும் மனுஷன் விக்கிரகங்களைத் தேவர்களாக்கி, அவற்றைத் தொழுதுகொள்கிறான்.

உலகம் விக்கிரகங்களினால் நிறைந்திருக்கிறது; எப்படியென் றால், நூறுகோடி முஸ்லீம்கள், ஒரு நாளில் பலமுறை **"அல்லாவை"** தொழுதுகொள்கிறார்கள்; அது அவர்களால் ஏற்ப டுத்தப்பட்ட கற்பனையேதவிர வேறொன்றுமல்ல. ஒருகோடி பௌத்தர்கள், **"புத்தரைத்"** தங்கள் தேவனாகத் தொழுதுகொள் கிறார்கள். இந்தத் தேவன் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கொழுத்த மனுஷனே. கோடிக்கணக்கான இந்துக்கள், பல இலட் சக்கணக்கான தேவர்களை விக்கிரகங்களாக்கித் தொழுதுகொள் கிறார்கள். இது அவர்களுடைய இருதயத்தில் கர்ப்பந்தரித்த சிந் தனையே. கத்தோலிக்க மதத்தினர், (இயேசு என்னும் மனுஷ னுடைய தாயாகிய) **"மரியாளையும்" "மரித்த மனிதர்களையும்"** தொழுதுகொள்கிறார்கள்; இப்படியாக இந்தப் பட்டியல் முடி வில்லாதிருக்கிறது.

கிறிஸ்தவர்களில் ஒரு சாராரைப் பொறுத்தளவில், அவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ மார்க்கங்களைத் தேவர்களாக்கி அதனை அறிந்தோ அறியாமலோ தொழுதுகொள்கிறார்கள். இன்னும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டோர் தங்களைத் தாங் களே தேவர்களாக்கிக் கொள்கிறார்கள்; ஆகையால், இந்தப் பிரச்னை ஒன்றும் புதிதல்ல; இதுபற்றிப் பவுல் அப்போஸ்தலர் **ரோமர்** 1:22-23ல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு இதனைக் கண்டித்து உணர்த்துகிறார். வரப்போகிற உபத்திரவ காலத்தின் போது அவர்கள் தேவனை நோக்காமல், மலைகளையும் குன்று களையும் நோக்கித் தங்களைக் காப்பாற்றுமாறு கேட்பார்கள் என வேதம் **வெளி.** 6:15-17ல் சொல்கிறது; அவர்களுடைய நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றவில்லையே; ஆனாலும், தங்களுடைய விக்கிரகங்களை அவர்கள் விடுவதாயில்லை; இதுவே வஞ்ச கத்தின் உச்சக்கட்டச் செயற்பாடாகும்.

டிசம்பர்
24

***ஆ**கையால் பரலோகங்களே! அவைகளில் வாச மாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத் திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசான வன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன் (வெளி. 12:12).*

"பரலோகங்களே! அவைகளில் வாசமா யிருக்கிறவர்களே! களிகூருங்கள்"

பரலோகங்களே அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே களிகூருங்கள் என்பதனைப் பார்க்கும்பொழுது பரலோகத்தில் பெரும் கொண்டாட்டமும் ஆரவாரமும் ஏற்பட்டிருப்பதைக் காண் கிறோம்; ஏனெனில், உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம் பாகிய பெரிய வலுச்சர்ப்பம் பூமியிலே தள்ளப்பட்டதே அந்தக் கொண்டாட்டத்திற்கும் ஆரவாரத்திற்கும் காரணமாயிருக்கிறது. இந்தப் பெரிய வலுச்சர்ப்பம் இரவும் பகலும் நம்முடைய தேவ னுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்கள்மேல் குற்றஞ்சாட்டு கிறது. மீகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுச்சர்ப்பத் திற்கு எதிராக யுத்தம் பண்ணினதன்மூலம் வலுச்சர்ப்பம் இருந்த இடமும் இல்லாமற்போய்விட்டது (**வெளி.** 12:7-8); வலுச்சர்ப்ப மும் அவனுடைய கூட்டமும் பூமியிலே விழத்தக்கதாகத்

தள்ளப்பட்டன (**வெளி.** 12:9). உபத்திரவகாலத்தின் மத்திய பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தேறும். இனி ஒருபொழுதும் பரலோகத்தின் மகிமையான வாசலை சாத்தானும் அவனுடைய கூட்டமும் அணுகமுடியாது.

இப்படியிருக்க, சாத்தான் குடியிருக்கும் இடம் தேவன் வாசமாயிருக்கும் இடமல்ல என்றும், அவன் வசிக்கும் இடம் பூமிக்கு மேல் பூமியைச் சுற்றியிருக்கும் வானமே என்றும் பலர் சான்று பகர்கின்றனர்; ஆனால், இவ்வாறான சான்றுகள் வேதவாக்கியங்களின்மூலம் நிரூபிக்கப்படவில்லை. **யோபு** 1ம் 2ம் அதிகாரங்களைத் தெளிவாக உற்றுநோக்குவோமாகில் சாத்தான் கர்த்தருடைய சந்நிதியில் நிற்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது (**யோபு** 1:6, 2:1). **1இராஜாக்கள்** 22:19-22ல் மிகாயா தீர்க்கதரிசி சொல்வதைப் பார்த்தால், ஒரு அசுத்த ஆவி கர்த்தருடைய சந்நிதியில் நிற்கிறதை நாம் அறியக்கூடியதாயிருக்கிறது; ஆனபடியினால், இந்த அந்தகார சக்திகள் பரலோகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது சந்தோஷமான செய்தியே. பூமிக்குத் தள்ளப்பட்ட இந்தச் சக்திகள் அடுத்ததாக, அக்கினிக்கடலுக்குள் நிரந்தரமாகத் தள்ளப்படும் (**வெளி.** 20:8-10) என்ற செய்தி அதிக சந்தோஷத்தை நமக்கு ஏற்படுத்துகிறது. கர்த்தர் சொன்னதைச் செய்துமுடிப்பார் (**ஏசா.** 14:24; **எரேமி.** 32:27; **எசேக்.** 12:25, 28).

டிசம்பர்
25

***தே**வதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக். 2:10-11).*

"மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி"

இந்த நற்செய்தியைப் பரிசீலனை செய்வதற்கு முன்பு, ஒரு மிகமுக்கியமான அறிக்கையை மேற்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. அதென்னவென்றால், **டிசம்பர்** 25ம் திகதி, இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிறக்கவில்லை என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும். இந்தத் திகிலூட்டும் அறிக்கையை மேற்கொள்ளுவதற்கு வேதவார்த்தைகள் இசைவாக இருக்கின்றது.

முதலாவதாக, மரியாளும் யோசேப்பும் குடிமதிப்பெழுதப்படும்படி, நாசரேத்தூரிலிருந்து பெத்லகேமுக்குப் போனார்கள் என்று அறியக்கூடியதாயிருக்கிறது; குளிர்காலத்தில் கர்ப்பவதியாகிய மரியாள் இவ்வளவு தூரம் பிரயாணஞ்செய்வது அவ்வளவு இலகுவானதல்ல (**லூக்.** 2:4-5); அதுமட்டுமல்ல, அகுஸ்து ராயனும் அத்தகைய கட்டளையைக் குளிர்காலத்தில் கொடுத்திருக்கமுடியாது; **இரண்டாவதாக**, மேய்ப்பர்கள் வயல்வெளியில் இருந்தார்கள் என்று அறியக்கூடியதாயிருக்கிறது (**லூக்.** 2:8); டிசம்பர் மாதம் குளிர்காலமாக இருக்கிறபடியினால், அதெப்படி

மேய்ப்பர்கள் இராத்திரியிலே வயல்வெளியில் தங்கினார்கள்? **மூன்றாவதாகக்** குளிர்காலத்தில் பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கமுடியாது (**லூக்.** 2:7); **நான்காவதாக**, **டிசம்பர்** 25ம் திகதி இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பதற்கு எந்தவிதமான குறிப்பும் வேதத் தில் கிடையாது. **ஐந்தாவதாக**, அப்போஸ்தலர்கள் **டிசம்பர்** 25ல் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடியதாக எந்தவிதமான சான்றுகளும் வேதத்தில் கிடையாது; எல்லாவற்றிற்கும் மேலாக **டிசம்பர்** 25ம் திகதி கொண்டாடப்படும் பண்டிகை, கிறிஸ்து பிறப் பதற்கு முன்பே, புறஜாதிகளினால் அனுசரிக்கப்பட்டது என்பதற்கு வேதத்தில் சான்றுகள் உண்டு (**எரேமி.** 10:1-5). மேற்கூறிய கார ணங்கள் சந்தேகத்திற்கிடமின்றி இரட்சகராகிய இயேசுகிறிஸ்து **டிசம்பர்** 25ம் திகதி பிறக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தப் படுகிறது.

ஆயினும், அவர் எப்பொழுது பிறந்தார் என்பது வேதத்தில் குறிப்பிடப்படவில்லை; வேதவல்லுநர்களின் கணிப்பின்படி அக் டோபர் மாதத்தில் பிறந்திருக்கலாம் எனப் பொதுவாக நம்பப்படு கின்றது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு அவர் எப்பொழுது பிறந் தார் என்பது முக்கியமல்ல; ஏனென்றால், நாம் நாட்களை வழி படுவதில்லை; **ராஜாதி ராஜாவையும்**, **கர்த்தாதி கர்த்தரையுமே** நாம் வழிபடுகிறோம். ஒவ்வொரு நாளையும் இயேசுகிறிஸ்து பிறந்த நாளாகக் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடுகிறோம். இப்படியிருக்க, கிறிஸ்மஸ் என்ற பாரம்பரியத்தின்கீழ் பல்வேறு விதமான வழிபாட்டுமுறைகள் நடைமுறையில் உண்டு; இவை யாவும் மதமேதவிர உறவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வைகள் அல்ல.

இத்தகைய பாரம்பரியத்தில் மிகமுக்கியமானது ஒன்று, **கிறிஸ்மஸ் மரம்**; இந்த மரத்திற்கெதிராகப் பழைய ஏற்பாட்டில் எரேமியா மூலம் கர்த்தர் இஸ்ரவேலிய ஜனங்களை எச்சரித்தி ருப்பதை நாம் **எரேமியா** 10:1-9ல் காணக்கூடியதாயிருக்கிறது.

இப்படியாக இன்னும் அநேகமான பாரம்பரியங்கள் உண்டு; இவைகள் புராணக்கதைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதேதவிர, பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் அல்ல; கிறிஸ்துவே இவை எல்லாவற்றிலும் முக்கியத்துவம் பெறுகிறார்; கிறிஸ்து ஒருவரே நம்முடைய ஒருமித்த நோக்காக இருக்கவேண்டும்; அவர் சிலுவையில் நிறைவேற்றியதே நம்டைய விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அவர் பிறந்ததினம் தெரியாவிட்டால், வருஷத்தில் எந்த ஒரு நாளையும் அவரின் பிறந்த தினமாகக் கொண்டாடலாம்; ஆனால், அதற்கு வேதவார்த்தை இசைவாக இருக்கவேண்டுமே!

கிறிஸ்துவை அறியாதவர்கள் அந்தப் பாவத்திற்கும், இழிவான உணர்வுகளுக்கும் அடிமைகளாகி, சாத்தானை எஜமானாக்கி, அவனுக்கு அடிபணிகிறார்கள்; அவனோ கொடூரமான எஜமானாயிருக்கிறான் (**யோவா.** 10:10); இப்படியிருக்க, விடுதலையடைந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறார்கள்; நாமோ, சாத்தானுக்கு அடிமையாக அல்ல, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கே அடிமைகளாக இருக்கிறோம்.

அப்பொழுது, மேய்ப்பர்களுக்குத் தேவதூதன் தோன்றினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்பொழுது அது ஒரு பெரிய விஷயம் அல்ல; ஆனால், அப்பொழுது அது ஒரு பெரிய விஷயமாகக் கருப்பட்டது; ஏனென்றால், அப்பொழுது, இஸ்ரவேலியர்களால் மேய்ப்பர்கள் கீழ்ஜாதிகளாகக் கருதப்பட்டனர். தேவதூதன் இஸ்ரவேலிய மதத்தலைவர்களுக்குத் தோன்றாமல் இந்தக் கீழ்ஜாதிகளான மேய்ப்பர்களுக்குத் தோன்றியது ஏன்? என்று பொதுவாகக் கிறிஸ்தவர்களால் கேட்கப்படுகிறது; ஆம், மதத்தலைவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவுமில்லை, அவரை ஏற்றுக்கொள்ளவுமில்லை. இந்த எளிமையான ஜனங்கள் என்பது பணரீதியில் கணிக்கப்படவில்லை, அவர்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருந்தார்கள்; அவர்களையே நான் நிரப்புவேன் என ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் சொல்லி

இருக்கிறார். நாம் எளிமையாக இருந்தால், இயேசுகிறிஸ்துவிட மிருந்து வெளிப்பாடுகள் வரும் என்பதனை நாம் அறிந்திருப்போ மாக. தேவதூதன் அவர்களுக்குத் தோன்றியபோது முதலாவ தாகப் **"பயப்படாதீர்கள்"** என்று சொல்லியிருந்தான்; இதற்குக் காரணம், ஜனங்கள் பயத்தினால் வஞ்சிக்கப்பட்டிருந்தார்கள்; இந்த நிலைமையில் தேவதூதன் சந்தோஷத்தை உண்டாக்கும் ஒரு நற்செய்தியைக் கொண்டு வந்திருக்கிறான்; அந்த நற்செய்தி, **இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்** என்பதாகும்.

இயேசுவை ஒருவன் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன் 24 மணித்தியாலமும் அவனுக்குச் சந்தோஷமே. அவர் சிலுவையில் நிறைவேற்றியதும், நம்மை அந்தப் பாவத்தி லிருந்து விடுதலையாக்கியதும் பெரும் சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கிறது; ஏனென்றால், நம்முடைய பாவங்கள் கழுவப் பட்டது; நாம் இரட்சிக்கப்பட்டோம்; நாம் பரிசுத்தப்படுத்தப்பட் டோம்; நாம் நியாயப்படுத்தப்பட்டோம்; நாம் குணமாக்கப்பட் டோம்; நாம் விடுதலையாக்கப்பட்டோம்; இவை யாவும் நமக்குப் பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது.

மிகப்பெரும் சந்தோஷம் அவர் நம்மெல்லோருக்காகவும் மரித்தார் (**ஆதி. 3:15; யோவா. 19:30**). மனுஷன் தன்னை அந்தப் பாவத்திலிருந்து விடுவிக்க முடியாதிருந்தபடியினால், அவனை விடுவிப்பதற்கு உலகத்தோற்றத்திற்கு முன்னமே தேவன் திட் டம் தீட்டி ஒரு இரட்சகரை அனுப்பியிருந்தார் (**1பேது. 1:18-20**).

இப்படியிருக்க, மனுஷனுடைய பிரச்னை பணப் பிரச்னையா யிருந்தால், ஒரு வங்கி முகாமையாளனைத் தேவன் அனுப்பி யிருப்பார்; பொருளாதாரப் பிரச்னையாயிருந்தால், ஒரு பொரு ளாதார நிபுணனை அனுப்பியிருப்பார்; கட்டிடப் பிரச்னையா யிருந்தால் ஒரு தச்சனை அனுப்பியிருப்பார்; மனுஷனுடைய பிரச்னை **அந்தப் பாவமானபடியினால்**, அவனுக்கு, அவர் ஒரு இரட்சகரை அனுப்பினார். அந்த இரட்சகர் தன்னைப் பலியாகக்

கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்து, மனுஷனை **அந்தப் பாவத்திலிருந்து** விடுதலையாக்கினார்; சாத்தான் இதனை எதிர் பார்த்திருக்கவில்லை.

அந்த இரட்சகரின் உயிர்த்தெழுதல் நமக்குப் பெரும் சந்தோ ஷத்தை ஏற்படுத்துகிறது; இதனால் ஏற்பட்ட பெந்தெகொஸ்தே அனுபவம் பெரும் சந்தோஷத்தை நமக்கு ஏற்படுத்துகிறது. பரி சுத்த ஆவியானவர் புதிய பரிணாமத்தில் வந்தது பெரும் சந் தோஷத்தை நமக்கு ஏற்படுத்துகிறது. காளை வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்திற்குப் பதிலாக இரட்சகரின் இரத்தம் சிந்தப் பட்டு, பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசமாயிருக்கக்கூடிய பாக்கியத்தைப் பெற்றுள்ளோம் (**1கொரி.** 3:16). இப்படியாக, அவரை ஏற்றுக்கொண்டவனுக்கு சந்தோஷம் முடிவில்லாம லிருக்கிறது; விசுவாசிக்கு அவருடைய பிறப்பு, இறப்பு, உயிர்த் தெழுதல் மீண்டும் வருவது ஆகியவைகள் எந்த நாளும் சந்தோ ஷத்தை ஏற்படுத்துவதாக.

டிசம்பர்
26

ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசி யோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார் களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமி யின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே; அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி (வெளி. 17:1-2).

"மகா வேசி"

"அந்த ஏழு தூதரில்" எனப்படுவது, அநேகமாக ஏழாவது தூத னாயிருக்கலாம்; ஆனாலும் தகவல் வேதாகமத்தில் கொடுக்கப் படாததன் நிமித்தம், யார் அந்தத் தூதன் என்பதனை அறிய முடியாமலிருக்கிறது.

"மகா வேசி" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது உலகத்திலிருந்த, உலகத்திலுள்ள சகல மதங்களையும் உள்ளடக்குகிறது. அவை கள் மனிதர்களால் **"சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்குப்"** பதிலாக உருவாக்கப்பட்டது. தேவனுடைய வழி **"சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துமட்டுமே"** (**1கொரி.** 1:23, 2:2). **"திரளான தண்ணீர்கள்"** என்பது திரளான ஜனங்களை அடையாளமாகக் காண்பிக்கிறது (**வெளி.** 17:15).

"அவளுக்கு" என்பது மகா வேசியைப்பற்றிக் குறிப்பிடுகிறது; சுருக்கமாகச் சகல விதமான மதங்களையும் இது உள்ளடக்கு கிறது. **"பூமியின் ராஜாக்கள்"** என்பது ஆரம்ப காலத்திலிருந்து ஏறத்தாழ சகல தேசமும் மதத்தினாலேயே ஆளப்பட்டது. மகா வேசி ராஜாக்களையும் ஜனங்களையும் ஆண்டாள்; அந்த ஆட்சி இன்னும் தொடர்கிறது. **"பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே"** என்பதன் பொருள், சகல மதங்களும் மனு ஷனாலேயே உருவாக்கப்பட்டது; களங்கப்படுத்தப்பட்ட கிறிஸ்த வமும் மனுஷனால் உருவாக்கப்பட்ட மதமாகும்; இதனையே **ரோமர்** 7:1-4ல் **"ஆவிக்குரிய வேசித்தனம்"** என்று சொல்லப்பட் டிருக்கிறது.

"வெறிகொண்டிருந்தார்களே" என்பதன் பொருள், மதத்தில் மோசமான ஒரு போதை உண்டு; இதனையே ஆண்டவர் இஸ்ர வேலியர்கள் மதம் என்ற போதைக்கு அடிமையாவார்கள் என ஏசாயாவின் தீர்க்கதரிசனம்மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறார்: இந்தப் போதையின் பலவந்தம் ஏராளமான இஸ்ரவேலியர் களையும், கிறிஸ்தவர்களையும் பாதாளத்திற்குள் தள்ளிக்கொண் டிருக்கிறது என்பதனால், இந்த மதத்தின் தாக்கத்தைப்பற்றி ஏழு தரம் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (**மத்.** 13:14-15; **மாற்.** 4:12; **லூக்.** 8:10; **யோவா.** 12:39-40; **அப்.** 28:26-27; **ரோம.** 11:8; **ஏசா.** 6:9-10); மதமே கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்றது. உண்மையான கிறிஸ்தவர்களையும் இதே மதம் தொடர்ச்சியாகக் கொலை செய்துவருகிறது; பல்வேறு மதங்கள் கிறிஸ்தவர் களைக் கொலைசெய்கிறது.

ஆண்டவர் அந்த ஆபத்திற்குப் பயப்படக்கூடாது என்பதுபற்றி **மத்தேயு** 10:28ல் **"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிரா மல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத் திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"** எனக் கிறிஸ்தவர் களைப் பலப்படுத்தியிருக்கிறார்; அதுமட்டுமல்ல, மலைப்

பிரசங்கத்தில் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கையில்: **"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார் களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்"** (மத். 5:11) எனக் கூறியிருப்பதை எடுத்துக்கூறிச் சகோதர்களைப் பலப்படுத்து வோமாக.

மதமே மிகவும் வல்லமையான போதை மருந்தாகும்; மத ஆவியே இதனைப் பரந்தளவில் உலகம் முழுவதும் செயற் படுத்துகிறது.

டிசம்பர்
27

***ஆ**விக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங் களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக்கண்டேன் (வெளி. 17:3).*

"மகா வேசி - 2"

யோவானை அந்தத் தூதன் தரிசனத்தில் வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான்; வனாந்தரம் என்ற சொற்றொடர்மூலம் சிலுவை இருக்கும் இடத்தைப் பிடிப்பதற்கு மதம் எடுக்கும் முயற்சியைப்பற்றிச் சொல்லப்படுகிறது; அதனையே ஆவிக் குரிய வனாந்தரம் எனப்படும்.

யோவான் கண்ட அந்த ஸ்திரீ நன்கு அமைக்கப்பட்ட மதத் தைக் குறிப்பிடுகிறது; இதன் பொருள், எந்த மதமாயிருந்தா லென்ன, எந்த மத அமைப்பாயிருந்தாலென்ன, சிலுவையில் லாமல் இரட்சிப்பையோ, ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க் கையையோ பெறமுடியுமென உரிமை கோரினால் அது சாத்தி யப்படாது. **"சிவப்பு நிறம்"** இரத்தத்தையும், மிகப்பெரிய துன்பத் தையும் அந்த மதம் ஏற்படுத்தும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. **"தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான"** என்பதன் பொருள், இந்த ஸ்திரீயைக் குறிப்பிடுகிறது. அவள்

தேவனுடைய திட்டத்தையும், ஏற்பாட்டையும் ஒவ்வொரு வழியி னாலும் எதிர்க்கிறாள் என்பது தெளிவாகிறது.

"ஏழு தலைகளையும் பத்துக்கொம்புகளையும் உடையதும்" என்பதன் பொருள், ஸ்திரீயை அல்ல, சிவப்பு நிறமுடைய மிருகத்தையே குறிப்பிடுகிறது. **"ஏழு தலை"** என்பது கடந்த காலத்தில் இஸ்ரவேலைத் துன்புறுத்திய ராஜ்யங்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது; அந்த ஏழு ராஜ்யங்களும் முறையே: எகிப்து, அசீரியா, பபிலோன், பெர்சியரும் மேதியரும், கிரேக்கர், ரோமர் ஆகிய ஆறும், இனி வரப்போகிற ஒன்றையும் (அந்திக்கிறிஸ்து வின் ராஜ்யத்தையும்) சேர்த்தே ஏழு தலை என்று சொல்லப் பட்டிருக்கிறது; இனி உருவாகப்போகிற பத்துதேசமும் (பத்துக் கொம்புகள்) ஒன்று சேர்ந்து வரப்போவதே அந்த ஏழாவது ராஜ் யம்; ஆறாவதும் கடைசி ராஜ்யமுமான ரோம ராஜ்யம் கிறிஸ்து வுக்குப் பின் 70ம் ஆண்டில் அழியும்வரை இஸ்ரவேலைத் துன் புறுத்தியது; பத்துக்கொம்புகளைக் கொண்ட அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் ஆரம்பித்து, இஸ்ரவேலைத் துன்புறுத்தும்; இவை யாவும் தீர்க்கதரிசனமாக யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

டிசம்பர்

28

***அ**ந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன் (வெளி. 17:4-6).*

"மகா வேசி - 3"

"அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து" என்பதன் பொருள், இவை யாவும் இஸ்ரவேலைப்பற்றியது; இப்பொழுது சபையின் காலமும் சேர்க்கப்பட்டதால் **"சிவப்பான"** எனக் கூறப்பட்டிருக்கிறது. சிவப்பு என்பது இந்த மதங்களின் ஆதிக்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது; இவை யாவற்றின்மூலமும் இஸ்ரவேல் துன்புறுத்தப்படுவதைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கிறது.

"பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு" என்பதன் பொருள், இந்த மதங்கள் எப் பொழுதும் ஐசுவரியத்தினால் நிறைந்திருக்கிறது. உதாரணமாக இஸ்லாமியர்கள் உலகமெங்குமுள்ள எண்ணையின் தேக்கத் தில் 60 வீதமான எண்ணையைச் சேமிப்பாக வைத்திருக்கின்றனர். இந்த நாடுகளெல்லாம் கவர்ச்சி ஊட்டுகிறதாக இருக்கிறதென் பதனை **"பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்"** என்பதன்மூலம் பிரகடனப்படுத்துகிறது. வெளிப்பகுதி எவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தாலும், அந்தப் பொற்பாத்திரத்தின் உட் பகுதி **"அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும்"** நிறைந்திருக்கிறது.

"தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது" நெற்றி அடையாளமாகக் காண்பிக்கும் உண்மை என்னவென் றால், சகல மதங்களும் மனிதர்களினால் உருவாக்கப்பட்டதே தவிர, தேவனால் உருவாக்கப்பட்டதல்ல என்பது வெளிப்படையா யிருக்கிறது. **"இரகசியம், மகா பாபிலோன்"** என்பது ஆவிக் குரிய பபிலோன், உண்மையான பபிலோனை விட்டுப் பிரிந்தி ருக்கிறது என்பதனைக் குறிப்பிடுகிறது; அது உலகத்திற்கு மகா பெரிதாகத் தன்னைக் காண்பிக்கிறது; ஆனால் தேவனுடைய கண்களுக்கு அப்படி அல்ல.

"வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்" என்பது பொற்பாத்திரத்திற்குள் என்ன இருக்கிறது என்பது தெளி வாகிறது; வெளிப்பக்கம் அற்புதமாயிருந்தாலும், உட்பக்கம் அரு வருப்பாயிருக்கிறது என்பது வெளிப்படையாயிருக்கிறது. **"சிலு வையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து"** இல்லாவிட்டால், ஆண்டவர் அதனை வேசித்தனமும், அருவருப்பும், அசுத்தம் என்றே கணிக்கிறார். வேதனைக்குரிய விஷயம் என்னவென் றால், கிறிஸ்தவத்தின் பெரும்பகுதி அதற்குள் அடங்குகிறது.

"அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும்" என்ப தன் பொருள், இந்த ராஜ்யங்களும், பொய்யான மதங்களும் கிறிஸ்துவின் காலம்வரையும் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலி

யர்களைத் துன்புறுத்தியது; அதுமட்டுமல்ல, **"இயேசுவினுடைய சாட்சியின் இரத்தத்தினாலும்"** என்பதன் பொருள், சபையின் காலத்தில் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஜீவனைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். ரோமப் பேரரசு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது; அதனைத் தொடர்ந்து, கத்தோலிக்கம் துன்புறுத்தலைப் பாரிய அளவில் கிறிஸ்தவர்களின் மேல் நடைமுறைப்படுத்தியது.

இவை எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது யோவான் மிகவும் ஆச்சரியப்பட்டான்; ஸ்திரீ பிரதிபலிக்கிற மத ஆவியின் வெளித்தோற்றமும், அதன் பயங்கரமான ஊடுருவல்களும் இன்றும் அளவுகணக்கில்லாமல் தொடர்கிறது.

டிசம்பர்

29

***நீ** கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் (வெளி. 17:8).*

"நீ, கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை",

அப்போஸ்தலர் யோவான் தரிசனத்தில் கண்ட மிருகத்தைப் பற்றி இங்கு சொல்லப்படுகிறது. அப்போஸ்தலர் யோவான் அந்த மிருகத்தைக் கண்டு, மிகுந்த ஆச்சரியமடைந்தபடியினால், தேவதூதன் அந்த மிருகத்தைப்பற்றிய இரகசியத்தை யோவானுக்கு வெளிப்படுத்தினான் (**வெளி.** 17:7).

"**நீ கண்ட மிருகம்**" என்ற சொற்றொடர்மூலம் விழுந்து போன தேவதூதன் ஒருவனைப்பற்றியே இங்கு சொல்லப்படுகிறது; இந்த மிருகம் கடந்த காலத்தில் இஸ்ரவேலை அழிப்பதற்குப் புறஜாதிகளுடைய ராஜ்யங்களின் தலைவர்கள் எடுத்த முயற்சிகளுக்குப் பாரிய அளவில் உதவிசெய்தது. "**இப்பொழுது இல்லை**" என்பதன் பொருள், அப்போஸ்தலர் யோவானுடைய காலத்தில் அந்த மிருகம் சுறுசுறுப்பாக இயங்கவில்லை. "**அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து**", என்பதன் பொருள், இந்த

மிருகம் வல்லமையுள்ள வீழ்ந்துபோன ஒரு தேவதூதனாகும்; 2300 வருஷங்களுக்கு முன்பு, ஆழம் காணமுடியாத படுகுழிக்குள் இவன் சிறைப்படுத்தப்பட்டான்; அப்போஸ்தலர் யோவானின் காலத்திலும் படுகுழியிலிருந்தான்; இப்பொழுதும் அங்கேயே இருக்கிறான்; வெகுசீக்கிரத்தில் அதிலிருந்து விடுதலையாகி, அந்திக்கிறிஸ்துவுக்கு அவன் உதவிசெய்வான். கடைசியின் கடைசிக்காலமாகிய லவோதிக்கேயா சபையின் காலத்தில் நாம் இருக்கிறோம்; வெகுசீக்கிரத்தில் உயிர்த்தெழுதல் நடைபெறப்போகிறபடியினால், உபத்திரவ காலத்திற்குத் தயார்பண்ணுவதற்கும், அந்திக்கிறிஸ்துவுக்கு உதவிசெய்வதற்கும் ஏதுவாக அந்த மிருகம் படுகுழியிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கலாம் என வேதவல்லுநர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். சீரிய யுத்தம், சீரிய முஸ்லீம் அகதிகள் என்ற பெயரில் ஐசிஸ் (ISIS); ஐரோப்பிய, அமெரிக்கா, கனடா முஸ்லீம்களினால் முற்றுகை; முஸ்லீம்களின் வன்முறை ஆகியவை அந்த வீழ்ந்துபோன தேவதூதர்களின் எழுச்சியைச் சுட்டிக்காட்டுகிறது; சுறுசுறுப்பாக அந்த மிருகம் இயங்குகிறது; கிறிஸ்தவர்களே **"விழித்திருங்கள்"** என்று வேதத்தில் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது.

"நாசமடையப்போகிறது" என்பதன் மூலம் பாதாளத்திலிருந்து அந்த மிருகம் ஏறிவந்து அந்திக்கிறிஸ்துவுக்குப் பூமியில் உதவி செய்தபின் ஒரேயடியாக அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படுவான் **(வெளி. 20:10)** என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. அந்திக்கிறிஸ்துவினால் செய்யப்படும் செய்கைகளை அவர்கள் பார்த்து, எந்த மனுஷனும் அப்படிச் செய்யவில்லை என்று சொல்லி ஆச்சரியப்படுவார்கள். இதற்குக் காரணம் இந்த விழுந்துபோன தேவ தூதனின் உதவியினாலேயே அந்திக்கிறிஸ்து எல்லா அற்புதங்களையும் செய்கிறான் என்பதனை அவர்கள் அறியார்கள்; அந்திக்கிறிஸ்துவும் அறியான். அந்திக்கிறிஸ்துவுக்கு உதவப்போகிற அந்த மிருகத்தைப்பற்றி அப்போஸ்தலர் யோவான் பிரஸ்தாபிக்கையில்: **"இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயி**

ருக்கிற மிருகத்தைப் பார்த்து" எனக் கூறியிருக்கிறார். **"இருந்ததும்"** என்பதன் பொருள், முன்பு அந்த மிருகம் ரோமப் பேரரசு தவிர்ந்த சகல பேரரசுக்கும் இஸ்ரவேலை அழிப்பதற்கு உதவியது. கிரேக்க பேரரசனாகிய மகா அலெக்சாந்தருக்கு உதவி செய்து பின்பு, அது படுகுழியில் தள்ளப்பட்டு, சிறைப்படுத்தப் பட்டபடியினால் அந்த மிருகம் **"இராமற்போனது"**; அப்போஸ்தலர் யோவானின் காலத்திலும் இல்லை; படுகுழியிலிருந்து ஏறிவந்து, இனிவரப்போகிற அந்திக்கிறிஸ்துவுக்கு உதவிசெய்ய போகிறபடியினால் **"இனி இருப்பதுமாயிருக்கிற"** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

டிசம்பர்

30

***அ**ப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசு வைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுது கொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான் (வெளி. 19:10).*

"தேவனைத் தொழுதுகொள்"

தூதன் என்ற சொல், அடிக்கடி தேவனுக்கும், மனுஷனுக்கும், நாம் வழமையாக அழைக்கிற தேவதூதர்களுக்கும் உபயோகிக் கப்படுகிறது. யோவான் அந்தத் தூதனைத் தொழுதுகொள்வ தற்கு அவனுடைய பாதடியில் விழுந்தான். அந்தத் தூதன், தான் தேவன் அல்ல என்றும், யோவானைப்போல, தானும் ஒரு சக ஊழியக்காரன் என்றும், தானும் சகோதரரில் ஒருவன் என்றும் கூறினான். யார் இவன்? ஆரம்பத்திலிருந்து யோவானுடைய காலம்வரை வசித்த ஒரு பரிசுத்தவானாயிருக்கிறான்; ஆனால், அவன் யோவானை அடையாளங்காணவில்லை. இங்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், நாம் எப்பொழுதும் தேவனையே தொழுதுகொள்ளவேண்டும் என்ப தாகும்.

நம்முடைய ஆண்டவர் யாரைத் தொழுதுகொள்ளவேண்டும், எப்படித் தொழுதுகொள்ளவேண்டும் என்பதனை **யோவான்** 4:21-24ல் தெளிவாகக் கூறியிருக்கிறார்; ஆனபடியினால், நாம் தூதனைத் தொழுதுகொள்ளக்கூடாது; தேவதூதர்களைத் தொழுதுகொள்ளக்கூடாது; பரிசுத்தவான்களைத் தொழுதுகொள்ளக்கூடாது; கன்னிமரியாளைத் தொழுதுகொள்ளக்கூடாது; இப்படிச் செய்யாதபடிக்குப் பார் என்று உறுதியாகச் சொன்னான். தற்பொழுது கிறிஸ்தவ சபைகளில் ஏராளமான கிறிஸ்தவர்கள் தேவதூதர்களைத் தொழுதுகொள்ளுகிறார்கள். எண்ணிக்கைக்கு அடங்காத கத்தோலிக்கர்கள் கன்னி மரியாளைத் தொழுதுகொள்ளுகிறார்கள்; ஆனால், அதற்குச் சிலர் பல்வேறுவிதமான சாக்குப்போக்குச் சொல்லி, வஞ்சிக்கிற ஆவிகளுக்குக் கொள்ளையாய்ப்போயிருக்கிறார்கள்; அதென்னவென்றால், தாம் ஜெபம்பண்ணும் பொழுது பரிசுத்தவான்களையோ, தேவதூதர்களையோ கன்னிமரியாளையோ, இறந்தவர்களுடைய அங்கங்களின் துண்டு துணுக்குகளையோ (Religion) தொழுதுகொள்வதில்லை என்கிறார்கள்; ஜெபம் ஒருவகைத் தொழுகை என்பதனை அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

தேவனைத்தவிர யாரையாவது இயேசுவின் நாமத்தினால் (**யோவா. 16:23**) ஜெபம்பண்ணுவோமாயின், நாம் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும்தவிர மற்ற எல்லாவற்றையும் தொழுதுகொள்கிறோம்; அப்படிச் செய்வதினால் நாம் தேவனுக்கு எதிராகப் பாவஞ்செய்கிறோம்; இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாகும்; அந்த ஆவி பரிசுத்த ஆவியாகும். பழைய ஏற்பாட்டில் நிறைந்திருக்கிற தீர்க்கதரிசனங்கள் யாவும் வரப்போகிற (முதலாம் வருகை) இயேசுகிறிஸ்துவைப்பற்றியதேயாகும்; அவைகள் யாவும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்டவைகளே.

டிசம்பர்

31

பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள் (வெளி. 19:14).

"கிறிஸ்துவின் இரண்டாம் வருகை"

இந்த வேதவாக்கியங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பிரகடனப்படுத்துகிறது. முதல்முறை அவர் வரும் பொழுது, கேலிசெய்யப்பட்டார், அவமதிக்கப்பட்டார், கண்டனம் செய்யப்பட்டார், பலமாக எதிர்க்கப்பட்டார்; அவர்கள் அவருடைய தாடியை அவருடைய முகத்திலிருந்து பிடுங்கினார்கள்; அவரது தலையை முட்களினால் முடிசூட்டினார்கள்; இரக்கமே இல்லாமல் அடித்தார்கள்; சிலுவையில் அவரை அறைந்தார்கள்; அவர் களுக்காக மரிக்கும்பொழுது அவரைப் பரிகாசம்பண்ணினார்கள்.

ஆனால், அவர் இரண்டாம்முறை வரும்பொழுது அவரை ஒருவரும் அடிக்கமுடியாது, அவர்மேல் துப்பமுடியாது, அவரை மரத்தில் அறையமுடியாது; இந்த உலகம் ஒருபொழுதும் அறியாதவாறு கற்பனைக்கு அப்பாற்பட்ட வல்லமையோடும், மகிமையோடும் அவர் வருவார் (**லூக்.** 21:27; **மத்.** 24:29-30). **ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும்** அவர் வருவார்; அந்த நாள் வெகுசீக்கிரத்தில் வரப்போகிறது (**வெளி.**17:14,19:16; **1தீமோ.** 6:15).

"இரத்தத்தினால் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்" என்பதன் பொருள், கல்வாரி சிலுவையில் மனுஷ குலத்தை இரட்சிப்பதற்காக அவர் கொடுத்த விலையைப் படம் பிடித்துக்காட்டுகிறது. தீர்க்கதரிசி சகரியாவின்படி அவர் எந்தக் காலத்திலும் காலிலும் கையிலுமுள்ள அந்த வடுக்களைச் சுமந்திருப்பார் என்று தெரிகிறது (**சகரி.** 13:6). கிறிஸ்துவின் சிலுவையே அவரது இரண்டாம் வருகையை சாத்தியமாக்கியது என்பதனை ஒவ்வொரு மனுஷனும் அறிந்திருப்பானாக.

அந்தகார சக்திகளும், சாத்தானும் சிலுவையிலேயே தோற்கடிக்கப்பட்டார்கள்; இப்படியிருக்க, என்ன காரணத்திற்காகச் சாத்தான் இன்னும் 2000 வருஷகாலம் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் என்ற காரணம் அவருக்குத்தான் தெரியும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து இரண்டாம்முறை வரும்பொழுது, சாத்தானும் அவனுடைய அந்தகாரக் கூட்டமும் ஆழம் காணமுடியாத படுகுழிக்குள் தள்ளப்படுவார்கள்; அவர்களால் இனிமேலும் சித்திரவதையையும், கொடுமையையும் நிகழ்த்தமுடியாது (**வெளி.** 20:1-3).

இரண்டாம் வருகையோடு உலகம் ஒருபொழுதும் கண்டிராத 1000 வருஷகால சமாதானத்தையும், ஐசுவரியத்தையும் அவருடைய ஆட்சியின்போது அனுபவிக்கும் (**வெளி.** 20:1-6). இயேசு கிறிஸ்து அந்த நேரத்தில் உலகத்தை நீதியோடும், நியாயத்தோடும் ஆளுவார். அந்த ஆளுகையின் சிறப்பை உலகம் ஒருபொழுதும் கண்டிராது (**ஏசா.** 9:1-7, 11:1-10). கிறிஸ்துவின் அரசு பரிபூரண அரசாக இருக்கிறபடியினால், அங்கு களவு, லஞ்சம், ஊழல்கள் ஒன்றும் இருக்காது. ஒருபொழுதும் அறிந்திராத ஐசுவரியத்தை உலகம் அனுபவிக்கும்; வறுமை தேடினாலும் கிடையாது; நோய்கள் ஒன்றும் இராது, ஏனென்றால், **"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"** (**யாத்.** 15:26) என்று சொன்ன மிகப் பெரும் பரிகாரி மனிதர்களுக்குள்ளும், மனிதர்கள் மத்தியிலும் வாசமாயிருப்பார்.

இஸ்ரவேல் அவரை மேசியாவாகவும், கர்த்தராகவும், இரட்சகராகவும் அந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டபடியினால், மீட்பைப் பெற்றுக்கொள்ளும். கோத்திரத்தலைவர்களுக்கும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் மொத்தமாக நிறைவேற்றப்படும். அவருடைய சீஷர்கள் "..... **ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" (அப். 1:6)** என்று கேட்டார்கள்; ஆம் அவர்களுடைய ராஜ்யம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

ஆபேலிலிருந்து உபத்திரவக்காலம்வரையும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் (அவர்களோடு உயிர்த்தெழுதல் முற்றுப்பெறும்) அவரோடுகூட 1000 வருஷ காலத்திலும், அதற்குப் பின்பும் (சதாகாலமும்), ஆளுகைசெய்வார்கள் (**வெளி. 20:4**). இஸ்ரவேல் தேவனுடைய தீர்க்கதரிசன மணிக்கூடு மிகச்சிறிய இந்த நாட்டைப் பார்க்கும்பொழுது, **"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மத். 24:32-33)** என்பது நிறைவேறும்.

"அநுதினமும் சிலுவையைச் சுமப்போம்" என்ற இந்தத் தெய்வீக வார்த்தை நமது அபிப்பிராயத்தின்படி தமிழ் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த ஒரு மாபெரும் பொக்கிஷம் என்று சொன்னால் அது மிகையாகாது என்றே நாம் நம்புகிறோம். நாளொன்றுக்கு ஒரு செய்தியாக மொத்தம் 366 செய்திகளை இந்தப் புஸ்தகம் உள்ளடக்கியிருக்கிறது. **லூக்கா** 9:23க்குச் செவிகொடுத்துக் கிறிஸ்துவின் கட்டளையைக் கைக்கொள்பவன் எவனோ அவன் நிச்சயமாகத் தெய்வீக பலத்தையும், உற்சாகத்தையும், ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியானவரின் வலுவான வழிநடத்தலையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; மனுஷகுலத்தின் ஒரே பிரச்னை **"பாவசுபாவம்"** என்பதனையும், அதற்குத் தேவனால் தரப்பட்ட ஒரே தீர்வு **"சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து"** என்பதனையும் தெளிவாக இந்தப் புஸ்தகம் உறுதியாக வலியுறுத்துகிறது.

The Crossway Ministries
P.O. Box 25045
255 Morningside Ave.
Scarborough, ON
M1E 3E0
Canada

paulbalabaskaran@gmail.com
www.crosswayministries.ca
www.facebook.com/crosswayministries